தீபஷ்வினியின்
“உன் சுவாசத்தில் நான்“

சுவாசம் 1,

“சுடும் சூரியனாக நீ இருந்தால்,
உன்னைக் குளிர்விக்கும்
பனி நிலவாக,
நான் இருப்பேன்”

மும்பை….தமிழர்கள் அதிகம் வாழும் ஊர்.. “குட்டி தமிழ் நாடு” என்று கூடச் சொல்லலாம்..

பாந்த்ரா, குர்லா காம்ப்ளெக்ஸ் அருகில் ,GK பிருந்தாவனம் என்ற அழகிய பங்களாவின் உள்ளே, டைனிங் ஹாலில் தான் உள்நாட்டு போர் .. இல்லை இல்லை உள்வீட்டு போர் நடக்குது….வாங்க அதை என்வென்று பார்ப்போம்…

“அம்மா , என் செல்ல அம்மால்ல… இந்த ஒரு தடவை மா…நானும் ஒரு வாரமா கேட்டுட்டு இருக்கேன்… எனக்காகமா ப்ளீஸ்” என்று கெஞ்சி, கொஞ்சி கொண்டிருந்தாள்…….நம் பிரியா என்ற பிரியங்காதேவி.

“முடியாதுன்னா முடியாது பிரியா” என்று

மறுத்துக்கொண்டிருந்தார் அவ்வீட்டின்
குடும்பத்தலைவி, நம் ப்ரியாவின் அம்மா காயத்ரி..

அன்னையை முறைத்த ப்ரியா “காயூ எனக்கு இப்போ
சிம்லா போறதுக்குப் பெர்மிசன் தரபோறியா
இல்லையா..”

“அடி கழுதை அம்மாவை பேர் சொல்லியா கூப்பிடுற”
என்ற காயத்ரி சொல்ல..

“கூப்பிடுறதுக்குத் தானே பேரு
வைச்சிருக்காங்க....நான் பேர் சொல்லும்
பிள்ளையாக்கும் அப்படித்தானே கார்த்திக்” என்று தன்
தந்தையைத் துணைக்கு அழைக்க..

“வாய் வாய் எல்லாம் நீங்க குடுக்குற செல்லம் தான்”
என்று கணவனைப் பார்த்து முறைக்க..

அவரோ காயத்ரியை பார்த்து ஒரு புன்னகை
சிந்திவிட்டு, எனக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லை
என்பது போல் உணவில் கவனமாக இருந்தார்
ப்ரியாவின் தந்தை கார்த்திகேயன்...

கார்த்திகேயன் பெரிய தொழில் அதிபர்... மும்பையில்

பெரிய பினான்ஸியர், பெரிய பட்ஜெட் படங்களுக்கு இவரைத் தேடித்தான் பணம் கேட்டு வருவார்கள் எளியவர்களுக்கும் நியாயமான வட்டியில் பைனான்ஸ் பன்னுவார்....இதுமட்டும் அவர் தொழில் அல்ல பிரபல கார் ஷோரூம் உண்டு.....இன்னும் சில தொழில்களும் உண்டு.

பிஸ்னெஸ் உலகில் இவரை ஜாம்பவான் என்று அழைப்பார்கள், இவர் முன்னாடி நின்று பேச பயப்படுவார்கள்..... ஆனால், இவர் பயப்படுகிற ஒரே ஜீவன் அவர் மனைவி காயத்ரி...தாய் தந்தை முடித்து வைத்த திருமணம்தான் என்றாலும், திருமணத்திற்குப் பிறகு, காயத்ரிக்கு காதலை இன்றுவரையிலும் குறையாமல் வழங்குகிறார் அவருக்குத் தன் மனைவி, மகள்தான் முதலில், மற்றதெல்லாம் அவர்களுக்குப் பிறகுதான்....

காயத்ரியும் அன்பான குணவதியான பெண்மணி, தன் கணவனும் மகள் பிரியாவும்தான் உலகம் என்று வாழ்பவர்,

அன்னையை விட்டுத் தந்தையிடம் திரும்பியவள் " மிஸ்டர் கார்த்திக் இங்க உங்களைச் சப்போர்ட்க்கு கூப்பிட்டது நான் , அங்க என்ன லுக்கு" என்று தன் தாயை கண்காட்டியவள்,

“இங்க என்ன நடக்குதுன்னு கொஞ்சம் நிமிர்ந்து பாருங்க….அப்புறம் உங்க பேவரேட் ஓட்ஸ்கஞ்சியை குடிக்கலாம்” என்றாள் சிறு கேலியுடன் .

“பிரியா” என்று அதட்டலாகக் காயத்ரி அழைக்க,

“விடு காயு மா , என் பொண்ணுதானே பேர் சொல்லி கூப்பிடுறா”.. என்ற கணவரை முறைத்துவிட்டு..

ப்ரியாவின் அருகில் வந்த காயத்ரி அவள் கன்னத்தில் கை வைத்து….கனிவாக “சிம்லா வேணாம் டா உனக்குக் குளிர் ஒத்துக்காது” , என்றவர் “வேணும்னா ஒன்னு பண்ணுவோமா, செமஸ்டர் லீவு விடட்டும். வேற எங்கேயாவது டூர் போய் வரலாம் சரியா” எனச் சொல்ல..

தாய் தந்தை இருவரையும் முறைத்தவள்..பின் பிடிவாதமாக
“எனக்குச் சிம்லா போயே ஆகனும்”… என்று கூறி பாதிச் சாப்பாட்டில் இருந்து எழுந்து, அவர்களைத் திரும்பியும் பாராமல், “நான் காலேஜ் கிளம்பிறேன் என்று கோபமாகச் செல்லிவிட்டு நகர,

பிரியா “சாப்பிட்டு போ” என்று அழைத்தும் அதைக்

காதில் வாங்காமல் கீழே வந்து தன் ஸ்விப்டை கிளப்பினாள் காலேஜை நோக்கி….

அவள் சாப்பிடாமல் போவதை கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்த காயத்ரியிடம், கார்த்திகேயன் “அவ சிம்லா போய்ட்டு வரட்டுமே காயு” என்று சொல்ல,.

“எல்லாத் தெரிஞ்ச நீங்களே இப்படிச் சொன்னா எப்படிங்க….அவளுக்குக் குளிர் ஒத்துக்காதுன்னு தெரிஞ்சும் எப்படிச் சரின்னு சொல்ல சொல்றீங்க?” என்றவர் “இங்கயே இப்படிப் பிடிவாதம் பிடிச்சானா, நாளைக்குக் கல்யாணம் பண்ணி வாழப்போற வீட்ல எப்படிப் பேசுவாளோன்னு எனக்குத் திக்கு திக்குனு இருக்கு” என்று தன் மகளின் பிடிவாதம் , குறும்புத்தனத்தை நினைத்துக் கவலையாகச் சொல்ல…

“ஒரு தாயா உன்னோட கவலை சரிதான்… அதே சமயம் அவ நம்ம வீட்ல இருக்கிற வரைக்கும் தான் சுதந்திரமா இருக்க முடியும்” என்றவரிடம்..

“இப்படியே அவளை விட்டா புகுந்த வீட்ல புருஷன் கிட்ட ஏட்டிக்குப் போட்டியா பேசி நல்லா வாங்கிக் கட்டுனா என்ன பண்ணுவீங்க”..

“என் பொண்ணு ராஜகுமாரிடி.. அதுவும் கோடீஸ்வர வீட்ல ராணி மாதிரி வாழ்வா” என்றார் பெருமையாக.....

“என் ராஜகுமாரிக்கேத்த ராஜகுமரன் இனிமேலா பிறப்பான் அல்ரெடி பிறந்துருப்பான் ,அதனால நீ கவலைப்படாதே” என்றவர் உணவை முடித்துக் கொண்டு அலுவலகத்துக்குக் கிளம்பி சென்றார்..

காயத்ரிக்கு தான் கவலையாக இருந்தது.. பிரியா எந்த அளவுக்குக் குறும்புகாரியோ அதைவிட ரொம்பவும் பிடிவாதம் அதிகம்..

தன் மகளின் அழகின் மேல் எப்போதும் காயத்ரிக்குப் பெருமை உண்டு.. சராசரி பெண்களை விட நல்ல வளர்த்தி, கோதுமை மாவை குழைத்து பூசினர் போல் நல்ல நிறம், நீண்ட தலை முடி, மும்பையில் இருந்தாலும் தன் முடியை தாய் வெட்ட அனுமதிக்காத வருத்தம் இப்போதும் உண்டு. மொத்தத்தில் திரும்பி பார்க்க வைக்கும் அழகு நம் பிரியா.....

காயத்ரி ,கார்த்திகேயன் தம்பதியர் . தவமாய்த்

தவமிருந்து பத்து வருடம் கழித்துப் பிறந்த குழந்தை .. அதனாலத்தானோ என்னவோ பதினெட்டு வயது நிரம்பிய தன் செல்ல மகளை இன்னும் குழந்தையாய் பாவித்தனர்.....

அதனால் தான் காலேஜ் டூர் போக வேண்டும் என்று அனுமதி வேண்டி நின்றவளை மறுத்துக் கொண்டிருந்தார் அன்னை காயத்ரி,..

பிரியா நினைத்தால் உலகம் முழுவதும் சுற்றி வரலாம்.. ஆனால் அவள் கேட்பது தன் தோழியுடனும், தன் பக்கியுடனும் கழிக்கப் போகும் மறக்க முடியாத அந்த நாட்களை...

.....

தன் காலேஜின் உள்ளே தன் ஸ்விப்ட்டை நிறுத்தியவள்.. காரிலிருந்து இறங்கி.. கண்களைச் சுழல விட்டாள்...

தன் கண்களை யாரோ பின்னிலிருந்து மூடுவதை ஒரு வினாடிக்கும் குறைவாக யோசித்தவள்... அமைதியாக நின்றாள்...

கண்ணை மூடியவளோ "என்ன ஒரு ரியாக்ஷனையும்

காணோம்” என்று தன் கையை எடுத்து விட்டு அவள் முன் சென்று ”ஏண்டி ஒருத்தி வந்து உன் கண்ணை மூடுகிறாளே.. ஏதாவது ஒரு ரியாக்க்ஷன் காட்டுறியா போடி….”

“மோகினி ஒழுங்கா ஓடிடு” நானே கடுப்புல இருக்கேன்..

மோகனா, பிரியாவின் உயிர் தோழி….. “என்னடி என்ன ஆச்சு, அம்மா என்ன சொன்னாங்க.. டூர்க்கு ஓகே சொல்லிட்டாங்களா” ..

“இல்லடி, அம்மா வேணாம்ன்னு சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்றாங்க, அப்பா என்னடான்னா, எனக்குச் சப்போர்ட் பன்னி ஒண்ணுமே பேச மாட்டேங்கிறார்” என்று சலிப்புடன் சொன்னவளின் முகம் திடீர்ரென்று பிரகாசமாக , தன் தோழியிடம் “மோகினி நீ ரொம்ப நாளா பைவ்ஸ்டார் ஹோட்டலில் சிக்கன் பிரியாணி சாப்பிடணும்னு சொல்லிட்டு இருந்தியே” போவோமா என்ற ப்ரியாவை,

மேலும் கீழும் பார்த்த மோகனா, தன் இரு கையையும் தலைக்கு மேல் தூக்கி “அம்மா தாயே இந்த விளையாட்டுக்கு நான் வரல என்ன ஆளை விடு”

என்றாள் தன் தோழியின் குணம் அறிந்து

“பிளீஸ் மோஹினி, நீ என் நண்பிடி எனக்காக”

அதற்குத் தன் கையை நீட்டி தடுத்த மோகனா, “நீ மொதல்ல என் பெயரை கொலை பன்றதை நிறுத்து…. எவ்ளோ அழகா எங்க அப்பா அம்மா , எனக்குக் காதுகுத்தி மொட்டை போட்டு,”மோகனா” ன்னு பேர் வச்சிருக்காங்க. அத இப்படிக் கொலை பன்னாதன்னு எத்தனை வாட்டி சொல்லி இருக்கேன்…”

“ஓகே ஓகே இனி சொல்லல, என் செல்லம்ல பிளீஸ் டி” ….

“ஓகே நான் நாளைக்குக் காலேஜ் முடிஞ்சதும் வரேன் வந்து ஆன்ட்டி கிட்ட பேசுறேன், அதுக்காகப் பிரியாணின்னு ஒன்னும் நீ ஐஸ் வைக்க வேண்டாம் , இப்போ வா டூர் போறதுக்குப் பேர் கொடுக்கலாம்” என்று அவளைச் சமாதானப்படுத்தியவள்,

“ஏண்டி நீ நினைச்சா மாசம் ஒரு டூர் போகலாம் ஆனா சிம்லா வரத்துக்கு இப்படிப் பறக்குற… சிம்லால உனக்குத் தெரிஞ்சவங்க யாரும் இருக்காங்களா… என்று சந்தேகமாகக் கேட்க,,..

“போடி, நீ வேற இது என் செல்ல மோஹி கூடவும் என் பக்கி கூடவும் நல்லா என்ஜாய் பண்ண போறேன்ல அதான்.. காட் ப்ரோமிஸ்.. வேற ஒன்னும் இல்லடி…” என்று ப்ரியா சொல்ல…

“சரி வா” என்று இரு தோழிகளும் .. தங்களது வகுப்பறைக்குச் சென்று தங்கள் இடத்தில அமர்ந்தனர்….

அப்பொழுது, “ஹாய் பேபிஸ்” என்று ஒரு குரல் கேட்க, “ஹாய் பக்கி” என்று அவனைப் பார்த்து புன்னகைத்தாள் பிரியா…

மோகனாவோ, அவன் குரல் கேட்டதும்.. ‘ச்ச கரெக்டா நாங்க கிளாஸ்குள்ள என்டர் ஆனதும் வந்துருவான்…..அவனும் அவன் பார்வையும், இவனுக்கு வேற வேலையே இல்லையா” என்று சலித்தவள்…பிரியாவின் காதருகில் “ப்ரி அவன்கிட்ட சொல்லு என்னைப் பேபின்னு கூப்பிட வேணும்ன்னு…” என்றவள் மறந்தும் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை…

சந்துரு, ப்ரியாவின் தோழன்,
பிரியாவும், மோகனாவும் ஐந்தாம் வகுப்பில் இருந்து

தோழிகள், பள்ளி படிப்பு முடிந்ததும் இருவரும், இந்தக் காலேஜில் தான் படிப்போம் என்று தங்கள் பெற்றவர்களிடம் அடம் பிடித்துச் சேர்ந்தனர்...

முதல் நாள் காலேஜ் உள்ளே வந்ததும்,எந்த பக்கம் போக வேண்டும் என்று தெரியாமல் இருவரும் முழித்துக் கொண்டு நிற்க,

அப்பொழுது, "எனி ஹெல்ப்" என்று தங்களது அருகில் வந்த வளர்ந்தவனைப் பார்த்து மோகனவோ மனதுக்குள் பயந்தாலும், வெளியே தைரியமாகக் காட்டி கொண்டு அவனை முறைத்தவள்,

"வா பிரியா, நாம ஆபிஸ் ரூம் போய்க் கேட்கலாம் எந்தக் கிளாஸ்னு..." பிரியாவின் கையைப் பிடித்துக் கொண்டு நகர்ந்தாள்...

ஆனால் அவனோ, "எந்தப் பேட்ச் னு சொன்னா நானே கூட்டிட்டு போறேன்" என்றவனது பார்வை,மோகனாவிடமே இருந்தது அதைக் கவனித்த பிரியா, "ஒன்னும் வேண்டாம். நாங்களே விசாரிச்சிகிறோம், நீங்க உங்க வேலைய மட்டும் பாருங்க"... என்று சொல்ல...

அவன் பதில் பேசும்முன், அப்பொழுது அவ்வழியாக வந்த ஆசிரியர் ஒருவர்,"என்ன இங்க பிரச்சனை.... சந்துரு என்னாச்சு"... என்று ஹிந்தியில் வினவினார்...

அதற்கு அவனோ, "கிளாஸ்க்கு எப்படிப் போகணும் என்று கேட்டார்கள்.... அதான் வாங்க நான் கூட்டிட்டு போறேன்னு சொல்லிட்டு இருந்தேன்" என்றான்...

"ஓ,அச்சா அச்சா" , என்று கூறி இருவரையும் பார்த்து,... "சந்துரு கூடப் போங்க அவன் கிளாஸ்க்கு கூட்டிட்டு போய் விடுவான்." என்றவர், பின் என்ன நினைத்தாரோ , மீண்டும் அவர்களிடம் "அவன் ரொம்ப நல்ல பையன் என்ஜினியரிங் இரண்டாம் வருடம் படிக்கிறான்"... என்றவர், முதல் இரண்டு வருடம் வேற காலேஜில் படித்துவிட்டு, இந்தவருடம் தான் சேர்ந்தான் என்று, ஏனோ அவர்களிடம் சொல்லவில்லை...

மோகனா மனதுக்குள் "இவன் பார்க்குற பார்வையே சரி இல்ல, இதுல அய்யா ரொம்ப நல்ல பையனாம்".... தன் முகத்தைத் திருப்பிக் கொண்டவள்.. மறந்தும் அவன் பக்கம் திரும்பவில்லை...

சந்துரு முன்னால் நடக்க , வேறு வழி இன்றி அவனைப் பின் தொடர்ந்தனர் இருவரும்.

பின்னாளில் அவர்கள், இவனைப் பார்த்து விலகி செல்ல.....இவன் வலிய போய் அவர்களிடம் பேசுவான்.....இப்படியிருக்கக் கல்லூரியில் ஒரு நாள், எம்.பியின் பையன் இவர்களுடன் வம்பு வளர்க்க, சந்துருதான் இதில் தலையிட்டு பிரச்சனையைத் தீர்த்து வைத்தான்.....

அதன்பிறகு சந்துருவிடம், பிரியா சகஜமாகப் பழக ஆரம்பிக்க, அவனுடைய தூய்மையான நட்பிலும், மற்ற பெண்களிடம் அவன் காட்டும் கண்ணியமும், கல்மிஷமில்லாத பார்வையையும் கண்டு ப்ரியாவுக்கு அவனை ரொம்பவும் பிடித்து விட்டது.... ஆனால் மோகனாவுக்கோ அவனின் நட்பு பிடித்திருந்தாலும், அவன் தன்னைப் பார்க்கும் பார்வையில் ஏதோ இனம்புரியா உணர்வு தோன்ற, மனதினில்

“ப்ரியாவை பார்க்கிற பார்வையில் நட்பு மட்டும்தான் இருக்கு ஆனா என்ன மட்டும் ஏன் அப்படிப் பார்த்து வைக்கிறான்’ .. என்ற கேள்வி மட்டும் அவள் மனதில் வண்டாய் குடைந்து கொண்டிருக்க, அவனிடமிருந்து சற்று விலகியே இருக்க ஆரம்பித்தாள்...

சந்துரு, தமிழ் நாட்டில் இருந்து வந்து, இங்குத் தங்கி படிப்பவன்... அங்கு இல்லாத காலேஜா.... என்று தோழிகள் இருவரும் நினைத்தனர்.. பிரியா அவனிடம் எவ்வளோவோ கேட்டும்.... அவன் பதில் என்னவோ

சிரிப்பு மட்டுமே.. நாமளும் சந்துருவை, பத்தி கதையின் போக்கிலே தெரிந்து கொள்வோம்...

.....

பிரியாவின் அருகில் வந்தமர்ந்தவன், "என்ன பேபி டல்லா இருக்கே... என்ன ஆச்சு" என்று கேள்வி ப்ரியாவிடம் இருந்தாலும், பார்வையோ மோகனாவிடமே இருந்தது....

மோகனாவோ மனதில், "ச்ச அரம்பிச்சிட்டான்"...என்க

"பேபி, அம்மா டூர்க்கு ஓகே சொல்லிடங்களா?" என்று கேட்டான்..

"ப்ச் இல்ல டா, நோ சொல்லிட்டாங்க"...

"ஓ அதான் பேபி டல்லா இருக்கீங்களா... ஓகே நான் வந்து பேசட்டா அம்மா கிட்ட..."

"நாளைக்கு மோஹி வந்து பேசுறேன்னு சொல்லிருக்கா சந்துரு"

"அப்போ அம்மா ஓகே சொல்லிடுவாங்க. டோன்ட் ஒர்ரி பேபி... நீ டூர்க்கு போறதுக்கு ரெடிபண்ற வேலை

மட்டும் பாரு சரியா…” பின் ஞாபகம் வந்தவனாய் தன் பையில் இருந்து ஒரு பார்சலை அவளிடம் கொடுத்து சாப்பிடு என்க,

என்னவென்று பிரித்துப் பார்த்தவள்,“வாவ் பாவ்பாஜியா” என்று சந்தோஷத்துடன் சாப்பிட ஆரம்பிதவள் பின் நிதானமாய் அவனிடம், “என்ன அம்மா உனக்குப் போன் பன்னாங்களா நான் சாப்பிடாம போய்ட்டேன்னு”

“ம்ம்ம்” என்று சிரித்துக்கொண்டே அவள் தலையில் செல்லமாகக் கை வைத்து ஆட்டியவன், “ நீதான் பசி தாங்க மாட்டாயே, பின்ன ஏன் சாப்பிடாம கோவிச்சிட்டு வந்துட்ட”..

“நீ வேற சந்துரு, நான் நிறைய ஆயில்புட் சாப்பிடுறேன்னு எங்க அம்மா வாரத்துல ஒரு நாள் ஆரோக்கியச் சமையல்ன்னு, நான் சாப்பிட்டே ஆகனும்ன்னு படுத்தி எடுக்குறாங்கடா….அதிலிருந்து எப்படித் தப்பிக்கறதுன்னு எங்கப்பாகிட்ட கண்ணசைவில் ஐடியா கேட்டா ,பாவம் அவர் எதும் சொல்லமுடியாம சிரிச்சு சமாளிச்சிட்டார்….

இது வேளைக்காகாதுன்னு…சிம்லா டாப்பிக்க ஓபன் பன்னி கோபம்ன்ற பேர்ல நான் எஸ் ஆயிட்டேன்

பாவம் அப்பா தான் மாட்டிக்கிட்டார்.... எனக்கு நல்லா தெரியும் எங்க அம்மா உனக்குப் போன் பன்னி நான் சாப்பிடாத விஷயத்த சொல்லுவாங்க. நீயும் எனக்குப் பிடிச்ச பேவரேட் புட் வாங்கி வருவேன்னு வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தேன்" என்று ஏற்ற இறக்கத்துடன் சொல்ல,,,

மோகனாவோ "அடிப்பாவி....நீ பன்ற அலும்பு நாளுக்கு நாள் அதிகமாயிட்டு போகுது" என்க...

திரும்பி அவளை முறைத்தவள், "இவ்வளவு நேரம் அந்த ஜன்னல முறைச்சி முறைச்சிதானே பார்த்துகிட்டு இருந்த...நீ அந்த வேளையைக் கன்டின்யூ பன்னு"...

இதைக் கேட்டு சந்துரு வாய்விட்டு சிரிக்க, மோகனா அவனை முறைப்பதை கண்டு "சரி எனக்குக் கிளாஸ்க்கு நேரம் ஆச்சி நான் கிளம்புறேன்" என்றவன் நின்று "பேபி அம்மா கேட்டா என்ன சொல்லுவ" என்று ப்ரியாவிடம் சந்துரு கேட்க்க,

"எப்போவும் போல் இப்பவும் சந்துரு எனக்கு ஜூஸ் தான் வாங்கிதந்தான் அப்படின்னு சொல்லுவேன் போதுமா பயப்படாம போ", என்று பிரியா சொன்னாள்...

சிரித்தவன் “சரி பை” என்று கிளம்பபவும் ..
அட்டெண்டர் கிளாஸிற்குள் வரவும் சரியாக இருந்தது…

அட்டெண்டர் எல்லோரிடமும் “நோட்டீஸ் போர்டுல டூர் பத்தின தகவல்கள் இருக்குப் போய்ப் பாருங்க…” என்று கூறி விட்டு சென்றார்,…

மாணவ மாணவிகள், “யா ஹூஊஊஊஊ…” என்று கூச்சலிட்டப்படி நோட்டீஸ் போர்டு நோக்கி சென்றனர்…

பிரியாவும், மோகனாவும் அவர்கள் பின் சென்றனர் தங்களுக்கு என்ன காத்திருக்கிறது என்று அறியாமல்…

******

சுவாசம் தொடரும்…

சுவாசம் 2

“உலகத்தின் ஒட்டுமொத்த இன்பத்தை உன் ஒற்றை புன்னகையில் கண்டேன்”

தோழிகள் இருவரும் நோட்டிஸ் போர்டு நோக்கி

சென்றனர்... அங்கு கண்ட காட்சியில் ப்ரியா மோகனாவிடம், "என்னடி சத்தத்தை காணோம், டூர் பற்றின நோட்டிஸ் ஒட்டிருக்குன்னு சொன்னதும், எப்படி கத்திட்டு வந்தாங்க... இப்போ என்னனா... மூஞ்சிய ஒவ்வொன்னும் தூக்கி வச்சிக்கிட்டு நிக்குதுங்க..."

"அதாண்டி எனக்கும் புரியல ,சரி வா நாமளும் நோட்டிஸ் போர்ட்டில் இவங்க மூஞ்சை தூக்கிவச்சிருக்கிற அளவுக்கு அப்படி என்ன இருக்கு என்று பார்க்கலாம்..".என்று இருவரும் சென்றனர்.

நோட்டீஸ் போர்ட் அருகில் சென்ற,
தோழிகள் இருவரும் அங்கே பார்த்ததும் அதிர்ந்தனர்..

ஒருத்தி இனிமையாக அதிர்ந்தாள் என்றால்
இன்னொருத்தி, ?

"ஹா.... ஹா..... அய்யோ அம்மா.... ஹா..... ஹா..... என்னால சிரிப்பை அடக்க முடியலே... ஹா... ஹா ..."

"ஏய்.. சிரிக்காத லூசு.. சிரிக்காத சொல்றேன்ல .. போடி.. உன்பேச்சி கா..."

“ஓகே ஓகே சிரிக்கல சிரிக்கல என்று சொன்னவள் தன் சிரிப்பை அடக்க முடியாமல், மறுபடியும் பக்கென்று சிரித்தது, வேறு யாரும் இல்லை, சாட்சாத் நம்ம மோகனாதான்.

தூரத்தில் இருந்து இவர்களை பார்த்துக் கொண்டிருந்த சந்துரு, மோகனாவின் சிரிப்பை தன்னை மறந்து ரசித்தவன், பின்பு பிரியாவின் முகத்தை பார்த்து வேகமாக இவர்கள் அருகில் வந்தவன் “என்னாச்சு பேபி” என்று வினவியவன், மோகனாவை கேள்வியாக நோக்க…

“இல்ல சந்துரு.. அட்டெண்டர் வந்து … டூர் பத்தி நோட்டீஸ் ஒட்டிருக்கு வந்து பாருங்கன்னு சொல்லிட்டு போனாரா… ஹா… ஹா …. எல்லோரும் கத்திட்டே வந்தங்களா .. ஹா ஹா .. நாங்களும் வந்தோமா… ஹய்யோ என்னால சிரிச்சிகிட்டே சொல்ல முடியல .. நீங்களே போய் பாருங்க”… என்று சொல்ல…

அவனோ அசையாமல் நின்றான்..
அவன்தான் இந்த உலகத்திலே இல்லையே, மோகனா ,தன்னை சந்துரு என்று அழைத்ததும் இல்லாமல்..
அவனிடம் சிரித்த முகமாக… பேச ஆரம்பித்ததும், அவளை இழுத்துக்கொண்டு. ஸ்விஸ்க்கு டூயட் பாட

போய்ட்டானே…(அட கனவுலதாங்க….)

அவன் முன் தன் வலது கையை ஆட்டி, “என்ன சந்துரு அசையாம நிக்கறீங்க… உங்க பேபி உம்முன்னு இருக்குறதுக்கு காரணம் தெரிய வேண்டாமா… போங்க போய் நோட்டீஸ் பாருங்க” என்று சந்துருவிடம் மோகனா சொல்ல…

அதில் தன்னிலை அடைந்தவன், மோகனா தன்னிடம் பேசியதால், சந்தோசமாக திரும்பி நோட்டீஸ் போர்டு நோக்கி சென்றான்.

நோட்டிசை பார்த்தவன் என்ன மாதிரி உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை.

எல்லோரும் சிம்லா தான் தாங்கள் போகும் சுற்றுலா என்று நினைத்து சந்தோசமாக கூச்சலிட்டப்படி.. வந்தனர்.

ஆனால் , விஷயம் என்னவென்றால், சிம்லாவில் பனிப்பொழிவு அதிகமாக உள்ளதால்.. டூர் போகும் இடம் மாற்றபட்டுள்ளது… ஆகையால் காலேஜ் நிர்வாகம் தமிழ் நாட்டிற்கு, சுற்றுலாவை மாற்றியுள்ளது..

அதுவும் ஒரு அழகான ஊருக்குத்தான்… என்று நோட்டிஸ் போர்ட்டில் இருந்தது…
இதை படித்துவிட்டு தான்.. மற்றவர்கள் உம்மென்று இருக்க , பிரியா சிம்லா போகமுடியாத வருத்ததில் அமைதியாக அமர்ந்திருந்தாள்…

மோகனாவோ சந்தோஷமாக உணர்ந்தாள், படிப்பு முடிந்ததும்தான், தமிழ் நாட்டிற்கு போக வேண்டும் என்று நினைத்திருந்தாள், ஆனால் அது இப்போ காலேஜ் மூலமாக இவ்வளவு சீக்கிரம் அந்த வாய்ப்பு அமையும் என்று மோகனா நினைக்க வில்லை, அதனால்தான் , நோட்டீஸ் பார்த்ததும் அவ்வளவு சந்தோசப்பட்டள், அது ஏன் என்று அவளுக்கு தானே தெரியும், ….

சந்துருவோ, மனதில் கடவுளிடம் மானசீகமாக நன்றி கூறிக்கொண்டிருந்தான்… இப்படி ஒரு வாய்ப்பு கடவுள் அமைத்துக்கொடுப்பார் என்று சந்துருவும் நினைக்கவில்லை…

திரும்பி, சிரித்து கொண்டிருந்த மோகனாவை ஒரு பார்வை பார்த்தவன் , ப்ரியாவை கண் காட்டி சிரிக்கதே என்று கண்களால் சொல்ல மோகனாவும் ஓகே நான் சிரிக்கவில்லை என்று தனது ஆள்காட்டி விரலை தன் இதழில் வைத்து தலையாட்ட,

“ப்ரியாவின் அருகில் அமர்ந்தவன்” என்ன பேபி இப்படி ஆயிருச்சு” தன் சந்தோஷத்தை வருத்தம் போல் காட்டி நடித்தவன்… மோகனாவின் பக்கம் தன் பார்வையை திருப்பி, இப்போ எதுக்கு இப்படி சிரிச்சிட்டு இருக்கே. பேபி எவ்ளோ ஆசையா இருந்தா சிம்லா போகணும்னு…. என்றவன்..

சரி விடு பேபி… இப்போ இல்லனா என்ன இன்னொரு தடவை நான் கூட்டிட்டு போறேன்”… என்றவனை,,,

“நோ சந்துரு எவ்ளோ ஆசையா இருந்தேன் தெரியுமா..”என்று வருத்தத்துடன் சொன்னாள்..

“பேபி தமிழ் நாட்டுல அந்த ஊர் பத்தி கேள்வி பட்டுருக்கேன்… நல்ல பசுமையான ஊர் தான்… கிளைமேட் ரொம்ப நல்லா இருக்கும்…. அதோட நாம ஊட்டி, கொடைக்கானல் இந்த மாதிரி நிறைய இடத்துக்கு போறோம் என்று நோட்டீஸ்ல இருக்கு சரியா…சோ உங்க அம்மாகிட்ட இந்த தமிழ்நாடு டூர் பத்தி சொல்லு உடனே ஓகே சொல்லிடுவாங்க….”

மனம் சந்தோஷத்தில் இருந்ததாலோ என்னவோ, பிரியாவும், சந்துருவும் பேசுவதை அமைதியாக

பார்த்துக்கொண்டிருந்த மோகனா…

“சரி பிரி நான் கிளம்பிறேன். சாய்பாபா கோவிலுக்கு போயிட்டு, நான் வீட்டுக்கு போகனும். உங்க வீட்ல காயத்ரி அம்மா தமிழ் நாட்டுல டூர் என்றால், கொஞ்சம் யோசிப்பங்களே தவிர நோ சொல்லமாட்டாங்க…”

“ஆனா எனக்கு தமிழ்நாடு தான் பிரச்சனையே” என்று முனுமுனுத்த மோகனா ,”நான் கிளம்புறேன் நாளைக்கு வந்து டூர்க்கு பெயர் கொடுக்கலாம் சரியா” என்றவள், கடவுளே இந்த டூர்க்கு வீட்ல அம்மா அப்பா எப்படியாவது ஒத்துக்கணும், என்று வேண்டுதலை வைத்தாள்

ஆனால் தன் தந்தைதான் இந்த டூற்கு அனுமதி மருப்பார் என்று மோகனா அறியவில்லை,,…

மோகனா தன் ஸ்கூட்டி அருகே சென்று அதை கிளப்பியவள் , ப்ரியாவிடம் கிளம்புறேன் என்று சொல்ல மறந்து, இவர்களை திரும்பியும் பாராது சென்றாள், மோகனாவின் மனதில் வீட்டில் ஒற்றுக்கொள்ள வில்லையென்றால் எப்படி சம்மதிக்க வைக்க என்ற எண்ணம் தான் ஓடிக்கொண்டிருந்தது…

மோகனா சென்ற திசையை பார்த்து கொண்டே
“என்னாச்சு இவளுக்கு பேபிக்கு ஒரு பை கூட
சொல்லாம போரா” என்று மனதில் நினைத்தவன்,”...

ஓகே பேபி.. நாளைக்கு டூர்க்கு பேர் குடு”என்றான்...
அவளோ அமைதியாக அமர்ந்திருந்தாள்....

அப்பொழுதும் ப்ரியாவின் முகம் தெளிவில்லாமல்
இருப்பதை பார்த்து,
“பேபி நம்ம போற ஊர் ரொம்ப அழகா இருக்கும்டா..
உனக்கு ரொம்ப பிடிக்கும் ஓகே வா”... என்றவனை
பார்த்தவள்...

“உனக்கு அந்த ஊரா? சந்துரு” என்று அவனிடம் ப்ரியா
கேட்டாள், அப்படியாவது அவன் ஊரை பற்றி
தெரிந்துகொள்ளலாம் என்றுதான்.. ஆனால் அவனோ
சமாளித்தான்..

“ம்ம்ம் அப்படியும் வச்சிக்கலாம், இல்லாமலும்
இருக்கலாம்.. பட் உனக்கு அந்த ஊர் ரொம்ப பிடிக்கும்
பேபி சிம்லா கூட பத்துநாள் டூர் தான்.. ஆனா நாம
போற ஊர் இருபது நாள் ட்டூர்...” என்று ஒரு குண்டை
தூக்கி எறிந்தான் ப்ரியாவின் மேல் அதில் இன்னும்
அதிர்ந்தவள்..

“என்னது து து து.. இருபது நாள் ஆ.. நான் கண்டிப்பா வரமாட்டேன் போ…” என்று ப்ரியா சொல்ல…

சந்துருவோ “சரி வேண்டாம்.. எனக்காக மோகனாக்காக நீ வரமாட்டியா?, எவ்ளோ ஹாப்பி யா போறா பாத்தியா, நீ வரவில்லை என்றால், அவளை அவள் வீட்டில் டூற்கு விட மாட்டாங்க பேபி… அவ இவ்ளோ சந்தோசமா இருந்து பார்த்துருக்கியா.” என்று சந்துரு ப்ரியவிடம் கேட்க…

ஆமா உண்மைதான், மோகனாவும் நல்ல வசதி உள்ளவள் தான். ஆனா அவள் முகத்தில் சில வருடமாக ஒரு சோகம் இருப்பதாகவே தெரியும்.. பிரியா கூட “ஏண்டி இப்படி இருக்கிற” என்று கேட்டாள் என்றால்..

“இல்ல நான் நல்லாத்தான் இருக்கேன். உன் கண்ணுதான் சரி இல்ல ,போய் செக் பன்னு”.. என்று பேச்சை மாத்திவிடுவாள்…

பிரியா அதற்கு மேல் எதுவும் கேட்கமாட்டாள்…

பிரியாவோ “சரி ஓகே டா சந்துரு நான் டூர்க்கு வரேன் உனக்காகயெல்லாம் நான் வரல, என்

மோஹினிக்காக வரேன் வெவ்வேவே போடா நானும் கிளம்புறேன் , மோஹி இல்லாம நான் மட்டும் கிளாஸ்க்கு போய் என்ன பண்ண போறேன் “ என்று தன் காரை நோக்கி சென்று தன் ஸ்விப்ட்டை கிளப்பி, சந்துரு வை பார்த்து கை அசைத்து.. காரை கிளப்பினாள்… அந்த அழகான ஊரில் தங்களுக்கு என்ன காத்திருக்கு என்று அறியாமலேயே…….

……

மோகனா, தன் அப்பார்ட்மெண்ட்டில் நுழைந்து பார்கிங்கில்,
ஸ்கூட்டியை நிறுத்தியவள்…

லிப்டில் நுழைந்து… மூன்றாவது தளத்தின் என்னை அழுத்தினாள். மூன்றாவது தளம் வந்ததும் வெளியே வந்தவள்… தன் வீட்டு அழைப்பு மணியை அழுத்தி கதவு திறக்க காத்திருந்தாள்…

கதவை திறந்தது அவளுடைய தம்பி ரவி….

மோகனா.. “ரவி ஸ்கூல் ல இருந்து வந்துட்டியா…”

“ஆமாக்கா, எக்ஸாம் இல்ல அதான் சீக்கிரம் வந்துட்டேன்”…

“நல்லா எழுதிருக்கியா ரவி”.. என்று தம்பியிடம் பேசிக்கொண்டே வீட்டினுள் வந்தாள் மோகனா,,,

“சூப்பர் ஆ எழுதிருக்கேன்கா, நல்ல மார்க் வரும்கா”…

“சரிடா நாளைக்கு என்ன பரீட்சை, போ போய் படி.. அக்கா பிரெஷ் ஆகிட்டு வரேன்”…

“சரிக்கா” என்றவன் தன் அறைக்கு செல்ல,..

மோகனா தன்னை சுத்தம் செய்து வேறு உடைக்கு மாறி வெளியே வந்து சோபாவில் அமர்ந்து “அம்மா காபி” என்றாள்.

என்னம்மா சீக்கிரம் வந்துட்டே, என்று கேட்டுக்கொண்டே வந்த பார்வதி “இரு இதோ காபி எடுத்துட்டு வரேன் மோகனா”…என்றுவிட்டு கிட்ச்சனில் நுழைத்தார்…

மோகனா… பார்வதி & ஈஸ்வர் தம்பதியரின், இரண்டாவது மகள்.. மூத்தவன் கௌதம், இரண்டாவது நம் மோகனா… மூன்றாவது கடைக்குட்டி ரவி…

கௌதம் படிப்பை முடித்ததும், ஈஷ்வர் அவர் தொழிலை அவன் கையில் கொடுத்தார்.. ஆனால் அவனோ , நான் என் சொந்த காலில் தான் நிற்பேன் என்று தந்தையின் தொழிலை பார்க்க மறுத்து விட்டான்… அதில் பார்வதி & ஈஸ்வர் தம்பதியருக்கு வருத்தம் தான் என்றாலும், சந்தோசப்பட்டனர்..

கௌதம் நல்ல பொறுப்புள்ள பிள்ளை.. தன் தம்பி தங்கையிடம் உயிரையே வைத்திருப்பவன்…

அப்போது தான் பத்தாவது முடித்திருந்த மோகனா,அண்ணனும் அப்பாவும் பேசுவது புரியாமல், தன் தந்தையிடம் “அப்பா அண்ணா அவன் கால்ல தானே நிக்கிறான் .. அப்புறம் ஏன், நான் என் சொந்த காலில் தான் நிப்பேன்னு சொல்றான்”என்று கேட்க…

“ஹே வாலு இங்க வா” என்று அண்ணன் அழைத்ததும்,

“என்ன அண்ணா சொல்லு”

“அது ஒன்னும் இல்லடா குட்டிமா… இதெல்லாம் அப்பா கஷ்டப்பட்டு சம்பாதிச்சது அதுல நான் ஹாய்யா வந்து உக்காந்து சொந்தம் கொண்டாடுறதுல

அண்ணனுக்கு விருப்பம் இல்லடா…அப்பாவை மாதிரி நானும் சொந்தமா உழைக்கனும்… அப்பா எனக்கு நிறைய படிப்பு குடுத்துருக்காரு அது போதும் எனக்கு” என மோகனாவிற்கு விளக்க…

மோகனாவோ “சரி ஆனா அப்பா பாவம்ல்ல இவ்ளோ நாள் கஷ்டபட்டார் இனி அவருக்கு ரிட்டைர்மெண்ட் குடுக்கலாமே…” இதை கேட்டு வாய் விட்டு சிரித்தவன்…

“சரிங்க பெரிய மனுஷி.. அப்ப அப்ப வந்து அப்பாவோட ஆஃபிஸையும் பாத்துகிறேன் போதுமா”…என்றவன் தந்தையிடம் திரும்பி “என்னப்பா ஓகே வா..” என கேட்க ..

அவரோ “ரொம்ப சந்தோசம்டா” என்றார்..

கௌதம், ஒரு வெளிநாட்டு கம்பெனியில் ஜி எம் ஆக வேளைக்கு சேர்ந்தவன்.. ஒரே வருடத்தில்.. தனியாக, தொழில் தொடங்கும் அளவுக்கு முன்னேறினான்… தன் சம்பளத்தை தாயிடம் தான் கொடுப்பான்…

தனியாக தொழில் தொடங்க பேங்க் லோன் கேட்டுருந்தான்.. அதை கேள்வி பட்டு.. ஈஸ்ரவர் தன் மனைவியிடம் தெரிவிக்க… பார்வதியோ, அவனோட

ஒரு வருட சம்பளத்தை அப்படியே அவன் கையில் கொடுத்தார் ..

“வேணாம் மா… நான் லோன் கேட்டுருக்கேன்” என்று சொல்ல..
“இது உன் பணம் டா வாங்கிக்கோ” என்று சொன்னவரை முறைத்தவன்…

“அப்போ நான் தர்ற பணத்தை செலவு பண்ணல, அப்படியே தான் வச்சிருக்கிங்க அப்படித்தானே”… என தாயிடம் பொய் கோபம் கொண்டு கௌதம் கேட்க..

“அப்படி இல்லடா.. எனக்கு என்னடா தனியா செலவுவிருக்கபோகுது,. அதான் அப்படியே வச்சிருக்கேன்.. இப்போ உனக்கு உபயோகமா இருக்கும் இல்லியா… வச்சிக்கடா” என்று பார்வதி வற்புறுத்த… வாங்கிக்கொண்டான் மனமில்லாமல் தான் , ஆனால் தாய்க்காக..

அந்த பணத்தை தொழிலில் போட்டவன் ..மீதிக்கு கொஞ்சமாக லோன் போட்டு.. அடுத்த ஒரு வருடத்தில் அந்த லோன் கடனையும் அடைத்தான்..

பின் கௌதம்க்கு நல்ல சம்பந்தம் வர அதையும்

முடித்தனர்..கௌதமின் மணைவி ராதிகா ரொம்ப அமைதி… நல்ல மருமகள்கூட… தன் தம்பி தங்கையை.. விட்டு புகுந்தவீடு வந்தவள்.. இங்கு மோகனா, ரவியை பார்த்ததும் சந்தோசப்பட்டள்… அவர்களும் அண்ணி அண்ணி என்று ஒட்டி கொண்டனர்… இப்பொழுது மாசமா இருப்பதால் தாய் வீடு சென்றுள்ளாள் ராதிகா..

காபி கொண்டு வந்த அன்னையை பார்த்தவள்,

“அம்மா உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்…”.

“சொல்லுடா… என்ன…?”

“அம்மா காலேஜ்ல டூர் போறோம்…”

“அதான் தெரியுமே.. சிம்லா தானே..”

“இல்ல, டூர் வேற இடத்துக்கு மாத்திட்டங்க..

“அப்படியா அப்போ சிம்லா இல்லையா வேற எங்க போறீங்க? என்று கேட்ட அன்னைய கூர்ந்து பார்த்துக்கொண்டே “தமிழ் நாடு” என்றாள் மோகனா…

“நீ டூர்க்கே போகவேண்டாம் மோகனா”... என்று கோபமாக வந்து விழுந்தன வார்த்தை , அதை சொன்னது பார்வதி இல்லை ஈஸ்வர் மோகனாவின் தந்தை..

சுவாசம் தொடரும்....

சுவாசம் 3

“என்னவளே நீ என்னவள்
என்பதை அறிவாயா”?
“என்னவளே நீ எனக்கானவள்
என்பதை நீ எப்பொழுது உணர்வாயோ”?

சிம்லா போகாதது வருத்தத்தை தந்தாலும், மோகனா, சந்துருக்காக போக சம்மதித்தாள் ப்ரியா,..

காலேஜில் இருந்து தனது காரில் கிளம்பி, நேராக வீட்டுக்கு வந்து அமைதியாக சோபாவில் அமர,

கார் சத்தம் கேட்டு எட்டி பார்த்த காயத்ரி, “பிரியா குட்டி, என்னடா இவ்வளவு சீக்கிரம் வந்துட்ட , இரு உனக்கு சாப்பிட ஏதாவது , கொண்டு வரேன்”, என்று கிட்சனுக்கு செல்ல போக,

இது என்னடா சோதனை, காலையில் டிபன் பிடிக்கவில்லை என்று தானே , கோபத்துல போறமாதிரி எஸ்கேப் ஆனேன், இப்போ மறுபடியுமா, என்னால முடியாது சாமி" என்று மனதில் நினைத்தவள் உடனே தன் அன்னையிடம் தனக்கு எதுவும் வேண்டாம் என்று கூற.....

அவரோ "ஆமா குட்டிமா கேக்க மறந்துட்டேன் பாரு, சந்துரு ஜூஸ் ஏதும் வாங்கித்தந்தானா" என்று அன்னை கேட்டதும் முழித்தவள்..

"ஆ.. ஆ.. ஆமா , ஜூஸ் ஜூஸ்தான் வாங்கிதந்தான்" , என்று உளறியவளை பார்த்து முறைத்தது அவளது மனசாட்சி..
"ஏண்டி ஒருத்தன் உன் மேல உள்ள பாசத்துல உனக்கு வெண்ணெய் சொட்ட சொட்ட பாவ்பாஜி வாங்கித்தந்தா, அவனையே நீ போட்டுக்குடுத்துடுவே போலயே.. இது சரிவராது நான் போறேன் உன்னை விட்டு" என்று புறப்பட.. அதனை பிடித்து பிரியா இழுக்க ,

"என்மேல உனக்கு அவ்ளோ பாசமா ப்ரியாகுட்டி" என்று மனசாட்சி கண்ணீர் வடிக்க..

“அதெல்லாம் இல்ல, நீ இல்லன்னா என்னை எல்லோரும் மனசாட்சி இல்லாத பிரியான்னு சொல்லுவாங்க, அது எனக்கு தேவையா.. அதனால கம்முன்னு கிட” என்று விட்டு..

தாயை பார்த்தவள் “என்கிட்ட பேசாதீங்க. நீங்க தான் என்னை சுற்றி பார்க்க அனுப்பலல்ல, போங்க உங்க பேச்சு கா”..ஹூம்.. என்று தலையை சிலுப்பி கொள்ள

காயத்ரியோ “இல்லையே , நீ டூர் போவதற்கு சரின்னு சொல்லி உன் பெயர் சேர்த்தாச்சி குட்டிமா” என்ற தாயை சட்டென்று திரும்பி பார்த்தாள் புரியாமல்…

“ஆமா குட்டிமா சந்துரு போன் பண்ணினான்.. டூர் மாறியதை பற்றி சொன்னான்.. குளிர் தாண்டா உனக்கு ஒத்துக்கொள்ளாது.. வீசிங் வருமே அப்புறம் உனக்குதான் ரொம்ப கஷ்டம்டா…. அதான் சிம்லா வேண்டாம் சொன்னேன், மத்தபடி தமிழ் நாடுன்னா பிரச்னை இல்லை, அதுவும் சந்துரு உன் கூட வர்றான் , சோ எதுனாலும் அவன் பார்த்துப்பான்….. இப்போ கொஞ்சம் சிரியேன்..” என்று தாய் கெஞ்ச..

“சந்துரு போன் பன்னானா, அதானே பார்த்தேன், என்னடா பயபுள்ள , என்கிட்டே நீ பேர் குடு , அம்மா

நோ சொல்ல மாட்டாங்கன்னு, சொல்லி என்ன இங்க அனுப்பிட்டு, அந்த கேப் ல உங்களுக்கு போன் பண்ணி சொல்லிருச்சா அந்த பக்கி, அவனுக்கு இருக்கு நாளைக்கு" என்று பிரியா சொல்ல..

"பிரியா இப்படி பேசகூடாதுன்னு எத்தனை தடவை சொல்றது" என்று அதட்ட

"அம்மா அவன் என் பிரெண்ட் அவனை என்ன வேணா நான் சொல்லுவேன், அவன் ஒன்னும் சொல்லமாட்டான்மா.. ஆனாலும் அவனை என்ன பண்றேன் பாருங்க.. கொஞ்சநேரம் உங்ககிட்ட கோபத்துல இருக்கிற மாதிரி விளையாடலாம்ன்னு நினைச்சேன், அத அந்த பக்கி கெடுத்து வச்சிட்டான்.....சரிமா, இன்னும் இரண்டு நாள் தான் இருக்கு டூர் செல்ல தேவையானதை இப்போதே எடுத்து வைக்க போகிறேன் என்று சொல்லி துள்ளலுடன் தன் அறைக்கு சென்றாள்..

.....

மோகனா, பிரியா, சந்துரு.. இன்னும் நிறையபேரை சுமந்துகொண்டு, பிரிந்திருந்த தண்டவாளத்தை இணைக்கும் முயற்சியை மேற்கொண்டு ஓடிக்கொண்டிருந்தது, அந்த இரயில்...

மாணவர்களையும், அவர்களுடன் கூட இரு ஆசிரியர்களையும், தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைத்தது.. காலேஜ் நிர்வாகம்..

சில மாணவ மாணவியர்கள் தமிழ் நாடு என்றதும் , டூர்க்கு வரமுடியாது என்றும், வேறு எங்காவது செல்லலாம் என்றும் கருத்து தெரிவிக்க, சிலர் தங்களுக்கு வர விருப்பம் என்று பெயர் கொடுத்தனர். பின் நிர்வாகம் ஒருமனதாக தமிழ்நாடையே முடிவு செய்து , சில தமிழ் மாணவர்களிடம் கலந்தாலோசிக்க, அதில் சந்துரு முன்வந்து பொறுப்பேற்றான்,..

மும்பை-நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் , அதில் நான்கு பேர் மட்டும் பயணம் செய்யக்கூடிய AC கோச்சில் தனி கூபேயில் தான் , இவர்கள் மூவரும் இருந்தனர்..

சந்துருவோ ப்ரியாவை சாப்பிட சொல்ல,

அவளோ அவனை படுத்திக்கொண்டிருந்தாள்…

“இல்ல எனக்கு வேண்டாம்.. பசிக்கலடா நீ சாப்பிடு”.. என்றவள் மீது கடும் கோபத்தில் இருந்தான்…

பின்ன மதியம் இரயிலில் ஏறியதில் இருந்து
“மோகனா என்னவோ இப்போதான் இரயிலையே
பார்ப்பது போல்.. வெறித்து பார்த்து
கொண்டிருக்கிறாள்..

இந்த ப்ரி , என்னவோ இப்போதான் மொபைலை
புதுசா பார்க்கிற மாதிரி, அதையே நோண்டிட்டு
இருக்கா, நானும் எவ்வளவு நேரம் தான்
பசிதாங்குறது,.ச்சே” என்று சலித்தவன், …..

“சாப்பாடு வச்சிருக்கேன்.. ரெண்டுபேரும் சாப்பிட்டு
தான் படுக்கணும்” என்றவன்,
தன்னுடைய பெர்த்தில் ஏறி படுத்து விட்டான்…

சிறிது நேரம் கழித்து திரும்பி பார்த்த மோகனா,
மூன்று பார்செல் பிரிக்க படாமல் இருப்பதை கண்டு,

“பிரியா”

“என்ன?” என்று மட்டும் கேட்டாள், ப்ரியா,
மொபைலில் இருந்து பார்வையை திருப்பாமல் ..

“சாப்பிடு”

“ஐயோ மோஹி எனக்கு வேணாம்.... நீ சாப்பிடு..”

“க்கும்” .. தொண்டையை செருமியவள்..
“சந்துரு சாப்பிடாம படுத்துட்டாங்க சாப்பிட சொல்லு..” என்றவளை.. பார்த்த பிரியா..

அப்படி வா வழிக்கு, சந்துரு சாப்பிடவில்லை என்றதும் மேடம்க்கு மனசு தாங்கலையோ, என மனதுக்குள் நினைத்தவள் ,

“என்கிட்டே சொல்றதுக்கு பதிலா அவன் கிட்டயே சொல்ல வேண்டியதுதானே” என்றவள் , பின் அவன் படுத்திருந்த பெர்த்தை பார்த்துவிட்டு “ இல்ல மோஹி அவன் தூங்கிட்டான்னு நினைக்கிறன் சரி விடு... நீ சாப்பிடு என்று ஓரக்கண்ணால், மோகனாவை பார்த்துக்கொண்டே மறுபடியும் மொபைலில் மூழ்கினாள்...

ஆனால் மோகனாவுக்கோ அப்படியே விட மனசு வரவில்லை, சந்துரு பசி தாங்க மாட்டான் என்று அவளுக்குத் தான் தெரியுமே..

இவ்வளவையும் தூங்குவது போல் நடித்து, கேட்டு கொண்டுதான் இருந்தான் அந்த கள்ளன்.. எப்படியும்

ரெண்டும் சாப்பிட ஆரம்பிக்கும் போது சேர்ந்து சாப்பிடலாம் என்று ..சும்மா கண்மூடி படுத்திருந்தான்..

நான் சாப்பிடவில்லை என்றதும் உன் மனசு கேக்கலையா குட்டிமா, பேபி கிட்ட சொல்லி என்ன சாப்பிட சொல்றதுக்கு பதிலா நீயே என்கிட்ட சொல்லாமே, என்று ஏக்கத்துடன் நினைத்தவன், அவள் பேசியதை கேட்டதும் நம்பிக்கை வந்திருந்தது… அவள் தன்னை உணர்வாள்.. தன்னிடம் வந்து பேசுவாள் என்று..

மோகனாவோ "என்ன பண்ணலாம்" என்று கையை பிசைந்தவாறு யோசித்தாள் …

உடன் படிக்கும் மாணவனான சுனில், தன் நண்பர்களை காண அடுத்த கம்பார்ட்மெண்ட்க்கு சென்றவன் இன்னும் வரவில்லை.. அவன் வந்தாலாவது .. சந்துரு வை எழுப்பி சாப்பிட வைக்க சொல்லலாம்..

"பிரியா" என்று மீண்டும் அழைத்தாள் மோகனா.

"ம்ம்ம்ம்…"

“ப்ரி…”

“சொல்லு டி….”

“சாப்பிடு….” என்று மறுபடியும் மோகனா கொஞ்சம் அழுத்தி சொல்ல..

ப்ரியா தன் மொபைலை.. கீழே வைத்தவள் தன் பார்சல்லை பிரித்து உண்ண துவங்கினாள், உண்டு முடித்தவள்.. “போதுமா .. சாப்பிட்டேன்.. ஆனாலும் ரொம்ப பாசம் டி என் மேல… தேங்க்ஸ்டி குட்டி..” என்றவள்.. மறுபடியும் மொபைலில் மூழ்க.

மானசீகமாக தலையில் அடித்து கொண்ட மோகனா.. “இப்போ நாமதான் அவனை எழுப்பனுமா”…என்று யோசனையாய் நின்றிருந்தவளை.. பார்க்க பாவமாக இருக்க.. தானே கீழிறங்கி வந்தான்..

வந்தவன் “போதும் போனில் விளையாடியது…தூங்கு பேபி” .. என்று பிரியாவை படுக்க செய்தவன்..

திரும்பி, ஒரு பார்செலை மோகனாவின் புறமாக நகர்த்தி தானும் உண்ண துவங்கினான்..

சாப்பிட்டு முடித்து, கையை கழுவிவிட்டு வந்து மோகனாவை ஓரப்பார்வை பார்த்துக்கொண்டே தன் பெர்த்தின் மேல் ஏறி படுத்து அவளை கண் எடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தன் , அவ்வளவு சந்தோசமாக இருந்தது அவன் மனது,

ஆனால் அவளோ, ஒருவன் தன்னை விழுங்கி விடுவதை போல் பார்ப்பதை அறியாமல், தன் தந்தையை சம்மதிக்க வைத்ததை நினைத்து கொண்டிருந்தாள்..

தாயிடம் தமிழ் நாடு என்றதும், தாயின் கண்ணில் தெரிந்த ஆர்வம், பின் தந்தை வேண்டாம் என்றதும், வந்த கவலை.....இதையெல்லாம் பார்த்தவள் ஒரு உறுதியோடு தந்தையை ஏறிட்டாள்..

“அப்பா நான் டூர்க்கு கன்டிப்பா போகனும்” என்ற அவளின் வார்த்தையில் அதில் நான் எப்படியும் போயே ஆவேன் என்று உறுதி தெரிந்தது.

“ அப்பா சொன்னா கேக்க மாட்டியா டா “

“அப்பா உங்ககிட்ட நான் எனக்கு அதுவேணும் இது வேணும் என்று ஒருநாளும் கேட்டது இல்லை ,

இப்போ கேக்குறேன் ப்ளீஸ் பா…. எனக்காக சம்மதம் சொல்லுங்க பா பிளீஸ்…. என்று கேட்ட தன் மகளின் கண்ணில் தெரிந்த ஏக்கத்தை கண்டவர் , அவளின் தலையை வாஞ்சையாக தடவி “சரிமா போய்ட்டு வா” என்றார்…

நம்ப முடிய வில்லை மோகனாவுக்கு..
“அப்பா தேங்க்ஸ் பா” என்று அவர் தோளில் சாய்ந்தாள், ஆனால் அவள் மனதுக்குள் “அப்பா நான் தமிழ் நாட்டுக்கு போறது எதுக்கு என்று உங்களுக்கு தெரியாது..

கடவுளா பார்த்து எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துருக்கார்பா, நான் தேடி போற காரியம் கண்டிப்பா வெற்றி அடையனும்பா” என்று நினைத்த மோகனா, தன் தாயை பார்க்க ,அவர் முகத்தில் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை, ஆனால் கண் மட்டும் கலங்கி இருந்தது…

இரயில் ஹாரன் சத்தத்தில் தன் நினைவுகளிலிருந்து வெளிவந்தவளை நித்ரா தேவி தன்னுடன் அழைத்து கொண்டாள்..

மறுநாள் காலையும், மாலையும்.. அதே போல் கழிய, இரவு ஒரு மணி அளவில், திருநெல்வேலியில் இறங்கவேண்டும்.. என்றதும் எல்லோரும்

தங்களுடைய பெட்டியை எடுத்து வைத்தனர்..

ஆனால் ப்ரியாவோ, சந்துருவை பாசமாக (முறைத்து) பார்த்து கொண்டிருந்தாள் ...

பின்ன மொபைலை சந்துரு பிடிங்கி வச்சிக்கிட்டான் இல்ல... அதான் அந்த பாச பார்வை...

ப்ரியாவின் அருகில் அமர்ந்து அவள் தோளில் கையை போட்டவன்..
"மும்பையில்தான் எப்போப்பாரு மொபைலை உன் கூட பிறந்தது மாதிரி வச்சிருப்பே.. இங்க வந்த பிறகு, இந்த ஊரின் அழகை ரசிக்கனும் பேபி" என்று தலையில் தட்டியவனை..

மறுபடியும் பாசபார்வை பார்த்தவள், "அட பக்கி.. இந்த அர்த்த ராத்திரில நான் எந்த அழக ரசிக்கப்போறேன்"... என்று சினுங்கினாள்...

சந்துரு பேச்சை மாற்றும் விதமாக, "பேபி ஆன்ட்டி எப்படி சம்மதிச்சாங்கன்னு நீ சொல்லவே இல்லையே"...என்று சந்துரு ராகம் போட்டு இழுக்க..

அவனைப்போலவே , "நீ கேக்கவே இல்லையே பக்கி"

என்று ராகம் போட்டு இழுத்தவளிடம் இருந்து இரண்டடி தள்ளி அமர்ந்தான்.....ப்ரியாவின் அடிக்கு பயந்து....

அவர்கள் விளையாட்டை ரசித்த மோகனாவின் மனதில் சிறிது கூட பொறாமையோ, சந்தேகமோ இல்லை...மாறாக அவன், ப்ரியாவிடம் சரிக்கு சமமாக பேசுவதும், அவளை வெறுப்பேற்றி சில பல அடிகளை வாங்கி கொள்வதும், அதே சமயம் அவள் என்ன சொன்னாலும் கேட்டு கொள்வதும்... அவர்களின் சிறுபிள்ளைதனமான சண்டைகளை பார்த்து அவளுக்கு ஏக்கமாக கூட இருக்கும்....

அன்னை சொன்னதை அவனிடம் சொன்னவள் அவனை அடிக்க துவங்க....அவள் அடித்த அடிகளை சுகமாய் வாங்கிக் கொண்டவன் அவளிடம் "எப்படியோ ஆன்டியை சம்மதிக்க வச்சேனா இல்லையா அத சொல்லு" என்றவனிடம்,..

"டேய் ரொம்பத்தான் போடா...வெவ்வ்வ்வ...." அவனுக்கு அழகு காட்டியவள்.. "மோஹி உன் மொபைல் குடு".. என்ற ப்ரியாவை முடிந்த மட்டும் முறைத்தவன்..

"ஸ்டேஷன் வரப்போகுது.. ஐந்து நிமிடம் தான் நிற்கும் அதற்குள்ள நாம இறங்கனும்.. இறங்காம வேடிக்கை

பார்த்துட்டு நின்ன அவ்ளோதான் சொல்லிட்டேன்…”

“டேய் தமிழ்நாட்டுக்கு வந்ததும், ரொம்பதான் வாய் நீளுது, அத கொஞ்சம் அடக்கி வை .. இன்னும் இருபது நாள்ல திரும்பி மும்பைக்குதான் போயாகனும் அதை ஞாபகத்தில் வச்சிக்கோ” என்று விரல் நீட்டி பத்திரம் காட்டினாள்.

ஸ்டேஷனில் இரயில் நிற்கவும்,
“எல்லோரும் இறங்கியாச்சா”.. என்று ஆசிரியர் கேக்க..

எல்லோரும் கோரசாக “இறங்கியாச்சி” என்று கத்தினர்…

ஸ்டேஷனில் இருந்த அனைவரும் திரும்பி பார்த்தனர்…ஹா ஹா இவங்க கத்தினது மும்பைக்கே கேட்டாலும் கேட்கும்…

அவர்களை அடக்கிய ஆசிரியர்கள் திரும்பி சந்துருவை பார்க்க,
அவனோ “வெளிய வெயிட் பண்றங்க சார்” என்றதும் எல்லோரும் கிளம்பினர்..

பிரியா மோகனாவிடம் “என்னடி இது சார் இந்த பக்கிய பார்க்க, அவனோ எல்லாம் ரெடின்னு சொல்லுறான்.. என்ன நடக்குது இங்க”...

“எனக்கும் ஒன்னும் புரியல” என்று மோகனா சொல்ல ,...

“வா வெளிய போய் அவன் தலையில ரெண்டு போட்டா தன்னாலே விஷயத்தை கக்கிருவான்.. பாலோ மீ” என்று வெளியே வந்தனர் ஸ்டேஷனை விட்டு..

வெளியே வந்தவர்களை சக்தி விநாயகர் ஆலயம் வரவேற்றது....இருவரும் ஆண்டவனை வணங்கி விட்டு திரும்ப, அங்கே வால்வோ பேருந்து இரண்டு நின்றது. அதில் எல்லோரும் ஏறிக்கொண்டிருந்தனர்....

சந்துரு அருகில் போய் “டேய் பக்கி, நீதான் இந்த பஸ்ஸ ஏற்பாடு பண்ணுனியா”... என கேட்டாள் ப்ரியா...

அவர்கள் பேசிக்கொண்டிருந்ததோ ஓட்டுநர் ஏறும் வழி அருகில்.. ப்ரியா சந்துருவை பக்கி என்றதும்.. ஓட்டுநர்க்கு கோபம் வந்துவிட்டது... அதை கவனித்த மோகனா...

“ப்ரி செல்லம்”

“என்ன மோஹி குட்டி”

“அந்த டிரைவர் உனக்கு சொந்தமா”
அப்பொழுதுதான் டிரைவரை கவனித்தாள். பாதி முகத்தை மீசைக்குள் ஒளித்து வைத்திருந்தான். பார்க்க கருப்பாக இருந்தான்…

அவன் தோற்றத்தை கண்டு மிரண்டவள் “அடியே, நான் கொலைக்காரியா மாறதுக்குள்ள ஒடிடு..”

இப்படியாக அனைவரையும் சுமர்ந்து கொண்டு பேருந்து கிளம்பியது…. இரவு ஒரு மணி ஆதலால் பேருந்தின் குலுக்கல் தாலாட்டுவது போல் இருக்க.. தோழிகள் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து தூங்கி விட்டனர்..

இருவரும் குழந்தை போல் தூங்குவதை ரசித்த சந்துரு தன்னவளை மட்டும் அனு அனுவாக ரசித்தான்….

“குட்டிம்மா, எப்போடி என்ன புரிஞ்சிக்க போறே….நான் உன்னை விரும்புறது உனக்கு தெரியுது. ஆனா, தெரியாத மாதிரி நடிக்கிற… ம்ம்ம்ம்ம்ம்ம் ஒரு

பெருமூச்சை வெளியிட்டான்.

ஆனால் “ஒரு ஜோடி கண்கள்” மட்டும் இவர்கள் மூவரையும் பழிவாங்கும் வெறியுடன் நோக்கியது…

ஒரு மணி நேரம் பயணத்திற்கு பிறகு, ஒரு ஊருக்குள் பஸ் நுழைந்தது…
(அந்த ஊரின் அழகை விவரிக்கத்தான் ஆசை.. ஆனா பாருங்க, ப்ரி பேபி சொன்னமாதிரி .. இந்த அர்த்த ராத்திரியில் என்னனு விவரிக்க
நாளைக்கு காலையில், நம்ம பேபி சொல்லுவா இந்த ஊரின் அழகை பற்றி)

பேருந்து நின்றதும், ஒவ்வொருத்தராக இறங்க ஆரம்பிக்க.. அந்த தாடிக்குள் முகத்தை ஒளித்து வைத்திருந்த டிரைவர் மட்டும்.. ப்ரியாவை முறைத்து கொண்டே இறங்கினான்…

அதை கவனித்த பிரியா ”மவனே என்னய்யா மொறைக்கிற உனக்கு இருக்கு, நான் இந்த ஊரை விட்டு போறதுக்குள்ள உன் மீசையை எடுக்க வைக்கிறேன் என்று மனதுக்குள் கருவியவளை மோகனா இழுத்துக்கொண்டு சென்று,தாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்துருந்த வீட்டின் முன் வந்து நின்று அதன் அழகை ரசிக்க…

பிரியாவோ “வாவ் இது வீடா இல்ல குட்டி அரண்மனையா, ராத்திரி பாக்கும் போதே இவ்வளவு அழகுன்னா பகல்ல பார்த்தா “இந்த சந்துரு எங்க போனான்.....இது யார் வீடு, அவன்கிட்ட கேக்கனும் மோஹி.....அவன்தான் எல்லா ஏற்பாடும் பன்றானா...இது அவன் ஊரா....இந்த லூசு பக்கி எதையோ மறைக்குது.....”

அப்பொழுது ஒரு ஆசிரியர் “ஸ்டூடன்ஸ் காலை ஏழு மணி அளவில் நாம் இங்கிருந்து கிளம்ப வேண்டும். சோ.. கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க...என்று ஹிந்தியிலும், தமிழிலும், உரைத்தவரை.பார்த்து ஓகே சார் என்று கத்தினர்...

அவர்அவர்களுக்கு ஒதுக்கிய அறைக்குள் மாணவ மாணவிகள் சென்று உறங்க ஆரம்பித்தனர்... பிரியாவும், மோகனாவும் தங்களுக்கான அறைக்குள் நுழைய..அப்பொழுது “குட் நைட் பேபிஸ் காலையில் பார்க்கலாம்” என்றவனை

பிரியா “குட் நைட் பக்கி, நாளைக்கி நான் உன்கிட்ட முக்கியமா பேசணும்..... இப்போ எனக்கு தூக்கம் வருது என்றவள்” தன்னுடைய கட்டிலில் தொப் என்று விழுந்தாள் உடனே தூங்கியும் போனாள்..

மோகனாவையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தான் சந்துரு,

தன்னையே பார்த்து கொண்டிருந்தவனை ஒற்றை புருவம் தூக்கி “என்ன” என்று கேட்க..

அவனோ அதில் மயங்கி, “ஒன்னும் இல்ல” என்று தலையை இடம் வலம் ஆட்டியவன்.. குட் நைட் என்றுவிட்டு சென்றான்.

ப்ரியாவிற்கு ஒரு போர்வையை எடுத்து போர்த்தியவள் தானும் போர்த்தி கொண்டு தூங்கினாள்..

அதிகாலை ஐந்து மணி அளவில் முழிப்பு தட்டிய பிரியா, எழுந்து ஜன்னலை திறந்தாள். முகத்தில் தீண்டிய குளிர் காற்றில் தன்னை மறந்து நின்றவள், மோகனாவை பார்க்க அவள் நன்றாக உறங்கிக்கொண்டிருந்தாள்,
மெதுவாக வெளியே தோட்டத்துக்கு வந்தாள்.

வெளியே வந்தவள் தோட்டத்தின் அழகைக்கண்டு, மெய் மறந்து நின்றுவிட்டவளை, அவளது மனசாட்சி கேலி செய்தது..

“ஏண்டி, இங்க வரமாட்டேன்னு அழுது அழிச்சாட்டியம் பண்ணது எல்லாம் மறந்துப்போச்சா… “

“ஹி…ஹி, இங்க இவ்ளோ அழகா இருக்கும்ன்னு நான் நினைக்கவில்லையே” இங்க பாரு எவ்ளோ அழகா இருக்கு. அந்தப் பக்கம் வாழை தோப்பு, இந்தப்பக்கம் தென்னந்தோப்பு, நடுவுல பங்களாவா இல்ல அரண்மனையா என வியக்கும் அளவு ஒரு வீடு. அதை சுத்தி ரோஜா தோட்டம்….என்றவள் பின் தன் மனசாட்சியிடம்,

“எனக்கு இப்போ என்ன தோனுது தெரியுமா”

“என்ன தோனுது”

“எனக்கு இப்போ பாடனும் போல தோனுது”

இதை கேட்டு அதிர்ந்த மனசாட்சி… “நான் இப்பவே என் பெட்டிய கட்டுறேன்..

“எதுக்கு”

“ம்ம் நீ பாடப்போறேன்னு சொன்னியே, புயல் ஏதும்

வந்து என்ன சுருட்டிகிட்டு போயிடுச்சின்னா”

“அத நான் பார்த்துக்கிறேன் நீ கவலை படாதே”

ம்ம்ம் “சிம்லா போகவேண்டிய நான், என் கிரகம் இங்க வந்து உன் பாட்டெல்லாம் கேக்க வேண்டி இருக்கு. சரி பாடி தோலை” என்று மனசாட்சி சொன்னதும்..

பிரியா “தன் இரு கைகளையும் தன் கன்னத்தில் வைத்து, மெய் மறந்து பாட ஆரம்பித்தாள்…

“மார்கழி பூவே, மார்கழி பூவே”
“உன் மடி மேலே ஓரிடம் வேண்டும்”
“மெத்தை மேல் கண்கள் மூடவும் இல்ல”
“உன் மடி சேர்ந்தால் கனவுகள் கொள்ளை” ..

மார்கழி பூ…. பூ…. பூ….. என்று திக்கியவளை,

“என்ன ஆச்சு பிரியா” என்று மனசாட்சி கேக்க..

அவளோ, அவளை நோக்கி வேகமாக வந்த ஐந்துவை பார்த்து கண்கள் தெறித்து விடும் அளவுக்கு விழி விரித்தாள்.

ஓடு ஓடு என்று மனசாட்சி சொல்ல.. அவளோ
பயத்தில் கால் மரத்து ஓட முடியாமல்
நின்றிருந்தவள் மீது பாய்ந்தது அந்த வேட்டை நாய்...

சுவாசம் தொடரும்....

சுவாசம் 4

“கண்களால் என்னை கைது செய்பவனே
என்னை களவாடும் கள்வனும் நீதான்
என் காவலனும் நீதான்”!!!

ஆளுயற நாய் ஒன்று தன் கோர பற்களை காட்டி தன் மேல் பாய வந்ததும், பயத்தில் கண்களை மூடிய பிரியா,
“வேலு” என்ற கர்ஜனை குரலில், தன் கண்களை மெல்ல திறந்தாள்..

“நான் இன்னும் உயிரோடவா இருக்கேன்” என்று நினைத்தவள், பின் தன் எதிரில் தனக்கு முதுகு காட்டி, ஓட்ட பயிற்சிக்கான உடை அணிந்து நின்றவனை பார்த்து, யார் இவன் ஒருவேளை

நாய்க்கிட்ட இருந்து இவன்தான், காப்பாத்தினானோ, இருக்கும் இருக்கும் …..அவன் தானே நாயை பிடிச்சிருக்கான், சரி ஒரு தேங்க்ஸ் சொல்லுவோம் என நினைத்த பிரியா அவனை அழைத்தாள்… எப்படி?

சொடக்கு போட்டு “ஹலோ” என்று அழைத்தாள்.

ஆனால் அவன் அதை கவனிக்காததை போல், மறுபடியும்

“வேலு” என்று மீண்டும் சத்தமாக அழைத்தான்.. நம் கதாநாயகன் சபரிஷ்

அவன் அழைத்த அந்த வேலு வரவும் அவனிடம், நாயை ஒப்படைத்து,
“ஐந்து மணிக்கெல்லாம் டைகரை கட்டி வைக்கணும்ன்னு சொல்லிருக்கேனா இல்லையா” என்றான் கோபம் நிறைந்த குரலில்….

“இல்லைங்க அய்யா, டைகரை கட்டிவைக்கணும்ன்னு தான் வேகமா வந்தேன்..ஆனா அப்போ ஆச்சி கூப்பிட்டாங்க. என்னனு கேக்க போயிருந்தேன். அதுக்குள்ளே இப்படி ஆயிடுச்சி மன்னிச்சிருங்க அய்யா…”

கை கட்டி… தலையில் இருந்த துண்டை எடுத்து

கக்கத்தில் வைத்து கொண்டு … விட்டால் காலிலே விழுந்திடுவான் போல இருந்தான் அந்த வேலு…

“சரி போ.. போய் இதை கட்டி போடு.. கொஞ்ச நாளைக்கு, அவிழ்த்து விட வேண்டாம்” என்றவன்… தன்னை சொடக்கு போட்டு அழைத்தவளை திரும்பியும் பாராமல்…. தனது ஓட்டத்தை தொடர்ந்தான்…..

“ஆங் … நான் கூப்பிடுறேன் திரும்பியும் பாக்காம போறான்… பெரிய இவன்….. அந்த ஐந்து கிட்டேருந்து காப்பாத்தினானே ஒரு தேங்க்ஸ் சொல்லலாம்ன்னு நினைச்சா, திரும்பி பாக்காமையா போற, போடா…..” என்றவளை பார்த்து நமுட்டு சிரிப்பு சிரித்தது அவளது மனசாட்சி..

“என்ன சிரிப்பு”

“இல்ல, உண்மையிலே நீ தேங்க்ஸ் சொல்லத்தான் கூப்ட்டியா அவனை”…

“பின்ன, வேற எதுக்குன்னு நினைச்சே… ஆளு இவ்ளோ வளர்த்தியா இருக்கானே, மீசை வச்சிருக்கானா, வச்சிருந்தா சின்னதா வச்சிருக்கானா? இல்ல பெருசா

இந்த ஊருக்கு தகுந்த மாதிரி வச்சிருக்கானா? தலை முடி எவ்ளோ அடர்த்தியா இருந்திச்சு.... ஆளு அழகா, லட்சணமா இருக்கனா? குரல் இவ்ளோ கம்பீரமா இருக்கே, அப்ப அவன் முகம் எப்படி இருக்கும்", இதெல்லாம் பார்க்கவா அவனை கூப்பிட்டேன்... ச்ச ச்ச..... தேங்க்ஸ் சொல்லத்தான் கூப்பிட்டேன்.. என்றவளை பார்த்து..

"த்து"... என்று துப்பிய மனசாட்சி "நான் ஒன்னு சொல்லட்டா" என்றது...

"என்ன"

"நீ வெகுளின்னு எல்லோரும் நினைக்கிறாங்க அத மெயின்டைன் பண்ணு"... என்க

"சரி சரி ரொம்ப ஓட்டாத, வா போகலாம்"... என்றவள் திரும்பி நடந்தாள்..

அப்பொழுது தான் நேற்று தாங்கள் தங்கியிருந்த அந்த வீட்டை பார்த்தாள்!!!

அது வீடு இல்ல இரண்டு அடுக்கு கொண்ட அழகான குட்டி பங்களா.....சமீபத்தில் தான் வெள்ளை அடித்திருப்பார்கள் போல..

நேற்று இரவு வந்ததில், இந்த வீட்டின் அழகு சரியாக தெரியவில்லை…

வீட்டின் அழகை ரசித்து கொண்டிருந்தவளுக்கு, ஏதோ உள்ளுணர்வு உந்த தன்னை யாரோ பார்ப்பது போல் தோன்ற சட்டென திரும்பி பார்த்தாள்.

அந்த பெரிய அரண்மனையின், வெளியே சுற்றும் முற்றும் தேட, அங்கே அந்த வேலு தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தான். மத்தபடி வேறு யாரும் இல்லை.. ச்ச… என்று தன் தலையில் தட்டி கொண்டவள்.. பங்களாவை….. இல்ல இல்ல அந்த குட்டி அரண்மனையை நோக்கி சென்றாள்..

“யாரும் இன்னும் எழுந்திருக்கலயா, இந்த மோஹி என்ன இவ்ளோ நேரம் தூங்குறா? இந்த சந்துரு பக்கியயும் காணோம், என்று யோசித்தப்படி உள்ளே நுழைந்தாள்

……

எப்பொழுதும் போல், காலையில் ஓட்ட பயிற்ச்சியில்

இருந்தவன், டைகரின் சத்தத்தில் வேகமாக வந்தான்..அங்கு ஒரு பெண் நிற்பதையும், அவள் டைகரை பார்த்து பயத்தில் நடுங்குவதையும் கண்டவன் உடனே வேகமாக வந்து, டைகரின் கழுத்து பட்டைய பற்றி இழுத்து பிடித்து நிறுத்தனான்.....அவள் சொடக்கு போட்டு அழைத்ததில் கோபம் கொண்டவன் அவளின் அழைப்பை அலட்சியபடுத்திவிட்டு மீண்டும் தன் ஓட்டத்தை தொடர்ந்து முடித்துவிட்டு தன் அறைக்கு வந்து, ஏசிக்காக மூடிவைத்த திரையை விலக்கி பார்த்தான்...

பார்த்தவன் இதழில் மென் புன்னகை. "எவ்ளோ தைரியம், என்னை சொடக்கு போட்டு கூப்பிடுறா, யார் அந்த பொண்ணு சந்துரு கூட படிக்கிற பொண்ணா இருக்குமோ, நினைத்தவன் பின் அவன் மணக்கண்ணில் பயத்தில் அவள் கண்களை மூடி நின்ற கோலம் அவன் மனதில் ஏதோ தடம் புரள செய்ய... தன் எண்ணம் போகும் திசையை அறிந்து தன்னை சமன்செய்தவன், அவள் திரும்பி பார்ப்பதை உணர்ந்து, திரையை மூடிவிட்டு குளியல் அறைக்குள் புகுந்தான்..

இருபது நிமிடத்தில் , குளியல் அறையிருந்து வெளியே வந்தான், ஷேவிங் செய்திருப்பான் போல... ஆ஼ப்டர் ஷேவ் லோஷனின் மணம் அரையெங்கும் மணத்தது...

வெள்ளை அரைக்கை சட்டையும், வெள்ளை வேட்டியும் அனிந்தவன் தலையை ஜெல் தடவி படிய வைக்க.. அது நான் படிவேனா என்று அடம்பிடித்தது...

சற்று மாநிறம்தான் ஆனால் அது தான் அவனுக்கு அழகு சேர்த்து... மீசையை முறுக்கி விட்டவன்... கை கடிகாரத்தை அணிந்தான், வாசனை திரவியத்தை தன் மீது தெளித்தவன்... மீண்டும். தன்னை கண்ணாடியில் ஒருமுறை பார்த்துவிட்டு, அலை பேசியை எடுத்து கொண்டு, தன் அறையை விட்டு வெளியே வந்தான்..

சபரிஷ்.. தன் குடும்பத்தின் மீது மிகுந்த பாசம் வைத்திருப்பவன்.. பொறுப்பானவன்....ஆனால், ரொம்ப கோபக்காரன்... அவனுக்கு பொய் சொன்னால் பிடிக்கவே பிடிக்காது...

அவனுக்கு அவனது ஆச்சி விசாலாட்சியை ரொம்ப பிடிக்கும்...
தர்மலிங்கம், லட்சுமி தம்பதியரின் மூத்த புதல்வன் சபரீஷ், இவனுக்கு அடுத்து தம்பி சந்துரு, தங்கை செல்வி...

சித்தப்பா ராஜலிங்கம், சித்தி பிரபாவாதி.. அவர்களின் ஒரே புதல்வி, இந்த அரண்மனையின் கடைக்குட்டி.. செல்ல இளவரசி "மேகா".. பதினாறு வயது

பருவச்சிட்டு, பள்ளியில் ஐந்து நாள் விடுமுறை என்பதால் அக்கா செல்வி வீட்டுக்கு சென்று விட்டாள்.

செல்வி படிப்பு முடிந்ததும், நல்ல வரன் வர பேசி முடித்தனர்... பாவம் செல்வி தான் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிவிட்டாள்... "நான் உங்களையெல்லாம் விட்டு போக மாட்டேன் வீட்டோட மாப்பிள்ளை பாருங்க என்ற செல்வியை அந்த குடும்பமே அதிர்ந்து பார்த்தது..

வேணாம் செல்வி ஒருமுறை நாங்கள் பட்டதே போதும் என்று சமாதானப்படுத்தி, திருமணம் முடித்து அனுப்பி வைத்தனர்..

ஆனால் இப்பொழுதோ... "இங்க வந்து ரெண்டு நாள் தங்கிவிட்டு போ என்று சொன்னால், எனக்கு நேரம் இல்லை என்று சொல்லுவது வேறு விஷயம்.....

திருச்செந்தூரில் இருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது ஆத்துர் எனும் ஊர்... நல்ல பசுமையான இடம்.... எங்கு பார்த்தாலும் வயல்வெளியும்.. வாழைத்தோட்டங்களும்.. மாந்தோப்புகளும்.. தென்னந்தோப்புகளும் உள்ளது.. அந்த ஊரில்.. பண்ணயகாரர் குடும்பம் இவர்களுடையது.....

அதுமட்டும் இல்லாமல் தன் தந்தை ஆரம்பித்த குடும்ப தொழிலான, தங்க நகை தொழில் வியாபரத்தை தர்மலிங்கமும் ,ராஜலிங்கமும், அவர்கள் தந்தைக்கு பிறகு அதை பல மடங்காக பெருக்கி
திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய சில இடங்களில் கிளைகளை பரப்பி சிறப்பாக நடத்தி வருகிறார்கள் ,

டைனிங் ஹாலுக்கு வந்து இருக்கையில் அமர்ந்த சபரீஷ் “அம்மா இந்த சந்துரு எங்க.. ஆளே காணோம்” என தம்பியை பற்றி கேட்டான்..

“நேத்து இராத்திரி தான்பா வந்தான்…வந்ததும்.. வந்திருந்தவர்களுக்கு, வேண்டியதை செஞ்சு குடுத்துட்டு.. காலை பலகாரத்துக்கு நம்ம ஆளுக கிட்ட, சொல்லிட்டு இப்போதான் படுக்க போனான்பா… என்றவர், அவனிடம் காபி கப்பை கொடுக்க.. அதை வாங்கி குடித்து முடித்தவன்…

“சரிமா .. நான் பண்ணைக்கு கிளம்புறேன், அவன் எழுந்ததும், ஆபிஸ் வர சொல்லுங்க..என்று கூறிவிட்டு..

“அப்பா, சித்தப்பா எல்லோரும் எங்கம்மா?

“இன்னும் யாரும் எழுந்திரிக்கல பா”..

“சித்தி?”

“பிரபா, பின்னாடி தோட்டத்துல செடியெல்லாம் கொஞ்சம் இடம் மாத்தி வைக்கணும்னு சொல்லிட்டு இருந்தா… அத வேலு கிட்ட சொல்ல போயிருக்கா பா”,

“சரி மா என்று வெளியே வந்தவனை,

“ராசு” என்ற குரல் தடுத்தது.

திரும்பி பார்த்தவன், “ஆச்சி” என்று தோளோடு அனைத்துக் கொண்டான்.
“அய்யா ராசு தெனமும்.. இவ்ளோ சீக்கிரம் போக்கணுமாய்யா”.. என்றவரை பரிவுடன் பார்த்தவன்…

“அய்யாவோட பிஸ்னெஸ் எல்லாம் அந்த மாதிரி ஆச்சி” என்றவனை…
எப்போழுதும் போல்.. இப்போழுதும் அவன் கன்னத்தை வருடியவர்……..அவனை ஏக்கத்துடன் பார்த்து கண்கலங்க நிற்க , அவர் கலக்கத்தை உணர்ந்தவன் போல்

“ஆச்சி என்று அவரது கண்ணை துடைத்தவன் .
சீக்கிரம் நல்ல செய்தி வரும்.. இப்படி
அழக்கூடாதுன்னு சொல்லிருக்கேனா இல்லையா,
என்று அவரை சமாதானபடுத்திவிட்டு, அவர் காலை
தொட்டு ஆசிர்வாதம் வாங்கி விட்டு,
வெளியே வந்து தன் பண்ணையை நோக்கி
செலுத்தினான் தன் ஜாக்குவாரை…

எஸ். எம். மில்க் பேக்டரிக்குள் தன் ஜாக்குவரை
நிறுத்திய சபரிஷ், தன் கேபின்க்குள் நுழைந்து, தன்
இருக்கையில் அமரவும்…

ஜி எம் , மற்றும் அவனது பி.ஏ வான ராஜேஷ் “மே ஐ
கமின் சர்” என்று அனுமதி கேட்டு உள்ளே வந்தான்…

வந்தவன் சபரிஷின் முன் சில பைல்களை வைக்க..
அதில் பார்வையொட்டியப்படியே, “ராஜேஷ் எல்லாம்
செக் பண்ணிட்டீங்களா”…

“எஸ் சார்”

“எல்லாம் டெலிவரி பண்ணியாச்சா”

“நடந்துக்கிட்டு இருக்கு சார்”

அந்த பைல்களில் கையெழுத்திட்டவன் அதை ராஜேஷிடம் கொடுத்து.. “வாங்க போகலாம்” என்று முன்னால் நடக்க.. அவனை பின் தொடர்ந்தான் ராஜேஷ்.

எஸ். எம். மில்க் பேக்டரி.. சபரிஷின் உழைப்பால் உருவானது… சபரிஷ் திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரியில் தன் கல்லூரி படிப்பை முடித்தவுடன் அவன் தந்தை நகை கடைகளை, பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு சொல்ல..

சபரிஷோ, தான் சொந்தமாக தொழில் தொடங்குவதுதான் தனது விருப்பம் என்று கூறி மறுத்துவிட்டான்..

அவனின் குணம் அறிந்து அவனுக்கு பண உதவி செய்ய முன்வர, அதை மறுக்காமல் ஏற்றுக்கொண்டான் அவன்.
பத்து ஏக்கர் பரப்பளவில், நூறு மாடுகளும், அதை கவனிக்க தேவையான ஆட்களுடன் கூடிய பால் பண்ணையை திறம்பட நடத்தி வருகிறான் சபரிஷ்…..
இந்த சுற்றுவட்டாரத்தில் எஸ் .எம் பாக்டரியின் பால் பாக்கெட் தான் எல்லோரும் விரும்புவார்கள்.. அதன் தரம் அப்படி..

அடுத்து அவன் சென்றது .. சர்க்கரை ஆலை, எஸ். எம் மில்க் பேக்டரி ஆரம்பித்த மூன்று வருடத்தில் , தன் தந்தையிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்தவன்.. அதன் பின் தன் கடின உழைப்பில் உருவாக்கியதுதான் இந்த சர்க்கரை ஆலை..

சபரிஷ் வரும் முன் ராஜேஷ் அங்கு இருந்தான்..

ராஜேஷை மெச்சுதலாய் பார்த்த சபரிஷ், அவனை அழைத்து சில விபரங்களை விசாரிக்க..
அதற்கு அவன் பதில் அளிக்க, இப்படியாக ஒரு மணிநேரம் கடந்தது..

“ராஜேஷ் அந்த கே. ஆர் கம்பெனியில் இருந்து வரவேண்டிய பேமெண்ட் என்னாச்சு”..

“சார் அது வந்து”..

“எனக்கு இந்த வந்து போயின்னு இழுக்கிறது பிடிக்காதுன்னு உங்களுக்கு தெரியும்ன்னு நினைக்கிறேன்”..

“இன்னும் தரல சார் இப்போ அப்போ ன்னு

இழுத்துத்தடிக்கிறாங்க” என்று மென்று
விழுங்கினான்.. ராஜேஷ்..

“என்னவாம்”..

“மெதுவா தான் தருவோம்.. அப்படி உடனே
வேணும்னா .. கம்ப்லைன்ட் குடுங்க கோட் ல மீட்
பண்ணலாம்ன்னு சொல்றார் சார்”..

“ஓ……. கோர்ட் ல மீட் பண்ணனும்மா.. சரி மீட்
பண்ணிருவோம்”…. என்று சிரித்த சபரிஷை பார்க்க
அவனுக்கு பயமா இருந்து..

பின்ன சபரிஷை எதிர்த்து ஒரு விஷயம் நடந்தால்
அதற்குன்டான பதிலடி மிகவும் பயங்கரமாக
இருக்கும் என்று அவனுக்கு தெரியுமே…..

“நான் சொல்றத ஒரு லெட்டரா ரெடி பண்ணி
வியாபாரிகள் சங்கத்துக்கு அனுப்பிருங்க”….
என்றவனை நிமிர்ந்து பார்த்த ராஜேஷ் அதிர்ச்சியில்…

“சார்” என்க

“ம்ம்ம் சீக்கிரம் ரெடி பண்ணி அனுப்புங்க”

அவன் சொன்னதை உடனே ராஜேஷ் செய்ய, அந்த நோட்டிஸ்க்கு பதில் ஒருமணி நேரத்திலே வந்தது..

ஆம் அந்த கே.ஆர் தான் விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்திருந்தார் பேமெண்ட்டுடன்…

அந்த லெட்டர்ரில், “கே.ஆர் காம்பெனியுடைய அக்ரிமெண்ட் படி எங்களால் சரியான நேரத்துக்கு பொருள் அனுப்ப முடியாததால் மிகவும் வருந்துகிறோம். அதோட…அவருடைய அக்ரிமெண்டையும் ரத்து செய்து விட்டோம்.. இனி அவர் வேறு எந்த கம்பெனியிலாவது அக்ரிமெண்ட் போட்டுக்கொள்ளட்டும். “என்று இருந்தது…

இதை வியாபாரிகள் சங்கத்தில் நோட்டிஸ் போர்டுட்டில் ஒட்டி இருந்ததை பார்த்த சில பேர், கே .ஆர் க்கு போன் மேல் போன் செய்து “என்ன இப்படி பண்ணிட்டீங்க கே.ஆர்….சபரிஷை பகச்சிக்கலாமா.. சபரிஷ் என்ன இப்படி ஒரு நோட்டி அனுப்பி இருக்கரு..என்று கூற…

அந்த நோட்டிஸ்சின் எதிரொளிதான். ஒருமணி நேரத்தில் .. சர்க்கரை ஆலை வந்தார் அவர்…..

அவரை உள்ள வர சொன்னவன் , “என்ன விஷயமா வந்துருக்கீங்க.. மிஸ்டர் கே ஆர்” என்று கேட்டான் எள்ளலாக…

“பணம் கொண்டு வந்துருக்கேன் சபரிஷ். அக்ரிமெண்ட் ரத்து செய்ய வேணாம்”.. என்னை மன்னிச்சிருங்க சபரிஷ்” என்று கெஞ்ச..

“அக்ரிமெண்ட் ரத்து ஆனது ஆனது தான்” என்றவன்.. “மிஸ்டர் கே ஆர் எனக்கு எதிரிகள் கிடையாது .. ஆனா என்னை எதிர்த்தவர்களை நான் சும்மா விடமாட்டேன்” என்றவன்….

ராஜேஷை பார்த்து “ நான் ஜவுளிக்கடைக்கு கிளம்புறேன்” என்றவன், கிளம்பிவிட்டான்…

“என்ன மன்னிச்சிருங்க.. சபரிஷ்”.. என்று கே.ஆர் அவனிடம் கெஞ்சிக்கொண்டிருந்ததை கண்டு அவரை திரும்பியும் பாராது வெளியேறிவிட்டான்..

கே.ஆர் கெஞ்சுவதற்க்கும் காரணம் இருந்தது……சபரிஷை பகைத்து கொண்டால் வேறு எங்கேயும் பிழைக்க முடியாது….. யாரும் எந்த ஒரு

ஒப்பந்தமும் அவரிடம் போட மாட்டார்கள். மறுபடியும் ஆதியில் இருந்துதான் அவர் தொடங்க வேண்டும்....அவன் எந்த அளவுக்கு நல்லவனோ அதே அளவு அவனை பகைத்தவர்களிடம் மிகவும் கெட்டவன்....

சபரிஷ் எல்லோருக்கும் சிம்மசொப்பனம்.....ஆனால் அந்த சிங்கத்தை தன் கண் இமைக்குள் சிறை வைக்க ஒருத்தி காத்திருக்கிறாள் என்பதை அறியாமல் அவனின் மற்றொரு தொழிலான ஜவுளிகடைக்கு சென்றான்.....

சுவாசம் தொடரும்...

சுவாசம் 5

“உன் ஒருவிழி பார்வைக்காக
ஏங்குகிறேன் பெண்ணே!
உன் விழியால் நீ என்னை
காதலாக தீண்டவேண்டாம்,
கோபமாகவாது தீண்டுவாயா!

வீட்டிற்குள் வந்த பிரியா, மோகனா

இன்னஎழுந்திரிக்காததை கண்டு,

“இன்னுமா தூங்குற… அதுவும் புல்லா
போர்த்திக்கிட்டு… ஹி ஹி இரு வரேன் என் செல்ல
மோகினியே”… என்று சத்தமில்லாமல்
சொன்னவள்…மெல்ல அடி எடுத்து வைத்து,
கட்டிலுக்கு அருகில் சென்று டேபிளில் இருந்த ஜக்கை
எடுத்து, அப்படியே மெத்தையில் படுத்திருந்த
மோகனா மீது ஊற்றினாள்…

மோகனா அலறி அடித்துக்கொண்டு எழுவாள் என்று
எதிர்பார்க்க, அது நடக்காததால்…..

“என்ன ஒரு ரியாக்ஷனையும் காணோம்” என்று
நினைத்தவள்….. போர்வையை விலக்கி பார்க்க.. அங்கு
மோகனாவுக்கு பதில் தலையணை இருந்தது…

அப்போழுது, பின்னால் இருந்து ப்ரியாவின் முதுகில்
அடித்த மோகனா,
“என்ன ப்ரி ஏமாந்தியா?” நான் எழுந்ததும் உன்
கட்டிலை பார்த்தேனா, அங்க நீ இல்லையா, சரி
வெளியே தோட்டத்துக்கு போயிருப்பேன்னு நினைச்சு
பாத்ரூம் போறதுக்கு எந்திரிச்சேனா… என்று
இழுத்தவள்..

பேசி கொண்டே பின்னல் நகர்ந்து “சரி எதுக்கும் இருக்கட்டும்ன்னு தான் அப்படி வச்சிட்டு போனேன்…….. நான் வச்சது நல்லதா போச்சி பாத்தியா… நீ இப்படி ஏதாவது கிறுக்குத்தனம் பண்ணுவேன்னு எனக்கு தெரியும் செல்லம், ஹா ஹா என்று சிரித்தவளை முறைத்த பிரியா,..

“ஹி ஹி.. அப்போ தப்பிச்சா என்ன, இப்போ எப்படி தப்பிக்கிறேன்னு பாக்கறேன் என்றவள்.. தன் கட்டில் அருகில் உள்ள ஜக்கை எடுத்து அதில் இருந்த தண்ணீரை மோகனாவை நோக்கி வீச வந்தாள்..

“நோ ப்ரி இது சீட்டிங்” என்று அங்கும் இங்கும் ஓட, அப்பொழுது அறைக்குள் நுழைந்த சந்துருவை கண்ட மோகனா, சட்டென்று அவன் முதுகின் பின்னால் மறைய,

அவனோ மோகனாவின் செய்கையில் மறுபடியும் தன் கனவு உலகத்துக்கு செல்வதற்குள், ப்ரியாவின் குரல் அவனை நடப்புக்கு இழுத்து வந்தது..

“ஆஹா ஒரு பலிஆடு தன்னால் வந்து சிக்குதே” என்று சத்தமாக சொன்னவள்,

“மோஹி, அவனை பிடி விடாதே” என்று கத்த…

“அப்பாஆ நான் தப்பிச்சேன், நீங்க மாட்டிக்கிட்டீங்க சந்துரு” என்றவள், பின்னால் இருந்து அவன் இரு கைகளையும் பிடித்தாள் தன்னையும் அறியாமல்..

சந்துருவோ, மனதுக்குள் “என்னடா நடக்குது இங்க, இன்றைக்கு ஒரே ஆனந்த அதிர்ச்சியா இருக்கு. உனக்கு நல்லநேரம் ஆரம்பிச்சிருச்சுடா சந்துரு… அதுக்கு என் பேபிக்கு தான் தேங்க்ஸ் சொல்லணும்.. ஆனா பேபிக்கு தேங்க்ஸ் சொன்னா பிடிக்கதே.. அதனால அவளுக்கு நம்ம ஊரு குச்சி ஐஸ்சும் குருவி ரொட்டியும் வாங்கி கொடுக்கணும்… என்று நினைத்தவன்…

“என்ன மோகனா எதுக்காக நான் மாட்டிக்கிட்டேன்னு பேபி சொல்றா” என்று சந்துரு கேட்க..

அதற்கு மோகனா தான் தப்பித்த விதத்தை சொல்ல…

“ஆஹா, நீ தப்பிச்சி, என்ன மாட்டிவிட்டுட்டியா…. இல்ல நான்தான் வலிய வந்து மாட்டிக்கிட்டேனா? பேபி என்ன விட்டுரு .. நீ என்ன கேட்டாலும் வாங்கித்தரேன்…. என்றவனை கிண்டலுடன்

பார்த்தவள்..

“எனக்கு உங்க ஊரு குச்சி ஐஸ்சும் வேணாம், குருவி ரொட்டியும் வேணாம், இந்த தண்ணிய உன் மேல் ஊத்தனும் அதுதான் வேணும் எனக்கு”

“ஆஹா பேபி .. நீ இவ்ளோ ஷார்ப்பா… நான் மனசுல நினைச்சத அப்படியே சொல்லிட்டியே…..சூப்பர் போ”…

“என்ன புகழ்ந்தது போதும், நான் கேக்கறதுக்கு ஒழுங்கா பதில் சொல்லு”

“என்ன பேபி?” என்று கேட்டவனை முறைத்து…

“இந்த பங்களா….. அப்புறம் அதோ அந்த பெரிய வீடு (அரண்மனை) இதல்லாம் யாரோடது உண்மைய சொல்லு, இது வரைக்கும் உன்னை பத்தி நாங்க எவ்வளவு கேட்டும் உன்கிட்டயிருந்து சரியான பதில் இல்ல….

சரி அது உன்னோட பர்சனல்ன்னு நாங்களும் விட்டுட்டோம்… ஆனா இப்போ அப்படி இல்ல, நீ ஏதோ எங்கக்கிட்ட இருந்து மறைக்கிற, அது என்னனு எங்களுக்கு இப்ப தெரியனும்….என்றாள் தீவிரமான முகத்தோடு…

என்னதான் பிரியா விளையாட்டு பெண்ணாக இருந்தாலும், அடுத்தவர் விஷயத்தில் அவர்கள் அனுமதியின்றி தலையிட மாட்டாள்.... சந்துருவிடமும் அதே போல்தான் அவள் அவனை பற்றி சந்தேகம் வரும் போதெல்லாம் அவனிடம் அவனின் பின்னனியை கேட்க,அவனும் சொல்லாமல் மழுப்ப, சரி என்றாவது ஒரு நாள் தன்னிடம் அவனை பற்றி சொல்வான் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தாள்...

ஆனால் இந்த சுற்றுலா ஏற்பாடு ஆனதில் இருந்து அவனின் நடவடிக்கைகளும், இந்த சுற்றுலாக்கான முழுபொறுப்பேற்றதும், அவர்கள் தங்கி இருக்கும் வீட்டின் வசதியும் பார்த்து, இவ்வளவு வசதி உள்ளவன் ஏன் மும்பையில் மிகவும் எளிமையாக இருக்கிறான்.... தங்களிடம் வலிய வந்து நட்பு கொள்ள ஏதாவது காரணம் இருக்குமோ என்ற எண்ணம்தான் அவளை வண்டாய் குடைந்து கொண்டு இருக்க.... அவனிடமும் கேட்டு விட்டாள்....

சந்துருவோ, அவளின் உறுதியான கேள்வியில், சிறிது அமைதி காத்து, பின் இனியும் மறைப்பது நல்லதல்ல என்று முடிவு செய்து மோகனாவை ஒரு பார்வை பார்க்க, அவளும் தனக்கும் இந்த விஷயம் தெரிய வேண்டும் என்ற பிடிவாத பாவனையுடன்

சந்துருவைத்தான் பார்த்து கொண்டிருந்தாள்…

பின் ஒரு முடிவெடுத்தவனாக “சொல்றேன் பேபி எல்லாத்தையும் சொல்றேன்.. மோகனா அந்த ஜக்கை வாங்கி அங்க வச்சிட்டு நீயும் வா” என்றான்,

அவன் சொன்னதை செய்தவள் பின் பிரியாவின் பக்கத்தில் அமர…. மோகனாவிடம் ஒரு அழுத்தமான பார்வையை வீசிவிட்டு
சொல்ல ஆரம்பித்தான்,

“எனக்கு இந்த ஊருதான் பேபி, அந்த பெரிய வீடு.. இந்த பங்களாவும் எங்களோடதுதான்,அதுமட்டும் இல்ல, இதை சுற்றி உள்ள தென்னந்தோப்பு… வாழைத்தோப்பு… மாந்தோப்பு… புலியந்தோப்பு….. அப்புறம் கண்ணுக்கு எட்டுன தூரம் வரைக்கும் உள்ள வயல்வெளி… எல்லாம் எங்களோட பரம்பரை சொத்து….

தமிழ்நாட்டு பையனான எங்கிட்ட ப்ரின்ஸி தங்கறதுக்கு நல்ல இடம் எங்க இருக்குன்னு கேட்டப்போ, நான் எல்லாம் அரெஞ்ச் பண்றேன்னு அந்த பொறுப்ப நான் ஏத்துக்கிட்டேன்… இத உங்க கிட்ட சொல்ல கூடாதுன்னு இல்ல…. ஒரு சர்ப்ரைஸ் ஸா இருக்கட்டும்ன்னுதான் அப்போ சொல்லாம

இருந்தேன் பேபி” என்றவன்,

“சரி சரி.. கிளம்புங்க உங்களுக்கு பத்து நிமிஷம் டைம் தரேன்.. அதுக்குள்ள தயார் ஆகி வெளிய வரணும்” எனக,

“சந்துரு நீ இவ்ளோ பெரிய பணக்காரனாடா.. அப்புறம் எப்படி டா இவ்ளோ சிம்பிள் ஆ இருக்கே”....இன்னும் நீ முழுசா சொல்லல...இன்னும் எதையோ மறைக்கிற எங்ககிட்ட”
மோகனா மனதில் நினைத்ததை.. பிரியா வாய்விட்டு கேட்டே விட்டாள்....

மோகனாவை பார்த்துக்கொண்டே..... “ பேபி பிளீஸ் இவ்வளவு நாள் பொறுத்தீங்கள்ள, இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கோங்க...நானே எல்லாத்தையும் சொல்றேன்..... அதுமட்டுமில்லாம இது பரம்பரை சொத்து .. என்னோடது இல்ல... நான் படிச்சி முடிச்சி.. ஒரு வேலைக்கு போய்.. அப்புறம், நான் சொந்தமா பிஸ்னெஸ் பண்ணனும், அது வரைக்கும் நான் இப்படித்தான் இருப்பேன்”..... புரிஞ்சிதா.....என்று சத்தமாக சொல்ல..

சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள் மோகனா.. அவள் கண்ணில் எதையோ தேடினான் சந்துரு..... தேடியது

கிடைக்கவில்லை என்றதும் ஏமாற்றத்துடன் எழுந்தவன்.

“சீக்கிரம் வாங்க நான் வெளியே வெய்ட் பண்றேன்….. ஒரு இடத்துக்கு போகணும்”.. என்று கூறிவிட்டு வெளியே சென்றான் …

ப்ரியாவோ, இந்த வீட்டுக்கு இவன் சொந்தக்காரன்னா… நம்ம காலையில பார்த்த அந்த வளர்ந்தவன் யாருன்னு கேட்கலாமா” என்று யோசித்தவள்,பின் “அய்யோ வேண்டவே வேணாம் அப்புறம் நான் நாய்க்கு பயந்ததை வச்சி என்னை ஓட்டியே தள்ளிருவான்” என்று நினைத்தவள் மோகனாவிடம்,

“இந்த சந்துருவை பாரேன்.. இவ்ளோ பெரிய பணக்காரனா இருந்துட்டு.. கொஞ்சம் கூட பந்தா இல்லாம இருக்கான்.. உண்மையிலே சந்துரு கிரேட்” …..என்க

மோகனாவோ “ நீ சொல்லிட்டே நான் சொல்லல”.. என்று மனதுக்குள் நினைத்தவள்.. ப்ரி குட்டி நீயும் பணக்காரிதான், என்ற மோகனா “சரி பிரியா அதெல்லாம் அப்புறமா பேசலாம்…. பத்து நிமிஷத்துல ரெடி ஆகி வரசொன்னாங்கல்ல சீக்கிரம் குளிக்க போ..”என்றாள்..

பின் அவர்கள் குளித்து முடித்து , தயாராகி வெளியே வந்து சந்துருவை தேட..... அவனோ, ஆசிரியர்களிடம் பேசிக்கொண்டிருக்க, மற்ற மாணவ மாணவிகள் பேருந்தில் ஏறிக்கொண்டிருந்தார்கள்... பின் ஆசிரியர் ஒருவர் ப்ரியாவிடம் வந்து "உனக்கு வீசிங் பிராப்ளம் இருக்கா" என கேட்க....

அவளோ "ஆமாம்" என்று தலையாட்ட,

"இதெல்லாம் முன்னாடியே சொல்லறது இல்லையா", என அவளை கடிந்தவர் ,
"இப்போதுதான் சந்துரு சொன்னான், உங்க வீட்லயும், ப்ரின்ஸிகிடையும் பேசி பர்மிஷன் வாங்கியாச்சி , நீ எங்களோட வரவேண்டாம்..... நாங்க வர்ற வரைக்கும் இங்க சந்துரு உன்னை பார்த்துப்பான் சரியா" என்றவர் , மோகனாவிடம் "கம் லெட்ஸ் கோ" என்று கூற,

பிரியா சந்துருவை ஏகத்துக்கும் முறைத்துவிட்டு, "இல்ல இல்ல என்னால மோஹி இல்லாம இங்க இருக்க முடியாது.... மோஹியும் என்கூட இருக்கனும்..... இல்ல நானும் வருவேன்" என்று பிடிவாதமாக கூறி மோகனாவிடம் ஜாடை காட்ட,

மோகனாவும் அதை புரிந்து கொண்டு, ஆசிரியரிடம் திரும்பி “ஆமா சார், ப்ரியா வரலைன்னா நானும் வரல”, என்றவள் மனதுக்குள் பிரியாவிடம் மானசீகமாக நன்றி கூறிவிட்டு, பின்ன நான் மட்டும் என்ன சுத்திபார்க்கவா வந்தேன், இந்த ஊரில், நான் தேடி வந்ததை கண்டுபிடிக்க வேணாமா….. நான் ஏதாவது ஐடியா பண்ணி போக கூடாதுன்னு நினைச்சேன், நல்ல வேளை என் ப்ரி குட்டி, எனக்கு ஹெல்ப் பண்ணிட்டா”

இருவரையும் ஆசிரியர் முறைக்க, அவர்கள் பேசியதை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த சந்துரு.. “சார் நான் பார்த்துக்கறேன்.. நீங்க கிளம்புங்க.. மோகனா வீட்லயும்நான் பேசிக்கிறேன் என்றதும்.. மூவரிடமும் கவனமாக இருக்க சொல்லிவிட்டு மற்றவர்களை அழைத்துக்கொண்டு சென்றனர்…..

பேருந்து கிளம்பவும் இவர்கள் வரவில்லை என்றதும், இரண்டு கண்கள் ஏமாற்றத்துடன் நோக்கியது,

பேருந்து கிளம்பியவுடன், சந்துரு இவர்கள் புறம் திரும்பி.. “போகலாமா பேபிஸ்” என்க

அவனை முறைத்த ப்ரியா, “நாம இங்க சுத்திபார்க்கத்

தானே வந்தோம், பின்ன ஏன்டா பக்கி எனக்கு வீசிங் பிராப்ளம் இருக்குன்னு சொன்ன" என்று அவனிடம் எகிறியவள் பின் கோபம் தணிந்து, ..

"ம்ம்ம் இந்த பிளேஸ் கூட எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு.... அதுனால உன்னை சும்மா விட்றேன், சரி இப்போ நாம எங்க போறோம்"

"அது சஸ்பென்ஸ".. என்றான் சந்துரு

"அது என்ன சஸ்பென்ஸ்ஸோ போ" என்றவள், ஆனாலும் நீ ரொம்ப மோசம் சந்துரு.."

"என்ன பேபி இப்படி சொல்லிட்டே"..

"பின்ன நாங்க உன் பிரெண்ட்ஸ் தானே" பிரியா இப்படி கேட்டதும்...

மோகனாவை பார்த்துக்கொண்டே "ஆமா ஆமா" என்று தலையாட்டினான்..

ஆனால் மோகனா இவனை பார்த்தால் தானே..

"எங்களை உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போகாணும்

எங்களை உங்க அம்மாக்கு அறிமுக படுத்தனும் தோணிச்சா உனக்கு”

சந்துருவோ “நாம இப்போ வெளியே போயிட்டு வந்ததுக்கு அப்புறம், உங்களை வீட்டுக்கு கூட்டிட்டு போய் எல்லோருக்கும் அறிமுகம் படுத்துறேன் சரியா……. அதுக்குள்ள எங்க அக்காவும். தங்கச்சியும் வந்துருவாங்க. இப்போ வேற ஏதும் கேட்கக்கூடாது.. வாங்க போகலாம்… என்று தனது இனோவாவை நோக்கி சென்றான்..

பிரியா சந்துரு அருகிலும்.. மோகனா பின் இருக்கையிலும் அமர,

சந்துரு ரிவ்யூ கண்ணாடியை சரி செய்வது போல் மோகனாவை பார்த்தான். அதை கவனித்த மோகனா அவனை முறைக்க.. சத்தமாக சிரித்தான் சந்துரு…. இவர்கள் நாடகத்தை கண்டும் காணாமல் இருந்த பிரியா,

“என்ன சிரிப்பு” என்று கேட்க

“ஒன்னும் இல்ல” என்றுவிட்டு.. காரை கிளப்பினான்,

கார் ஒரே சீராக சென்று கொண்டிருந்தது… சாலையின் இருபுறமும். ஆலமரங்களும், அத்திமரங்களும்.. இன்னும் சில வகையான மரங்களும்.. பார்க்கவே ரொம்ப அழகா இருந்தது…..

“வாவ்…… சூப்பர் சந்துரு… எனக்கு இந்த ஊர் ரொம்ப பிடிச்சிருக்குடா….. ஏசிய ஆ.ஃ ப் பண்ணிட்டு ஜன்னலை இறக்கு”என்று கூற ப்ரியாவை பார்த்து சிரித்துக்கொண்டே, அவள் சொன்னதை செய்தவன்.. சாலையில் கவனமானன்..

சிறிது நேரம் கழித்து, பின்னால் திரும்பி மோகனாவிடம், “மோகனா உனக்கு பிடிச்சிருக்கா…?” என்று கேட்க..

சட்டென்று சந்துரு இப்படி கேட்டதும் தடுமாறினாள் , ஏனென்றால், அவளிடம் ஏதும் கேட்கவேண்டும் என்றால் கூட ப்ரியாவை நடுவில் வைத்து தான் பேசுவான், ஆனால், இப்பொழுது நேரடியாக கேட்கவும் சிறிது தடுமாற்றத்துடன்,
“ என… எனக்கும் ரொம்ப பிடிச்சிருக்கு” என்றவளை பார்த்து ..

“என்ன பிடிச்சிருக்கு” என்று குறும்புபொங்கும் குரலில் கேட்க..

அவளோ, அவனிடம் வேறு கேட்டாள்..

“இங்க ராமசாமிபுரம் எங்க இருக்கு” என்று கேட்ட அடுத்த வினாடியே திடீரென்று கார் குலுங்கி நின்றது…

“என்னாச்சு” என்று தோழிகள் இருவரும் கேட்க ..

“ஒன்னும் இல்லை” என்றவன் தன்னை சமாளித்துக் கொண்டு காரை கிளப்பினான்…..

“எதுக்கு கேக்குறா.. ஒருவேளை அவளுக்கு எல்லா விஷயமும் தெரியுமோ? அதுதான் தமிழ் நாட்டுக்கு போறோம் என்றதும் அவ்ளோ சந்தோஷபட்டாளா? இவளுக்கு எப்படி தெரியும் இந்த ஊரை பற்றி அத்தை சொல்லியிருப்பாங்களோ….. இருக்காது.. மாமாவுக்கு பிடிக்காததை அத்தை செய்ய மாட்டாங்க.. ஒருவேளை எனக்கு ஆச்சி சொன்னமாதிரி, அவளுக்கு அவ ஆச்சி சொல்லியிருப்பாங்களோ” என்று அவன் குழம்ப,

மோகனாவோ, மனதுக்குள் “ராமசாமிபுரம் எங்க இருக்குன்னுதானே கேட்டேன்.. எதுக்கு ஷாக் ஆகி காரை நிப்பாட்டுனாங்க?” என்று சிந்தனையில் மூழக

,

இருவரையும் அதிக நேரம் யோசிக்க விடாமல்
அவர்கள் வர வேண்டிய இடம் வந்தது…

ஆனந்த பவன் ஹோட்டல்..
பிரியா “என்ன டா இங்க கூட்டிட்டு வந்துருக்கே”

“இப்போ மணி ஒன்பது, இன்னும் நாம சாப்பிடல”

“ஹி… ஹி…. இந்த ஊரோட அழகுல மயங்கி நின்னதுல , எனக்கு பசியே எடுக்கல டா..”

ப்ரியாவை மேலும் கீழும் பார்த்தவன் .. “இது நக்கலா.. இல்ல பாராட்டா பேபி” என்று கேட்க…

“ச்ச ச்ச பாராட்டு தான் சந்துரு, மும்பையும் நல்ல இடம் தான்.. ஆனா இப்படி சுத்தி மரங்களோட, பொல்யூஷன் இல்லாம , இப்படி அமைதியா இருக்காது….. அது மெஷின் வாழ்க்கை டா.. இது தான் எனக்கு பிடிச்சிருக்கு..

மோகனா மனதுக்குள், “அடிப்பாவி. இங்க வரவே

மாட்டேன்னு அடம் பிடிச்சதென்ன .. இப்போ இது தான் பிடிச்சிருக்குன்னு சொல்லுறதென்ன ம்ம்ம்ம்,

“என்ன மோகினி என்ன பத்தி தான் திங்க் பண்ற போல இருக்கு” என கேட்ட ப்ரியாவிடம்..

“அப்படியெல்லாம் ஒன்னும் இல்ல என்று கூறிவிட்டு, சந்துருவை பார்க்க,...

வாங்க போகலாம் என்று கூறி , உள்ளே சென்று அவர்களுக்கு பிடித்த உணவை வாங்கி தந்தான்...

.....

அடுத்து அவர்கள் சென்ற இடம், எஸ். எம், டெக்ஸ்டைல்ஸ்...

ஐந்து அடுக்கு கொண்ட பிரமாண்ட ஜவுளிமாளிகையின் முன் காரை நிறுத்தியவன், “நீங்க இங்கயே நில்லுங்க... நான் பார்க் பண்ணிட்டு வர்றேன்”, காரை பார்க் பண்ணிவிட்டு வந்தான்,

அவனிடம் ப்ரியா “சந்துரு இவ்ளோ கூட்டமா இருக்கே இது யாரோடது? என்று கேட்க

“நம்மோடதுதான் பேபி” என்று மட்டும் சொன்னவன்..
இது யாரோடாது என்று கொஞ்சம், தெளிவாக்
சொல்லியிருகலாமோ?

ஓஓஓ.. அதற்குமேல் ஒன்றும் கேட்கவில்லை அவள்....
மோகனாவும் அமைதியாக கடையை
பார்த்துக்கொண்டே வந்தாள்..

உள்ளே சென்றவர்கள், அசந்துதான் போனார்கள்..
“வாவ்.. இவ்ளோ பெரிய கடையா என்று.. மும்பை
மாதிரி பெரிய நகரங்களில் தான் பெரிய பெரிய
ஷாப்பிங் மால்ஸ் உண்டு என்று
நினைத்திருந்தார்கள்... ஆனால் இங்கு தூத்துக்குடியில்
இப்படி ஒரு கடையை எதிர்பார்க்கவில்லை அவர்கள்.
அதுவும், கண்ணாடி கூண்டு கொண்ட லிப்ட்... அங்கு
வேலை செய்பவர்கள் கூட நேர்த்தியாக உடை
அணிந்திருந்தார்கள்”..

காரை நிறுத்தி விட்டு வந்த சந்துருவிடம்,
“சூப்பர் டா சந்துரு.. சரி இங்க எங்களை எதுக்கு
கூட்டிட்டு வந்துருக்கே?” என்றவளை பார்த்து..

“உங்களுக்கு ஏதாவது வாங்கி கொடுக்கணும்னு
தோணிச்சு அதான்”

மோகனாவோ, “எனக்கு எதுவும் வேண்டாம்……பிரியா நீ வேணா எடுத்துக்கோ”.. என்று சொல்ல..

“இல்ல எனக்கும் வேணாம்.. மோஹி எடுத்தா நானும் எடுத்துக்குறேன்” என்று பிரியாவும் சொல்ல..

இருவரையும் முறைத்தவன் “யாரும் ஒன்னும் எடுக்க வேண்டாம்….வாங்க கிளம்பலாம்” என்று கோபமாக சொன்னவனிடம்…

“ஓகே ஓகே நோ கோபம் , நாங்க எங்களுக்கு பிடிச்சதை எடுத்துக்கறோம்”.. என்று கோரசாக சொல்ல..

“ம்ம் இது நல்ல பிள்ளைகளுக்கு அழகு”…என்றவனை பார்த்து பிரியா அவனிடம் கிசுகிசுப்பாக….

“சந்துரு உனக்கு புதுசா கோபம் எல்லாம் வருது…. என் மோஹி பாவம், அவகிட்ட கோபப்பட்டேன்னு மட்டும் தெரிஞ்சிது அவ்வளவுதான்” என்றவளை பார்த்து.. அவன் திகைப்புடன் “போஈஈஈ உனக்கு எப்படி தெரியும்”…..என்க

“எனக்கு உங்க ரெண்டு பேரோட லுக்கிங் கா:ஃ ப்

கோபியா பத்தி தெரியாதுன்னு நினைச்சியா..... ரெண்டு வருஷமா அதானே நடக்குது.. அவகிட்ட கேட்டா படிக்கிற வேலைய மட்டும் பாருங்கிறா.....அதுக்கு மேல ஒரு வார்த்தை அவகிட்ட இருந்து வாங்க முடியல.....நீ. என்னடான்னா.... அவளை லுக் விட்டுகிட்டே இருக்க.....சரி இது சரிபட்டு வராது, நாமே அக்க்ஷன்ல இறங்குவோம்ன்னு நினைச்சி, ட்ரெயின்ல உங்க ரெண்டு பேரையும் கோர்த்துவிட்டா..... அவ என்னவோ உன்கிட்ட பேசவே தயங்கறதும்..... நீ துங்குறா மாதிரி நடிச்சி அவளை கவனிக்கறதும்.....எனக்கு தெரியாதுன்னு நினைச்சியா..... மவனே.... இங்க பாரு இந்த ஊரை விட்டு போறதுக்குள்ள ஒன்னு நீ அவகிட்ட உன் லவ்வ சொல்ற, இல்ல அவளை சொல்ல வைக்கிற.... என்ன புரிஞ்சிதா" என்று மிரட்ட..

"சரிங்க பெரிய மனுஷி.. சீக்கிரம் சொல்லிறேன் போதுமா" என்றுவிட்டு மனதில் எழுந்த சந்தோஷத்துடன் மோகனாவை பார்த்தான்...

டார்க் லாவெண்டர் கலரில், வெள்ளை பூக்களை தெளித்தாற் போன்ற டாப்.. வெள்ளையில் பேண்ட்.. இரண்டும் கலந்தாற்போன்று துப்பட்டா.... நெத்தியில் லாவெண்டர் கலரில் சிறு போட்டு.. காதில் குடை ஜிமிக்கி, கழுத்தை ஒட்டினாற்போல் சின்ன செயின்.. இடக்கையில் கருப்பு பட்டையில் வாட்ச்..வலக்கையில் பிரேஸ்லெட் , காலில் குதிகால்

செருப்பு.. நீண்ட பின்னல், அழகோவியமாக நின்றவளை, பார்க்க பார்க்க தெவிட்டவில்லை சந்துருக்கு..

இவர்களை திரும்பி பார்த்த மோகனா. சந்துரு தன்னை பார்க்கும் பார்வையில் உள்ள வித்தியாசத்தை உணர்ந்தவளுக்கு, உடல் சிலிர்த்தது.. கன்னம் கூட லேசாக சிவந்தது… “என்ன இப்படி பார்க்கிறான்.. எப்போவுமே பார்ப்பான் தான் .. அப்புறம் உடனே திரும்பிருவான்.. இப்படி அனு அனு வா ரசித்தது இல்லயே….என்று நினைத்தவள் சுற்றும் முற்றும் பார்க்க……

இவர்கள் கண்ணாமூச்சி ஆட்டத்தை கவனித்த பிரியா, மோகனாவின் தவிப்பை உணர்ந்து “ஓகே நாங்க எங்க ஷாப்பிங்கை ஆரம்பிக்கிறோம், வா மோஹி”என்று கூறி முன்னே நடக்க,

சந்துரு அங்கிருந்த ஒரு பெண்ணை அழைத்து “இவங்க என்ன கேட்கிறாங்களோ அத எடுத்து காட்டுங்க” என்று அவர்கள் உதவிக்கு கூட அனுப்பி வைத்தான்….

அந்த பெண்ணோ “சரி அண்ணா” என்று இவர்களுடன் சென்றாள்..

மோகனா, சந்துருவை நிமிர்ந்து பார்க்கவில்லை… என்றும் இல்லாமல் இன்று சந்துருவின் பார்வை வித்தியாசமாக இருக்க, அது அவளுக்கு கூச்சத்தை கொடுத்தது.. இதை பார்த்த,
சந்துருவோ , மனமெல்லாம் சந்தோஷத்துடன் தன் அண்ணனை காண சென்றான்..

எஸ். எம், டெக்ஸ்டைல்ஸ் சபரிஷின் மூன்றாவது உழைப்பு, இது அவனது சாம்ராஜ்யம்..... அதன் முதல் மாடியில் சபரிஷின் கேபின் உள்ளது,

அதன் முன் சென்று நின்ற சந்துரு கதவை தட்ட உள்ளிருந்து தன் அண்ணனின் கம்பீரமான குரலின் அழைப்பை ஏற்று.. உள்ளே சென்றான்..

கணினித்திரையில் பதித்திருந்த தன் பார்வையை திருப்பாமல், “ராஜேஷ் நான் கேட்ட பைல் என்னாச்சு?” என்று தன் வலது கையை நீட்ட, அதில் தன் கையை வைத்தான் சந்துரு.....

சட்டென்று நிமிர்ந்த சபரிஷ், அங்கு தன் தம்பி புன்னகையுடன் நிற்பதை கண்டு “சந்துரு” என்று அவனை அணைத்துக்கொண்டு “எப்படி டா இருக்கே..? என்று கேட்க,

“நான் நல்லா இருக்கேண்ணா”

இருக்கையை காண்பித்து அமர சொன்னவன்
“சாப்பிட்டியா” என்று கேட்டான்..

“ஆச்சுண்ணா”

“சரி படிப்பெல்லாம் எப்படி போகுது”
“ நீ மும்பை போன காரியம் என்னாச்சு?” என்று
கேட்டான் சபரிஷ்..

“முடிஞ்ச மாதிரிதாண்ணா” என்று மட்டும்
சொன்னான்..

“அதுக்காக உன் படிப்பை கோட்டை விட்டுடாத ..
ரெண்டும் முக்கியம்” என்றான்…

“அண்ணா என் பிரெண்ட்ஸ் வந்துருக்காங்க”

“ஓகே நீ போய் அவங்களை கவனி.. நைட் சீக்கிரம்
வர பாக்கறேன்” என்றான் சபரிஷ்..

“சரிண்ணா” என்று கிளம்பியவன்.. திரும்பி
தயக்கத்துடன் “அண்ணா
என் பிரெண்ட்ஸ் வாங்குற துணிகளுக்கு நான் தான்
பணம் கட்டுவேன்” என்றான்

“டேய் காலேஜ்ல இருந்து நிறையபேர்
வந்துருக்காங்கள்ள, எல்லோரும் வாங்குறதுக்கு நீ
எப்படி அவ்ளோ பணம் கட்டுவே.. ஒன்னும் வேணாம்..
என்ன வேணுமோ எடுத்துக்க சொல்லு.... நான்
பாத்துக்கறேன்”....என்று சொன்ன அண்ணனை
நினைத்து பெருமையாக இருந்தது சந்துருவிற்கு.....

“இல்லண்ணா எல்லோரும் வரல, என் பிரெண்ட்ஸ்
இரண்டு பேர் மட்டும் தான் வந்துருக்காங்க” ..
என்றான்.

“சரி” என்றவன், சந்துருவை அனுப்பிவிட்டு.... தன்
வேலையில் மூழ்கினான்.

.....

“இப்போ நாம என்ன வாங்கலாம்” என்று யோசித்த
பிரியா திடீரென்று..
“ஹே மோஹி சேலை வாங்குவோமா” என்று கேட்க,
மோகனாவும் சம்மதிக்க,
சந்துரு துணைக்கு அனுப்பிவைத்த பெண்ணோ..
“அக்கா சாரிஸ் எல்லாம் பாக்கணும்னா முதல்
மாடிக்குத்தான் போகணும். நாம லிஃப்ட்ல
போய்டலாம்” என்றவள் அதை நோக்கி நடக்க,
மோகனாவோ,

இல்லமா நாம படிக்கட்டு வழியாகவே போகலாம் என்று சொல்ல சரிக்கா என்று மூன்று பேரும் படி வழியாக மாடிக்கு சென்றனர்..

முதல் மாடிக்கு வந்ததும் அந்த பெண்,
“அக்கா இங்க எல்லா விதமான சாரீஸும் கிடைக்கும்.. இல்லங்கிற வார்த்தையே கிடையாது. எங்க கடைக்கு வந்தவிய, மறுபடியும் இங்கதான் திரும்ப வருவாவ” என்று கடையின் புகழ் பாட,

“அப்படியா” என்ற பிரியா, மோகனாவிடம்
“அம்மாவுக்கு பட்டு புடவை வாங்குவோமா” என்க ..

“ஓகே டன்” என்றாள் மோகனா..

“அது எங்க இருக்கு” என்று அந்த பெண்ணிடம் கேட்க..

“வாங்கக்கா” என்றவளின் கையில் இருந்த மொபைல் அலற.. அந்த பெண்ணோ இவர்களிடம்,

“அக்கா சந்துரு அண்ணா சொன்னதும் உங்க கூட வந்துட்டேன்.. சூப்பர்வைசர் கிட்ட சொல்லல.. சொல்லிட்டு வந்துறேன்கா” என்றவள் “அக்கா, அதோ அங்க பாருங்க ஒருத்தர் வெள்ளை வேட்டி வெள்ளை

சட்டை போட்டுட்டு நிக்கிறார்ல அங்கதான் ஒரிஜினல் காஞ்சீபுர பட்டு செக்க்ஷன் இருக்குகா" என்று சொல்ல தோழிகள் அந்த பட்டு செக்க்ஷனை நோக்கி சென்றனர்.....

போகும் வழியில் ஒரு பொம்மைக்கு உடுத்தியிருந்த பட்டு மோகனாவை கவர, அதை பார்த்துக்கொண்டே அவள் பின்தங்கிவிட

பிரியா மட்டும் அங்கு சென்றாள்.. சென்றவள் சும்மா இல்லாமல் தன் வழக்கமான குறும்புதனத்தை காட்ட ஆரம்பித்தாள்.

தன் கேபினில் இருந்து சந்துரு வெளியேறியதும்.. சிறிது நேரத்தில் தானும் வெளியேறிய சபரிஷ் சுற்றும் முற்றும் தன் பார்வையை ஓட்ட அங்கு..
பட்டு செக்க்ஷனில் ஒரு பெண், மேல் ராக்கில் புடவையை வைக்க முடியாமல் போராடுவதை பார்த்து, சூப்பர்வைசர்ரை தேட.. அவர் அங்கு இல்லை மற்றும் இன்னொருப்பய்யனும் வேறு ஒரு போனுக்கு உதவிக்கொண்டிருந்ததை பார்த்தவன் அந்த வேலையை தானே செய்ய முன் வந்தான்.....

திடீரென்று தன் முன் முதலாளி வந்து நிற்கவும்.. அந்த பெண் பயந்தே போனாள்.... ஆனால் அவன்,

அவள் பயத்தை சட்டை செய்யாமல்.. அவளை இறங்க சொல்லி சைகையில் சொன்னவன்.. தானே ஏறி அந்த புடவையை வைத்தான்,

அப்பொழுது “ஹலோ எக்ஸ்கியூஸ் மி” என்று சோடக்கு சத்தத்துடன் ஒரு பெண் குரல் கேட்க, “யார் தன்னை இப்படி ரொம்ப மரியாதையாக அழைப்பது” இந்த குரல் எங்கோ கேட்ட மாதிரி இருக்குதே, என்று மனதில் நினைத்தவன் திரும்பி பார்க்க,

அங்கே காலையில் தன்னை சொடக்கு போட்டு அழைத்த அதே பெண் நிற்க, அவள் அழைத்த விதத்தில் கோபம் எழுந்தாலும், ஒருவேளை சந்துருவின் பிரெண்டாக இருக்குமோ என்று எண்ணி, பொறுமையாக,,...

“சொல்லுங்க என்ன வேணும்” என்று கேட்டான் தன் கம்பீர குரலில்...

அதற்கு குறும்புகாரியான பிரியா “ஆங்....இங்க இந்த கடை ஓனர் நல்லா ஸ்மார்ட்டா ஹாண்ட்ஸமா இருப்பாருன்னு வெளிய சொல்லிகிட்டாங்க. அதான் சைட் அடிக்கலாம்ன்னு வந்தேன்”.. என்றாலே பார்க்கலாம்..

சுவாசம் தொடரும்...

சுவாசம் 6

“உன் விழிகள் என்னும்
ஆழ்கடலில் என்னை
விழ வைக்கிறாய் பெண்ணே”
அதில் விழுந்தால்
நான் எழுவேனோ இல்லை
மூழ்கி முத்தெடுப்பேனோ!!!

பிரியா இந்தக் கடை ஒனரை சைட் அடிக்க
வந்துருக்கேன் என்று சொன்னதும்..

ஒரு நிமிடம் புரியாமல் முழித்தவன்... அடுத்த நிமிடம்
அவளை முறைக்க.....

அவன் முறைப்பதை கண்டுகொள்ளாது “பின்ன என்ன
சார், இங்க துணி கடைக்கு எதுக்கு வருவாங்க,
அப்படி வர்றவங்க கிட்ட.. என்ன மாதிரியான சேலை
வேணும், என்ன கலர்ல, என்ன விலையில
பாக்குறீங்கன்னு கேக்கணும், அத விட்டுட்டு என்ன
வேணும்ன்னு கேட்கறீங்க, உங்க முதலாளி சரியில்ல,
ஒன்னும் தெரியாத ஆட்களையெல்லாம் வேளையில்

வச்சிருக்கார், என்றவள் அவன் இன்னும் தன்னை முறைப்பதை பார்த்து,

“ஆமா தெரியாமத்தான் கேட்கறேன், நான் இந்தக் கடை ஓனரைத் தானே சைட் அடிக்கப்போறேன்னு சொன்னேன்.. அதுக்கு நீங்க எதுக்கு இப்படி முறைக்கிறீங்க, ஒருவேளை நீங்க அவருக்கு ரொம்ப வேண்டியவரோ, அதான் உங்களை இங்க வேலைக்கு வச்சிருக்காரோ” என்க

அவள் பேச பேச, சூழ்நிலை கருதி தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்ட சபரிஷ், அவளிடம் எதுவும் சொல்லாமல், திரும்பி அங்கு இருந்த இரு பெண்களை அழைத்து..

“இவங்க என்ன கேட்கறாங்களோ அத காட்டுங்க” என்றுவிட்டு நகரப் போனவனை .. கைநீட்டி வழி மறித்தாள் அவள்.

அதைப் பார்த்த அங்கு வேலை பார்க்கும் பெண்களோ மனதுக்குள் “ ஆத்தாடி, என்ன இவிய இப்படிப் பேசுதாவ... அய்யா இந்தப் பக்கமா இப்பிடி நடந்து போனாலே கை கால்லெல்லாம் ஒதரும். இவியலுக்கு நம்ம அய்யாவை பார்த்தா பயமா இல்லையோ.. இல்ல இவிய இந்த ஊருக்கு புதுசுனு நினைக்கிறேன்..? என்று நினைக்க..

“ஹலோ, என்ன பேசிகிட்டே இருக்கும் போது இப்படிச் சட்டபண்ணாம பாதிலேயே போறதுதான் நாகரீகமா, சும்மா ராம்ராஜ் வேஷ்டி விளம்பரத்துல வர்ற மாதிரி டிரஸ் பன்னா மட்டும் போதாது, வர்ற கஸ்டமர்கிட்ட எப்படி நடந்துக்கனும்னு தெரியனும், இருங்க உங்க ஓனர் கிட்ட சொல்லி உங்க வேலைக்கு உலை வைக்கிறேன், என்றவள் பின் அவனை அப்படியே விட மனமில்லாமல்
“அதோ அந்த மெரூன் கலர் சாரி எடுத்து போடுங்க” என்றாள் அதிகாரமாக,..

அவளின் அதிகாரமான பேச்சில்,அவன் அவளைக் கூர்மையாக, அதே சமயம் அவளை ஆராயும் விதமாகப் பார்த்தான்.

பெரிய பூ போட்ட நீள பாவாடையும், காலர் வைத்த முழுக்கை சட்டையும், அதே துணியில் கழுத்தை சுற்றி ஸ்கார்ப்பும்,தலைக்குக் குளித்திருந்ததால் அடங்கமாட்டேன் என்ற தலைமுடியை இருபுறமும் எடுத்து நடுவில் கிளிப் மாட்டி, மீதியை விரித்து விட்டு இருந்தாள்... வலக்கையில் மொபைலுடன், நாகரீக மங்கையாக நின்றவளின் கண்களில் குறும்பு கூத்தாடுவதை உணர்ந்து,
அனைவரும் தங்களையே பார்ப்பது போல் இருக்க, இங்கு நடப்பவைகளை மற்றவர்களுக்குக்

காட்சிப்பொருளாக்க விரும்பாமல், அவள் சொன்ன சாரியை எடுக்கப் போக, அப்போது அங்கு வந்த அவன் பி.ஏ ராஜேஷ்.

“என்ன சார், நீங்க போய் இத எல்லாம் செஞ்சிகிட்டு, நீங்க போங்க சார் நான் பாத்துக்கறேன்” என்றவன் பிரியாவிடம் திரும்பி, “சொல்லுங்க மேடம், உங்களுக்கு என்ன கலரில் சாரி காட்டட்டும்” என்க

இருகைகளையும் தன் இடுப்பில் வைத்து அவனை முறைத்து, “ஹலோ நியூ என்ட்ரி உங்க பேர் என்ன”.. என்று கேட்க..

அவனோ “என் பேர் ராஜேஷ். நான் இங்க ஜி.எம் மா வேலை பாக்கறேன்” என்றான் பெருமையாக…..

“இந்த ஜி எம் வேலை நிலைக்கணுமா வேணாமா” என்று தன் கண்ணை உருட்டி ராகம் போட்டு இழுத்தவளை பார்த்து பயந்துடன் தன் முதலாளியான சபரிஷை பார்க்க,

அவனோ தன் கண் அசைவில் ராஜேஷ்யை அமைதியாக இருக்கும்படி சொன்னவன்…..

தன் இரு கைகளையும் கட்டிக்கொண்டு அவளிடம்

முதல் முறையாக வாயை திறந்தான், அவள் சொல்லும் பதிலில், தான் அதிர போவது தெரியாமல்.

“இந்தக் கடை ஓனரை இதுக்கு முன்னாடி பாத்துருக்கீங்களா மேடம்” அந்த மேடத்தில் சிறு அழுத்தம் கொடுத்து கேட்க..

“ஏன் பாக்கல, நல்லா தெரியும் அந்தப் பக்கிய” என்ற அவள் பதிலில் சபரிஷ் மட்டுமல்ல அங்கிருந்தோர் அனைவரும் அதிர்ந்தனர்...

இந்தக் கடைக்குள் நுழையும் போது பிரியா சந்துருவிடம் “இது யாரு கடை” என்று கேட்டதற்கு, இது நம்மோடது தான் என்று கூறியதை வைத்து இது அவனுடைய குடும்பக் கடை என்று நினைத்து தான் அதுவும் சந்துருவை மனதில் நினைத்துதான் அவள் அப்படிக் கூறினாள், இது சபரிஷின் தனிப்பட்ட உழைப்பு அதுவும் இல்லாமல் இவன் சந்துருவின் அண்ணன் என்று அவளுக்குத் தெரியாதே.

அதற்குள் மோகனா அந்தப் பொம்மை கட்டியிருக்கும் சேலை போல் தனக்கும் வேண்டும் என்று கூறி, அதை வாங்கிக் கொண்டு பிரியாவை தேட, அவள் யாரிடமோ வம்பு வளர்ப்பதை கண்டு, தன் தலையில் அடித்துக் கொண்டு அங்குச் சென்றாள்...

அங்கிருந்தோர் அனைவரும் அதிர்ந்து இருப்பதைக் கண்டு “ஏதோ சரி இல்லை” என்று தோன்ற அங்கு விரைந்தவள்,
“அம்மாவுக்குப் பட்டு சாரி செலக்ட் பன்னிட்டியா” என்று கேட்க,

“எங்கடி ஒரு சேலை எடுத்து காட்ட சொன்னா இங்க பாரு பிடிச்சிவச்ச பிள்ளையார் மாதிரி நிக்கிறத”

“ப்ரி இந்த மாதிரி யாருகிட்டயும் மரியாதை இல்லாம பேசகூடாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்” என்று அதட்டியவள்,
அப்பொழுது தான் தன் முன் கோபமாக நின்றவனைப் பார்க்க, மனதிற்குள் “ஐய்யோ இந்த ப்ரி என்ன பண்ணிவச்சாளோ, இல்ல என்ன பேசிவச்சாளோ தெரியலையே” என்று நினைத்தவள், அவனிடம் திரும்பி
“சாரி சார், அவ கொஞ்சம் விளையாட்டுத் தனமா பேசுவா. அவ குழந்தை மாதிரி, ஏதாவது தப்பா பேசியிருந்தா மன்னிச்சிடுங்க, பிளீஸ் என்றவளை பார்த்து புன்னகைத்தவன். மனதுக்குள்

“இவ குழந்தையா? இவ பேசுறத பார்த்தா குழந்தை பேசுற மாதிரியா இருக்கு, ராட்சஷி எல்லார் முன்னாடியும் பக்கின்னு சொல்லிட்டாளே” என்று

மனதுக்குள் நொந்தவன் வெளியில் ப்ரியாவை முறைத்துக்கொண்டே ராஜேஷ் தடுத்தும், அவள் கேட்ட மெரூன் கலர் பட்டை எடுத்து காட்ட....

மோகனா, பிரியாவிடம் "சீக்கிரம் செலக்ட் பண்ணு ப்ரி .. நாம வந்து ரொம்ப நேரம் ஆயிடுச்சி .. சந்துரு இப்போ வந்துருவாங்க" என்க..

அதைக் கேட்ட சபரிஷ் "ஓ இவங்க சந்துருவின் பிரெண்ட்ஸ்தானா" என்று மனதுக்குள் நினைத்தவன்.. "சரியான வாயாடியா இருப்பா போலவே" என்று நக்கல் பார்வை பார்க்க

ஏற்கனவே மோகனா அவனிடம் கேட்ட மன்னிப்பில்,கோபத்தில் இருந்தவள்...அவன் பார்வையை உணர்ந்து, அவனை முறைத்தவள்.. "ஹலோ என்ன பார்வையெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு" என்று அவனிடம் சண்டைக்குப் போக, மோகனா சமாதானபடுத்த முடியாமல் திணற, அப்பொழுது...

தான் வந்த வேலையை முடித்துக் கொண்டு உள்ளே வந்த சந்துரு இவர்களைத் தேட.. அவன் அவர்களின் துணையாக அனுப்பி வைத்த பெண் அருகில் வந்து "அண்ணா நீங்க கூட்டிட்டு போவ சொன்னியல்லா

அந்த அக்கா ரெண்டு பேரும்..... மொத மாடில இருக்கவ ".. என்றதும்,

"சரிமா நான் பாத்துக்கறேன்" என்றவன்..

முதல் மாடிக்கு வந்து இவர்களைத் தேட, அங்குப் பிரியா கத்துவதும்.. மோகனா சமாதானப்படுத்துவதையும் பார்த்தவன், என்னவோ ஏதோ என்று பதறி அங்குப் போய் நின்று,

" பேபி " என்றவன் அப்போழுதுதான் தன் அண்ணனும் அங்கு இருப்பதைக் கண்டு, "அண்ணா என்னாச்சு" என்று கேட்க..

இதைக் கேட்டு ஏகத்துக்கும் அதிர்ந்த ப்ரியா "என்னது ஊ ஊ ஊ அண்ணனா" என்று கண்களைச் சாசர் போல் விரித்துக் கேட்க ...

"அட பக்கி, இது யார் கடைன்னு நான் கேட்டதுக்கு நம்மோடதுன்னு சொன்ன நீ, இது எங்க அண்ணண் கடைன்னு சொல்லாம விட்டுட்டியேடா" என்று மனதுக்குள் நினைத்தவள் சபரிஷை பார்க்க,

அவன் இவளை முறைப்பதை பார்த்து "அய்யோ முறைக்கிறானே, உண்மையிலேயே நீ லூசுதான்டி என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டவள்

சபரிஷை பார்த்து, ஹி….ஹி…என்று இளித்து வைக்க……

பிரியாவை நன்றாக முறைத்தவன்….சந்துருவிடம், “உன் பிரெண்ட்ஸ்ஸை கூட்டிட்டு வீட்டுக்குக் கிளம்பு” என்ற அமைதியான குரலில் சொன்னாலும் அதில் கோபம் இருந்தது, பின்பு தன் கையில் இருந்த பட்டு புடவையைப் பிரியாவிடம் கொடுத்து

” இந்தாங்க மேடம் நீங்க கேட்ட பட்டு” என்று கூறி முடிந்த மட்டும் அவளை முறைத்து விட்டு தன் கேபினுக்குச் சென்று விட்டான்..

ஆனால் ப்ரியாவோ மனதுக்குள் “காலையில் நாய்க்கிட்ட இருந்து என்ன காப்பாத்தினது இவன்தானா” என நினைத்தவள் சந்துருவிடம் “இவங்க உண்மையிலே உங்க அண்ணனா, அவருக்குக் காலையில் ஜாகிங் போற பழக்கம் இருக்கா” என்று கேட்க,

“அவர் என்னோட அண்ணண்தான் பேபி, ஆமா நீ ஏன் அவர் ஜாகிங் பத்தி கேட்குற…..ஒரு வேளை காலையில அவரை நீ பார்த்தியா” என்க உடனே சுதாரித்தவள்,

“இ…..இல்…இல்லையே….சும்மா கேட்டேன்….ஹி…ஹி….” திக்கி திணறி அவனிடம் சமாளித்தவள்… “போச்சு போச்சு…ஒரு தேங்க்ஸ் சொல்ல கூப்பிட்டப்பவே கண்டுக்காம போனான்…இப்போ இப்படி ஏடாகூடமா அவன்கிட்ட பேசி வம்பு வளர்த்துட்டேன்…இது பத்தாதுன்னு பக்கினு வேற சொல்லிட்டேன்…அய்யோ ரொம்பக் கோபமா, விறைப்பா போறானே, ஒருவேளை துணிக்கு போடுற கஞ்சிய இவனும் குடிச்சிருப்பானோ, ச்சே, உனக்கு உன் வாய்தான்டி எதிரி….உனக்கு அறிவே கிடையாது யோசிச்சு பேசறதில்லை” என்று தனக்குத்தானே பேசியவளை பார்த்த அவள் மனசாட்சி,

“ம்க்கும் இதத்தான் நானும் ஆரம்பத்துல இருந்தே சொல்றேன்” என்று அது பங்குக்குச் சாட,

“ச்சு போ” அதைத் தூசு போல் தட்டி விட்டவள் “இப்ப என்ன வீட்டுக்கு வரட்டும் அப்போ, ரெண்டுக்கும் சேர்த்து ஒரு தேங்க்ஸ் அண்டு ஸாரி சொல்லிடலாம் எவ்வளவோ பார்த்துட்டோம் இதைச் சமாளிக்க முடியாதா” என்று நினைத்தவள்..

தன் கையில் இருந்த பட்டுசேலையைக் கவனித்தாள், வீம்புக்காக அவனிடம் இந்தச் சேலையை எடுத்துக்காட்ட சொன்னாலும், இந்தக் கலர் பட்டு அவளுக்குப் பிடித்துத் தான் இருந்தது…

சந்துருவிடம் பிரியா,
“சந்துரு வீட்டுக்கு போகலாமா.. பசிக்குது டா”
என்றதும்.. தன் தலையில் அடித்துக்கொண்ட
மோகனா..

“அடியேய் சந்துருவோட, அண்ணாகிட்ட மரியாதை
இல்லாம பேசிட்டு , அதுக்கு மன்னிப்பு கேக்காம ,
பசிக்குதுன்னா சொல்ற .. போ போய் மொதல்ல
அவங்க கிட்ட மன்னிப்பு கேளு”.. என்று சொல்ல..

சந்துரு, அங்கு நடந்ததை வைத்து ஓரளவு பிரியாவின்
செயலை யூகித்தவன் தன் அண்ணணின் கோபத்தை
உணர்ந்து “வேண்டாம் அண்ணா கிட்ட நானே
பேசிக்கிறேன்” என்க இதைக் கேட்டு மோகனா
முகத்தைத் தூக்கி வைத்துக்கொள்ள…

“சரி சரி போறேன்….. மன்னிப்பு கேக்குறேன்…. அதுக்கு
ஏன் இப்படி மூஞ்சிய தூக்கி வச்சுக்கிற”.. என்றவள்..
ராஜேஷிடம் “எங்க இருக்கு உங்க சார் கேபின்” என்று
கேட்க,

“அதோ அதுதான் மேடம்” என்றவனிடம் வேறு எதுவும்
பேசாது சபரிஷின் கேபினை நோக்கி சென்றாள்..

உள்ளே சபரிஷோ இவளை பற்றிதான் யோசித்துக்

கொண்டிருந்தான்.. காலையில், அந்த விடிந்தும் விடியாத வேளையில்.

நாய்க்கு பயந்து கண்களை மூடி நின்றிருந்தவளின் தோற்றமும், பின் தன்னைச் சொடக்கு போட்டு அழைத்ததும் ,தான் திரும்பி பார்க்காமல் வந்ததும், இப்பொழுது நடந்த களோபரம் அனைத்தையும் நினைத்தவன்,

“உன்ன அந்த நாய் கிட்ட இருந்து காப்பாத்திருக்கக் கூடாது கடிக்க விட்டுருக்கனும் என்று நினைத்தவன், அவளின் சிறுபிள்ளை தனமான நடவடிக்கையால் அவள் மேல் கோபம் வந்தாலும்,அவனின் மனதில் ஏற்பட்டுள்ள அவளின் மீதான ஏதோ ஒரு உணர்வால் கோபப்பட முடியவில்லை… அது ஏன் என்றுதான் அவனுக்குப் புரியவில்லை

“எவ்ளோ தைரியம் உனக்கு .. சந்துரு வந்து சொல்றான் எங்க அண்ணா அப்படின்னு அப்போ கூட அசராம நிக்கிற .. ரொம்பதாண்டி தைரியம் உனக்கு…..என்ன பேச்சு பேசுற, அந்தப் பேசுற வாய் இருக்கே அத அப்படியே… இதற்கு மேல் என்ன நினைத்திருப்பானோ” .. சட்டென்று தன்னை மீட்டவன் தன் எண்ணம் போகும் திசையை அறிந்து திடுக்கிட்டான்……

ஏனோ, பிரியா அவன் கண்ணுக்கு வித்தியாசமாகத் தெரிந்தாள்.. அவள் தோழி சொன்னமாதிரி அவள் குழந்தைதான் .. என்று நினைத்தவனின் மனது,

“இப்போ நீ என்னதான் சொல்ல வர , அவ குழந்தையா குமரியான்னு ஆராய்ச்சி பண்ண போறியா , டேய் உனக்கு இருக்கிற ஆயிரத்தெட்டு வேலையில இது தேவையா” என்று எச்சரிக்க.

அதை அடைக்கியவன், “ப்பா என்ன பொண்ணுடா அவ” அவ இங்க இருக்கிற இருபது நாளும் அவளைப் பார்க்கவே கூடாது” என்று முடிவெடுக்க….

ஹி ஹி நீங்க நினைத்ததெல்லாம் நடந்து விட்டால் அப்புறம் நாங்க எத்துக்குங்க இருக்கோம். “இதோ அனுப்பிட்டோம்ல. ப்ரியாவை.”என்று விதி அவனைப் பார்த்து சிரிக்கவும்

கேபின் கதவை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தாள் பிரியா…..

அங்குச் சபரிஷ் அமர்ந்திருந்த தோற்றம் பிரியாவின் மனதை கவர……காலையில் ஜாகிங் உடையில் அவனின் பின் தோற்றம் பார்த்தே…அவன் யார் என்று பார்க்க ஆசைபட்டவள், தன் முன் வெள்ளை வேஷ்டி

சட்டையுடன், சுழல் நாற்காலியில் தோரணையாக அமர்ந்திருக்கும் அழகு, அவனின் கூர்மையான கண்கள், அழகான நாசி, பிடிவாதமான அழுத்தமான உதடு…..அதற்க்கு மேல் யோசிக்க விடாமல் அவனின் குரலில்…அவனைச் சைட் அடிப்பதை நிறுத்த

கதவை தட்டியது ராஜேஷாகத்தான் இருக்கும் என்று நினைத்து உள்ளே வரச்சொன்னவன்…அங்கு வந்த பிரியாவை பார்த்துத் திட்டுவதற்கு வாய் திறப்பதற்குள்…

கையை நீட்டி தடுத்தவள், “என்ன சொல்ல போறீங்க, எதுக்கு வந்தே வெளியே போ அப்படித்தானே ?” என்க

அவனோ, அதான் நீயே சொல்லிட்டியே அப்புறம் என்ன? என்பது போல் பார்க்க…

அதற்கெல்லாம் அசருபவளா அவள் “ஹலோ நான் ஒன்னும் இங்க உங்களைக் கொஞ்ச வரல” என்றவளை பார்த்து அதிர்ந்தவன்,

என்ன கொஞ்சவா?….சரிதான் என்று அவளைக் கூர்ந்து பார்த்தவனின் பார்வை “பின்ன எதுக்கு வந்தே” என்பதாக இருந்தது

“இவன் ஒருத்தன் எதுக்கெடுத்தாலும்
பார்த்துவைப்பான்.. ஏன் ஏதாவது பேசினா,
அய்யாவோட வாயிலிருந்து முத்து உதிர்ந்துடுமோ..

அடேய் சந்துரு உனக்கு எப்படி டா இவன் அண்ணனா
பொறந்தான்.. பாவம் டா உனக்கு அண்ணியா வர
போறவ”...என்று மனதுக்குள் அவனை அர்ச்சனை
செய்தவள்,

“நான் உங்க கிட்ட தேங்க்ஸ் அப்புறம் சாரி கேட்க
வந்தேன்..”

“எதுக்கு?” என்று கேட்டான் தன் இரும்பு குரலில்..

“யப்பா பேசிட்டான். நான் மனசுக்குள்ள நினைச்சது
இவனுக்குக் கேட்டுருக்குமோ?? யோசித்தவள்...பின்
தன் தோளை குலுக்கி..

“காலையில என்னை உங்க வீட்டு நாய்க் கிட்டே
இருந்து காப்பாத்தினதுக்குத் தேங்க்ஸ்.. அப்புறம்
இங்க கடையில வச்சு , உங்க ஸ்டாப் முன்னாடி
அப்படி நடந்துகிட்டதுக்குச் சாரி”
மன்னிப்பு கேட்கும் போது மட்டும் அவள் குரல்
மெலிய, தலை குனிந்து நின்றாள்..

ஏனோ இந்தத் தோற்றம் அவளுக்குச் செட்
ஆகவில்லை என்று தோன்ற “சரி கிளம்பு” என்று
விட்டு தன் வேலையில் கவனம் செலுத்த,

அவனின் செயலில் அவளுக்கும் கோபம் வர
“ரொம்பப் பன்றடா நீ, சரி வயசுல பெரியவனாச்சே,
பார்க்க வேற ரொம்ப அழகா இருக்கியே, நான்
பன்னினதும் கொஞ்சம் அதிகம்ன்னு சாரி கேட்டா…..
மன்னிச்சிட்டேன்னு வாயத் தொறந்து சொன்னா
என்னவாம்….

இன்னும் இருபது நாள் இங்கதான் இருக்கப்
போறேன்…உன்னை ஒரு வழி பன்னல நான் பிரியா
இல்லடா” என்று மனதில் நினைத்தவள்
அதற்க்கு மேல் அங்கு நில்லாது வெளியே வந்து
விட்டாள்..

யார் யாரை ஒரு வழி செய்யப் போகிறார்கள் என்று
பொறுத்திருந்து பார்ப்போம்……..

சுவாசம் தொடரும்….

சுவாசம் 7..

உன் மீது கோபமாக இருந்துகொண்டு
உன்னைபற்றியே நினைத்துகொண்டு இருக்கிறேன்!
ஏன்,
உனக்கும் எனக்குமான பந்தம்
முற்பிறவியின் தொடக்கமா? இல்லை
இப்பிறவியின் ஆரம்பமா???

எஸ்.எம் டெக்ஸ்டைலில்இருந்து காரில் திரும்பி வந்து கொண்டிருந்தனர் மூவரும்.....காரின் உள்ளே கனத்த அமைதி நிலவியது,

ப்ரியா வழக்கத்திற்கு மாறாக அமைதியாக அமர்ந்திருந்தாள் ஆனால் அவளின் எண்ணமோ சபரிஷை பற்றிதான் இருந்தது, “சரியான சிடுமூஞ்சி, சிடுமூஞ்சி சிரிப்புன்னாலே என்னன்னு தெரியாதோ, என அவனைப் பற்றி யோசித்தவள் ...ச்சே நாமளும் கொஞ்சம் ஓவராதான் பேசிட்டோமோ” என்று நினைக்க, அவளின் மனசாட்சியோ ,

“கொஞ்சம் இல்லம்மா ரொம்ப ஓவரோ ஓவர்..., நீ செய்த தப்புக்கு மன்னிப்பு கேட்ட லட்சனத்தையும் பார்த்தேன்.....அவனை இன்ச் இன்சா சைட் அடிக்கறதையும் பார்த்தேன்...ஆனாலும் பிரி உனக்கு

இருக்கிற வாய்க்கு , எவன் வந்து உன்கிட்ட மாட்ட போறானோ" என்று கேலி செய்ய,

அவள் மனகண்ணில் சபரிஷின் கடுகடுத்த முகம் வந்து போக, அதில் ஒரு நிமிடம் ஜெர்க் ஆனவனள் ச்ச என்ன இது என்று தன் தலையைக் குலுக்கிக் கொண்டு வெளியில் வேடிக்கை பார்க்க,

மோகனாவோ, தான் வந்த காரியத்தை எப்படி, எங்கிருந்து ஆரம்பிப்பது , யாரிடம் கேட்பது என்று தெரியாமல் குழம்பிக்கொண்டிருந்தாள்...

இவர்கள் இருவரையும் மாறி மாறி பார்த்த சந்துரு, இருவரின் அமைதிக்குக் காரணம் தெரியாமல் குளம்பியவன் பின் ஒரு நிலைக்கு மேல் அதைத் தாங்க முடியாமல், தன் காரில் சீடியை போட்டு பாடலை சத்தமாக ஒலிக்கச் செய்தான்.

"ஒரு பொய்யாவது சொல் கண்ணே ...
உன் காதலன் நான்தான் என்று
அந்தச் சொல்லில் உயிர் வாழ்வேன்"

அந்தப் பாடலில் சிந்தனை கலைந்த மோகனா, பாடலின் அர்த்தத்தைப் புரிந்துக்கொண்டு, ரிவ்யூ கண்ணாடியின் வழியாகச் சந்துருவை முறைக்க.....

அவனும் அவளைத்தான் பார்த்துக் கொண்டு இருந்தான்....
அவள் முறைக்கவும், அவள் தன்னைக் கண்டுகொண்டாள் என்று நினைத்து சந்தோஷத்துடன் பாடலை நிறுத்தி விட்டு, பிரியாவிடம்

“என்ன பேபி பலமான யோசனை, எந்தக் கோட்டைய பிடிக்கப் போற...உன் இயல்பு இது இல்லையே.....என்னாச்சு” என்று கேட்க

பிரியா அவனிடம், “உங்க அண்ணனுக்குச் சிரிக்கத் தெரியுமாடா” என்று அதிமுக்கியமான கேள்வி ஒன்றை கேட்டாள்

அவளின் மௌனத்தில், என்னவோ ஏதோ என்று பயந்தவன் அவளின் கேள்வியில் வாய்விட்டு சிரித்து, “எங்க அண்ணன் என்னைவிட ரொம்ப ஜாலி டைப் .. என்றவனை நக்கலாகப் பார்த்து,

“யாரு, உங்க அண்ணன் ஜாலி டைப்பா .. போடா , உங்க அண்ணா சிரிக்கக் கூடக் காசு கேட்பார் போல”

“அவரோட தொழில் அப்படிப் பேபி... அண்ணா இப்படி இல்லன்னா..... மத்தவங்க ஏறி மிதிச்சிட்டு போய்ட்டே இருப்பாங்க” என்றவன்.

“என்னாச்சி பேபி அண்ணா ரொம்பத் திட்டிட்டாங்களா, அதுக்குதான் நான் சொன்னேன் அண்ணாகிட்ட நான்

பேசிக்கிறேன்னு.. நீங்க தான் கேக்கல," என்றவன் ரிவ்யூ கண்ணாடி வழியாக மோகனாவை பார்த்து,

"பேபி உன் பிரெண்டுக்கு என்னாச்சு ரொம்ப அமைதியா வர்றாங்க"

"ஏன் அத நீயே கேட்க வேண்டியது தானே" என்றவள்.. திரும்பி
"என்னாச்சு மோஹி நீ ஏன் அமைதியா வர " என்ற ப்ரியா, அவளின் குழப்பமான முகத்தைப் பார்த்துக் கொண்டே,

சந்துருவிடம் "அவ இங்க வந்ததுல இருந்து சரி இல்ல டா.. எப்பவும் ஏதோ யோசிக்கிட்டே இருக்கா" என்க...

சந்துருவும், அவளைக் கவனித்துக் கொண்டே தானே இருக்கின்றான், அவள் எப்பொழுது ராமசாமிபுரம் பற்றிக் கேட்டாளோ, அப்பொழுதே அவன் மனதில் சிறு சந்தேகம் முளைக்க, அவளின் எண்ணம் தெரிந்து கொள்ளும் ஆவலில்

"என்னாச்சு, என்ன யோசனை மோகனா" என்று கேட்க

"ஒன்னும் இல்ல நீங்க ரோட்டை பார்த்து காரை ஓட்டுங்க" என்றாள் .. அவளின் சிந்தனை கலைந்த எரிச்சலில்

அவள் பதிலில் அவன் முகம் சுருங்க , பின் எதுவும்

பேசாமல், இருபது நிமிட பயணத்தில் தன் வீட்டின் போர்டிக்கோவில் காரை நிறுத்தினான் சந்துரு..

காரிலிருந்து இறங்கிய இருவரையும் அழைத்துக் கொண்டு தன் வீட்டின் உள்ளே போக,

அப்பொழுது "பேராண்டி எப்படி இருக்க, யாரு இந்தப் பொண்ணுங்க" என்ற ஒரு முதிர்ந்த குரல் கேட்க, குரல் வந்த திசையை நோக்கி திரும்பினர் மூவரும்,

அங்கே தன் ஆச்சி விசாலாட்சி இருப்பதைக் கண்டவனின் முகம் கனிய, அவரிடம் நெருங்கி "ஹாய் பியூட்டி எப்படி இருக்க" .. என்றான்

"நான் நல்லா இருக்கேன் பேராண்டி.. நீ தான் இந்த ஆச்சியை மறந்துட்டே" என்று அவர் செல்லமாக முறுக்கிக்கொள்ள ..

"என்ன பியூட்டி இப்படிச் சொல்லிட்டே , நீ என் டார்லிங் ஆச்சே, உன்னை எப்படி மறப்பேன்" என்று தன் ஆச்சியைக் கட்டிக்கொண்டான்..

இதைப் பார்த்த இரு தோழிகளுக்கும் வெவ்வேறு உணர்வுகள்..
மோகனாவுக்கோ தன் ஆச்சியின் (தந்தையின் அம்மா) நினைவு.... .. அவரும் இப்படித்தான் தன் மீதும், தன் அண்ணன் மீதும், தம்பி மீதும் ரொம்பவும் பாசமாக இருப்பார்.....அவரின் இழப்பு அவளைப் பெரிதும்

வாட்டியது....அவரது இழப்பு மட்டுமா.....வேறு எதையும் சிந்திக்க முடியவில்லை அவளால்

ப்ரியாவோ தன் பாட்டியை புகைப்படத்தில் மட்டும்தான் பார்த்திருக்கிறாள்..அதனால் அவர்களின் பாசபினைப்பு ,அவளுக்கு ஒரு வித்தியாசமான உணர்வை கொடுத்தது.....

“சரி பேராண்டி இதுக ரெண்டும் யாருன்னு சொல்லவே இல்லையே” என்று ப்ரியா மற்றும் மோகனாவை காட்டி கேட்க..

“இது என்னோட பிரி பேபி”.. என்றான்..

அதைக்கேட்ட ஆச்சி.. “என்னது பேபியா.....என்னடா சொல்ற” என்று முறைத்தார்.

“முறைக்காதே பியூட்டி, என்னோட பிரெண்டுன்னு சொல்ல வந்தேன்...அதுக்குள்ள அவசரபட்டா எப்படி” என்றான்.

“அதானே பார்த்தேன்” என்று அவர் தன் தோளில் இடித்துக்கொள்ள..

அதைப் பார்த்த பிரியா, “ஆங் பாத்து பாத்து கழுத்துச் சுளிக்கிக்கப் போகுது, சந்துரு உன் ஆச்சிக்கு ரொம்பத்தான் குசும்பு, ம்க்கும்” என்றவளை பார்த்தவர்,

“அம்மாடி என்னமா வாய் பேசுது இந்தப் புள்ள” என்று கூறிவிட்டு மோகனாவை பார்க்க

அவனோ “இது மோகனா.. ப்ரியாவோட பிரென்ட்” என்று கூறிவிட்டு மோகனாவின் முகமாறுதல்களைக் கவனிக்க ஆரம்பித்தான்…

பிரியா சந்துருவிடம் நெருங்கி “அவ என்னோட பிரெண்டுன்னா உனக்கு யாருடா” என்று அவன் காதில் கிசுகிசுக்க,

மோகனாவும் பார்வையாலையே அவனிடம் அதே கேள்வியைக் கேட்க நினைத்து சந்துருவை பார்க்க……அவனோ திடீரென்று கண் சிமிட்டினான் ..

“ஆங், அடப்பாவி பாட்டியை பக்கத்துல வச்சிக்கிட்டு எப்படிக் கண்ணடிக்கிறான்” என்று நினைத்த மோகனா லூசு லூசு என்று திட்ட, அவளது மனமோ

“அப்போ தனியா இருக்கும் போது கண் அடிச்சா ஓகே வா” என்று கேட்க அதற்க்கு பதில் இல்லை அவளிடம்,..

“என்னடா கார் சத்தம் கேட்டு ரொம்பநேரம் ஆச்சே இன்னும் உள்ளே வரலைன்னு பார்க்கவந்தா.. இங்க உங்க ஆச்சியைக் கொஞ்சிட்டு இருக்கியா…” என்று வந்தார் பிரபா…. சந்துருவின் சித்தி..

“ஹாய் சித்தி எப்படி இருக்கீங்க.. காலையில்

உங்களைப் பார்க்க முடியலை, சாரி சித்தி" என்க,

"நான் நல்லா இருக்கேன்" என்றவர், பிரியாவையும் , மோகனாவையும் கேள்வியாகப் பார்க்க..

"என்னோட பிரெண்ட்ஸ் சித்தி" என்றான்....

" ஓ நீ சொன்ன ஆளுக இவியதானா" என்றவர் இருவரையும் பார்த்து உள்ளே வாங்கம்மா என்றுவிட்டு முன் செல்ல, அவர்களும் பின் தொடர்ந்தனர்.....

சந்துரு "சித்தி செல்வியும், மேகாவும் வந்துட்டாங்களா"

"இன்னும் இல்லப்பா, இப்பதான் போன் பண்ணேன்....கிட்டக்கதான் இருக்காவளாம்" இப்போ நீங்க வாங்க சாப்பிடலாம், என்று பிரபா சொல்லவும்..

"தேங்க்ஸ் ஆன்ட்டி உங்களுக்காவது என் பசி புரிஞ்சிதே".. என்று முன்னால் நடக்கப்போனவளை கை பிடித்துத் தடுத்த மோகனா..

"ப்ரி நாம இன்னும் சந்துரு அம்மாவை பார்க்கல" என்று அவளின் காதை கடிக்க..

"ஓ ஆமால்ல" என்றவள், "ஆன்ட்டி சந்துரு அம்மா வரட்டும்...அப்புறம் சாப்பிடலாம்" என்று சொல்ல..

“சித்தி, அம்மா எங்க?” என்றான் சந்துரு.

“ நீ இவங்களை இங்க தங்க வைக்க மேகா ரூமை
ரெடி பண்ண சொன்னியே அதான் எல்லாம்
கரெக்ட்டா இருக்கான்னு பார்க்க
போயிருக்காவப்பா....இப்ப வந்துடுவாங்க”

அவர் கூறியதில், பிரியாவும், மோகனாவும் ஒருவரை
ஒருவர் பார்த்துக்கொண்டு...பின் சந்துருவை பார்க்க..

அவனோ “நாம மும்பை போறவரைக்கும் இங்க, இந்த
வீட்ல தான் தங்க போறோம்” என்றவன் தன்
அம்மாவை தேடி போக...

“ஆங் என்னது இங்கதான் தங்க போறோமா.. அப்போ
நம்மளை வேற எங்கும் சுத்தி பார்க்க இந்தப் பக்கி
கூட்டிட்டு போகலையா ” என்று
அழுதுவிடுபவள்போல் மோகனாவிம் கேட்க..
அவளோ

“ஹப்பா, வேற எங்கும் போகலன்னா...யார்கிட்டயாவது
உதவி கேட்டு, நான் வந்த காரியத்தைச் சீக்கிரம்
முடிச்சிடலாம் என்று நினைத்தவள், பிரியாவிடம்

“இரு அவங்க வரட்டும் கேட்கலாம்” என்றாள் தன்
மனதை மறைத்து..

தன் அன்னையை அழைத்து வந்த சந்துரு தோழிகள்
இருவரையும் அவருக்கு அறிமுகபடுத்தினான்..

லட்சுமி அம்மாளை பார்த்த உடனே இரு தோழியருக்கும் அவரை மிகவும் பிடித்துவிட்டது.....

அவரின் பார்வையோ மோகனாவிடமே இருந்தது.. அவர்களை நெருங்கியவர் .. "வாங்கம்மா உங்களைப் பற்றிச் சந்துரு நிறையச் சொல்லி இருக்கான்...வீட்ல அம்மா அப்பா எல்லாரும் எப்படி இருக்காங்க" என்று கேட்க

"ஐயோ ஆன்ட்டி எனக்குப் பசிக்குது .. நீங்க உங்க விசாரணையை அப்புறம் வச்சிக்கோங்க.." என்று பிரியா சொல்ல அதில் கவனம் கலைந்து எல்லோரும் சிரித்துவிட்டனர்..

"சரி வாங்க சாப்பிடலாம்".. என்று அழைத்துச் சென்றவர் மோகனாவின் கையை மட்டும் விட வில்லை

சாப்பாட்டு மேஜையில் எல்லாம் தயாராக இருக்க, மோகனாவை இருக்கையில் அமர வைத்தவர், அவளுக்குப் பார்த்து பார்த்து பரிமாற, ப்ரபாவோ ப்ரியாவை கவனிக்க.. சந்துருவை அம்போவென்று விட்டு விட்டனர்..

"அம்மா , சித்தி இங்க ஒருத்தன் இருக்கேன்.. கொஞ்சம் என்னையும் கவனிங்க.....விட்டா ரெண்டு பேருக்கும் ஊட்டி விடுவீங்க போலிருக்கே" என்று

கிண்டல் செய்தவனைப் பார்த்து லட்சுமி .

“டேய் பேசாம சாப்பிடுடா… அரட்டை” என்று அவன் தோளில் தட்டியவர்.. அவனுக்கும் சேர்த்து பரிமாறினார்….

தன்னவளை அவள் யார் என்று தெரியும் முன்பே தன் அன்னைக்குப் பிடித்திருப்பது சந்துருக்குச் சந்தோஷமாக இருந்தது..

சாப்பிட்டு முடித்ததும் லக்ஷ்மியிடம் சென்ற பிரியா,

“ ஆன்ட்டி , நல்லா சாப்பிட்டாச்சி…. ஒரு குட்டி தூக்கம் போடணும். நாங்க தங்கியிருக்கிற அந்த வீட்டுக்கு கிளம்பறோம்.. சாயங்காலம் வரோம் ….. அப்போ உங்களுக்கு எங்களைபத்தி என்ன கேக்கணுமோ கேளுங்க ஆன்ட்டி என்றவள்

சந்துருவை ஒரு பார்வை பார்த்து “வெளிய வா மவனே உனக்கு இருக்கு” சிறு குரலில் அவனிடம் கூறிவிட்டு முன்னே நடக்க,

மோகனாவும் “ஆன்ட்டி சாப்பாடு சூப்பர்.. நாங்க சாயங்காலம் வரோம்” என்றவள் ப்ரியாவை பின் தொடர்ந்தாள்..

ப்ரபாவோ சந்துருவிடம்.. “என்னடா இங்க தங்குறதுக்கு ரூம் ரெடி பண்ண சொன்ன…… இப்போ என்னன்னா அங்க போய் ரெஸ்ட் எடுக்கப்

போறோம்ன்னு சொல்லிட்டு போறாங்க”

“அது ஒன்னும் இல்ல சித்தி .. அவங்க திங்க்ஸ் எல்லாம் அங்க தானே இருக்கு. அத எடுத்துட்டுச் சாயங்காலம் வருவாங்க அவ்ளோதான்… ஆமா அப்பா, சித்தப்பா எல்லாம் எப்போ வருவாங்க” என்று கேட்க..

“வந்துட்டே இருக்கவ “ என்றார் லட்சுமி..

“சரி மா” என்றபடி வெளியே வந்தவன், அங்கே தோட்டத்தில் அமர்வதற்கு அமைக்கப் பட்டிருந்த கல் பெஞ்சில் இருவரும் அமர்ந்திருப்பதைப் பார்த்தவன் அங்குச் சென்றான்…..

அங்குச் சென்றது தான் தாமதம்.. சந்துருவை சரமாரியாக அடிக்கத் துவங்கி விட்டாள் பிரியா.. மோகனா செய்த எந்தச் சமாதானமும் எடுபடவில்லை…….

“பேபி போதும் வலிக்குது” .. என்று அவள் கையைப் பிடித்து நிறுத்தியவன்..

“இங்க, எங்க வீட்ல, நீங்க ரெண்டு பேரும் கொஞ்சநாள் இருக்கனும்னு ஆசைப்பட்டேன் பேபி.. அதுக்காகத் தான் ப்ரின்ஸி தமிழ்நாடுன்னு சொன்னதும் நான் எல்லா ஏற்பாடும் பண்ணிட்டேன்….. இங்கே இருந்து கொடைக்கானல் போறதுக்கு எல்லாம் அண்ணா பாத்துப்பாங்கன்னு சொன்னதும்

ப்ரின்ஸி ஓகே சொல்லிட்டாங்க. இங்க காலையில் வந்ததும், அவங்க கிட்ட நாங்க மூணு பேரும் கொடைக்கானல் வரலன்னு சொன்னா பெர்மிசன் கிடைக்காது, அதான் உன்னோட வீசிங் பிராப்ளத்தைச் சொன்னேன் ப்ரின்ஸி ஓகே சொல்லிட்டாங்க," இங்க பார்கிறதுக்கும் நிறைய இடங்கள் இருக்கு பேபி நான் உன்ன அங்க எல்லாம் கூட்டிட்டு போறேன் சரியா என்று ஒரே மூச்சில் சொல்லி முடித்தான்.

"என்னதுஊஊஊஊ இங்க கொஞ்ச நாள் இருக்கனுமா. அதுவும் அந்தச் சிடுமூஞ்சிய தினமும் பார்க்கனுமா" என்று மனதுக்குள் சொல்வதாக நினைத்துச் சத்தமாகச் சொல்லிவிட்டாள் பிரியா..

சொல்லிவிட்டு திரும்பியவள்
அதிர்ந்தாள்..ஏனென்றால் அவள் எண்ணத்தின்
நாயகன் சபரிஷ் அங்கு நின்றுகொண்டிருந்தான்.....

இவர்களின் அருகில் வந்த சபரிஷ், சுற்றி தன் பார்வையைச் சுழல விட, அங்கு இவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த வேலைக்காரர்கள் சபரிஷின் பார்வையை உணர்ந்து பயத்தில், எல்லோரும் தங்களது வேலையைப் பார்க்க துவங்கினார்...

மீண்டும் மூவரையும். பார்த்தவன்.. "இது மும்பை இல்லை, கிராமம், உங்க விளையாட்டெல்லாம் உங்க ஊருல போய் வெச்சிக்கோங்க.". என்றவன்

சந்துருவிடம்,

“எந்த இடத்தில, யார்கிட்ட, எப்படிப் பேசனும், மரியாதைன்னா என்னனு சொல்லி கூட்டிகிட்டு வரதில்லையா” என்று தன் பல்லை கடித்துச் சொன்னவன் ப்ரியாவை மேலும் கீழும் ஒரு பார்வை பார்த்து விட்டு வீட்டினுள் சென்று விட்டான்…

அவனின் வார்த்தைகளில் அதிர்ந்து நின்ற பிரியா, அவன் செல்வதையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்…

அவளின் நிலையைக் கண்ட சந்துரு, பேபி அண்ணா என்று ஏதோ சொல்ல வாய் திறக்க.

அவனைக் கைநீட்டி தடுத்தவள்…..” டேய் சந்துரு, நான் இப்படித்தான் , என்னால் என்னை மாத்திக்க முடியாது..உங்க அண்ணா அதான் அந்தச் சிடுமூஞ்சிய, தினமும் பார்க்கனுமா….. அதுவும் என்னால முடியாது…நான் என்ன பண்ணிட்டேன்னு இந்தப் பேச்சு பேசிட்டு போறாரு….நான்தான் காலையிலே சாரி கேட்டுட்டேன் இல்ல….. இனிமேல் நாங்க இங்க இருக்க மாட்டோம், அந்த வீட்ல தான் இருப்போம்….. அப்படி இல்லன்னா, எங்களை மும்பைக்குப் பேக் பண்ணு” என்றவள் அவனின் பதிலை எதிர்பார்க்காது கெஸ்ட் ஹவுஸ்க்கு சென்றாள்…..

மோகனாவும்....சபரிஷ் வார்த்தையில் அதிர்ந்து, தன் தோழியின் மேல் தவறு இருந்தாலும், அவளை விட்டுக் கொடுக்க மனமில்லாது.....சந்துருவை முறைத்துவிட்டு அவளின் பின்னே சென்றாள்.....

சந்துருதான் இவர்கள் மூவரிடமும் மாட்டிக்கொண்டு விழி பிதுங்கி நின்றான்....

.....

அன்றைய இரவு பிரியா அமைதியாகக் கையில் ஏதோ ஒரு புத்தகத்தை வைத்து அமர்ந்திருந்தாள் , ஆனால் அவள் கவனம் அதில் இல்லை .

மோகனா ப்ரியாவின் அருகில் செல்லவும்..ப்ரியாவின் மொபைல் அடித்தது,

பிரியா தன் மொபைல்லை கவனிக்காமல் தன் யோசனையில் இருக்க அதைக் கவனித்த மோஹனா சரி நாம யாருனு பாப்போம் என்று நினைத்தவள் மொபைலை எடுக்க அதில் பக்கி காலிங் என்று வந்தது.. மோகனா அதை எடுக்கவில்லை..

அது அடித்து ஓய்ந்தது.. அதைக் கீழே வைக்கப் போக.. மீண்டும் அடித்தது..

சந்துரு ஏன் இப்போ போன் பண்றாங்க எனயோசித்து ப்ரியாவை பார்த்தவள், சரி என்னவென்று கேட்போம் , என்று ஆன் செய்தாள் மோகனா..

அதில் சந்துரு பேபி என்ன பேபி, போன் எடுக்க இவ்ளோ நேரம், தூங்கிட்டியா.. சாரிடா அண்ணா பேசினதுக்கு நான் சாரி கேட்டுகிறேன் டா, அதை மறந்துரு ஓகே வா.. அப்புறம் உன் மோகினி என்ன பண்ணுறா.. தூங்கிட்டாளா , பேபி அவளை ஒரு பார்வை பார்த்தாலே மொறைக்கிறா, நான் எப்படிப் பேபி அவகிட்ட நெருங்கி பேசுறது.. என்று பேசிக்கொண்டே போனான் சந்துரு இந்தப் பக்கம் யார் இருக்கா என்று தெரியாமலே..

என்ன பேபி ஒன்னும் பேச மாட்டேன்கிறே , எதாவது ஐடியா குடு அந்த மோகினி கிட்ட நெருங்க.. என்று சொல்லவும் ,

சட்டென்று மோகனா , “நீங்க எதுக்கு என்கிட்ட நெருங்கனும், இதோ பாருங்க உங்க மனசுல நீங்க என்னதான் நினைச்சிட்டு இருக்கீங்க, இதெல்லாம் எனக்குப் பிடிக்கல, நீங்க பார்க்குற பார்வை பிடிக்கலை நீங்க என்கிட்ட பேசனும்ன்னு நினைக்கிறது எனக்குப் பிடிக்கல..” என்று கத்தியவள் போனை ஆஃப் செய்து கட்டிலில் வீசியவள், அப்படியே அவளும் கட்டிலில் அமர்ந்தாள்

மோகனாவின் கோபமான குரலில் தன் கவனம் கலைந்து, திரும்பியவள், கட்டிலின் அருகே வந்து

தனது மொபைலை எடுத்து பார்க்க அதில் சந்துரு பேசியதற்கானன அறிகுறி இருக்க அப்போ இவ சந்துரு கிட்ட தான் இவ்ளோ கோபமா பேசினாலா, என்றதும்.

அமைதியாக ஒரு முடிவுடன் மோகனாவின் முன் வந்து நின்று சொன்னாள் “மோஹி உன்கிட்ட கொஞ்சம் பேசனும், நான் கேக்குறதுக்கு உண்மையான பதில் சொல்லணும்..” என்க

நிமிர்ந்து பார்த்த மோகனா கேள் என்பது போல் பார்க்க, , இந்தப் பார்வை சபரிஷை நினைவு படுத்தியது. அவனும் இப்படித்தானே சொல் என்பதுபோல் பார்த்தான், ச்ச இப்போ எதுக்கு அவனைப் பத்தி நினைக்கிறேன் எனத் தலையைக் குளுக்கியவள்.. மோகனாவிடம்,,

“நீ சந்துருவை லவ் பண்றியா”.. என்று நேரடியாக விஷயத்துக்கு வந்தாள்…

பிரியாவின் கேள்வியில் அதிர்ந்தவள், தன்னைச் சுதாரித்துக்கொண்டு, “என்ன திடீர்னு நீ தூங்கு இதைப் பத்தி காலையில் பேசிக்கலாம்” என்றுகூற

“இந்தச் சமாளிக்கிற வேலை எல்லாம் வேணாம்.. இப்போ சொல்ல போறியா இல்லையா”என்று கேட்க

மோகனா அமைதியாக இருக்கவும்,

“எனக்கு வர்ற கோபத்துக்கு உன்ன அப்படியே”.... என்று தன் இரு கையையும் மோகனாவின் கழுத்தின் அருகே கொண்டு சென்றவள்,

“ச்ச, கார்ல சந்துரு கிட்ட நீ அப்படிப் பேசினது எனக்குப் பிடிக்கல மோகனா.. பாவம் அவன் முகமே வாடி போச்சி.. இப்போ போன்ல அப்படி என்ன கேட்டான்னு நீ மூகத்துல அடிச்சா மாதிரி பதில் சொன்ன, எனக்கு இப்ப தெரிஞ்சாகனும்... சொல்லு” என்று மோகனாவின் கையைப் பிடித்துத் தன் புறம் திருப்ப..

ப்ரி ஒன்னும் இல்ல விடு மும்பை போய்ப் பேசிக்கலாம்.. என்று படுக்கையைச் சரி செய்ய..

எனக்கு இன்னைக்கி பதில் தெரிஞ்சாகனும், என்று பிடிவாதம் பிடிக்க

“அய்யோ பிரி எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியல ” என்க

“என்னது சொல்ல தெரியலையா.. இதென்ன பதில் மோகனா.. நீ சந்துருவை லவ் பன்றியா இல்லையா.. அதுக்கு ஆமா, இல்லை இதுல ஒரு பதில்தான் எனக்கு வேணும்”

“இவ்ளோ நாள் இல்லாம, என்ன திடீர்னு கேக்குறே?

சந்துரு கேட்க சொன்னாங்களா??”

“அவனைப் பத்தி நீ பேசாதே .. உன்ன ரெண்டு வருஷமா லவ் பன்றான், ஆனா அத உன்கிட்ட சொல்ல தைரியம் வரல..... அதான் நானே களத்தில் இறங்களாம்ன்னு முடிவு பண்ணிட்டேன்”..

“ப்ரி ப்ளீஸ், ரெண்டு வருஷம் பொறுத்தல்ல, இன்னும் ஒரு ரெண்டு நாள் பொறுத்துக்கோ டா எனக்காக”.. என்றாள் பாவமாக

“முடியாது மோகனா.....நான் விளையாட்டு தனமா இருப்பேன் தான்.. அப்படி இருந்தாலும் உங்க ரெண்டு பேரையும் கவனிச்சிட்டு தான் இருப்பேன்..... உனக்கு அவனைப் பிடிச்சிருக்கு .. ஆனா அத சொல்ல தயங்குற .. ரெண்டு நாள் கழிச்சு சொல்லறதுக்கு, இப்பவே சொல்லலாம் இல்ல.... உன் மனசுல என்ன இருக்கு அத இப்போ சொல்லு”...

இவள் நான் சொல்லாமல் விடபோவதில்லை என்றதும் மோகனா அமைதி ஆகிவிட..

“சரி உனக்குச் சொல்ல விருப்பம் இல்லைன்னா விட்டுரு” என்றவள் கோபத்துடன் பால்கனியில் போய் அமர்ந்துக்கொண்டாள்.. ப்ரியாவின் பின்னாடியே போன மோகனா,

“ப்ரி உள்ளே வா .. பாரு பனி கொட்டுது...இந்த காத்து

உனக்கு ஒத்துக்காது" என்றவளை முறைத்து முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"நான் கேட்டதுக்கு முதல்ல பதில் சொல்லு" ..

"சரி சொல்றேன்.... நீ முதல்ல உள்ள வா." என்றாள்..

இது இவர்களுக்காகத் தயாரான மேகாவின் அறை.. சாயங்காலமே சந்துரு பிரியாவை சமாதானபடுத்தி, இவர்களை இங்கு அழைத்து வந்து விட்டான்....அந்நேரம், மேகாவும் செல்வியும் வீட்டில் இருந்தனர்.. செல்வி ரொம்ப அமைதி, மேகா குறும்பானவள்.....

தங்களைப் போல் உள்ள இருவரையும் கண்டதும்.....செல்வியும், மேகாவும் இவர்களிடம் நன்கு ஒட்டிக்கொண்டனர்....

மோகனாவின் சொல்லுக்குக் கட்டுபட்டு உள்ளே வந்த பிரியா .....அவளே பேசட்டும் என்று மோகனாவின் முகம் பார்த்து அமர்ந்திருக்க.....

சிறிது நேரம் அமைதியாக இருந்த மோகனா, ஒரு முடிவுடன் ஜன்னலின் அருகில் போய் நின்று தன் மனதை மெல்ல திறந்தாள்"

"நா.... நான் வாக்குக் கொடுத்துருக்கேன் ப்ரி , அதான் சந்துருவோட பார்வை புரிந்தும் நான் அமைதியா இருக்கேன்.."

“மோஹி என்ன உளர்ற……. என்ன வாக்கு? , யாருக்கு கொடுத்தே”

“நான் ஒன்னும் உளரல, உண்மையைத்தான் சொல்லறேன், என் அப்பாவோட அம்மா, அதாவது என் பாட்டிகிட்ட……என் மாமா பையனைதான்… நான் கல்யாணம் பண்ணிப்பேன்னு” என்று இழுத்தவளை..

“என்ன மாமா பையன்னா? எனக்குத் தெரியாம எங்க இருந்துடி வந்தான் மாமா பையன்” என்று யோசித்தவள்…

“ஒரு மண்ணும் புரியலை, ஒழுங்கா இப்போ சொல்ல போறியா இல்லியா”.. ……அவ்வளவு கோபம் ப்ரியாவின் குரலில்….

பின்ன ரெண்டு வருஷமா ஒருத்தன் இவளை லவ் பண்ணுவானாம்….. இவ என்னன்னா , பாட்டிக்கு வாக்குக் குடுத்துருக்கேன், ஆட்டுக்குட்டிக்கு வாக்கு குடுத்துருக்கேன்னு சொல்றா!!

“ப்ளீஸ் கோபப்படாதே ப்ரி நான் சொல்றத முழுசா கேளு அப்புறமா நீயே சொல்லு..”

“ம்ம் சரி சொல்லு”.. என்று சாதாரணமாகச் சொன்னாலும் அதில் அடக்கப்பட்ட கோபம் இருந்தது…. மோகனாவின் பாட்டி மேல்…கிழவிஈஈஈஈஈஈ(அவர் இப்போ உயிரோடு

இல்லை என்பது வேறு விஷயம்)

“எங்க அப்பாவுக்கு, இங்க பக்கத்துல தான் ராமசாமிபுரம் என்ற ஊரு…. அதுவும் ஒரு கிராமம்தான்…… எங்க அப்பாவுக்குக் கூடப் பொறந்தவங்க யாரும் கிடையாது.. ப்ரி…

எங்க அப்பா தூத்துக்குடில ஒரு பெரிய நகைக்கடைல வேலை பார்த்தார், அந்தக் கடையோட முதலாளி தான் எங்க அம்மாவோட அப்பாவாம் ரொம்ப நல்லவராம்……. எங்க அப்பாவோட நேர்மையிலும், ஒழுக்கத்தையும் பார்த்து எங்க அப்பாவை கூப்பிட்டு தன் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கக் கேட்டாராம்.. ஆனா எங்க அப்பா முடியாதுன்னு சொல்லிட்டாங்களாம்……

ஏன்னா? எங்க அப்பாவை வீட்டோட மாப்பிள்ளையா இருக்கக் கேட்டுருக்காங்க…… எங்க அப்பா முடியாதுன்னு சொன்னதும் அவரை விட மனசில்ல எங்க தாத்தாக்கு, இவ்ளோ பெரிய பணக்கார வாழ்க்கை வீடு தேடி வந்தும், அப்பா வேணாம்ன்னு சொன்னது அவரோட மனசுல இன்னும் உயர்ந்த இடத்துக்குப் போய்ட்டாங்க அப்பா…

அடுத்து என்ன பன்னலாம்ன்னு யோசிச்சு, உடனே எங்க அப்பாவோட அம்மா அப்பாகிட்ட பேசியிருக்கார்

தாத்தா ..... அவங்களும், நாம தான் கஷ்டப்படுறோம்.....
நம்ம பையனுக்கு வர்ற நல்ல வாழ்க்கையைத்
தடுக்கக் கூடாதுன்னு .. அப்பாகிட்ட பேசி பேசியே
சம்மதிக்க வச்சாங்களாம்.....

ஆனா அப்பா, ஒரு கண்டிஷன் போட்டாங்களாம்.....
நான் வீட்டோட மாப்பிள்ளையா இருக்கச்
சம்மதிக்கிறேன்.... ஆனா இவ்ளோ நாள் நான் என்ன
வேலை பார்த்தேனோ... அதத்தான் நான் இனிமேலும்
பார்ப்பேன் அப்படின்னு.....அதுக்குச் சரின்னு
சொல்லிட்டாங்களாம் எங்க அம்மாவோட அப்பா.....

ஆனா இந்த விஷயத்தை எல்லாம் அவர், அவங்க
பசங்க கிட்ட சொல்லவே இல்ல.....எல்லாம் முடிவு
பண்ணினதுக்கு அப்புறம் தான் வீட்ல சொல்லி
இருக்கார்.....

எங்க அம்மாகிட்ட அப்பாவோட போட்டோ காட்டி,
மத்த விவரமெல்லாம் சொல்லி பிடிச்சிருக்கான்னு
கேட்டதுக்கு, எங்கம்மா உடனே ஓகே
சொல்லிட்டாங்களாம் .. ஏன்னா கல்யாணம்
பண்ணினாலும் அம்மாக்கு வீட்லதான் இருக்கப்
போறோம் என்கிற சந்தோசம்.

ஆனா இந்தச் சம்பந்தம் அம்மாவோட
அண்ணண்களுக்குப் பிடிக்கல..... தங்களோட

தங்கைக்குப் பெரிய இடத்துல மாப்பிள்ளை பார்க்கணும்னு நினைச்சாங்களாம்..... இந்த ஏற்பாடு தன் அப்பாவுடையதுன்னு தெரியாம , அவங்க எங்க அப்பாதான் எல்லாத்துக்கும் காரணம்னு கோபமா இருந்துருக்காங்க..... ஆனாலும் அவங்களால அப்பாவை எதிர்த்து ஒன்னும் செய்ய முடியல...

எங்க அப்பாக்கும் அம்மாக்கும் நல்லபடியா கல்யாணம் முடிஞ்சி சந்தோசமா வாழ்ந்துருக்காங்க . அவங்க சந்தோஷதுக்கு அடையாளமா எங்க கௌதம் அண்ணா பிறந்தான்.....

அதுவரைக்கும் எந்தப் பிரச்சனையும் இல்லையாம்.. பிரச்சனை இல்லைன்னு சொல்றத விட என்னோட அப்பா முடிஞ்ச அளவுக்குப் பிரச்சனைவராம பாத்துக்கிட்டாரு. ஆனா, அதற்கான சந்தர்ப்பத்திற்காகக் காத்துகிட்டு இருந்திருக்காங்க எங்க அம்மாவோட அண்ணனுங்க ..... என் அண்ணண் பிறந்து நாலு வருஷத்தில என் அம்மாவோட அப்பா உடல்நலம் சரியில்லாம இறந்துட்டாங்களாம்.....

யாரும் தட்டி கேட்க ஆளில்லாததால, எங்க மாமாங்க ரெண்டு பேரும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், அப்பாவை குத்தி பேச ஆரம்பிச்சிருக்காங்க .. ஆனா அப்பா இதெல்லாம் அம்மா கிட்ட சொன்னதில்ல....ஏன்னா அம்மாவுக்கு அவங்க அண்ணன்கள் மேல ரொம்பப் பாசம்..... அம்மா கிட்ட

சொன்னா, எங்க தன்னை நம்பாமல், தப்பா நினைச்சிகிட்டு அவரை வெறுத்துருவாங்களோன்னு அப்பாக்குப் பயம்.

ஒருநாள் அம்மா, எங்க பெரிய மாமா பையனுக்கும் எங்க அண்ணனுக்கும் பாடம் சொல்லி கொடுத்துட்டு இருந்தப்போ, அப்பா சாப்பிட வந்திருக்காங்க .. அப்போ ரெண்டு மாமாவும் வீட்லதான் இருந்தாங்களாம்.....

அப்பா சாப்பாட்டுல கைவைக்கவும் ரொம்பக் கேவலமா பேசியிருக்காங்க.. அப்போ அந்தப் பக்கமா வந்த எங்க அம்மா அத கேட்டு அதிர்ச்சியாகி, மாமாவை எதிர்த்துச் சத்தம் போட்டுருக்காங்க..... எங்க பாட்டியும், அம்மாவுக்குச் சாதகமா பேச...அதில் இன்னும் கோபமா பேசி நிலைமை ரொம்ப மோசமாயிடுச்சாம்....

எங்க அம்மா "இதுக்கு மேல நாங்க இங்க இருக்க மாட்டோம்.... நாங்க எங்க ஊருக்கு போறோம்ன்னு சொல்லி கிளம்பிட்டங்களாம்"

அப்போ மாமாங்க .. "நீ எங்கள எதிர்த்துகிட்டு இவன்கூடப் போறேல்ல ரொம்பக் கஷ்டப்படுவன்னு" சொன்னாங்களாம்.. அதுக்கு அம்மா "அப்படி நாங்க கஷ்டப்பட்டாலும் உங்க கிட்ட வந்து

கையேந்த மாட்டோம்.... உங்க முகத்துலேயே முழிக்க மாட்டோம்ன்னு சொல்லிட்டு அப்பா ஊருக்கே வந்துட்டாங்களாம்.....

ஆனா என் ரெண்டு மாமாவும், எங்க அப்பாவை அவர் ஊரில் வாழ விடாம சதி பண்ண... எங்க அப்பா பொறுத்து பொறுத்து பார்த்துட்டுப் பின் ஒரு தீர்மானத்துடன், ஊரில் உள்ள் அவருக்குச் சொந்தமான வீடு மற்றும் நிலங்களை விற்று.....ஏதோ ஒரு நம்பிக்கையில எல்லாரையும் கூட்டிகிட்டு மும்பை போய்ட்டாராம்.....

மும்பைல, அப்பா படிச்ச படிப்புக்கு வேலை கிடைக்கல, மொழியும் தெரியாது...இங்க வந்து ரொம்பக் கஷ்டபட்டாங்களாம்.....ஆனாலும் தன் கஷ்டத்தை யார்கிட்டயும் சொல்லாம.....ஏன் எங்க அம்மா கிட்ட கூடச் சொல்லாம.....சொன்னா வருத்தபடுவாங்கன்னு நினைச்சி தனக்குள்ளே போட்டு புதைச்சிகிட்டார் எங்க அப்பா....அப்பறம் நான் எங்க அம்மா வயித்துல உருவாக...அம்மா கஷ்டபடுறதை தாங்க முடியாமல்...பின்பு ஒரு முடிவுடன் கையில் மீதமுள்ள காசையெல்லாம் போட்டு.. ஒரு கார் காரேஜ் ஆரம்பிச்சு....ரொம்பக் கஷ்டபட்டு முன்னேறி..... இப்போ எட்டு இடத்துல அப்பா சொந்தமா காரேஜ் வச்சிருக்காங்க..... அதோட ஹெட் ஆ:பீஸ் பாந்த்ரா ல இருக்குறது உனக்குதான் தெரியுமே.....

நான் பிறந்தவுடன்தான் நல்ல காலம் ஆரப்பித்ததுன்னு....எங்க அப்பா அடிக்கடி சொல்லுவார்...என்றவளின் முகத்தில் தன் அப்பா முன்னேறிய விதத்தை நினைத்துப் பெருமையாக இருந்தது .....

கல்விதான் நிரந்தரச் சொத்து என்று சொல்லி, எங்க அண்ணாவையும் நல்லா படிக்கவெச்சி.....ஏன் என்னையும் என் தம்பியையும் நாங்கள் விரும்பிய படிப்பை தந்து இன்னைக்கும் எங்களுக்குப் பக்கபலமா இருக்கிறார்...

இவ்வளவும் எங்க பாட்டி என்கிட்டே சொல்லிட்டு .. "உங்க அப்பாவை மதிக்காம , அவமதிச்சி வெளிய அனுப்பின வீட்டுக்கு, நீ மருமகளா போகணும்..... உன் மாமாக்கு ஒரு பைய்யன் இருக்கான் அவனை நீ கல்யாணம் பண்ணிக்கனும்..... உங்க அப்பாவை மதிக்காத வீட்ல, நீ ராணி மாதிரி வாழனும்" அப்படின்னு என்கிட்ட சத்தியமும் வாங்கிட்டாங்க..

"இப்போ சொல்லு ப்ரி நான் என்ன பண்ணட்டும்?" என்று தவிப்புடன் கேட்க...

"ஏன்டி, எல்லாரும் தன் மகனை அவமானபடுத்தன

வீட்ல தன் பேத்தி மருமகளா போகக்கூடாதுன்னு நினைப்பாங்க....உங்க பாட்டி என்னன்னா இப்படி டிப்ரென்டா யோசிச்சி சத்தியம் கேட்டுருக்கு...நீயும் எதையும் யோசிக்காம லூசுதனமா சத்தியம் பண்ணி கொடுத்துருக்க"..

"அப்போ நீ உன் அப்பா ஊருக்கு போய் விசாரிச்சி ..உன் மாமா குடும்பம் எங்க இருக்குன்னு தெரிஞ்சிக்கிட்டு .. உன் பாட்டிக்கு செய்த சத்தியத்தை நிறைவேத்த போற அப்படித்தானே.."

"வேற என்னடி பண்ண சொல்ற"

"சரி, அப்போ சந்துருவுக்கு என்ன பதில் சொல்ல போற?"

மோகனா அமைதியாக இருக்கவும்.....

அவளின் தோளை பிடித்துத் தன் பக்கம் திரும்பியவள் , "அமைதியா இருக்காதே.... ஒழுங்கா எனக்குப் பதில் சொல்லு....இங்க ஒருத்தனை ரெண்டு வருஷமா சுத்த விட்டு பைத்தியமாக்கிட்டு ..நீ உன் மாமா பையனை தேடி போய், கல்யாணம் பண்ணிக்கப் போறே அப்படித் தானே.. என்று கோபமாகத் திட்டியவள்.. திடீரென்று "சரி இந்த விஷயம் உன்னோட அம்மா அப்பாக்கு

தெரியுமா”

தெரியாது என்பது போல் கண்ணீருடன் தலையை இடம் வலமாக ஆட்ட..

அதில் இன்னும் கோபமடைந்தவள், தன் தோழியின் கண்ணீரை காண சகியாது.....சற்று தனிந்து இதற்குத் தீர்வு என்ன என்று யோசிக்க ஆரம்பித்தாள்...

திடீர்ரென்று முகம் மலர “மோஹி, உங்க அண்ணனைவிட உன் மாமா பையனுக்கு வயசு கூடத் தானே” என்க

அவள் சொல்ல வருவது புரியாவிட்டாலும், “ஆமா ரெண்டு வயசு கூட..... அண்ணாவ விட” ...

“ம்ம்....அப்ப பிராபளம் சால்வ்டு ..... உங்க அண்ணனுக்கே கல்யாணம் ஆயிடுச்சி.. உங்க மாமா பையன் மட்டும் இன்னும் கல்யாணம் பன்னாம உனக்காகக் காத்துகிட்டு இருப்பானோ” என்று நக்கலாகக் கேட்டாள்....

அவள் கேள்வியில் சட்டென்று மனம் தெளிவாகிவிட “ஹே ப்ரி அப்ப அவனுக்குக் கல்யாணம் ஆகி

இருக்குமா” என்றாள் ஆசையும் எதிர்பார்ப்புமாக..

“கண்டிப்பா மோஹி.. கல்யாணம் ஆகி இருக்கும்….ஏன் குழந்தையும் கூட இருக்கலாம்” ஏன் அப்படிச் சொல்லேறேன்னா , உங்க பாட்டி தானே உங்கிட்ட சத்தியம் வாங்கிருக்காங்க, உன் மாமா பைய்யனுக்குச் சத்தியம் அது இதுன்னு ஏதும் இருக்காதுள்ள அதான் கண்டிப்பா கல்யாணம் ஆகிருக்கும் என்றேன் என்று ப்ரியா சொல்ல…..

“ஆனா” என்று மோகனா இழுக்கவும்..

“என்ன ஆனா ஆவண்ணான்னு இழுக்குற….. உன்கிட்ட சத்தியம் வாங்கிட்டு.. அந்தக் கிழவி மட்டும் மேல போய்த் தாத்தா கூடச் சந்தோசமா டூயட் பாடிட்டு இருக்கும்….. ஆனா நீ இங்க ஒருத்தனை மனசில நினைச்சிக்கிட்டு.. அவன்கிட்ட காதலை சொல்ல முடியுமா , வாக்கு , சத்தியம் அப்படின்னு பினாத்திகிட்டு திரியுற…..எனக்கு வர கோபத்துக்கு…… அந்தக் கிழவி மட்டும் என்கிட்டே மாட்டிருக்கணும்,. நல்லவேளை தப்பிச்சிகிச்சி…..என்றவள் பின் பொறுமையாக,

“மோஹி சந்துருவ கொஞ்சம் நினைச்சி பாரு, அவன் உன்ன ரொம்ப விரும்புறான்.. உனக்காக, உன் மனசு

மாறனும், நீயா அவனைப் புரிஞ்சிக்கணும்னு காத்திருக்கிறான்..... போதும் மோஹி அவன் கிட்ட உன் காதலை சொல்லிடு.. நீ அவனை விரும்புறேன்னு அவனுக்குத் தெரியும்.....ஆனா அத உன் வாயால் கேட்டா ரொம்பச் சந்தோஷப்படுவான் மோஹி" என்று தன் நன்பனுக்காக வாதாடியவள்.....மோகனாவின் முகம் மறுபடியும் வாடியதை கண்டு,

"சரி இப்போ உனக்கு என்ன பிரச்சனை.. உன்னோட மாமா பையனுக்குக் கல்யாணம் ஆயிடுச்சா இல்லையான்னு தெரிஞ்சிக்கணும் அவ்வளவு தானே.... அத நான் பாத்துக்குறேன் போதுமா.." என்க

"அது மட்டும் இல்ல ப்ரி"..

"அடராமா.....இன்னும் என்ன..? என்று சலிக்க..

"எங்க அம்மாவை அவங்க குடும்பத்தோட சேர்த்து வைக்கணும்..... எங்க அப்பாவுக்காக அவங்க குடும்பத்தை வேணாம்னு சொன்னாலும் அவங்க கண்ணுல எப்பவும் ஒரு ஏக்கம் இருந்துகிட்டே இருக்கும் பிரி "

"சரி நீ மனச போட்டு குளப்பிக்காம இரு, நான் பாத்துகிறேன்"...

“நீ எப்படிக் கண்டு பிடிப்பே? சந்துருகிட்ட சொல்லப்போறியா, ப்ளீஸ் சொல்லாதே” என்று கெஞ்சினாள் மோகனா….

“லுசா நீ… அவன்கிட்ட சொன்னா இந்த விஷயத்த கேட்டு ரொம்ப மனசு உடைஞ்சு போய்யிடுவான்.. நாம விரும்புற பொண்ணு மனசுல இப்படி ஒரு சத்திய சோதனையான்னு”… நீ என்கிட்ட சொல்லிட்டேல்ல….. நான் பாத்துக்கறேன்……
சோ, நீ என்ன பன்ற…… நாளைக்கே சந்துரு கிட்ட உன் காதலை சொல்ற வழியைப் பாரு….

“என்னது நாளைக்கேவா.. இல்ல ப்ரி மொதல்ல என் மாமா குடும்பத்தைக் கண்டு பிடிப்போம், அப்புறம் இத பற்றி யோசிக்கிறேன் .. என்றவளை பார்த்த பிரியா..

“இங்க பாரு இந்த யோசிக்கிற வேலை எல்லாம் வேணாம், நீ என்னத்த யோசிச்சாலும், சந்துருக்கு நீதான், உங்க மாமா பையன்னு சொல்லிக்கிட்டு எந்தக் கொம்பனும் வர நான் விட மாட்டேன் சொல்லிட்டேன்… என்று வீர வசனம் பேசியவள்,

“சரி நீ தூங்கு.. நான் கொஞ்சம் நேரம் வெளிய நடந்துட்டு வரேன்…. எனக்குக் கொஞ்சம் யோசிக்கனும்”என்று விட்டு வெளியே தோட்டத்தின்

பக்கம் சென்றாள்...

மோகனாவோ தன் தோழியிடம் .. மனதில் உள்ளதை சொன்னதாலோ என்னவோ..... நிம்மதியுடன் கண்ணுறங்கினாள்...

சுவாசம் தொடரும்.....

சுவாசம் 8

“ஓயாமல் பேசும் என் உதடுகள்
பேசும் மொழியை மறந்தது
என்னவனின் ஒற்றை பார்வையால்!
ஓயாமல் இமைக்கும் என் இமைகள்
இமைக்க மறந்தது
என்னவனின் நெருக்கத்தால்!!!!

சபரிஷ் தனது அறையில் அதன் நீள அகலத்தை அளந்து கொண்டிருந்தான்... அவன் நினைப்போ காலையும், மதியமும் நடந்த சம்பவத்தையே அசை போட்டு கொண்டிருந்தது.....

துணிகடையில் பிரியா பேசிய வாய்துடுக்கான பேச்சும், பின் தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்ட விதமும் நினைத்தவனின் உதடுகள் புன்னகையில் மலர்ந்தது.....

தன் தந்தையிடம் ஒரு வேலை விஷயமாக பேச வேண்டி இருந்ததால், அவருக்கு போன் செய்ய, அவரோ தான் வீட்டின் அருகில் இருப்பதாகவும், அவனையும் வீட்டுக்கு வந்துவிடுமாரு சொல்ல, வேறுவழியில்லாமல் மதிய இடைவேளையில் வீட்டுக்கு வர நேர்க....

அங்கு பிரியா சந்துருவை அடித்துக் கொண்டிருப்பதையும், சுற்றியிருப்பவர்கள் அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதையும் கண்டவன்..... மறைந்த கோபம் மீண்டும் வந்து விட அவளிடத்தில் சற்று கடுமையாக பேசவும்.... அவள் அதிர்ந்து நின்றதை கண்டும் காணாமல் வந்துவிட்டான்...

அவளின் அதிர்ந்த முகத்தை நினைத்து பார்த்தவன் "நான் திட்டினதும் எப்படி முகம் வாடி போச்சு.... ச்சே அவதான் சின்ன பொண்ணு விளையாடுத்தனமா நடந்துகிட்டா , நீயாவது கொஞ்சம் யோசிச்சி பேசியிருக்கணும் சபரிஷ்" என்று தனக்குத்தானே

பேசியவன்,
தூக்கம் வராததால் எழுந்து ஜன்னல் அருகில் வந்து வெளியே வேடிக்கை பார்க்க, அங்கு தோட்டத்தில் பிரியா சோகத்துடனும் யோசனையுடனும் அமர்ந்திருக்கும் காட்சியில் அவனது முகம் மிருதுவானது..... பிறகு என்ன நினைத்தானோ அறையை விட்டு வெளியே வந்து தோட்டத்தை நோக்கி சென்றான்....

மோகனாவிடம் பேசிவிட்டு வெளியே தோட்டத்திற்க்கு வந்த பிரியா.. அங்கு ரோஜா பூக்களின் நடுவே அமைக்கப்பட்டிருந்த கல் மேடையில் அமர்ந்தாள்.. அந்த இரவிலும், அலங்கார விளக்குக்களால் தேவலோகம் போல காட்சி தந்த இடத்தை ரசிக்க முடியாமல் அவள் மனம் மிகவும் குழப்பத்திலும், சிந்தனையிலும் ஆழ்ந்திருந்தது.....

மோகனா சொன்ன விஷயத்தை எங்கிருந்து எப்படி ஆரம்பிப்பது, யாரிடம் உதவி கேட்பது என்று யோசித்து கொண்டிருக்க....

அப்பொழுது அவள் கையில் உள்ள மொபைல் ஒலித்தது...

அழைத்தது யார் என்று பார்க்க அதில் கார்த்திக்

என்று வர, உடனே அதை உயிர்பித்தவள், அப்பா என்று பேச ஆரம்பிக்க,

“ப்ரியா நான் அம்மா பேசுறேன் டா…….எப்படி இருக்கே? உனக்கு அந்த ஊரு பிடிச்சிருக்கா…… மோகனா, சந்துரு எப்படி இருக்காங்க? என்று கேட்டுக்கொண்டே போனவர் ,
“பிரியா யாருகிட்டையும் வம்பிழுக்க கூடாது….. அமைதியா இருக்கனும்…. நல்ல பிள்ளைன்னு பேர் எடுக்கனும் சரியா” என்று மும்பையில் விட்ட அட்வைஸை மறுபடியும் ஆரம்பிக்கவும்… கடுப்பானாள் ப்ரியா..

“ஒருத்தன் என்னன்னா மரியாதைன்னா என்னன்னு தெரியதான்னு சொல்லிட்டு போறான் …. இப்போ அம்மா என்னடான்னா நல்ல பிள்ளைன்னு பேர் எடுக்கணுமாம்.. என்ன நினைச்சுகிட்டு இருக்காங்க எல்லோரும்….. ஏதோ கொஞ்சமே கொஞ்சம் பேசிட்டேன் அதுக்குன்னு இப்படியா”.. என நினைக்க, அவளது மனசாட்சியோ “என்னதுஊஊ கொஞ்சமே கொஞ்சமா” என்று முறைக்க.. அதை கண்டுகொள்ளாமல்..

“அம்மா மறுபடியும் முதல்ல இருந்தா …முடியல…போதும் உங்க அட்வைஸ். நான் நல்லா

இருக்கேன்... நீங்க எப்படி இருக்கீங்க? நீங்க மொதல்ல அப்பா கிட்ட போன் கொடுங்க நான் அவர்கிட்ட பேசனும்”

அவர் அதை கவனிக்காமல் “என்னாச்சு பிரியா உடம்பு ஏதும் சரி இல்லையாடா” என்று பதட்டத்துடன் கேட்டார்...

ஏனென்றால் ஏதாவது முக்கியமான விஷயம், அல்லது மனதுக்கு கஷ்டமா இருந்தால் மட்டுமே அவள் தன் தந்தையை நாடுவாள்..... அதுதான் அவர் பதட்டத்துக்கு காரணம்..

தாயின் குரலில் உள்ள பதட்டத்தை உணர்ந்தவள், “அச்சோ ப்ரி நீ ஒரு லூசுன்னு , அடிக்கடி நிரூபிக்கிற” என்று தன்னை தானே திட்டியவள், தன் தாயிடம்“அதெல்லாம் ஒன்னும் இல்லை காயு . நான் நல்லா இருக்கேன் , இந்த ஊரு ரொம்ப பிடிச்சிருக்கு.. அதுமில்லாம இங்க எனக்கு பிடிச்ச ரோஜா தோட்டம் இருந்ததா அதை ரசிச்சிகிட்டு இருக்கும் போது உங்க போன் வந்து டிஸ்டபென்ஸ் பண்ணிடுச்சு..... அதுதான் அப்படி பேசிட்டேன் .. போதுமா” என்று அவள் சொன்னாலும்..

தாய்க்கு தெரியாதா மகளின் குரலில் உள்ள

வித்தியாசம்.. ஆனாலும் அதை பற்றி கேட்காமல் “சரிமா இதோ அப்பாகிட்ட கொடுக்கிறேன்” என்றவர்

“என்னன்னு தெரியலைங்க, ப்ரியாவோட குரலே சரி இல்ல.. நான் கேட்டா சொல்ல மாட்டா..... நீங்களே கேளுங்க” என்றவர் , தன் கணவரிடம் போனை கொடுக்க, அதை வாங்கியவர்,

“கண்ணம்மா எப்படிடா இருக்க?” என்று தன் தந்தையின் பாச அழைப்பில் தன் மனசுனக்கத்தை எல்லாம் மறந்தவள்...

“மிஸ்டர் கார்த்திக் நீங்க எப்படி இருக்கீங்க , நான் அங்க இல்லைன்னதும் ரொம்ப ஹேப்பியா இருக்கீங்க போல” என்று தந்தையை வார...

“நான் மட்டும் இல்லைடா.. இந்த மும்பையே இப்போதான் ஹேப்பியா இருக்குன்னு... இப்பதான் நியூஸ்ல சொன்னாங்க” என்று கூறி தான் அவளின் தந்தை என்பதை நிருபித்தார்.

“ஐய்யோ போ கார்த்திக் நீ மொதல்ல போன வை..... உனக்கு இருக்கிற குசும்பு இருக்கே.. உன்னை நான் வந்து கவனிச்சிக்கிறேன்”.. என்று செல்லமாக

மிரட்டவும்…

அதில் சிரித்தவர் “சரிடா கண்ணம்மா சாப்ட்டியா .. காலையில் ப்ரின்ஸி போன் வந்ததுடா.. நானும் பேசிட்டேன்…. சந்துரு இருக்கான்ல.. சோ எந்த டென்ஷனும் வேண்டாம்…. ஓகே வா நல்லா என்ஜாய் பண்ணு. .. அப்பப்ப நானும் போன் பண்றேன் என்றவர் சிறிது இடைவெளி விட்டு “எந்த விஷயமா இருந்தாலும் அப்பா கிட்ட ஷேர் பண்ணுடா…. நான் இருக்கேன் உனக்கு” என்றார்…

தந்தையின் பாசத்தில் மனம் நெகிழ்ந்தவள் “அதெல்லாம் ஒன்னும் இல்லப்பா, புது இடம் இல்லையா, அதான் தூக்கம் வரல.. தோட்டத்துல இருக்கேன்”.. என்று சொல்லவும்..

“சரிடா , ரொம்பநேரம் பனியில இருக்காதே… போய் நேரத்துக்கு தூங்கு” என்றவர் போனை வைத்துவிட,

“எப்படி காயூ என் குரலை வச்சே நான் டல் ஆ இருக்கேன்னு கண்டுபிடிச்ச…. சோ ஸ்வீட் காயூ”.. என்று தன் தாயை நினைத்து லேசாக சிரித்தவள்… அவர்களின் நினைவில் அமைதியாக அமர்ந்திருந்தாள்

சிறிது நேரம் கழித்து, பக்கத்தில் யாரோ அமர்வது போல் இருக்க.. யார் என்று திரும்பி பார்த்தவள்... அது சபரிஷ் என்றதும்.. மூக்கு விடைக்க கோபமாக எழுந்து.. கொஞ்சம் தள்ளி அடுத்த இருக்கையில் போய் அமர்ந்து கொண்டாள்..

பிங்க் கலர் பேன்ட், அதே நிறத்தில சட்டை போட்டு என, இரவு உடையில், குமரியாக தெரிந்தாலும்... அவளது சிறுப்பிள்ளைத்தனமான செயலை நினைத்து மனதுக்குள் சிரித்தவன்..
அவளை பார்த்துக்கொண்டே எழுந்து , அவள் அருகில் போய் நின்று கையை குறுக்காக கட்டிக்கொண்டு..
“காலையில் கடையில் வந்து பட பட பட்டசா பேசுன பிரியாவா இப்படி அமைதியாக இருக்கிறது”..... எதற்கு என்று தெரிந்தாலும்.. அவளை சீண்டினான்..

“நான் ஒன்னும் அமைதியா இல்ல, கோபமா இருக்கேன்”

“கோபமா .. யார்மேல கோபம், யாராவது உன்னை ஏதும் சொல்லிட்டாங்களா” என்று தெரிந்தே கேட்டான்..

அவனை முறைத்தவள் “நான்தான் உங்க கிட்ட மன்னிப்பு கேட்டுட்டேன் இல்ல, அப்புறம் ஏன் வீட்டுக்கு வந்து திட்டுனீங்க, என்னை திட்டுறதுக்காகவே மெனக்கெட்டு எங்க பின்னாடியே

வந்தீங்களா” என்று அவனை முறைத்தவாறே கேட்டாள்..

அவளின் கள்ளகபடமற்ற பேச்சை ரசித்தான் சபரிஷ், அவன் ஒன்றும் பெண்களை பற்றி அறியாதவன் இல்லை.. படிக்கும் காலத்தில் தன் வசதி வாய்ப்பை பார்த்து தன் மேல் விழுந்த பெண்களிடத்திலும் சரி.. இப்போது அவன் கடையில் தன்னிடத்தில் வேலை பார்க்கும் பெண்களிடத்திலும் சரி, அவர்களை எல்லாம் ஒரே பார்வையில் தள்ளிநிறுத்தி விடுவான்..

ஆனால் பிரியா, அவன் கண்களுக்கு வித்தியாசமாக தெரிந்தாள்.. தான் சந்துருவின் அண்ணன் , அதுவும் இல்லாமல் தன் பணத்தையோ உயரத்தையோ சட்டப் பண்ணாமல். போலி மரியாதையும் அவள் அவனிடம் காட்டாமல் தன் இயல்பு போல் பேசியதும், பின் பேசியது தப்பு என்றதும் வந்து மன்னிப்பு கேட்டது.. அவளது வெகுளி தனத்தை காட்டியது..

“நான் என்ன திட்டினேன் நீயே சொல்லேன்” என்றான் அவளிடம் இன்னும் பேச்சு கொடுக்கும் ஆவலில்….. அவனை நினைத்து அவனுக்கே வியப்பாக இருந்தது…

“சந்துரு என் பிரெண்ட், அவன்கிட்ட அப்படிதான் அடிச்சி நான் விளையாடுவேன், உங்களுக்கு என்ன

வந்தது” என்று கேட்டாள் ப்ரியா..

ப்ரியாவின் அருகில் வந்தவன் அழுத்தமான பார்வையை அவள் மீது வீசி விட்டு “பிரியா இது உங்க மும்பை இல்ல, கிராமம்.. இங்க ஒன்று என்றால் நான்கு விதமா பேசுவாங்க.. மதியம் தோட்டத்தில் எவ்வளவு பேர் வேலை பார்த்துட்டு இருந்தாங்க,இந்த விஷயத்த அப்படியே வெளிய கொண்டு போய் காது கண்ணு மூக்கு வைச்சு பேச ஆரம்பிச்சிடுவாங்க.. அதுக்குதான் நான் கொஞ்சம் சத்தம் போட்டேன் .. தப்பா” என்று கேட்டான் அந்த தொழில் அதிபன்.. தப்பு என்றால் தப்பு, சரி என்றால் சரி.. இப்படித்தான் இருக்கும் அவனது பேச்சு ..

அதற்கு அவளிடம் பதில் இல்லாமல் போகவும், “சரி தூங்காம இங்க உக்கார்ந்து என்ன யோசிச்சிட்டு இருக்கே”...என்றான்..

“ஒன்னும் இல்ல, தூக்கம் வரல... அதான் கொஞ்சம் வெளியே வந்தேன்” ஆனால் உண்மையில் அவள் மனதில் ஒரு விஷயம் உறுத்தி கொண்டிருந்தது...

அவள் முகம் யோசனையில் சுருங்கி இருப்பதை கவனித்தவன்.. “என்ன யோசனை... உன்னோட இந்த சின்ன மண்டைக்குள்ள ஓடிட்டு இருக்கு, சொன்னா

ஏதாவது உதவி பண்ணலாமே என்றுதான் கேட்டேன்..” என்றவனை பார்த்தவள்..

‘இவனிடம் சொல்லலாமா வேண்டாமா? சந்துருவும், மோகனாவும் இன்னும் ஒருத்தருக்கு ஒருத்தர் லவ் சொல்லவே இல்ல , அதுக்குள்ள நான் இவன் கிட்ட சொல்ல போய், இவன் சந்துருவையும் மோகனாவையும் பிரிச்சிட்டான்னா,’ என்று நினைத்தவள் சபரிஷை பார்க்க.... இப்பொழுது ப்ரியாவின் கண்களுக்கு அவன் ஒரு வில்லனாக தெரிந்தான்....

அவளது மனசாட்சியோ... “ப்ரி என்னை தொட்டு சொல்லு சபரிஷ் வில்லனா?”

காலையில் ஓட்ட பயிற்சி உடையிலும், அப்புறம் வேட்டி சட்டையிலும். இப்போ இரவு உடையான பைஜாமா ஜிப்பாவிலும் கொஞ்சம் கூட அவன் கம்பிரம் குறையாமல் இருந்தவனை, ரசித்தவள், “ச்ச ச்ச இவன் வில்லன் இல்லை” ஆனாலும், நான் மோகனா சொன்னதை இவன்கிட்ட சொல்லி, உதவி கேட்க.. “எனக்கு வேற வேலையே இல்லையா? அப்படின்னு திட்டிட்டான்னா,

“அவனாதானே சொன்னான் உதவி பண்றேன்னு... சும்மா கேட்டு பாரு.... அப்படி அவன் திட்டுனா கூட வாங்கிக்கோ... இது என்ன உனக்கு புதுசா என்று கேலி

செய்துவிட்டு..
“இரு இரு மோகனாவுக்குன்னு சொன்னா அந்த சத்தியத்தை பத்தியும் சொல்லவேண்டி வரும்.. அதனால உனக்குன்னு கேளு”

“அடி போடி இவளே.. நான் கடைல செஞ்ச கலாட்டாவுல என் மேல கோபத்துல இருப்பான்”

“கோபத்தில் இருக்கிறவன்தான் இப்படி வந்து தன்மையா பேசிட்டு இருப்பானோ?”

“அப்படிங்கிற? “

“ அட ஆமாங்குறேன்” ..

சரியென்று ஒரு முடிவுடன் சபரிஷை பார்க்க...

அவன் இவளைத்தான், அவளின் முகத்தில் மாறி மாறி வந்த அபிநயங்களைத்தான் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்..

அவனை பார்த்தவளுக்கு சொல்ல வந்ததுகூட மறந்துவிட்டது.. “ஏன் இப்படி பார்க்கிறான், அவனது

பார்வை ஒரு புது விதமான உணர்வை தந்தது..
மனமெல்லாம் படபடவென்று அடித்து கொண்டது,
அது ஏன் என்றும் புரியவில்லை…
இங்கிருந்து போ என்று மனம் சொன்னாலும் ..
கால்கள் நகர மறுத்தது.. இவ்வளவு நேரம்
உணராதவள் இப்போது உணர்ந்தாள்.. தான் இரவு
உடையில் அவன் முன் இருக்கிறோம் என்று..
சட்டென்று எழுந்தவள் திரும்பி நின்று.. “நான் எத
பத்தியும் யோசிக்கல.. சும்மா தான் இங்க உக்கார்ந்து
இருந்தேன்” என்று ப்ரியா சொல்ல,

“அப்படியா” என்று சபரிஷின் குரல் தன் காதருகில்
கேட்டதும்… திடிகிட்டு திரும்பினாள்….. ஏன் என்றால்..
மிக மிக அருகில் நின்றிருந்தான் சபரிஷ்…..

நெஞ்சம் படபடக்க, கால்கள் நடுங்க அவனையே
இமைக்காமல் பார்த்தாள்…

அவளின் விழிகளை சந்தித்தவன், பின் என்ன
நினைத்தானோ…. “அப்போ போய் தூங்கு” என்றதுதான்
தாமதம் , விட்டால் போதும் என்று திரும்பியும்
பார்க்காமல் ஓடிவிட்டாள் அவள,…

அவள் வேகமாக ஓடுவதை பார்த்தவன் இதழில்
புன்னகை… அவனுக்கே அவனை நினைத்து வியப்பாக

இருந்தது… இன்றுதான் அறிமுகமாகிய மற்றும் தன்னை கோபப்படுத்தய ஒரு பெண்ணிடம்…. இப்படி பொறுமையாக பேசி கொண்டிருப்பது குறித்து அவனுக்கே ஆச்சர்யமாக இருந்தது… பின் மெல்லிய புன்னகையுடன் தன் வலது கையால் தன் சிகையை கோதியவன்.. தானும் வீட்டினுள் சென்றான்….

தன் அறைக்குள் வேகமாக வந்து கட்டிலில் படுத்து, போர்வையை எடுத்து போர்த்திக்கொண்டாள் பிரியா, பின் தலையை மட்டும் எட்டி மோகனாவை பார்க்க, அவள் நன்றாக உறங்கி கொண்டிருப்பதை கண்டு சிறுமூச்சை வெளியிட்டு மீண்டும் போர்வையை நன்றாக போர்த்திக்கொண்டாள்.. ஏனோ குளிர் ஜுரம் வருகிறமாதிரி இருந்தது அவளுக்கு…..

“பிரியா நீ இவ்ளோ பயந்தாங்கோலியா”என்று தனக்கு தானே கேட்டுக்கொண்டாள்..

“பின்ன இப்படி பக்கத்துல வந்து அந்த பார்வை பார்த்தா யாருக்குத்தான் பயம் வராது”

“ஏன் நீ சந்துருகூட பழகல.. அவன் பக்கத்துல உக்காரல.. அவன் உன்னை தொட்டு பேசும் போது எதுவும் தோணல”

“அவன் என் தோழன்.. தப்பான எண்ணத்துல ஒருநாளும் அவன் என்கிட்ட பழகல .. அதுக்கும் மேல அவன் மோகனாவை லவ் பண்றான்”

“அப்போ சபரிஷ் தப்பான எண்ணத்துல கிட்ட வந்தான்னு சொல்லுறியா”

“ச்ச ச்ச.. சபரிஷ் என் முகத்தை பார்த்து பேசினானே தவிர அவனோட பார்வை அதை தாண்டி வேறு எங்கும் போகல”

“அப்போ அதுக்கு என்ன அர்த்தம்.. அவன் பார்வைக்கான அர்த்தம் உனக்கு புரியலையா பிரியா”.. என்று மனம் கேக்க..

“அதெல்லாம் ஒன்னும் புரிய வேண்டாம்… ஆள விடு…. போடி,” என்றவள் அதற்கு மேல் சிந்தனை செய்யாமல் போர்வையை தலைவரை போர்த்திக்கொண்டு படுத்து விட்டாள்….

சிட்டு குருவியின் சத்தத்தில் கண்விழித்த பிரியா, தன் இரு கைகளையும் விரித்து சோம்பல் முறிக்க.. அவள் முதுகில் பட்டென்று ஒன்று வைத்தாள் மோகனா..

“ஏண்டி பிசாசே என்ன அடிச்சே”.. என்று மோகனாவை முறைக்க…

“மணி என்னன்னு பாரு.. நேத்து நீ எனக்கு பண்ண நினைச்சத பண்ணாம உன்ன எழுப்பிருக்கேனே அத நினைச்சி சந்தோஷப்படு.. போ போயி சீக்கிரம் குளிச்சிட்டு வா”… என்று அவளை விரட்டி விட்டு, தாங்கள் படுத்திருந்த படுக்கையை சரிசெய்ய ஆரம்பித்தாள்

அப்பொழுது தான் மணியை பார்த்த பிரியா.. “என்னது மணி எட்டா”.. என்று அவசரமாக குளியல் அறைக்குள் புக

அதை பார்த்து சிரித்துக்கொண்டே ப்ரியாவின் படுக்கையும் சரி செய்தவள்….. அவளுக்காக காத்திருக்க, ஆனால் அவள் மனமோ நேற்று சந்துருவிடம் போனில் பேசியதை நினைத்து பார்த்தது.

“ ச்ச நேத்து நான் சந்துரு கிட்ட போன்ல அப்படி முகத்தில் அடிப்பது போல் பேசிருக்க கூடாது…. அவங்க முகமே வாடி போயிருக்கும் , அதுக்கு கண்டிப்பா மன்னிப்பு கேக்கணும்”.. என்று நினைக்க

அவளது மனமோ.. “ஆமா நீ நேத்து மட்டும்தான் அப்படி பேசினியா, ரெண்டு வருசமாவே அப்படித்தானே இருக்கே, அதுக்கெல்லாம் சேர்த்து மன்னிப்பு கேட்கவேண்டாமா”

“கண்டிப்பா எல்லாத்துக்கும் சேர்த்து கேப்பேன்.. அப்புறம் அவங்க கிட்ட என்னோட” என்று ஏதோ நினைத்து முகம் சிவக்க அமர்ந்திருந்தாள் மோகனா,

தான் வந்ததை கூட கவனிக்காமல்.. வெட்கப்பட்டு சுடிதார் துப்பட்டா நுனியை திருகியபடி அமர்ந்திருந்தவளை நெருங்கிய பிரியா… “மோஹி சந்துரு வந்துருக்கான்” என்று கூற..

சட்டென்று எழுந்த மோகனா தன்னையும் அறியாமல் சுற்றும் முற்றும் தேட..

அவளின் தேடலை பார்த்த பிரியா சிறு சிரிப்புடன் பிரியா.. “யாரை தேடுற மோஹி” என்க

“ஆங், இல்ல… நீ ….சந்துரு …வந்து போய்” என்று உளறி கொட்டி கிளறி மூடியவளை பார்த்து அதற்கு மேல் அடக்கமாட்டாமல் சிரிக்க ஆரம்பித்து விட்டாள், ப்ரியா ஹா ஹா ஹா ஹே ஹே ஹி ஹி.. என்று

சிரித்தவளை கண்டு மோகனா மொத்த ஆரம்பித்து, பின் தன் கைகளால் முகத்தை மூடி கட்டிலில் குப்புற படுத்து தன் வெக்கத்தை மறைக்க, அவள் மேல் சரிந்த பிரியா..

“ஏண்டி இவ்வளவு லவ்வா அந்த பக்கி மேல ஹ்ம்ம்”

“சீ...போடி என்று அவளை தள்ளி விட்டு எழுந்தவள்..

“சீக்கிரம் வர சொன்னாங்கல்ல வா போகலாம்”

“ஓஓஓஓஓ உன்னவரை பார்க்க அவ்ளோ அவசரமா ம்ம்ம்ம்ம் நடக்கட்டும்..நடக்கட்டும்” என்று சிரிக்க..

“போடி எனக்கும் ஒருகாலம் வரும் அப்போ உனக்கு இருக்கு.. உன்னை நல்லா ஓட்றேன் பாரு” என்று சொல்ல..

“ஹி ஹி என்ன நீ ஓட்ட தேவையே இருக்காது மோகினி குட்டி எனக்கு ஒருத்தர் மேல லவ் வந்துச்சின்னா உன்னமாதிரி, எனக்கு வெக்கமா இருக்கு அப்படியெல்லாம் சொல்ல மாட்டேன்.”

“நேருக்கு நேர், பேஸ் டு பேஸ் , ஹலோ பாஸ் எனக்கு உங்களை பிடிச்சிருக்கு…. நான் உங்களை காதலிக்கிறேன்னு சொல்லுவேன், ஹே யாரு கிட்ட, நான் ப்ரியாடி” , என்றவள்,

சரி என்னை ஓட்டுறது இருக்கட்டும் மொதல்ல சந்துரு கிட்ட உன் லவ்வ சொல்ற வழிய பாரு…..” என்றவள்..

“மோஹி எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகனும்…. நீ உன் மாமா குடும்பத்தை கண்டு பிடிச்சி, பழி வாங்கணும்… அப்படின்னு ஏதும் ஐடியா வச்சிருக்கியா என திடீரென்று கேட்டவளை , “வெட்டவா, குத்தவா” என்ற ரேஞ்சில் பார்த்தாள் மோகனா…

மோகனா முறைப்பதை பார்த்த பிரியா……”ஹி ஹி இல்ல மோகனா, சின்ன வயசுல இருந்தே நாம பிரெண்ட்ஸ்.. ஆனா நீ ஒருதடவை கூட உன் மாமா குடும்பத்தை பத்தியோ, இல்ல உன் பாட்டி(மனதுக்குள் அந்த கிழவி) உன் கிட்ட கேட்ட வாக்கு பத்தியோ சொன்னதே இல்ல, அதுவும் இல்லாம இந்த ஊருக்கு வர்றோம் என்றதும் அவ்ளோ சந்தோஷப்பட்ட, அதுதான் நான் அப்படி கேட்டேன்” என்றவளிடம்

“நீ படம் பார்த்து ரொம்ப கெட்டு போய்ட்டே பிரி… ரிவெஞ்ச் எடுக்க இது சினிமான்னு நினைச்சியா…

லூசு. இது வாழ்க்கைடி.. எங்க அப்பாவே அவங்களை பழி வாங்கனும்ன்னு நினைக்கல .. அப்புறம் நான் மட்டும் எப்படி நினைப்பேன் , எங்க மாமாக்கள் மேல வருத்தம் இருக்கத்தான் செய்யுது..... அவங்கள பார்க்கும் போது நல்லா நாலு வார்த்தை அவங்கள பார்த்து கேக்கணும் அப்புறம் எங்க அம்மாவை அவங்க பிறந்த வீட்டுக்கு திரும்ப கூட்டிட்டு வரணும்னு ஆசைபடுறேன்..... அவ்ளோதான் வேற எந்த பழி வாங்குற எண்ணமெல்லாம் எனக்கு கிடையாது....சோ ரொம்ப யோசிக்காதே , வா வெளியே போகலாம்" என்று முன்னே நடக்க,

அவளை பின் தொடர்ந்த ப்ரியாவோ, ஜெர்க்காகி "ஐய்யய்யோ அங்க சந்துருவோட அண்ணன் இருப்பானே, நேத்து அவன் பார்த்த பார்வையை நினைச்சாலே இப்போவும் படப்படன்னு வருது , கடவுளே பிளீஸ் பிளீஸ் அங்க அவன் இருக்க கூடாது" என்று அவசர வேண்டுதலை வைக்க..

ஹா ஹா எப்பொழுதும் இவள் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து உதவி செய்யும் கடவுள் இன்று ஓய்வு எடுக்க சென்று விட்டாரோ என்னவோ.... சபரிஷ் அங்குதான் இருந்தான்.. எப்பொழுதும் காலையில் கிளம்புபவன் இன்று தந்தையிடமும் சிறியதந்தையிடமும் முக்கியமான விஷயம் பேசவேண்டி இருந்ததால் பண்ணைக்கு செல்லவில்லை..

இவர்கள் அறையை விட்டு வெளியே வரவும் செல்வி இவர்களை நோக்கி வரவும் சரியாக இருந்தது..

“வாங்க உங்களுக்காகதான் காத்திருக்கிறோம்”என்று அவர்களை பார்த்து சிநேகமாக சிரிக்க..

பதிலுக்கு அவர்களும் சிரிக்க.. பின் மூவரும் டைனிங் டேபிள் நோக்கி செல்ல, அங்கு குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அமர்ந்திருந்தனர் சபரிஷை தவிர .. அவனுக்கு ஒரு முக்கியமான அலைபேசி அழைப்பு வர பேசுவதற்காக வெளியே செல்லவும் இவர்கள் வரவும் சரியாக இருந்தது....

“என்னம்மா பொண்ணுங்களா, உங்களுக்கு இந்த வீடு பிடிச்சிருக்கா, எல்லாம் சவுகரியமா இருக்கா”.. என்றுகுடும்பதலைவியாக லட்சுமி விசாரித்தார்..

“எங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு ஆன்ட்டி அதுவும் இப்படி ஒரு வீட்டை நாங்க படத்துல தான் பார்த்துருக்கோம் , அதுவும் இல்லாமல் மும்பையில் எல்லாம் மார்டன் பங்களாஸ் , சோ இப்போ நேர்ல பார்த்ததுல எங்களுக்கு ரொம்ப ஹேப்பி” என்றபடி அமர்ந்தனர்..

“சபரிஷோட கொள்ளுதாத்தா காலத்துல கட்டினதுமா இந்த வீடு..... இப்போ பிள்ளைகளின் ஆசைப்படி கொஞ்சம் நவீனமா மாத்தி இருக்கோம் அவ்ளோதான்” என்றார் பிரபா

ப்ரியாவோ சபரிஷை தேட, அவன் எங்கும் தென்படாததால் “ஹப்பா நல்ல வேலை அவன் இங்க இல்லை நன்றி கடவுளே” என்று சொன்னாலும் இன்னொரு மனமோ “ச்ச அவன் எங்கே போனான்” என்று தேடியது..

மோகனாவோ சந்துருவின் ஒற்றை பார்வைக்காக தவமிருந்தாள்... ஆனால் எங்கே இவன் அவள் புறம் திரும்பினால்தானே..... அதில் கலக்கமுற்றவள் “நாமும் பேசாம இருந்தபோதும் அவங்களுக்கும் இப்படிதான் கஷ்டமா இருந்ததா” என்று எண்ணி அவனுக்காக வருந்தினாள்

“உங்க பேர் என்னம்மா....நீங்க என்ன படிக்கிறீங்க” என்ற ஒரு சிம்ம குரலில் தன்னுடைய சிந்தனையில் இருந்து கலைந்த இருவரும், அவரை பார்க்க அவர் வேறு யாருமில்லை தர்மலிங்கம்தான்...

“ஹாய் அங்கிள், நாங்க ரெண்டு பேரும் கம்ப்யூட்டர்

சயின்ஸ் செகன்ட் இயர் படிக்கிறோம்.. என் பேரு பிரியா , இவ பேரு மோகனா.. சந்துருவ நாங்க பஸ்ட் இயர்ஸ் சேரும்போது தான் பார்த்தோம்.. அப்போதுல இருந்தே நாங்க பிரெண்ட்ஸ் ஆயிட்டோம் அப்படித்தானே மோஹி" என்று மோகனாவை பார்க்க,அவளோ இவளை முறைத்துக்கொண்டிருந்தாள்..

அதை கண்டு கொள்ளாமல் "அங்கிள் நீங்க இந்த வயசுலையும் செம ஹேண்ட்சமா இருக்கீங்க, கொஞ்சம் தலைல டை அடிச்சீங்கின்னா இன்னும் சூப்பரா ஆயிடுவீங்க அப்படித்தானே மோஹி" என்று மீண்டும் கேட்டவளை ,

"கொஞ்சம் நேரம் பேசாம இரு ப்ரி" என்று பல்லை கடித்துக் கொண்டு சொல்ல..

"என்ன இவ இப்படி மொறைக்கிறா" என்று அப்பொழுதுதான் தன்னை சுற்றியுள்ளவர்களை பார்க்க.. எல்லோரும் இவளைத்தான் பார்த்துக்கொண்டிருந்தனர்...

ஏனென்றால்.. பிள்ளைகளே ஆனாலும் அவர்கள் தந்தையிடம் பேச பயம் இருக்கும்,தங்களுக்கு எது வேண்டும் என்றாலும்.. லட்சுமியிடம், பிரபாவிடமும்

தான் சொல்லுவார்கள்.. இதில் சபரிஷ் மட்டும் விதிவிலக்கு..

மேகாவோ ஆஆ வென்று ப்ரியாவை பார்த்துக் கொண்டிருந்தாள்..

“என்னாச்சுடா” என்று கண்களால் சந்துருவிடம் வினவ..

அவனோ வாயில் ஒற்றை விரல் வைத்து அமைதியாக இருக்கும்படி சொல்ல..

“ஹி.... ஹி என்று எல்லோரையும் பார்த்து அசடு வழிந்துவிட்டு அமைதியாகிவிட

“ சாரி அங்கிள், அவ மனசு எதையும் வச்சிக்க மாட்டா... கொஞ்சம் படப்படன்னு பேசுவா, அவ்ளோதான் மத்தபடி அவ குழந்தை மாதிரி தப்பா எடுத்துக்காதீங்க” என்று மோகனா மன்னிப்பு கேட்க,

“பரவாயில்லமா பேசட்டும் ..... எனக்கு இன்னொரு மேகாவா தான் தெரியுறா” என்றவர் சிரித்து கொண்டே “சாப்பிடுங்க” என்க.. எல்லோரும் சாப்பிட ஆரம்பித்தனர்..

போன் பேசி முடித்துவிட்டு வந்து அமர்ந்த சபரிஷ்
“என்னப்பா சிரிக்கிறீங்க, என்ன விஷயம்” என்றான்

“பிரியா சொன்னதையும், அதற்கு மோகனா அவளை குழந்தை என்றதையும் அவர் சொல்ல , அப்பொழுது தான் தனக்கு எதிரில் அமர்ந்திருந்த ப்ரியாவை பார்த்தவன் வேறொன்றும் பேசாமல் அவளிடம் “நீ குழந்தையா” என்பது போல் பார்க்க…..

“ஆஹா பாக்குறானே ,இவன் இவ்வளவு நேரம் இங்கேவா இருந்தான்…. போங்க கடவுளே உங்க பேச்சி கா ” .. என்றவள் சாப்பிட ஆரம்பித்தாள்… பின்ன சாப்பாடு முக்கியம் இல்லையா.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்து எழுந்ததும் மோகனா அவளிடம்
“ஏண்டி கொஞ்சநேரம் அமைதியா இருக்க மாட்டியா…. எப்போ பாரு லொட லொடனு பேசிட்டு… என்ன நினைப்பாங்க எல்லோரும்” என்று மோகனா திட்ட ..

“ஆஹா, அக்கா சூப்பர் போங்க , நாங்க எல்லாரும் எங்க பெரியப்பா முன்னாடி வரவே பயப்படுவோம் ஆனா நீங்க எவ்வளவு தைரியமா பேசறீங்க ….. அப்புறமா நாம பேசலாம்…. எனக்கு கொஞ்சம்

படிக்கணும் நான் வரேன்கா" என்று மேகா சென்று விட,

அவளை பார்த்து சரி என்று தலைஅசைத்தவள் .. திரும்பி மோகனாவை பார்த்து "என்னடி இப்போவே மாமியார் வீட்டுக்கு சப்போர்ட்டா" என்க

"என்ன பேபி, யாரு யாருக்கு சப்போர்ட் பண்றா" என்று கேட்டுக் கொண்டே வந்த சந்துரு மறந்தும் மோகனாவை திரும்பி பார்க்கவில்லை.

டைனிங் டேபிளில் இவர்களின் நாடகத்தை கவனித்துக் கொண்டுதானே இருந்தாள் .... சந்துரு அவளை கண்டு முகம் திருப்புவதும், மோகனா அவன் பார்வைக்காக தவிப்பதை கண்டவள்.. இதுங்க இரண்டும் இந்த ஜென்மத்துல அதுங்களோட லவ்வ சொல்லாது.... நாமதான் ஏதாவது பண்ணனும்" என்று நினைத்தவள் சந்துருவிடம்,

"டேய் உனக்கு இவ வேணாம் டா..... நான் உனக்கு வேற நல்ல பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கிறேன் சரியா"

அவனோ பிரியாவின் உள்குத்தை அறியாமல்.....

மோகனாவை திரும்பி ஒரு பார்வை பார்த்தவன் “ஓகே பேபி நீ சொன்னா சரியாத்தான் இருக்கும் வேற நல்ல பொண்ணா பாரு ” என்று மோகனாவை சீண்டுவதாக நினைத்து தனக்கு தானே ஆப்பு வைத்துக் கொள்ள,

ப்ரியாவோ “பாத்தியா மோஹி வேற நல்ல பொண்ணா பார்க்கணுமாம் சாருக்கு….. நீ இவன்கிட்ட ஏதோ சொல்லணும்னு சொன்னியே…… அதை இவன்கிட்ட சொல்லாதே” என்று இருவரையும் கோர்த்து விட்டு நகர்ந்து விட..

அவன் புரியாமல் மோகனாவிடம் “என்ன விஷயம் என்ன சொல்லனும்”

“ம்ம்…. அத அவகிட்டயே கேளுங்க .. வேற பொண்ணு பார்க்கணுமா வேற பொண்ணு…. அப்போ நான் ” என்று மோகனா அவனை முறைத்துவிட்டு செல்ல,

முதலில் புரியாமல் விழித்தவன், அவள் முகம் சொன்ன செய்தியில் எல்லையில்லா மகிழ்ச்சியில் திளைத்தவன் “பேபி வச்சிடியே ஆப்பு” என்று மோகனாவை சமாதானப்படுத்த சென்றான்..

இவர்களை திரும்பி பார்த்துக்கொண்டே வந்த ப்ரியா எதன் மீதோ மோதி நிக்க, “ஹப்பா ச்ச வழியில் யாருடா தூணை கட்டிவெச்சது” என்று நிமிர்ந்து

பார்க்க , அங்கு நின்றதோ சபரிஷ்..

“ஐய்யோ இவனா….. ஆஹா ப்ரி உனக்கு நேரமே சரியில்லைடி” என்று நினைத்தவள்…. பின் தன்னை தைரியமாக காட்டிக் கொண்டு, தன் இடுப்பில் கையை வைத்து “ஏன் சார் நான் வர்றது தெரியுதில்ல, கொஞ்சம் தள்ளி நிக்க வேண்டியது தானே?” என்க

அதற்கு ஏதோ சொல்ல வந்தவன் , ராஜேஷிடம் இருந்து அலைபேசியில் அழைப்பு வரவும் அதை உயிர்ப்பித்து, அவனிடம் “சொல்லுங்க ராஜேஷ்”என்க

எதிர்முனையில் அவன் சொன்ன பதிலில் “ஹால்ல வெயிட் பண்ணுங்க இப்ப வந்திடுவேன்” என்று கூறிவிட்டு .. இவளிடம் “என்ன கேட்டே ?”

“ம்ம்ம் இப்போ சாப்பிட்ட பொங்கல் நல்லா இருந்துதில்ல, அதான் இன்னொருதடவை சாப்பிடுறீங்களான்னு கேட்டேன்” என்று நக்கலாக கூற..

அவனோ, துறு துறுவென்ற அவள் கண்களையும், விடாமல் பேசும் அவள் அதரங்களையும், மாறி மாறி அவள் முகம் காட்டும் அபிநயங்களையும்…. தன்னையும் அறியாமல் ரசித்தான்… (ஹா ஹா நேத்து “என்ன பேச்சு பேசுறே” என்று காய்ந்தவன், இன்று

அவள் பேசுவதெல்லாம் ரசிப்பது ரொம்ப ஓவர்வா இல்லையாடா…)

அவன் பார்வை சென்ற இடத்தை கண்டு, தன் உதட்டை மடித்து கடித்து , இவனோட ஒரு பார்வையையே என்னால தாங்க முடியலை…. இதுல இது வேற என நினைத்தவள்".. வாய்க்குள் ஏதோ முனக

"அங்க என்ன முணுமுணுப்பு, ஏதோ கேட்டியே என்ன அது?" என்று மீண்டும் கேட்க , மறுபடியும் அவனுக்கு அலைபேசியில் அழைப்பு வர, "யோசிச்சு வை வந்து கேட்கறேன்" என்றவன் திரும்பி சென்று விட்டான்..

"இவனோட பெரிய இதுவா போச்சு.. ஒன்னு மொறைக்கிறான்.. இல்ல இப்படி பார்த்து வைக்கிறான்.. ச்ச அத விடு ப்ரி அதப்பத்தி அப்புறம் கூட யோசிக்கலாம், இப்போ மோஹி மேட்டர் என்னன்னு பாப்போம்"

"இப்போ யாருக்கிட்ட உதவி கேட்கிறது" என்று யோசித்தவளின் மூலையில் மின்னல் வெட்டியது…

"யெஸ்… அவன் கிட்ட கேட்கலாம் .. அவனும் இந்த ஊராகத்தான் இருக்கும்.. என்று நினைத்தவள் மனதில் நிம்மதி எழுந்தது.

இந்த விஷயத்தால் மீண்டும் சபரிஷின் கோபத்துக்கு ஆளாக போகிறோம் என்று தெரியாமல், மோகனாவின் பிரச்சணைக்கு வழி தெரிந்துவிட்ட மகிழ்ச்சியுடன் துள்ளி குதித்துக் கொண்டு அவள் அறைக்கு சென்றாள்..

சுவாசம் தொடரும்....

சுவாசம் 9

“நான் உனக்கு யார் என்பதை
உன் உதடுகள் சொல்கிறதோ
இல்லையோ!
உன் விழிகள் சொல்கிறது,
நான் உனக்கானவள்
என்பதை!!!

மொட்டை மாடி சுவற்றில் சாய்ந்து நின்று, அந்த இருளில், வானில் உள்ள நட்சத்திரங்களை பார்த்துக்கொண்டிருந்தாள் பிரியா..
ஆனால் பிரியாவின் பார்வை அங்கு இருந்ததே தவிர....அவள் மனம் அதில் லயிக்கவில்லை....குழப்பம், அதிர்ச்சி,அடுத்து என்ன செய்வது என்று இப்படி

கலவையான சிந்தனையுடன், யோசித்து
கொண்டிருந்தது.

ராஜேஷ் சொன்ன விஷயத்தையே சிந்தித்து
கொண்டிருந்தாள்
“இப்படியும் நடக்குமா அதிசயம்”.. யோசித்தவள்..
“நடந்துருக்கே”.. என்று இன்று காலையிலிருந்து
நடந்த நிகழ்வுகளை எல்லாம் அசை போட
ஆரம்பித்தாள் ….

சபரிஷிடம் அலுவலக விஷயமாக பேசிவிட்டு .. தன்
இருசக்கர வாகனத்தை கிளப்ப தயாரானவனை .

“ஹலோ ஜி.எம் சார் கொஞ்சம் நில்லுங்க”.. என்ற
அழைப்பு தடுத்து நிறுத்த,

“என்னை யாரு இப்படி மரியாதையாக கூப்பிடுரா”
என்று குரல் வந்த திசையை ராஜேஷ் திரும்பி
பார்க்க..

ப்ரியாவோ, இவனை பார்த்து கை அசைத்து
“அங்கேயே இருங்க நான் வரேன்” என்று சொன்னாள்

“ஐய்யய்யோ இவங்களா… என்னை எதுக்கு

கூப்பிடுறாங்க? ஆனானப்பட்ட நம்ம பாஸ்ஸையே
லெப்ட் அண்டு ரைட் வாங்கினவங்களாச்சே..... இப்போ
என்ன எதுக்கு நிக்க சொல்றாங்க..... ஆஹா
வர்றாங்களே வர்றாங்களே.... கடவுளே காப்பாத்துப்பா"

"எப்படி இருக்கீங்க ஜி எம் சார்"

அவனோ மனதுக்குள் இப்ப வரைக்கும் நல்லா
இருந்தேன், இனிமேல் எப்படின்னு தெரியலையே
,என்ன விஷயம் அத சொல்லுங்க மொதல்ல....
வயித்துல புளிய கரைக்காதீங்க" என்று நினைத்தவன்
"சொல்லுங்க மேடம்" என்றான் பவ்வியமாக

"ஹலோ என்ன கிண்டலா , என்ன பார்த்தா
வயசானவங்க மாதிரியா தெரியுது? மேடம்ன்னு
சொல்லுறீங்க , கால் மீ பிரியா" என்க

"இன்றைக்கு நான்தான் மாட்டினேனா" என்று
நினைத்தவன்.. "சொல்லுங்க ப்ரியா" என்று கேட்க..

"இந்த இங்கவையும் விட்டுறலாமே"

"இது என்னடா வம்பா போச்சு " என்று நினைத்தவன்,
"இல்ல பிரியா என்ன இருந்தாலும் எங்க பாஸ்
வீட்டுக்கு வந்துருக்கிற கெஸ்ட் நீங்க .... சோ

உங்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுத்துதான் ஆகணும் சரி சொல்லுங்க எதுக்கு கூப்பிட்டீங்க ?”

“அது வந்து, உங்க கிட்ட கொஞ்சம் பேசணும் ராஜேஷ்…. எனக்கு நீங்க ஒரு உதவி பண்ணனும்”

“உதவியா? என்ன உதவி ப்ரியா? சொல்லுங்க என்னால முடிஞ்சா கண்டிப்பா செய்கிறேன்” என்றான்…

“உங்களுக்கு எந்த ஊரு ராஜேஷ் ?”

“இங்கதான் பக்கத்துல ஆறுமுகநேரி….. இத கேட்கவா கூப்பிட்டீங்க?

“ இல்ல, இங்க ராமசாமிபுரம் எங்க இருக்குன்னு கொஞ்சம் சொல்ல முடியுமா”

“திருச்செந்தூர் பக்கத்துல இருக்கிற ஒரு கிராமம் தான் அது.. இதை ஏன் நீங்க கேட்கறீங்க? உங்களுக்கு அந்த ஊரா?” என்று ராஜேஷ் கேட்க

சற்று தயங்கியவள் , பின் “ஆமா ராஜேஷ் எனக்கு அந்த ஊருதான் .. ஒரு குடும்பத்தை பத்தின டீடைல்ஸ் தெரியணும்… கொஞ்சம் விசாரிச்சி சொல்ல முடியுமா”

“யாரை பற்றி என்ன டீடைல்ஸ் வேணும்…. அவங்க பேரு என்ன” அதெல்லாம் கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க”

“அது வந்து, எங்…எங்க “ என்று மறுபடியும் சிறிது தயங்கியவளை பார்த்தவன் ,

“இவங்களுக்கு தயக்கமாக கூட பேச தெரியுமா”, என்று நினைக்க.

க்கும் தொண்டையை செருமி தனது தடுமாற்றத்தை மறைத்துக் கொண்டு “எங்க மாமா குடும்பத்தை பத்தின டீட்டைல்ஸ் வேணும்.. அவங்க இப்ப எங்க இருக்காங்க..என்ன பண்றாங்க என்று தெரியணும்”

அவனோ அவளை யோசனையாக பார்க்க..

“அது ஒன்னும் இல்ல ராஜேஷ்.... ரொம்ப வருஷத்துக்கு முன்னாடியே நாங்க மும்பை போய்ட்டோம்..... சோ டச் விட்டு போயிடுச்சு, இப்போ நான் இங்க வந்துருக்கறதுனால, அவங்களை எல்லாம் பார்த்துட்டு போகலாம் என்று நினைக்கிறேன்” என்று சமாளிக்க,

“ஓ.....சரி ராமசாமிப்புரத்துல யாரு , அவங்க பெயரு என்னன்னு சொல்லுங்க”

“எனக்கு எங்க தாத்தா நேம் சொல்றேன்... அத வச்சுதான் நீங்க கண்டுபிடிக்கணும்..

“சரி உங்க தாத்தா பேர் சொல்லுங்க”என்று ராஜேஷ் கேட்க..

“தாத்தா பேர் ராஜதுரை, அப்பா பேர் ஈஸ்வர் .. இந்த டீட்டைல்ஸ் வச்சி அந்த ஊரில் விசாரிக்க முடியுமா”

“இது போதும்...கண்டுபிடிச்சிடலாம், சரி பிரியா , எனக்கு கொஞ்சம் டைம் குடுங்க.. நான் எல்லா டீட்டைல்ஸூம் சீக்கிரம் தரேன்”

“எவ்ளோ நாள் ஆகும் ராஜேஷ்? ஏன்னா நாங்க இன்னும் கொஞ்ச நாள் தான் இங்க இருப்போம்

அதுக்குள்ளே" என்று இழுத்தவளை..

"ரொம்ப நாள் ஆகாது பிரியா, ஒரு ரெண்டு நாள்ல, உங்க கைல நீங்க கேட்ட டீட்டைல்ஸ் இருக்கும்" என்று கூறி சிரித்தவன்.,

"பை பிரியா நான் கிளம்புறேன் என்று சொல்லிவிட்டு தன் இருசக்கர வாகனத்தை கிளப்பி சென்றுவிட்டான்..

ராஜேஷ் சென்ற திசையை
பார்த்துக்கொண்டிருந்தவளின் முதுகை எதுவோ துளைப்பது போல் இருக்க சட்டென்று திரும்பி பார்த்தாள்... அங்கு வேலை செய்யும் சிலபேரை தவிர வேற யாரும் இல்லாததால்... அப்போ யாரு நம்மளை பாக்குறா என குழம்பியவள்,
மப்ச் ஏதாவது பிரம்மையாக இருக்கும் என்று தன் தோளை குளுக்கி கொண்டு வீட்டை நோக்கி நடந்தவளை, அங்கிருந்த கலர் கலரான அழகிய வண்ணங்களில் பூத்துக் குலுங்கும் ரோஜா மலர்கள் ஈர்க்க அதனை ரசிக்கும் ஆவளில் ..அதன் அருகில் சென்று அதனை ரசிக்க மலர்களின் அழகில் மயங்கி நின்றவளை பார்த்த அவள் மனசாட்சி ,

"ப்ரி குட்டி மறுபடியும் பாடபோறியா" என்று அவளை கலாய்க்க,

“ஆமாம்…இப்ப அதுக்கு என்ன” என்றவள், சட்டென்று தன் பார்வையை சுழல விட்டாள்,

“என்ன தேடுறே அந்த நாயை தானே”…என்று மறுபடியும் கிண்டல் செய்ய..

அதற்கு அவள் பதில் சொல்லும் முன் அவளது அருகில் வந்த தோட்டக்காரன் வேலு,

“என்னம்மா ரோசா பூ வேணுமா ?? என்ன கலரு வேணுமோ பறிச்சிக்கோங்க”என சொல்ல.

“இல்ல வேலு அண்ணா, ரொம்ப அழகா இருக்குல்ல அதான் பார்த்துட்டு இருந்தேன்.. பறிக்க வேண்டாம் அது செடியிலேயே இருக்கட்டும் , பாருங்க எவ்வளவு சந்தோசமா ஆடி அசஞ்சிட்டு இருக்கு” என்று பட்டு போன்ற ரோஜா இதழ்களை வருடிக் கொண்டே சொல்ல,

“ஆமாம்மா, எங்க அய்யாகூட அப்படித்தான் சொல்லுவாங்க , பூவை ரசிக்கணும்…. அதவிட்டுட்டு அத பறிச்சு அழ வைக்கக்கூடாதுன்னு”

“எந்த அய்யா ?” என்று ஆர்வமுடன் கேட்க

“எங்க சபரிஷ் அய்யாதான்மா” .. என்று விட்டு தன்

வேலையை பார்க்க சென்று விட்டான் அந்த வேலு..

“பரவாயில்லையே, அந்த பயபுள்ளைக்கும் இந்த ரசனை எல்லாம் இருக்கே ,கலா ரசிகன்தாண்டா நீ… ஆனா உன் பார்வைதான் வர வர சரியில்லை ” என்று செல்லமாக கொஞ்சி கொண்டு துள்ளி குதித்து வேகமாக உள்ளே சென்றவள் எதிரே வந்தவன் மீது மோதி விழப்போக , அவளை இரு கைகள் விழாமல் தாங்கி தன்னோடு அணைத்துக் கொள்ள,

விழப்போகிறோம் என்ற பயத்தில் கண்களை மூடிய பிரியா, பின் மெல்ல கண்களை திறக்க சபரிஷ் தான் தன்னை கீழே விழாமல் பிடித்திருக்கிறான் என்றதும்..

“என்ன ப்ரி இவன் மேலையே வந்து வந்து மோதுற, அவன் வேற வேணும்னே வந்து விழறன்னு நினைக்கமாட்டானா” என்று நினைத்தவள், பின் தான் நின்ற கோலத்தை பார்த்து, அவனிடம் இருந்து விடுபட முயல..அது முடியாமல் போகவும், அவனை நிமிர்ந்து பார்த்தவள், அவன் கண்களை சந்திக்க முடியாமல் வெக்கம் வந்து தடுக்க வேறுபுறம் திரும்பி , “விடுங்க ”என்றாள் மிக மெல்லிய குரலில் ,
அவனோ அவளது முகத்தில் தோன்றிய நவரசங்களையும் ரசித்து பார்த்தவன், மெதுவாக

அவளை நேராக நிறுத்தினானே தவிர நகரவில்லை..

அவனின் நெருக்கத்தில் மனம் படபடவென்று அடித்துக்கொண்ட போதும்...அதை வெளிக்காட்டி கொள்ளாமல் அவனிடம "வழியை விடுங்க நான் போகணும்" என்று அவன் முகம் பார்த்து சொல்ல எண்ணி நிமிர..அந்தோ பரிதாபம்...அவளால் முடியவில்லை...
அவளின் முகத்திற்கு நேராக அவளை போலவே சொடக்கு போட்டு அழைத்தவன் , "ஹலோ யாரு உன்னை பிடிச்சிருக்கா...நானா.. நீதான் என்னை பிடிச்சிருக்கே"... என்று கிண்டலாக சொல்ல.

அதில் "ங்கே " என்று முழித்தவள்... "என்ன நான் உங்களை புடிச்சிருக்கேனா, ரொம்பத்தான் ஆசை உங்களுக்கு" என்றவள் அப்பொழுதுதான் உணர்ந்தாள் .. தன் இரு கைகளும் அவன் சட்டையின் காலரின் மீது இருப்பதை.. உடனே சட்டென்று தன் கையை எடுத்துக்கொண்டாள்
தான் விழப்போகிறோம் என்றவுடன் பிடிமானத்துக்காக அவனை பிடித்திருப்பதை நினைத்தவள்..
"ச்ச போ ப்ரி அவன் உன்னை என்ன நினைச்சிருப்பான் ..என்று தன் தலையில் தட்டிக் கொண்டு..அவனை நிமிர்ந்து பார்க்க, அவளை கூச்சம் பிடிங்கி தின்றது, ஆனாலும் தன்னை சமாளித்துக் கொண்டு..

“ஏன் சார் எப்போ பார்த்தாலும் என்கிட்டயே வந்து மோதுறீங்க” என்று சண்டைக்கு போக..
அவனோ இவளை இமைக்காமல் பார்த்தவன்,
“நானா உன்மேல் வந்து மோதினேன்” என்று குறும்பு குரலில் கேட்க.
அவன் பார்வையும், குரலும்.. அவளை ஏதோ செய்ய..
அவனை திரும்பி பார்க்காமல் உள்ளே செல்ல எத்தனிக்க,

“ஒருநிமிஷம்” என்று அழைத்தான்..
என்ன என்பது போல் தன் கண்களை உயர்த்தி கேட்க

“ராஜேஷ்கிட்ட பேசிட்டு இருந்த மாதிரி இருந்தது” என்று கேட்டவனின் குரலிலில் வித்தியாசம் இருந்ததோ..

ஓஓ ஐயாதான் நாங்க பேசிட்டு இருந்ததை பார்த்தாரா. அதானே பார்த்தேன்..ஒரு நிமிசம் என்னையே குழப்பிட்டானே…என்று நினைத்தவள் “அது ஒன்னும் இல்ல சும்மா பேசிட்டு இருந்தோம்”..
என்றாள்

“நேத்துதான் அவனை பார்த்தே அதுக்குள்ள என்ன பேச்சு அவன்கிட்ட” என்றவனின் குரலில் கொஞ்சம் கடுமை இருந்ததோ..

அதில் அவளுக்கும் கோபம் வந்தது…

“இதுல என்ன தப்பு இருக்கு? ..ஏன் உங்களையும் எனக்கு நேத்து தான் தெரியும்… நான் உங்கக்கூட பேசலையா” என்று சிலிர்த்துக் கொண்டு கேட்க,

அதில் “நானும் அவனும் ஒண்ணா” என்று கேட்டான் அடக்கப்பட்ட கோபத்துடன்… ஏன் அப்படி கேட்டோம் என்றும், யாரிடம் அவள் பேசினால் தனக்கு என்ன என்றும் அவன் உணரவில்லை… அதுதான் விந்தையிலும் விந்தை.

“ஆமா ஒன்னு இல்லைதான்.. ஏன்னா நீங்க முதலாளி…. அவன் தொழிலாளி..அந்த வித்தியாசம் இருக்குல்ல” என்றாள் கேலியுடன்

“என்ன நக்கலா ?”

“இல்லைங்கோ , விக்கலுங்கோ.. என்றவள் விறுவிறுவென்று வீட்டுக்குள் சென்று விட்டாள்.. அவன் ஏன் என்னை பார்த்து அப்படி கேட்டான் என்று குழம்பியவள், பின் அதை விடுத்து, ராஜேஷின் தகவலுக்காக காத்திருக்க ஆரம்பித்தாள்……

இந்த நிகழ்வுக்குப்பின் சபரிஷை அவள் பார்க்கவில்லை....

அதன் பின், அன்றே மாலையில் ராஜேஷ் வந்திருப்பதாக வேளையாள் வந்து கூற, "அதுக்குள்ள கண்டுபிடிச்சிட்டானா.... நான் உன்னை என்னவோன்னு நினைச்சேன்.... சூப்பர் ராஜேஷ்" என்று ஆவலுடன் அவனிடம் விரைய,

அவனோ ப்ரியாவிடம் ஒரு கவரை குடுத்து ... "இதில் நீங்க கேட்ட தகவல் இருக்கு மேடம்" என்று கூற..

"என்ன ராஜேஷ் இது, என்னை மேடம்ன்னு சொல்லக்கூடாதுன்னு சொல்லியிருக்கேனா இல்லையா"

"இல்ல மேடம்.... நான் உங்களை கண்டிப்பா மேடம்ன்னு கூப்பிடனும்" என்றான்..

ஆனால் அவள் அதை கண்டுகொள்ளாது அவனிடம்...."ராஜேஷ் இந்த விஷயம் நமக்குள்ளே இருக்கட்டும் வேற யாருக்கும் தெரிய வேண்டாம் " என்க

பிரியாவுடைய நல்ல நேரமோ இல்லை கெட்ட

நேரமோ…யாருக்கு இந்த விஷயம் தெரியகூடாது என்று நினைத்து சொன்னாளோ…. அவனே, அதை கேட்டுவிட்டான் என்பது அவளுக்கு தெரியாதே…..

“ஓகே மேடம்…. வாழ்த்துக்கள் மேடம் என்று சொல்லிவிட்டு சென்று விட்டான்..

வாழ்த்துக்களா ! “இப்போ எதுக்கு எனக்கு வாழ்த்துக்கள் சொல்லிட்டு போறான் இந்த அரவேக்காடு” என்றவள்.. தன் கையில் உள்ள கவரை பார்த்து… “அப்படி இதுல என்ன இருக்கும் மோஹி குடும்பத்தை பத்தி….ம்ம்ம் .. பிரிச்சி பார்த்தா தெரிஞ்சிற போகுது” என்று நினைத்தவள் மோகனாவை தேட

அவளோ, மேகாவுடன் மற்றொரு அறையில் இருந்தாள்… அவளுக்கு பாடத்தில் சில சந்தேகங்களுக்கு பதில் சொல்லி கொண்டிருந்தாள்….அதை பார்த்துவிட்டு அவளை தொந்தரவு செய்யாமல் மொட்டை மாடிக்கு சென்று…தன் கையில் இருந்த கவரை பிரித்தாள்…. ராஜேஷ் கொடுத்த தகவலை படிக்க படிக்க அதிர்ச்சியாகவும், ஆச்சர்யமாகவும் உணர்ந்தாள்…

எவ்வளவு தடவை படித்தாலும் அதில் உள்ள விஷயங்கள் மாறிவிடுமா என்ன…… அதில் மோகனா அவளுடைய அப்பாவை பற்றி சொன்ன விஷயமும்,

அவள் சொல்லாத விஷயமும் இருக்க..தலையில் கைவைத்து அமர்ந்து விட்டாள்…
என்ன விஷயமென்றால் , “மோகனாவின் அம்மாவின் பூர்வீகம் ஆத்தூர் எனவும், அவளின் மாமாக்கள்…தர்மலிங்கம், ராஜலிங்கம் எனவும், மோகனா… சபரிஷ் மற்றும் சந்துருவின் அத்தை மகள் எனவும், தாங்கள் தங்கியிருப்பது அவர்களின் வீட்டில்தான் என்று இருக்க….. அவள் இதை பார்த்து எந்த மாதிரி உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை… (மோகனாவின் பெயர்க்கு பதில் பிரியா என்று இருந்தது தன்னுடைய குடும்பம் என்று சொன்னதால் ராஜேஷ் அப்படி எழுதியிருந்தான்..)

சிறிது நேரத்தில் தன் அதிர்ச்சியில் இருந்து வெளிவந்து… இதோ பார்றா இந்த வீட்டுக்கே வந்துட்டு இந்த வீட்டை பத்தி விசாரிக்க சொல்லிருக்கேன் என நினைத்தவள்மனதில் எழுந்த சந்தோஷத்துடன் “ சந்துரு அவளுயை மாமா பையன் என்றால், மோகனாவும் அவள் பாட்டிக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதில் எந்த பிரச்சனை இல்லை….

ஆனால் , மோஹி அம்மாவை அவங்க வீட்டு ஆளுங்களோட ஒன்னு சேர்க்கணும்…. அதுக்கு ஈஷ்வர் அங்கிள் மனசு வைக்கனும்…..
அவர் மட்டும் கொஞ்சம் மனசு இரங்கி வந்துட்டா மோஹி, சந்துரு கல்யாணத்துல எந்த பிரச்சணையும் இருக்காது” என்று கடகடவென்று திட்டமிட்டவளின்

மனதில் திடீரென்று மின்னல் வெட்டியது.. இவர்கள் கல்லூரியில் சேர்ந்த நாள் அன்று.. அவனாகத்தானே வந்து பேசினான்..... அப்போ அவனுக்கு மோஹிய முன்னாடியே தெரியுமா? தெரிஞ்சிதான் எங்ககிட்ட நட்புடன் பழகினானா.....

இது மட்டும் உண்மையா இருக்கட்டும்.. அப்ப இருக்கு அந்த பக்கிக்கு" என்று பல்லை கடித்தவள்..... அதே மனநிலையுடன் மாடியில் இருந்து கீழே இறங்கி வந்தாள்

அப்பொழுது "அம்மாடி இங்க வா....சாப்பிட்டியா" என்று ஒரு குரல் கேட்க..... யார் அழைத்தது என்று பார்த்தவள்..

அது சபரிஷ் தந்தை என்றதும் என்ன நினைத்தாளோ.... வேகமாக அவர் அருகில் சென்று, தன் இடுப்பில் கையை வைத்து அவரை முறைத்து பார்த்தவள்.....

"நீங்க இப்படி பண்ணலாமா அங்கிள்..... இங்க இருக்கவங்க எல்லாரும் உங்கள பத்தி எவ்ளோ பெருமையா பேசுறாங்க.. ஆனா நீங்க இப்படி பண்ணுவீங்கன்னு நான் நினைக்கவே இல்லை ,போங்க அங்கிள் நீங்க ரொம்ப மோசம்" என்று படபட பட்டாசாக பொறிந்து தள்ளிவிட்டு சென்றுவிட்டாள்

அவரோ அவள் சென்றதும், ஒருமுறை வீட்டை சுற்றி பார்த்தவர்…. “நல்ல வேலை யாரும் இத பாக்கல…… நான் இப்போ என்ன தப்பா கேட்டுட்டேன்…. சாப்பிட்டியான்னு கேட்டது ஒரு குத்தமா”….

“தர்மா உன்ன பார்த்தா இந்த ஊருல இருக்க பெரிவர்களிருந்து… நண்டு சிண்டு எல்லாம் பயப்படுது.. ஆனா இந்த பொண்ணு இப்படி பேசிட்டு போகுது……. எதுக்கு இந்த பொண்ணு என்னை திட்டிட்டு போகுது…. என யோசித்தாரே தவிர அவளிடம் கோபம் கொள்ளவில்லை, அவளை ஒரு வளர்ந்த குழந்தையாகயே கருதினார்…… அவள் திரும்பி வரும் அரவம் கேட்கவும், தன் அறைக்குள் வேகமாக சென்று மறைந்தார்..

ஹா ஹா இந்த வளர்ந்த குழந்தை என்னவெல்லாம் பண்ணப்போகுது பொறுத்திருந்து பாப்போம்..

……

சபரிஷின் தந்தையிடம் பேசிவிட்டு இல்லை இல்லை பொரிந்துவிட்டு ப்ரியா
தன் அறைக்கு செல்ல…அங்கே மோகனா இல்லாததால்….மேகா தங்கியிருந்த அறைக்கு சென்றாள்…. அங்கு மோகனா மேகாவுக்கு இன்னும்

பாடம் சொல்லிக் கொடுப்பதை கண்டவள்,

“மோஹி இன்னுமா முடியலை…மீதியை நாளைக்கு சொல்லி குடு… இப்போ வா எனக்கு தூக்கம் வருது” என்று அழைக்க..

மேகாவோ “அக்கா, என்னக்கா உங்க கிட்ட பேசணும்ன்னு நினைச்சேன்…. நீங்க என்னடான்னா தூங்க போறேன்னு சொல்லுறீங்க…. போங்கக்கா” என்று சிணுங்க..

அவளை ஆதூரமாக பார்த்தவள்.. “இப்போ நீ படிச்சி படிச்சி ரொம்ப டையர்டு ஆகியிருப்ப…சோ நாம நாளைக்கு பேசலாம் இப்போ தூங்கு”

“இல்லைக்கா நாளைக்கு நம்மளை சந்துரு அண்ணா தோப்புக்கு கூட்டிட்டு போறேன்னு சொன்னாங்க”என்று மேகா சொல்ல…

“தோப்புக்கா???”

“ஆமாக்கா… அங்க போய் மோட்டர் பம்புசெட்டுல குளிக்கலாம்…ரொம்ப ஜாலியா இருக்கும்.. செல்விக்கா இங்க இருந்த வரைக்கும் வாரத்துல மூணு நாள்

தோப்புக்கு போயிடுவோம்” என்று மகிழ்ச்சியுடன் சொல்ல

“சரி மேகா நீ இப்ப தூங்கு…. நாளைக்கு நாம எல்லாரும் தோப்புக்கு போறோம்…பம்பு செட்டுல குளிக்கிறோம்….ஓகேவா” என்று மோகனா சொல்ல..

“சரிக்கா” என்று தலை அசைத்தவள் .. புத்தகத்தை எடுத்து வைத்துவிட்டு படுக்க போக,

மோகனாவும் , பிரியாவும் அறையை விட்டு வெளியே வந்தனர் “ஹே மோஹி…. செல்வி எங்க நான் மாலையில் இருந்து பார்க்கவே இல்ல” என்று ப்ரியா கேட்க,

“அவங்க ஆத்துக்காரர் போன் பண்ணினார்…. சோ பால்கனிக்கு போய் பேச போனவங்க இன்னும் வரலை”

“சரி மோஹி…… ஆமா நீ சந்துரு கிட்ட பேசினியா”

“இல்லை ப்ரி…. நேத்து நான் கோபமா போறமாதிரி போனேனா…அவங்க பின்னாடியே என்கிட்ட பேச வந்தாங்க. ஆனா அதுக்குள்ள அவங்க சித்தப்பா

கூப்பிட்டாங்க..... சோ அப்புறம் பேசலாம்ன்னு சொல்லிட்டு போய்ட்டாங்க".. என்று சற்று ஏமாற்றத்துடன் மோகனா சொல்ல...

அதை கேட்டவள்... மோகனாவிடம் அவளின் குடும்பம் பற்றிய விஷயத்தை சொல்லலாமா வேண்டாமா என்று பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்தாள்...

"சந்துருக்கிட்ட முதல்ல பேசாம... மோஹிகிட்ட சொல்ல வேண்டாம்.... மோஹி கிட்ட நான் சொல்லி அவ அதை சந்துருகிட்ட ஏன் என்கிட்ட சொல்லலை என்று அவங்களுக்குள்ள சண்டை வந்துருச்சுனா... சந்துரு இரண்டு வருஷம் எங்ககூட இருந்தும் இதை பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை என்றால்... அதுக்கு ஏதாவது காரணம் இருக்குமோ.. என்று யோசித்தவள் பின் ஒரு முடிவுடன் மோகனாவிடம் இப்போதைக்கு சொல்ல வேண்டாம் என்று நினைத்து தன் அறைக்கு வந்து படுத்துவிட்டாள்..

தங்கள் அறைக்கு வந்து படுத்தவர்களின் மனதில் இரு வேறு வேறு எண்ணங்கள்..
மோகனாவின் மனமோ "நாளைக்கு தோப்புக்கு சந்துரு வந்தா எப்படி அவங்ககிட்ட பேசுறது" என யோசிக்க..

ப்ரியாவோ "நாளைக்கு கண்டிப்பா சந்துரு வரணும்.....

அவன்கிட்ட ராஜேஷ் சொன்ன விஷியத்தை பத்தி கேக்கணும்.....அதுக்கு மட்டும் நீ சரியான பதிலை சொல்லல.... மவனே உன்னை என்ன பண்ணுவேன்னு எனக்கு தெரியாது" என்று நினைத்தவளை நித்ரா தேவி அதிக நேரம் சிந்திக்க விடாமல் அணைத்துக் கொண்டாள்....

நாளை அவள் வாழ்வில் முக்கியமான ஒன்றை அறிந்துக் கொள்ள போகிறாள் என்பதை அறியாமல் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள்.....

.....

செல்வி, மேகா,மோகனா, பிரியா ஆகியோரை சுமந்து கொண்டிருந்த , தனது காரை தோட்டத்தை நோக்கி செலுத்திக் கொண்டிருந்தான் சபரிஷ்,

ஆம் சபரிஷ் தான் இவர்களை அழைத்து செல்கிறான்

சந்துருதான் எல்லோரையும் அழைத்து செல்வதாக இருந்தது... ஆனால் திடீரென்று அவன் தந்தையின் கார் டிரைவர் வேலைக்கு வராததால், அவரை

திருநெல்வேலியில் உள்ள தங்களது கடைக்கு அழைத்து செல்வதாகவும், நாளைக்கு தோப்புக்கு போகலாம் என்று லட்சுமியிடம் சொல்லி விட்டு சென்றுவிட்டான்.

இதை கேள்விபட்ட மேகாவின் முகம் உடனே வாடிவிட்டது .. "ப்ளீஸ் பெரியம்மா எப்படியாவது இன்னைக்கு நாங்க தோப்புக்கு போவனும் .... நான் எவ்ளோ ஆசையா இருந்தேன் தெரியுமா, அக்கா நீங்களே சொல்லுங்க பெரியம்மா கிட்ட " என்று பிரியாவையும், மோகனாவையும் பார்க்க

"ஆமா ஆன்ட்டி நாங்களும் தோப்புக்கு போறதுக்கு ரொம்ப ஆசையாய் இருந்தோம்... அப்படித்தானே மோஹி" என்று மோகனாவையும் துணைக்கு அழைக்க, அவளும் ஆமாம் என்று மேலும் கீழும் தலை அசைத்தாள்.

தன் செல்ல மகள் ஆசையாய் கேக்கும் போது எந்த தாய்க்குத்தான் மனம் பொறுக்கும்....உடனே பிரபா, லட்சுமியிடம்
"அக்கா சபரிஷ் இன்னும் கிளம்பவில்லை, அவன்கிட்ட கேளுங்கக்கா" என்று கூற

"அவன்கிட்டயா? அவனே நிற்க நேரம் இல்லாமல்

எப்பவும் வேலை வேலை என்று ஒடுபவனாச்சே….. சரி இருங்க நான் போய் கேட்டு பார்க்கிறேன்” ஆனால், “அவன் முடியாதுன்னு சொல்லிட்டான்னா .. நாளைக்கு சந்துரு கூட போங்க சரியா”

“ம்ம் சரி சரி சீக்கிரம்… நீங்க போய் அண்ணா கிட்ட கேளுங்க.. இந்த சந்துரு அண்ணா வேற யாரையாவது பெரியப்பா கூட அனுப்பிட்டு எங்க கூட வந்திருக்க கூடாது….. இன்றைக்கு இல்லன்னா நாளைக்கு ஈஸியா சொல்லிட்டு போய்ட்டாங்க… இப்போ பெரியண்ணா ஒத்துக்கணுமே ” என்று ஊரில் உள்ள கடவுள்களிடம் எல்லாம் வேண்டுதல் வைக்க…. தோழிகள் இருவரும் சிரிப்புடன் அவளை பார்த்திருந்தனர்..

சிறிது நேரத்தில் கீழே வந்த லட்சுமி அம்மாள்… “பிள்ளைங்களா கிளம்புங்க கிளம்புங்க தம்பி சரின்னு சொல்லிட்டான்” என்க

“ஹே..ஹே….ஹே” என்று மேகா ஆராவாரத்துடன் கூச்சலிட.. அவளின் குழந்தை தனத்தை பார்த்து அனைவரும் சிரித்தே விட்டனர்….

“நல்லா சிரிங்க……. நாம அங்க போனதும் “வாவ் இந்த இடம் சூப்பரா இருக்குன்னு சொல்லுவீங்க பாருங்க

அப்போ கவனிச்சிக்கிறேன் உங்கள".. என்று செல்லமா சிணுங்க..

அவளின் சிறுபிள்ளைதனமான பேச்சை ரசித்தவர்களின் காதில் படியில் இறங்கி வரும் சபரிஷின் அழுத்தமான காலடியோசை கேட்டது.. கீழே இறங்கி வந்தவன், பிரியாவை தவிர்த்து மற்ற எல்லோரையும் பார்த்து கிளம்பலாமா என்று கேட்க,

அதில் மனம்சுனங்கி போன பிரியா "என்னாச்சி இவனுக்கு உர்ருன்னு இருக்கான்.....நேற்றுக்கூட ஏதோ கோபமா பேசினானே..... இவன் எந்த நேரத்தில் எப்படி இருப்பான்னு தெரியலையே...இவன் கேரக்டரையே புரிஞ்சிக்க முடியலையே ஆண்டவா" என்று அவனை மனதில் அர்ச்சணை செய்தவள் லஷ்மியிடம்,

"ஆன்ட்டி அவருக்கு வேலை இருந்தால் போகட்டும்..... விடுங்க, நாங்க நாளைக்கு சந்துருகூட போகிறோம்" என்று சொல்ல..

அதில் அவளை திரும்பி முறைத்தவன் "ம்ம் சீக்கிரம் கிளம்புங்க" என்று சொல்லிவிட்டு முன்னால் நடக்க

ப்ரியாவோ மனதுக்குள், "சிடுமூஞ்சி...சிடுமூஞ்சி...எப்ப

பாரு ஒன்னு திட்டுறது…இல்ல முறைக்கறது…. இனிமே அவன் இருக்கற பக்கம் கூட போகக் கூடாது சாமி”…என்று முடிவெடுத்துக் கொண்டாள்….

சிறிது நேர பயணத்திற்கு பிறகு கார் ஒரு இடத்தில் நிற்க….அதில் இருந்து இறங்கியவன் செல்வியிடம் “நீங்க எல்லாரும் பம்பு செட்டுக்கு போங்க….. எனக்கு கொஞ்சம் தென்னந்தோப்புல வேலை இருக்கு…. சோ நான் அங்க போறேன்” என்றவன் நில்லாமல் சென்றுவிட்டான்..

அவனின் இந்த உதாசீனமான செயலில் பிரியாவின் மனம் மிகவும் காயமடைந்தது….. ஏன் இப்படி இருக்கான்… என்னாச்சு இவனுக்கு என்று குழம்பியவள்… அப்பொழுது தான் தன்னை சுற்றியுள்ள இடங்களை பார்த்தாள்…..

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சை பசேலென்று…எங்கும் பசுமையை தவிர வேறொன்றும் இல்லை.. பார்க்க பார்க்க தெவிட்டாத கொள்ளை அழகுடன் காட்சி தந்த .நெற்கதிர்களும், வாழை தோட்டங்களும், கரும்பு தோட்டம், தென்னதோப்பு..இவையெல்லாம் வயலை சுற்றி இருக்க அதில் மயங்கி மனதை திசை திருப்பியவள்…..

மோகனாவிடம்,

“மோஹி சூப்பரா இருக்குல்ல இந்த இடம் , எனக்கு
ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு இந்த ஊரு , இன்னும்
பதினைந்து நாள்ல இங்கிருந்து கிளம்பனும்ன்னு
நினைச்சாலே கஷ்டமா இருக்குடி” என்று அவள்
பாட்டுக்கு பேசிக்கொண்டே வர…..வேறு
யாரிடமிருந்தும் சத்தம் வராததால்…
“என்ன இது நான் மட்டும் பேசிட்டே இருக்கேன்….
மத்தவங்க எல்லாம் எங்கே” என்று திரும்பி பார்க்க

செல்வியோ அலைபேசியில் அவள் கணவனிடம்
பேசிக்கொண்டிருக்க, மேகாவோ இனி தன் அக்கா
போனில் இருந்து வெளிவரமாட்டாள் என்று எண்ணி
முன்னால் சென்றுவிட, மோகனாவோ யாரிடமும்
பேசாமல் சோககீதம் வாசித்துக் கொண்டிருந்தாள்.

மோகனாவின் அருகில் போய், “க்கும்” என்று
தொண்டையை செருமியவள், அவள் தோளை இடித்து
“என்னடி உம்முன்னு இருக்கே என்ன விஷயம், சந்துரு
இங்க வரலைன்னு அம்மா சோக கீதம்
வாசிக்கிறீங்களா…… இப்போ வரலைன்னா என்ன
இன்னும் ஐந்து வருஷம் கழிச்சி ரெண்டு பேரும்
சேர்ந்து”……. என்று மேலே சொல்லாமல் நிறுத்த…

மோகனாவோ “என்ன ஐந்து வருஷம் கழிச்சி.....நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து, என்ன சொல்ல வர சொல்லுடி” என ஆர்வமாக கேட்க..

பின்னே நகர்ந்துக் கொண்டே ப்ரியா , “நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து பம்பு செட்டுக்கு வந்து குளிங்க..... பிராபளம் சால்வ்டு” என்க..

சிறிது நேரம் புரியாமல் முழித்த மோகனா, பின் புரிந்த பின்போ “அடியேய் உன்ன என்ன பண்றேன் பாரு” என்று அவளை துரத்த ..

“ஹா ஹா நல்ல ஐடியா சொல்லிருக்கேன்.... அதுக்கு ஏண்டி என்ன துரத்துறே” என்று கூறிக் கொண்டே ஓட,, மோகனா துரத்த என்று இருவரும் வந்து சேர்ந்த இடம் பம்பு செட்டுக்கு..

இவர்கள் வரும் முன்னரே மேகா வந்து மோட்டாரை போட, அந்த பெரிய தொட்டிக்குள் தண்ணீர் விழுந்து நிரம்பி, பின் வெளியேறி வயலுக்குள் பாய்ந்து கொண்டிருந்தது...
மேகா தண்ணீர் தொட்டிக்குள் இரங்கிவிட்டு தோழிகள் இருவரையும் அழைக்க,

இப்படி வெட்ட வெளியில் குளிப்பதா என்று இருவரும் தயங்கி நின்றனர்.....

அப்போது அங்கு கை கழுவ வந்த ஒரு பெண்மணி இவர்களை பார்த்து “என்னம்மா தயங்குரிய ஒன்னும் பயமில்லை இது எங்க அய்யா தோட்டம்... ஒரு ஈ காக்கா கூட எங்க அய்யாகிட்ட கேக்காம உள்ள வர முடியாது..... ஆம்பளைங்க எல்லோருக்கும் இன்னைக்கி தென்னந்தோப்புலதான் வேலை....நாங்களும் இங்கதான் களை எடுத்துட்டு இருக்கோம்...போங்கம்மா போய் தைரியமா குளிங்க..அங்க பாருங்க எங்க சின்னம்மா எப்படி தொட்டிக்குள்ள இறங்கிட்டாவ, என சொல்லிவிட்டு அந்த பெண்மணி செல்ல..

“சரி வா நாமும் குளிக்கலாம் ப்ரி” என்று மோகனா தொட்டிக்குள் இறங்க, பிரியாவும் தொட்டியில் இறங்க போகும் முன் அவளது அலைபேசியை கீழே புள் தரையில் வைக்கபோக அப்போது அவளது அலைபேசி அழைக்க யார் என்று பார்த்தவள் “அம்மா காலிங்” என்று திரையில் காட்டவும்..

“மோஹி அம்மா கூப்பிடுறாங்க நான் பேசிட்டு வர்றேன்” என்றவள், திரும்பி நடந்து கொண்டே பேச ஆரம்பித்தாள்..
தன் அன்னையிடம் பேசி முடித்தவள் ,

அப்பொழுதுதான் கவனித்தாள் தான் நிற்பது வாழை தோட்டம் என்று ....

ச்சே பேசிக்கொண்டே இங்க வந்துவிட்டோமோ என்று எண்ணியவள் , “சரி வந்தது தான் வந்தோம். இதையும் கொஞ்சம் சுத்தி பார்த்துட்டு போவோம்” என்று சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே நடக்க, அவள் மனமோ சந்துருவிடம் மானசீகமாக நன்றி கூறிக் கொண்டிருந்தது....
“தேங்க்ஸ்டா சந்துரு , நல்ல வேளை சிம்லா போகலை , இல்லன்னா இந்த ஊரை நான் ரொம்ப மிஸ் பண்ணிருப்பேன்” என்று மனதில் நன்றி உரைத்தவாறே வந்தவள்....தன்னை யாரோ பின் தொடர்வதாக தோன்ற அப்படியே நின்று, மெதுவாக திரும்பி பார்க்க, அங்கே யாருமில்லை...

மப்ச் என்றுவிட்டு மீண்டும் சிறிது தூரம் நடந்தாள் ப்ரியா..

மறுபடியும் யாரோ பின்னால் வருவது போல் இருக்க.. சட்டென்று திரும்பியவள் யாரும் இல்லை என்றதும் லேசாக பயம் பிடித்துக்கொண்டது ..

ஆனாலும் “ஷ் அப்பஆ உன் தைரியம் எல்லாம் எங்க போச்சு ப்ரி.... இவ்ளோதானா நீ” என்று தனக்குதானே சொல்லிக்கொண்டு, மீண்டும் நடக்க, அப்பொழுது

திடீரென்று நிறைய காலடியோசை கேக்க, இருந்த கொஞ்ச நஞ்சம் தைரியம் எல்லாம் காணாமல் போய் பயத்தில் நின்று
கொண்டிருந்த பிரியாவின் காதில் தேன் வந்து பாய்ந்தது போல் இருந்தது சபரிஷின் குரல்...

“இங்க என்ன பண்ணிகிட்டு இருக்கே” என்று கேட்டு கொண்டே வந்தான்..

அவனை பார்த்ததும் நிம்மதி பெருமூச்சு விட்டவள், “ஏன் நான் இங்க வரக்கூடாதா” என்று எதிர்கேள்வி கேட்க,

அவன் அதை கண்டு கொள்ளாமல் அவள் அருகில் வந்து “நேத்து ராஜேஷ் உன்ன பார்க்க வீட்டுக்கு வந்தானா” என்று கேட்க

அவளும் “ஆமா என்னை பார்க்க வந்தாங்க ஏன் என்னாச்சு”..

“அவன் வந்து உன்கிட்ட ஒரு கவர் குடுத்தானா”

சற்று தடுமாறியவள் “ஆ...ஆமா ஏன் கேக்குறீங்க.. அந்த கவர்ல என்ன இருக்குன்னு உங்களுக்கு தெரியனுமா?

“அது எனக்கு தேவை இல்லாத விஷயம்” என்று அவன் சொன்னதும்..

“அப்பாடா….நல்ல வேலை அதில் என்ன இருந்ததுன்னு கேட்கலை.. சந்துருகிட்ட முதலில் பேசிட்டுதான் மற்றவங்களுக்கு சொல்லனும்” என்று நினைத்திருந்தாள்..

“நேத்துதான சொன்னேன்…..மறுபடியும் அவன்கிட்ட என்ன பேச்சி உனக்கு” என்று கோபமாக கேட்டான்..

“ஓஓஓஓ அய்யா அதான் உர்ருன்னு இருக்கிறாரா ஓகே ஓகே” என மனதில் நினைத்தவள்.. “ஏன் நான் பேசினா உங்களுக்கு என்ன.. அப்படித்தான் பேசுவேன் என்ன பண்ணுவீங்க”

அவளிடம் நெருங்கி வந்தவன் ,அவளின் கையை பிடித்து அருகில் இழுத்து…. அவளின் தாடையை பிடித்து “என்ன சொன்னே பேசினா என்ன பண்ணுவீங்கன்னா கேட்ட”

அவனின் இந்த திடீர் செய்கையால் படபடவென்று அடித்து கொண்ட மனதை மறைத்துக் கொண்டு, கண்கள் விரிய அவனை பார்த்திருந்தாள்

அந்த விரிந்த கண்களில் தன் வசம் இழந்த சபரிஷ் அவளின் இதழை நோக்கி குனியவும்,

“ரிஷிஈஈஈஈஈ” என்று அலரியவள் அவனை பிடித்து இழுக்க இருவரும் மண்தரையில் உருண்டனர்

அவர்கள் கீழே விழவும் , அவர்கள் முன் இருந்த வாழை மரமும் சரிந்து அவர்கள் பக்கத்தில் விழுந்தது. அதன் அருகே கூர்தீட்டிய அருவாளும் இருக்க...
பிரியாவின் அலறலுக்கான காரணம் நன்றாக விளங்கியது அவனுக்கு.....

அவள் மட்டும் தன்னை பிடித்து தள்ளாமல் இருந்திருந்தால்.. வாழைமரத்திற்க்கு பதிலாக தன் தலை விழுந்திருக்கும் என்று நினைத்தவனின் மனது...கடினமானது....
இதை செய்ய துணிந்தவர்களின் மீது கொலைவெறியே வந்தது.....
பின் நிலைமையை ஓரளவுக்கு யூகித்தவன்....சுற்றும் முற்றும் பார்க்க.....அவர்களை சுற்றி ஒரு கூட்டமே நின்றிருந்தது....

சுவாசம் தொடரும்...

சுவாசம் 10

“நீ குழந்தையா இல்லை”
“குமரியா”!!!
“உன் நடத்தையில் குழந்தையாகவும்”
“உன் பார்வையில் குமரியாகவும்” “இருக்கிறாயே”!!!

தென்னந்தோப்பிற்க்கு சென்ற சபரிஷ்…அங்கு வேலையாட்கள் மரத்தில் இருந்து தேங்காய் பறித்து போடுவதை கண்காணித்துக் கொண்டே அங்கு கிடந்த கயிற்று கட்டிலில் அமர்ந்தான்…

அப்பொழுது அங்கிருந்த ஒருவன் வந்து சபரிஷிடம்….”அய்யா குடிக்க இளநீர் வெட்டட்டுமா” என்று கேட்க,

“இல்ல வேண்டாம்… நீ போய் வேலையை பாரு” என்றதும் அவன் நகர்ந்து விட,

சபரிஷின் மனமோ நேற்று பிரியா பேசிய பேச்சில்… கோபத்தில் இருந்தது… பிரியா, ராஜேஷிடம் தான்

தடுத்தும் கேளாமல் பேசியதையும், அதை அவளிடம் கேட்கும் போது, அவளின் துடுக்கான பதிலில், தான் கோபம் கொண்டதையும் நினைத்தவன், அப்படியே கட்டிலில் தன் இரு கைகளையும் தலைக்கு கொடுத்து தென்னை மர கிளையை பார்த்துக் கொண்டே இருந்தான்..... பின் இரவு சரியாக தூங்காததால் அயர்வில் தன் கண்களை மூடினான்.....

திடீரென்று காலடி ஓசை கேட்டு கண் திறந்தவன்.... சுற்றும் முற்றும் பார்க்க, அங்கு வேலை செய்பவர்களை தவிற வேறு யாரும் இல்லாததால்.... அமைதியாகி பின் உள்ளுணர்வில் ஏதோ தோன்ற சட்டென்று எழுந்தவன் தென்னந்தோப்பை விட்டு வேகமாக வெளியே வந்தான்.

அங்கிருந்த மோட்டார் பம்பை பார்க்க அங்கு செல்வி, மேகா , மோகனா மட்டுமே தண்ணீரில் விளையாடி கொண்டு இருக்க, பிரியாவை காணாததால், எங்க போனா இந்த வாயாடி"என நினைத்துக் கொண்டே தோட்டத்தை சுற்றி முற்றி பார்க்க,
அவளோ, அலைபேசியில் பேசிக்கொண்டே வாழைத்தோட்டத்துக்குள் போவதை பார்த்தவன், பின் என்ன நினைத்தானோ அவனும் அவள் பின்னே சென்றான்..

அவள் ஓரிடத்தில் நிற்பதை கண்டவன் “இங்க என்ன பன்னிகிட்டு இருக்க” என்று கேட்க அவளின் ஏடாகூடமான பதிலில், அவனுக்கு கோபம் வந்து விட்டது…அதுவும் இல்லாமல் நேற்று தான் ராஜேஷை பற்றி கேட்க

“நான் அப்படித்தான் பேசுவேன்…உங்களுக்கு என்ன வந்தது” என்று கேட்டுவிட்டு நில்லாமல் சென்றது அவனுள் கோப தீயை ஏற்றிவிட்டது… இன்றும் அவள் அதே போல் பேசவும்….. அவன் கோபத்தில் தன்னை அறியாது…. ஏதோ ஒரு உணர்வின் தாக்கத்தால்…அவளின் முகம் நோக்கி குனிய…..

அந்த நேரத்தில் பிரியா ரிஷி என்று அலறி அவனை இழுத்து கொண்டு தரையில் உருள, பின் அவர்கள் பக்கத்தில் வாழைமரம் வெட்டுபட்டு அருவாளுடன் விழுந்ததை கண்டவன்….தன் உணர்வில் இருந்து வெளிவந்து, சட்டென்று சுதாரித்து திரும்பினான்.அங்கு நிறைய பேர் நின்றிருந்தனர்….

அதில் ஒருவன் “ஏய்” என்று கத்தியபடி வேகமாக சபரிஷை தாக்க அருவாளுடன் வர, இடது கையால் அதை தடுத்து பிடித்தவன், வலது கையால் அவன் கழுத்தை பிடித்து ,தன் வலது காலால் எட்டி உதைக்க….. தூர போய் ஒரு வாழை மரத்தில் மோதி மரத்துடன் அவனும் கீழே விழுந்தான்…

முன்னவன் வீச வந்த அருவாள் இப்பொமுது சபரிஷ் கையில் இருப்பதை பார்த்த மற்றொருவன்.. “ஏலேய் அவனை வெட்டுங்கல” என்று கூவ..

மற்ற திசைகளில் கூடியிருந்தோர் கையில் அருவாளை ஆளுக்கொன்று பிடித்தபடி சபரிஷை தாக்க ஓடி வந்தனர்…..

அவர்களை எல்லாம் பார்த்தவனின் முகத்தில் ரௌத்திரம் பொங்க, தன் கையில் உள்ள அருவாளை வாயில் வைத்தவன், வேட்டியை மடித்து கட்டி, மீசையை முறுக்கிவிட்டு விட்டு மீண்டும் அருவாவை கையில் தாங்கி…. ப்ரியாவை இழுத்து அவனின் கையணைப்பில் வைத்துக்கொண்டே “டேய் இப்ப வாங்கடா” என்று கர்ஜித்தபடி அவர்களை தாக்க ஆரம்பித்தான்….

(இப்போ நீங்க நம்ம ப்ரியாவோட நிலைமையை கொஞ்சம் யோசிச்சி பாருங்க மக்களே , எப்படி பீல் பண்ணுவான்னனு)
இத்தனை களோபரத்திலும் நம் .பிரியா அவனின் ஆண்மை நிறைந்த கம்பீரத்திலும், தைரியத்திலும் கவர்ந்து….அவனை மட்டுமே பார்த்துக் கொண்டு இருக்க…….

அதை கண்ட அவள் மனசாட்சி " பிரி இங்க என்ன நடக்குதுன்னு சுத்தி பாரு....இந்த கலவரத்திலும் ஒரு குதுகலமா அவனை சைட் அடிச்சிட்டு இருக்க பார்த்தியா....உன்னை என்ன சொல்லறதுன்னு எனக்கு தெரியல"

அதில் தன்னை சுதாரித்து கொண்டு சுற்றி பார்க்க....சபரிஷ் அவர்களை தாக்க வந்தவர்களை.....இவன் லாவகமாக தடுத்து திரும்பி அவர்களை தும்சம் செய்வதை பார்த்தவள்

"வாவ்..... செம ஃபைட்..... இந்த மாதிரி சண்டை எல்லாம் நான் படத்துலதான் பார்த்துருக்கேன்..... சபரிஷ் என்னமா ஃபைட் பன்றான்...

அப்படியே பார்க்க மதுரை வீரன் மாதிரி...ச்சே ச்சே...திருநெல்வேலி வீரன்னு சொல்லனுமோ" என்று தன் மனசாட்சிக்கே கவுன்டர் கொடுத்து...தன் வேலையை தொடர....(அதுதாங்க ஜொள்ளுவிடும் வேலை)

திடிரென்று அவளை விலக்கினான் சபரிஷ்..... அவளோ

“ச்சே நல்ல கனவுல இருக்கும் போது மோஹி இப்படி தான் எழுப்புவா…. அதுமாதிரிதான் அவளோட குடும்பமே இருக்கும் போல் என மனதுக்குள் சலித்துக் கொண்டு அவனை பார்க்க,

“பிரியா சீக்கிரம் இங்க இருந்து தென்னந்தோப்புக்கு போ… விஷயத்தை சொல்லி நம்ம ஆளுங்களை இங்க அனுப்பு..இங்க இருக்கிற ஒருத்தனும் தப்பிக்க கூடாது …..போ” என்று கத்தினான் சபரிஷ்.

அப்போதுதான் நிலமையின் தீவிரத்தை உணர்ந்து கவனித்தாள்..இன்னும் நிறைய காலடியோசை கேட்க “இல்ல நான் போக மாட்டேன் நீங்களும் வாங்க” என்று நிலமை புரியாமல் பேசிக்கொண்டிருக்க,

அப்பொழுது, ஒருத்தனின் கழுத்தை பிடித்தபடி..
“சொல்றதை செய்…போ இங்கிருந்து” என்று மீண்டும் அவன் கத்த,
அந்த குரலில் பயந்தவள் “ஆங் சரி சரி” என்று கூறிவிட்டு…அவன் சொன்னதை சரியாக கவனிக்காமல் , தென்னந்தோப்பிற்கு பதிலாக கரும்பு தோட்டத்திற்குள் புகுந்து விட்டாள்…

அதை பார்த்த ஒருவன் “டேய் அந்த பொண்ணை பிடிங்கடா” என்று சொல்ல, மற்றொருவன் வேகமாக

அவளை துரத்திக் கொண்டு கரும்பு தோட்டத்திற்கு ஓடினான்..

பிரியாவை ஒருவன் துரத்துவதை கண்டவன் " ஷிட் நான் என்ன சொன்னேன், இவ என்ன பண்றா" என நினைத்தவன்..... தன்னை தாக்கி கொண்டிருந்த அனைவரையும் பந்தாடிவிட்டு....அவனும் கரும்பு தோட்டத்தில் உள்ளே நுழைய, அங்கே அவன் கண்ட காட்சியில் அவன் இதயம் ஒரு நிமிடம் நின்று துடித்தது.....

.....

சந்துரு, தன் தந்தை மற்றும் சித்தாப்பாவை அவர்களின் கடையில் இறக்கி விட்டு விட்டு, லட்சுமிக்கு போன் செய்ய.....

அவரோ சபரிஷ்க்கு தோட்டத்தில் வேலையிருப்பதால், அனைவரையும் அவனே அழைத்துச் சென்றிருப்பதாக கூற....

மோகனாவிடம் தனியே பேசும் ஆவலில்...இந்த தனிமையை விட மனமில்லாமல்... அனைவரையும் மாலையில் தான் அழைத்து வருவதாக கூறிவிட்டு...

தன்னவள் மாற்றம் குறித்து தெரிந்து கொள்ளும் ஆவலில்..... அவனும் அங்கு வந்து சேர்ந்தான்..

காரில் இருந்து இறங்கியவன் அவர்களை தேட... அங்கே பம்பு செட்டில் குளித்து கொண்டிருப்பதை கண்டவன்...அவர்களை நோக்கி செல்ல...

அவன் தூரத்தில் வரும் போதே அவனை பார்த்து விட்ட மோகனா, அவன் தங்களை நோக்கி வரவும், தான் அணிந்திருந்தது சுடிதார் தான் என்றாலும் ..... அது நனைந்து உடலோடு ஒட்டி அவளின் செழுமையை வெளிச்சம் போட்டு காட்டியது, வருவது தன்னவன்தான் என்றாலும் பெண்களுக்கே உரிய கூச்சம் தடுக்க, தண்ணீர்க்குள் மூழ்கி கழுத்து வரை தன்னை மறைத்து கொண்டாள்

அவர்கள் அருகில் வந்தவன் மோகனாவை பார்த்தான் , அவளோ கூச்சத்தில் முகம் சிவந்து தண்ணீருக்குள் மூழ்கியிருந்தவளை ஓரக்கண்ணால் ரசித்து பாரத்தான்...

அவன் பார்ப்பதை உணர்ந்த அவளின் முகம் வெக்கத்தால் இன்னும் சிவந்து நெளிந்தவளை கண்டவனின் மனதில் மகிழ்ச்சி பொங்கியது, தன்னை

கண்டதும் முகம் திரும்பும் அவள்...இப்பொழுது முகம் சிவந்து தலைகுனிவதை கண்டவன்....தான் தேடி வந்த கேள்விக்கு பதில் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில்... அவளை மேலும் சோதிக்காது..... மற்ற இரண்டு பேரிடம் "அண்ணா எங்க" என்று கேட்க

"பெரியண்ணா தென்னந்தோப்பில் இருக்காங்கண்ணா" என்று மேகா சொல்ல....

அப்பொழுதுதான் கவனித்தான் அங்கு பிரியா இல்லாததை.....பின் அவர்களிடம் "ஆமா இந்த வாலு எங்க காணோம்"

"அவங்களுக்கு அவங்க அம்மாகிட்ட இருந்து போன் வந்தது... அவங்க பேசிகிட்டே இப்படி நடந்து போனாங்க" என்று வாழை தோட்டத்தை நோக்கி கை நீட்டினாள் மேகா..

"சரி நான் பார்த்துகிறேன்" என்றுகூறி நகர்ந்து விட,

"அப்பாடா" என்று பெருமூச்சு விட்டு மோகனா மெதுவாக தண்ணீருக்குள் இருந்து அவனை பார்த்துக்கொண்டே வெளியே வர

சட்டென்று திரும்பினான் சந்துரு..

அவன் இப்படி திடீரென்று திரும்புவான் என்று நினைக்காத மோகனா,
“அச்சச்சோ” என்று , இவர்களை கவனிக்காமல் தண்ணீரை ஒருவர் மீது ஒருவர் விசிறி அடித்து விளையாடிக் கொண்டிருந்தவர்களின் பின் சென்று மறைய

அவளை பார்த்து கண் சிமிட்டி சிரித்தவன் தென்னந்தோப்பை நோக்கி சென்றான்..

அப்போழுது யாரோ ஓடும் அரவம் கேட்கவும், யாரென்று பார்க்க, ஓடுவது பிரியா என்றதும் , “பேபி” என்று கூப்பிட கூப்பிட அது அவளுக்கு கேட்கவில்லை.. எதுக்கு இப்படி தலைதெறிக்க ஓடுறா என்று நினைத்துக் கொண்டே, அவனும் அவளை நோக்கி போக.. அவள் பின்னால் ஒருவன் கத்தியுடன் துரத்துவதை கண்டவன், “பேபிஈஈஈஈஈஈ” என்று கத்திக்கொண்டே இவனும் அவர்கள் பின்னால் ஓடினான்...

சந்துருவின் சத்தத்தை கேட்ட தென்னந்தோப்பில் உள்ள வேலையாட்கள் சிலர் “எதுக்கு சின்னய்யா இப்படி ஓடுறாங்க” என்று அவர்களும் அவன் பின்னால் ஓடி வந்தனர்

சந்துருவின் பின்னால் ஓடிய பாதி பேர்

வாழைத்தோப்பில் இருந்து கேட்ட “ஐய்யோ.... அம்மா” என்ற சத்தத்தில் அங்கு விரைய,

அங்கே சபரிஷ் நிறைய பேரிடம் சண்டையிட்டு கொண்டிருப்பதை கண்டவர்கள் , வேகமாக சென்று இவர்களும் தாக்க ஆரம்பிக்க,
சபரிஷ் அவர்களிடம் ,இங்க இருக்க ஒருத்தனும் தப்பிக்க கூடாது பிடிச்சி கட்டிவைங்க.... நான் இப்போ வரேன் என்று கட்டளையிட்டு விட்டு சென்ற போதுதான் அங்கு கண்ட காட்சியில் தான் அவன் அப்படி நின்றது.....

பிரியாவை துரத்தி சென்றவனோ தனக்கு பின்னால் சந்துரு வருவதை கண்டதும் ஒரே எட்டில் பிரியாவை பிடித்து அவளின் இரு கைகளையும் பின்னால் மடக்கி பிடித்து. அவள் கழுத்தில் கத்தியை அழுத்தி பிடித்தான்..

அதை கண்ட சந்துரு “பேபிஈஈஈஈஈ.....டேய் வேண்டாம் அவளை விட்டுடு” என்று கத்தி கொண்டே தனக்கு பின்னால் நின்றிந்த சபரிஷிடம் “அண்ணா விட சொல்லுங்க அண்ணா காப்பாத்துங்க, அண்ணா ப்ளீஸ்” என்று பதட்டத்துடன் நிற்க,

அதற்குள் , ஏதோ பிரச்சணை என்று யூகித்த செல்வி,

மேகா , மோகனா,அனைவரும் தாங்கள் கொண்டு வந்த உடையை மோட்டார் ரூமில் வைத்து மாற்றிவிட்டு ஓடி வந்தவர்கள் “அய்யோ பிரியா” என்று அவர்கள் பங்குக்கு கத்த.

மோகனாவோ சந்துருவை பார்த்து ‘காப்பாத்துங்க’ என்று வாய் அசைக்க…

அவன் அவளை பார்த்து தன் தோளை குலுக்கி இரு கைகளையும் மேலே காட்டி ஆண்டவன் விட்ட வழி என்று சைகையில் சொல்லவும்

அவளோ பதட்டத்துடன் மீண்டும் ப்ரியாவை பார்த்தாள்...

தன் அதிர்ச்சியில் இருந்து வெளிவந்த சபரிஷ், “டேய் அவளை விட்றா” என்று கூறிக்கொண்டே அவனை கொன்று புதைக்கும் கோபத்துடன் அவனிடம் நெருங்க..

“ஏலேய் எப்படியும் உன்னை நாங்க உயிரோட விடமாட்டோம்ல ஒழுங்கு மரியாதையா அவங்களை விட்டுருல” என்று அங்கு வேலைபார்ப்பவர்களும் ஆளாளுக்கு கத்த…

இவ்வளவு பேரை எதிர்பார்க்காத
அவன்.....பயந்துவிட்டான்
“ஐய்யய்யோ இப்போ நான் இவங்க கையில
மாட்டினேன் என்னை துண்டு துண்டா வெட்டி
பொதைச்சிருவானுங்களே, பேசாம நானும் அவனுங்க
கூடவே அடி பட்டிருக்கலாம், என்று நினைக்க
ஆரம்பித்துவிட்டான்.... என்ன செய்ய நேரம் கடந்த
ஞானோதயம்..

எல்லோரும் அவனை நோக்கி நெருங்க நெருங்க..
அவனோ பயத்தில் ப்ரியாவின் கழுத்தில் கத்தியை
மேலும் அழுத்தினான்....

“ஹக்” என்ற சத்தம் கேட்க , அனைவரும்
அதிர்ந்தனர்...

“அய்யோ பேபி” என்றும், “ப்ரி” என்றும், “ரியா” என்றும்
ஒரே நேரத்தில் அனைவரும் கத்த, (அந்த நேரத்தில்
சபரிஷின் ரியா என்ற வார்த்தை காற்றோடு கலந்து
போனது)

ஆனால் அங்கே.. ப்ரியாவின் கழுத்தில் கத்தி
வைத்திருந்தவன், வலியில் கண்கள் சுழல கீழே

விழுந்தான்.... ஆம் பிரியாதான் அவனை முக்கியமான இடத்தில் தாக்கியிருந்தாள்.....

விழுந்தவனிடம் அசைவில்லை என்றதும் எல்லோரும் பிரியாவை பார்க்க.....அவளோ 'டேய் உங்களை அங்கேயே ரவுண்டு கட்டியிருப்பேன்... சரி ஹீரோ உங்க கூட விளையாடட்டும்ன்னு சும்மா விட்டேன் , அதையும் மீறி என் மேலேயே கை வைக்கிறியா' என்று மனதுக்குள் நினைத்தவள்,

சபரிஷை பார்த்து.."நான் நாய்க்கு வேணா பயப்படுவேன்
ஆனா, இந்த மாதிரி நாதாரிங்களுக்கெல்லாம் பயப்பட மாட்டேன்" என்றவள் மீண்டும் அவனை எட்டி உதைத்து தன் கைகளில் தூசி தட்டியவள், எப்படி என்று புருவத்தை உயர்த்தி கேக்க..

"ம்ம்ம்ம்" என்று அவளை போலவே கண்களால் மெச்சினான் சபரிஷ்.

இவர்களின் விழி பாஷையை கண்ட மோகனா "என்னடா நடக்குது இங்கே" என்பது போல் அவர்களை சுவாரசியமாக வேடிக்கை பார்க்க....

“பேபி போதும் விட்டுரு அவனை” என்று கத்திய சந்துரு,
“இதுக்கு தான் சொன்னேன் அண்ணா , அவனை காப்பாத்துங்கன்னு” …..என்றவன் , பக்கத்தில் நின்ற வேலையாட்களிடம் அவனை அப்புறபடுத்த சொல்ல, இரண்டு பேர் ஓடி போய் கீழே கிடந்தவனை தூக்கி கொண்டு வந்து தென்னந்தோப்பில் கிடந்த மற்றவர்களுடன் இவனையும் சேர்த்து போட்டனர்……

பின் அனைவரும் அங்கு செல்ல….. சபரிஷ் அங்கு தன்னை தாக்க வந்து வெட்டு பட்டு கிடந்த ரௌடிகளிடம் “யாருடா நீங்க எல்லாம்…. உங்களை யார் அனுப்பி வைச்சா….. நீங்களா சொன்னா தப்பிச்சீங்க. இல்ல நானா கண்டுபிடிச்சேன் உங்களை உயிரோட என் தோட்டத்துக்கு உரமா போட்டு போதைச்சிருவேன்” என்று தன் சிம்ம குரலில் கர்ஜிக்க

“அய்யா நாங்க உண்மையை சொல்லிடுறோம் ….. எங்களை கே.ஆர் அண்ணாச்சி தான் அனுப்பினார் உங்களை போட சொல்லி. நேத்து ராத்திரி இங்க கரும்பு தோட்டத்துக்குள்ள நாங்க பதிங்கிட்டோம்.. நீங்க தென்னந்தோப்புக்குள்ள போறதை பார்த்தோம்… அப்புறம் நீங்க இந்த பொண்ணு பின்னாடியே வந்தீங்களா… அதான் நல்ல சான்ஸ் விடக்கூடாதுன்னுதான் நான் உங்க மேல அருவாளை

வீசினேன்” என்றவன்

பீதியுடன் ப்ரியாவை பார்த்து “இவங்க உங்களை இழுத்து காப்பாத்திட்டாங்க…” என்றவன் அவன் அருகே பிரியாவிடம் அடிவாங்கி இன்னும் எழாமல் கிடைந்தவனை பார்த்தவன்…மீண்டும் சபரிஷை பார்க்க இப்போது அவனது கண்ணுக்கு கடவுளாக தெரிந்தான் சபரிஷ்…

ஏன்னென்றால் சபரிஷாவது கையிலும் காலிலும் தான் வெட்டினான்…. இந்த பொண்ணு ஒரே அடியில் மூச்சு பேச்சு இல்லாம ஆக்கிட்டாளே, நல்லவேளை நான் இவளை பிடிக்க போகலை….போயிருந்தேன் நானும் இந்த நிலைமையில்தான் இருந்திருப்பேன்” என்று நினைத்தவன்…. சபரிஷிடம் “அய்யா எங்களை விட்டுருங்கய்யா” என்று கெஞ்சினான்.

“சரி நான் இங்க வருவேன்னு எப்படி தெரியும் உங்களுக்கு” என்று கேட்டவன் குரலில் கோபம் குறையாமல் இருப்பதை கண்டு எச்சில் விழுங்கியவன்..

“இங்கன்னு இல்லைங்கய்யா , நீங்க எங்கல்லாம் போவீங்களோ அங்கெல்லாம் ஆளுங்க செட் பண்ணி வச்சிருக்காங்க கே.ஆர் அண்ணாச்சி… இன்றைக்கு

உங்களை எப்படியும்…” என்றவன் மேலே சொல்லாமல் நிறுத்த… அதை கேட்ட அங்கிருந்தோர் அனைவரும் அதிர்ந்தனர்.

“அய்யா அது யாரு சொல்லுங்க… அவனை நார் நாரா கிழிச்சு தொங்க விட்டுறோம்”..என்று தன் அய்யாவின் மேல் ஒருத்தன் கை வைக்கிறதா… என்று தோட்டத்தில் வேலை பார்ப்பவர்கள் பொங்கி எழ…அவர்களை கை நீட்டி தடுத்தவன்…

சந்துருவிடம் அலைபேசியை வாங்கி சற்று தூரம் சென்று யாருக்கோ பேசினான்……. மறுமுனையில் சொல்லபட்ட செய்தியில், கே.ஆர் யை வேறோடு அழிக்கும் வழி கண்டுபிடித்ததில், கோபத்தை விடுத்து புன்னகை மலர்ந்தது…. அவன் முகத்தில்…

சிறிது நேரத்தில் வழக்கம் போல எல்லாம் முடிந்தவுடன் போலிஸ் வர, எல்லோரையும் ஜீப்பில் அள்ளிப் போட்டுக் கொண்டு போனார்கள்..

பின் வேலையாட்கள் அவரவர் வேலைகளை பார்க்க சென்று விட,

மற்றவர்கள் ப்ரியாவின் அருகில் சென்று “உனக்கு ஒன்னும் இல்லையே” என்று நலம் விசாரிக்க

“உங்க கழுத்துல கத்தியை பார்த்ததும் பயந்துட்டேன் அக்கா” என்று மேகா சொல்ல

செல்வியோ “சூப்பர் பிரியா , உனக்கு கராத்தே தெரியுமா” என கேட்க,

மோகனாவோ “தெரியும் காலேஜ்ல ஒரு பையன் எங்க கிட்ட வம்பு பண்ணினான்.... அப்போ சந்துருதான் வந்து எங்களுக்கு ஹெல்ப் பண்ணினாங்க... அதுக்கு அப்புறம் எங்களை கராத்தே கத்துக்க சொல்லி கிளாஸ்ல சேர்த்துவிட்டாங்க..... அது இப்போ உதவியிருக்கு” என்று சொல்ல

“ம்ம்ம் சூப்பர் சந்துரு பெண்கள் கண்டிப்பா தற்காப்பு கலை கத்துக்கனும் அப்பத்தான் தக்க சமயத்தில் உதவும் இல்லையா” என்று செல்வி கூற,

இவர்களின் சம்பாஷனைகளை கேட்டுக் கொண்டே வந்த சபரிஷ், பிரியாவிடம் “நான் உன்கிட்ட என்ன சொன்னேன்” என்று கேட்டான் அடக்கப்பட்ட கோபத்துடன்.

அவளை அப்படி ஒரு நிலைமையில் பார்த்ததும் அவன் உயிர் ஒரு நிமிடம் நின்று துடித்தது அவனுக்கு

மட்டும் தானே தெரியும்..... அவளுக்கு ஒன்று என்றால் தன் இதயம் ஏன் இப்படி துடிக்கவேண்டும் என்று யோசிக்க தவறினான் என்பதை விட... அவனே அவன் மனதை அறிய விரும்பவில்லை என்பதுதான் நிஜம்...

“நீங்க கோபத்துல கத்துனதும் நான் பயத்துல சரியா கவனிக்கல..... அதான் தென்னந்தோப்புக்கு பதிலா கரும்புதோட்டதுக்குள்ள போய்ட்டேன்..... அந்த தடியன் என் பின்னாடி வந்து கழுத்துல கத்தி வைப்பான்னு எனக்கு எப்படி தெரியும்” என்று சிறு குரலில் தலையை குனிந்தவாறு சொல்ல,

அதை கேட்டு சிறிது சமாதானம் அடைந்து....”சரி எல்லோரும் வீட்டுக்கு கிளம்புங்க” என்றான்

“என்ன கிளம்புறதா...ம்கூம்.. முடியாது நான் இன்னும் பம்பு செட்டுல குளிக்கவே இல்ல” என சிறுகுழந்தையாக சிணுங்க..

சிறிது நேரத்திற்க்கு முன்தான் வீரங்கனையாய் ஒருத்தனை ஒரே அடியில் வீழ்த்தியவள்..இப்பொழுது சிறு பிள்ளையாய் சிணுங்கவும்

எல்லோரும் அவளைப் பார்த்து சிரித்துவிட்டனர்...

சபரிஷூக்கும் அவளின் சிணுங்களில் சிரிப்பு வந்தது..

அப்பொழுது தீடீரென்று “ஜய்யய்யோ பிரியாக்கா உங்க கழுத்துல ரத்தம்” என்று மேகா கத்த...அதில் எல்லோரும் பதறி அவளை பார்க்க

“என்னது ரத்தமா” என தன் கழுத்தை தொட்டு பார்த்தவள் கையில் ரத்த கசிவு இருக்க, “ஐய்யோ ரத்தம்” என்று கத்தியபடி மயங்கி சரிந்தாள் ப்ரியா..

.....

சபரிஷ் வீடு...

சில மணி நேரம் கழித்து கண்விழித்த பிரியா “நான் இன்னும் உயிரோடுத்தான் இருக்கேனா” என்று கேட்டுக்கொண்டே சுற்றி பார்க்க ..சபரிஷ் குடும்பமே அங்கு தான் இருந்தது....ஆனால் முறைத்துக்கொண்டு....

“என்ன இது எல்லோரும் என்னை ஏன் இப்படி பாசமாக பாக்குறாங்க , எல்லோரும் என்னை இப்போ சோகமால பாக்கனும்” என்றவள் மோகனாவிடம்..
“மோஹி எனக்கு ஒன்னும் இல்லையே , என்னால பேச முடியும் தானே” என கேட்டாள் பேசிக்கொண்டே..

“அக்கா என்னாச்சு இவங்களுக்கு கழுத்துல தானே கத்தி பட்டுச்சு அதுவும் லேசா” என்று மேகா செல்வியின் காதை கடிக்க

“ஆமா இப்ப அதுக்கு என்ன” என்று செல்வியும் பதிலுக்கு காதை கடிக்க

“பின்ன இவங்க மூளை குழம்பி போன மாதிரி பேசுறாங்க”

“அதான்டி எனக்கும் புரியலை”

மோகனாவோ “லூசு லூசு எதுக்குடி சம்பந்தமே இல்லாம மயக்கம் போட்டு விழுந்த” என்று கேட்க.

“என்னதுஊஊஊஊ சம்பந்தமே இல்லாம விழுந்தேனா…. என் கழுத்துல அந்த ரவுடி கத்தி வச்சி கிழிச்சு ரத்தமெல்லாம் வந்துடுச்சு….அத பார்த்து எனக்கு மயக்கம் வராதா…… போடி உனக்கு என் மேல பாசமே இல்ல” எனவும்…… மோகனா உடனே ப்ரியாவை கட்டிக்கொண்டாள்..

அவள் சொன்ன பாவனையில் பெரியவர்கள் உள்பட எல்லோரும் சிரித்து விட்டனர்..

“சரி சரி ப்ரியா ரெஸ்ட் எடுக்கட்டும் , நாம வெளிய போகலாம் வாங்க” என்று பிரபா சொல்லிவிட்டு முன் செல்ல..

சபரிஷ் , சந்துரு , மோகனாவை தவிர எல்லோரும் வெளியே அவரின் பின் சென்றனர்..

பிரியாவின் அருகில் வந்த சந்துரு...” பேபி ரொம்ப வலிக்குதா” என்று சோகமாக கேட்க

அவன் வருந்துவதை காண முடியாமல் அவனை பார்த்து “இல்லடா வலிக்கல , ஐ அம் ஓகே..... என்றவள், பின் அவனை தன்னருகே இழுத்து அவனின் காதோரம் “இன்னைக்கு நைட் மொட்டை மாடிக்கு வா....நான் உன்கிட்ட கொஞ்சம் பேசணும்” என அவனுக்கு. மட்டும் கேக்குமாறு சொல்ல, அவனும் என்ன ஏது என்று கேட்காமல் சரி என்று தலை அசைத்தான்.

இவர்கள் எப்போவுமே இப்படித்தான்.. அதனால் மோகனாவும் அவர்கள் பழகுவதை தப்பான கோணத்தில் எடுத்துக் கொள்ள மாட்டாள்..... தன்னை விட பிரியா மேல் அவனுக்கு பாசம் அதிகம் என்று

அவளுக்குத்தான் தெரியுமே.

“சரி சரி அப்புறம் ரகசியம் பேசலாம்…இப்ப நீ ரெஸ்ட் எடு”.. என்று மோகனா சொல்ல..

“ஹே போடி நான் சந்துரு கூட பேசுறத பார்த்து உனக்கு பொறாமை” என்க

“எனக்கு பொறாமை…ம்ம்ம்…அதை நீ கண்ட…… பேக்கு மாதிரி உளராம படுத்து தூங்கு” என்று விட்டு வெளியே செல்ல சந்துருவும் மோகனா பின்னாடியே வால் பிடித்து செல்லவும்.. அவர்களையே புன்னகையுடன் பார்த்திருந்தவள்…பின் ஒரு பேருமூச்சுடன் திரும்ப அங்கு

கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டு கால்களை லேசாக அகற்றி நின்று தன்னையே பார்த்துக் கொண்டிருந்த சபரிஷை கண்டவள்….

“இவன் இங்கதான் இருக்கானா……ஏன் எதுவும் பேசாமல் இப்படி பார்த்து வைக்கிறான்….. வர வர இவன் பார்வைக்கான அர்த்தமே தெரியமாட்டிங்கிது…. இப்ப என்ன சொல்லி திட்ட போறானோ” என்று தனக்குள்ளே யோசித்துக் கொண்டிருக்க…

அவளையே பார்த்துக்கொண்டிருந்தவன் கட்டில் அருகே வந்து ஒரு வினாடி அவளை கூர்மையாக பார்த்தவன் மறு வினாடி, அவளை இறுக்கி அணைத்திருந்தான்.....

சுவாசம் தொடரும்...

சுவாசம் 11

உனக்காகப் பிறந்தவள்
நான் தானோ என்று
எனக்குத் தெரியாது!
ஆனால்,
எனக்காகப் பிறந்தவன்
நீ தான் என்று
உன் ஒற்றை அனைப்பில்
தெரிந்து கொண்டேன்!!!...

பிரியா இரத்தத்தைக் கண்டு மயங்கி விழுந்தவுடன், எல்லோரும் பதற, சபரிஷ் இரண்டே எட்டில் அவளை நெருங்கி, அவளைக் கீழே விடாமல் தாங்கினான்… பூவை விட மென்மையாக இருந்தவளை, அதைவிட மென்மையாகக் கையில் ஏந்தியவன், தன் பின்னே யார் வருகிறார்கள் என்று கூடப் பார்க்காமல், தன் காரில் கிடத்தி வேகமாகக் கிளப்பிச் சென்று விட்டான்….. காரில் செல்லும் போதே தன் குடும்ப மருத்துவரை போனில் அழைத்துத் தனது வீட்டுக்கு வர சொன்னவன்.. காரின் வேகத்தைக் கூட்டினான்…..

சந்துருதான் மற்ற அனைவரையும் தன் காரில் ஏற்றிக் கொண்டு சபரிஷை பின் தொடர்ந்தான்

அவன் பிரியாவை கையில் ஏந்திக் கொண்டு வீட்டின் உள்ளே வருவதைக் கண்ட அவன் குடும்பத்தில் உள்ளவர்கள் , “ என்னய்யா ஆச்சு பிரியாவுக்கு” என்று பதற

அவனோ அவர்களைக் கண்டுகொள்ளாமல், அவளை அவள் தங்கியிருந்த அறையில் கிடத்தியவன், மருத்துவருக்காகக் காத்திருந்தான்…..

அவனின் குணம் மற்றவர்களுக்குத் தெரியுமாதலால் அதற்கு மேல் எதுவும் கேட்காது அமைதியாகிவிட,

அதற்குள் மருத்துவரும், சந்துருவும் வந்துவிட……சந்துரு அவர்களிடம் என்ன நடந்தது என்று சொல்லி விட்டு, பிரியா கண் விழிப்பதற்காகக் காத்திருந்தான்….

பரிசோதனை செய்துவிட்டு மருத்துவர் சபரிஷிடம், “பயப்பட ஒன்றுமில்லை…அதிர்ச்சியில் மயக்கமாயிட்டாங்க….காயத்துக்கு மருந்து தடவி, பேன்டைய்டு போட்டு, இன்ஜக்ஷன் போட்டுருக்கேன்… இன்னும் கொஞ்சம் நேரத்துல முழிப்பு வந்திடும்…சோ டோன்ட் வொர்ரி” என்றவர்…..பின் “நல்ல வேலை கத்தி லேசா பட்டிச்சு..இதுவே கொஞ்சம் அழுத்தி பட்டிருந்தா கழுத்து நரம்பு கட் ஆகியிருக்கும்……இன்னொரு தடவை இந்த மாதிரி நடக்காம பாத்துக்கோங்க” என்று சொல்லி விட்டுச் சென்றுவிட்டார்..

டாக்டர் கூறிய விஷயம் அவன் மனதை பெரிதும் பாதித்தது…. அதைக் கேட்டதும் அவன் உடலில் ஒரு அதிர்வு உண்டாக…. அவள் கண்விழிப்பதற்காகக் காத்திருந்தான்…. பின் அனைவரும் நலம் விசாரித்துச் சென்றவுடன்…. அவனால் அந்த அதிர்வில் இருந்து வெளிவர முடியாமல்தான் அவளை அணைத்தான்…

திடீரென்று அவன் அனைத்ததும், முதலில்

அதிர்ச்சியடைந்தவள்..பின் அவன் பரந்த மார்பில் அழகாகப் பொருந்தினாள்..... அவளுக்கே தான் எப்படி உணர்கிறோம் என்றே புரிய வில்லை..ஆனால், அவள் அவனை அணைக்கவும் இல்லை, அதே சமயம் அவனை விட்டு விலகவும் இல்லை.... அவனின் இதயத் துடிப்பு அவளின் காதருகில் கேட்க கேட்க அவளின் இதயம் தாறுமாறாகத் துடித்தது, முதன் முதலில் ஒரு ஆணின் இருகிய அணைப்பு அவளுள் பல மாற்றத்தை உண்டாக்கியது..... இதற்கு முன் கூட அவளைக் கீழே விழ விடாமல் அவளை அணைத்தான்தான் .... ஆனால் அதில் ஒரு பாதுகாப்பு தன்மையை உணர்ந்தாள்.....ஆனால் இந்த இறுகிய அணைப்போ.....அவளின் உயிர் வரை சென்று தாக்கியது..... எந்த ஆணிடத்திலும் மயங்காத மனம் அவனைக் கண்டு மயங்கியது எதனால் என்பதையும், இதுநாள் வரை அவனின் பார்வை தன்னைப் பாதித்ததற்கான அர்த்தத்தையும் இந்தக் கணம் புரிந்து கொண்டாள்.....

இது எப்படி எந்தச் சந்தர்ப்பத்தில் நடந்தது என்று அவளுக்கே தெரியவில்லை.. முதன் முதலில் அந்த ஜந்துவிடமிருந்து தன்னைக் காப்பாற்றிய போதா இல்லை அவனின் கம்பீர குரலில் மயங்கி அவன் முகம் பார்க்க ஆசைபட்ட போதா, பின் துணிகடையில் வெள்ளை வேட்டி சட்டையில் அவனைப் பிட்டு பிட்டாகச் சைட் அடித்த போதா, பின்

அவனிடம் எதிர்பாராமல் மோதும் போதெல்லாம் அவனின் ஒற்றைத் தொடுகையில் நெஞ்சில் உண்டாகும் படபடப்பான உணர்வின் போதா, பின் அவனின் தீர்க்கமான பார்வையைச் சந்திக்க முடியாமல் நாணம் கொள்ளும் போதா....எதனால் தனக்குக் காதல் வந்தது என்று நினைக்க நினைக்க.....இவன் என்னவன்...எனக்காகப் பிறந்தவன் என்ற உணர்வு மேலோங்க.....இவள் அவனை அணைக்கும் நேரம்..... அவளிடம் இருந்து விலகினான்...

அவனுக்கு இந்த மாதிரி உணர்வுகள் இல்லையோ என்னவோ.... அவளை மெதுவாகத் தன்னிடமிருந்து விலக்கியவன் "இனி இந்த மாதிரி லூசுத்தனமா நடக்கக் கூடாது.. சொன்னதை மட்டும் செய்யணும் சரியா" என்றுவிட்டு அவளைப் பார்க்க,

அவளோ "வடை போச்சே" என்ற ரேஞ்சில் அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்.....

அவன் அதைக் கண்டு கொள்ளாது, அவளை அப்படியே கட்டிலில் படுக்க வைத்தவன்... அவளின் கன்னத்தைத் தட்டி தூங்கு என்றுவிட்டு வெளியே வந்த சபரிஷ், யாருக்கோ அலைபேசியில் அழைத்துப் பேசியவன் , "என்னாச்சு" என்று கேட்க.. அங்குச்

சொல்லபட்ட பதிலில், ம்ம் என்று மட்டும் கூறி அனைத்து விட்டுச் சோபாவில் வந்து அமர.. அவனிடம் காபி கப்பை நீட்டினார் லட்சுமி..

அதை வாங்கிப் பருகியவனை.... எல்லோரும் பார்க்க, அவர்களின் பார்வையைப் புரிந்து கொண்டு " நாளைக்குப் பேப்பர்ல செய்தி வரும் அப்போ நான் என்ன பண்ணினேன்னு தெரிஞ்சிக்கோங்க" என்றவன் எழுந்து வெளியே சென்று விட்டான்..

பிரியாதான் அவனின் செயலில் குழம்பி போனாள்...."எதுக்குக் கட்டிபிடிச்சான், பின் எதுக்கு விலகினான்.....டேய் ரிஷி உன் கேரக்டரையே புரிஞ்சிக்க முடியலையே" என்று தன் பாட்டுக்கு புலம்ப, அவளின் மனசாட்சியோ,

"எனக்கு அப்பவே தெரியும்.. என்னைக்காவது ஒருநாள் இப்படி நீ புலம்புவேன்னு.....இதுக்குத்தான் ஆரம்பத்துல இருந்தே அவனைச் சைட் அடிக்கும் போது எச்சரிக்கை பண்ணினேன்.....நீ கேட்டாதானே..... ஆமா அது என்ன மேடம்... தீடீர்ன்னு ரிஷி ன்னு செல்ல பேர் வச்சு எல்லாம் கூப்பிடுறீங்க" என்று கேட்க

அவளும் "அதானே எனக்கு எப்படி இந்தப் பேர் தோணுச்சு....காலையில கூட அந்த ரவுடிங்க அருவா

வீசும் போது கூட ரிஷின்னுதானே கூப்பிட்டேன்.....இது எப்படிச் சாத்தியம் பார்த்த மூன்று நாள்ல அவன் இந்தளவுக்கு என் மனசுல பதிஞ்சு போய்ட்டானா அதுவும் ரிஷின்னு செல்ல பெயர் வைத்து கூப்பிடும் அளவுக்கு'

ஆனாலும் தன் கெத்தை விடாமல் " இப்ப என்ன நான் சபரிஷை லவ் பண்றேன்.....சோ பெட் நேம் வெச்சு கூப்பிடுறேன்....உனக்கு என்ன வந்தது உன் வேலையைப் பார்த்துட்டு போ" என்க

"இப்பவும் சொல்றேன்..... அவசரபடாதே..... அவனைப் பத்தி உனக்கு என்ன தெரியும்...அவனைப் பார்க்கும் போதெல்லாம் உனக்கும் அவனுக்கும் மோதல்லதான் முடிஞ்சிருக்கு.... சோ கொஞ்சம் பொறுமையா இரு"என்று எச்சரிக்கை செய்ய

அவளோ அதைச் சிறிதும் லட்சியம் செய்யாமல், "மோதல்ல ஆரம்பிச்சதுதான் இப்ப காதல்ல கொண்டு போய் முடிஞ்சிருக்கு..... நான் பிக்ஸ் பண்ணிட்டேன் சபரிஷ்தான் என் லவ்வர்ன்னு....." என்று கூறிவிட்டு அவனுடனான கனவுலகில் சஞ்சரித்தவளை கண்ட அவள் மனசாட்சி "பையித்தியம் முத்தி போச்சு" என்று தலையில் அடித்துக் கொண்டு சென்றது.....

தன் மனதின் குரலை அலட்சியம் செய்யாமல், ஒரு நிமிடம் அதைக் கொஞ்சம் காது கொடுத்து கேட்டு இருந்தால் பின்னால் ஏற்படும் விளைவுகளைத் தடுத்திருக்கலாமோ!!! விதி யாரை விட்டது....
.....

சபரிஷ் சென்றதும் அவன் உடனான நினைவுகளால், தத்தளித்த பிரியா,வெகுநேரம் கழித்தே உறக்கம் வந்து அவளை ஆட்கொள்ள, கனவிலும் அவனுடன் டூயட் பாடிகொண்டிருந்தவளை, மோகனாவின் அழைப்புத் தடை செய்ய "ஏன்டி என்னை எழுப்பினே" என்று சலித்துக்கொண்டே எழ,

மோகனாவோ "ஏன்டி எவ்வளவு நேரம் காட்டுகத்தலா கத்தி எழுப்புறேன்.....இப்படி கும்பகர்ணி மாதிரி தூங்குற....மணி என்ன தெரியுமா..சாயங்காலம் ஐந்து மணி..... அதான் எழுப்பினேன்..... ஆமா அதுக்கு ஏன் இப்படிச் சலிச்சிக்கிற" .. என்றவள் பின் குறும்பாக "என்னடி ஏதாவது கனவு கண்டியா .....அதுவும் ரொமேன்ஸ் கனவா, என்று ப்ரியாவை கிண்டல் அடிக்க ..

பிரியாவுக்கோ வெக்கம் பிடிங்கி தின்ன

“அப்படியெல்லாம் ஒன்னும் இல்ல….நீ நகரு நான்
ஃப்ரெஷ் ஆகிட்டு வரேன்”
என்று எழுந்தவளை.. இழுத்து தன் அருகில்
அமர்த்திய மோகனா ..

“அண்ணலும் நோக்கினான்..
அவளும் நோக்கினாள்”
அதை நானும் நோக்கினேன்” , என்று ராகம் போட்டு
பாடிவிட்டு “எவ்வளவு நாள் என்னை நீ கிண்டல்
பண்ணியிருப்ப . இப்போ எனக்கு ஒரு சான்ஸ்
கிடைச்சிருக்கு….அதை நான் விட்டுடுவேனா”…..
என்றவள்..

“என்ன சொன்ன என்ன சொன்ன…..எனக்கு லவ் வந்தா
வெக்க படமாட்டேன்……பேஸ் டு பேஸ் பார்த்து என்
லவ்வ சொல்லுவேன்னு சொன்னியே…….என் செல்ல
பிரி சொல்லிட்டியா” என ஆர்வமாகக் கேக்க..

“அ … அதெல்லாம் ஒன்னும் இல்ல” என்று ப்ரியா
அழகாக முகம் சிவக்க..

முதன் முதலில் அவள் வெக்கப்படுவதை
அதிசயமாகப் பார்த்த மோகனா….பின் அவளைக்

கட்டிக்கொண்டு “எனக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கு ப்ரி….நீ நினைச்சது மட்டும் நடந்துட்டா….. நாம எப்பொழுதும் பிரிய வேண்டாம்.. ஒரே வீட்டிலேயே இருப்போம்”… என்றவள் திடீரென்று கலக்கத்துடன் என் மாமா குடும்பத்தைப் பத்தி விசாரிக்கப் போறேன்னு சொன்னியே….. யாருக்கிட்ட கேட்க போறே….. அந்த விஷயம் வேற எனக்குத் திக்கு திக்குன்னு இருக்கு”… என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே… யாரோ கதவை திறந்து கொண்டே வர,

தோழிகள் இருவரும் அமைதியாகி, யார் என்று பார்க்க அங்கே விசாலாட்சி ஆச்சி நின்று கொண்டிருந்தார்..

“உள்ள வாங்க ஆச்சி, ஏன் அங்கேயே நிக்குறிங்க” என்று இருவரும் சேர்ந்து அழைக்க,

சிரித்துக்கொண்டே உள்ளே வந்தவர், பிரியாவின் அருகில் அமர்ந்து,
அவளின் கன்னத்தைத் தடவி “தாயி இப்போ எப்படி இருக்கே” என்றவர்,
“அப்போதே உன்ன பார்க்க வந்துருப்பேன் கண்ணு .. சந்துரு தான் நீ தூங்குறன்னு சொன்னான்.. இப்போ இந்தத் தாயி உள்ள வந்துச்சா.. அதான் ஒன்னிய

பாக்க வந்தேன் தாயி”...என்று வாஞ்சையுடன் விசாரிக்க,

“ஆஹா பாட்டி தனியா வந்து மாட்டுதே...இந்த சந்தர்பத்தை விடகூடாது” என்று நினைத்தவள்..
“நல்லா இருக்கேன் பாட்டி.. ஆனா கழுத்துல ரத்தம் என்றதும் கொஞ்சம் பயந்துட்டேன் அவ்வளவுதான்” என்று கூறி சிரிக்க....

“கவனமா இருக்க வேணாமா, தனியா எதுக்குப் போன கண்ணு, என் பேரன் இருந்ததால் ஒன்னிய காப்பாத்திட்டான்... இல்லன்னா உங்க அப்பா அம்மாக்கு யாரு பதில் சொல்றது” என்றவரை பார்த்து புன்னகைத்த மோகனா..

“அவளை அவளே பாத்துப்பா பாட்டி.... எங்களுக்குக் கொஞ்சம் கராத்தே தெரியும்” என்க

“ஆமா கராத்தே தெரியும், காரசேவு தெரியும்ன்னுகிட்டு, இப்போ லேசா பட்ட கத்தி அழுத்தி பட்டுருந்துச்சின்னா” என்று நொடித்துக் கொள்ள.....

அவரை முறைத்த பிரியா.. “எனக்கு என்னமோ லேசா பட்டத்துக்குப் பதிலா அழுத்தி படலையேன்னு

கவலைபடுகிற மாதிரி இருக்குக் கிழவி உன் பேச்சு”

“என்னது நான் கிழவியா” என்று ஆச்சி முறைக்க..

“பின்ன நீ குமரியா.. கிழவிதானே”

“ஏய் ப்ரி பெரியவங்ககிட்ட இப்படித்தான்
பேசுறதா”..என்று மோகனா அதட்ட.

“நீ சும்மா இருடி.. எனக்குத் தெரியும் யாருக்கு எப்படி
மரியாதை கொடுக்கணும்ன்னு” என்று ப்ரியா
சொல்ல...

“தாண்டி குதிக்குமாம் மீனு,
தயாராய் இருக்குமாம் எண்ணெய்சட்டி ங்குற
கதையல்ல இருக்கு” என்று, ஆச்சி தன் கையைக்
கன்னத்தில் வைத்து கேக்க..

“இப்போ இதுல யாரு மீனு , யாரு எண்ணெய்சட்டி
சொல்லு கிழவி.. எனக்கு இப்போ தெரிஞ்சாகனும்”
என்று பிரியா எகிற..

இவர்களின் வாக்குவாதத்தைத் தடுக்க முடியாமல் மோகனா கையைப் பிசைந்துக் கொண்டிருந்தாள்...

“அடியே குமரி இப்போ நீ என்னதாண்டி சொல்லவர” என்க...

“ம்ம் உனக்கு வயசு ஆகி நியாபகமறதி வந்துடுச்சு , அப்புறம்... அப்புறம்.... ஹான் உனக்குக் கண்ணும் சரியாய் தெரியலைன்னு சொல்ல வரேன் கிழவி”.. என்று இழுக்க..

“யாருக்குடி நியாபக மறதி , யாருக்குடி கண்ணு தெரியலை” என்று பாட்டியும் சண்டைக்குப் போக..

மோகனா தலையில் கை வைத்து உக்கார்ந்து விட்டாள்..

“உன்னைத்தான் சொல்லிட்டு இருக்கேன்” என்று அவளும் சளைக்காமல் பதிலளிக்க

“இப்போ எனக்கு எது கண்ணுக்கு தெரியாம போச்சாம்.” என்று ஆச்சியும் சரிக்கு சரி கேள்வி எழுப்ப,

ஒரு நிமிடம் அவரை ஆழ்ந்து பார்த்தவள்.. “உங்க மகளை மறந்துட்டீங்க..... உங்க பேர பிள்ளைகளை மறந்துட்டீங்க.....
உங்க பேத்தியை உங்களுக்கு அடையாளம் தெரியலை..” என்று சொல்லி விட்டு நிறுத்த,

அவள் சொன்னதைக் கேட்டு அதிர்ந்தது ஆச்சி மட்டும் இல்லை மோகனாவும்தான்..

“என்ன தாயி சொல்ற” என்று தழுதழுத்த குரலில் ஆச்சி கேட்க

“ம்ம் நீ போடுற வெத்தலைக்குச் சுண்ணாம்பு பத்தலன்னு சொல்றேன்” என்றாள் நக்கலாக

அவர் அதைக் கண்டு கொள்ளாது...அவளிடம் இன்னும் நெருங்கி அமர்ந்தவர் , “ராசாத்தி இப்போ நீ என்ன சொன்ன....திருப்பிச் சொல்லு தங்கம்” என்றவரின் குரலிலும், உடம்பிலும் நடுக்கம் பரவ, கண்களில் நீர் வழிய ஒரு எதிர்பார்ப்போடு ப்ரியாவை பார்க்க..

நடுங்கும் அவரின் கையைப் பற்றியவள்.. “உங்க

பொண்ணு பார்வதி, உங்க மருமகன் ஈஸ்வர், உங்க பேரன் கௌதம்"எல்லாம் சரியா.....என்றவள் பின் உங்களுக்குத் தெரியாத ஒரு விஷயம் இருக்கு ..அது என்னன்னா உங்களுக்கு ஒரு பேத்தி , இன்னொரு பேரனும் இருக்கான்" என்றாள்

பிரியா சொல்ல சொல்ல, உணர்ச்சிகளின் பிடியில் இருந்தவர்.... அப்படியே மயங்கி சரிந்தார்..

இதை எதிர்பார்க்காத பிரியா அவரைத் தாங்கி பிடித்துக் கட்டிலில் படுக்கவைத்து , பதற்றத்துடன் "மோஹி தண்ணி எடு" என்று அவசரமாகச் சொல்ல ..அவளோ அசைவில்லாமல் நின்றாள்..

"அடியே நீயும் மயங்கி விழுந்துறாதே.. என்னால சமாளிக்க முடியாது" என்றபடி அவளை உலுக்க..

அதில் நிகழ்வுக்கு வந்த மோகனா அவளின் ஆச்சியைப் பார்க்க....அவர் உணர்வில்லாமல் இருப்பதைக் கண்டு "அய்யோ பாட்டி"என்று கத்த..

"ம்க்கும்.....இப்போ வந்து கத்து.. போடி மொதல்ல தண்ணி எடுத்துட்டு வா" என்று சொல்ல..

“ம்ம் சரி சரி” என்றபடி ஜக்கில் இருந்த நீரை பாட்டியின் முகத்தில் தெளிக்க ..

சிறிது நேரத்தில் மெல்ல கண் விழித்து எழுந்து அமர்ந்தவர், பிரியாவின் கையைப் பிடித்துக் கொண்டு “என் மகள் எப்படி இருக்கா.. உனக்கு எப்படி அவங்களைப் பத்தி தெரியும்.. நீ யாரு ..ஒருவேளை நீதான் என் பேத்தியா.. என்று ஆவலுடனும் எதிர்ப்பார்ப்புடனும், தன் இருபது வருட தவத்திற்கு அவளின் ஒற்றைப் பதிலே வரம் என்பது போல் அவள் சொல்ல போகும் பதிலுக்காக.... அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார் அந்த மூதாட்டி...

அவரின் எதிர்பார்ப்பை பொய்யாக்காமல்.....”உங்க பேத்தி நான் இல்ல பாட்டி” என்றவள், மோகனாவை நோக்கி கை காட்டி, “இவதான் உங்க பேத்தி மோகனா....” என்று கூறி அவரின் இருபது வருட ஏக்கத்தைப் போக்கினாள் ப்ரியா...

ஆச்சி மெதுவாகத் தலையை மட்டும் திருப்பி மோகனாவை பார்க்க, மோகனாவோ அதிர்ச்சியுடன் பிரியாவை பார்க்க..

“ஆமாம்” என்பது போல் கண்களை மூடி திறந்தாள் ப்ரியா..

அதில் ஆனந்தமாகி தன் ஆச்சியைப் பார்த்தவள்.. “ஆச்சி” என்ற கூவலுடன் அவரைக் கட்டிக்கொண்டாள் .. அங்கு ஒரு அழகிய பாச போராட்டம் நடந்தது….

ஒருமணி நேரம் சென்றிருக்கும் அவர்களின் அழுகை நிற்காமல்… நீடித்துக் கொண்டே செல்லவும், கடுப்பான பிரியா, “ஸ்ஷு ரெண்டு பேரும் அழுகையை நிறுத்த போறீங்களா… இல்லையா” என்று சத்தமாகக் கத்த..

என்னே ஆச்சர்யம் இரண்டு பேரும் ஸ்விச் போட்டார் போல உடனே அழுகையை நிறுத்தினார்கள்… ..

அவர்கள் இருவரையும் கொலைவெறியோடு பார்த்தவள்.. “நானும் ஒரு மணி நேரமா பாக்கறேன்….. எதுக்கு அழறோம்ன்னு தெரியாமலேயே அழுவுறீங்க .. மேற்கொண்டு என்ன பண்ணனும், எப்படித் தன் பொண்ணை இங்க வரவைக்கணும், உங்க பசங்க அதான், மோகனாவின் மாமாக்கள் மனசில என்ன இருக்கு…. இன்னும் பழைய வறட்டு கவுரவத்துலதான் இன்னும் இருக்காங்களா, இல்ல

தங்கச்சியைப் பார்க்க ஆசை இருந்தும் வெளிய சொல்லாம இருக்காங்களா..... இப்படியெல்லாம் பிரிந்த குடும்பத்தை எப்படி ஒண்ணுசேர்க்கலாம்..... அப்படின்னு யோசிக்கிறதை விட்டு விட்டு இப்படி அழுதா எல்லாம் சரியா போயிடுமா..... ரொம்பச் சின்னபிள்ளைத் தனமால்ல இருக்கு... என்றவள் தண்ணீரை எடுத்து மடக் மடக் என்று வேகமாகக் குடிக்க.. "ஷ் ஆ." என்று கழுத்துவலியால் லேசாக முனக...

அதைப் பார்த்து பதறிய மோகனா.. "ப்ரி மெதுவா குடி" என்று பக்கத்தில் வர அவளைத் தடுத்தவள்

"இப்போ எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகனும்" எனப் பல்லை கடித்துக் கொண்டு கேட்டாள்..

"என்ன உண்மை தாயி" என்று ஆச்சி மெதுவாக வாய்த் திறந்தார்..
இத்தனை வருடத்தில் , தான் கண்ணை மூடுவதற்குள் ஒருதடவையாவது தன் மகளையும் , அவள் பெற்ற செல்வங்களையும் பார்க்கமாட்டோமா என்று ஏங்கி கிடந்தவருக்குத் தன் பேத்தியை, அதுவும் தன் வீட்டிலே பார்த்ததும் அழுகையை அடக்க முடியவில்லை அந்த மூதாட்டிக்கு..

அதில் தன் கோபத்தைக் கைவிட்டு , அவரைக் கனிவுடன் பார்த்தவள் “ஏன் ஆச்சி , பிரிஞ்சவங்க ஒன்னு சேர்ந்தா சந்தோஷம்தானேபடனும்..... இப்போ எதுக்கு அழுவுறீங்க” என்று அவரின் கண்ணைத் துடைத்தவள்,

“எனக்குப் புரியுது ஆச்சி , இருபது வருஷமா உங்க பொண்ணைப் பிரிஞ்சி ரொம்பவே அழுதுட்டீங்க, இப்போ அவங்களை எல்லாம் பாக்கபோறோம் என்று சந்தோசப்படுங்க” என்று அறிவுரை சொன்ன பிரியாவை கண்ட மோகனாவுக்கு, அவளின் குழந்தைதனம் மறைந்து, இவ்வளவு பொறுப்பாகப் பேசுவதைக் கண்டு, மகிழ்ச்சியுடன் அவளைக் கட்டிக் கொண்டாள்....

பிரியாவோ “ஆஹா என்ன இன்னைக்குக் காலையில் இருந்து ஒரே கட்டிபிடி வைத்தியமா இருக்கு” என்று வாயை விட

சட்டென்று அவளிடம் இருந்து விலகியவள்.. “என்னது கட்டிபிடி வைத்தியமா? அதுவும் காலையிருந்தா” யாரு உன்ன கட்டிபிடிச்சா ? என்னடி சொல்ற? என்று அவளைப் பார்த்து குறும்பாக வினவ..

“அச்சச்சோ இப்படியா உளறி வைப்ப பிரி….இவகிட்ட அதைச் சொன்னா என்ன சும்மா விடமாட்டாளே….என்னை ஓட்டியே தள்ளிடுவாளே” என்று மனதுக்குள் அசடு வழிந்துவிட்டு வெளியே தன் கெத்தை விடாமல் ..

“அடியே கொன்னுருவேன் உன்னை.. இப்போ அதுவா முக்கியம், உங்க அம்மாவை இங்க வரவைக்கணும்.. அத பத்தி யோசிப்பியா… அதைவிட்டுட்டு வேற என்னன்னமோ பேசிட்டு இருக்க….. இப்போ நீ உங்க அம்மாக்கு போன் போட்டு ஆச்சிகிட்ட குடு” என்றதும்

“சரி” என்றவாறே மோகனா பாட்டி பக்கம் திரும்பி அலைபேசியில் தன் தாயை அழைக்க,

“அப்பாடி கிரேட் எஸ்கே பிரியா நல்ல வேளை தப்பிச்சேன் , ச்ச உனக்கு அறிவே இல்லடி , இப்படிக் கட்டிபிடிச்சதெல்லாமா வெளிய சொல்லிகிட்டு இருப்ப, இனிமே எது பேசும் போதும் கொஞ்சம் கவனமா இரு” என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டவளை, கண்ட அவளது மனசாட்சி காரி துப்ப ரெடியாக இருந்தது..

ஹி ஹி என்று அதனிடம் வழிந்தவள்.. திரும்பி

மோகனாவை பார்க்க,

தன் ஆச்சியின் பக்கத்தில் அமர்ந்து, அலைபேசியில் அழுதுக்கொண்டே தன் மகளிடம் பேசிக்கொண்டிருந்தவரை மோகனாவும் ஆனந்த கண்ணீரோடு நோக்கி கொண்டிருந்தாள்….

ஆச்சியின் பக்கத்தில் சென்றவள்.. அழக்கூடாது என்று சைகையில் சொல்ல, அவரும் கண்ணைத் துடைத்து , தன் மகளிடம் பேச..

மோகனாவோ அவளிடம் “என்னால் நம்பவே முடியலை ப்ரி.. எப்படிக் கண்டு பிடிச்சே, யாருக்கிட்ட உதவி கேட்டே” என வினவ ப்ரியாவோ யோசனையில் இருந்தாள்..

அவளை உலுக்கிய மோகனா “அடியே நான் கேட்டுகிட்டே இருக்கேன் , நீ எந்த உலகத்துல இருக்க…என்ன மறுபடியும் டூயட் பாட போய்ட்டியா” என்றவளை ப்ரியா முறைக்க,,

“பிளீஸ் எப்படிக் கண்டு பிடிச்சேன்னு சொல்லு குட்டிமா” என்று கெஞ்ச…

“அந்த விஷயத்தை நான் அப்புறம் சொல்றேன்.. ஆனா நான் வேற ஒன்னு யோசிச்சிட்டு இருக்கேன்”

“என்ன ப்ரி” என்று மோகனா கேட்கவும்,

அம்மாடி பிரியா எம்பொண்ணு உன்கிட்ட பேசனுமாம் தாயி என்று சொல்லவும்....அப்போதைக்குத் தன் யோசனையைக் கை விட்டவள் ஆச்சியிடம் இருந்து போனை வாங்கிப் பேசினாள்..

“ஹலோ ஆன்ட்டி எப்படி இருக்கீங்க”

“.....”

“தேங்க்ஸ்ன்னு சொல்லி என்னை உங்க கிட்ட இருந்து பிரிக்கிறீங்களே ஆன்ட்டி”

“.....”

“ம்ம் இது தான் எங்க ஆன்ட்டிக்கு அழகு”

“ .....”

“இன்னும் இல்ல ஆன்ட்டி…. ஆனா எப்படியும் இன்னும் மூன்று நாட்களுக்குள் உங்களை எல்லோரையும் இங்க வரவச்சிருவேன் ஆன்ட்டி”

“……”

“சரி ஆன்ட்டி ரவி எப்படி இருக்கான் ..சீக்கிரம் இங்க வர தயாரா இருங்க…. இப்போ நான் வச்சிடறேன்”

“……”

“என்ன உங்க அம்மாகிட்ட பேசனுமா…..போன்லேயே பேசிகிட்டு இருந்தா இன்னும் பத்துவருசம் ஆகும் அவங்களை மீட் பண்ண ஓகேவா….சோ இப்ப நீங்க கட் பண்ணுங்க”

“……”

“என்ன இப்படிச் சொல்லிட்டீங்க….உங்கள இங்க வரவைக்க நாங்க பிளான் போடவேண்டாமா…சோ நீங்க நைட்டு உங்க அம்மா கிட்ட பேசுங்க…இப்ப நான் வச்சிடுறேன்”.. என்றவள் வைத்து விட்டு திரும்ப.. அங்கு அவள் கண்ட காட்சியில் ப்ரியாவின் மனம் கனிந்தது..

ஆச்சி கட்டிலில் அமர்ந்திருக்க, அவர் மடியில் படுத்திருந்த மோகனாவின் தலையைக் கோதிவிட்டுக்கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த அவள் என்ன நினைத்தாலோ.. தானும் சென்று மறு பக்கம் ஆச்சியின் இடையைக் கட்டிக்கொண்டு அவர் மடியில் படுக்க.. அவரோ ப்ரியாவின் கன்னத்தை வருடிகொடுத்தார்..

சிறிது நேரம் அங்கு எந்தப் பேச்சும் இல்லாமல் அறையே அமைதியாக இருந்தது..ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொரு எண்ணம்..

மோகனாவுக்கோ .. " தன் அப்பா வழி பாட்டிக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாமலும், சந்துருவின் காதலை ஏற்க முடியாமலும் தத்தளித்தவளுக்குச் சந்துருதான் தன் மாமா பையன் என்றதும் இதுவரை இருந்த உறுத்தல் மறைந்து.....இனி எப்படித் தன் காதலை அவனிடம் சொல்வது" என்று யோசிக்கத் தொடங்கினாள்..

பாட்டியோ மானசீகமாகத் தன் கணவரிடம் பேசிக்கொண்டிருந்தார்.. “நா இப்போ ரொம்பச் சந்தோஷமா இருக்கேன்ங்க நம்ம பொண்ணை , நான் கண்ணை மூடுறதுக்குள்ள பார்ப்பேனான்னு ஏங்கி போயிருந்தேங்க, என் ஏக்கத்தைப் போக்க வந்த தேவதைங்க இந்தப் பொண்ணு….அவ நல்லா இருக்கனும்” என்று மறைந்த தன் கணவரிடம் கோரிக்கை வைக்க…..

ப்ரியாவோ “எப்படி ஆன்ட்டியை இங்க வர வைக்கிறது.. அதுக்கு முன்னாடி மோஹியோட ரெண்டு மாமாக்களுக்கும் பேய் ஓட்டனும்” என்று நினைக்க

மோகனாதான் இந்த அமைதியை கலைத்தாள்….
“ பிரி எப்படிக் கண்டு பிடிச்சேன்னு சொல்லவே இல்லையே, யாருக்கிட்ட விசாரிச்சே” என்று கேட்க..

“ராஜேஷ்” என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னாள்

“என்னது ராஜேஷா”

“ஆமா.. ராஜேஷ்கிட்ட என் குடும்பம்ன்னு சொல்லி உதவி கேட்டு விசாரிக்கச் சொன்னேன்.... ஆனா ஏன் அப்படிச் சொன்னேன்னு எனக்கே தெரியல.....பட் ஒரே நாள்ல கண்டுபிடிச்சி கொடுத்துட்டார்..... இந்த விஷயம் தெரிஞ்சதும் எனக்கு என்ன பண்றதுன்னு ஒன்னுமே புரியல..... சரி சந்துருகிட்ட இதப்பத்தி தோட்டத்தில் வச்சு பேசலாம்ன்னு நினைச்சேன் ஆனா அதுக்குள்ள என்ன என்னவோ நடந்து போச்சு... என்றாள்

ஆச்சியோ “நீ அப்படிச் சொன்னதுல ஒன்னும் தப்பு இல்ல கண்ணு.....இதுவும் உன் குடும்பம் மாதிரிதான் .. பிரிஞ்ச எங்க குடும்பத்தைச் சேர்த்துவைக்க வந்த தேவதை பொண்ணு நீ” என்று கூறிவிட்டு மீண்டும் அழ ஆரம்பிக்க,

அவர் மடியில் இருந்து எழுந்த ப்ரியா.. அவர் கண்ணைத் துடைத்து “எனக்கு அழுதா பிடிக்காது பாட்டி..... மோஹி கொஞ்சநாளாவே ரொம்ப அமைதியா இருந்தா , என்ன ஏதுன்னு கேட்டா ஒன்னும் சொல்ல மாட்டா, சரி கொஞ்சநாள் போகட்டும்ன்னு விட்டு பிடிச்சேன்..... இங்க வந்த பிறகு ஒருநாள் நான் சொன்னாதான் ஆச்சுன்னு பிடிவாதம் பிடிச்சதுல எல்லாத்தையும் சொல்லிட்டா...என்றவள், “பாட்டி உங்ககிட்ட ஒன்னு சொல்லனும்”

“என்ன சொல்லுமா , என்கிட்ட என்ன தயக்கம்” என்க

“அவளோட அப்பா வழி பாட்டி அவகிட்ட ஒரு வாக்குக் கேட்டாங்களாம்”

“வாக்கா என்ன வாக்குமா” என்று மோகனாவை பார்க்க

அவளோ ப்ரியாவை பார்த்து “நீயே சொல்லேன்” என்று கண்களால் கெஞ்ச ..

அவளைப் பார்த்து சிரித்தவள்.. “அது ஒன்னும் இல்ல பாட்டி , உங்க மகன் இரண்டு பேரும்.... இவளோட அப்பாவை அவமான படுத்தினாங்கள்ல” என்று சொன்னதும் ஆச்சி வருத்தத்துடன் தலை குனிய..

அவரது நாடியை பிடித்து நிமிர்த்தியவள்..”அதெல்லாம் நடந்து முடிஞ்சி போச்சு...சோ அத நினைச்சி இனி தலை குனிய வேண்டாம்” என்றாள்

“இல்லமா நான் எவ்வளவோ சொல்லி பார்த்தேன், பெரியவனும் சின்னவனும் கேட்கவே இல்ல , என் மவ வைராக்கியகாரி , அவ சொன்ன மாதிரி இங்க திரும்பி வரவே இல்லை.. இந்த அம்மாவை கூடப்

பார்க்க வரவே இல்ல” என்று மீண்டும் அழ ,

“ஆச்சி” என்று பிரியா அதட்ட..

“இல்லமா நான் அழல”என்றதும்,

“ம்ம் இப்பதான் நீங்க நல்ல பாட்டி”என்று அவரைக் கட்டிக் கொண்டாள்

(விதியோ ப்ரியாவை பார்த்து “உனக்கு அழறது பிடிக்காதா, ஆனா நீ ஒருநாள் ஆற்றுவார் தேற்றுவார் இல்லாமல் அதுவும் நடு ரோட்டில் அமர்ந்து அழபோறியே ப்ரி” என்று கூறி இப்பொழுதே ப்ரியாவிற்காக அழுதது விதி …)

“ஏன் மோஹி உனக்கு உங்க ஆச்சியைப் பார்க்கணும்…. உங்க அம்மாவை இந்த வீட்டோட சேர்க்கணும்ன்னு..தோணவே இல்லையா”என்று கேட்க

“எல்லாம் தோணுச்சு ப்ரி.. பட் எப்படின்னு தான் தெரியல அப்புறம் தான் ஒரு ஐடியா கிடைச்சது” என்று கூறி நிறுத்த

“என்ன ஐடியா”

“இல்ல படிச்சி முடிச்சதும் சென்னைல வேலை பார்க்க அப்பாகிட்ட பெர்மிசன் வாங்கணும்.... அப்புறம் திருநெல்வேலிக்கு வந்து இவங்கள தேடனும்ன்னு பிளான் பண்ணுனேன் ப்ரி..ஆனா அதுக்குள்ள நம்ம காலேஜில் தமிழ்நாட்டுக்கு டூர் போறோம்ன்னு சொன்னதும் எனக்கு எவ்ளோ ஹேப்பியா இருந்தது தெரியுமா, அன்னைக்குக் கூட நம்ம கார்ல போகும்போது சந்துரு கிட்ட ராமசாமிபுரம் எங்க இருக்குன்னு கேட்டேன்” என்றவள்,

ஒருநிமிடம் தன் பேச்சை நிறுத்தி “ஆச்சி சந்துருவுக்கு அம்மா பத்தி தெரியுமா ? அவங்க எங்களைத் தேடித்தான் மும்பை வந்தங்களா? ஏன் கேக்குறேன்னா , பாட்டி சொல்லும்போது பெரிய மாமாக்கு ஒரு பையனும் , ஒரு பொண்ணும் தான் இருக்குன்னு சொன்னாங்க” என்றதும் பிரியா

“ஆமா பாட்டி எனக்கும் அதே சந்தேகம் தான்.. சந்துருக்கு மோஹி யாருன்னு தெரியுமா தெரியாதா” எனக் கேட்க..

“தெரியும்” என்றார் அந்த மூதாட்டி

சுவாசம் தொடரும்...

சுவாசம் 12

“சத்தமில்லா ஒரு யுத்தம் “
“நம் இதழ்கள் “
“சந்தித்தபோது”

“என்னது அவங்களுக்கு நான் யாருன்னு தெரியுமா” என்று மோகனா அதிர்ச்சியாகக் கேட்க..

பிரியாவுக்கு இந்தச் சந்தேகம் முதலில் இருந்தே இருந்ததால் அதிர்ச்சி ஆகாமல் அமைதியாகி விட

மோகனாவோ “அடப்பாவி உனக்கு முன்னமே தெரியுமா நான்தான் உன் அத்தை பொண்ணுன்னு..... அதான் என்னைக் காலேஜில் முதன் முதலில் பார்த்த

போது அந்த லுக்கு விட்டியா..... உனக்கு இருக்குடா”
என்று மனதுக்குள் அவனிடம் செல்லம்
கொஞ்சியவள், தன் ஆச்சியிடம்

“அப்போ ஏன் ஆச்சி என்கிட்டே அவங்க சொல்லல..
எத்தனை தடவை பிரியாகூட வீட்டுக்கு
வந்துருக்காங்க .... அம்மாகிட்டயாவது அவங்க யார்
என்ற உண்மையைச் சொல்லியிருக்கலாம்.... அம்மா
எவ்வளவு சந்தோஷப்பட்டு இருப்பாங்க தெரியுமா”
என்று குறை பட..

அதைக் கேட்டுச் சாந்தமான புன்னகை ஒன்றை
உதிர்த்து, “அது இருக்கட்டும், சம்பந்தியம்மா அதான்
உன் பாட்டி உன்கிட்ட என்ன வாக்கு கேட்டாங்க அத
சொல்லு முதல்ல” என்க

“அது வந்து..... அது வந்து” .....அதற்கு மேல் சொல்ல
முடியாமல் வெக்கம் வந்து அவளை இம்சை செய்ய.....
மோகனாவின் முகச் சிகப்பை கண்ட பிரியா,

பாட்டி தனக்கு வைக்கப் போகும் ஆப்பை அறியாமல்..
“நான் சொல்றேன் பாட்டி” என்றவள் “அது ஒன்னும்
இல்லை, இவளோட பாட்டி இறக்கும்போது இவ கிட்ட

உங்க அப்பாவை அவமானபடுத்தின வீட்டுக்கு நீ மருமகளா போகணும் , அந்த வீட்ல நீ ராணி மாதிரி வாழனும் ,இது என்னோட ஆசை…நீ இதைச் செய்வியான்னு வாக்குக் கேட்டாங்களாம் .. இந்த மேடமும் சரின்னு சொல்லி வாக்கு குடுத்துட்டாங்களாம்”.. என்று ஏற்ற இறக்கத்துடன் சொல்லி முடிக்க..

“அப்படியா” என்பது போல் மோகனாவை பார்த்து ஆச்சி கேக்க,, அவளும் ஆமாம் என்பது போல் தலையை மேலும் கீழும் ஆட்டினாள்.

அவரோ சபரிஷை மனதில் நினைத்துக் கொண்டு “சரி எல்லாம் நல்லபடியா முடியட்டும், நீயும் படிப்பை முடிச்சிட்டீன்னா…. அடுத்த முகூர்த்திலேயே உனக்கும் பெரியவனுக்கும் கண்ணாலத்த முடிச்சிருவோம்” என்று அலுங்காமல் குலுங்காமல் ஒரு குண்டை தூக்கிப் போட்டார் இருவர் மீதும்…

மகள் பார்வதி இந்த வீட்டை விட்டு போகும் போது, கௌதம் மட்டுமே இருக்க…அதே சமயம் பார்வதியின் அண்ணன் தர்மலிங்கத்துக்குச் சபரிஷும் , இரண்டு வயது செல்வி மட்டுமே இருந்தனர், சந்துரு அப்போது பிறக்கவில்லை,

எப்படிப் பார்வதிக்குக் கௌதம் தவிர மோகனா, ரவி பிறந்தது இந்தக் குடும்பத்திற்க்கு தெரியாதோ அதே போல் தர்மலிங்கத்துக்குச் சபரிஷ், செல்வி அடுத்ததாகச் சந்துரு பிறந்தது மோகனாவின் பாட்டிக்குத் தெரியாது..

தன் உயிர் பிரியும் முன் சபரிஷை நினைத்து தான் வாக்கு கேட்டார் அவளது பாட்டி..... ஆனால் மோகனாவோ யாரை நினைத்தும் வாக்கு கொடுக்கவில்லை, தன் அம்மா அவர்கள் குடும்பத்துடன் இணைந்து சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால்.... தான் அந்த வீட்டுக்கு மருமகளாகப் போக வேண்டும் என்பதே அவளது எண்ணமாக இருந்தது.....

ஆச்சி அப்படிச் சொன்னதும் மோகனா அதிர..... "ஐய்யய்யோ" என்றது மற்றொரு குரல்.. அந்தக் குரல் யாராக இருக்க முடியும் சாட்சாத் பிரியாவேதான். 'ரிஷிக்கும், மோகனாவுக்கும் கல்யாணமா, என்ன ஒரு வில்லத்தனம் ஆச்சி உங்களுக்கு' மனதில் நினைத்து அவரை முறைக்க,

ஆச்சியோ, எதற்கு இந்த முறைப்பு என்று தெரியாமல் "என்னாச்சு கண்ணு.....எதுக்கு இப்போ கத்துனே" என்று பாவமாகக் கேட்க..

“கதையையே மாத்திரிவீங்க போல இருக்கே”..
என்றவள் “நீங்க முடிச்சு போட வேண்டியது , அந்தப் பக்கி சந்துருக்கும், என் செல்ல மோஹி குட்டிக்கும் தான் ஏன்னா சந்திருவும் , மோஹியும் தான் விரும்புராங்க” என்றாள்.

அதைக் கேட்டு நிம்மதியான ஆச்சி, மோகனாவின் புறம் திரும்பி அவளின் முகத்தைத் தன் கையால் வழித்துத் திருஷ்டி கழித்தவர் “அப்படியா” என்றவர் “சரி யாரா இருந்தா என்ன என் பேத்தி இந்த வீட்டுக்கு மருமகளா வரணும் அவ்ளோதான்” என்றார் மகிழ்ச்சியுடன்....

“சப்பா ஒரு நிமிஷத்துல இப்படி வயித்துல புளிய கரைச்சிருச்சே இந்த ஆச்சி”....என்று நிம்மதி பெருமூச்சு விட்ட மோகனாவும், “சரி இப்போ சொல்லுங்க ஆச்சி சந்துருக்கு எப்படித் தெரியும், அவங்க ஏன் எங்க கிட்ட சொல்லல” என்று தன் பிடியிலேயே நிற்க,

இதற்கு மேல் மறைக்க முடியாமல், சந்துருவுக்கு எப்படி இந்த உண்மை தெரியும் என்ற விஷயத்தைக் கூற ஆரம்பித்தார்.....

“ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி ஒருநாள் ராத்திரி,

நான் உன் தாத்தா படத்துக்கு முன்ன நின்னு.... நம்ம பொண்ணை எப்ப பார்ப்பேன்னு நினைச்சு அழுதுகிட்டு இருந்தேன்.. அப்போ ராசுவும், சந்துருவும் என்னவோ ,என்கிட்ட பேச வந்தாங்க" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

"பாட்டி, சந்துரு ஓகே .... அது யாரு ராசு? என்ற அதிமுக்கியமான கேள்வி ஒன்றை ப்ரியா கேட்க,

அதில் கடுப்பான மோகனா....."ப்ரி ஆச்சி சொல்லி முடிச்சதும் உன் கேள்வி கணைகளைத் தொடு, இப்போ அவங்கள பேச விடு" என்றவள்...."நீங்க சொல்லுங்க ஆச்சி".. என்க

பிரியாவும்.."சரி சரி நான் டிஸ்டப் பண்ணல நீங்க கன்டினியூ பண்ணுங்க பாட்டி" என்று கூறி கதை கேட்க தயாரானாள் ஆர்வமாக ...

"என் அறைக்கு வந்தவங்க நான் அழறத பார்த்து பயந்து போய்ட்டாங்க..." சபரிஷ்க்கு ஆச்சி என்றாள்தான் ரொம்பப் பிரியமாச்சே உடனே அவரின் அருகில் சென்று "ஆச்சி எதுக்கு அழறீங்க...உடம்பு ஏதும் சரியில்லையா" என்று பதற்றத்துடன் கேட்க

“அய்யா ராசு எனக்கு என் பொண்ணைப் பார்க்கணும்யா.. அவ எங்க இருக்காளோ…எப்படி இருக்காளோ….. நான் கண்ணை மூடுறதுக்குள்ள என் பொண்ணை ஒருதடவையாவது பார்க்கணும்” என்று ஏக்கத்துடன் கூறி கண்ணீர் விட்டவரை எப்படித் தேற்றுவது என்று தெரியவில்லை…அவனால்

சந்துருவுக்கோ தனது ஆச்சி அழுவதைக் காண முடியாமல் அவன் கண்களிலும் கண்ணீர் சுரக்க…அதை அவருக்குத் தெரியாமல் மறைத்தான்….

சபரிஷ்க்கோ, அவன் அத்தை பார்வதி, இந்த வீட்டை விட்டு போகும் போது எட்டு வயது சிறுவன்….. அந்தச் சிறுவயதில் தன் அத்தை, மாமா எதற்காக வீட்டை விட்டுப் போனார்கள் என்று விளங்கா விட்டாலும்…… கொஞ்சம் வளர்ந்ததும், தன் அன்னையிடம் கேட்டு அன்று நடந்ததைத் தெரிந்து கொண்டான். தன் தந்தை ஏன் இப்படி நடந்து கொண்டார் என்று இன்று வரை அவனுக்குப் புரியாத புதிர்தான் , ஆனால் தன் அத்தை இந்த வீட்டை விட்டு வெளியேறும் போது , அவனது தந்தையிடம் எக்காரணத்தைக்கொண்டும் எங்களைத் தேடி யாரும் வரக்கூடாது என்று சொல்லி சென்றதை நினைத்தவன்… “சரி அத்தை எங்கிருந்தாலும் நன்றாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன். அவன் தன் தந்தையிடம் இது வரை எதுவும் கேட்காமல்

இருக்கின்றான்" ஆனால் கௌதமின் நினைவு மட்டும் அடிக்கடி வந்து போகும்....
சபரிஷிக்குக் கௌதம் என்றால் ரொம்பப் பிடிக்கும் தன்னை விட இரண்டு வயதுதான் சிறியவன் என்றாலும்.. எப்பொழுதும் தோழமை உணர்வுடன் ஒன்றாகவே இருப்பார்கள்.. அதை நினைத்துப் பார்த்தவன்...பின் தனது ஆச்சியின் அழுகுரலில் நிழல் காலத்துக்கு வந்தான்...

அவரின் கண்ணீரை துடைத்து , "ஆச்சி எனக்கு அழுதா பிடிக்காதுன்னு தெரியுமில்ல... இப்போ என்ன உங்களுக்கு , உங்க பொண்ணைப் பார்க்கனும் அவ்வளவு தானே" என்று கூறிக் கொண்டு இருக்கும் போதே சந்துரு

"ஆச்சி நான் அவங்கள தேடி போறேன்... அத்தை எங்க இருக்காங்கன்னு கண்டுபிடிச்சி கூட்டிட்டு வரேன்.... போதுமா....என் ஸ்வீட்டி எப்பவும் அழக்கூடாது... சிரிச்சுகிட்டே இருக்கனும்" என்று கூறியவாறே அவர் தோள் சாய,

அவனது கன்னத்தைத் தடவி கொடுத்தவர்...." ரொம்பச் சந்தோஷம்பா... சீக்கிரம் கண்டுபிடிச்சு என் கண்ணுல காட்டுங்கய்யா..... ஆனா இந்த விஷயம் உங்க அப்பனுக்கும் , சித்தப்பனுக்கும் தெரிய

வேண்டாம்....சரியா" என்க

உடனே சபரிஷ் "சரி ஆச்சி, எங்களுக்குக் கொஞ்ச நாள் டைம் கொடுங்க , அதுக்குள்ள அத்தை குடும்பத்தைக் கண்டு பிடிச்சி உங்க முன்னாடி நிறுத்துறேன்..... ஆனா ஒரு கண்டிஷன்.. இனி இந்த மாதிரி நீங்க எதுக்காகவும் அழக்கூடாது. இதை நீங்க முன்னாடியே சொல்லிருந்தீங்கன்னா அப்பவே ஏதாவது செஞ்சு கண்டுபிடிச்சிருப்பேன்" இப்பவும் ஒன்னும் கெட்டு போகல, நாங்க இருக்கோம்..எல்லாத்தையும் பார்த்துக்கறோம்...இப்ப நீங்க எதையும் நினைக்காம சமத்தா தூங்குங்க" என்றவன் அவரைப் படுக்க வைத்து , போர்வையைப் போர்த்திவிட்டு வெளியே வந்தனர் இருவரும்...

அதுக்கு அப்புறம் அவங்க ரெண்டு பேரும் எப்படி உங்க குடும்பத்தைக் கண்டு பிடிச்சாங்கன்னு தெரியல....திடீரென ஒருநாள் சந்துரு, வீட்டுக்கு வந்து எல்லார்கிட்டையும் நான் மும்பைக்குப் போய்ப் படிக்கப் போறேன்னு சொன்னான்.. .அப்போ உன் சின்ன மாமன் இருக்கானே அவன் சந்துரு கிட்ட.

"ஏன்டா இப்போ நீ படிக்கிறதே நல்ல காலேஜ்தானே , அங்கதான் படிப்பேன்னு அடம்பிடிச்சி வேற சேர்ந்த , இப்போ திடீர்ன்னு வந்து மும்பைக்குப் போய்ப்

படிக்கப் போறேன்னு சொல்லுற… என்னடா என்ன விஷயம்” என்று அவனைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டே கேட்க

இதே கேள்விகளைக் கண்களில் தேக்கி மற்ற அனைவரும் அவனையே பார்க்க.. அவனோ தன் அண்ணனை பார்த்தான்.

அவன் பார்வையைப் புரிந்து கொண்ட சபரிஷ் “ அவனுக்கு எங்க விருப்பமோ அங்கேயே படிக்கட்டும்”என்று கூற அவனின் பேச்சுக்கு மறுபேச்சில்லாமல் அனைவரும் சந்துருவை மும்பைக்கு அனுப்பி வைத்தனர்…

சந்துரு மும்பை வந்த கதையைச் சொல்லி முடித்த ஆச்சி, “அவன் உங்களைத் தேடித்தான் அங்க வந்தான்னு இப்போதானே புரியுது.. ஆனா உங்களைக் கண்டுபிடிச்சதை பத்தி என்கிட்டே ரெண்டு பேரும் ஒரு வார்த்தை கூடச் சொல்லலையே….. அதுதான் ஏன்னு இன்னும் எனக்குப் புரியல”..என்று சொல்லி முடிக்க.

மோகனாவோ மனதுக்குள்.. “எனக்கும் அதே

டவுட்தான்.... அவங்க எங்களைத் தேடித்தான் வந்தாங்கன்னா...ஏன் எங்ககிட்ட உண்மைய சொல்லல.... அப்பா கிட்ட வந்து பேசியிருக்கலாமே.... ஒருவேளை அவர் மனசு மாறி இங்க வந்துருப்பார்ல்ல... ஏன் இன்னும் அமைதியாகவே இருக்காங்க" என்று குழம்பினாள்....

பிரியாவோ..."இந்த மொக்க பிளாஸ்பே கேட்டதுக்குப் பதிலா...என் ரிஷி கூடக் கனவுல டூயட் பாடி இருக்கலாம்" என்று நினைத்து மோகனாவை பார்க்க,

அவளின் குழப்பமான முகத்தைக் கண்டு, "ச்சு பிரி நீ ரொம்ப மோசம்...மோகனாவுக்கு ஹெல் பண்றேன்னு சொல்லிட்டு, நீ இப்படிச் சுயநலமா யோசிக்கிற பார்த்தியா..... அவளை ரொம்ப நேரம் யோசிக்க விடாதே... அது சந்துருக்குதான் ஆபத்து..... பாவம் என் பக்கி ரெண்டு வருஷமா எப்படித்தான் தன் காதலை சொல்லாம இருக்கானோ..... என்னால இரண்டு நிமிஷம் கூட என் ரிஷியோட நினைவு இல்லாம இருக்க முடியல" என்று சந்துருவை நினைத்து வருந்தியவள்...

"சரி பாட்டி ரொம்ப நேரம் பேசியாச்சி..... இப்ப எனக்குப் பசிக்குது வாங்க சாப்பிட போகலாம்" என்றவள்... " ஒரு நிமிஷம் பாட்டி.... சந்துரு சொல்றவரைக்கும்

இந்த விஷயம் உங்களுக்குத் தெரியும்னு காட்டிக்க வேண்டாம்..... அவன் ஏன் சொல்லாம இருக்கான்னு தெரியல.... அவனே இந்தச் சஸ்பென்ஸை உடைக்கிற வரை நாமளும் வெளிய காட்டிக்காம அமைதியா இருப்போம் சரியா " என்க

அவரும் தன் பேத்தி கிடைத்த சந்தோஷத்துடன்...தன் மகளை விரைவில் காண்போம் என்ற ஆவலுடனும் அவளின் கோரிக்கைக்குத் தலையசைத்தார்.....

பின் அனைவரும் ஒன்றுகூடி இரவு உணவு உட்கொள்ள,

ப்ரியாவிற்கு மட்டும் காரம் அதிகம் இல்லாமல் சமைதிருந்தார்கள்...

பிரியா சபரிஷையும், சந்துரு மோகனாவையும் சைட் அடித்துக் கொண்டே சாப்பிட..... வெகுநாட்கள்..அல்ல அல்ல வருடங்கள் கழித்து மனதில் எழுந்த சந்தோஷத்துடன். இரண்டு பிடி அதிகமாக உண்டார் ஆச்சி...

.....

இரவு உணவை முடித்துக் கொண்டு மொட்டை

மாடிக்கு சென்ற
சந்துரு ப்ரியாவுக்காகக் காத்திருந்தான்..அவன்
மனமோ
“என்னை எதுக்குப் பேபி இங்கு வர சொன்னா…..என்ன
விஷயமாக இருக்கும்” என்று யோசித்தவனின்
நாசியில் அவன் எப்போழுதும் உணரும் தன்னவளின்
வாசம் காற்றில் மிதந்து வர வேகமாகத்
திரும்பினான்….

அவனின் உணர்வை பொய்யாக்காமல் மோகனா
அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே வர…
தன்னவளின் சிரிப்பில் அவன் மெய்மறந்து நின்றான்..

மோகனாவோ…அவனின் நிலையைக் கண்டு,
அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே வந்தவள்,
திடீரென்று வெறுபக்கமாகத் தன் பார்வையைத்
திருப்பி அந்தத் திசையில் செல்ல,

சந்துருதான் அவளின் செயலில் குழம்பி போனான்
“என்னைப் பார்த்துதானே சிரிச்சிகிட்டே வந்தா ,
பின்ன எதுக்குத் திடீர்னு முகத்தைத் திருப்புரா …..
கனவு எதுவும் காணுகிறோமோ என்று எண்ணி
தன்னைத் தானே கிள்ளி கொள்ள,
“ஆ அம்மா..வலிக்குதே….அப்ப நிஜம்தான்…..பின்ன ஏன்
இவ இப்படிப் பண்றா” என்று கோபம் கொண்டு

திரும்பியவனின் பார்வை…. சுவாரசியமான பார்வையாக மாறியது…..

“மஞ்சள் கலர் சுடிதாரில், இடை தாண்டிய பின்னல் அதில் நெருக்கி தொடுத்த முல்லை பூ சூடியிருந்தாள்.. கூந்தலை முன்னால் போட்டு, அதன் நுனியை பிடித்துத் திருகியபடி வெக்கத்துடன் தலைகுனிந்து நின்றிருந்தவளின் அழகு அவனைக் கொள்ளை கொள்ள…. இதற்கு மேல் முடியாது என்பது போல் அவளை நெருங்கினான்..

மோகனாவோ “தான் அவனை நோக்கி சிரித்தவுடன் அவன் முகம் பிரகாசமானதும், தான் வேறுபுறம் சென்றதும் அவன் முகம் சுருங்கியதையும்… அவன் தன்னை ரசிப்பதையும் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டேதான் இருந்தாள்…. அவன் தன்னை நோக்கி வருவதை உணர்ந்து இவளின் இதயம் தாறுமாறாகத் துடித்தாலும் , இன்றைக்குத் தன் மனதை எப்படியாவது சொல்லிவிட வேண்டும் என்று நினைப்புடன் அவள் அங்கேயே நிற்க,

வேகமாக அவளை நெருங்கியவன்…. அவளை இமைக்காமல் பார்க்க,

அதில் அவள் மேலும் நாணம் கொண்டு, அவனை

ஒரு பார்வை பார்த்துவிட்டு தலைகுனிந்து கொள்ள,

அவனும் அவளின் நடவடிக்கையில் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து.... மனதில் எழுந்த உல்லாசத்துடன் அவளிடம் பேச வாய் திறக்கும் முன் , மோகனாவின் கையில் இருந்த அலைபேசி அலறி நான் உங்கள் நடுவில் இருக்கேன் என்று கூற..

சந்துருவோ கொலைவெறியுடன் பார்த்தான் அந்த மொபைலை..

மோகனாவோ, அலைபேசியில் அழைத்தது தாய் எனவும், அவனைப் பார்த்துக்கொண்டே அதை உயிர்ப்பித்துப் பேச ஆரம்பித்தாள்..
“அம்மா எப்படி இருக்கீங்க”

“.....”

“ம்ம்.....நல்லா இருக்கேன்.. பிரியாவும் நல்லா இருக்கா..... ம்ம் அவங்களும் நல்லா இருக்காங்க..

“.....”

“இன்னும் பத்து நாள்ல வந்துருவோம் மா”

“.....”

“அப்பா எப்படி இருக்கார் , ரவி எப்படி இருக்கான்”

பார்வதியும் அதற்க்கு பதில் கூறிவிட்டு வேறு சில விஷயங்களையும் பேசிவிட்டுப் போனை வைத்து விட்டார்...

ஆனால் மோகனாவோ, அவள் அன்னை போனை வைத்ததை வெளிகாட்டாமல்..... சந்துருவை சீண்டும் எண்ணத்தில் அவளுக்குள் ஒளிந்திருந்த குரும்புத்தனம் தலை தூக்க தன் அன்னையிடம் பேசுவது போல் பேச ஆரம்பித்தாள்..

“என்ன விஷயம் சொல்லுங்கம்மா”

“.....”

“தயங்காம சொல்லுங்கம்மா”

“.....”

“என்னதுஊஊ” , என்று அதிர்ச்சி அடைந்தவள் போல் முகத்தை வைத்துக்கொண்டு சந்துருவை பார்க்க ..

அவனோ “என்னாச்சு” என்று பதற்றத்துடன் கேட்க.. ஒரு நிமிடம் என்று சொன்னவள் .. “இல்லம்மா இப்போ முடியாதுன்னு சொல்லிடுங்க”

“.....”

“இப்போ முடியாதுன்னு எதுக்குச் சொல்றேன்னா , நான் இன்னும் படிச்சி முடிக்கலம்மா , இன்னும் ஒருவருஷம் இருக்கு...எனக்கு என் படிப்பு முக்கியம்”

“.....”

“என்னது அது வரைக்கும் வெய்ட் பண்ணுவாங்கலாம்மா? படிப்பு முடிஞ்சதும் உடனே கல்யாணமா.. நீங்க அதுக்கு என்ன சொன்னீங்க”

“.....”

“என்னது என்கிட்டே கேட்டு சொல்றேன்னா”

அவள் அங்குப் பேச பேச , இங்குச் சந்துருவிற்கு ரத்த அழுத்தம் எகிறிக்கொண்டிருந்தது , அவள் பேசுவதை வைத்து அவள் வீட்டில் அவளுக்கு மாப்பிள்ளை பார்த்து இருக்கிறார்கள் , அதை அவளிடம் அவள் அன்னை சொல்லுகிறார்கள் என்று புரிந்துக் கொண்டான்..... ஆனால் அதற்கு மோகனாவின் பதில் என்னவாக இருக்கும் என்பதை நெஞ்சில் எழுந்த வலியுடன் காத்திருந்தான்..

“என்னம்மா இது....நான் உங்க பொண்ணுமா....நீங்களும் அப்பாவும் என்ன சொன்னாலும் நான் கேட்பேன், சரிம்மா உங்க இஷ்டம் போல” என்று சொல்லி முடிக்கவில்லை.... அவளது மொபைல் தூரப்போய் விழுந்து, நொறுங்கி தன் உயிரை விட்டது...சந்துருதான் அதைத் தட்டி விட்டுருந்தான்...

மோகனா அதிர்ச்சியுடன் உடைந்த மொபைலை பார்த்தவள், திரும்பி சந்துருவை பார்க்க,

கண்கள் சிவந்து ருத்ரமூர்த்தியாக நின்று கொண்டிருந்தான் அவன்...

அதைக் கண்டு மனதில் பயம் எழுந்தாலும், அதை மறைத்துக் கொண்டு, அவனை முறைத்தவள் “எதுக்கு இப்போ மொபைலை தட்டி விட்டீங்க…. அது எவ்ளோ காஸ்லி தெரியுமா, எனக்கு என் அண்ணா வாங்கிக் கொடுத்தது .. எனக்கு இப்போ அந்த மொபைல் வேணும்” என்று சொல்ல..

ஆத்திரத்துடன் அவள் அருகில் நெருங்கி நின்று “அத்தை என்ன சொன்னாங்க” என்று உறுமினான்…

‘ஓஹோ..அய்யாவுக்கு இப்பதான் அத்தைன்னு கண்ணுக்கு தெரியுதா, இரண்டு வருஷமா என்கிட்ட சொல்லனும்ன்னு தெரியலையா….. இப்ப உன்னைச் சொல்ல வைக்கிறேன் பாரு’ என்று மனதில் நினைத்துக் கொண்டு, அவனை மேலும் சீண்டும் விதமாக “நான் என்ன சொல்றேன்….. நீங்க என்ன கேக்குறீங்க…. எனக்கு என் மொபைல் வேணும்” என்றாள் பிடிவாதமாக…

“உனக்கு மொபைல்தானே வேணும்… ஒன்னு இல்ல பத்து வாங்கித்தறேன் போதுமா….. இப்போ அத்தை என்ன சொன்னாங்கன்னு சொல்ல போறியா

இல்லையா” என்றான் கோபத்தை உள்ளடக்கிய குரலில்..

ரெண்டு வருஷமா நான் லவ் பண்ணுவேணாம், இவளும் என்னைப் பார்த்து முகம் சிவந்து நிப்பாளாம்.. ஆனா கல்யாணம் மட்டும், “அம்மா அப்பா இஷ்டம்” அப்படின்னு சொல்லுவாளாம், என்னை என்ன கேணையன்னு நினைச்சிட்டாளா” என்று அவன் மனது எரிந்து கொண்டிருந்தது ..

“ஆஹா ரொம்ப வெறுப்பேத்திட்டோமோ , பயபுள்ள ரொம்பக் கோபத்துல இருக்கு போலயே” என்று நினைத்தவள் தலையைக் குனிந்து கொண்டே, “அது வந்து…அது வந்து… அம்மாவும் அப்பாவும் எனக்கு மாப்பிள்ளை பார்த்துருக்காங்களாம்.. படிப்பு முடிஞ்சதும் கல்யாணம் வச்சிக்கலாம்ன்னு அவங்க சொன்னதுக்கு, அம்மா, எதுவா இருந்தாலும் என் பொண்ண கேட்டுதான் முடிவெடுப்பன்னு சொன்னாங்களாம்….. அதான் என் கிட்ட கேட்டாங்க…..நானும் உங்க இஷ்டம்ன்னு சொல்லிட்டேன்”.. என்று அவள் சொல்ல

அவளை நெருங்கியவன் அவளின் கையைப் பற்றித் தன் பக்கம் இழுத்தான்..

அவன் பார்த்தாலே படபடவென்று அடித்துகொள்ளும் மனம்.. இப்பொழுதோ அவன் இழுத்ததும், தன் உடல் அவன் உடலில் உரசி நிற்க, கண்களை விரித்துப் பயத்துடன் அவனைப் பார்க்க,

அவனோ, அவளது பின்னந்தலை முடியை இறுகப்பற்றி, தன் முகத்தின் அருகே, அவளின் முகத்தைக் கொண்டு வந்து, "அத்தைகிட்ட பேசும் போது கடைசியா என்ன சொன்னே" என்றவனின் கண்கள் கோபத்தில் ஜொலிக்க,

அவளுக்கோ தலை முடியை அவன் பிடித்து இழுத்ததில் தாங்காத வலி எடுக்க, அவன் பிடித்திருந்த கையின் மேல் தன் கையை வைத்தவள் "விடுங்க சந்துரு" என்று வலியில் முகம் சுளித்துச் சொல்ல..

அதெல்லாம் அவன் மூளைக்கு எட்டவில்லை.. "அத்தைகிட்ட என்ன சொன்னே அத சொல்லுடி முதல்ல" என்று மீண்டும் கர்ஜிக்க..

"உங்க இஷ்டம்" அப்படின்னு சொன்னேன் போதுமா" அவனின் செயலில் அவளுக்கும் கோபம் வர

“நான் உன்னை விரும்புறது உனக்குத் தெரியும்…. நீயும் என்னை விரும்புறன்னு நானும் தெரிஞ்சிகிட்டேன்….அப்படி இருந்தும் நீ உன் அம்மா கிட்ட எப்படி அப்படிச் சொல்லலாம்”….என்று உருமியவன் “அப்போ நான் என் இஷ்டத்தைக் காமிக்கட்டா”..என்றவன், அவள் யோசிக்கும் முன்னே,

அவளின் பூ இதழை , தன் முரட்டு இதழ்களால் வன்மையாகச் சிறை பிடித்தான்.. பாவையவள் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை….. அதிர்ச்சியில் தன் கண்கள் விரிய அவனைப் பார்க்க, அவனோ தன் கோபத்தை எல்லாம் அவள் இதழில் காட்டினான்..

அவள் அவனின் முதுகில் அடித்துத் தன் எதிர்ப்பை காட்ட , அவனுக்கோ அது பூவைக்கொண்டு ஒத்தடம் கொடுத்தது போல் இருந்ததோ.. இன்றோடு இந்த இதழ்யுத்த முத்தத்தை முடித்துவிட வேண்டும் என்று எண்ணினானோ என்னவோ.. மேலும் மேலும் அவளுள் மூழ்கினான்….. முதலில் வன்முறையாக இறங்கியவன், பின் அவளின் இதழில் ஊறும் தேனில், தன்னை மறந்து தன் இரண்டு வருட ஏக்கத்தை அந்த ஒற்றை இதழ் முத்தத்தில் தீர்த்துவிட எண்ணி அதில் மூழ்கி முத்தெடுத்துக் கொண்டிருந்தான் சந்துரு…

தன்னவன்தான் என்றாலும் , அவளால் அதை

அனுமதிக்க முடிய வில்லை.. அவனை விலக்க முயன்று போராடி தோற்றவள், மூச்சுக்காற்றுக்கு ஏங்க, அவன் அனுமதிக்காததால், வஞ்சியவள் அவன் மீதே மயங்கி சரிந்தாள்.....

அவள் தன் மீது சரியவும் தான்.. அவன் இந்த உலகத்துக்கே வந்தான்.. அவளைக் கீழே விழ விடாமல் தாங்கியவன்.. அவள் கன்னத்தைத் தட்டிக் கொண்டே "குட்டிமா...குட்டிமா.....எழுந்துருடா இங்க பாருடா" என்று அழைக்க ,

அவளிடம் அசைவில்லை என்றதும்.. "ச்ச" என்று தன் நெற்றியில் அறைந்துக் கொண்டவன்..... அங்குச் சுவர் ஓரத்தில் இருந்த பைப்பில் இருந்து தண்ணீர் பிடித்து வந்து மோகனாவின் முகத்தில் தெளித்து, குட்டிமா என்று மீண்டும் தட்ட..

மெதுவாகக் கண்விழித்தவள் எழுந்து நின்று அவனைப் பார்த்துக் கொண்டே, அவன் எதிர்பாராத நேரத்தில்..அவன் சட்டை காலரை பிடித்து ..அவனைப் பின்னோக்கி தள்ளி விட்டு விட்டு அவனைச் சரமாரியாக அடிக்கத் துவங்கினாள்..

அவளின் கோபத்தையோ இல்லை அழுகையையோ எதிர்பார்த்தவன்.. சத்தியமாக இந்த அடியை எதிர் பார்க்கவில்லை சந்துரு...

“லூசு லூசு ஏன்டா இப்படிப் பண்ணின, எருமை எருமை , இனிமேல் இப்படிப் பண்ணுவியா” என்று கூறிக் கொண்டே அடிக்க

“ஏய் ஏய் அடிக்காதடி , வலிக்குது”.. என்று அவள் கைகளைப் பிடித்துத் தடுக்க..

மோகனாவோ “ வலிக்குதா…வலிக்குதா .. நல்லா வலிக்கட்டும் என்று இன்னும் நன்றாக மொத்த துவங்கியவளின் உதட்டை அப்போது தான் கவனித்தான் …அதில் சிறிது இரத்தம் கசிய “அய்யோ ரத்தம் டி” என்று சொல்ல..

“ரத்தமா எங்கடா” என்று மோகனா கேட்க,

அவனோ அவள் உதட்டை நோக்கி கையைக் கொண்டுபோக அவன் கையைத் தட்டி விட்டவள்.. “மவனே தொட்ட கொன்னுடுவேன் உன்னை” என்று மிரட்டியவள்.. தன் உதடை தொட்டுவிட்டு அந்த விரலை பார்த்தாள் “ஆங் ,ரத்தம்…..ஏன்டா…ரத்தம் வர்றமாதிரியா கடிச்சி வப்ப, லூசு லூசு” என்று மறுபடியும் அடிக்கத் துவங்க ,

“இதோ பாரு குட்டிமா , பேச்சுப் பேச்சாதான்

இருக்கணும்.... சொல்லிட்டேன்.. ஆமா" தன் கெத்தை விடாமல் சொல்ல

"இல்லன்னா என்ன பண்ணுவே" .. என்று அவன் தலை முடியில் கைவைக்கபோக..

அவளிடம் இருந்து தப்பித்துத் தள்ளி வந்தவன்.. மனதிற்குள் "கடவுளே ஒரு முத்தத்துக்கே இவ்ளோ அடின்னா , மத்ததுக்கெல்லாம்..... நான் எப்படிச் சமாளிக்கப் போறேன்" என்று கடவுளிடம் முறையிட.. அவரோ காதலித்தால் எதையும் தாங்கும் இதயம் இருக்கவேண்டும் மகனே என்று அவர் வேலையைப் பார்க்க போய்விட்டார்..

"குட்டிமா நீ மட்டும் உங்க அம்மாகிட்ட அப்படிச் சொல்லலாமா.. ரெண்டு வருஷமா நான் உன் பின்னாடி சுத்துறது உனக்குத் தெரியும்.. அப்படி இருந்தும்.. நீ உங்க அம்மா கிட்ட அப்படிச் சொன்னா எனக்குக் கோபம் வராதா.. நீயே சொல்லு.. அதான் கொஞ்சம் எமோஷனல் ஆகிட்டேன்" என்றான் தன்னிலை விளக்கமாக.....

"எது இதுதான் உங்க ஊருல எமோஷனல் ஆகுறதா" என்று தன் கை விரலில் உள்ள ரத்தத்தைக் காண்பிக்க.

“ஹி ஹி” என்று அசடு வழிந்தவன், “அது வந்து….கோபத்துலதான் கிஸ் பண்ணினேன்.. பட் அதுக்கு அப்புறம் நல்லா இருந்ததா, அதான் கொஞ்சம் பீலிங் ஆகி கடிச்சி வச்சிட்டேன்” என்று சொல்லவும்..

அவன் சொன்ன விதத்தில்….. அவளின் முகம் வெட்கத்தில் ரோஜா பூக்கள் மலர,

அவளின் முகசிகப்பை ரசித்துக் கொண்டே அவளிடம் நெருங்க,

அவன் தன் அருகே வருவதைக் கவனித்தவள், சுற்றும் முற்றும்
தரையில் ஏதோ தேட ..

“என்ன தேடுற குட்டி மா.. சொன்னா நானும் தேடுறேன்” என்க

“ம்ம் உன்ன அடிக்க ஏதாவது கிடைக்குமான்னு தேடுறேன் என்றவள் ஆமா அதென்ன புதுசா குட்டிமா….. ம்ம் என்ன விஷயம்”… என்று தன் ஒற்றைப் புருவத்தை உயர்த்திக் கேட்க..

அதன் அழகில் மயங்கியவன்..... உன்னை நான் எப்போ முதன் முதல்ல பார்த்தேனோ அன்னையிலிருந்து உன்ன அப்படித்தான் என் மனசுல கூப்பிட்டுப் பழகிட்டேன் குட்டிமா.. இன்னைக்கி அது தானா வெளிய வந்துடுச்சி"..என்றவன் "ஆமா அதென்ன முதல்ல என்ன நீ வா போன்ன, அப்புறம் வாடா போடான்னு சொல்லுற என்ன விஷயம்".. என்று அவளைப் போலவே கேட்க..

"ஆங் .....உங்களை மாதிரிதான் எனக்கும் , மனசில இருக்கிறது வெளிய வருது" என்று நக்கலாகச் சொல்ல

அவளை ஆழ்ந்து பார்த்தவன் "அப்போ உன் மனசில இருக்கிற என் மேலான காதல் எப்போ வெளிய வரும் குட்டி மா" என்க

அவனை முறைத்தவள்.. "அது எப்போதோ வந்ததுனாலதான் இப்போ நீ கிஸ் பண்ணத்துக்கு உன்னை எதுவும் பன்னாம, வெறும் அடியோட நிப்பாட்டிட்டேன்"

"இல்லன்னா வேற என்ன பண்ணியிருப்பே செல்லம்"

“ம்ம் உன் குடலை உருவி மாலையா போட்டுருப்பேன்” என்றவள்.. “நான் உங்க கூடக் கொஞ்சம் விளையாடலாம்ன்னுதான் அப்படி அம்மாகிட்ட பேசுறா மாதிரி நடிச்சேன்”

“என்னது நடிச்சியா.. இங்க ஒருத்தனுக்கு ரத்த அழுத்தத்தை எகிறவச்சிட்டு .. நடிச்சேன்னு ரொம்பக் கூலா சொல்ற” என்றான் எரிச்சலுடன்… பின்னே ஒரே நிமிடத்தில் சப்த நாடியையும் நடுங்க வச்சிட்டாளே…..

“நான் ஒரு ரெண்டு நிமிஷம் நடிச்சதுக்கு இவ்ளோ கோபம் வருதே உங்களுக்கு , ரெண்டு வருஷமா நீங்க யார் என்கிற உண்மையை மறைச்சு எங்ககிட்டயே நடிச்சிருக்கீங்களே …அப்ப எனக்கு எவ்வளவு கோபம் வரும்……அதுக்கு என்ன சொல்ல போறீங்க” என்று அவன் கண்களை நேராகப் பார்த்துக் கேட்டாள்…..

சுவாசம் தொடரும்…

சுவாசம் 13

“துரும்பாக இருந்த என்னை

தூணாக்கினாய்!
ஜடமாக இருந்த என்னை
ஜாம்பவான் ஆக்கினாய்!
என் பிறப்பின் அர்த்தத்தை
உணர்த்திய பெண் பிரம்மன்
நீ என்னவளே..

நான் ஒரு ரெண்டு நிமிஷம் நடிச்சதுக்கே இவ்ளோ
கோபம் வருதே உங்களுக்கு , ரெண்டு வருஷமா
நீங்க யார் என்கிற உண்மையை மறைச்சு
எங்ககிட்டயே நடிச்சிருக்கீங்களே ...அப்ப எனக்கு
எவ்வளவு கோபம் வரும்.....அதுக்கு என்ன சொல்ல
போறீங்க" என்று அவன் கண்களை நேராகப் பார்த்துக்
கேட்டாள்.....

அவள் தன்னை யார் என்று தெரிந்து கொண்டதை
கண்டு அதிர்ந்தவன்.... அவள் கண்களைச் சந்திக்கத்
திராணியற்று...."எ... என்ன நான் நடிச்சேனா" என்று
திக்கி திணறி பேசியவனை அழுத்தமான பார்வையை
அவன் மீது வீசி விட்டு

பின் தன் தலையைத் திருப்பி வானில் உள்ள நட்சத்திரங்களை வெறித்துப் பார்த்துக் கொண்டே, “ஆச்சி எல்லாம் விஷயமும் சொன்னாங்க…. ரெண்டு வருஷமா என் கூடவே இருந்துருக்கீங்க .. ஆனா என்கிட்டே உண்மையைச் சொல்லனும்னு உங்களுக்குத் தோணவே இல்லல” என்றவளின் குரல் உடைந்திருப்பதை உணர்ந்து, ஒரே எட்டில் அவளை அணுகியவன் அவள் கையைப் பிடித்தான்..

அவன் கையை உதறியவள், அவன் சட்டை காலரை பிடித்து உலுக்கி “சொல்லுங்க , எதுக்கு உங்கள பத்தின உண்மையைச் சொல்லாம மறைச்சீங்க என்கிட்ட…. அப்படின்னா எங்கள வேவு பார்க்க வந்தீங்களா , நாங்க எப்படி வாழ்றோம்னு” என்று ஆவேசத்துடன் பேச,

“என்ன நான் வேவு பார்க்க வந்தேனா….. லூசு மாதிரி பேசாத குட்டி மா..ஆச்சி சொல்லித்தான் நான் உங்களைத் தேடி வந்தேன்.. இங்க மாமா பிறந்த

ஊரில் போய் விசாரிச்சதுல, மொத்த குடும்பமும் மும்பைக்குப் போய்ட்டதா சொன்னாங்க.. அப்புறம் அண்ணா கிட்ட நான் மும்பை போய்த் தேட போறதா சொன்னப்போ.. இல்ல வேண்டாம் டிடைக்டிவ் ஏஜென்சி மூலமா கண்டுபிடிப்போம்ன்னு சொல்லி மறுத்துட்டாங்க..

ஆனா நான்தான் பிடிவாதமா… ஆச்சிக்காக அத்தை குடும்பத்தை நானே தேடி போய்க் கண்டுபிடிக்கறேன்னு சொன்னதும்.. அப்போ அங்க மும்பையில படிச்சிகிட்டே தேடுன்னு சொல்லி .. அவரோட செல்வாக்கை பயன்படுத்தி இங்க இருந்து எனக்கு மும்பை காலேஜுக்குச் சீட் வாங்கிக் கொடுத்து சேர்த்து விட்டாங்க….

நான் காலேஜ் சேர்றதுக்கு ஒரு மாசம் டைம் இருந்து…. எப்படி, எங்க இருந்து ஆரம்பிக்கறதுன்னு முழிச்சிக்கிட்டு இருந்தப்போதான்…. ஒரு நாள் எதேர்ச்சையா மாமாவை கேரேஜ்ல பார்த்தேன்.

அவரை ஏற்கனவே இருபது வருஷத்துக்கு முந்தி எடுத்த போட்டோவுல பார்த்ததுனால, அவரை ஈஸியா அடையாளம் கண்டு பிடிக்க முடிஞ்சுது....
பின்ன ..... நான் மெதுவா அங்க கேரேஜ்ல வேளை பார்க்குற ஆளுங்ககிட்ட அவரைப் பத்தி விசாரிச்சேன்..... அப்புறம்தான் தெரிஞ்சது அந்தக் கேரேஜ்ஜே மாமாவோடதுதான்னு.....அதுக்கு அப்புறம் மாமாவை ஃபாலோ பண்ணி, நீங்க தங்கி இருக்கிற பிளாட்டைக் கண்டுபிடிச்சேன்.....

நான் வந்த வேலை ஈஸியா முடியவும்...இந்த விஷயத்தை என் அண்ணண்கிட்ட கூடச் சொல்லாம , கடவுளுக்குதான் முதல்ல நன்றி சொல்லணும்னு நினைச்சு, அன்னைக்கே அங்க பக்கத்துல இருக்கிற சாய்பாபா கோவிலுக்குப் போனேன்....

அங்கதான் நான் என் தேவதையை முதல் முதலாய் பார்த்தேன்...பார்த்த உடனே அவ அழகுல மயங்கிட்டேன்" என்று அன்றைய நாளின் நினைவில்.....கண்களில் கனவு மின்ன ரசனையுடன் பேசிக் கொண்டிருந்தான்.

ஆனால் மோகனாவோ..அவன் வார்த்தையில்
அதிர்ந்து மனம் கலங்க அமர்ந்திருந்தாள்.....
தன்னவனின் மனதில் தனக்கு முன்பே இன்னொரு
பெண்ணா.... என்று நினைக்க நினைக்க அவள்
மனதில் தாங்க முடியாத வலி ஒன்று எழுந்தது.....
அதில் கண்கள் கலங்க அவனை ஏறிட்டாள்.....

சந்துருவோ கனவுலத்தில் இருந்து மீண்டு
மோகணாவை பார்க்க, அவள் கண் கலங்குவதைப்
பார்த்து பதறியவன், பின் அவள் மனநிலையை
உணர்ந்து..... அவளைச் சீண்ட நினைத்து,
“குட்டிமா அவளோட பேர் என்னன்னு தெரியுமா”
என்க

அதற்கு அவளிடம் பதிலில்லாததால், அவளை
வற்புருத்தாமல் “சரி விடு நீ கேட்கலன்னா என்ன
நானே சொல்றேன்” என்றவன்
அவளின் முகத்தைப் பார்த்துக் கொண்டே “அவ பேர்
மோகனா” என்க

சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தவளின் மனதில் உள்ள சஞ்சலங்கள் அனைத்தும் மறைய “என்ன சொல்லறிங்க” என்று கண்கள் விரிய ஆச்சரியத்துடன் கேட்டாள்…

.“ஆமா குட்டிமா…அந்த தேவதை நீதான்….உனக்கு ஒரு ரகசியம் சொல்லவா……நீ என் அத்தை பொண்ணுன்னு எனக்குத் தெரியும் முன்னே நான் உன்னைக் காதலிக்க ஆரம்பிச்சிட்டேன்”…..என்றான் அவள் கண்களைப் பார்த்துக் கொண்டே …..

அவன் கண்களில் தெரிந்த அளவு கடந்த காதலும், தன் இரண்டு வருட ஏக்கத்தையும் கண்களின் மூலம் வெளிபடுத்தியவனை…அதற்கு மேல் காணமுடியாது ..வெட்கம் வந்து ஆட்கொள்ள…..தலை குனிந்து நின்றாள்…..

தன் மீதான அவளின் வெட்கத்தை ரசித்தவன்....அவள் அருகில் நெருங்கி.....குனிந்திருந்த அவள் முகத்தைத் தன் ஒற்றை விரலால் நிமிர்த்தியவன்.... “எவ்வளவு நேரம்தான் நின்னுகிட்டே பேசுறது....கொஞ்சம் கீழே உட்கார்ந்து பேசலாமா” என்றவனின் குரலில் உள்ள தாபத்தை உணர்ந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டவள்.... அவனைப் பார்த்து முறைக்க,

“இல்லடா ரொம்ப நேரமா நிக்கிறோமே உனக்குக் கால் வலிக்கும்தான”....எனறு சந்துரு இழுக்க ..

அதைக் கண்டு மனதில் சிரித்தவள் “கிழே உட்காரலாம்... ஆனா நீங்க பத்தடி தள்ளிதான்” என்று சொல்ல..

“அதுக்கு நான் என் ரூம்லேயே போய் உட்கார்ந்துக்கிறேன்” என்று நக்கலாகச் சொல்ல..

“சரி சரி வாங்க..இங்கேயே உட்கார்ந்து பேலசாம்” என்றவள் கீழே அமர..அவன் சற்று இடைவெளி விட்டு தள்ளி அமர்ந்தான்.

அவன் மனமோ சந்தோஷத்தில் துள்ளி குதித்தது…. எவ்வளவு நாள் கனவு இது….அவளுடன் தனிமையில் அமர்ந்து தன் உள்ளத்து காதலை அவளிடம் பகிற வேண்டும் என்பது…..அது நிறைவேறியதில் கடவுளுக்கு நன்றி கூறி கொண்டிருந்தான்….

அவனின் மோனநிலையைக் கலைத்து, “ம்ம் இப்போ சொல்லுங்க”

அதில் தன்னிலை அடைந்தவன்… “சாய்பாபா கோவிலில் என் தேவதை ஒரு பொண்ணு கூடப் பேசிட்டு இருந்தா”

யாரு அந்த இன்னொரு பொண்ணு ” என்று அவனைப் பார்த்து முறைக்க

“அய்யோ குட்டிமா…அது நம்ம ப்ரி டா” என்க

“பிரியாவா….அப்போ சரி….. ம்ம்ம் மேல சொல்லுங்க

“நான் உன்னைப் பார்த்துகிட்டே கோவிலுக்குள்ளே வந்தேனா, அப்போ மாமா உங்க பக்கத்துல வந்து, கிளம்பலாமா என்று கேட்க.. அப்போ நீ “சரி போலாம் அப்பானு” சொல்ல, எனக்கு ஒரே ஆச்சர்யம்.

அத்தை மாமா ஊரை விட்டு போகும் போது கௌதம் அத்தான் மட்டும்தான் இருந்தாங்கன்னு ஆச்சி சொன்னாங்க…. ஆனா இப்போதானே தெரியுது…. மாமா இங்கவந்து எனக்காக ஒரு அழகு தேவதையைப் பெத்து வச்சிருக்காருன்னு..என்று சந்துரு சொன்னதும்.. மோகனாக்குக் கன்னங்களில் வெட்கத்தில் ரோஜா பூக்கள் மலர, அதைப் பார்த்துக் கொண்டே மெதுவாக அவளை நெருங்கி அமர , அவன் அருகில் வருவது தெரிந்து இவள் தள்ளி உக்கார, இவனும் அவளிடம் நெருங்கி

அமர்ந்தான்..பின் விளையாட்டைக் கைவிட்டவனாய், பேச ஆரம்பித்தான்....

“அதுக்கு அப்புறம் உங்க பேமிலி பத்தி விசாரிச்சேன்.. நீ ப்ளஸ் டூ முடிஞ்சு , இப்போ நாம படிக்கிற காலேஜில அட்மிஷன் போட்டிருக்கீங்கன்னு தெரிஞ்சதும் எனக்கு எவ்ளோ சந்தோஷமா இருந்தது தெரியுமா” என்றவன் திடீர்றென்று சிரிக்க ஆரம்பிக்க, ஹா ஹா ஹா..

“இப்ப எதுக்குச் சம்பந்தமே இல்லாம சிரிக்கிரிங்க”

“இல்ல முதல் நாள் காலேஜுல நீங்க ரெண்டு பேரும் உள்ள வரும் போதே உங்கள நான் பார்த்துட்டேன்..... ரெண்டு பேரும் எந்தப் பக்கம் போறதுன்னு தெரியாம “பே” ன்னு முழிச்சிகிட்டு நின்னதை நினைச்சு பார்த்தா இப்பவும் எனக்குச் சிரிப்ப அடக்க முடியவில்லை என்று சொல்லி, அவளிடம் சிலபல அடிகளை வாங்கிக் கொண்டான்.....

“கொஞ்சநேரம் நீங்க என்னதான் பண்றீங்கன்னு பார்த்துட்டு இருந்தேன்.....அப்புறம்தான் உங்ககிட்ட வந்தேன்..... கிட்ட வந்து பேசினா ரெண்டு பேரும் முறைக்கிறீங்க..... நல்ல வேலை சார் வந்து என்னைக் காப்பாத்திட்டார்” என்றான்

“நானும் நீங்க வந்ததையும் பார்த்தேன்.... உங்க பார்வையும் பார்த்தேன்.... அந்தச் சமயத்துல அப்படியே உங்க கண்ணை நோண்டி வெளியே எடுக்கனும் போல் இருந்துது” என்க

இப்பொழுது அவன் அவளை முறைக்க, இவளோ கலகலவென்று சிரித்தாள்

“ப்ரிபேபி சோ கியுட் இல்ல , உன்ன நான் பார்த்தா அவ என்னை என்னமா மொறைக்கிறா”

“அவ அப்படித்தான்.... அவளுக்கு நான்னா உயிர்.. எனக்கும் அவன்னா ரொம்ப உயிர்”

அதில் சந்துருவின் முகம் சுருங்க , “அப்போ நான்” என்று சிறுபிள்ளையாய் கேட்க..

“மொதல்ல கதையை முழுசா சொல்லி முடிங்க... அப்புறம் அதைப் பத்தி யோசிக்கலாம்” என்க..

அவளை முறைத்தவன்....”அதுக்கு அப்புறம் தான் உனக்கு எல்லாம் தெரியுமே” என்று முகத்தைத் திருப்ப..

அவன் முகத்தைத் தன் பக்கமாகத் திரும்பியவள் “ என்னுடைய மாமா பையன் நீங்கதான்னு ஏன் என்கிட்ட நீங்க சொல்லல” என்று மறுபடியும் அதே கேள்வியைக் கேட்க,

“நான் எப்படி உன்னை என் அத்தை பெண் என்று தெரியும் முன்பே உன் மேல் நான் காதல் கொண்டேனோ.., அதே மாதிரி நீயும் நான் உன் மாமா பையன்னு தெரியும் முன்னாடி நீ என்னை விரும்பனும்ன்னு நினைச்சேன், உன் கண்ணுல எனக்கான காதலை நான் எப்போதோ பார்த்துட்டேன்…. ஆனா உன் வாய் மொழியா கேட்கதான் இதுவரை நான் காத்திருக்கேன்” என்றவன் திடீர் என்று மென்மையாக அவள் கண்ணில் முத்தமிட்டான்.. அவள் கண்ணில் இருந்து கண்ணீர் வழிந்து அவன் கையில் பட்டது..

அவள் கண்ணீரை கண்டு பதறியவன் “என்னாச்சு குட்டிமா, நான் மெதுவாத்தானே கிஸ் பண்ணினேன்” என்றான் அப்பாவி போல்…

அவன் நடிப்பில் அவள் அவனை அடிக்க..

“ஹே என்ன, நீ ரொம்ப அடிக்கிறே.. உன்னை இந்த உலகம் அமைதியான பொண்ணுன்னு நினைச்சுகிட்டு

இருக்கு , ஆனா நீ என்னன்னா ரவுடி ரங்கம்மா மாதிரி இருக்கே”

“நான் சொன்னேனா நான் அமைதின்னு.. நீங்களா நினைச்சா அதுக்கு நான் பொறுபில்ல என்றவள் , திடிரென்று அமைதியாகி விட ..

“என்னாச்சு ஏன் அமைதி ஆயிட்டே…எதுவா இருந்தாலும் சொன்னாதானே தெரியும்”

மெல்லிய குரலில் “தன் ஆச்சிக்கு கொடுத்த வாக்கை பற்றிக் கூறியவள்…..அதை தொடர்ந்து “உங்களை மொத மொதல்ல பார்க்கும்போது மனசுக்குள்ள லேசா ஒரு சலனம், அது தான் உங்கமேல என்ன கோப பட வச்சது….எங்கே என்னையும் அறியாம நான் உங்கள விரும்பிடுவேனோன்னுதான்…..நான் உங்களைப் பார்க்கும் போதெல்லாம் முறைச்சிட்டே இருந்தேன்” ஆனாலும் உங்கள ஒவ்வொரு முறை பார்க்கும் போதும் மனசுக்குள்ள பட்டாம்பூச்சி பறக்குற மாதிரி இருக்கும்…. நீங்க யாருங்கிற உண்மையை முன்னமே

என்கிட்ட சொல்லியிருந்தா…இவ்வளவு மனகஷ்டம் வந்துருக்காதுல்ல”

“முதல்லே சொல்லிருக்கலாம்தான் , ஆனா உங்க அப்பாவோட மனநிலை எப்படி இருக்குன்னு தெரியலையே.. இன்னும் பழசை மறந்துட்டாரான்னும் தெரியலை.. அது வேற பயம்.. சப்போஸ் நான் யாருன்னு தெரிஞ்சோ இல்ல , நான் எங்க அண்ணாகிட்ட சொல்லி, அவர் உடனே கிளம்பி வந்து, மாமாகிட்ட பேச, அவர் கோபத்துல உன்னை வேற காலேஜுக்கு உன்னை ஷிப்ட் பண்ணிட்டாருன்னா அதான் சொல்லலை , அண்ணா இதைப் பத்தி என்கிட்ட கேட்டப்போகூட முடிச்சிருவேன்னு சொன்னேனே தவிற முடிச்சிட்டேன்னு சொல்லல” என்று அவளைப் பார்த்துக் கண் அடிக்க..

“ஆமா ஏன் உங்க அண்ணா கிட்ட நீங்க உண்மையைச் சொல்லல” என்று மோகனா கேட்க..
“அதுவந்து எல்லாரையும் நேரில் கூட்டிட்டு போய் ஸ்வீட் சர்ப்ரைஸ் கொடுக்கணும்னு தான்” .. என்றதும்

அவளோ நாக்கை துரத்தி அவனுக்கு அழகு காட்ட.. அவள் முகத்தைக் கையில் ஏந்தியவன், அவள் கண்களைக் காதலோடு பார்த்தான்....பின் “குட்டிமா ஐ லவ் யு டா” என்றான்.

அவனின் காதல் பொங்கும் குரலில், அவனின் கட்டுக்கடங்காத காதலில் தாங்கமுடியாது தன் கண்களை மூடினாள்.... அவளின் மூடிய விழிகள் அவனை ஈர்க்க , குட்டிமா என்று அழைத்தான்

கண் திறவாமல் , ம்ம்ம் என்று மட்டும் அவள் சொல்ல..

“ஒரே ஒரு கிஸ் பண்ணட்டா” என்று கேட்க..

“என்னது” என்றுகூறி விலகப் போனவளை விலகாமல் தடுத்தவன்.. “கண்ணுலதான்டா கேட்குறேன்” என்றதும்..

“சரி பண்ணிக்கோ.. ஆனா இப்போ மட்டும் தான் .. இனி கேட்க கூடாது , அதுக்கு அப்புறம் ஐந்து வருஷம் கழிச்சுதான் எல்லாமே” என்க

இதைக் கேட்டவன் உண்மையாலுமே அதிர்ந்து விட்டான் .. “ஏய் என்ன விளையாடுறியா” எனக் கேட்க ..

“நான் சொல்லலைப்பா.. உங்க ப்ரிபேபி தான் சொன்னா”

“ என்ன அவ சொன்னாளா.. எப்போ சொன்னா, என்ன சொன்னா என்று ஆர்வமாகக் கேட்டவன்….. ஆமா, பேபி ஏன் இன்னும் வரலை என்கிட்ட மொட்டைமாடிக்கு வான்னு சொல்லிட்டு அவ கீழே என்ன பன்றா”….

“ரொம்ப டயர்டா இருக்கு, தூக்கம் வருதுன்னு சொல்லி அவ ரூம்முக்கு போய்ட்டா அவ இந்த விஷயமா உங்க கிட்ட பேசதான் வரசொன்னா , அவளுக்கும் தெரியும் , அன்று நடந்த வாக்குவாதத்தைச் சொன்னவள் ப்ரியா தான் கண்டுபிடித்துச் சொல்வதாகச் சொல்லி அவள் கண்டு பிடித்ததத்தையும் சொன்னவள்..... சரின்னு நான்தான் பையன் அவளுக்காகக் காத்திருப்பானே , அவ வரலன்னு தகவல் சொல்லத்தான் மேல வந்தேன்” என்றாள்

“ஓ அப்படியா...எனக்கு அடி நிச்சயம் என்றவன் சரி விடு நான் காலையில அவகிட்ட பேசிக்கிறேன்.. தோப்பில் வச்சி பேபி என்ன சொன்னா.. எதுக்கு ஐந்து வருஷம் காத்திருக்கணுமாம்.. அத சொல்லு” என்று மீண்டும் கேட்க..

அதை அவனிடம் சொல்ல முடியாமல் வெட்கம் வந்து அவளைப் பிடிங்கி தின்றது....அவளின் அந்த வெட்கம் சுமந்த முகம் அந்த இரவிலும் அவனுக்கு வெளிச்சம் போட்டு காட்ட,

அதை ரசித்துக்கொண்டே அவள் கண்ணில் மென்மையாக முத்தமிட போக , அவளோ, அவனை எதிர்பாராத நேரத்தில் தள்ளிவிட்டு .. “வெவ்வேவே போடா” என்று அழகு காட்டிவிட்டு கீழே இறங்கி ஓடி விட்டாள்..

அவள் போவதையே பார்த்துக்கொண்டிருந்தவனின் மன மெல்லாம் சந்தோசம் நிரம்பி வழிந்தது..
.....

விடிந்தும் விடியாத காலை பொழுதில் கண் விழித்த சபரிஷ், தனது ஓட்ட பயிற்சியை முடித்துக் கொண்டு, தனது அறைக்குச் சென்றவன்....இருபது நிமிடத்தில் தயாராகிக் கீழே இறங்கினான்.

அப்போது தன்னையும் அறியாமல் அவன் பார்வை ப்ரியா தங்கியிருக்கிற அறைபக்கம் செல்ல, நேற்று அவளை அணைத்த போது அவளது சுகந்தமான வாசனை இப்போதும் தன் மேல் உணர்ந்தான், அவளை உடனே காண வேண்டும் என்று மனம் சொன்னது. ஆனால் , ஏன் இந்த உணர்வு வருகிறது என்பதை அறிய தவறிவிட்டான்... அது அவனுடைய பிஸ்னெஸ் புத்திக்கு எட்ட வில்லையோ... எட்டும்

பொது????

இப்பொழுதே அவளைக் காணவேண்டும் போல் இருக்க.. அறிவோ அங்கு மோகனாவும் இருக்கிறாள் என்று எடுத்துரைக்க ..அந்த பக்கம் செல்ல துடித்த கால்களைக் கட்டுப்படுத்தி டைனிங் டேபிளுக்கு வந்தான்..

அவன் டைனிங் டேபிளில் அமர்ந்தவுடன்… அவன் முன் காபி கைப்பை தந்த வைத்த தன் அன்னையின் முகத்தைப் பார்த்தான்,

அவர் எதோ சொல்ல தயங்குறார் என்றுமட்டும் புரிந்தது… அவரைப் பார்த்து புன்னகைத்தவன்..
“என்னம்மா என்ன விஷயம் , ஏதோ சொல்லணும் என்று நினைக்கிறீங்க, ஆனா தயங்குறீங்க, என்கிட்டே உங்களுக்கு என்ன தயக்கம் சொல்லுங்கம்மா” என்றான் கனிவாக..

தன் முகத்தைப் பார்த்தே, தன் மனதை படித்த மகனை என்றும் போல் இன்றும் பெருமையாகப் பார்த்த லட்சுமி, “ஒன்றும் இல்லப்பா…. அது வந்து…அது வந்து” என்று மீண்டும் தயங்க ,

தன் தாய் தயங்குவது எதற்கு என்று இப்போது அவனுக்குப் புரிந்தது, இது இன்று மட்டும் அல்ல இரண்டு வருடமாக நடக்கும் பேச்சு வார்த்தை.. அதில் அவன் முகம் இறுக அமர்ந்திருந்தவன் அவரே சொல்லட்டும் என்று பொறுமையாகக் காபியை அருந்தினான்..

“அது வந்துபா உன் கல்யாண விஷயமா அப்பா உன்கிட்ட பேச சொன்னாவ”…என்று அவர் சொல்லி முடிக்கவில்லை..

“இதைப் பற்றிப் பேச கூடாது என்று எத்தனை தடவை

சொல்வதுமா".. என்று சொன்னவனின் குரலில் அடக்கப்பட்ட கோபம் இருந்தது.. அந்தக் கோபத்திற்குக் காரணமும் இருந்தது...

அது பவித்ரா..... அவன் பவித்ராவை ஒரு நாளும் அப்படி நினைத்தது இல்லை..

லட்சுமி மீண்டும் ஏதோ சொல்ல வருவதற்க்குள், "அண்ணா அண்ணா" என்று அழைத்துக் கொண்டு அங்கு வந்தான் சந்துரு...கையில் நாளிதழ்முடன்

"என்ன டா என்ன விஷயம்"

"சபரிஷ் முன் அந்த நாளிதழை வைக்க , அதில் கூறபட்ட செய்தியை கண்டவன் இதழில் இகழ்ச்சி புன்னகை" பின்

தன் அன்னையிடம் திரும்பியவன், "அம்மா , பவித்ரா நல்ல பொண்ணுதான்.. ஆனா எனக்குச் செல்வி,

மேகா எப்படியோ அப்படிதான் அவளும் , அதாவது நான் அவளை என் தங்கையாகத் தான் நினைக்கிறேன்" என்று அப்பாவிடம் சொல்லிடுங்க.... இனிமேல் இதைப் பற்றிப் பேசக்கூடாது" என்றவன் திரும்பி சந்துருவின் தோளில் கை போட்டு வெளியே அழைத்துச் சென்றான்..

அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த லட்சுமியிடம் வந்த பிரபா , "என்னாச்சுக்கா சபரிஷ்கிட்ட பேசினியளா" என்று வினவ,

"பேசினேன் பிரபா முடியாதுன்னு அதே பல்லவியைப் பாடிட்டுப் போறான்" என்று அவர் சலித்துக் கொள்ள

"அது தெரிந்த விஷயம்தானே அக்கா , இப்ப மட்டுமா சொல்றான் இரண்டு வருஷமா அதைத்தான் சொல்றான்...ஆனால் அத்தான் தான் கேட்கவே மாட்டேன்கிறாவ , அந்த நாதன் அவியளோட நண்பராக இருக்கலாம்.... அதுக்காக அவங்க பொண்ணை நம்ம சபரிஷிற்குத்தான் கட்டி

கொடுப்பேன்னு ஒற்றைக் காலில் நிற்கிறாங்க....
அத்தானும் அந்த நாதன் சொல்வதற்கு எல்லாம்
தலையாட்டுராவ அதுதான் ஏன்னு புரியலை,

சபரிஷின் அழகுக்கும் திறமைக்கும் வசதிக்கும்
பெண்கள் கூட்டம் மொய்க்கும்தான் அதற்காக
அவனுக்குப் பிடிக்காத விஷியத்தை அவன் ஒரு
நாளும் செய்ய மாட்டான்..

ஆனா ஒன்னுக்கா அந்தப் பவித்ரா பொண்ணு, ரொம்ப
நல்ல பொண்ணுக்கா.. அப்படி ஒரு அப்பா அம்மாக்கு
இப்படி ஒரு குணவதியான பொண்ணு"

"ஆமா பிரபா , தாயை போலப் பிள்ளை , நூலை
போலச் சேலைன்னு சொல்லுவாங்க.. ஆனா அந்தப்
பொண்ணு அவங்க அம்மா லலிதா மாதிரி இல்லாம
அவ குணம் அருமையா இருக்கும்..... நமக்குப்
பொண்ணுதானே முக்கியம் என்று தான் நானும்
நினைத்து அவனிடம் கேட்கிறேன்....அவனும் பிடி
கொடுக்க மாட்டேங்கிறான்..... அவனுக்கும் வயசு
ஏறிகிட்டே போகுதே, அவனுக்கு ஒரு கல்யாணத்தைப்

பண்ணி பார்க்கணும்ன்னு ஆசையா இருக்கு பிரபா...அவன் என்னடான்னா ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி தட்டி கழிச்சிகிட்டே இருக்கான்" என்று வருத்தபட

"சரி விடுங்க அக்கா சீக்கிரம் அவன் கல்யாணத்துக்குச் சரின்னு சொல்லுவான் பாருங்க என்றவர்.....அந்த பவித்ரா பொண்ணுக்கு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும் என்று கடவுள் கிட்ட வேண்டிக்கொள்வோம்" என்று அசரீரி போல் பிரபா சொல்லி விட்டு செல்லவும்...

"மேடம் சார் இருக்காங்களா" என்று வந்தான் ராஜேஷ்..

"வாப்பா ராஜேஷ் , என்ற லட்சுமி நானும் உன்கிட்ட எத்தன முறை சொல்றேன்...நீதான் என் பேச்சை கேட்க மாட்டேங்கிற" என்க

“என்ன மேடம் சொல்றீங்க.. நீங்க என்ன சொல்லி நான் கேட்கல என்று பதற்றத்துடன் கேட்டவனைப் பார்த்து சிரித்தவர்,

“என்னை மேடம்ன்னு கூப்பிடாதே…. அம்மான்னு சொல்லு என்று எத்தனை தடவை சொல்லியிருக்கேன்…. நீதான் கேட்கவே மாட்டேன்கிற”

“ஹப்பா இதுதானா மேடம், எனக்கு அப்படியே கூப்பிட்டுப் பழகிடுச்சி” என்றவன் “சார் எங்க மேடம்” என்று மீண்டும் கேட்டான்

உன்னைத் திருத்தவே முடியாது என்றபடி பிரபாவை அழைக்க,

“இதோ வரேன்கா…..இந்தா ராஜேஷ் காபி குடி , சபரிஷும், சந்துருவும் தோட்டத்தில் பேசிட்டு இருக்குறாங்க …… இப்போ வந்துவிடுவாங்க…… நீ காபி

குடி” என்க

அதை மறுக்காமல் வாங்கி அருந்த ஆரம்பித்தான் .....
.....

“அண்ணா எண்ணண்ணா இது” என்றபடி நாளிதழை அவனிடம் மீண்டும் காட்ட..

அதைக் கையில் வாங்கியவன்.. சந்துருவை பார்த்து சிரித்து “இந்தச் சபரிஷ் மேல கைவைக்க நினைச்சலே அவனை என்ன பண்ணலாம் என்று அவனுக்கு முன்னாடியே யோசிக்கிற ஆளு நான்...ஆனா அந்தக் கே. ஆர்க்கு எவ்ளோ தைரியம் இருந்தா என்ன போட சொல்லி ஆள் செட் பண்ணிருப்பான்.....அதுக்குதான் என்னோட ஸ்டைலில் தண்டனை குடுத்தேன்” என்றான்

“ஆம் சபரிஷ் கே.ஆர் கம்பெனியை

ஒன்றும்மில்லாமல் ஆக்கிவிட்டான். அவர் குடோன் கரெண்ட் சர்கியூட் ஆகி குடோன் முமுவதும் பற்றி எரிந்தது, அதுவும் இல்லாமல் கே.ஆர் வீட்டிலும் வருமான வரிச் சோதனை நடக்க, அங்கேயும் அவரின் கள்ளபணம் அனைத்தையும் அள்ளிகொண்டு போய்விட்டார்கள்.. இனி கே . ஆர் தொழிலில் மீண்டும் எழ வேண்டும் என்றால் முதலில் இருந்துதான் ஆரம்பிக்க வேண்டும்...

“ஏன்டா நான் பண்ணினது தப்புன்னு நினைக்கிறியா”

“ச்ச ச்ச உங்களை நான் என்னைக்கும் தப்பா நினைக்கமாட்டேன்.. நீங்க எதுவும் அவனைச் செய்யா விட்டாலும்.. நான் அவனை ஏதாவது செஞ்சிருப்பேன்..... ஏன்னா அவன் கைவச்சது என் அண்ணா மேலயும், என் பேபி மேலயும் ....

“ஆமா நீயேன் ப்ரியாவை பேபின்னு சொல்றே...?” என்று அவனைக் கேள்வியாகப் பார்க்க

“ஒரு நிமிடம் முதன் முறையாகப் பிரியாவை எப்பொழுது பேபி என்று அழைக்க ஆரம்பித்தோம் என்றவனது மனதில், காலேஜில் நடந்த அந்தச் சம்பவம் கண் முன்னால் படமாக விரிய கோபத்தில் கண் சிவந்தது.... தன் தலையை உலுக்கியவன்..

“அவளோட குழந்தைதனமான நடவடிக்கையில் எனக்கு அவளைப் பேபின்னுதான் கூப்பிட தோணுது அண்ணா” என்று மட்டும் சொன்னான் சந்துரு, ஒருவேளை விவரமாகச் சொல்லியிருக்கலாமோ அவன்????

“இல்ல நீ ப்ரியாவை பேபின்னு கூப்பிடுறியே..ஒருவேளை நீ அவளை” என்று அவன் முடிக்கவில்லை,

“ஐயோ அண்ணா அப்படி ஒரு வார்த்தை மட்டும் அவ

எதிர்க்க கேட்டுடாதீங்க” என்றவன் சுற்றும் முற்றும் பார்க்க

“என்ன டா யாரை தேடுற”

“இல்ல நீங்க கேட்டிங்களே ஒரு கேள்வி , இத மட்டும் அவ கேட்க நேர்ந்ததுன்னா , அப்புறம் உங்களை அந்தக் கடவுளே வந்தாலும் காப்பாத்த முடியாது”..

அப்படி என்ன பண்ணுவா என்று அவளைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாகக் கேட்டான்.. தன் வேலைகளை எல்லாம் மறந்து…

“அதை ஏன் கேட்குறீங்க….. காலேஜில கிளாஸை தவிர மற்ற இடங்களில் எல்லாம்… எங்க மூன்று பேரையும் ஒன்றாகப் பார்க்கலாம்.. அது எல்லோருக்கும் தெரியும்..போன வருஷம் புதுசா வந்த பையன் இவகிட்ட அவனோட காதலை சொல்ல,

அதுக்கு இவ “சாரி எனக்கு அதில இஷ்டம் இல்ல…அதுவும் இல்லாம எனக்கு இப்ப லவ் பண்ற வயசும் இல்ல” என்று சொல்லி நிராகரித்து விட்டாள் ரெண்டு நாள் கழிச்சு நானும் பேபியும் பேசிட்டு இருக்கும் போது மறுபடியும் அந்தப் பையன் வந்து, இவகிட்ட என்னைக் காட்டி “இவனை நீ லவ் பண்ற….. அதனால்தான் என்னோட லவ்வ ஏத்துக்க மாட்டீங்கிறேனு கேட்டான்.

அதுக்கு அவ “தப்பா பேசாத நானும் சந்துருவும் நல்ல பிரெண்ட்ஸ்” என்று சொல்ல,

அதுக்கு அவன் எங்கள பார்த்து நக்கலா சிரிச்சிட்டே “உன்ன அவன் ஏன் பேபி பேபின்னு சொல்றான் தெரியுமா….. அவன் உன்னை லவ் பண்றான் என்று சொல்ல அதைக் கேட்டு அவளுக்கு அப்படி ஒரு கோபம் வந்துருச்சு…

நானோ அந்தப் பையன்கிட்ட “டேய் போயிடு இங்கயிருந்து இல்ல அப்புறம் சேதாரம் எதுனா ஆச்சின்னா எனக்குத் தெரியாதுனு சொல்லியும்.

அவன் நான் சொல்வதைக் கண்டு கொள்ளாமல் அவகிட்ட மறுபடியும்…”ஆமா நீ இவனை லவ் பண்ற…. அதான் நான் உன்கிட்ட பிரப்போஸ் பண்ணப்போ ரிஜெக்ட் பண்ணிட்டேன்னு சொல்லி…. வாயக் கூட மூடலண்ணா……அவனைப் போட்டு அடிச்சி நார் நாரா கிழிச்சி எடுத்துட்டா..

நான் எவ்வளவோ தடுத்துப் பார்த்தேன் .. அவன் தெரியாம சொல்லிட்டான் விட்டுடுன்னு.. ம்கூம் அவ கேட்கலயே….அப்புறம் ப்ரின்ஸி வந்துதான் அவனைக் காப்பாத்த முடிஞ்சிது..

இப்போது சபரிஷ் சுற்றும் முற்றும் பார்த்தான்.. நல்ல வேலை அந்த ராட்சசி இங்க இல்ல.. என்றவன்

தன்னை நினைத்துச் சிரித்துக்கொண்டான்..

“அவ்ளோ அடிச்சும் அவளுக்குக் கோபம் அடங்கவே இல்லண்ணா….. இவகிட்ட அடிவாங்கிட்டு போனவன் மூன்று மாதம் கழித்துத் தான் காலேஜ்கே வந்தான்..அப்போ இவ என்ன பண்ணுனா தெரியுமா..

சபரிஷ்க்கு அவள் மீண்டும் என்ன பண்ணினா என்று தெரிந்துகொள்ள வேண்டும் போல் ஆவலாக இருந்தது.. “என்ன பண்ணினாள்”.. என்று கேட்டான்..

“ஹா ஹா ஹா அந்தப் பையன் காலேஜ் வெளிய மரத்தடில உட்காந்திருந்தான்.. இவ அவனைப் பார்த்துட்டா , எங்க இருந்துதான் பிடிச்சாளோ தெரியலண்ணா… அவ்வளவு கட்டெரும்பு கடிஎறும்பு அவ்வளவையும் அப்படியே அவன் தலையில கொட்டிட்டா..

அதுக்கு அப்புறம் அந்தப் பையன் இவளுக்குப் பயந்து காலேஜே மாத்திட்டு போய்ட்டான். என்று சொன்னவன்.....விழுந்து விழுந்து சிரிக்க....அவளின் குறும்பில் சபரிஷ்க்கும் அடக்கமாட்டாமல் சிரிப்பு வந்தது.....

அதில் இருந்து எங்க பிரண்ட்ஷிப்பை யாரும் தப்பா பேசமாட்டாங்க.. அப்படி யாராவது தப்பா பேசி அத அவ கேட்டுட்டான்னா அவங்க கதி அதோகதிதான்...

நான் இந்த விஷயத்தை ஈசியா எடுத்துக்கொள்வேன் அண்ணா.. ஏன்னா ஒரு பெண்ணும் பையனும் பேசினா கண்டிப்பா தப்பா நினைக்கிற உலகம் இது .. ஆனா பேபி அப்படி விட மாட்டா..

அப்படித்தான் ஒருதடவை கிளாஸில் சார் ஏதோ பாடம் நடத்தும் போது கேள்வி கேட்டுருக்கார் இவகிட்ட.... இவ பதில் தெரியாம முழிச்சிட்டு நின்னுருக்கா..... அன்னைக்கு அவரு வாயில சனி இருந்துருக்கு போல “நீ பசங்க கூடச் சுத்ததான்

லாய்க்குன்னு ” சொல்ல

அதுக்கு இவ “நான் எந்தப் பையன் கூடச் சுத்துனேன்….
அத நீங்க பார்த்தீங்க” அப்படின்னு கேட்டுருக்கா..
அவரோ இவளை மொறைச்சிகிட்டே…… சந்துருன்னு
என் பெயரை சொல்லிருக்கார். .

அய்யோ அப்புறம் என்னாச்சு என்று சபரிஷ் கேக்க..

“அதுக்கு இவ, எங்க பிரண்ட்ஷிப்பை பத்தி தப்பா
பேசாதிங்கன்னு” சொல்ல

“பேசுனா என்ன பண்ணுவே” அவரும் கேட்க.

அதுக்குள்ள இவ ஏதோ பிளான் பண்ணிட்டா..

“என்ன பிளான் டா”

“குரூப் ஸ்டடின்னு சொல்லு மோகனா வீட்டுக்கு வந்து அவளையும் கூட்டிகிட்டு, நைட் பண்ணிரெண்டு மணிக்கு அந்தச் சாரோட வீட்டு வாசல் கதவத் தட்டிட்டு , கதவு முன்னாடி வெடியை பத்தவச்சிட்டு வந்துட்டா.

அவரோ அங்கே தனியா தங்கியிருக்கார்.... அப்போ அவர்தானே கதவத் திறந்திருப்பார்.. அப்புறம் என்ன ஆகியிருக்கும் என்று நீங்களே யோசித்துப் பாருங்க” அப்புறம் அந்தச் சார் காலேஜ் வர ஆறு மாசம் ஆயிருச்சு என்று நிறுத்த

“ஹா ஹா ஹா” சபரிஷால் சிரிப்பை அடக்க முடியவில்லை..
“ஹா.... ஹா..... அவ்ளோ சேட்டை பண்ணுவாளாடா.. “

அதை ஏன் கேட்குறீங்க.... எங்க பிரெண்ட்ஷிப் பத்தின்னு இல்ல.. சும்மாவே அவ ரொம்பக் குறும்புண்ணா.. ப்ரின்ஸி காரை பஞ்சர் பண்ணிவிட்டு திட்டு வாங்குவா.. வேணும் என்றே யாரு மேலையாவது தண்ணீர் ஊற்றி வம்பு பண்ணுவா, லேபில் ஒளிஞ்சி நின்னுகிட்டு யாராவது லேப் குள்ள வந்தா கதவு பின்னாடி நின்னு பயம் காட்டுவா.. இப்படி ஏகபட்ட விஷயம் இருக்கு..அவளை பத்தி சொல்ல.... ஆனா அவளுக்கு அழறது மட்டும் பிடிக்காது... எப்போதும் சந்தோஷமாக இருக்கனும், மத்தவங்களையும் சந்தோஷமாக வச்சிருக்கனும்னு நினைப்பா" என்றவன். சும்மா அவளைப் பார்த்தாலே எங்க காலேஜே அதிரும் அண்ணா.. என்று கூறி சிரிக்க

ஜவுளி கடையில் வைத்து .. உங்க கடை ஓனரை சைட் அடிக்க வந்துருக்கேன்னு சொன்னதை நினைத்து பார்த்தவன்..
உங்க காலேஜ் மட்டுமா அதிர்ந்தது நானும்தான் அன்று அதிர்ந்தேன் என்று நினைத்தவன்....அவனுடன் சேர்ந்து சிரித்து விட ,

அதற்குப் பின்பு சில நேரம் மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு வீட்டை நோக்கி நடக்க.. அங்கே வழியில் இடுப்பில் கைவைத்து இவர்களை முறைத்துக் கொண்டிருந்தாள் பிரியா.....

“அய்யயோ அண்ணா நாம பேசியதை பேபி கேட்டுட்டாலோ.. இப்ப என்ன பண்ண போறாளோன்னு தெரியலையே”..... என்றவன் அவளைப் பார்த்து “ குட் மார்னிங் பேபி.. இப்போ தான் எழுந்தியா” என்று கேட்க..

அவளோ சபரிஷை கவனிக்காமல் சந்துருவிடம் வந்தவள்.. அவனை அடிக்கத் துவங்கினாள்..
“அய்யோ பேபி எதுக்கு அடிக்கிற சொல்லு”

“பக்கி பக்கி ஏன்டா இப்படிப் பண்ணினே லூசு லூசு” என்று மீண்டும் அடிக்க.

அவளிடம் இருந்து தப்பித்தவன்.. தன் அண்ணணின் பின் சென்று நின்றுகொண்டு, “பேபி எதுனாலும் பேச்சுப் பேச்சாதான் இருக்கனும் நோ வைலன்ஸ்” என்று வடிவேல் பாணியில் சொல்ல ..

அதுவரை தன்னை அறியாமல் ப்ரியாவை ரசித்த சபரிஷ்.. அவளிடம் “சந்துரு என்ன பண்ணினான்னு இப்படி அவனை அடிக்கிற” என்று தன் அக்மார்க் குரலில் கேட்டான் ..

அப்போது தான் அவனைக் கவனித்தாள் வெளியே கிளம்பத் தயாராக நின்றான் வேட்டி சட்டையில்.. அவனைப் பார்த்து முகம் சுருக்கியவள்.. “இவன் ஏன் எப்போதும் வேட்டி உடுத்துறான் , இவன் மட்டும் ஜீன்ஸ் டி ஷர்ட் போட்டா எவ்வளவு அழகா இருப்பான்” என்று மனதுக்குள் சொன்னவள்..

தன்னை அறியாமல் “நீங்க தள்ளுங்க ரிஷி அவனை இன்னைக்கி ஒரு வழி பண்ணாம விட மாட்டேன்” என்றாள்..

தன்னை ரிஷி என்று அழைத்ததை நெற்றி சுருங்க யோசனையுடன் அவளைப் பார்த்தவன் அப்பொழுது தான் உணர்ந்தான்…நேற்றும் தோப்பில் தன்னை ரிஷி என்று அழைத்ததை….

அவனை அதிக நேரம் சிந்திக்க விடாது அவர்களின் செல்ல சண்டை அவனின் கவனத்தை ஈர்த்தது….

“எதுக்கு அவனை அடிக்கிறேன்னு சொல்லு நான் தள்ளி நிக்குறேன்” என்றான் சபரிஷ்…

அதைக் கேட்டு அவள் “பே” என்று முழித்தாள்

எப்படிச் சொல்லுவாள் என்னவென்று சொல்லுவாள்..
காலையில் மோகனா வந்து தன்னை எழுப்ப,

அவளின் முகத்தைப் பார்த்தவள் அதிர்ந்தாள்....
ஏனென்றாள் அவளது உதடு கன்றி வீங்கி இருந்தது..

“ஹே மோஹி என்னாச்சு டி பூச்சி ஏதும்
கடிச்சிடுச்சா”.. என்று கேட்க.. மோகனாவோ..
“அதெல்லாம் ஒன்னும் இல்லை , உனக்குக் கழுத்து
வலி பரவாயில்லையா , நீ போய்க் குளி” என்று
பேச்சை மாற்ற,ஆனால் தான் விடாமல் கேட்டதும்
நேற்று சந்துருவுடனான பேச்சு வார்த்தையைச்
சொன்னவள்.... அவன் முத்தமிட்டதையும் சொல்ல
வேண்டியதாயிற்று..

அவ்வளவுதான் “அந்தப் பக்கிய என்ன பண்றேனு பாரு
இப்போ” என்றவள். மோகனா கூப்பிட கூப்பிட
நில்லாமல் இங்கு வந்து சந்துருவை அடிக்கத்
துவங்க..... இப்போ எதுக்கு அடிக்கிறேன்னு இவன்
கேட்குறான்.....நான் என்னன்னு சொல்ல,

சந்துரு மோகனாவிற்கு முத்தம் கொடுக்கிறேன்னு
சொல்லி அவ உதட்டை கடிச்சி வச்சிட்டான்... அதான்
நான் அவனை அடிக்கிறேன்னு நான் இவன்கிட்ட

விளக்கவா முடியும்....என்று திருத் திரு வென்று முழித்துக் கொண்டு நின்றாள் பிரியா.....

******

சுவாசம் தொடரும்...

சுவாசம் 14

“என் இதயத் துடிப்பின் ஓசை
எனக்கே கேட்கிறது!
என்னவனின் இதயதுடிப்பு
என்னருகில் இருப்பதால்!!!

சபரிஷிடம் என்ன சொல்வது என்று தெரியாமல் முழித்தவள் “ஆ...ஆங். உங்களை ஆன்ட்டி கூப்பிட்டாங்க போங்க” என்று திக்கி திணற

அவளின் சமாளிப்பை பார்த்து சிரித்தவன் “அத நான் பார்த்துகிறேன் , நீ எதுக்கு என் தம்பியை அடிச்சேன்னு சொல்லவே இல்லையே” என்று தன் தாடையைத் தடவி அவளை ஒரு மார்க்கமாகப் பார்க்க. ..

அவனின் பார்வையில், அவளுக்கு அங்கு வீசிய குளிர் காற்றையும் மீறி வேர்க்க ஆரம்பித்தது , “அய்யோ இப்படிப் பார்த்து பார்த்தே என்ன கொல்றடா” என்று மனதுக்குள் சிணுங்கியவள்.....வெளியே அவனை முறைத்துப் பார்க்க,ஆனால் அவன் கண்களைச் சந்திக்கத்தான் முடியவில்லை அவளால்...

“ஆமா நீ ரொம்பக் குறும்பு பண்ணுவியாமே அப்படியா” எனக் கேட்க..

அவளோ சந்துருவை பார்த்து முறைக்க ஆரம்பித்தாள்...

“ஹலோ அங்க என்ன பார்வை , கேள்வி கேட்டது நான் என்னைப் பார்த்துப் பதில் சொல்லு” என்று சபரிஷ் சொல்ல..

‘சந்துரு உனக்கு இருக்குடி’ என மனதுக்குள் சொன்னவள், வெளியே அவனிடம், “சந்துரு மோஹி உன்கிட்ட ஏதோ பேசணும்ன்னு சொன்னா போ” என்று சொல்லி முடிக்கவில்லை..... அவன் தன் அண்ணனை கூட மறந்து பறந்து சென்று விட்டான் தன்னுடைய குட்டிமாவை காண..

சந்துரு சென்றதும் சபரிஷிடம் “ஹலோ என்ன பார்வையெல்லாம் ரொம்பப் பலமா இருக்கு…..”என்று கண்ணை உருட்டி அவள் கேட்க..

“ஏன் பார்த்தா என்ன பண்ணுவ” என்றவன், அவளை மீண்டும் அழுத்தமான பார்வை ஒன்றை வீசி… “நான் கேட்டதுக்கு இது பதில் இல்லையே” என்றான்

“நீங்க என்ன கேள்வி கேட்டீங்க…அதுக்கு நான் என்ன பதில் சொல்லல”…அவனிடமே பிளேட்டை திருப்ப,

அவளின் சாமர்த்தியத்தை மெச்சியவன்….”ஓ நான் என்ன கேட்டேன்னே உனக்குப் புரியலையா….சரி மறுபடியும் கேட்குறேன்…..எதுக்கு என் தம்பியை அடிச்சே”

“ஐய்யோ அதை விட மாட்டேங்கிறானே…..நானும் எவ்வளவுதான் சமாளிக்கறது” என்று நினைத்துக் கொண்டே அவனை முறைத்தவள் “ஹலோ அவன் என் பிரெண்டு….அவனை நான் என்ன வேணும்னாலும் பண்ணுவேன்… உங்களை ஆன்ட்டி கூப்பிட்டாங்கனு சொன்னேன்ல்ல ராஜேஷ் வந்துருக்காங்க உள்ள போங்க” என்று அவனுக்கே ஆர்டர் போட்டாள் ப்ரியா..

அவள் அறையை விட்டு வேகமாக வரும்போது.. ராஜேஷ் அமர்ந்திருப்பது அவள் கண்ணில் பட, இவனிடமிருந்து தப்பிப்பதற்காக அவனின் வரவை தெரிவிக்க

“நான் போற வரைக்கும் ராஜேஷ் வெயிட் பண்ணுவான்.....சோ நீங்க சொல்லுங்க” என்றான் தன் கைகளைக் குறுக்காகக் கட்டிக்கொண்டு

‘இப்ப மட்டும் இவன் என் கிட்ட நின்னு பேசுறதை யாரும் தப்பா நினைக்க மாட்டாங்களாமா’ என்று நினைத்து அவள் சுற்றி முற்றும் தோட்டத்தைப் பார்க்க, காலை வேலை என்பதால்.. ஒரு சிலர் மட்டுமே இருந்தனர்.. அவர்களும் இவர்களைக் கவனியாமல் தங்களுக்குக் கொடுத்த வேலையைச் செய்துகொண்டிருந்தனர்.....

இருந்த ஒரு வழியும் இல்லாமல் போக....அவளுக்குப் பெரும் அவஸ்தையாக இருந்தது.....அவன் மீதிருந்து வந்த அவனது பிரத்தியேக வாசனை வேறு அவளை என்னவோ செய்ய,

அப்பொழுதுதான் அவளுக்கு நினைவு வந்தது, காலை எழுந்தவுடன் தன் முகம் கூடக் கழுவ மறந்து சந்துருவை திட்டுவதற்க்காக வந்து இவனிடம்

மாட்டிக் கொண்டதை.. “ச்சே என்ன நினைப்பான்” என்ற நினைப்பில்....வேறு எதுவும் கூறாது, அவனிடம் “நான் போகனும்” என்று சிறுபிள்ளையாய் சிணுங்க ஆரம்பிக்க..

அப்போது “சபரிஷ் எங்க இருக்க” என்று அழைத்துக்கொண்டே வந்தார் அவனின் சித்தி பிரபா.

அவர் அழைத்ததும், அவரிடம் சென்றவன்....”என்ன சித்தி என்ன விஷயம்” என்று கேட்க,

பிரபா அவனைத் தேடி வந்து விஷயத்தைக் கூறிவிட்டு சென்று விட்டார்....

“அப்பாடா தப்பிச்சேன்...நல்ல நேரத்துல வந்து என்னைக் காப்பாத்திட்டீங்க ஆன்ட்டி” என்று ப்ரியா மனதுக்குள் நன்றி சொல்ல, ஆனால் அடுத்து பிரபாவின் பேச்சு அவள் காதில் இடியென இறங்கியது.....அதில் திக்பிரம்மை பிடித்து அதே இடத்தில் நின்றாள் பிரியா...

பிரபா சபரிஷிடம் பேசிவிட்டு செல்லவும் ஒரு கார் அவர்களது அரண்மனைக்குள் நுழைந்தது....அதை சபரிஷ் கவனிக்கவில்லை..

தன் சித்தியிடம் பேசிவிட்டு திரும்பியவன், ப்ரியாவை காண.. அவளோ இவனையே பார்த்திருந்தாள்.. அவளது முகம் சரியில்லாததை உணர்ந்து "இவ்வளவு நேரம் நல்லாத்தானே பேசிட்டு இருந்தா....திடீர்ன்னு என்னாச்சி இவளுக்கு" என்று அவளது அருகில் வந்தவன் "ஏன் ப்ரியா ஒருமாதிரி இருக்க" ..என்று கேட்க

சபரிஷ் கேட்டதைக் காதில் வாங்காமல்..பிரபா சொன்ன விஷயத்திலேயே மனம் குழம்பி இருந்தவள்.....பின் மனதில் ஒரு முடிவுடன் "இல்ல என் ரிஷி எனக்கு மட்டும் தான் சொந்தம்....அவனை யாருக்காகவும், எதற்காகவும் விட்டுக்குடுக்க மாட்டேன்..... எவ்வளவோ பார்த்துட்டோம்.. இத சமாளிக்க முடியாதா.. இன்னைக்கு வரட்டும் அவங்க. ஓட ஓட விரட்டுறேன்.... நான் யாருன்னு அவங்களுக்குக் காட்டுறேன்" என்று நினைத்துக் கொண்டு அவனிடம்,

"உங்க சித்தி வந்து என்னமோ சொல்லிட்டு போறாங்க.....என்ன விஷயம்" என்று கேட்க..

"ஆமாம் அது " என்று சபரிஷ் சொல்ல வாய் திறக்கவும்..

“ஹாய் சபரிஷ் , இங்க என்ன பண்றிங்க” என்ற இனிமையான குரல் காற்றில் மிதந்து வந்தது….

யார் அந்த இனிமையான குரலுக்குச் சொந்தக்காரி என்று ப்ரியா குரல் வந்த திசையைப் பார்க்க, அங்கே ஒரு அழகான இளம் பெண் , தங்களை நோக்கி அல்ல அல்ல, சபரிஷின் மேல் பார்வையைப் பதித்து வந்து கொண்டிருந்தாள்.

“வா பவித்ரா , எப்படி இருக்கே என்ன தீடீர் விஜயம்” என்று நலம் விசாரித்தான் சபரிஷ்..

சபரிஷ் “பிரபா ஆன்ட்டிகிட்ட நாங்க இப்போ அங்கே வருவோம்…. சபரிஷ் கிட்ட சொல்லிடுங்க என்று சொன்னேனே…..அவங்க உங்ககிட்ட சொல்லலையா” என்று கேட்டாள் பவித்ரா…

“பவித்ரா” என்று ஒரு முறை சொல்லிப்பார்த்த ப்ரியா , சிறிது நேரத்திற்கு முன் பிரபா ஆன்ட்டி சொல்லிச்சென்ற பவித்ரா இவள்தானா என யோசித்தப்படி நின்றாள்

அவனின் சித்தி சொன்ன விஷயம் இதுதான் “நாதனும் அவரது மனைவியும் ,பவித்ராவும் இங்க

வராங்களாம்... பவித்ராவிற்கும் உனக்குமான
கல்யாண விஷயமா பேசுரத்துக்கு...

அவங்க வந்தாங்கன்னா நீ என்ன முடிவு
பண்ணிருக்கியோ...அதை இன்னைக்கே அவங்ககிட்ட
சொல்லி ஒரு முடிவு எடுத்திடுன்னு அக்கா உன்கிட்ட
சொல்ல சொன்னாங்க" என்றுதான் சொல்லி
சென்றார் பிரபா...

பவித்ரா என்கிற பெண்ணுக்கும் சபரிஷுக்கும்
கல்யாணம் பேச இன்றைக்கு , அதுவும் இவ்வளவு
காலையில் வராங்களா.. இதைக் கேட்டுத்தான் ,
பிரியா அதிர்ந்தது..

யாருக்காகவும் எதற்காகவும் அவனை விட்டு
கொடுக்க முடியாது என்று மனதில் உறுதி எடுத்த
அடுத்த நிமிடம்.... அந்தப் பெண்ணே இங்கு வந்து
நின்றதும் அல்லாமல்....அவள் வேறு இவளை விட
அழகாக இருக்கவும்....எங்கே சபரிஷ் மனம்
மாறிவிடுவானோ.....என்று நினைத்தவள்.....இப்பொழுது
என்ன செய்வது என்று தெரியாமல் இருவரையும்
முறைத்துக்கொண்டு நின்றாள்..... ஏனென்றால்

இவள் ஒருத்தி அங்கு நிற்கிறாள் என்பதைக் கூட
மறந்து பேச ஆரம்பித்து விட்டார்கள் இருவரும்.....

தான் யார் என்று அந்தப் பவித்ராவிற்கு அறிமுகப் படுத்துவான் என்று நினைத்து பிரியா அவனையே பார்த்துக் கொண்டு நிற்க ...

ஆனால் அவனோ இவளை கண்டு கொள்ளாது.....பவித்ராவிடம் வெகு சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருக்கவும், தான் இனி இங்கு அதிகப்படியோ என நினைத்து நகரப் போனாள்.. ஆனால் அவளால் நகர முடியவில்லை , அவளது கை, அவளது ரிஷியின் கையால் சிறை பிடிக்கப் பட்டிருந்தது ,

பிரியா தன் கையைப் பார்த்தவள் , திகைத்து சபரிஷை பார்க்க அவனோ இப்பொழுதும் பவித்ராவிடம் தான் பேசிக்கொண்டிருந்தான்.....

இவன் செய்கையில் .....அவன் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறான் என்று தெரியாமல் குழம்பித்தான் போனாள் பிரியா...

அவனோ ப்ரியாவை , பவித்ராவிடம் அறிமுகம் செய்யத்தான் நிறுத்தினான், வேற எதற்காகவும் இல்லை...

.....

பவித்ரா.....நாதன் ,மாலினி தம்பதியரின் ஒரே புதல்வி , சென்னையில் பிரபல கல்லூரியில் ஒரு வருடத்திற்கு முன்தான் தன் படிப்பை முடித்தாள்.. படிப்பை முடித்ததும் நாதன் தர்மலிங்கத்திடம் தன் மகளுக்கும் சபரிஷ்க்கும் திருமணம் பேச..... சபரிஷோ முடியாது என்றுவிட்டான்.. ஏன்னெனில் அவன் பவித்ராவை தங்கையாகதான் பாவித்தான் , அவள் மேல் வேறு எந்த விதமான எண்ணமும் வரவில்லை..

பவித்ராவும் சபரிஷை அண்ணன் என்றுதான் சிறு வயதில் அழைத்தாள் ஆனால் மாலினி , தன் மகளிடம் அத்தான் என்று அழைக்கச் சொல்ல ,

“முடியாது அம்மா, செல்விஅக்கா எப்படிக் கூப்பிடுவாங்கலோ அப்படித்தான் நான் சபரிஷ் அண்ணாவை கூப்பிடுவேன்” எனச் சொல்ல ,

மாலினி கோபத்தில் சிறுபெண் என்று கூடப் பார்க்காமல் அவளை அடிக்க , பவித்ரா அடி தாங்காமல் “சரி நீங்க சொல்றமாதிரியே கேட்குறேன்” என்று சொன்ன பிறகுதான் அடியை நிறுத்தினார்.. மாலினியும் பணத்தாசையில் நாதனின் மனைவி என்பதை நிரூபித்தார்..

நாதன் தன் தந்தையின் நண்பர் என்பதால்.. பவித்ரா அடிக்கடி அந்த வீட்டுக்கு வருவாள்.. செல்வி ,பவித்ராவை விட நான்கு வயது பெரியவள் என்றாலும் அவளுடன் ஒரு தோழமை உணர்வு உண்டாக அவளிடம் விளையாட விரும்புவாள்..

நாதனோ.... சபரிஷ் பவித்ராவை திருமணம் செய்ய முடியாது என்றதில் கோபம் கொண்டவர்...சரி கொஞ்சம் விட்டு பிடிப்போம் என்று கொஞ்சம் அடக்கி வாசித்தார்....ஏன்னென்றால் எப்படியும் தன் மகள்தான் இந்த வீட்டு மருமகள் என்பதில் உறுதியாக இருந்தார்.....அதற்கு ஒரு காரணமும் இருந்தது.....

அவர் வாழ்க்கையில் கஷ்டபட்ட போது, தான் ஒரு கோடீஸ்வர பெண்ணை மனம் முடித்து., அந்தச் சொத்துக்களுக்கு அதிபதியாக வேண்டும் என்று நினைத்தார்.....அதற்கு அவர் தேரந்தெடுத்த குடும்பம் தர்மலிங்கம் குடும்பம்..... ஆனால் அது முடியாமல் போய்விட்டது.....தற்பொழுது வசதி வந்தாலும்....இன்னும் இன்னும் வேண்டும் என்ற எண்ணத்திலும்..... தர்மலிங்கம் குடும்பம் மீதான கோபத்திலும்... தன் மகளை எப்படியும் இந்தக் குடும்பத்தில் கட்டிக் கொடுத்து தன் ஆசையைத் தீர்த்துக் கொள்ள எண்ணினார்.....

சபரிஷின் தந்தை தர்மலிங்கம் நாதனின் பால்ய வயது தோழன்.. தர்மலிங்கத்தைப் பொறுத்தவரை நாதன் நல்ல நண்பன். (அப்படிதான் தர்மலிங்கத்திடம் காட்டிக்கொண்டார் நாதன்)ஆனால் தன் குணத்தைத் தர்மலிங்கத்துக்குத் தெரியாமல் பார்த்துக்கொண்டார்...

நாதனின் குனத்தைப் புரிந்து கொண்ட ஒரே நபர் தர்மலிங்கத்தின் தந்தை வெற்றிவேல் பூபதி, மட்டுமே.. அதனால் தான் அன்று அப்படி ஒரு முடிவு எடுத்தார்.. அந்த முடிவு தன் மகன்களுக்குப் பிடிக்காமல் , பெரிய பிரச்னை ஆகும் என்று அப்போது வெற்றிவேல் பூபதி நினைக்கவில்லை..

இரண்டு வருடம் பொறுத்த நாதன் இன்று எப்படியும் திருமணத்தைப் பேசி முடிக்கவேண்டும் என்று ஒரு முடிவோடு
கிளம்பி வந்து விட்டார்..

சபரிஷின் அரண்மனைக்குள் கார் வந்து நின்றதும் , நாதன் எப்பொழுதும் போல் இன்றும் அந்த அரண்மனையைக் கண்களால் நிறப்பியவர்.. காரில் இருந்து இறங்கும் முன்.. அவர் கண்ணில் பிரபாவுடன் பேசிக்கொண்டிருந்த சபரிஷ் அவர் கண்ணில் பட்டான்..

பின்னால் திரும்பி தன் மகளிடம் .. “அதோ பார் அங்க சபரிஷ் நிற்கிறான்.. போ போய்ப் பேசு, , இன்று எப்படியும் கல்யாணத்தை முடிவு செய்துவிட்டு தான் கிளம்பனும்.. அது உன் கையில் தான் இருக்கு” .. என்று கோபமான குரலில் சொன்னவர் இறங்கி மனைவியை அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் செல்ல.....

பவித்ராவும் ஒரு முடிவுடன் சபரிஷிடம் பேச சென்றாள்.....ஏனென்றால் அவள் மனதில் வேறு விருப்பம் இருந்தது..... அதை இன்று எப்படியும் சபாரிஷிடம் சொல்லி விட்டால் மற்றதை அவனே பார்த்துக்கொள்வான்” என்ற நிம்மதியுடன் தன் கவலையை மறந்து , சபரிஷை நோக்கி நடக்க..... அதற்குள் பிரபா சபரிஷியிடம் பேசிவிட்டு சென்று விட்டார்..

பவித்ரா திரும்பி தனது தாய் ,தந்தை வீட்டின் உள்ளே சென்று விட்டார்களா என்று பார்க்க.. அவர்கள் அங்கேதான் நின்று கொண்டிருந்தனர் இவர்களை நோக்கி..... மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டு சபரிஷிடம் சென்று பேச ஆரம்பித்தாள்.....

.....

உள்ளே வந்த நாதன் அங்குச் சோபாவில்

அமர்ந்திருந்த ராஜேஷை பார்த்ததும் முகம் சுழித்தவர்..

“என்ன தங்கச்சி , வேலைகாரங்களை எப்படி நடத்தனும்ன்னு உனக்குச் சரியா தெரியல .. இப்படியா நடுவீட்ல உட்காரவச்சி உபசரிப்பே”.. என்று கேட்டதும்..

ராஜேஷ் முகம் கருக்க உடனே எழுந்தவன்.. “மேடம் நான் கிளம்புறேன் சாரை ஆபிஸ்ல பார்த்து கையெழுத்து வாங்கிக்கிறேன்” என்று கிளம்ப.

“நீ இரு ராஜேஷ்” என்று சொன்ன லட்சுமி , நாதனை நோக்கி , “இங்க வேலை செய்யறவங்களை நாங்க வேலைகாரங்களா நடத்துறது இல்லைன்னு உங்களுக்கே தெரியும்.... அப்படி இருந்தும் நீங்க இப்படிப் பேசலாமா அண்ணா”.. என்று அந்த அண்ணாவில் அழுத்தம் கொடுத்து சொல்ல..

“அதுக்கு இல்லம்மா..நான் என்ன சொல்ல வரேன்னா ” என்று உள்ளுக்குள் கோபத்திலும்.. வெளியே சிரித்துக்கோண்டும் சொல்ல..

“நீங்க ஒன்னும் சொல்ல வேண்டாம் அண்ணா .. நல்ல வேலை இங்க சபரிஷும், அவன் பாட்டியும்

இல்ல.. இருந்திருந்தாங்க , நீங்க திருச்செந்தூர் முருகனுக்கு எத்தனை காவடி எடுத்தாலும் அடுத்தத் தடவை இந்த வீட்டுக்குள்ள நுழைய முடியாது”.. இதைச் சொன்னது பிரபா..

இருவரையும் உள்ளுக்குள் முறைத்தவர், “இவ சொன்னமாதிரி சபரிஷும், அந்தக் கிழவியும் இருந்தாங்கன்னா.. வீட்டுக்குள்ள விட மாட்டங்கதான்” என நினைத்தவர்,,... “என் மகள் மட்டும் இந்த வீட்டுக்கு மருமகளா வரட்டும் அப்புறம்.. உங்களையெல்லாம் என்ன பண்றேன்னு பாருங்க” என்று மனதுக்குள் கருவியவர்..

வெளியே “அத விடு தங்கச்சி தர்மா எங்கே? நான் வந்துருக்கேன் சொல்லி கூப்பிடு” என்றவர் , அங்கிருந்த சோபாவில் கால் மேல் கால் போட்டு அமர..

“மேடம் நான் கிளம்புறேன்”என்று.. லட்சுமியின் பதிலை கூட எதிர்பார்காமல் கிளம்பி வெளியே வந்த ராஜேஷை பார்த்த ப்ரியா “ஹலோ, ஜி எம் சார் இங்க வாங்க.... உங்க பாஸ் இங்க இருகாங்க” என்று அழைக்க..

அழைத்தது ப்ரியா என்றதும் “இவங்க எதுக்கு என்ன

கூப்பிடுராங்க" என்று நினைத்தவன்....அங்கு சபரிஷ் இருப்பதைக் கண்டு அவர்களிடம் விரைய,

ராஜேஷ் அருகில் வரவும் ப்ரியா அவனிடம் பேச ஆரம்பித்துவிட்டாள்.."என்ன ராஜேஷ் எப்படி இருக்கீங்க.. உங்க வேலை எல்லாம் எப்படி நடக்குது" என்று அவனிடம் பிரியா விசாரிக்க..

ராஜேஷும் அவள் கேட்ட கேள்விக்குப் பொறுப்பாகப் பதில் அளித்தான்

இவர்கள் இருவரும் பேசுவதைப் பார்த்த சபரிஷோ , இபபொழுது அவர்களைப் பார்த்து முறைக்க ஆரம்பித்தான்....

சபரிஷின் பிரஷரை ஏற்றிக்கொண்டிருக்கிறோம் என்று அறியாமல் அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்க,

சபரிஷோ "ராஜேஷ்" என்று குரலில் அழுத்ததுடன் சற்று கடுமையாகவே அழைத்தான்.....

அவனின் குரலில் உள்ள பேதத்தைப் புரிந்து கொண்ட ராஜேஷ் "சார்" என்று சபரிஷை பார்க்க..

அவனோ “இங்க என்ன பண்றீங்க.. இப்போ நீங்க சுகர் பேக்ட்டரிலதானே இருக்கனும்” என்றான் இன்னும் கடுமையான குரலில்..

“இல்ல சார் அது வந்து உங்க கையெழுத்து வேணும்.. லோட் அனுப்ப அதான்” என்று இழுக்கவும்

சபரிஷ் “ம்ம் குடுங்க” என்று தன் வலகையை நீட்ட , அதில் ராஜேஷ் கொண்டுவந்த பைல் வைத்தான்..

அதில் கையெழுத்திட்ட சபரிஷ்.. அதை ராஜேஷிடம் கொடுத்து விட்டு நீ கிளம்பலாம் என்பதுபோல் பார்க்க.....அவனுக்கு அதில் ராஜேஷிண் மனதில் சங்கடம் ஏற்பட்டது...

ராஜேஷ் நல்ல உழைப்பாளி.. நான்கு வருடமாகச் சபரிஷிடம் வேலை செய்கிறான்.. அவனது தந்தை கரும்பு ஆலையில் வேலை செய்பவர்.. மகன் படிப்பை முடித்ததும்... சபரிஷிடம் அழைத்து வந்து “அய்யா என் பையனை என் தகுதிக்கு மீறி நல்லா படிக்க வச்சிட்டேன்.. அவனுக்கு ஒரு நல்ல வேலை நீங்கதான் வாங்கித்தரனும்” என்று கேட்க.. அவனோ தன் பி.ஏ வாக வேலையில் சேர்த்துக்கொண்டான்..

அதன் பிறகு அவனின் திறமையைப் பார்த்து அவனுக்கு ஜி. எம் பதவியை அளித்தான்.....

சபரிஷ் ஒருநாளும் தன்னிடம் இப்படிக் கடுமையாக நடந்துகொண்டத்தில்லை..... சற்று முன் வீட்டினுள் அந்த நாதன் பேசியதும்.. இப்போது சபரிஷ் கிளம்பு என்பதுபோல் பார்க்கவும்... ராஜேஷ்க்கு ஒரு மாதிரி ஆகிவிட அதற்கு மேல் அங்கு நில்லாமல் கிளம்பிவிட்டான்..

ராஜேஷ் கிளம்பவும்... பிரியா திரும்பி சபரிஷை பார்க்க

அவனும் ப்ரியாவை தான் பாரத்துக் கொண்டிருந்தான்.. ஆனால் அனல் பறக்கும் பார்வையால்..

சபரிஷின் பார்வையைப் பார்த்தவள்.. 'என்னாச்சு இவனுக்கு எதுக்கு இப்போ இந்தக் கோபம்'.. என்று யோசிக்க அவளுக்குப் புரிந்தது.... ' ஓஓ நான் ராஜேஷிடம் பேசுவதுதான் அய்யாவுக்குப் பிடிக்கதே, அதான் இந்தப் பார்வையோ ஐயோ சோ ஸ்வீட் டா நீ.. ஓகே ஓகே' என்று நினைத்தவள் தனக்கு வந்த கோபத்தைக் கட்டுபடித்தி கொண்டு

பவித்ராவிடம் திரும்பி “நீங்க பேசிட்டு வாங்க நான் உள்ளே போறேன்” என்றவள் , சபரிஷை பார்த்து ஒரு வெட்டும் பார்வையை வீசிவிட்டு சென்று விட்டாள்..

அதில் தனது கோபத்தை மறந்து அவளது சிறுப்பிள்ளைத்தனத்தை ரசித்துப் போகும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தவனை, பவித்ராவின் குரல் திசை திருப்பியது....

“எதுக்கு அவங்க கோபமா உங்களைப் பார்த்துட்டு போறாங்க”

“அவ அப்படித்தான் , அவளை நான் பார்த்துக்கொள்கிறேன்..நீ வந்த விஷயத்தைச் சொல்லு.....என்கிட்ட என்ன பேசணும்.. ஏதோ சொல்ல வேண்டும் என்று நினைக்கிற என்கிட்ட என்ன தயக்கம்” என்று அவளை ஊக்க

“நான் உங்ககிட்ட முக்கியமான விஷயம் ஒன்னு சொல்லனும்” என்று திக்கி திணறி ஆரம்பிக்க,

“கல்யாணம் பத்தின விஷயம் தானே” என்று அவன் கேட்க..

“இல்ல அதை நீங்க பார்த்துக்குவீங்க..நான் சொல்லவந்தது வேற விஷயம்” என்று பவித்ரா சிறிது தயங்க..

அவள் என்ன விஷயம் சொல்ல வந்திருக்கிறாள் என்பது அவனுக்கு ஓரளவுக்குப் புரிந்தது..

அவன் அவளிடம் எதோ சொல்ல வாய் திறக்கவும்.. பிரபா இவர்களை அழைக்கவும் சரியாக இருந்தது…

“சரி வா வீட்டுக்குள்ள போய்ப் பேசலாம்” என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டான்…

பவித்ரா தான் தவித்துப் போனாள்…..சபரிஷிடம் தன் மனதில் உள்ளதை சொன்னால் ஒழிய தன் பிரச்சணைக்குத் தீர்வு கிடைக்கும் என்று நம்பியவள்….இன்றைக்கு அவனிடம் அந்த விஷயத்தை எப்படியாவது சொல்லியே தீர்வது என்ற முடிவுடன் அவன் பின் சென்றாள்….

அவளின் மனமோ….”சபரிஷ்க்கு மட்டும் இந்த விஷயம் தெரியட்டும் அப்ப இருக்குடா உனக்கு விலகியா போற விலகி ” என்று நினைத்தவளின் கண்முன் தன் வசீகரப் புன்னகையுடன் வந்து நின்றான் பவித்ராவின்

எண்ணத்தின் நாயகன்..

சபரிஷை தொடர்ந்து பவித்ரா வீட்டுக்குள் செல்ல..
அங்கு எல்லோரும் டைனிங் ஹாலில்
அமர்ந்திருந்தனர்... ப்ரியாவை தவிர ..

நாதனை பார்த்துக்கொண்டே அவர் எதிரில்
அமர்ந்தான் சபரிஷ்.. அவனுக்கு நாதனின் வரவு
பிடிக்கவில்லை என்றாலும் தன் தந்தைக்காகப்
பொறுத்துக்கொண்டான்.. இன்று இதற்கெல்லாம் ஒரு
முடிவு கட்ட வேண்டும்" என்று நினைத்தான்..

சபரிஷ் அமர்ந்த இருக்கைக்குப் பக்கத்தில் இரண்டு
இருக்கை காலியாக இருக்க..... சபரிஷின் பக்கத்தில்
பவித்ராவை அமரசொல்லி நாதன் கண்ணால்
கட்டளைஇட..

சபரிஷின் அருகில் அமரபோன பவித்ராவை அடுத்த
இருக்கையில் அமரவைத்து..... அவனின் பக்கத்தில்
அமர்ந்து "இது எனக்கான இடம்" என்று சொல்லாமல்
சொல்லி, நாதனுக்கு ஹார்ட் அட்டாக் வரவைத்தாள்
பிரியா

"சாரி சாரி.. குளிக்கத்தான் போனேன்.... ஆனா பாருங்க

ஏற்கனவே எல்லோரும் சாப்பிடாம எனக்காக வெயிட் பண்ணிட்டு இருந்துருக்கீங்க. இந்தப் பொங்கல் வாசனை வேறு என்னை இங்கு இழுத்துடுச்சு….. அதான் ஜஸ்ட் பிரஷ் மட்டும் பண்ணிட்டு ஓடி வந்துட்டேன்" என்றவள்

"ஆன்ட்டி பொங்கலை அள்ளி வைங்க என் தட்டுல, வாவ் வடையா.. வைங்க வைங்க. ஆன்ட்டி எங்க வீட்ல அம்மா இந்த மாதிரி எல்லாம் சமைச்சி தாங்கன்னு கேட்டேன்னு வைங்க….. உடனே கொலஸ்ட்ரால் அது இதுன்னு லெச்சர் பண்ண ஆரம்பிச்சிடுவாங்க" என்றவள், இருவரின் வயிற்றெருச்சலை கொட்டிக்கொண்டிருக்கிறோம் என்று அறியாமல் பொங்கலை சாப்பிட தயாரானாள் அவள்…

சபரிஷ்…. ப்ரியாவின் செய்கையையும் , நாதனின் முக மாறுத்தலையும் பார்த்து மனதுக்குள் சிரித்துக்கொண்டிருந்தான் ,

ப்ரபாவுக்கும் , லட்சுமிக்கு அதே நிலைமைதான்…

தர்மலிங்கம் மற்றும் அவரது தம்பியும், ப்ரியாவின் குழந்தைத்தனத்தை ரசித்தனர்.. மேகாவும், செல்வியும் கூடக் கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கினர்..

சந்துருவும் மோகனாவும் அவர்களின் தனி உலகத்தில் இருந்தனர்

ப்ரியாவின் தட்டில் பொங்கலை வைத்த லட்சுமி..
“கழுத்து வலி இப்போ பரவாலையமா” .எனக் கேட்க..

“அய்யோ ஆன்ட்டி எனக்கு ஒன்னும் இல்ல , நான் நல்லா இருக்கேன்.. அதுக்காகப் பொங்கலை வைக்காமல் போயிடாதீங்க” என்று அவள் அவசரமாகச் சொல்ல.. மேகா சிரித்தே விட்டாள்..

லஷ்மிக்கும் சிரிப்பு வர, “சரி சரி சிரிக்காம சாப்பிடுங்க”.. என்றுவிட்டு எல்லோருக்கும் பரிமார ஆரம்பித்தார்…

இதுதான் சமயம் என்று நாதன் பேசுவதற்குத் தொண்டையைக் கனைத்தார்…. ஆனால் ப்ரியாவோ “என்ன அங்கிள் தொண்டைல கிச் கிச் ஆ ,.. விக்ஸ் மாத்திரை சாப்பிடுங்க சரியா போய்டும் என்று சொல்ல” இப்போது சபரிஷ்க்குச் சிரிப்பை கட்டுப்படுத்துவது கஷ்டமாகி விட்டது..

ப்ரியாவை முறைத்த நாதன் “இங்க நாங்க எங்க

குடும்ப விஷயம் பேசணும் , கொஞ்சம் அமைதியா இருக்கியா" என்று சிறு கடுமையுடன் சொல்ல..

ப்ரியாவிடம் நாதன் இப்படிப் பேசியது யாருக்கும் பிடிக்கவில்லை.. ஏன் தர்மலிங்கத்துக்குக் கூடப் பிடிக்கவில்லை..

சபரிஷோ "இது எங்க குடும்பம், நீங்க மொதல்ல வெளியே போங்க" என்று சொல்ல போனான், அடக்கபட்ட கோபத்துடன்

நாதனின் பேச்சை கவனித்த சந்துருவும் வாய்திறக்க போக..... யாருக்கும் பேச வாய்ப்பளிக்காமல் பிரியாவோ

"அங்கிள் குடும்ப விஷயம்தானே தாராளமா பேசுங்க, ஆனா மொதல்ல என்ன பொங்கலை சாப்பிட விடுங்க.. என்னோட பேவரேட் டிஷ் இது.....நானும் எவ்ளோ நேரம்தான் என் கையையும் வாயையும் கண்ட்ரோல் பண்றது" என்றவள் சாப்பிட ஆரம்பித்தாள்..

ப்ரியாவை பார்த்து பல்லை கடித்த நாதன், கோபத்திலும் அந்த பொங்கலை ஒரு பிடி பிடித்துவிட்டுதான் எழுந்தார்..

பின் அனைவரும் ஹாலில் அமர்ந்திருக்க.....தான் வந்த விஷயத்தைச் சொல்ல எண்ணி மறுபடியும் தொண்டையைக் கணைக்கப் போன நாதன் , ப்ரியாவை பார்த்து தன் முடிவை மாற்றிப் பேச்சை ஆரம்பித்தார்..

“தர்மா பவித்ரா படிப்பை முடிச்சி ஒரு வருஷம் ஆகப் போகுது... அவ ஜாதகத்துல இந்த வருஷம் அவளுக்குக் கல்யாணம் முடிச்சே ஆகணும் இல்லனா இன்னும் ஐந்து வருஷம் தள்ளிபோயிடும்ன்னு எங்க குடும்ப ஜோசியர் சொல்லிட்டார்.. அதான் உன்ன பார்த்து சட்டு புட்டுன்னு பேசி முடிச்சிரலாம்ன்னு வந்துருக்கேன்.. நீ என்ன சொல்றே, எப்போ கல்யாணத்தை வச்சிக்கலாம்” என்று சபரிஷின் தந்தையைப் பார்த்து நாதன் கேட்டாலும்..

எல்லோரும் சபரிஷை பார்த்தனர்...

மோகனாவோ, ஏன் எல்லோரும் சபரிஷை பார்க்கறாங்க..அதுவும் பவித்ராவை கல்யாணத்தைப் பத்தி பேச இங்க ஏன் அவங்க வந்துருக்காங்க” என யோசிக்க..

ப்ரியாவோ சபரிஷ் என்ன பதில் சொல்லபோரான்

என்று துடிக்கும் இதயதுடிப்புடன் காத்திருக்க..

நாதனின் பேச்சை கேட்ட சபரிஷோ.. “ கல்யாண பேச்சைதானே என்று அவரைக் கூர்ந்து நோக்கியவன் , “ஆரம்பிச்சிரலாம்” என்று சொல்ல,

பவித்ரா ஏகத்துக்கும் அதிர்ந்தாள்..... அய்யோ ‘ஏன் சபரிஷ் இப்படிச் சொல்றாங்க....நான் அவரை அண்ணண் மாதிரிதானே நினைச்சேன்.....இது அவங்களுக்கும் தெரியுமே.....இது என்ன புதுக் குழப்பம்’ என்று கலங்கி நிற்க,

ப்ரியா அவனையே பார்க்க..

நாதனோ “அப்போ என்ன தர்மா மாப்பிள்ளையே சொல்லியாச்சி. சீக்கிரம் நல்ல நாள் பார்த்திடலாம்.. சபரிஷுக்கும், பவித்ராவுக்கும் அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணம்” என்று அலுகங்காமல் குலுங்காமல் ஒரு குண்டை தூக்கி போட்டார் இருவர் மேல்.. அதில் ஒன்று பிரியா.. அடுத்தது?.....

சுவாசம் தொடரும்
*****

என் கண்களே என்னை ஏமாற்றுகிறது பெண்ணே!
ஏனென்றால்,என்னையும் மீறி
என்பார்வை
உன்னையே தீண்டுகிறது!!!...

சபரிஷிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு, உடனே அங்கிருந்து கிளம்பிய ராஜேஷ், பாதி தூரம் வந்ததும்தான் அவனுக்கு நியாபகம் வந்தது..... "ச்சே முக்கியமான விஷயத்தை சொல்ல மறந்துட்டேனே....அந்த விஷயத்தை சொல்லவில்லை என்றால் சார் ரொம்ப கோபப்படுவாங்களே.....

எல்லாம் அவளால் வந்தது..... இப்போ மறுபடியும் அங்க போகனும்" என்று சலித்தபடி தன் வண்டியை திருப்பி சபரிஷின் வீடு நோக்கி செல்ல, நினைத்தவனின் மனமோ, "உண்மையை சொல்லு நீ இப்போ எதுக்கு அங்க போற" என்று நக்கலாக கேட்க,

"நான் சாரை பார்க்கத்தான் போறேன்.... அங்கு வேற யாரையும் பார்க்க இல்ல" என்று தனக்குள் கூறினாலும், உண்மை அது இல்லை என்று அவனுக்கு தானே தெரியும்.....

அப்பொழுது அவன் நினைவில் “ராஜேஷ் ஐ லவ் யூ” என்ற குரலில் அவனையும் அறியாமல் அவன் இதழில் சிறு புன்னகை தோன்றியது….
பின் சட்டென்று தன்னை சுதாரித்தவன், அந்த நினைவுகளை ஒதுக்கி சாலையில் கவனம் வைத்தான்…..

சபரிஷின் வீட்டு போர்டிக்கோவில் தன் வாகனத்தை நிறுத்திவிட்டு வீட்டின் உள்ளே நுழையும் போதுதான், நாதனின் பேச்சு அவனின் காதில் இடியாய் விழுந்தது..

“என்ன சபரிஷ் சார்க்கும் , பவித்ராவுக்கும் கல்யாணமா”.. என மனம் அதிர நின்றவனின் கண்கள் தாமாக பவித்ராவை நோக்க ,

அவளோ தந்தை சொன்ன செய்தியில், மனம் கலங்க கண்களில் கண்ணீருடன், அதை யாருக்கும் வெளிகாட்டாது உள்ளிழுக்கும் முயற்சியில் ஈடுபட்டு கொண்டிருந்தாள்……

ஒரு வினாடி பவித்ராவை பார்த்தவன் பின் என்ன நினைத்தானோ அவளின் உருவத்தை கண்களால் நிரப்பி தன் மனப்பெட்டகத்தில் பத்திரமாக பூட்டி வைத்தவன், வந்த சுவடு தெரியாமல் கிளம்பி விட்டான்.

மனம் ஒரு நிலையில்லாமல் தவிக்க, அலுவலகம் செல்லாமல், ஆற்றங்கரையோரம் வண்டியை நிறுத்திய ராஜேஷ், மணலில் கால்கள் புதைய நடந்தான்.. .. காற்று சிலு சிலுவென்று வீச அதை ரசிக்கும் மனமில்லாமல், ஒர் இடத்தில அமர்ந்தவன் அப்படியே ஆற்று மணலில் , தன் கைகளை தலைக்கு பின்னால் வைத்துக்கொண்டு வானை நோக்கி படுத்தான்..

அவன் நினைவு பவித்ராவை முதன் முதலில் சந்தித்த நாளுக்கு சென்றது..
அப்பொழுது ராஜேஷ் சபரிஷிடம் வேலைக்கு சேர்ந்து இரண்டு வருடம் கடந்த நிலையில், எப்பொழுதும் போல் , மூன்று இடங்களுக்கும் சென்று தன் வேலைகளை முடித்துவிட்டு மறுபடியும் பால் பண்ணைக்கு வந்த ராஜேஷ்….தன் கேபினில் அமர்ந்து வேலை செய்து கொண்டிருந்தான்..

அப்போழுது ஒருவன் “சார் செல்வியம்மா வந்துருக்காவ கூட அவிய பிரெண்டும் வந்துருக்காவளாம்… நீங்க வர்றதுக்கு முன்னாடி அய்யா போனு பண்ணுனாவ” என்று சொல்லிவிட்டு சென்றான்..

அவன் சென்றவுடன், தன் செல்லை எடுத்து பார்க்க அதில் மூன்று தடவை சபரிஷின் கால் வந்திருந்தது.. “ஓ வண்டில வந்ததால் எனக்கு கேட்கவில்லை போல” என்று நினைத்தவன். “சரி நாம போய் அவங்கள பார்த்துட்டு வருவோம்” என்று நினைத்து வெளியே வந்தவன், தனக்கு தகவல் சொன்னவனிடம் “அவங்க எங்க இருக்காங்க” என்று கேட்க..

“மாடு எல்லாம் கட்டி வச்சிருக்குள்ள அங்க நிக்காவ” என்றுவிட்டு தன் வேலையை பார்க்க..

அங்கு தன் தேவதையை காண போகிறோம் என்று தெரியாமல் , மாட்டுப்பண்ணையை நோக்கி சென்றான்....

“ செல்விக்கா.... எவ்ளோ மாடுங்க நிக்கிது.எல்லாமே எவ்ளோ கியூட்டா இருக்குது பாருங்களேன் ஆனா எனக்கு அந்த ப்ரவுன் கலர் மாடுதான் ரொம்ப பிடிச்சிருக்கு அதை தொட்டு பார்க்கணும் போல இருக்கு ப்ளீஸ்கா” என்ற ஒரு இனிமையான குரல் கேட்க.. அப்படியே நின்றான் ராஜேஷ்..

“இல்ல பவி தொடவெல்லாம் வேண்டாம் இங்கிருந்தே பாரு” என்று செல்வி சொல்ல ..

“ஒரே ஒரு தடவைக்கா” என்று பவி செல்லம் கொஞ்ச,

“வேண்டாம் பவி, எனக்கு பயமா இருக்கு..
முட்டிருச்சின்னா என்ன பண்றது” என்று செல்வி
பயத்துடன் சொல்ல.

“ஆமாம்மா போகாதீங்க , புது ஆளுங்க கிட்ட போனா
மாடுங்க மிரளும்.. இல்லனா முட்டும்” என்று
பக்கத்தில் இவர்களுக்கு துணைக்கு நின்ற முருகன்
என்ற வேலைக்காரன் கூற,

“இல்லக்கா எனக்கு இப்போ தொட்டே ஆகணும்”
என்று பிடிவாதம் பிடித்தாள்....

“வர வர ரொம்ப அடம்பிடிக்கிற நீ” என்று பவித்ராவை
பொய்யாக செல்வி முறைத்து “சரி ஒரே ஒரு
தடவைதான்..... முருகா நீ போய் மாட்டோட தலை
பக்கத்தில் நில்லுங்க.. பவி நீ போய் லேசா
தொட்டுட்டு ஓடி வந்துரு சரியா” என்க

செல்வியின் கன்னத்தில் முத்தம் வைத்து “சரிக்கா....
தேங்க்ஸ் கா” என்றவள் முருகனின் பின்னால் போக..

இவ்வளவையும் தூரத்தில் நின்று
பார்த்துக்கொண்டிருந்த ராஜேஷ்..... பவியை அந்த
மாட்டை தொட செல்வி அனுமதித்ததும்..
அதிர்ந்தவன், பின் வேகமாக அங்கு செல்வதற்குள்
பவி அந்த மாட்டை தொட அது மிரண்டு போய்
அவளை முட்டவர, அதில் பயந்து பின்வாங்கி ஓடி
வந்தவள் செல்விக்கா என்று கத்தி கொண்டே தன்
எதிரில் வந்தவனை இறுக்கி கட்டிக்கொண்டாள்..

பயத்தில் நெஞ்சுக்கூடு வேகமாக அடித்துக்கொள்ள,
அப்பொழுது செல்வி வேகமாக வந்து பவி என்று
அழைக்க, அப்பொழுதுதான் உணர்ந்தாள் தான்
கட்டிக்கொண்டிருப்பது, வேறு யாரையோ என்று.....
மெல்ல கண் திறந்து யார் என்று பார்க்க, அவளை
பிடித்திருந்த ராஜேஷை கண்டதும்.... “எப்பா என்ன
வளர்த்தியா இருக்காங்க..... யார் இவங்க, நான்
இதுக்கு முன்னே இவங்களை பார்த்தது இல்லையே ..
ஒருவேளை செல்வி அக்கா வீட்டுக்கு இவங்க
சொந்தமா, இல்லையே.. நான் சின்ன வயசுல இருந்து
செல்வியக்கா வீட்டுக்கு வரேன்...போறேன்.... ஆனா
ஒருநாளும் இவங்கள அங்கே பார்த்தது இல்லையே”
இவ்வளவையும் அவனை கட்டிக்கொண்டே
யோசித்தவள்....

செல்வி வேகமாக வந்து அவளை

உலுக்கவும்.....சட்டென்று அவனிடம் இருந்து விலகி....அவனை பார்க்க முடியாமல் வெட்கம் வந்து தடுக்க, செல்வியின் பின் போய் நின்று கொண்டாள்.

“ச்சே அவரை கட்டி பிடிச்சதும் இல்லாம....பேக்கு மாதிரி அவரையே பே ன்னு பார்த்து நின்னுகிட்டு இருந்தா... என்ன நினைப்பாங்க என்னை பத்தி”...என்றபடி நிற்க

ராஜேஷோ செல்வியிடம்.. “மேடம் அந்தமாடுதான் மிரளும்ன்னு முருகன் சொன்னானே அப்படி இருந்தும் நீங்க அதை தொடலாமா..... ஏதாவது ஒன்னு ஆச்சின்னா சார்க்கு என்ன பதில் சொல்றது.... இனிமேல் இந்த மாதிரி பண்ணாதீங்க” கடைசி வரியை மட்டும், பவித்ராவை பார்த்துக்கொண்டே சொல்ல அவளும் அவனை தான் பார்த்துக்கொண்டிருந்தாள்.. அவன் சொன்னதை கேட்டவள், அவனை பார்த்து வெவ்வேவே என்று அழகு காட்ட..

அந்த அழகில் ராஜேஷ் சற்று தடுமாறித்தான் போனான்..அவன் தடுமாற்றத்தை கண்டு கொண்ட பவித்ரா வாய் பொத்தி சிரிக்க..

செல்வி ராஜேஷிடம் , “நான் சொன்னேன் இவதான்

கேட்கலை…..சரி நாங்க கிளம்புறோம்” என்றவள் பவித்ராவின் கையை பிடித்து இழுத்து சென்றாள்..

செல்வியின் பின் சென்றாலும் பவியின் பார்வை ராஜேஷிடம் தான் இருந்தது…… பவித்ரா தன்னை பார்க்கும் போது ஒரு இனம் புரியா உணர்வு தோன்ற.. போகும் அவளையே பார்த்திருந்தான் அவன்……

“செல்விக்கா அவங்க யாரு”

“எவங்க டி ஒழுங்கா கேளு , மொட்டையா அவங்க யாருன்னு கேட்டா நான் என்னனு பதில் சொல்றது”

“ம்ம்ம்ம் அக்கா இப்போ நம்மகிட்ட பேசிகிட்டு இருந்தாங்களே அவங்கதான்….. இதுக்கு முன்னாடி நான் அவரை பார்த்ததில்லையேன்னுதான் கேட்டேன்” என்று சிணுங்க..

“ஓ ராஜேஷா , ரெண்டு வருசமா இங்கதான் அண்ணண்கிட்ட வேலை பார்க்கிறார்…..ரொம்ப நல்ல மாதிரி” என்று அவனை பத்தி சொன்னவள்.. “நீதான் ரெண்டு வருஷமா சென்னைல ஹாஸ்டலில் தங்கி படிச்சிட்டு இருந்தியே… அதான் உனக்கு தெரியல போல” என்றுவிட்டு…..காரில் ஏற பவித்ராவும் அமர கார் கிளம்பியது..

பவித்ரா “ராஜேஷ்” என்று அவனின் பெயரை மனதுக்குள் சொல்லி பார்க்க….அந்த பெயர் அவள் அடிநாக்கு வரை தித்தித்தது…அதில் அவள் வெட்கம் கொண்டு சிரிக்க….. இவள் சிரிப்பதை பார்த்த செல்வி “என்ன பவி தனியா சிரிக்கிற சொன்னா நானும் சேர்ந்து சிரிப்பேன்ல” என்று சொல்ல..

அசடு வழிந்த பவித்ரா “ஹி….ஹி….அது ஒன்னும் இல்லக்கா ஏதோ நினைச்சேன்..சிரிச்சேன்” என்று சொல்ல..

“நானும் பார்த்துகிட்டே இருக்கேன் என்னமோ இன்னைக்கு நீ சரியில்ல” என்று கூறிவிட்டு செல்வி வெளியே வேடிக்கை பார்க்க..

“அப்பா தப்பிச்சேன் , ஏன் பவி இப்படியா சிரிச்சு காட்டி கொடுப்ப” என்று தனக்கு தானே கேட்டுக்கொண்டு ராஜேஷின் நினைவுகளில் மூழ்கினாள்…

ஒரு மாதம் கழித்து பவிக்கும், ராஜேஷ்க்கும் மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது… செல்வியின் திருமணம், அதையொட்டி அவர்களது நகை கடைக்கு வந்திருந்தார்கள் அனைவரும்….

தர்மலிங்கமோ “வீட்டுக்கு நகையை கொண்டு வர சொல்றேன் என்ன வேணுமோ எடுத்துக்கம்மா” என்று செல்வியிடம் சொல்ல “இல்லப்பா நான் கடைக்கு வந்துதான் செலக்ட் பண்ணுவேன்” என்று அடம் பிடிக்க..

அவரும் அதற்கு ஒத்துக் கொள்ள, மறுநாளே நகைகடைக்கு விஜயம் செய்தார்கள் குடும்பம் முழுவதும்.. அதில் பவித்ராவும் அடக்கம்.

எல்லோரும் நகை பார்க்க…. பவித்ராவோ கடையை வேடிக்கை பார்ப்பது போல் பார்த்தாலும், அவள் கண்கள் தேடுவது என்னமோ ஒருவரின் வரவை எதிர்பார்த்துதான்….

அப்படி தேடிய கண்களில் திடீர்றென்று மின்னல் வெட்டியது….. கண்கள் பளிச்சிட ராஜேஷையே பார்த்திருந்தாள் அவள்…..

சபரிஷிடம் வேலை விஷயமாக பேசிக் கொண்டே வந்தவன்,… பேச்சி வார்த்தை முடிந்ததும் சபரிஷ் தன் குடும்பத்தினருடன் சென்று அமரவும்,

தான் வெளியே செல்ல திரும்பியவன் , தன்னையே

பார்த்துக்கொண்டிருந்த பவித்ராவை கண்டதும் இனிமையாக அதிர்ந்தான்.. அவளை கண்டவன் தன்னையறியாமல் தன் நெஞ்சை தடவினான்.. அன்று உணர்ந்த அவளின் பெண்மையின் மென்மையை இன்றும் உணர்ந்தவன்.... அவள் பக்கத்தில் சென்று அவளை பற்றி விசாரிக்க நினைக்கும் போது..

“பாப்பா இங்க என்ன பண்ற.....வா நீயும் வந்து உனக்கு என்ன வேணுமோ எடுத்துக்க” என்று அவளையும் கூட்டிக் கொண்டே சென்றார் நாதன்....

ஒரு இனிமையான ராகத்தின் நடுவில் ஒரு அபஸ்வரமான சத்தம் வந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அவரின் வரவு..

“ச்சே அவங்க என்கிட்ட ஏதோ சொல்ல வந்த மாதிரி இருந்தது...அதுக்குள்ள இந்த அப்பா வந்து கெடுத்துட்டாங்க..... சரி இன்னொருநாள் மாட்டாமையா போவாங்க அப்போ பார்த்துகிறேன்” என்று மனதுக்குள் நினைத்தவள் விருப்பமே இல்லாமல் தந்தையுடன் சென்றாள்..

ஆனால் ராஜேஷோ என்ன நினைக்கிறான் என்று அவனுக்கே புரியவில்லை.. பவி நாதனின் மகளா.. அவரது குறுக்கு புத்தியும் மனிதர்களை மதிக்காமல்

பணத்தை மட்டும் வைத்து எடைபோடும் நாதனின் மகளா, பவித்ரா" என்று அதிர்ந்து நின்றவனின் மனது வலித்தது.. ஆம் அவளை அவள் விரும்ப ஆரம்பித்திருந்தான்...

அன்று செல்வியிடம் மாட்டை தொட்டு பார்க்க வேண்டும் என்று செல்லம் கொஞ்சியதும். அதன் பிறகு பயந்து தன்னை கட்டி பிடித்ததும் , ஏதோ ஒரு உணர்வு தோன்றி "இவள் உன்னவள்" என்று சொல்ல, அவளை அவன் கண்களில் நிரப்பிக் கொண்டான்.. அதன் பிறகு அவள் அறியாமல் அவளை சில இடங்களில் செல்வியுடன் பார்த்தான், பார்த்தவன் அவளை ரசிக்கவும் செய்தான்...
இப்பொழுது அவள் நாதனின் மகள் என்று தெரிந்ததும், தன் காதல் மொட்டுலேயே அழிய போவதை எண்ணி தவித்தான்....ஏனென்றால் நாதனுக்கு பணம் மட்டும்தான் குறிக்கோள் என்று கேள்விப்பட்டிருக்கிறான்.. நாங்கள் காதலித்தால் நாதன் இதற்கு ஒருபோதும் சம்மதிக்க மாட்டார், அவர் அனுமதியில்லாமல் அவளை கைபிடிக்க தயார்தான்..... ஆனால் வேண்டாம்.. நடுத்தர குடும்பதினரான என்னை கைபிடித்து பவித்ரா வாழ்க்கையில் கஷ்டபட வேண்டாம்" என நினைத்து பவித்ராவின் மேல் முளை விட்ட தன் காதலை ஆழ் மனதில் போட்டு பூட்டிவைத்தான்,,

இனி அவளை பார்க்கக்கூடாது.... அப்படியே பார்க்க நேர்ந்தாலும் அவளை யாரோ போல் நடந்து கொள்ளவேண்டும்" என்று முடிவெடுத்துவிட்டு தன் வேலையை பார்க்க சென்று விட்டான்....
அவன் மட்டும் முடிவெடுத்தால் போதுமா.....பவி என்ற தேவதை அவனை விட்டால்தானே.....
.....

சபரிஷின் வீடு கல்யாணகளை கட்டியிருந்தது..
செல்விக்கு கல்யாணம் முடிவானதில்....அந்த அரண்மனையே வண்ண விளக்குகளால் ஜொலித்து கொண்டிருக்க...அங்கு இருந்த அனைவரும் பரபரப்பாக வேலை பார்த்துக்கொண்டிருந்தனர்.. விசாலாட்சி பாட்டி சமையல்காரர்களை அதட்டி உருட்டி வேலை வாங்கிக்கொண்டிருந்தார்.....லட்சுமியும் , ப்ரபாவும் வந்தவர்களை உபசரித்துக் கொண்டிருக்க,

தர்மலிங்கமும் அவர் தம்பியும் வந்திருந்த பெரிய மனிதர்களிடம் பேசிக்கொண்டிருந்தனர்..

சபரிஷ், ராஜேஷிடம் எல்லாம் சரியா இருக்கா என்று கேட்டுக்கொண்டும், மாப்பிள்ளை வீட்டுக்காரர்களை கவனித்துக் கொண்டும் இருந்தான்.....

மேகா குழந்தைகளுடன் குழந்தையாக விளையாடிக்

கொண்டிருந்தாள்....

அய்யர் மந்திரம் ஒத்திக்கொண்டிருக்க..... சந்துரு அவருக்கு தேவையானதை எடுத்துக் கொடுத்து உதவிக் செய்து கொண்டிருந்தான்.....

எல்லோரும் பரபரப்பாக இயங்கவும், அந்த சமயத்தில் அய்யர் "பொண்ணை அழைச்சிட்டு வாங்கோ" என்று சொல்ல.....அப்பொழுது அழகே உருவாக செல்வி தங்க நிற பட்டு உடுத்தி வைர நகைகள் பூட்டி அன்னம் போல் நடந்து வந்தவளின் பின்னால், மணப்பெண் தோழியாக நடந்து வந்த பவித்ராவை பார்த்து..... மனதுக்குள் எடுத்த உறுதி மொழியை மறந்து அவளின் அழகில் அவளை அணு அணுவாக ரசித்தான் ராஜேஷ்...

பவித்ராவும் ராஜேஷைதான் பார்த்துக்கொண்டே வந்தாள்....அவன் அவளை வைத்த கண் வாங்காமல் பார்க்கவும்.....வெட்கம் வந்துவிட தலைகவிழ்ந்து நின்றாள்.....

செல்வியின் திருமணம் நல்லபடியாக முடிய, பெரியவர்களிடமும் மற்ற உறவினர்களிடமும் மணமக்கள் ஆசிர்வாதம் வாங்கிவிட்டு , பால் பழம் சாப்பிட அழைத்து செல்லப்பட,

மற்றவர்கள், சேர்களை சுற்றி போட்டு பெண் பிள்ளைகள் ஒருபுறமும்.. ஆண்பிள்ளைகள் ஒருபுறமும் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருக்க,
குழந்தைகள் அங்கும் இங்கும் ஓடி விளையாடிக் கொண்டிருந்தனர்..

பவித்ராவின் பார்வை ராஜேஷை விட்டு அகலவே இல்லை..
ஒரு சில நிமிடத்தில் தன்னை சுதாரித்துக் கொண்டவன், பவித்ரா தன்னை குறுகுறுவென்று பார்ப்பது தெரிந்தும் அவன் அவள் பக்கம் திரும்பாமல் இருக்க,

பவித்ராவோ.. “ச்சே, பொண்ணு நானே வெட்கத்த விட்டு இப்படி பார்க்கிறேன்.. இவங்க கொஞ்சம் என்னை பார்த்தாதான் என்னவாம்., ஹும்” என்று மனதுக்குள் சிணுங்கினாலும் அவனை சைட் அடிப்பதை விடவில்லை..

அப்பொழுது ஒரு பெண், சந்துருவின் பக்கத்தில் அமர்ந்து ராஜேஷை, வைத்த கண் வாங்காமல் பேசி, அவனையும் தன் பேச்சில் இழுக்க,

ராஜேஷின் போதாத காலம், அவனும் கொஞ்சம் சிரித்து வைத்தான்.....இதை கவனித்த பவித்ராவிக்கு சுறுசுறுவென்று கோபம் தலைக்கு மேல் ஏறியது.

“என்னை பார்க்கனும் என்றால் மட்டும் அய்யாவுக்கு கசக்கும் ஆனா மத்த எல்லார்கிட்டையும், இளிச்சா பேசுறிங்க. , உங்கள என்ன பண்றேன் பாருங்க என்று மனதுக்குள் கருவியவள், ராஜேஷை தனியாக சந்திக்கும் சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தாள் அந்த சந்தர்ப்பமும் அவள் அன்னையின் மூலம் அமைந்தது.....

“ராஜேஷ்” என்று அழைத்துக்கொண்டே வந்தான் சபரிஷ்,

“சொல்லுங்க சார்” என்றான் பவ்யமாக..

“பவித்ராவை கொஞ்சம் அவங்க வீடு வரைக்கும் கூட்டிட்டு போய்ட்டு வரணும், அவளுக்கு ஏதோ எடுக்கணுமாம்” என்று சொல்ல..

மாலினியோ “என்ன தம்பி நான் உங்ககிட்ட சொன்னா நீங்க இவன் கிட்ட சொல்லறிங்க”என்று ராஜேஷை பார்த்து முகம் சுழித்தார் ,

அவரும் இங்கு வந்ததிலிருந்து
பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்..... பவித்ராவின்
பார்வை ராஜேஷையே சுற்றி வருவதை , அதற்குதான்
இந்த முகசுழிப்பு , பின்னே மகள் ஏதாவது காதல்
கீதல் என்று வந்து நின்றால், தன் கணவரின்
ஆசையும், தன்னுடைய ஆசையும் என்ன ஆவது..
என்று யோசித்தவர், சபரிஷையும் மகளையும்
கோர்த்து விட நினைத்து தான் , பவித்ராவை
அழைத்து செல்ல சபரிஷிடம் கேட்டாள்.....

ஆனால் அவனோ, இந்த வேலைக்காரனிடம் கோர்த்து
விடுகிறானே, இத நான் எங்க போய் சொல்லுவேன்"
என்று மனதுக்குள் புலம்ப...

அதற்குள் சபரிஷ் மாலினியை கண்டு கொள்ளாமல்
பவித்ராவை அழைத்து "உனக்கு ஏதோ டிரெஸ்
எடுக்கணுமாம், மறந்து வீட்ல வச்சிட்டு வந்துட்டியாம்,
செல்வி கூட நீதான் போக போறியாம்.. அவ
வீட்டுக்கு.. உங்க அம்மா சொன்னாங்க, நீ என்ன
பண்ற ராஜேஷ் கூட போ, போய்ட்டு அதை எடுத்துட்டு
சீக்கிரம் வந்துடுங்க" என்று சொல்ல, பவித்ரா வேக
வேகமாக தலையாட்ட, ராஜேஷோ அவளை
முறைத்தான்...

பவித்ராவின் தாய் மாலினியோ,.. "அய்யோ இந்த

விஷயம் மட்டும் அவருக்கு தெரிஞ்சா என்ன சொல்லுவாரோ" என்று பயந்து கொண்டே அவர்களை பார்க்க.....அவர்கள் இருந்த இடம் காலியாக இருந்தது....

பின்னே சபரிஷ் சொன்னதும் பவி ராஜேஷை அழைத்து சென்றிருந்தாள்....

கார் ஒரே சீராக தூத்துக்குடி நோக்கி செலுத்திக் கொண்டிருந்தான் ராஜேஷ் அப்பொழுது, பின் இருக்கையில் அமர்ந்திருந்த பவித்ரா, தீடீரென்று "வண்டியை நிறுத்துங்க" என்றதும் கார் ஒரு குலுக்கலுடன் நின்றது..

காரை நிறுத்தியவன், பின்னால் திரும்பி.. "என்னாச்சு எதுக்கு வண்டியை நிறுத்த சொன்னீங்க" என்று கேட்க, அன்று போல் இன்றும் அவனின் வசீகரத்தில் மயங்கித்தான் போனாள்..

"எதுக்கு நிறுத்த சொன்னிங்கன்னு கேட்டேன்" என்ற அவனின் அழுத்தமான குரலில் தன் மயக்கத்திலிருந்து வெளிவந்தவள், காரை விட்டு இறங்கி முன் இருக்கையில் அவனுக்கு பக்கத்தில் அமர்ந்தாள்,..

“எதுக்கு இப்போ முன்னாடி வந்து உட்காரா” என்று அவன் யோசிக்கும் முன்.. அவள் அவனின் சட்டை காலரை பற்றி இழுத்தவள், அவனின் கண்களோடு தன் கண்களை கலக்கவிட்டு,

“ராஜேஷ் ஐ லவ் யு” என்றாள் தன் உள்ளார்ந்த நேசத்துடன்….பின் அவனின் பதிலுக்காக ஒரு எதிர்பார்ப்புடன் அவள் அவன் கண்ணையே பார்த்திருக்க ஆனால் அவனோ அவளை வெறுமையுடன் பார்த்தான்….

அவனை விட்டு தள்ளி அமர்ந்தவள், “நான் உங்களை மனசார விரும்புறேன்.. நீங்க யாரு….. உங்களுக்கு எந்த ஊரு….. நீங்க என்ன படிச்சிருக்கீங்க ,உங்க வசதி என்ன….. எல்லாம் எனக்கு தெரிய வேண்டியதில்ல……அதை பற்றியெல்லாம் கூட எனக்கு கவலை இல்லை….. எனக்கு நீங்க வேணும்.. இப்போ கூட அந்த பொண்ணுகிட்ட சிரிச்சி பேசினதுக்கு உங்ககிட்ட சண்டை போட தான் வந்தேன், ஆனா அது முடியாம என் காதலை உங்ககிட்ட சொல்லிட்டேன்” தன் மனதில் உள்ளதை எல்லாம் சொன்னவள்…. அவனது பதிலுக்காக அவனை பார்க்க…..

அவனோ அதை கேட்டு சிரிக்க ஆரம்பித்து விட்டான் , கண்ணில் நீர் வரும் அளவுக்கு சிரித்தவன் அவளை பார்த்து.. “உனக்கு விளையாட நான்தான்

கிடைச்சேனா” என்று கேட்க..

அவளோ “இப்போ ஏன் இப்படி திடீர்னு சிரிக்கிறாங்க” என்று குழம்பியவள்.. விளையாட நான்தான் கிடைச்சேனா என்றதும் கோபம் வந்து விட்டது அவளுக்கு..... நான் இவனிடம் காதலை சொன்னது விளையாட்டா இருக்காமா.... என்று கோபமாக அவனை திட்ட வாய் திறக்கும்போது..

அவளை கை நீட்டி தடுத்தவன்.. “நான் பேசி முடிச்சிடுறேன்” என்றவன், “இங்க பாரு காதல் ஒன்னும் விளையாட்டு பொருள் இல்லை , இப்போ என்னை பார்த்ததும் பிடிச்சிருக்குன்னு சொல்லுறே, என்னை பற்றி உனக்கு என்ன தெரியும்..

ஒரு ரெண்டு தடவை பார்த்திருப்போம் அவ்ளோதான், அதுக்குள்ளே வந்து காதலிக்கிறேன்னு சொல்லுறே,, நான் உன் மனசுல காதல் வராமாதிரி என்னைக்காவது நடந்துருக்கேனா” என்று சிரித்தவன், பிறகு முகத்தை தீவிரமாக வைத்துக்கொண்டு

“உங்க அப்பா புத்தி கண்டிப்பா உங்கிட்ட இருக்காதுன்னு என்ன நிச்சயம்.....நான் ஒரு சாதாரண குடும்பத்தை சேர்ந்தவன், என்கிட்ட இருக்கிற பைக் கூட கம்பெனி கொடுத்ததுதான்... காதலிக்கும் போது

ஒன்னும் தெரியாத விஷயமெல்லாம் கல்யாணம் என்று வரும்போது கண்டிப்பா அது பெருசா தெரியும்....உங்க அப்பாவே நம்ம கல்யாணத்துக்கு அதைத்தான் காரணமா காட்டி சொல்லுவாரு, உடனே நீயும் உங்க அப்பா சொல்ற பணக்கார பையனை கல்யாணம் பண்ணிட்டு எனக்கு டாட்டா காட்டிட்டு போய்டுவ . நான் காதல்பட பரத் மாதிரி ரோட்டுல பையித்தியமா திரியனும், என்னங்கடி உங்க நியாயம்" என்றவன்.. "இதுக்கு மேலயும் காதல் கத்திரிக்காய்ன்னு வந்து நின்ன" என்று சுட்டுவிரல் நீட்டி எச்சரித்தவன்.. பின் எதுவும் கூறாது காரை கிளப்பினான்..

ராஜேஷின் மனமோ பவித்ராவிடம் மன்னிப்பு கேட்டது... "என்கிட்ட இருந்து உன்னை விலக்கி வைக்க இதை தவிர வேற வழி தெரியலை பவி ....என்னை மன்னிச்சிடுமா"

ஆனால் பவித்ராவோ அவன் பேச்சில் அதிர்ச்சியாகி அமைதியாகி விட, அவள் வீடு வந்ததும், இறங்கி சென்று அவளுக்கு தேவையானதை எடுத்துக் கொண்டு வந்து பின் சீட்டில் அமர்ந்தாள்....

அதை கண்டவனின் மனது மிகவும் வலித்தது.....

சபரிஷின் வீடு வந்துசேரும் வரை இருவரும் பேசிக்

கொள்ள வில்லை….பேசினால் காயபட்டு விடுவோமோ என்று எண்ணி இருவரும் அமைதி வந்தனர்….

வீடு வந்ததும் இறங்கியவள், காரை சுற்றிக் கொண்டு வந்து ராஜேஷின் அருகே குனிந்து..

“பொண்ணு நானா வந்து காதலை சொன்னதும் என்னை கேவலமா நினைச்சிட்டிங்கல்ல, பரவாயில்லை நீங்கதானே பேசினது….,ஆனா ஒன்னு இப்படி பேசினா உங்களை விட்டு போயிருவேன்னு நினைச்சிங்களா அதுக்கு வேற ஆளை பாருங்க…, ஆனா இதுக்கெல்லாம் சேர்த்து ஒருநாள் உங்களுக்கு இருக்கு……இனி நானா உங்ககிட்ட காதலை யாசகமா கேட்டு வரமாட்டேன்…. நீங்களாதான் என்னை தேடி வரனும்…..வரவைப்பேன்” என்று உறுதியுடனும் கண்களில் கண்ணீருடனும் கூறிவிட்டு அவனை திரும்பியும் பாராமல் சென்று விட்டாள்…..

காய்ந்த சருகு வந்து முகத்தில் விழ, பழைய நினைவுகளில் இருந்து வெளிவந்த ராஜேஷ்..

“பவி ஐ அம் சாரிடா.. என்னால உன்னை மறக்க முடியலைடா….நீ எனக்கு வேணும்டா” என்று அவன் மனம் கதறியது..

அன்று அவன் அப்படி பேசிவிட்டாலும்.. அதன் பிறகு அவளை சபரிஷ் வீட்டில் பார்த்தால், அவள் அவனை கண்டு கொள்ளாது விலகி போய் விடுவாள்....இந்த இரண்டு வருடத்தில் அவனை அவள் பார்த்தாளா என்பதுகூட சந்தேகம்தான், ஆனால் இன்று இரண்டு வருடம் கழித்து தன்னை பவித்ரா தன்னை பார்த்த பார்வையில் அப்படியே யாரும் இல்லா தீவிற்கு கூட்டிக்கொண்டு போய்விடலாமா என்று கூட நினைத்தான்..

அன்று பவித்ரா காதல் சொன்னதை மீண்டும் நினைத்தவனின் இதழ்களில் மெல்லிய புன்னகை தோன்றியது.. "என்ன தைரியம்டி உனக்கு.. ஐ லவ் யு ன்னா சொல்ற.. அப்புறம் என்ன சொன்ன.... நீங்களா என்னை தேடி வருவிங்கனு சொன்னேல்ல..... வரேன்டி உன்னை தேடி..... நீ எனக்குத்தான்.....இதை தடுக்க உங்கப்பனே வந்தாலும் , ஒரு கை பாத்துறேன்டி" என்றபடி எழுந்த ராஜேஷ்

தன் கைகடிகாரத்தை பார்க்க, அது மதியம் இரண்டு என்று காட்டியது "அய்யய்யோ சார்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லனுமே, சார் ஆபிஸ் வந்துருப்பாரா, இல்லை இன்னும் வீட்ல நாதனிடம் பேசிட்டு இருப்பாரா' என்ற யோசித்தவன்,

டைம் வேற ஆயிடுச்சு, ..சரி பவிகிட்ட நாளைக்குதான் தன் மனசுல இருக்கிறத சொல்லிக்கலாம்... இப்ப அலுவலகம் கிளம்பளாம் என்று எண்ணி தன் பைக்கை கிளப்பினான்..... (உன் கடமை உணர்ச்சிக்கு அளவே இல்லையாடா...)

அலுவலகத்தில் அவனுக்கு காத்திருக்கும் அதிர்ச்சியை அறியாமல், தன்னவளை நினைத்து மனமெல்லாம் சந்தோசமாக சென்று கொண்டிருந்தான்...

சுவாசம் தொடரும்...

****

சுவாசம் 16

விழிகள் மூடாமலே
விழிகள் மூடி
கனவுகாண்கிறேன்!
என்னவனின் மேல்
எனக்குள்ள மயக்கத்தால்!!!...

ராஜேஷ் அரைகுறையாக கேட்டுவிட்டு செல்லவும் இங்கு “அப்போ என்ன தர்மா மாப்பிள்ளையே, சொல்லியாச்சு, அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாண தேதியை குறிச்சிடலாம் என்று சொன்ன நாதனை “ஒருநிமிஷம்” என்று அவரின் பேச்சை தடை செய்த சபரிஷ்

“கல்யாண பேச்சுன்னு நான் சொன்னது, எனக்கும் பவித்ராவிற்கும் இல்லை” என்று சிறு இடைவெளி விட்டவன்,

“பவித்ராவுக்கும், நான் பார்த்திருக்கும் பையனுக்கும்..” என்று நாதனின் தலையில் பாராங்கல்லை இறக்கினான்.....

எல்லாரும் அவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரியாமல் பார்க்க, பவித்ராவின் இதயமோ வேகமாக துடித்தது..

“என்ன மாப்பிள்ளை சொல்றீங்க.....புரியலையே”என்று நாதன் ஒரு மாதிரிகுரலில் வினவ..

“இதுல புரியாததுக்கு என்ன இருக்கு.....சரி நான் தெளிவாகவே சொல்றேன்.....உங்க பொண்ணு

பவித்ராவுக்கும், நான் பார்த்திருக்கும் பையனுக்கும் கல்யாணம் என்று சொல்றேன்" என்றான் அழுத்தம் திருத்தமாக.....

அதில் கோபம் கொண்ட நாதன், "யாரு பொண்ணுக்கு யாரு மாப்பிள்ளை பார்க்கிறது, என்ன தர்மா என்னை அவமானப்படுத்துறானா உன் பையன்" என்று சபரிஷிடம் ஆரம்பித்து , தர்மலிங்கத்திடம் முடித்தார்....

தர்மலிங்கமோ "கொஞ்சம் அமைதியா இரு நாதா" என்றவர்.. சபரிஷிடம் தன் பார்வையை திருப்பி "என்னப்பா இது" என்று கேட்க..

"அப்பா நான் இந்த கல்யாண பேச்சு ஆரம்பிச்சதிலிருந்து உங்க எல்லார்கிட்டயும் சொல்லிட்டு இருக்கேன்..... செல்வியும், மேகாவும் எனக்கு எப்படியோ...அதே மாதிரி பவித்ராவும் எனக்கு ஒரு தங்கை மாதிரின்னு சொல்லியிருக்கேன்" என்றவன்,

நாதனை கைகாட்டி இவரும், நீங்களும்தான் என் பேச்சை கேட்கவே இல்லை..... அதான் நானே பவித்ராக்கு மாப்பிள்ளை பார்த்துட்டேன்.. அடுத்த முகூர்த்தத்தில் அவங்க ரெண்டு பேருக்கும்

கல்யாணம்” என்க

“போதும் நிறுத்து” என்று கத்தியபடி எழுந்த நாதன்..
“என் பொண்ணுக்கு அப்பான்னு நான் இருக்கேன்..
வேற யாரும் மாப்பிள்ளை பார்க்க தேவை இல்லை”
என்றவர்..

“போதும் தர்மா , நான் இங்க வந்தது….
அவமானபட்டது எல்லாம்…. ஏய் இன்னும் இங்க என்ன
வேலை நமக்கு கிளம்புங்க” என்று மனைவி மகளை
பார்த்து சொல்லிவிட்டு கோபமாக வெளியேற
,மாலினி அமைதியாக அவரை பின் தொடர
பவித்ராவோ மனகலக்கத்துடன் தாயை
பின்தொடர்ந்தாள்….

“ஒரு நிமிஷம்” என்று சபரிஷின் குரல் ஓங்கி
ஒலித்தது..

நின்ற இடத்தில் இருந்து நாதனை பார்த்த சபரிஷ்,
“நான் சொன்னா சொன்னதுதான்.. பொண்ணுக்கு
அப்பாவா வந்து ஆசிர்வாதம் பண்ணுங்க…… இல்ல
இதுக்கு நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்னு
அடம்பிடிச்சீங்க , என்னை பற்றி உங்களுக்கு தெரியும்
, சொல்ல மாட்டேன் செஞ்சிருவேன்” என்று தன் சிம்ம
குரலில் கர்ஜித்துவிட்டு மாடியேறினான்.

செல்வியும், மேகாவும், இங்கு நடந்த விஷயத்தை எல்லாம் பின்னாடி தோட்டத்தில் அமர்ந்து வேலைகாரர்களை அதட்டி வேலை வாங்கிக்கொண்டிருந்த விசாலாட்சி பாட்டியிடம் சொல்ல சென்று விட்டனர்..

ப்ரியாவோ, கண் சிமிட்டாமல் தன்னவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்..... அவளின் மனசாட்சியோ.... "ஏன்டி இப்படி அவனை பார்த்து ஜொள்ளு விடுறதுக்கு பதிலா... ஓடி போய் அப்படியே அவனை கட்டிபுடிச்சு முத்தம் கொடுத்துடேன்" என்று சீண்ட

"அய்யோ தப்பு தப்பு சாமி கண்ணை குத்தும்" என்று ப்ரியா சொல்ல ..

"ச்சே நீ எந்த நேரத்துல எப்படி பேசுவேன்னு மனசாட்சியான எனக்கே தெரிய மாட்டேங்குது.....உனக்கு போய் நான் மனசாட்சியா இருக்கிறதுக்கு பதிலா, சன்யாசம் வாங்கிட்டு போய்டலாம்" என்று முகத்தை திருப்பிக்கொண்டது..

அதையெல்லாம் கவனிக்கும் நிலையில் அவள்

இல்லை , மாடியேறும் சபரிஷையே பார்த்திருந்தாள் ..... அவனுடைய பேச்சு,அதில் அடங்கியிருந்த கோபம், அவனுடைய ஆளுமை குரலில் உள்ள கம்பீரம், அவனுடைய மேன்லி லுக்....ஹப்பா கொல்றடா என்னை" என்று சபரிஷை மனதுக்குள் ரசித்தவள் தீடீரென்று வெட்கம் கொண்டாள் ப்ரியா..

, அப்பொழுது அவளை யாரோ உலுக்க.....கொலைவெறியுடன் யார் என்று பார்த்த ப்ரியா, அது மோஹி என்றதும் ஏகத்துக்கும் முறைத்தாள்..

"என்ன ப்ரி முழிச்சிகிட்டே கனவு காண்கிறாயா" என்று கேட்ட மோஹியை என்ன செய்தால் தகும் என்ற ரேஞ்சில் முறைக்க.....

"எதுக்குடி இப்போ என்னை முறைக்கிற.. ஐய்யோ பிள்ளை பொங்கலை ஒரு பிடி பிடிச்சிட்டு இப்படி நடு ஹாலில் உட்கார்ந்து தூங்குறாளே என்று உன்னை எழுப்பி ரூம்ல போய் தூங்குன்னு சொல்லலாம் என்று நினைச்சி உன்னை கூப்பிட்டா..நீ என்னை முறைக்கிறே..... சரி சரி வா சந்துருகிட்ட நேத்து ஏதோ பேசணும் சொன்னியாம் ஆனா நீ சீக்கிரம் தூங்கிட்டே சோ இப்போ உன்னை பேச கூப்பிட்டாங்க" என்று மோகனா சொல்ல,

‘அடியேய் , உங்களுக்கெல்லாம் மனசாட்சியே இல்லையா.. உன்னோட லவ் சக்சஸ் ஆனதோட இல்லாம நீ உன் மாமா குடும்பத்தோட சேரவும் போறீங்க.. ஆனா நான்.. என் லவ் எந்த நிலையில் இருக்குன்னு எனக்கே தெரியலைடி.. இதுல வேற அப்போ அப்போ என் ரிஷிக்கு கல்யாணம் அப்படின்னு குடும்பமே சேர்ந்து எனக்கு ஷாக் கொடுக்குது……, இப்போதான் ஒரு பிரச்சனை முடிஞ்சு என் ரிஷியை ரசிச்சேன்….அது பொருக்காதே உனக்கு.. உடனே மூக்குல வேர்த்து முத ஆளா வந்து நிப்பியே’ என்று இவ்வளவையும் மனதுக்குள் நினைத்தவள், வெளியே அவளிடம், “மோஹி நான் கொலைகாரி ஆகுறதுக்குள்ள இங்கிருந்து ஓடிடு” என்று பல்லை கடித்துக் கொண்டு சொல்ல..

அதன் அர்த்தம் புரிந்து இரண்டடி பின்னால் வந்த மோகனா, “என்ன ப்ரி என்மேல கோபமா இருக்கியா……. நான் ராங் டைமிங்ல வந்துடேனோ” என்று அவளை கலாய்க்க,

“மோஹிஈஈஈஈஈஈஈ…” என்று பிரியா கத்திக்கொண்டே மோகனாவை துரத்த,..

மோகனாவோ, அவளிடம் தப்பித்து ஓடிக்கொண்டே “சந்துரு பின்னாடி தோட்டத்தில் நமக்காக வெயிட்டிங்,

நீ சீக்கிரம் குளிச்சிட்டு பாஸ்டா கம்மிங், நான் உன்கிட்ட இருந்து இப்போ எஸ்ஸிங்" என்று சொல்லிக்கொண்டே வெளியில் ஓடியே விட்டாள்...

மூச்சு வாங்க நின்ற பிரியா இடுப்பில் கைவைத்து , "அடியேய் எனக்கும் ஒரு காலம் வரும் அப்போ உனக்கு நான் வைக்கிறேன் பாரு ஆப்பு" என்றவள்.. தங்களது அறைக்குள் செல்ல..

இங்கு லட்சுமி மற்றும் பிரபாவும் இவர்கள் இருவரின் குறும்பை ரசித்து சிரித்து "நல்ல பொண்ணுங்க பிரபா" என்று லட்சுமி சொல்ல,

"ஆமாக்கா ரொம்ப விளையாட்டுதனமா இருக்காங்க" என்று சொன்ன பிரபா..

" சபரிஷ் என்னக்கா, நாதனை இப்படி மிரட்டிட்டு போறான்.. உண்மையில் , பவித்ராக்கு மாப்பிள்ளை பார்த்திருப்பானோ, எப்படியோக்கா, எல்லாம் நல்லபடியா முடிஞ்சா சரிதான்" என்று பிரபா சொல்ல..

"அந்த கவலைதான் எனக்கும் இருக்கு பிரபா.. இந்த நாதனை நம்ப முடியாது.... அடிப்பட்ட பாம்பு.. அதான்

பயமா இருக்கு" என்று லட்சுமி கவலையுடன் சொல்ல,

"சபரிஷ் இருக்கும் போது உங்களுக்கு இது தேவையில்லாத கவலை.. அந்த பாம்போட பல்லை எப்படி பிடுங்கனும் என்று நம்ம சபரிஷ்க்கு தெரியும்.. வாங்க அத்தானும். உங்க கொழுந்தனாரும் நாதன் பின்னாடியே சமாதான படுத்த போய்யிருக்காங்க, அவங்க வர்றதுக்குள்ள , மதிய சமையலை முடிக்க சொல்லுவோம்" என்ற பிரபா,, ஆனா ஒன்னுக்கா நாதன் குணத்தை பற்றி இவங்களுக்கு தெரிஞ்சுதுன்னா , எப்படி எடுத்துப்பாங்கன்னு நினைச்சாதான் எனக்கு கவலையா இருக்கு" என்றபடி பிரபா சமையல் அறைக்குள் செல்ல.. லட்சுமியும் அதே கவலையுடன் கணவரின் வருகைக்காக காத்திருந்தார்..

பிரபா சொன்னது சரி என்பதுபோல்தான் இருந்தது , தர்மலிங்கம் மற்றும் அவரது தம்பி ராஜலிங்கம் இருவரின் மனநிலை.....

.....

சபரிஷின் அரண்மனையில் இருந்து கோபமாக

கிளம்பினார் நாதன்....அவரின் மனமோ சபரிஷின் பேச்சால் எரிந்துக் கொண்டிருந்தது.....

“என் பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்க இவன் யாரு.. மாப்பிள்ளை பார்க்கிறானாம் மாப்பிள்ளை” என்று கத்தியவாறு வெளியே வந்தவரின் பின்னால், மாலினியும் , பவித்ராவும் அவரை பின் தொடர்ந்து வந்தனர்....

பவித்ராவுக்கு சபரிஷுடன் நடக்கவிருந்த திருமணம் நின்றதில் மனதில் கடலளவு சந்தோஷம் எழுந்தாலும் பெரும் குழப்பமாக இருந்தது.....முதலில் தன் தந்தையிடம் சாதகமாக பேசிய பேச்சிற்கும், பிறகு அவரை எதிர்த்து பேசிய பேச்சிற்கும், தனக்கு அவர் மாப்பிள்ளை பார்த்து இருக்காரா...யார் அது.....எதுக்கு என்னை அப்படி பார்த்தாங்க....என்ற அவனின் பார்வையின் அர்த்தம் புரியாமல் குழம்பியபடியே தாயின் பின்னே சென்றாள்....

தன் மனதின் கொதிப்பு அடங்காமல்...”ச்சே” என்று நாதன் தன் கோபத்தை காரின் மேல் தட்டி காட்ட..

மாலினியோ “விடுங்க, இப்போ என்ன ஆகிபோச்சுன்னு இப்படி கோபபடுறீங்க..... இவங்களை விட்டா வேற பெரியகுடும்பம் இல்லையா.... இல்ல,

நல்ல மாப்பிள்ளைதான் கிடைக்காதா, நீங்க டென்ஷன் ஆகாதிங்க, என்று சமதானப்படுத்தினார், தன் மேல் ஒரு கூடை அனலை நாதன் கொட்டபோவது தெரியாமல்…

மாலினியை முறைத்த நாதன், ஏதோ சொல்ல வந்து பின் சூழ்நிலை கருதி, “வண்டில ஏறுங்க” என்று அவரிடம் அடக்கபட்ட கோபத்துடன் கூறிவிட்டு, அவர்கள் ஏறியதும் காரை கிளப்பினார்….

வீட்டுக்கு வந்ததும் வராததுமாக மாலினியிடம் எகிற தொடங்கினார்..

“என்ன சொன்ன… வேற பெரிய இடம்…. வேற மாப்பிள்ளை பார்க்கனுமா” என்று உறுமிவிட்டு..
“உனக்கு என்னடி தெரியும் , இது என்னோட இருப்பத்தேழு வருஷ கனவுடி கனவு, அந்த வீட்டுக்கு மருமகனா போகனும்ன்னு நினைச்சேன்… அப்போ அந்த கிழவன் வெற்றிவேல்பூபதி கெடுத்தான்.. இப்போ மறுபடியும் என் பொண்ணை அந்த வீட்டுக்கு எப்படியாவது மருமகளா ஆக்கிடனும்ன்னு நினைச்சேன்…. ஆனா சபரிஷ், அவனுக்கு பேசி முடிக்கனும்னு நினைச்சா, இவன் என் பொண்ணுக்கு வேற மாப்பிள்ளை பார்த்திருக்கானாம்….. இதை கேட்டுகிட்டு என்ன சும்மா இருக்க சொல்றியா…… விடமாட்டேன்டி என்று மீண்டும் கோபத்தில் கத்த,…

மாலினி நாதனின் அருகில் சென்று, அவர் தோளை தொட்டு “நீங்க என்ன சொன்னீங்க…. அந்த வீட்டுக்கு மருமகனா போகனும்ன்னு நினைச்சீங்களா” என்று ஒரு மாதிரி குரலில் கேட்க .. நாதனோ மாலினி எதற்கு இப்படி கேட்கிறாள் என்று புரிந்து கொள்ளாமல்…இடம், பொருள் பாராமல் தன் மனதில் பல வருடம் வளர்த்து வந்த வஞ்சகத்தை கொட்ட தொடங்கினார்…..

“ஆமாம்டி , அந்த வீட்டு பொண்ணை கல்யாணம் பண்ணி வீட்டோட மாப்பிள்ளையாகி….அந்த சொத்துக்கள அனுபவிக்கனும்னு நினைச்சேன்”

படிக்கும் போதே தர்மா பெரிய பணக்காரன், என்று தெரிஞ்சுதான் அவனோட பிரெண்ட்ஷிப்பையே வளர்த்துக்கிட்டேன்….. எப்போதும் அவன்கூடவே சுத்திகிட்டு இருப்பேன்….. ஒருநாள் அவன் வீட்டுக்கு கூப்பிட்டான் நானும் போனேன்..

அது வீடு இல்லைடி அரண்மனை,அத பார்த்து அசந்துட்டேன்டி, அவனுக்கு ஒரு தங்கச்சி இருந்தா…. பேரு தேவி அவளை பார்த்ததும் எனக்குள் ஒரு திட்டம் உருவாச்சு, அதன் பிறகு தர்மாகிட்ட ரொம்ப குளோசா பழகி…அவன்கிட்ட என்ன பத்தி நல்ல

விதமா நினைக்கும்படி நடிச்சு…..அந்த அரண்மனைக்கு அடிக்கடி போயி அவளை பார்ப்பேன்…, ஆனா அவ என்னை திரும்பி கூட பார்க்க மாட்டா…..

இவ்வளவு கஷ்டபட்டு என்ன பிரயோஜனம் , அந்த கிழம் வெற்றி வேல் பூபதி கண்ணுக்கு அந்த ஈஸ்வர்தான் , நல்லவனா தெரிஞ்சிருக்கான். ஈஸ்வரும் அவங்க நகை கடையில் மேனேஜரா வேலை பார்த்தான், அவனை கண்டாலே எனக்கு பிடிக்காது.. என்று பல்லை கடித்தார்.

ஒரு நல்ல சந்தர்பத்துக்காக காத்திருந்தேன், திடீர்னு ஒரு நாள் தர்மா என் தங்கச்சிக்கு கல்யாணம் என்று என் தலையில இடியை இறக்கினான்..
“என்ன தர்மா சொல்ற…உன் தங்கச்சிக்கு கல்யாணமா… என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லவேயில்லை” என்று என் ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டு கேட்டேன்,

அதுக்கு அவன் , “எங்களுக்கே இந்த கல்யாணத்துல இஷ்டமில்ல, என் தங்கச்சியை பெரிய இடத்துல கல்யாணம் பண்ணி கொடுக்கணும் என்று நானும் என் தம்பியும் நினைச்சிருந்தோம்.. ஆனா அப்பா , திடுதிப்புன்னு ஈஸ்வரை மாப்பிள்ளையா முடிவு பண்ணுவாருன்னு நாங்க கனவுலகூட நினைக்கல”

என்று சொல்லவும்..

நான் உடனே சுதாரித்து...."என்ன சொன்ன ஈஸ்வரா மாப்பிள்ள" என்று கேட்க

"ஆமா நம்ம கடையில் வேலை பார்த்த ஈஷ்வர்தான் மாப்பிள்ளை.. என்ன பண்றது எங்க பேச்சு அவர்கிட் எடுபடல ....அதுனால என்ன செய்யறதுன்னு தெரியாம அப்பாக்காக பொறுத்துகிட்டு இருக்கோம்ன்னு, என்கிட்டயே சொல்லிட்டு போறான்டி.... எனக்கு எப்படி இருக்கும்..

அப்போ நான் என்ன இளிச்சவாயனா, வஞ்சம் வஞ்சிருந்தேன்டி மனசெல்லாம் வஞ்சம் வச்சிருந்தேன், அதை தீர்க்க சரியான சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தேன். அது மட்டும் இல்லை எப்ப தர்மாவோட மனசு தெரிஞ்சிதோ...அப்போதிலிருந்து தர்மா மனசுலையும்,அவன் தம்பி மனசுலையும் , ஈஸ்வரை பற்றி கொஞ்சம் கொஞ்சமா அவங்க மனசுல நஞ்சை விதைச்சேன்....

உங்கப்பாகிட்ட ஈஷ்வர் நல்லவனா நடிச்சி, ஏமாத்தி வீட்டோட மாப்பிள்ளையா வந்துட்டான்னு சொல்லி சொல்லி அவங்க ரெண்டு பேர் மனசுலையும்

வஞ்சத்தை வளர்த்தேன்

இதுக்கு இடையில் எங்க வீட்டு நச்சரிப்பு தாங்காமல்தான் உன்னை கட்டிக்கிட்டேன்.. என்று பேச்சுவாக்கில் சொல்லி தன் மனைவியின் மனதை உடைக்கிறோம் என்று அறியாமல்.... அவர் பாட்டுக்கு பேசிக்கொண்டே போனார் நாதன்..

இந்த சமயத்துலதான் அந்த கிழம் பூபதி இறந்து போனார், அது எனக்கு நல்ல சந்தர்ப்பமா அமஞ்சிது.. நான் தர்மாகிட்டயும், அவன் தம்பிக்கிட்டயும் , கொஞ்ச கொஞ்சமா விதைச்ச வஞ்சத்தை வெளிக்கொண்டுவந்து , ஈஸ்வரையும் , பார்வதியையும் அந்த வீட்டை விட்டே வெளியேற வச்சேன்.... ஆனா எனக்கு அது மட்டும் போதாதுடி....

ஈஸ்வரின் ஊருக்கு என் ஆளுங்களவிட்டு.. தர்மாவும் , அவன் தம்பியும்தான் அவங்களுக்கு தொந்தரவு கொடுக்கிற மாதிரி செட் பண்ணி ஈஸ்வர் குடும்பத்தையே இந்த ஊரை விட்டு ஓட ஓட விரட்டுனேன்" ..... இதை சொல்லும்போது நாதனின் முகத்தில் பழிதீர்த்த வெற்றி இருந்தது..

மாலினி , நாதனுக்கு சரிசமமான குணமுள்ள பெண்மணிதான்.. ஆனால் தன் கணவனின் மனதில்,

இன்னொரு பெண்ணை கட்ட ஆசை இருந்தது என்று அவருக்கு தெரிந்ததும் , அவரால் அதை தாங்கி கொள்ள முடியவில்லை.. கணவன் தன் மேல் காட்டிய அன்பு பொய்யென்றால் எந்த பெண்ணால் தான் தாங்க முடியும்..நாதன் சொல்லி முடிக்கவும், மாலினி வேறு ஒன்றும் பேசாது அமைதியாகிவிட்டார்..

அன்னையின் பக்கத்தில் வந்து அவரின் தோளை தொட்ட மகளை பார்த்து விரக்தி புன்னகை ஒன்றை சிந்தியவர், அவளின் கையை நாசுக்காக எடுத்துவிட்டு, அவளிடம் பேசாமல் விருந்தினர் அறைக்குள் சென்று கதவை தாழ் போட்டுக் கொண்டார்..

அன்னையின் , மனதில் என்ன ஓடும் என்று பெண்ணாண அவளுக்கு அதுவும் காதல் கொண்ட மனதுக்கு தெரியாதா....அவளை தவிர்த்து ரூம்க்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டதும், முதலில் பயந்தவள், பின் தன் அன்னை கோழை அல்ல... இருந்திருந்தால் தன் அப்பாவிடம் இவ்வளவு நாள் இருந்திருக்க முடியுமா என்று எண்ணி.... சமாதானம் அடைந்து..... இந்த விஷயத்தை எல்லாம் சபரிஷிடம் சொல்ல சரியான சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தாள்.....

தன் பேச்சால் மனைவி மற்றும் மகள்

காயப்பட்டுவிட்டார்கள்... என்பதையெல்லாம் கவனிக்கும் நிலையில் நாதன் இல்லை.... அவர் மனதில் சற்றுமுன் சபரிஷ் பேசிய பேச்சுக்கள்தான் மனதில் உழன்று கொண்டிருந்தன.....

.....

நாதன் கோபமாக வெளியேறியதும்.. சபரிஷின் தந்தையும், சித்தப்பா, இருவரும் நாதனை சமாதானப்படுத்த பின்தொடர்ந்து வந்தனர்.....நாதனின் கார் அவரின் வீட்டின் காம்பவுன்ட் உள்ளே நுழைந்து..... ஐந்து நிமிடம் கழித்தே....இவர்களது கார் நுழைந்தது.....

நாதன் குடும்பம் இருந்த நிலையில் வெளியில் வண்டி சத்தம் கேட்கவில்லை நாதன் மாலினியிடம் பேச ஆரம்பிக்கவும் , இவர்கள் வாசலில் கால்வைக்கவும் சரியாக இருந்தது..

நாதன் பேசியதை கேட்ட இருவரும்.. அங்கு நிற்ககூட பிடிக்காமல் கோபத்துடன் வெளியேறிவிட்டனர்..... பாதிதூரம் வந்ததும் ஓரமாக மரநிழலில் தன் வண்டியை நிறுத்திய ராஜலிங்கம் தன் அண்ணனை பார்க்க,

தர்மலிங்கமோ கண்மூடி இருக்கையில்
சாய்ந்திருந்தார் அவரது கண்களின் ஓரம் நீர்
வருவதை கண்ட அவர் துடிதுடித்து போனார்.....தன்
அண்ணன் எவ்வளவு பெரிய மனிதர் அவர் கண்களில்
கண்ணீரா என்று நினைத்தவர்

“அண்ணா எண்ணன்னா இது.... நீங்களே இப்படி
கலங்கினா எப்படி..... இப்போ என்னாச்சு..... ஒன்னும்
கவலைபடாதீங்க.... ந...நம்ம தங்கச்சி...என்றுசொல்லும்
போதே அவரது குரலும் தழுதழுக்க ,அதற்கு மேல்
எதுவும் சொல்ல முடியாமல் குலுங்கி அழ
ஆரம்பித்தார்....

ராஜலிங்கம் அழுவதை பார்த்த தர்மலிங்கம்..
“என்னை அழக்கூடாது என்று சொல்லிவிட்டு இப்போ
நீ அழுவுறியா”என்றவர்

“தேவிமா நம்ம தங்கச்சி ,ஈஸ்வரும் தங்கமான
மாப்பிள்ளை...அதை புரியறதுக்கு நமக்கு இவ்வளவு
வருஷம் தேவைபட்டு இருக்கு.....

நம்ம அண்ணணுங்க இப்படி பண்ணிடாங்களேன்னு
வருத்தம் அவ மனசுல இருக்கத்தான் செய்யுமே தவிற
அவ மனசுல கோபம் இருக்காது.....

அப்படியே கோபம் இருந்தாதான் என்னவாம், நம்ம மாப்பிள்ளை ரெண்டு அடி அடிச்சாக்கூட வாங்கிப்போம்..... நாமளும் கொஞ்ச நஞ்சமா அவரை அவமானபடுத்தனோம்.... எல்லாம் அந்த நாதனால் வந்தது..... என்றவர்...

திடீரென்று "அந்த நாதன் சொன்னா நமக்கு எங்கே போச்சு புத்தி.....நாதன பத்தி அப்பாவுக்கு ஏதோ தெரிஞ்சுருக்கு..... அதான் ஈஷ்வர் மாதிரி நல்ல மாப்பிள்ளைய தேர்ந்தெடுத்து இருக்கார்.....இது தெரியாம அவர்கிட்ட வேற மல்லுக்கு நின்னோம்" என்று அவர் பாட்டுக்கு பேசி கொண்டே போன அண்ணனை பார்த்த ராஜலிங்கம்,

"அண்ணா இப்போ தங்கச்சி எங்க இருப்பா.....எப்படி இருப்பா ஈஸ்வர் நம்ம தங்கச்சியை நல்லாத்தானே பார்த்துப்பார் , ஏன் இப்படி கேட்கறன்னா... நாம அன்னைக்கு அப்படி நடந்துகிட்டதுக்கு தங்கச்சியை கொடுமை படுத்துவாரோன்னு பயமா இருக்கு" என்று கவலையுடன் கேட்க..

வார்த்தைகளை சமயம் பாராமல் அள்ளி தெளித்துவிட்டு, பின்னாடி வருத்தபடுவது காலம் கடந்த ஞானோதயம்....அல்லவா... அதே தவறைதான் இருவரும் செய்துவிட்டு இப்பொழுது

வருந்துகின்றனர்.....

“இல்லடா...அவர் அப்படியெல்லாம் நடந்துக்க மாட்டார்.... ஈஸ்வர் தேவிமாமேல் உயிரே வச்சிருக்கார், நம்ம மேல உள்ள கோபத்தை ஒருநாளும் பார்வதிக்கிட்ட காட்டியிருக்க மாட்டார்... ஏன்னா அவர் குணம் அப்படி....அது தெரிஞ்சுதான் அப்பா ஈஸ்வரை தேவிக்காக தேர்ந்தெடுத்திருக்கார் போல.....

நாமதான் ஈஸ்வரை பற்றி சரியா புரிந்துகொள்ளாமல்.... பணம் மட்டும் போதும்ன்னு வரட்டுகவுரவத்துல.... அந்த நாதன் சொன்னதை மனசுல வச்சிக்கிட்டு அப்போ அப்படியெல்லாம் அவரை பேசிட்டோம்... என்ன ஒன்னு இவ்வளவு நாள் இல்லாம இப்போ திடீர்ன்னு வந்துருக்கீங்கன்னு தங்கச்சி கேட்டா.....நான் என் முகத்தை எங்கு கொண்டு போய் வைப்பேன்னு தான் யோசிக்கேன்..

அன்னைக்கு தங்கச்சி கோபத்தில் “நீங்க என்னைத்தேடி வரக்கூடாது.. நானும் உங்களைத்தேடி வரமாட்டேன்னு” வைராக்கியா சொல்லிட்டு போயிருச்சு.. அப்போ இருந்த மனநிலைல நாமலும் அதை கண்டுக்கல” என்று பெருமூச்சுடன் கூறி முடித்தவர்....

“சரி இனி நடக்கபோறதை பற்றிமட்டும் யோசிப்போம்” என்று தனது அலைபேசியை எடுத்து யாருக்கோ தொடர்பு கொண்டார். எதிர்முனையில் இருந்தவர்களிடம் பேசி முடித்தவுடன்,

“ராஜா, இன்னும் கொஞ்ச நேரத்தில் நம்ம தங்கச்சி எங்க இருக்கான்னு தெரிஞ்சுடும்” என்றதும் , ராஜலிங்கத்திடம் பரபரப்பு தொற்றிக்கொண்டது,

“எப்படிண்ணா” என்று ஆச்சர்யமாக கேட்டவர்..
“யாருக்கிட்ட பேசினீங்க” என்று ஆர்வமாக கேட்டார்..

“நம்ம நகைகடைக்கு காவலுக்கு ஆள் எடுக்கும்போது, நாம டீடெக்ட்டிவ் ஏஜென்சிகிட்ட அவங்களை பற்றி விசாரிக்க சொல்லுவோம் இல்லையா… அந்த ஏஜென்ஸிகிட்ட முன்னாடியே மாப்பிள்ளை பத்தி சில தகவல்கள் சொல்லி தேட சொல்லிருக்தேன்.. உடனே அவங்க தலைமறைவா இருக்கிறவங்களைதான் கண்டுபிடிப்பதில் கஷ்டம்.. இது ரொம்ப சுலபமான வேலை…..சோ சீக்கிரமே சொல்றோம்ன்னு சொல்லியிருந்தாங்க என்றார்…

“எப்படின்னா எனக்கு தெரியாம இவ்வளவு விஷயம் நடந்துருக்கா… ஆனா நீங்க எப்படி முன்னாடியே

அவங்கள தேட சொல்லிட்டீங்க" என்று
ஆச்சர்யத்துடன் கேட்க

"இல்ல ராஜா உன்கிட்ட சொல்லகூடாதுன்னு இல்ல,
கொஞ்ச நாளாவே நம்ம அம்மா சரியில்லடா, எப்ப
பார்த்தாலும் தேவியை நினைச்சு
கலங்குறாங்க.....ஒருநாள் அப்பா படத்துக்கு முன்னாடி
அவங்க சாகறதுக்குள்ள தன் மகளை பார்க்கனும்ன்னு
சொல்லி அழுத்துகிட்டு இருந்தாங்க..... அதை
பார்த்ததும்... என்னால தாங்க முடியலடா.....அப்போ
இருந்தே என் மனசுகுள்ள தப்பு பண்ணிட்டோமோ
என்று உறுத்தல் இருந்தது.....அதான் யாருக்கும்
தெரியாம அவங்கள கண்டிபிடிக்க டிடெக்டிவ் கிட்ட
சொல்லியிருந்தேன். அது இப்ப பிரயோஜனம் படுது"
என்று சொல்லிவிட்டு நிறுத்த

"சரிண்ணா....நீங்க என்ன பண்ணுனாலும் அதுக்கு ஒரு
அர்த்தம் இருக்கும்..... இந்த விஷயத்தை அம்மா கிட்ட
சொன்னா அவங்க ரொம்ப சந்தோஷப்படுவாங்க.....சரி
வாங்க கிளம்பளாம்" என்று ராஜலிங்கம் சொல்லவும்..

"இல்லடா, இப்போ எதையும், நாதன் வீட்டில் நடந்த
விஷயம் உள்பட அம்மாவுக்கு சொல்லவேண்டாம்.....
நாம நம்ம தங்கச்சியை கூட்டிட்டு வந்து அவங்க
கண்முன்னாடி நிறுத்தினதுக்கு அப்புறம்தான் அந்த
வீட்டுக்குள்ளேயே காலடி எடுத்து வைப்பேன்"

என்றவரின் குரலில் உறுதி இருந்தது…

“நம்ம குடும்பம் மறுபடியும் ஒன்னு சேரணும் ராஜா……அதுக்கு அப்புறம் அந்த நாதனுக்கு நான் யாருன்னு காட்டுறேன்” என்று கோபத்துடன் கூற

“அண்ணா நம்மமேலயும் தப்பிருக்குண்ணா , அவன் சொன்னதுக்காக…அவன் பேச்ச கேட்டுகிட்டு நாமலும் அன்னைக்கு அப்படி நடந்திருக்ககூடாது……சரி அதவிடுங்க நாதனை அப்புறம்கூட பார்த்துக்களாம்” என்று அவரின் கோபத்தை குறைக்க முற்பட

“ஆமா ராஜா.. நீ சொல்றதும் சரிதான்.. தங்கச்சியை சமாதானபடுத்தி கூட்டிகிட்டு வந்து அம்மா முன்னாடி நிறுத்தனும்…..அப்ப அவங்க முகத்துல வர சந்தோஷத்தை பார்த்தாதான் எனக்கு நிம்மதியா இருக்கும்…. நமக்காக அம்மா வெளியே சிரிச்சாலும்.. உள்ளுக்குள்ள தன் மகளுக்காக அழுதுகிட்டுதான் இருப்பாங்க….அதை நாம போக்கனும்” என்று கூறிக்கொண்டு இருக்கும் போது அலைபேசியில் அவருக்கு அழைப்பு வர,

அதை எடுத்து பேசியவரின் முகம் ஆயிரம் வாட்ஸ் பல்பின் பிரகாசத்துடன் எரிய, எதிர்முனையில் கூறிய செய்திகளை குறித்து கொண்டு அலைபேசியை

அணைத்தார்…..

பின் தம்பியிடம் “ராஜா தேவிமா இருக்கிற இடம் தெரிஞ்சு போச்சு…..நாம இப்போவே கிளம்பளாம்….மீதி விவரத்த நான் போற வழியில சொல்றேன்” என்றவரின் மனம் உற்சாகத்தில் துள்ள,

அந்த உற்சாகம் ராஜலிங்கத்திடமும் தொற்றிக் கொள்ள, இருவரும் தன் தங்கையை காண ஆவலுடன் சென்றனர்……..

சுவாசம் தொடரும்…

சுவாசம் 17

என் இமைகளில்
தோன்றும் கண்ணீரும்
உன்னால் தான்!
என் இதழ்களில்
தோன்றும் புன்னகையும்
உன்னால் தான்
என்னவனே!!!

அந்த பிரம்மாண்ட ஜவுளி ஷோரூம், சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது..

தன் கேபினில் இருக்கையில் கண் மூடி சாய்ந்திருந்த சபரிஷின் சிந்தனை முழுவதும், கடந்த இரண்டு நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளே ஓடிக்கொண்டிருந்தது.....

“கே.ஆர் உனக்கு என்ன தைரியம் இருந்தா, என்கிட்ட மோதுவ, இந்த சபரிஷை பத்தி நீ சரியா புரிஞ்சிக்கல.....நீ மட்டும் என் கையில் கிடைச்ச.....” என்று பல்லை கடித்தவன், அவரை தும்சம் பண்ணிவிடும் கோபத்தில் இருந்தான்..

அப்பொழுது திடீரென அவனது நினைவில் காலையில் நாதன்.... தனக்கும், பவித்ராவிற்கும் திருமணம் என்றதும், ரியா ஏன் அப்படி பார்த்தா” என நினைத்தவன் திடிகிட்டு கண் திறந்தான்.... “என்னது ரியாவா” என்று யோசிக்க ஆரம்பித்த சபரிஷின் நினைப்பை தடை செய்வது போல் கேபின் கதவு தட்டப்பட.... (அடச்சே.. இவனே எப்போதாவதுதான் பிஸினஸ் புத்தியை ஒதுக்கி வச்சிட்டு ப்ரியாவை

பத்தி திங்க் பன்றான்.....அது பொறுக்காம அவனை தொந்தரவு பண்றதுக்குன்னே கிளம்பி வருவாணுங்க போல)

கதவு தட்டபடும் ஓசையில் தன் கவனத்தை திருப்பி.. அது யார் என்று பார்க்க, உள்ளே வந்தான் ராஜேஷ். “வாங்க ராஜேஷ்” என்று அழைத்தவன், பிரியாவின் நினைவுகளை ஒதுக்கி விட்டு, அவனை அமர சொல்லி, தன் வேலையில் மூழ்கினான்.....

“ராஜேஷ் ஸ்டாக் எல்லாம் எவ்வளவு இருக்குன்னு பார்த்துட்டீங்களா .. என்னென்ன ஆர்டர் கொடுக்கனும், அப்புறம், எக்ஸ்போர்ட் பண்ணவேண்டிய மெட்டீரியல்ஸ் எல்லாம் சரியா இருக்கான்னு செக் பண்ணிட்டீங்களா” என்று வரிசையாக ஸ்டாக் சம்மந்தமாக கேட்டவன்.... திடீரென்று ...

மூணாவது மாடியில வேலை பார்க்கிற சூப்பரவைசர் மேல ஒரு பொண்ணு வந்து கம்ப்லைன்ட் பண்ணிட்டு போச்சு.....அது என்னன்னு பாருங்க.....

அப்புறம் நீங்க ஏன் இன்றைக்கு லேட், எனக்கு உங்ககிட்ட பிடிச்சதே உங்க சின்சியாரிட்டிதான், வீட்டுக்கு வந்து கையெழுத்து வாங்கிட்டு சீக்கிரம்

கிளம்பிட்டீங்கல்ல....ஏன் என்னாச்சு....ஏதாவது பிராப்ளமா ராஜேஷ்" என்று அவனை பார்த்துக் கொண்டே கேட்டான் சபரிஷ்.... அப்பொழுது அவன் முகத்தில் குறும்பு புன்னகை இருந்ததோ.....

ஆனால் ராஜேஷோ அதை கவனிக்காமல், தன் வேலையிலேயே கண்ணாக... "சாரி சார் இனி இப்படி லேட் ஆகாது.....தென் , எல்லாம் வேலையும் முடிச்சிட்டேன் சார், நீங்க சொன்ன அந்த சூப்பர்வைசரை லோட்மேனா நம்ம சுகர் பேக்டரிக்கு மாத்திட்டேன் சார்.....

"கொஞ்சம் கவனமா இருங்க ராஜேஷ்.... இனி இந்த மாதிரி கம்ப்லைண்ட் வராம பார்த்துக்கோங்க.. இங்க வரவங்களுக்கும், இங்க வேலை பார்க்கிற பொண்ணுங்களுக்கும், சே:ப்டி ரொம்ப முக்கியம் "..என்றவன் மறுபடியும்,
"அந்த சூப்பர்வைசரை சுகர் பேக்டரிக்குதானே மாத்திருக்கீங்க" என்று சற்று அழுத்தமான குரலில் சபரிஷ் கேட்க..

"சார் சார், நான் வார்ன் பண்ணி அனுப்பிட்டேன் சார்" என்றான் அவசரமாக..

அவனை பார்த்து சிரித்த சபரிஷ், “நானும் வார்ன் பண்ண வேண்டாமா, அதுக்குதான் கன்பார்ம் பண்ணிக்கிட்டேன்” என்க

“சார் அவனுக்கு ரெண்டு சின்னகுழந்தைங்க இருக்காங்க” என்று ராஜேஷ் மென்றுமுழுங்க..

“அதை அவன் நினைச்சி பார்த்திருக்கணும்.. என்கிட்டே வேலை பார்க்கிற பொண்ணு மேல கைவைச்சா என்ன நடக்கும்ன்னு அவனுக்கு தெரிய வேண்டாமா….சரி அதை நான் பார்த்துக்கறேன்….வேற பேசலாம்….. என்று தன்முன் இருந்த பைலை பார்க்க ஆரம்பித்து விட்டான்……..

சூப்பரவைசர் செய்தது தப்பு என்றாலும் அவன் குழந்தைகளை மனதில் நினைத்து முடிந்தவரை அவனை இடம்மாற்றினான்…. ஆனால் விதி யாரை விட்டது……நமக்கு எதுக்கு பொல்லாப்பு என்று நினைத்துக் கொண்டிருக்கும் வேளையில், சபரிஷின் ராஜேஷ் என்ற அழைப்பு தடை செய்தது……

“எஸ் சார்” என்று அவனை பார்க்க…..சபரிஷின் முகமோ கோப முகம் பூசி கொண்டிருந்தது….

“அய்யய்யோ என்னாச்சு சார்க்கு.. நல்லாதானே பேசிட்டு இருந்தார் , திடீர்னு எதுக்கு கோபம்.....நான் வேற ஒரு முக்கியமான விஷயம் இவர்கிட்ட பேசலாம்ன்னு இருந்தேனே” என்று புரியாமல் சபரிஷின் வார்தைக்காக காத்திருந்தான்..

“அந்த விஷயம் என்னாச்சு ராஜேஷ்” என்று இறுகிய குரலில் கேட்க,

என்ன விஷயம் என்று முதலில் புரியாமல் விழித்தவன்...பின்தான் அவனிடம் சொல்ல மறந்துவிட்ட விஷயம் ஞாபகம் வர, தயக்கத்துடன், “சாரி சார்.....அந்த கே. ஆர் ராத்திரியோட ராத்திரியா, அவர் குடும்பத்தோட எங்கேயோ எஸ்கேப் அயிட்டார் சார்,

அவரோட குடோன் இன்சூரன்ஸ் ரெனிவ்பண்ணாம இருந்ததுனால.... இப்போ அவர் எல்லாத்தையும் இழந்து ஒரு செல்லா காசா இருக்கிறார் சார்”

“ம்ம்ம்....அந்த ரௌடிங்க என்ன ஆனானுங்க”

“எல்லோரும் ஹாஸ்பிட்டல்ல இருக்காங்க

சார்....எஸ்.பி போன் பன்னி ஒன்னும் பிரச்னை இல்லை பார்த்துக்கலாம் என்று சொன்னார் சார்..... அப்புறம் மேடம் அடிச்ச ஆளுதான், என்று கொஞ்சம் இழுக்க,,

“என்ன மேடமா.....யாரு அது” என்று சபரிஷ் கேட்க..

“பிரியா மேடம் தான் சார்”

“ஓஓ சரி சொல்லுங்க, அந்த மேடம் அடிச்ச ஆளுக்கு என்னாச்சு..... போய்ட்டானா” என்று கேட்டவன் இதழில் அடக்கபட்ட சிரிப்பிருந்தது..

“இல்ல சார் , இன்னும் கான்ஷியஸ் வரல அதான்....”

“ஓகே சரி நான் எஸ்.பி கிட்ட பேசிக்கிறேன்.. நீங்க கிளம்புங்க என்றவன் இதழில் மீண்டும் புன்னகை, ஒரே அடியில் இன்னும் கண் முழிக்க முடியாமல் பண்ணிட்டாளே என நினைத்தவன் ” கணினியில் கண்பதித்தான்..(ஆனால் அவனுக்கு தெரியவில்லை சந்துரு அருகில் இருந்ததால் மட்டுமே அவளுக்கு அந்த தைரியம் என்று)

ராஜேஷோ கிளம்பாமல் அவனை பார்த்துக் கொண்டே நின்றுக் கொண்டிருந்தான்…

அவனை ஓரக்கண்ணால் பார்த்த சபரிஷ்.. “” கிளம்ப சொல்லி ரொம்ப நேரம் ஆச்சுன்னு நினைக்கிறேன்” என்க

“ஆங் எஸ் சார் இதோ கிளம்பிட்டேன்” என்றவன் இரண்டு எட்டு எடுத்து வைக்க.

“ஒரு நிமிஷம் ராஜேஷ்..” என்று சபரிஷ் அழைக்க

“சொல்லுங்க சார்”

அவனிடம் ஒரு கவரை நீட்டி .. “இதுல ஒரு பையன் போட்டோ இருக்கு….அவனை பற்றின டீட்டைல்ஸ் விசாரிக்கணும்..” என்றதும்

அதை அவனிடமிருந்து வாங்கியவன் பிரித்து பார்க்காமல்,
“சரி சார் நான் விசாரிக்கிறேன்” என்றான்..

“ இது ரொம்ப முக்கியமானது..... கொஞ்சம் கேர் எடுத்து விசாரிங்க...ஏன்னா இது பவித்ராக்கு நான் பார்த்திருக்கிற மாப்பிள்ளை.....சோ கவனமா பாருங்க” என்றவன் .....” இப்போ நீங்க கிளம்பலாம்” என்றான்.

ராஜேஷோ அதை கேட்டு உறைந்து நின்றான்.. தான் ஒன்று நினைத்தால் கடவுள் வேறொன்றல்லவா நினைத்திருக்கிறார்..

எப்படியும் இன்று, சபரிஷியிடம் பவிமேல் தான் வைத்திருக்கும் காதலை சொல்லி அவளை கரம் பிடிக்க வேண்டும் என்று நினைத்திருக்க, இவரோ வேறு மாப்பிள்ளை பார்த்ததோடு அல்லாமல், என்னையே விசாரிக்க சொல்கிறார்.....
“என்ன கொடுமை சரவணா இது” என்ற ரேஞ்சில் அதிர்ச்சியாகி
“ஐயோ சார்...நான்” என்று ராஜேஷ் பேச வாய் திறக்கவும்..

“இப்போ நான் பார்த்திருக்கிற மாப்பிள்ளை ரொம்ப நல்லவர், அவரை கல்யாணம் பண்ணிக்கிட்டா பவித்ரா ரொம்ப சந்தோஷமா இருப்பா” என்று கூறிவிட்டு ராஜேஷை ஆழம் பார்க்க

அப்பொழுது அவனது அலைபேசி அழைத்தது.. யார் என்று பார்த்தவன்.. அதை உயிர்ப்பித்து காதில் வைத்தான்..மறுமுனையில் என்ன சொல்லப்பட்டதோ.. சரி என்று மட்டும் சொல்லிவிட்டு வைத்துவிட்டான்..

கிளம்பாமல் நிற்கும் அவனை கண்டவன்.....சிறு முறுவலுடன் “அந்த கவர்ல இருக்கிற போட்டோவை பாருங்க , உங்களுக்கு ஏதாவது ஐடியா கிடைக்கும்.....பையன் நல்லவனா...இல்லையான்னு”

ராஜேஷோ மனதுக்குள்.. “இப்போ இது ரொம்ப முக்கியம்.. நானே கடுப்புல இருக்கேன், நீங்க வேற, இப்போ இந்த மாப்பிள்ளை மட்டும் என் கைல கிடைச்சான், அவனை அப்படியே கை காலெல்லாம் கட்டிபோட்டு..... திருச்செந்தூர் கடல்ல தூக்கி போட்டுடுவேன்” என நினைக்க..

“என்ன ராஜேஷ் என்னை உங்க மனசுக்குள்ள திட்டுறீங்களா” என்று கேட்டவனை பார்த்து..

“ஆமா சார், ச்சே.... இல்ல சார்” என்று உளறிகொட்ட,

அதை கண்டு மனதுக்குள் சிரித்த சபரிஷ்.....அவனை மேலும் சோதிக்காமல் “போட்டோவை பாருங்க “

என்று தூண்டினான்..

விருப்பமே இல்லை என்றாலும்.. சபரிஷ் சொன்னதை செய்யாமல் இருக்க முடியாமலும்..... சரி அப்படி எந்த ஊரு ராஜகுமாரன் என்று பாப்போம்.. என்று மெதுவாக கவரை பிரித்து போட்டோவை வெளியே எடுத்து அதை பார்க்க....வியப்பில் தன் கண்களை நம்ப முடியாமல் அதை அழுத்த துடைத்துக் கொண்டு மீண்டும் பார்க்க, உணர்ச்சி வசத்தால் அவன் கண்கள் சிறிது கலங்கியிருந்ததோ.....

அவனின் நிலையை கண்ட சபரிஷ்... "என்ன ராஜேஷ் பவித்ராவுக்கு இந்த மாப்பிள்ளை ஓகே வா , இல்ல வேற மாப்பிள்ளை பார்க்கலாமா" என்றான், அந்த வேற மாப்பிள்ளையில் சிறு அழுத்தம் கொடுத்து..

"சார் அது வந்து.....நான் வந்து..... பவியை.... என வார்த்தைகள் தந்தி அடிக்க.....சற்று நிதானித்தவன் பின் ஒரு முடிவுடன் சபரிஷை நோக்கி, சார் நான் பவித்ராவை மனசார விரும்புறேன்.....
அவளும் தான்..... அவ என்கிட்ட லவ் சொன்னப்ப நான், அப்படி எந்த எண்ணமும், எனக்கு இல்லைன்னு அவகிட்ட பொய் சொல்லிட்டேன்..... ஏன்னா" என்று தயங்கி நிறுத்த...

“ஏன்னா நீங்க ஒரு சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர், இப்போதான் சின்னதா ஒரு வீடு கட்டிருக்கீங்க.. உங்களை கல்யாணம் பண்ணிக்கிட்டா பவித்ரா கஷ்டப்படுவா.. அதனால நீங்க அவ காதலை ஏற்கவில்லை அப்படிதானே, எனக்கு எப்படி தெரியும்ன்னு நினைக்கிறீங்களா.. செல்வி கல்யாணத்தப்போ , பவித்ரா உங்க கிட்ட காருக்கு வெளியே நின்னு கோபமா பேசினதை நான் கேட்டேன், ஆனா நீங்க ரெண்டு பேருமே என்னை கவனிக்கல ..” என்று சபரிஷ் முடிக்க

மனதுக்குள் நல்லவேளை நாங்க பேசினதை கேட்டிங்க என நினைத்தவன்… “ஆமா சார் , பவித்ரா ஓரளவுக்கு வசதியா வாழ்ந்த பொண்ணு….என்னை கல்யாணம் பண்ணிகிட்டா அந்த வசதி கிடைக்காதுன்னுதான் அன்னைக்கு அவளோட காதலை ஏத்துக்கல…… ஆனா இன்றைக்கு காலையில் நான் உங்க வீட்டுக்கு வந்தப்போ , பவித்ராவோட அப்பா, உங்களுக்கும் அ…அவ அவளுக்கும்…..” அந்த வார்த்தையை கூட சொல்ல முடியவில்லை அவனால்…

“ம்ம் சொல்லுங்க எனக்கும், அவளுக்கும்” என தூண்டினான் சபரிஷ்…

“கல்யாணம் சொன்னாங்க, அதை கேட்ட எனக்கு…
கையில் கிடைச்ச பொக்கிஷத்தை தவற
விட்டுட்டோமோன்னு…..ரொம்ப வருத்தமா இருந்தது”

“ஓ நான்தான் உங்களை அதுக்கு முன்னாடியே
கிளம்ப சொன்னேனே.. நீங்க கூட
கிளம்பிடிட்டீங்களே” அப்புறம் திரும்பி வந்திங்களா
என்ன தெரியாதது போல் கேட்டான் அந்த கள்ளன்…

நாதன் கல்யாண பேச்சு எடுத்த போது அவன் உள்ளே
நுழைந்ததையும், நாதனின் பேச்சை கேட்டு அதிர்ந்து
பவித்ராவை கலக்கத்துடன் பார்த்ததையும்…பின்
சத்தமில்லாமல் அவன் வெளியேறியதையும், அந்த
களோபரத்திலும் அவன் கவனித்துக் கொண்டுதான்
இருந்தான்…..இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும்
என்றுதான் நாதனிடம் அவன் அப்படி பேசியது……

அலுவலகத்துக்கு அவன் வந்ததும் ராஜேஷை
அழைக்க அவன் இல்லாதது கண்டு இரண்டு
வருடத்திற்கு முன்பு ஏற்பட்ட சந்தேகம் அவன்
நடத்தையில்….இன்று உறுதியானது … அவன்
வாயாலேயே உண்மையை வரவழைப்பதற்காகதான் …
அவன் போட்டோவையே அவனிடம் காட்டி அவனை
டென்ஷன் படுத்த……அவன் நினைத்தது போல்
உண்மையை ஒத்துக் கொண்டான் ராஜேஷ்…

“ஆமா சார், கையெழுத்து வாங்கியவுடன் கிளம்பிட்டேன் சார்…. ஆனா, எஸ்.பி சார் சொன்ன விஷயத்தை உங்ககிட்ட சொல்ல மறந்துட்டேன் அத சொல்ல வந்தப்பதான்” என்று ராஜேஷ் நிறுத்த..

“ம்ம்….சோ வாசல்வரை வந்த நீங்க , அரைகுறையாக கேட்டுட்டு,வந்த வழியே திரும்பி போயிட்டீங்க….. அதாவது எனக்கும் பவித்ராவும்” என்று சபரிஷ் இழுக்க..

“ஆமா சார், உங்களை கல்யாணம் பண்ணிக்கிட்டா பவி ரொம்ப சந்தோஷமா, இருப்பானு நினைச்சேன் தான் ஆனா அதுக்கு அப்புறம், என்னால் அவளை “ என்று சொல்லி முடிக்கவில்லை, அப்பொழுது புயல்போல் கதவை திறந்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள் பவித்ரா..

உள்ளே வந்த பவித்ராவை “வா பவி, என்னம்மா திடீர்னு இங்க வந்துருக்கே” என்று ஒன்றும் அறியாதவன் போல் கேட்டான் சபரிஷ்… ஏன்னென்றால் சற்று முன், அவனுக்கு வந்த அலைபேசி அழைப்பில்…. பவித்ராதான் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்…..பத்து நிமிடத்தில அங்கிருப்பேன்….என்று சொல்லி, அவனின் ம்ம் என்ற பதிலில் அலைபேசியை வைத்துவிட்டாள்….

அவள் வரும் நேரத்தை கணகிட்டுதான் சபரிஷ் ராஜேஷிடம் பேச ஆரம்பித்து..அவன் மனதில் உள்ளதை எல்லாம் வெளிகொணர செய்தான்.
(க்கும் இவங்க காதல் மட்டும் உனக்கு புரியும்..ஆனா அங்க ஒருத்தி உனக்காக உருகிட்டு இருக்கிறது மட்டும் உன் கண்ணுக்கு தெரியாதே....)

பவித்ராவை எதிர்பார்க்காத ராஜேஷ், அவளை கண்டதும் , கண்கள் மின்ன அவளை பார்க்க..

அவளோ, அவன் பக்கம் திரும்பாது சபரிஷிடம்.."அண்ணா நான் உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்"

"சொல்லுமா என்ன விஷயம், அப்பா ஏதும் சொன்னாரா"

"ம்ம்ம....உங்ககிட்ட தனியா பேசணும் " என்று தயக்கத்துடன் சொல்ல,

சபரிஷோ யோசனையுடன் ராஜேஷை பார்க்க..

“எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு…. நான் என் கேபின்க்கு கிளம்புறேன் சார்” என்றவன்.. பவித்ராவை ஒரு அடிபட்ட பார்வை பார்த்துவிட்டு வெளியேறினான்……

ராஜேஷ் கிளம்பவும்……அவனை தடுக்காது…..அதே யோசனையுடன் பவியிடம் “ராஜேஷ் சொன்னதை கேட்டியா பவித்ரா”

“ஆமான்னா அவர் பேசினது எல்லாமே கேட்டேன்….எனக்கு அவரோட மனசு பத்தி எப்பவோ தெரியும் அண்ணா அவர்தான் தேவையில்லாததை எல்லாம் யோசிச்சிகிட்டு…..என்னை தவிக்க விட்டுட்டார்…… அவருக்கு ஒரு நாள் இருக்கு , நான் கொடுக்கிற டிரீட்மென்ட்ல இப்படியெல்லாம் கேணத்தனமா யோசிக்கவும் கூடாது…..பேசவும்கூடாது” என்று அவள் சொல்லவும்

“ஐய்யோ பார்த்துமா.. எனக்கு இருக்கிறது ஒரே பி.ஏ அவன் நல்லபடியா எனக்கு வேணும்” என்று கூறி சிரிக்க,

“பின்ன என்ன அண்ணா.. நான் கேட்டேனா இவர்கிட்ட வசதியாதான் வாழனும் என்று… அவர் எங்க இருந்தாலும், நான் அவர் கூடவேதானே இருக்கனும்

என்றுதானே ஆசைபடுறேன்… அதை புரிஞ்சிக்காம, ஏதேதோ நினைச்சுகிட்டு, இவரா ஒரு முடிவு பண்ணி…..ச்சு…..எதுக்குண்ணா இந்த வேதனை எல்லாம்….. வீட்ல என்னன்னா அப்பா வேற உங்களை கல்யாணம் பண்ண சொல்லி டார்ச்சர் வேற…… அப்பா என்றதும் தான் அவளுக்கு நியாபகம் வந்தது..வீட்டில் அவள் தந்தை பேசிய விஷயங்கள்… இதை இப்போதே சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்தவள்…..பின் ஒரு முடிவுடன் எல்லாவற்றையும் அவனிடம் கூறிவிட்டாள்….

அவள் சொன்ன விஷயத்தை கேட்டு அதிர்ந்தவன் அவளிடம் “பவி நீ சொன்னது எல்லாம் உண்மையா???????” என்றான்

“ஆமாண்ணா.. அப்பா கோபத்துல மனசுல உள்ளது எல்லாம் வெளிய கொட்டிட்டார்… அப்பா பண்ணினது தப்புதான்….. அவருக்காக நான் மன்னிப்பு கேட்டுக்கறேண்ணா”.. உண்மையான வருத்தத்துடன்

பவித்ரா சொல்ல சொல்ல, உடல் விறைத்து. முகம் இறுக அமர்ந்திருந்த சபரிஷை பார்த்தவள்….பயத்துடன் “அண்ணா” என்று அழைக்க

தன் கோபத்தை ஒரு நிலைக்கு கொண்டு வந்தவன்.....

“அந்த விஷயத்தை என்கிட்ட விட்டுடு..... நான் பார்த்துகிறேன்.....
இப்போ மாப்பிள்ளையை வர சொல்றேன்.. நீ கொஞ்சம் அவருக்கு வேப்பில அடிச்சி அனுப்பு” என்று சிரித்துக்கொண்டே சொன்னவன், இன்டெர்காமில் ராஜேஷை கேபினுக்கு வருமாறு அழைத்தான்..

ராஜேஷ் வந்ததும்.. தன் இருக்கையில் இருந்து எழுந்தவன்.. “ராஜேஷ் இவங்களுக்கு ஒரு டவுட்டாம்” என்று பவித்ராவை காட்டி... “அதை கொஞ்சம் கிளியர் பண்ணுங்க” என்றவன் அறையை விட்டு வெளியேற நினைத்து கதவுவரை வந்தவன் , திரும்பி பவித்ராவை பார்த்து.....”சேதாரம் கொஞ்சம் கம்மியாவே இருக்கட்டும்” என்றவன் திரும்பி

“முழுசா திரும்பி வந்துருவீங்களா ராஜேஷ்” என்று குறும்புடன் கூறிவிட்டு கிளம்பிவிட்டான்...

ராஜேஷோ “என்னாச்சு சார்க்கு.. சம்பந்தம் இல்லாம பேசிட்டு போறார்” என்று யோசித்தவன் “பவிக்கு என்ன டவுட்டு.. அதை ஏன் நான் கிளியர் பண்ணனும்”

என்று புரியாமல் திரும்பி அவளை பார்க்க..

பவியோ, பத்ரகாளியாக மாறி, அவனை வெட்டவா , இல்லை குத்தவா என்ற ரேஞ்சில் இவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்..

“ஆஹா சார் கோர்த்து விட்டு போய்ட்டார்.. நான் இன்றைக்கு அவ்ளோதான்….. அப்பனே, திருச்செந்தூர் முருகா.. என்னை இவகிட்ட இருந்து காப்பாத்துப்பா.. உனக்கு நான் வர தைபூசத்துல காவடி எடுக்குறேன்” என்று ஒரு அவசர வேண்டுதலை வைத்தவன், அவளை பார்த்து பவி என்று அழைத்துக் கொண்டே ஒரு எட்டு எடுத்து வைத்தான்…

அவனையே கொலைவெறியுடன்
பார்த்துக்கொண்டிருந்தவள்..
அவன் முதன் முதலாக தன் பெயரை சொல்லி அழைத்ததும்…..
தன் கோபம் மறந்து….அவன் மேல் கொண்ட காதலால்…அவள் இதுவரை தவித்ததை எண்ணி, தன் கைகளால் முகத்தை மூடி அப்படியே கீழே அமர்ந்து கதறி அழ ஆரம்பித்து விட்டாள்..

பவித்ரா அப்படி அழவும் பதறிய ராஜேஷ் பவி என்று வேகமாக அவளிடம் நெருங்கி முட்டி போட்டு அமர்ந்து அவளை அணைத்து ஆறுதல் சொல்ல முயல..

அவன் அணைக்கவும் அவனை தள்ளி விட்டவிட்டு விட்டு மீண்டும் முகத்தை மூடி கதறி அழுதாள்..

அவள் அழுவது தன் மேல் உள்ள காதலால்தான்....அதுவும் இரண்டு வருட தவிப்பால்தான் என்று உணர்ந்தவன்..... அவள் மறுக்க மறுக்க மீண்டும் அணைத்தான் இறுக்கமாக.....

முதலில் அவனிடமிருந்து விடுபட திமிறியவள்.....அவன் இறுக்கம் கூடவும் வாகாய் அவன் பரந்த மார்பில் அடங்கி...தன் காதலை எல்லாம் கண்ணீரின் மூலம் வெளிபடுத்தினாள்.....

அவளை அணைத்திருந்த ராஜேஷ் பவித்ராவின் உச்சந்தலையில் தன் நாடியை வைத்து, அவளது முதுகை தடவிக்கொடுத்தான்.. “வேண்டாம் பவி, நீ அழுததெல்லாம் போதும் இனி நான் உன்னை எதற்கும் அழவிடமாட்டேன்” என்றவனை...விட்டுவிலகாமல் அவன் மார்பை உரசியவாறே நிமிர்ந்து பார்த்தவள் உதடு துடிக்க

“என்ன அழ வச்சதே நீதானே” என்றவள் மீண்டும் அவன் மார்பில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தாள்..

மேலும் அவளை தன்னோடு இறுக்கியவன்.. குறும்பாக.. “ மேடம்க்கு கோபம் வந்தா மரியாதை எல்லாம் பறந்துடுமா என்ன”

இப்பொழுது அவனை நிமிர்ந்து பாராமல் அவன் நெஞ்சில் மேலும் ஒன்றியபடியே.. “சமயத்துல வாடா போடான்னு கூட சொல்லுவேன்” என்றவளின் அழுகை நின்றிருந்தது.
“ஆனாலும் நீங்க ரொம்ப அழுத்தகாரர்தான், நீங்க என்னைதேடி வருவீங்கன்னு நினைச்சேன்..... ஆனா நான்தான் உங்கள தேடி வந்தேன்.. உங்களுக்கு என்மேல காதலே இல்ல போங்க... நானும் உங்களை காதலிக்கவில்லை” என்று சொல்லிக் கொண்டே அவனை மேலும் இறுக்கி கட்டிக்கொள்ள,

அவளின் பேச்சு ஒன்றும், செயலும் வேறுமாதிரி இருக்க, உல்லாசமாக சிரித்தவன்...பின் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு “பவி, நீயே சொல்லு , உங்க அப்பா நம்ம காதலுக்கு சம்மதம் சொல்லுவாரா..... அதுவும் இல்லாம நான், மாசசம்பளம் வாங்குற சாதாரண வேலைக்காரன், உன் வீட்ல இருக்கிற வசதியான வாழ்க்கை என்னால்

கொடுக்க முடியாது, நீ என்னை கல்யாணம் பண்ணி கஷ்டபடக்கூடாதுன்னு தான் உன்னை வெறுக்குற மாதிரி அன்னைக்கு பேசினேன்....உன்னை அப்படி பேசும் போது என் மனசு எப்படி வலிச்சதுன்னு எனக்குதான் தெரியும்..... இன்னைக்கு காலையில் உங்க அப்பா பேசியதை கேட்டதும் உனக்கு சபரிஷ் சார்தான்" என்று சொல்ல வந்தவனின் வாயை மூடியவள்,

"காலையில் சபரிஷ் அண்ணா வீட்டுக்கு மறுபடியும் வந்தீங்களா நீங்க...நான் கவனிக்கலையே.....சரி அப்பா பேசியதை கேட்டீங்களே... கொஞ்சம் நேரம் இருந்திருந்தா அண்ணா பேசியதையும் கேட்டிருக்கலாம் இல்ல".. என்றவள் சபரிஷ் பேசியதை சொல்லிவிட்டு, "எனக்கு வசதியான வாழ்க்கையெல்லாம் வேண்டாம், நீங்க எங்க இருந்தாலும் நான் உங்ககூட இருக்கனும்"....என்று ஏக்கமாக அவனை பார்க்க,

அந்த பார்வை அவன் மனதினை ஏதோ செய்ய.... தன் முகத்தை அவளின் முகத்தருகே கொண்டு சென்றவன், தன் மூக்கின் நுனியால் பவித்ராவின் மூக்கின் நுனியை உரசி.. "அப்போ சீக்கிரமா..... அதாவது சார் சொன்னமாதிரி அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணத்தை வச்சிக்கலாம்ன்னு சொல்ல வர அப்படித்தானே...." என்க

“அப்படியேதான்”..... என்றவளை குறும்புடன் பார்த்தவன் “அதுக்கு அப்புறம்”... என்று அவளை பார்த்துக்கொண்டே கேட்க

அவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரியாமல், பவித்ராவும் அப்பாவியாக “அதுக்கு அப்புறம் நான் உங்களைவிட்டு ஒரு இம்மி அளவுகூட பிரியமாட்டேன்”

“ஆஹான் , இம்மி அளவுகூட பிரியாம என்ன பண்ணுவே” என்று அவளின் காதோரத்தில் சரசமாக கேட்க,

“உங்களை பிரியாம அப்படியே கட்டிபிடிச்.....” என்று தன் போக்கில் சொல்லி கொண்டிருந்தவள்.... அதன் அர்த்தத்தை உணர்ந்து நாக்கை கடித்துக் கொண்டு அவனை பார்க்க,

அவனோ “சொல்லு அப்படியே கட்டிபிடிச்சு , அதுக்கு அப்புறம்.....” என்று அவளிடம் இன்னும் இழைய,

சமயம் பார்த்து அவனை வேகமாக தள்ளிவிட்டு எழுந்தவள் ஜன்னல் ஓரமாக போய் நின்றுக்

கொண்டாள்..

அவள் பின்னே வந்து அவளை உரசியவாறு நின்றவன்..... காலையில் தான் எடுத்த முடிவை பற்றி சொல்லி.. அவளை தன்புறம் திருப்பி.. “சாரிடா உன்னை ரொம்ப கஷ்டபடுத்திட்டேன்.. என்னை மன்னிப்பியா” என்று உண்மையான வருத்தத்துடன் கேட்க.....

அவன் வருந்துவது தாங்காமல் அவன் நெஞ்சில் சாய்ந்துக் கொண்டு “உங்கள நான் மன்னிக்கணும்ன்னா சீக்கிரம் அண்ணாகிட்ட சொல்லி நம்ம கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க”

“அப்போ கல்யாணத்துக்கு அப்புறம்தான் என்னை மன்னிப்பியா” என்று பாவமாக முகத்தை வைத்துக்கொண்டு ராஜேஷ் அவளை தன்னுடன் சேர்த்து அணைக்க.. அவன் நெஞ்சில் கைவைத்து தள்ளிவிட்டவள்... வாசல் அருகே சென்று திரும்பி “வெவ்வேவே போடா” என்று சிரித்துக்கொண்டே வெளியே ஓட நினைத்தவள் என்ன நினைத்தாலோ... திரும்ப வந்து அவனின் கையை பிடித்து தன் கன்னத்தில் வைத்து , “என்னை விட்டுற மாட்டீங்களே” என்று மீண்டும் கண்ணில் நீர் கோர்க்க , கேட்டாள்,

கலங்கிய அவள் கண்ணை பார்த்தவன்,
“சீக்கிரம் சபரிஷ் சார்கிட்ட பேசி உங்க அப்பாகிட்ட பேச சொல்றேன்..” என்றவனிடம்..

“அப்பா தான் ஒத்துக்க மாட்டாரே, அண்ணா சொன்னதுக்கு கூட என் பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்க இவன் யாரு என்று குதிச்சார்” என்றவளிடம்,

“அப்படி ஒத்துக்கலைன்னா அவருக்கு அவர் பொண்ணு கல்யாணத்துல சாப்பிட கொடுத்துவைக்கல..” என்றவனின் நெஞ்சில் குத்தியவள்.. அவனின் சட்டை பட்டனை திருகியப்படி
“போகலாமா.. எவ்ளோ நேரம் தான் இங்கயே இருக்கிறது.. அண்ணா திரும்பி வந்தா என்ன நினைப்பங்க..”

“ம்ம்ம் ஒன்னும் நினைக்க மாட்டாங்க.. நாளைக்கே கல்யாணம் வாச்சாலும் வச்சிருவாங்க.”

“ம்ம்ம் ரொம்பத்தான் ஆசை உங்களுக்கு

என்றவள்..சரி சரி வாங்க திருச்செந்தூர் கோவில்க்கு போகலாம்", என பவித்ரா சொல்ல,

"என்ன டா திடீர்னு கோவிலுக்கு.." என்றவனிடம்..

"ஒரு வேண்டுதல் இருக்கு நிறைவேற்றனும்..."

"என்ன வேண்டுதல் டா கண்ணம்மா", என தனக்கு அவள் வைக்கப்போகும் ஆப்பை யோசிக்காமல் கேட்டான்...

"என் லவ் நிறைவேறிடிச்சினா .. உங்களுக்கு , மொட்டை போட்டு.. காவடி தூக்க வைக்கிறேன்னு வேண்டிருக்கேன்." என்று அசால்ட்டாக சொல்லிவிட்டு சென்றாள்..

"என்னது மொட்டையா, என அதிர்ந்தவன் , ஹ்ம்ம் பரவாயில்ல உனக்காக , இத பண்ண மாட்டேனா.." என்றவன் தன் தலையை தடவியபடி பவித்ராவின் பின் சென்றான்..

கேபின் அறையை விட்டு சந்தோஷமாக வெளியே வந்த இருவரும்..... அங்கிருந்து வெளியேற..... ராஜேஷ்

தனது பைக்கை உயிர்ப்பித்து பவித்ராவை ஒரு பார்வை பார்க்க.....

அவளோ அவனின் பார்வையின் அர்த்தம் புரிந்து...அவன் பின்னால் அமர்ந்து வலது கையால் ராஜேஷின் இடுப்பை சுற்றி கைபோட்டு அவன் வயிற்றை பிடித்துக்கொள்ள..... ராஜேஷின் கையில் அவன் மனம் போல பைக்கும் பறந்தது...

“ஹே மெதுவா போங்க, எனக்கு பயமா இருக்கு” என்றவள், அவனை இன்னும் நெருங்கி அவனின் முதுகோடு ஒண்டிக் கொள்ள

“நான் ரொம்ப சந்தோஷமா இருந்தா இப்படித்தான் வேகமா ஓட்டுவேன்” என்று கூறி அதன் வேகத்தை இன்னும் கூட்ட

அதற்கு அவன் முதுகில் அடித்தவள்..... “இப்போ நாம எங்க போறோம்” என்று கேட்க..

அதற்கு ராஜேஷ்.....”அது சஸ்பென்ஸ்” என்று மட்டும் சொல்ல..

அதற்கு மேல் வேறு எதுவும் கேட்கவில்லை பவித்ரா ,

அவன் எங்கு கூட்டி சென்றாலும் அவளுக்கு சந்தோஷமே.....

பத்து நிமிடத்தில் ஒரு சிறிய, அழகான வீட்டின் முன் தன் பைக்கை நிறுத்த,

“இது யாரு வீடு” என்று யோசித்தவாறு பவித்ரா இறங்க...

அப்பொழுது வண்டி சத்தம் கேட்டு வீட்டின் உள்ளே இருந்து அழகான இளம்பெண் ஒருத்தி வெளியே வந்தாள்..

அவளை பார்த்ததும், ராஜேஷிடம் பவித்ரா.. “இந்த பொண்ணு யாரு” என்று கேட்க..

ராஜேஷ் பதில் சொல்லும் முன், அந்த பெண் ஓடிவந்து, பவித்ராவின் கையை பற்றிக்கொண்டு தன் அண்ணனிடம், “அண்ணா மைனியை கூட்டிட்டு வந்துட்டியா” என்று சந்தோஷத்துடன் கேட்டவள்,

பவித்ராவிடம் திரும்பி “மைனி நீங்க ரொம்ப அழகா இருக்கிய”, என்று சொல்லிவிட்டு பவித்ராவின் கைபிடித்து அந்த வீட்டினுள் அழைத்து செல்ல.. பவித்ராவோ ராஜேஷை கேள்வியாக பார்க்க.....

ராஜேஷோ அவளிடம்…”இவ என் தங்கச்சி…பேர் செங்கமலம்” என்று திமிரிய சிரிப்புடன் கூற, தன் அண்ணனை முறைத்தவள் “அண்ணா உங்ககிட்ட எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்….என்ன அந்த பேர் சொல்லி கூப்பிட கூடாதுன்னு….. எல்லாம் இந்த அப்பாவால வந்தது, எனக்கு அவங்க அம்மா பேருதான், வைக்கணும்ன்னு வச்சிட்டாங்க, ஆனா அம்மா எனக்கு ஸ்ரீஹரிணின்னு வச்சாங்க , வெவேவே” என்று தன் அண்ணனுக்கு அழகு காட்டியவள் பவித்ராவிடம் திரும்பி,

“மைனி அண்ணாகூட நீங்க பேசாதீங்க…. எப்ப பாரு எனக்கு பிடிக்காத பேரை சொல்லியே என்ன வெறுப்பேத்துவாங்க. என் பேரு செங்கமலம் கிடையாது…..
“என் பேரு ஸ்ரீ ஹரிணி” என்றாள் பெருமையுடன்…பின் “மைனி, வலதுகாலை வச்சி உள்ளவாங்க” என்று சொல்லவும்…

அதுவரை அவளின் கள்ளங்கபடமற்ற பேச்சை ரசித்தவள் திரும்பி ராஜேஷை பார்க்க,

அவன் கண்மூடி திறந்து போ என்று போல் கண்ணைசைக்க,

மகிழ்ச்சியுடன், உரிமையாய் ஹரிணியின் கைபிடித்து வலதுகால் எடுத்து வைத்து அந்த அழகான வீட்டினுள் சென்றாள் பவித்ரா....

சுவாசம் தொடரும்...

“அப்படி ஒத்துக்கலைன்னா அவருக்கு அவர் பொண்ணு கல்யாணத்துல சாப்பிட கொடுத்துவைக்கல..” என்றவனின் நெஞ்சில் குத்தியவள்.. அவனின் சட்டை பட்டனை திருகியப்படி “போகலாமா.. எவ்ளோ நேரம் தான் இங்கயே இருக்கிறது.. அண்ணா திரும்பி வந்தா என்ன நினைப்பங்க..”

“ம்ம்ம் ஒன்னும் நினைக்க மாட்டாங்க.. நாளைக்கே கல்யாணம் வாச்சாலும் வச்சிருவாங்க.”

“ம்ம்ம் ரொம்பத்தான் ஆசை உங்களுக்கு என்றவள்..சரி சரி வாங்க திருச்செந்தூர் கோவில்க்கு

போகலாம்", என பவித்ரா சொல்ல,

"என்ன டா திடீர்னு கோவிலுக்கு.." என்றவனிடம்..

"ஒரு வேண்டுதல் இருக்கு நிறைவேற்றனும்..."

"என்ன வேண்டுதல் டா கண்ணம்மா", என தனக்கு அவள் வைக்கப்போகும் ஆப்பை யோசிக்காமல் கேட்டான்...

"என் லவ் நிறைவேறிடிச்சினா .. உங்களுக்கு , மொட்டை போட்டு.. காவடி தூக்க வைக்கிறேன்னு வேண்டிருக்கேன்." என்று அசால்ட்டாக சொல்லிவிட்டு சென்றாள்..

"என்னது மொட்டையா, என அதிர்ந்தவன் , ஹ்ம்ம் பரவாயில்ல உனக்காக , இத பண்ண மாட்டேனா.." என்றவன் தன் தலையை தடவியபடி பவித்ராவின் பின் சென்றான்..

கேபின் அறையை விட்டு சந்தோஷமாக வெளியே வந்த இருவரும்..... அங்கிருந்து வெளியேற..... ராஜேஷ் தனது பைக்கை உயிர்ப்பித்து பவித்ராவை ஒரு

பார்வை பார்க்க…..

அவளோ அவனின் பார்வையின் அர்த்தம் புரிந்து…அவன் பின்னால் அமர்ந்து வலது கையால் ராஜேஷின் இடுப்பை சுற்றி கைபோட்டு அவன் வயிற்றை பிடித்துக்கொள்ள…… ராஜேஷின் கையில் அவன் மனம் போல பைக்கும் பறந்தது…

“ஹே மெதுவா போங்க, எனக்கு பயமா இருக்கு” என்றவள், அவனை இன்னும் நெருங்கி அவனின் முதுகோடு ஒண்டிக் கொள்ள

“நான் ரொம்ப சந்தோஷமா இருந்தா இப்படித்தான் வேகமா ஓட்டுவேன்” என்று கூறி அதன் வேகத்தை இன்னும் கூட்ட

அதற்கு அவன் முதுகில் அடித்தவள்…. “இப்போ நாம எங்க போறோம்” என்று கேட்க..

அதற்கு ராஜேஷ்……”அது சஸ்பென்ஸ்” என்று மட்டும் சொல்ல..

அதற்கு மேல் வேறு எதுவும் கேட்கவில்லை பவித்ரா , அவன் எங்கு கூட்டி சென்றாலும் அவளுக்கு

சந்தோஷமே.....

பத்து நிமிடத்தில் ஒரு சிறிய, அழகான வீட்டின் முன் தன் பைக்கை நிறுத்த,

“இது யாரு வீடு” என்று யோசித்தவாறு பவித்ரா இறங்க...

அப்பொழுது வண்டி சத்தம் கேட்டு வீட்டின் உள்ளே இருந்து அழகான இளம்பெண் ஒருத்தி வெளியே வந்தாள்..

அவளை பார்த்ததும், ராஜேஷிடம் பவித்ரா.. “இந்த பொண்ணு யாரு” என்று கேட்க..

ராஜேஷ் பதில் சொல்லும் முன், அந்த பெண் ஓடிவந்து, பவித்ராவின் கையை பற்றிக்கொண்டு தன் அண்ணனிடம், “அண்ணா மைனியை கூட்டிட்டு வந்துட்டியா” என்று சந்தோஷத்துடன் கேட்டவள்,

பவித்ராவிடம் திரும்பி “மைனி நீங்க ரொம்ப அழகா இருக்கிய”, என்று சொல்லிவிட்டு பவித்ராவின் கைபிடித்து அந்த வீட்டினுள் அழைத்து செல்ல.. பவித்ராவோ ராஜேஷை கேள்வியாக பார்க்க.....

ராஜேஷோ அவளிடம்…”இவ என் தங்கச்சி…பேர் செங்கமலம்” என்று திமிரிய சிரிப்புடன் கூற,
தன் அண்ணனை முறைத்தவள் “அண்ணா உங்ககிட்ட எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்….என்ன அந்த பேர் சொல்லி கூப்பிட கூடாதுன்னு….. எல்லாம் இந்த அப்பாவால வந்தது, எனக்கு அவங்க அம்மா பேருதான், வைக்கணும்ன்னு வச்சிட்டாங்க, ஆனா அம்மா எனக்கு ஸ்ரீஹரிணின்னு வச்சாங்க , வெவேவே” என்று தன் அண்ணனுக்கு அழகு காட்டியவள் பவித்ராவிடம் திரும்பி,

“மைனி அண்ணாகூட நீங்க பேசாதீங்க…. எப்ப பாரு எனக்கு பிடிக்காத பேரை சொல்லியே என்ன வெறுப்பேத்துவாங்க. என் பேரு செங்கமலம் கிடையாது…..
“என் பேரு ஸ்ரீ ஹரிணி” என்றாள் பெருமையுடன்…பின் “மைனி, வலதுகாலை வச்சி உள்ளவாங்க” என்று சொல்லவும்…

அதுவரை அவளின் கள்ளங்கபடமற்ற பேச்சை ரசித்தவள் திரும்பி ராஜேஷை பார்க்க,

அவன் கண்மூடி திறந்து போ என்று போல் கண்ணைசைக்க,

மகிழ்ச்சியுடன், உரிமையாய் ஹரிணியின் கைபிடித்து வலதுகால் எடுத்து வைத்து அந்த அழகான வீட்டினுள் சென்றாள் பவித்ரா….

சுவாசம் தொடரும்…

****

52

Show all

தீபஷ்வினி

எஸ்எம்எஸ் குழுமம் எழுத்தாளர்

May 9, 2018

#30

சுவாசம் 18

என்னவனே!
உன் விழிவீச்சால்
ஒவ்வொரு முறையும்
தோற்கிறேன்!

வெட்கம் எனும் எதிரியிடம்!!!

நாதன் கோபமாக கிளம்பவும்.. அவரை
சமாதானபடுத்த பின்னாடியே சென்ற லிங்கம்
சகோதரர்கள் இன்னும் வீட்டிற்கு வரவில்லையே
என்று கவலையுடன் பிரபாவும் லட்சுமியும்
காத்திருக்க.. அப்பொழுது அவர்கள் வீட்டு
லேன்ட்லைன் போன் அடித்தது.....

அதை எடுத்து பேசி விட்டு வந்த பிரபா.... லட்சுமியிடம்
,
“அவர் தான் பேசினார் அக்கா.. ஏதோ வெளியூர்
வேலை வந்திடுச்சாம்..... அதனால அங்கிருந்தே
கிளம்பிட்டாங்களாம்” என்றவர்....அப்படி என்ன திடீர்
வேலை வந்திருக்கும்.... ஏதாவது முக்கியமான
வேலைன்னா..... வழக்கமா போற ஆட்களத்தானே
அனுப்புவாங்க.....இவங்க போக
மாட்டாங்களே....இதென்னக்கா புதுசா இருக்கு” என்று
சொல்ல..

“எப்போது திரும்பி வராங்களாம்”.. என்று லட்சுமி
கேட்க..

“ரெண்டு நாள் கழிச்சி வந்துடுவோம்ன்னு
சொல்றாங்க” என்றதும் லட்சுமி..

“ஏதாவது முக்கியமான விஷயமா.. யாரையாவது

பார்க்க போகவேண்டியதா இருந்துருக்கும் பிரபா.. அதான் ரெண்டு நாள் ஆகும்ன்னு சொன்னாங்கல்ல….. வந்ததும் என்ன ஏதுன்னு கேட்போம்…… செல்வி வேற நாளைக்கு அவ வீட்டுக்கு கிளம்பனும் என்று சொல்லிட்டு இருந்தா.. வா அவளுக்கு வேண்டியதை எடுத்து வைப்போம்” என்றதும்..

“சரிக்கா வாங்க போகலாம்” என்று பிரபாவும் அவரை பின் தொடர்ந்தார்….

……

மோகனாவிடம் பேசிவிட்டு அறைக்குள் வந்த ப்ரியாவிற்கு யோசனையாக இருந்தது,

“ரிஷி, பவித்ராவுக்கு மாப்பிள்ளை பார்த்துருக்காங்களா , யாரா இருக்கும்… ரிஷி அதை பத்தி பேசும் போது பவித்ரா முகம் ஏன் அதிர்ச்சியை காட்டியது,, பவித்ரா வேற யாரையும் விரும்புறாளா,இல்ல ஒருவேளை என் ரிஷியை, ச்சே ச்சே” என்று அந்த எண்ணத்தை உடனே அழித்தாள்…..அந்த மாதிரி இருவரையும் இணைத்து யோசிக்கக்கூட பிடிக்கவில்லை அவளுக்கு,

“என் ரிஷி எனக்கு மட்டும்தான் சொந்தம், அவரை நான் யாருக்கும் விட்டு கொடுக்கமாட்டேன் என்று உறுதியாக நினைத்தாள்..

பாவம் அவளுக்கு தெரியாதே.... ஒரு நாள், தானே சபரிஷிடம் எனக்கு நீ வேண்டாம் ரிஷி என்று சொல்லும் நிலைமை வரும் என்று... இதைத்தான் விதி வலியது என்று சொல்லுவார்களோ.

சபரிஷை பற்றி நினைத்தவளின் எண்ணம் நாதனின் பக்கம் திரும்பியது....

“என்ன தைரியம் இருந்தா என் ரிஷியை என்கிட்டேயிருந்து பிரிக்கனும்ன்னு நினைப்பீங்க” என்று தன் கை முஷ்டியை இருக்கி.....”மிஸ்டர் நாதன் உங்கள என்ன பண்றேன்னு மட்டும் பாருங்க” என்று கருவிக் கொண்டிருந்தாள்... பின்பு மோகனா சொன்னது நியாபகம் வந்தவளாக , மாற்றுடை எடுத்துக்கொண்டு குளியல் அறைக்குள் புகுந்தாள்...

குளித்து முடித்து வந்த பிரியா, நீல வண்ண ஜீன்ஸ் மற்றும் மஞ்சள் வண்ண முழுக்கை குர்த்தாவும் அணிந்தவள், தன்னை சிறிது அலங்கரித்துக்கொண்டாள்..

தன்னவனை நினைத்து ஒருப்பாடலை முணுமுணுத்துக் கொண்டே வெளியே வர, அங்கு சில வேலைக்காரர்கள் வேலை செய்து

கொண்டிருந்தனர், வீட்டு மனிதர்கள் யாரையும் காணாமல் போகவே

“எல்லோரும் எங்க போயிருப்பாங்க” என்று வாயில் விரல் வைத்து யோசித்துக்கொண்டே வந்தவள், கவனமின்றி எதன் மீதோ மோதி நின்றாள்..

“ச்ச இவனுக்கு வேற வேலையில்லை எப்போப்பாரு எங்கேயாவது தூண் மாதிரி நிக்க வேண்டியது.. நானும் கரெக்ட்டா, பேக்கு மாதிரி இவன் மேலையே வந்து மோதவேண்டியது” என்று தனக்குத் தானே பேசிக் கொண்டவள் மெதுவாக நிமிர்ந்து பார்க்க, அங்கு அவள் மோதியது ரிஷியின் மீது இல்லை.. அது உண்மையில் ஒரு பெரிய தூண்தான்….

ஹி…. ஹி என்று அசடு வழிந்துக்கொண்டே அந்த தூணை தொட்டு “சாரி ரிஷின்னு நினைச்சி உன்னை திட்டிட்டேன்” என்று தூணிடம் மன்னிப்புக்கேட்டவளை வள்ளி என்ற வேலைக்கார பெண் கவனித்து விட,

“அய்யோ என்னாச்சு இவியலுக்கு.. இப்படி தூணுகிட்ட பேசிட்டு நிக்கிதாவ” என்று ப்ரியாவின் அருகில் சென்று “அக்கா” என்று வள்ளி அழைக்க

பிரியாதான் வேறு உலகத்தில் இருக்கிறாளே....அவள் கூப்பிடுவது காதில் விழாமல் இருக்க, வள்ளி அவளை ஒரு மார்க்கமாக பார்த்துக் கொண்டே...சற்று சத்தமாக, "அக்கோவ்" என்று கத்தி அழைக்க..

சட்டென்று திரும்பிய ப்ரியா "என்னை கூப்பிட்டியா வள்ளி" என்று கேட்க..

"ஆமாக்கா அப்போல இருந்து கூப்பிடுத்தேன் , நீங்க தூணுகிட்ட பேசிட்டு இருக்கிய, உங்களுக்கு என்னாச்சிக்கா" என்று வள்ளி ப்ரியாவை மேலும் கீழும் பார்க்க..

"ஆஹா இந்த வள்ளி என்னை லூசுன்னு நினைச்சிட்டாளோ" என மனதுக்குள் நினைத்தவள், வெளியே "ஹி.... ஹி அது வேற ஒன்னும் இல்ல வள்ளி, மும்பைல எங்க வீட்டுபக்கத்துல , வயசான பாட்டி ஒருத்தங்க இருந்தாங்க.. அவங்க சொன்னாங்க, ஒருநாளைக்கு ஒரு தூண் வீதம், பத்து நாளைக்கி பத்து தூண் கிட்ட" என்றவள்
"ச்ச வேண்டாம் வள்ளி விடு" என்று சொல்லாமல் நிறுத்தி, "ஆமா மத்தவங்க எல்லாம் எங்க..... ஒருத்தரையும் காணோம்" என்று பேச்சை மாற்ற..
ஆர்வமாக கதை கேட்க தயாராய் இருந்த வள்ளி, "அய்யோ அக்கா சொல்லவந்ததை சொல்லி

முடிச்சிருங்க,, இல்ல என் தலையே வெடிச்சிடும்” என்று படபடவென்று சொல்ல..

அப்படி வா வழிக்கு என்று மனதுக்குள் சிரித்தவள்.. “ஒரு நாளைக்கு ஒரு தூண் வீதம் பத்து நாளைக்கு பத்து தூண்கிட்ட அதை சுத்திகிட்டே பேசினா, நம்ம கலர் கூடி அழகா மாறிடுவோம்ன்னு சொன்னாங்க…. நானும் அவங்க சொன்னதுக்கு எதிர் கேள்வி கேட்காமல், அதேமாதிரி செஞ்சேனா பதினோராவது நாள், நல்லா கலர் ஆயிட்டேன் வள்ளி…. எனக்கே ஆச்சர்யமா போச்சு போ, ஆனா ஒன்னு வள்ளி”

“என்னக்கா”…என்று ஆர்வமாக வள்ளி கேட்க..

“இதை நம்பிக்கையோடு ஒழுங்கா செய்யணும் .. இல்ல இருக்கிற கலரும் போயிடும்ன்னு சொன்னாங்க அந்த பாட்டி” என்று வள்ளியை ஓரக்கண்ணால் பார்க்க… அவளின் முகம் பிரகாசமானதை வைத்து…ஆஹா பட்சி சிக்கிகிச்சி… என்று மனதுக்குள் சிரித்தவள்,

“இப்போகூட பாரு இங்க அடிக்கிற வெய்யில்ல நான் கொஞ்சம் கருத்துட்டேன்….எனக்கு ரொம்ப கவலையா போச்சு…. அதான் தூண்கிட்ட பேசிட்டு இருந்தேன்…இப்ப பாரு என் பழைய கலர் திரும்ப வந்துடுச்சு” என்று தன் வலது கையை வள்ளியிடம் நீட்ட.. அது பால்

போல் வெள்ளையாய் இருக்க வள்ளியின் மனதிலும் ஆசை வந்தது.....

“சரி வள்ளி மத்தவங்க எல்லாம் எங்கன்னு உன்கிட்ட கேட்டேன்ல” என்று கேட்கும் போது மோகனா அங்கு வர

“பிரியா இன்னும் இங்க என்ன பண்ற..... வா உனக்காக எல்லோரும் வெயிட்டிங்” என்று ப்ரியாவின் கையை பற்றி இழுக்க..

“ஒரு நிமிஷம் மோஹி”

“என்னடி” என்று ப்ரியாவிடம் கேட்க..

“மோஹி எங்க வீட்டு பக்கத்துல ஒரு பாட்டி இருந்தாங்கள்ல” என்று கேட்க..

“ஆமா ப்ரி ரொம்ப நல்ல பாட்டி.. அவங்க என்ன சொன்னாலும் நாமதான் கேட்போமே.. அவங்க கூட நமக்கு நல்ல நல்ல அட்வைஸ் எல்லாம் சொல்லுவாங்களே” என்று மோகனாவும் ப்ரியா சொன்னதுக்கு ஏற்ற மாதிரி சொல்ல , வள்ளியின் கண்களில் இப்போதே தான் கலர் ஆகிவிட்ட பிரகாசம்

தெரிய..

“ஹப்பா இப்போதான் நிம்மதியா இருக்கு” என்றவள் “வாடி மோகினி போகலாம் எல்லோரும் நமக்காக வெயிட்டிங்” என்றவரிடம்..

“என்னடி திடீர்னு அந்த சரசம்மா பாட்டி பத்தி கேட்ட…. என்ன விஷயம்” என்று மோகனா கேட்க..

பின்னாடி திரும்பி “அங்கே பார்” என்று ப்ரியா சொல்ல..

திரும்பி பார்த்த மோகனா, வள்ளி தூணை சுற்றி சுற்றி பேசிக்கொண்டிருப்பதை பார்த்தவள், “அவ ஏண்டி தூண்கிட்ட பேசிட்டு இருக்கா , இவ்ளோ நேரம் நல்லாதானே இருந்ததா என்று ப்ரியாவிடம் கேட்க,

இப்போது ப்ரியா என்னனு சொல்லுவாள்.. “நான் தூண்கிட்ட பேசிட்டு இருந்தேன், அவ என்னை லூசுன்னு நினைச்சிட்டா, அதான் நான் அவளை லூசாகிட்டேன் அப்படின்னா சொல்ல முடியும்” என்று நினைத்து

“அது எதுக்கு நமக்கு எதாவது வேண்டுதலா

இருக்கும்.. வந்து கேட்டுக்கொள்ளலாம்.. இப்போ வா தோட்டதுக்கு போகலாம்" என்று அந்த அரண்மனையின் பின் வாசல் வழியாக தோட்டத்திற்கு செல்ல..

அங்கே பாட்டி, சந்துரு, மேகா , செல்வி எல்லோரும் அங்கு போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்தனர்..

சிலுசிலுவென்ற காற்று தன் மேனியை தழுவ சிலிர்த்தவள், தன் கைகளை விரித்துக் கொண்டே.... அந்த குளுமையை ரசித்தபடி,
"வாவ் மோஹி காத்து சூப்பரா அடிக்குது எனக்கு ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு... ஐ லைக் இட்." என்றபடி அவர்கள் அருகே சென்றவள், ஆச்சியின் பக்கத்தில் சென்று அமர்ந்துகொண்டாள்....

அதை பார்த்த சந்துரு "பேபி" என்று அழைக்க..

அவளோ அவன் அழைப்பதை சட்டை செய்யாமல், "என்ன மேகா, செல்வியக்கா ரெண்டு பேரும் வீட்டுக்குள்ள நடந்ததை எல்லாம் சொல்லியாச்சா பாட்டிக்கிட்ட..... ஏன்னா அவ்ளோ வேகமா ஓடி வந்தீங்களே அதான் கேட்டேன்" என்க

"பின்ன எங்களுக்கு வேற என்ன வேலைன்னு நினைச்சீங்க..எங்க ஆச்சிக்கு அந்த நாதன் அங்கிள்

வந்தாலே பிடிக்காது, அவங்க வராங்கன்னு சொன்னாலே, எங்க ஆச்சி அந்த இடத்துல இருக்க மாட்டாங்க.....அங்கிள் போனதும்தான் வீட்டுக்குள்ளேயே வருவாங்க.. பெரியப்பாகிட்ட கூட "நாதன் ஏன் இங்க வரான்...எனக்கு பிடிக்கல" என்று ஆச்சி கோபபட்டாங்கன்னா...

"எப்போவாவது தானேமா வர்ரான்...அவனை ஒன்னும் சொல்லாதிங்கன்னு" சொல்லிடுவாங்க, ஆனா பவி அக்காவை மட்டும் எங்க எல்லோருக்கும் ரொம்ப பிடிக்கும்.. எங்க செல்வி அக்காவவிட பவிஅக்கா சின்னவங்கத்தான்.... ஆனா ரெண்டு பேரும் நல்ல பிரெண்ட்ஸ் தெரியுமா.. என்கிட்யும் நல்லா பழகுவாங்க" என்று மேகா கூறி முடித்ததும்.....பவித்ராவை பற்றி தற்பொழுது பேச விரும்பாத பிரியா

"ஓ அப்படியா.....சரி நாம வேற பேசலாம்.....பாட்டி நம்ம அடுத்த பிளான் என்ன" என்று விசாலாட்சியிடம் கேட்க....

"நீதான் சொல்லணும் தாயி" என்றவரை பார்த்து அவர் கன்னம் வழித்து "சோ சுவீட்" என்றாள்

“என்ன பிரியா….. என்ன பிளான்…எதை பத்தி பேசறீங்க…. எனக்கு ஒன்னும் புரியலை…..ஆச்சி நீங்களாவது சொல்லுங்க என்ன பிளான் , சந்துரு என்னடா இதெல்லாம்” ன்று அவர்கள் பேசுவது புரியாமல் செல்வி கேட்க

அய்யோ மறுபடியும் அந்த மொக்க பிளாஷ் பேக் சொல்லனுமா.. என்று சலித்தவாறு.. “அது வந்து அக்கா , அது என்னன்னா” என்று பிரிய வாய் திறக்க போக..

“நானே சொல்றேன் பேபி” என்றான்..

அப்பா தப்பிச்சேன் .. (பிரியா மைண்ட் வாய்ஸ்)
“அக்கா நமக்கு ஒரு அத்தை இருக்காங்கன்னு ஆச்சி நம்மகிட்ட சொல்லிருக்காங்கல்ல” எனவும்

ஆமாம் என்பதாய் செல்வி தலையாட்ட அவனே தொடர்ந்தான்…
ஆச்சி ஒருநாள் சபரிஷ் மற்றும் தன்னிடம் கூறியதையும், அதை தொடர்ந்து அவர்களை கண்டுபிடிக்க மும்பை பயணத்தை பற்றி கூறி எப்படி அவர்களை கண்டுபிடித்தான் என்பதை பற்றி விளக்கி கொண்டே வந்தவன்….. பிரியா தன்னை முறைப்பதை கண்டு பாதியிலேயே நிறுத்தி , பேபி உங்க கிட்ட மறைக்கணும்ன்னு இல்ல டா.. இங்க வந்ததுக்கு அப்புறம் சொல்லாம்ன்னு என்று இழுக்க…

“என்னடா சொல்ற எனக்கு தெரியாம இவ்ளோ விஷயம் நடந்துருக்கா…..ஆமா அத்தையை கண்டுபிடிச்சிட்டேன்னு சொல்ற… அவங்ககிட்ட பேசுனியா…நீ யார்ன்னு சொல்லிட்டியா. அவங்க எல்லாரும் எப்படி இருக்காங்க…. இந்த விஷயம் வீட்ல உள்ளவங்களுக்கு தெரியுமா” என்று கேள்வி மேல் கேள்வி கேட்க,

மேகாவும் அத்தையை பற்றி தெரிந்து கொள்ளும் ஆவலில்…. சந்துருவையே பார்த்திருக்க, “அக்கா ஒவ்வொரு கேள்வியா கேளுங்க…அவங்க எல்லாரும் நல்லா இருக்காங்க…நான் யாருன்னு அவங்களுக்கு தெரியாது….அதே மாதிரி வீட்டில் உள்ளவங்களுக்கு நான் எதுக்கு மும்பை போனேன்னும் தெரியாது…என்றான்

“எல்லாம் சரிடா இப்போதான் அத்தை எங்க இருக்காங்கன்னு தெரிஞ்சிடுச்சில்ல , எனக்கு அவங்களை பார்க்கணும் போல் இருக்கு…. எப்போ இங்க கூட்டிட்டு வரபோறீங்க” என்று செல்வி ஆவலாக கேக்க,

“அத்தையை பார்க்கலாம் அதுக்கு முன்னாடி, அத்தை பொண்ண பார்க்க வேணாமா” என்று ஆச்சியின் குரல் நடுவில் ஒலிக்க

“என்ன அத்தைக்கு ஒரு பொண்ணா.. அவங்களுக்கு ஒரு பையன் மட்டும்தான்னு நீங்கதானே சொன்னீங்க ஆச்சி.....ஐயோ கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்” தலையை பிய்த்து கொள்ளாத குறையாக கேட்க

“அக்கா அத்தைக்கு மூன்று பசங்க.... ரெண்டு பையன், ஒரு பொண்ணு, அந்த பொண்ணு வேற யாரும் இல்லை, அது....” என்று சந்துரு நிறுத்த..

உடனே மேகா ஆர்வமுடன்....”சந்துருண்ணா அது யாருன்னு சீக்கிரமா சொல்லுங்க” என்று பரபரக்க

அவளை கண்டு சிரித்தவன், மோகனாவின் அருகில் வந்து அவளை பார்த்து கண் சிமிட்டி “இதோ இவதான் நம்ம அத்தை பொண்ணு” என்று சொன்னவன்..

“நான் அத்தை குடும்பத்தை கண்டுபிடித்ததை இன்னும் அண்ணாகிட்ட சொல்லல, அவங்களை நேரில் கூட்டிகிட்டு வந்து சொல்லாம்ன்னு நினைச்சேன்.....சோ யாரும் இப்போதைக்கு சொல்ல வேண்டாம்” என்க

மோகனாவோ.. “அய்யோ எல்லோரும் இருக்கும் போதே இப்படி கண்ணடிக்கிறானே....” என்று சிவந்த

தன் முகத்தை மறைக்க ஆச்சியின் அருகில் போய் நின்று கொண்டாள், அப்போது,...

“என்னது நம்ம பார்வதிக்கு பொண்ணு இருக்கா , மோகனாதான் அவ பொண்ணா” என்ற ஒரு குரல் ஒலிக்க, அனைவரும் திடுக்கிட்டு குரல் வந்த திசையை பார்க்க.....அங்கு லட்சுமியும், ப்ரபாவும் நின்றிருந்தனர்...

செல்வி நாளை அவள் புகுந்தவீட்டுக்கு கிளம்புவதால், வேறு ஏதும் தேவையா என்று கேட்க வந்தவர்கள் சந்துரு பேசியதை கேட்டு ஆனந்த அதிர்ச்சி அடைந்தனர்...

.....

மோகனா ஆச்சியின் மடியில் படுத்திருக்க அவர்களை சுற்றி எல்லோரும் அமர்ந்து மோகனாவிடம் கண்ணீர் கலந்த பாசத்தை பிழிந்து கொண்டிருந்தனர், அதாவது மோகனாவை பற்றியும், அவர்கள் இத்தனை வருடம் எங்கு இருந்தார்கள்...என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்ற விவரங்களை பற்றி கேட்டுக் கொண்டும்.....அதனால் ஏற்பட்ட மனவருத்தத்தை கண்ணீர் விட்டு ஆற்றிக் கொண்டு இருந்தவர்களை பார்த்து கொண்டிருந்த பிரியா.....

“எல்லோரும் கொஞ்சம் அழறதை நிறுத்துறீங்களா”

என்று சற்று குரல் உயர்த்தி சொல்ல,

அவர்களும் அழுகையை நிறுத்திவிட்டு ….அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று அவளையே பார்க்க…..

“இப்படி உட்கார்ந்து அழறதுக்கா , உங்கள சந்துரு வர சொன்னான்…. மோகனாவோட அம்மா அப்பாவை எப்படி இங்க வரவைக்கணும்.. அதுக்கு முன்னாடி இங்க அங்கிள்ஸ் மனசுல தங்கச்சி பாசம் இருக்கா , இல்ல அவங்க மனசு மாறாம இன்னும் அதே கவுரவத்தோடதான் சுத்திகிட்டு இருக்காங்களான்னு தெரிஞ்சிக்க வேண்டியது நிறைய இருக்கு அதவிட்டுட்டு இப்படியா அழுவாங்க…..என்றவள்…அன்று ஆச்சியிடம் சொன்னதை இப்பொழுது மற்றவர்களிடமும் சொல்லி

“யாராவது ஒரு ஐடியா குடுங்க…. என்ன சொல்லி ஆன்ட்டியையும், ஈஷ்வர் அங்கிளையும் இங்க வரவைக்கிறது.. இங்க இருக்கிற மற்ற ரெண்டு ஜீவன்களை எப்படி சமாளிக்கிறதுன்னு……..ஆள் ஆளுக்கு ஒரு ஐடியா குடுங்க” என்க

லட்சுமியோ தன் மாமியாரிடம் “அத்தை இவ்வளவு நாள் பொறுத்தீங்கள்ள, இன்னும் ஒரு நாள் பொறுங்க.. உங்க பசங்க வேலை விஷயமா வெளியூர்க்கு போயிருக்காங்க.. வந்ததும் நான்

மெதுவா பேசி அவங்க மனசுல என்ன இருக்குன்னு தெரிஞ்சிக்கிறேன்" என்க

"ஆமா அத்தை அக்கா சொல்றதும் சரிதான்.. இவங்க இன்னும் மைனி மேல கோபமா இருந்து மறுபடியும் மொதல்ல நடந்த மாதிரி நடந்துகிட்டாங்கன்னா" என்று பிரபா சொல்ல..

"என்னம்மா சொல்றீங்க , அப்பா அந்த நாதன் அங்கிளை சமாதானபடுத்த தானே போனாங்க... நீங்க இப்படி சொல்லறீங்க" என சந்துரு கேட்க..

"ஆமாபா இப்போதான் போன் பண்ணாங்க, திடீர்னு கிளம்பிட்டங்களாம்" என்று சொல்ல

"ஓஓஓ அப்படியா சரி" என்று அமைதியாகிவிட..

லட்சுமியை பார்த்த ப்ரியா "என்ன ஆன்ட்டி நீங்க எல்லாம் ஒரு அத்தையா" என்று திடீரென்று அவர்களை பார்த்து கேட்க

"ப்ரி" என்று மோகனா எப்போதும் போல் அதட்ட..

"ஹி ஹி பின்ன என்ன மோஹி , ரொம்ப வருஷம் கழிச்சி குடும்பம் ஒன்னு சேரபோகுது, அதுவும் இல்லாம இப்போ நீ யாருன்னு எல்லோருக்கும் தெரிஞ்சிடுச்சி.... அத தடபுடலா வடை பாயாசத்தோட

விருந்து வச்சி கொண்டாட வேண்டாமா.....
அதவிட்டுட்டு இப்படி அழுதுட்டு இருந்தா எப்படி..
எனக்கு பசிக்குதுல்ல" என்று பரிதாபமாக சொல்ல

அவள் கூறுவதை கேட்ட எல்லோரும்
சிரித்துவிட்டனர். ஆச்சி தன் கண்ணை துடைத்து..
"இப்போதுதான் இந்த வீடு நிரஞ்சி இருக்கு.. என்
பொண்ணையும் பேரன்களையும் பார்த்துட்டா என்
மனசும் நிரஞ்சிரும்" என்க

"இப்போ எனக்கு சாப்பாடு போட்டா என் வயிறும்
நிரஞ்சிரும் அப்படித்தானே ஆச்சி" என்று ப்ரியா
சொல்ல மீண்டும் அங்கே சிரிப்பொலி எழுந்தது....
"ஹான் இது அழகு.. இப்படியே சிரிச்சிகிட்டே
இருக்கணும் அப்போதான் எனக்கு பிடிக்கும்" என்று
சிரித்துக் கொண்டே கூறினாள்....

.....

சபரிஷ் வீட்டின் டைனிங் டேபிளில் நடக்கும்
களோபரத்தை கண்டு,பிரியா தன் இடுப்பில்
கைவைத்து முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

"சாப்பிடும்மா, நல்லா சாப்பிடு.. இன்னும் கொஞ்சம்
போட்டுக்கோ" என்று இப்படி பல குரல்கள்,
மோகனாவை தாங்கோ தாங்கு என்று தாங்க,

அதைத்தான் இவள் அப்படி பார்த்துக் கொண்டிருந்தாள்

அவள் அருகில் அமர்ந்த சந்துரு , “பேபி என்னாச்சு எதுக்கு இப்போ இந்த முறைப்பு…. சாப்பிடு” என்று சொல்ல,

“டேய் என்னடா நடக்குது இங்க…. கொஞ்சம் கூட சரி இல்லை சொல்லிட்டேன்.. நானும் அப்போது இருந்து பார்க்கிறேன் , ரொம்ப ஓவரா போய்ட்டு இருக்கு.. பசிக்கிதுன்னு சொன்னது நானு ஆனா” என்று அவனை முறைத்தவள் “இப்போ நிறுத்த சொல்ல போறியா இல்லயா…இல்ல நான் சொல்லவா..”

“என்ன பேபி நிறுத்தனும்”

“அங்க பாரு.. யாருக்காவது தோணுச்சா எனக்கு ஊட்டி விடனும்ன்னு” என்று ஏக்கமாக சொல்ல..

சட்டென்று வெளியே வந்த மனசாட்சி.. “அதை நீ கேட்க வேண்டிய ஆளுகிட்ட கேட்கணும் அதாவது உன் ரிஷிக்கிட்ட”

அதனை முறைத்தவள்.. “போடி நான் மாட்டேன் என்றா சொல்றேன்.. எப்போ பாரு மொறைச்சிகிட்டே

இருந்தா எப்படி கேட்கறதாம்..... அதுகிட்ட என் லவ் சொல்லி , கல்யாணம் பண்ணி, குடும்பம் நடத்தி..... விளங்கிடும்" என்று எரிச்சலுடன் சொல்ல

"இப்போ சொன்ன பாரு இது பேச்சி" என்று அமைதியாகி விட..

"ரொம்ப நாளைக்கு அப்புறம் ஒன்னு சேர்ந்துருக்காங்கல்ல அதான்" என்றவன் ப்ரியாவை பார்க்க.. அவளோ அவன் பேசியதை கவனிக்காமல் ஏதோ யோசனையில் இருப்பது போல் இருக்க.. "பேபி சாப்பிடாம என்ன யோசனை" என்று சந்துரு மீண்டும் சாப்பிட சொல்ல..

அவனை முறைத்தவள் "போ சந்துரு உன் பேச்சு கா, என்கிட்ட பேசாதே" என்று சிறுகுழந்தையாய் வேறுபக்கம் முகத்தை திருப்பி கொள்ள,

"என்ன பேபி திடீர்னு ஒரு ஹாப்பி நியூஸ் சொல்லற" என்று சந்துரு திகைப்பான பார்வையுடன் சொல்ல

"நான் ஹேப்பி நியூஸ் சொன்னேனா, லூசா டா பக்கி நீ, உன் பேச்சி கான்னு சொல்லறேன்" , என்று பாதியில் நிறுத்தியவள், "ஓஓஓ அய்யாவுக்கு நான் அப்படி சொன்னது ஹேப்பி நியூஸா" என்று அவன் தலையில் குட்ட..

தன் தலையை தடவியவன் “நான் உன்னை சாப்பிடதானே சொன்னேன், அதுக்கு ஏன் என்னை மொறச்ச பேபி” என்று பொரித்த சிக்கனை வாயில் வைத்தபடி கேட்டான்..

மீண்டும் அவனை முறைத்தவள்.. “நீ ஏன்டா மோஹியை கடிச்சி வச்ச” என்று காலையில் சபரிஷ் எதிரில் கேட்ட கேள்வியை மறக்காமல் கேட்க..

வையில் வைத்த சிக்கன் இப்போது சந்துருவின் தொண்டை குழிக்குள் சிக்கி கொள்ள, இரும ஆரம்பித்து விட்டான்..

சந்துரு இருமவும், எல்லோருடைய கவனமும் இந்த பக்கம் திரும்பியது..

“டேய் மெதுவா சாப்பிடுடா… சிக்கன் எங்கேயும் ஓடி போய்டாது” என பிரபா சத்தம் போட.

லட்சுமி அவன் தலையில் தட்டி தண்ணீர் எடுத்து கொடுத்து குடிக்க சொன்னார்… அதை வாங்கி குடித்தவன்….. மோகனாவை பார்க்க,

மோகனா அவன் பார்வையை கவனித்து யாருக்கும் தெரியாமல் என்ன என்று கண்களால் கேட்க.. அவனோ அவளை முறைத்து “மேல மொட்டை மாடிக்கு வா” என்று வாயை அசைத்து கோபமாக சொல்ல..

“எதுக்குடா மாடிக்கு கூப்பிடுறே மறுபடியும் கடிக்கிறதுகா” என்று கோபமாக வந்து விழுந்தன வார்த்தைகள்.ப்ரியாவிடம் இருந்து..

ப்ரியா சத்தமாக சொன்னதும்.... லட்சுமி பிரபா மற்றும் ஆச்சி, மூவரும் ப்ரியாவிடம் “என்ன கடிக்கணும், யாரை கடிக்கணும்” என்று ஒன்றுபோல் கேட்க..

சந்துரு தலையில் கைவைத்து , உட்கார்ந்து விட்டான்...

“ஆஹா ப்ரி அடிக்கடி நீ ஒரு லூசுன்னு நிருபிக்கிற, மெதுவா சொல்றேன்னு சத்தமாவா சொல்லி வைப்ப..... பாரு இப்போ இவங்க கிட்ட நான் என்ன சொல்லி சமாளிக்கறது” என்று முழித்தவள்.....

“ஹி ஹி அது ஒன்னும் இல்ல ஆன்ட்டி, இங்க பாருங்க சிக்கன் தொண்டைக்குள்ள சிக்கி விக்குது இல்ல..... அதை மறுபடியும் கடிக்க போறியான்னு கேட்டேன்.... அதனால, அந்த சிக்கன் பீஸை நானே

சாப்பிடுறேன்" என்றவள் சந்துருவின் கையை பிடித்து சிக்கனனை தன் வாயில் வைக்க போக.... அப்பொழுது,

சந்துரு என்ற சத்தத்தில் திரும்பியவன், அங்கு கோபமாக நின்றிருந்த சபரிஷை பார்த்து, அவனின் கோபம் எதற்கு என்றுபுரியாமல்
"அண்ணா" என்று எழுந்தவன் சாப்பிட்ட கையை கழுவி விட்டு அவனிடம் போக,

ப்ரியாவை முறைத்துக் கொண்டே, சந்துருவை உடன் அழைத்துக் கொண்டு மாடி ஏறினான்...

"அய்யா சபரிஷூ , உங்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்ய்யா" என்று ஆச்சி அவனை தடுத்து நிறுத்த...

"கொஞ்சம் நேரம் கழிச்சு பேசலாம் ஆச்சி.... இப்ப எனக்கு வேலை இருக்கு" என்றபடி படியேற.....

"வந்ததுதான் வந்துட்டே ரெண்டு வாய் சாப்பிட்டு போய்யா" என்று லட்சுமி அழைத்தார்,
மாடிப்படி ஏறிக்கொண்டிருந்தவன் நின்று, "இல்லமா இப்ப வேண்டாம்" என்றவன் வேகமாக சென்று விட்டான்

போகும் சபரிஷையே பார்த்திருந்த பிரியா...அவன்

முறைப்புக்கு காரணம் தெரியாமல் லட்சுமியிடம் “என்னாச்சு ஆன்ட்டி.. உங்க பெரிய புள்ள ஏன் இப்படி முறைச்சிகிட்டே போறார்” என்க

“என்னன்னு தெரியலமா.. எதுக்கு சந்துருவை வேற அவசரமா கூட்டிட்டு போறான்… அவிய வேற வீட்ல இல்ல போன் பண்ணினாலும் எடுக்க மாட்டேங்குறாங்க…. எங்க போயிருக்காவன்னும் சொல்லலை.. காலையில் இந்த நாதன் வேற பிரச்சணை பண்ணிட்டார்.. நேத்து தோப்புல நடந்த பயங்கரம்.. இதெல்லாம் நினைச்சா எனக்கு மனசு கிடந்தது அடிச்சிகிது..

தேவி பத்தின விஷயம் வேற அவிய கிட்ட சொல்லணும்….. மோகனா நம்ம தேவியோட பொண்ணுன்னு சொன்னா அவிய ரெண்டு பேரும் என்ன செய்வாவ……. மோகனாவை வெளியே போக சொல்லுவாலோன்னு வேற பயமா இருக்கு” என்று லட்சுமி புலம்ப…

லட்சுமியின் அருகில் வந்த பிரபா, “அக்கா ஒன்னும் இல்லாத விஷயத்துக்கு நீங்க ஏன் டென்ஷன் ஆகுறீக…. எல்லாம் சபரிஷ் பார்த்துக்குவான்… வெளியூருக்கு போன அத்தானும். அவரும் சீக்கிரம் வந்துருவாவ.. அதுக்கு அப்புறம் மோகனாவை பத்தி

சொல்லி தேவியை எப்படியாவது இங்க கூட்டிட்டு வர சொல்லுவோம்" என்று அவரை சமாதானபடுத்தி அழைத்துக்கொண்டு செல்வியின் அறைக்குள் செல்ல..

"என்னடி அத்தை எண்ணலாமோ புலம்பிட்டு போறாங்க, மாமாக்கு அப்பா மேல இன்னும் கோபம் இருக்குமா, அப்போ எங்க அம்மாவை அவங்க குடும்பத்தோட சேர்க்க முடியாதா" என்று மோகனா ஒரு பறம் புலம்ப

"அடியே நீயும் ஏண்டி புலம்புற" என்றவள்.. பின் அமைதியாக.. "அதெல்லாம் ஒன்னும் ஆகாது.. ஏதோ அப்போ அப்படி நடந்துகிட்டாங்க உன் மாமாங்க ஆனா இப்போவும் அதேமாதிரி தான் இருப்பாங்கன்னு சொல்லமுடியாது.. மாற்றம் இல்லாமையா இருக்கும்.. வெளியூர் போயிருக்கிறவங்க வரட்டும்...நாம எல்லோரும் பேசுவோம்.. சரியா" என்றவள் "வா கொஞ்சம் தோட்டத்துக்கு பக்கம் போய்ட்டு வரலாம்" என்றவள் மோகனாவையும் கையோடு அழைத்துக்கொண்டே சென்றாள்..

சுவாசம் தொடரும்....

சுவாசம் 19

எல்லோரிடமும்
அகிம்சையை கடைபிடிக்கும் நீ
என்னிடம் மட்டும்
வன்முறையை
கடைபிடிப்பது ஏனோ!!!
உன் முத்தம் எனும் வன்முறையால்!!!

தன் அறைக்குள் வந்த சபரிஷ் , குறுக்கும்
நெடுக்குமாக நடக்க, என்ன நடந்தது என்று புரியாமல்
தன் அண்ணனையே பார்த்திருந்தான் சந்துரு....

ஏனெறால் எந்த பிரச்னை வந்தாலும் கண்மூடி
திறப்பதற்குள் முடித்துவிடும் தன் அண்ணண் இன்று
இவ்வளவு டென்ஷனாக இருப்பதற்க்கு காரணம்
தெரியாமல் இருக்கவே மெதுவாக அவனிடம்...

“அண்ணா என்னாச்சு, எதுக்கு இவ்ளோ டென்ஷனா
இருக்கீங்க” என்று கேட்டான்.

நடந்துகொண்டிருந்தவன் நின்று சந்துருவை

பார்த்து....பவித்ரா தன்னிடம் சொன்னதை சொன்னவன்.. “அப்பா அந்தாளை எவ்வளவு நம்பினார், ஆனா அந்தாளு, இப்படி ஒரு காரியம் பண்ணிட்டு.. கொஞ்சம் கூட கூசாம நம்ம வீட்டுக்குள்ளே வந்து போய்கிட்டு இருந்துருக்கான்... ச்சே” என்று நாதனின் மேல் உள்ள கோபத்தை காற்றில் தன் கையை மடக்கி குத்த..

சந்துருக்கும் அதை கேட்டு நாதன் மேல் கோபம் வந்தாலும், தானும் கோபபட்டால், மேல என்ன செய்வது என்று யோசிக்க முடியாது என்று நினைத்தவன்.. சபரிஷை நோக்கி “இவ்ளோ கோபம் வேண்டாம், மொதல்ல அத்தை குடும்பத்தை இங்க வரவைப்போம்.. அப்புறம் அந்த நாதனை என்ன செய்யலாம்ன்னு யோசிப்போம்.. ஆனா சும்மா மட்டும் விட்டுட கூடாதுணா” என்றவன்.. பின் மெதுவாக..

“அண்ணா உங்ககிட்ட நான் ஒரு உண்மையை மறைச்சிட்டேன்” என்று மென்று முழுங்க,

“என்ன உண்மையை மறச்சே சந்துரு” என்று கூர்மையாக வந்து விழுந்தன வார்த்தைகள் சபரிஷிடமிருந்து....

தன் அண்ணணிடம் மறைத்து விட்டதை எண்ணி குற்றவுணர்வு மேலோங்க சந்துரு அமைதியாக

இருந்தான்…

“சொல்லு” என்று சபரிஷ் அழுத்தமாக சொல்ல..

அந்த குரலில் பயந்தவன்…பின் மெல்லிய குரலில்
“நான் அத்தை குடும்பத்தை கண்டு பிடுச்சிட்டேன்”…
என்று தயங்கி தயங்கி சொல்ல

சபரிஷோ மேலே சொல் என்பது போல் பார்க்க,

“அத்தை குடும்பம் மும்பைல தான் இருக்காங்க”
என்றவன்…அவன் எப்படி கண்டுபிடித்தான்
என்பதையும் கூறி, “இப்போ நம்ம வீட்டுக்கு
வந்துருக்க மோகனா….. வேற யாரும் இல்லை..”

“நம்ம தேவி அத்தையோட பொண்ணு அப்படித்தானே
சந்துரு” என்று சந்துரு ஆரம்பித்த பேச்சை சபரிஷ்
முடித்து வைத்தான்…

“அண்ணா உங்..உங்களுக்கு எப்படி தெரியும்” என்றான்
அதிர்ச்சியாக..

“டேய் நான் உனக்கு அண்ணண்டா… நீ அங்கபோன
ஒரு மாசத்திலேயே அத்தை குடும்பத்தை நீ

கண்டுபிடுச்சிட்டேன்னு எனக்கு தெரியும்..எப்படின்னு கேக்குறியா.. நீ அங்க போய் ஒரு மாசம் ஆனதுக்கப்புறம் கூட உங்கிட்ட இருந்து சரியான தகவல் இல்லாமல் போகவே, டிடெக்டிவ் கிட்ட பொறுப்பை ஒப்படைச்சேன்.. வித் இன் ஒன் வீக் எனக்கு எல்லா தகவலும் வந்துடுச்சு.....ஆனா நீயேன் என்கிட்ட இதபத்தி சொல்லலை அது தான் எனக்கு புரியலை" என்று தன் தாடையை தடவியபடி சந்துருவிடம் கேட்க...

"நான் உங்ககிட்ட சொல்லாததுக்கு என்னை மன்னிச்சிருங்க அண்ணா.. உங்ககிட்ட மறைக்கனும் என்றெல்லாம் இல்லைண்ணா
அத்தையும் மாமாவும் பழசையெல்லாம் மறந்துட்டாங்களான்னு தெரியாது.....இந்த நிலைமையில நான் உங்ககிட்ட சொல்லி நம்ம திடீர்ன்னு அங்க போய் நின்னா.....சரிவருமான்னு யோசிச்சிட்டு இருந்தப்போதான்..
மோகனாவை நான் படிக்கிற காலேஜில் பார்த்தேன், அவகிட்ட நான் யாருன்னு சொல்லாம, அவகிட்ட பழகி மாமா அத்தையை பத்தி தெரிஞ்சிக்கலாம் என்று பார்த்தா..... அவ என்கிட்ட பேசினாதானே... சரி ரெண்டு வருஷ படிப்பு இருக்கு அதுக்குள்ள , அவங்களை பத்தி தெரிஞ்சிக்கிட்டு சொல்லலாம்ன்னு" என்று தயங்கியபடி தன் அண்ணனை பார்க்க,

அவனை பார்த்து சிரித்த சபரிஷ்.. “அதுமட்டும் தான் காரணமா இல்ல……” என்று குறும்பு புன்னகையுடன் கேட்க

“அண்ணா அதுவந்து…. மோகனா….. நம்ம அத்தை பொண்ணுன்னு தெரியும் முன்னே நான்… நான் … எனக்கு அவளை பிடிச்சு போச்சு…. அதுக்கு அப்புறம் தான் அவ எனக்கு முறை பொண்ணுன்னு தெரிஞ்சிது.. நான் மோகனாவை..” என்றவன் முகம் சிவந்தது.

ஏன் பெண்களுக்கு மட்டும் தான் முகம் சிவக்குமா என்ன….. ஆண்களுக்கு சிவக்கும் என்பதை நிருபித்தான் சந்துரு….

“அண்ணா உங்களுக்கு எப்படி தெரிஞ்சிது , நான் மோகனாவை லவ் பண்ற விஷயம்” என்று ஆச்சர்யமாக கேட்க

“அதான் இன்றைக்கு காலையில் டைனிங் டேபிளில் சுத்தி என்ன நடக்குதுன்னு கூட தெரியாம , கண்ணால் பேசிட்டு இருந்தீங்களே”..

“அண்ணா சாரிண்ணா”

“டேய் எதுக்குடா சாரி கேட்குற.. இதெல்லாம் அத்தை

பொண்ணு மாமா பையன் உறவுக்குள் சகஜம்தான்” என்று சொல்ல..

“அண்ணா அப்படி இல்ல… எங்களுக்குள்ள சொந்தம் என்கிற உறவை தாண்டி காதல் இருக்குண்ணா”…… என்றான் மோகனாவின் மேல் இருக்கும் காதலோடு……

“என்ன காதலோ போ……நம்ம ராஜேஷையே எடுத்துக்க… பவித்ராவை விரும்புறான். ஆனா அதை சொல்ல தைரியம் இல்ல, நம்ம செல்வி கல்யாணத்தப்பவே தெரியும் இவங்க லவ் பண்றது.. இவ பார்க்கும் போது அவன் முகத்தை திருப்பறதும் , அவன் பார்க்கும் போது இவ முகத்தை திருப்புறதும்….. அந்த பொண்ணு தைரியமா அவன்கிட்ட காதலை சொன்னா….. ஆனா ராஜேஷ் மறுத்துட்டான்.. ஏன்னா அவன் ஏழையாம்.. எவ்ளோ தைரியசாலியா இருந்தாலும் அவனை கோழையாக்குற இந்த காதல் தேவையா” என்று நீளமாக பேசி முடித்தான்

பாவம் அவனுக்கு தெரியவில்லை அவனும் ஒரு பெண்ணின் காதல் கிடைக்க தவமாய் தவமிருக்க போவது……

“சரி அதை விடு.. அப்பா சித்தப்பா வெளியூர் போயிருக்காங்க , எப்போ வருவாங்கன்னு தெரியலை

, வந்ததுக்கு அப்புறமா , ரெண்டு பேர்கிட்டயும் பக்குவமா நாதனை பற்றி எடுத்து சொல்லி புரிய வைப்போம்..... அப்புறம் அத்தை மாமாவை சமாதானபடுத்தி இங்கே கூட்டிட்டு வருவோம்" என்றவன்

தன் முழு உயரத்துக்கும் நிமிர்ந்து நின்று "அப்புறம் இருக்கு அந்த நாதனுக்கு , என் குடும்பத்திலேயே ஒருத்தன் குழப்பத்தை உண்டு பண்ணி பிரிச்சிருக்கான்னா, எவ்ளோ தைரியம் வேணும்" என்று சொன்னவனின் குரலில் அப்பட்டமாக கோபம் தெரிந்தது... பின் தன் கோபத்தை கட்டுக்குள் கொண்டு வந்தவன்,

"சரி வா சந்துரு .. ஆச்சி ஏதோ முக்கியமான விஷயம் பேசணும்ன்னு சொன்னாங்க....சரி வா கீழே போகலாம்" என்க

"அது வேற ஒன்னும் இல்லண்ணா.....இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் , அத்தையை பற்றின விஷயத்தை சொன்னேன்.. அதுதான் உங்ககிட்ட சொல்ல ஆச்சி உங்களை கூப்பிட்டுருப்பாங்க"..

"ஓஓஓ அப்படியா சரி நீ போ.... நான் கொஞ்ச நேரத்தில வரேன்" என்றவன்..... சந்துரு

வெளியேறவும்.....”ஒரு நிமிஷம் என்று தடுத்து நிறுத்த

என்ன என்பது போல் சந்துரு பார்க்க,

சபரிஷ் முகம் கடுகடுவென்று இருந்தது..“நான் ஏற்கனவே உன்கிட்ட சொல்லியிருக்கேன்..இது மும்பை இல்ல கிராமம்ன்னு.. இடத்துக்கு தகுந்தா மாதிரி நடந்துக்கனும் என்று, மறுபடியும் நான் சொல்லிகிட்டு இருக்க மாட்டேன்” என்று சொல்லிவிட்டு நீ போகலாம் என்பது போல் பார்க்க

டைனின் ஹாலில் தன் அண்ணணின் முறைப்புக்கான காரணம் விளங்க.... “அண்ணா அது வந்து பேபி” என்று கூற வந்தவன் அவனின் பார்வையில் அடங்கி வெளியே வந்துவிட்டான்.....

பிரியாவை பற்றி தன் அண்ணணிடம் மெதுவாகத்தான் எடுத்து சொல்லனும் என்று நினைத்தவன்....தன் மனதில் உள்ள காதலை சபரிஷிடம் பகிர்ந்ததால்... இனி எல்லாம் அண்ணன் பார்த்துக்கொள்வான் என்ற சந்தோஷத்துடன் தன் அறைக்கு செல்ல போனவன்..... அங்கு மோகனா மாடியேறி வருவதை பார்த்து, சட்டென்று வேகமாக தன் அறைக்குள் புகுந்து, கதவை பாதி திறந்த நிலையில் வைத்துக் கொண்டு மோகனாவின்

வரவுக்காக காத்திருந்தான்..

இதை அறியாத மோகனா.... ப்ரியாவிடம் “எனக்கு மனசு சரியில்ல ப்ரி மொட்டை மாடிக்கு போகலாம் வரியா.... கொஞ்சம் அமைதி தேவை எனக்கு” என்ற மோகனாவிடம்..

தன் இரு கையையும் தலைக்கு மேலே தூக்கி “அம்மா தாயே எனக்கும் அமைதிக்கும் ரொம்ப தூரம் நான் வரலை.... நீ மட்டும் போ தங்கம்” என்றவள்..

“பார்த்து போ அந்த பக்கி வந்து மறுபடியும் கடிச்சி வச்சிட போறான்” என்று சொன்னவுடன்

தன் மனசுனக்கத்தையும் மீறி வெட்கபட்ட மோகனா... அதை மறைக்கும் பொருட்டு “அடியேய் எனக்கும் ஒரு காலம் வரும் அப்போ உன்ன ஓடஓட ஒட்டி தள்ளல...நான் மோகனா இல்லடி” என்று சவால் விட்டபடி மாடியேறி வந்துகொண்டிருந்தாள்..

சந்துருவின் அறையை தாண்டித்தான் மொட்டைமாடிக்கு செல்ல வேண்டும்..ஆகையால் அந்த வழியாக போக

சரியாக அவள் சந்துருவின் அறையை கடக்கும் வேளையில் அவன்.....அவள் கை பிடித்து அப்படியே, தன் அறைக்குள் இழுத்து கதவை சாத்தி..... அதன் மேல் அவளை சாய்த்து..... தன் இருகைகளையும் அவளின் இருபுறமும் வைத்து மோகனாவை சிறை செய்து அவளை காதலுடன் பார்க்க,

மோகனாவோ.. தீடீரென்று தன்னை யாரோ இழுக்கவும் பயந்து கத்த போனவள்..... அது சந்துரு என்றதும்.. அமைதியாகி அவனை முறைத்து பார்த்துக்கொண்டிருந்தாள்..

மோகனா முறைப்பதை பார்த்தவன், "ஏண்டி நான்தான் உன்னை முறைக்கணும்.. நீ என்னன்னா என்னை முறைச்சிட்டு இருக்கே.. ஏண்டி பேபிகிட்ட இப்படித்தான் எல்லாத்தையும் சொல்லுவியா, லூசு லூசு.... அவ ஒரு குழந்தைடி" என்று திட்ட..

"நீங்க எதுக்கு என்னை முறைக்கணும்" என்றவள், "ஆமா இப்படி கடிச்சி வச்சா யாருக்கும் தெரியாது பாருங்க" என்று தனது உதட்டை அவனிடம் காண்பிக்க...

அவள் உதட்டை பார்த்தவன் தன் வலது கை விரலால், அவளின் இதழில் வருட,

அவன் கையை தட்டி விட்டவள்..... “யாரு அவ குழந்தையா, அப்போ நான் என்னவாம்... எனக்கும் அவளுக்கும் ஒரே வயசுதானே.... அதென்ன அவளை மட்டும் குழந்தைன்னு சொல்றீங்க..... அதுமட்டுமில்லாம இது என்ன புதுசா டி போட்டு கூப்பிடுறீங்க , எனக்கு இப்படி கூப்பிட்டா பிடிக்காது” என்றவளிடம்,

“எனக்கு பிடிக்குமே.... நான் அப்படி தாண்டி.... டி போட்டு கூப்பிடுவேன்டி...என்னடி பண்ணுவ.... எனக்கு ப்ரி ஒரு குழந்தை தாண்டி” என்று மேலும் நெருங்க

பாவம் அவள்தான் முகம் சிவந்து போனாள்.. அவன் அருகாமையும்... அவன் மேலிருந்து வீசிய அவனது பிரத்தியேக வாசனையும்.. அவளை நிலைகொள்ளாமல் செய்ய..... அவளது மனமோ அவன் மார்பில் அப்படியே சாய்ந்துகொள் என்று சொல்ல, பெண்ணவளுக்கு கூச்சம் வந்து தடுக்க...தன்னை கட்டுபடுத்த முடியாமல், மெதுவாக “கொஞ்ச...கொஞ்சம் தள்ளி நில்லுங்க” என்று ஹிஸ்கி வாய்ஸில் சொல்ல.....

அவள் நிலையை கண்டு உற்சாகமானவன்...தன் முழு

உடலையும் அப்படியே அவள்மேல் சாய்த்து நின்றான்…
சந்துரு அப்படி செய்வான் என்று எதிர்பார்க்காத மோகனா…..திகைத்து தன் மல்லிகை மொட்டு போன்ற அழகான கண்களால் விழி விரித்து அவனை பார்க்க..

அந்த அழகில் மயங்கியவன்…..அந்த மல்லிகை மொட்டின் மீது தன் இதழ்களை பதித்தான்…

அவன் முத்தமிடவும்……அவளின் இதயம் வேகமாக துடிக்க…..அதை தாங்க முடியாமல் தன் கண்களை மூடிக் கொண்டாள்…..

மெதுவாக கண்ணில் இருந்து இறங்கிய அவன் முரட்டு உதடுகள்…..அவளின் கன்னத்தில் பதிய மோகனாவிடம் சிறு அதிர்வு உண்டானது…
ஆனாலும்ம் அவள் அவனை விளக்கவில்லை,

சந்துரு தன் மாமன் மகன் என்றதாலோ, இல்லை நேற்று தன் மனதில் உள்ளதை அவனிடம் சொன்னதாலோ….என்னவோ சந்துரு தன்னவன் என்ற உரிமை உணர்வில்…அவனின் முத்தத்திற்கு அடிபணிந்து நின்றவளின் கை தானாக உயர்ந்து சந்துருவின் சட்டை காலரை இறுக்க பற்ற.. அவளின் மனநிலையை உணர்ந்தவன்.. தன் இதழை அவளின் இதழ் அருகே கொண்டு சென்று…… அமைதியாக

அவளையே பார்த்து நின்றான்..
எதையோ எதிர்பார்த்த மோகனா, அது நடக்கவில்லை என்றதும் சிறிது நேரம் கழித்து தன்னையும் அறியாமல், மப்ச் என்று உதடு சுழித்து மெதுவாக கண்திறந்து பார்க்க

அங்கே தன்னையே குறு குறு பார்வையால் பார்த்து சிரித்து கொண்டிருந்த சந்துருவை கண்டு,
வெட்கத்தால் குப்பென்று முகம் சிவக்க அதனை மறைக்கும் பொருட்டு அவன் மார்பில் சாய்ந்து அவன் நெஞ்சில் அடிக்க.... அவனுக்கோ அது பூவால் ஒத்தடம் கொடுத்து போல் இருந்தது..

“ஹனி” என்று அழைத்தவன் “எதுக்கு இப்போ என்னை அடிச்சே.. நான்தான் ஒண்ணுமே பண்ணலையே” என்றான் பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு.....

அப்படி அவன் சொன்னதும், அவன் முகத்தை பார்க்க, அவனின் பாவத்தில் கல்லத்தனமும் சேர்ந்து இருக்க..... மேலும் இரண்டு அடி அடித்தவள்.....”அது என்ன இப்போ திடீர்ன்னு ஹனின்னு சொல்லறிங்க” என்று கேட்டாள் பேச்சை மாற்றும் விதமாக

“அதுவா.. நேத்து ஒரு பாட்டல் தேன் சாப்பிட்டேன்.. அது அவ்வளவு தித்திப்பா இருந்து ஹனி அதான்”

என்றான்

ஐயோ ஏன் ஒரு பாட்டல் தேன் சாப்பிட்டீங்க….. கொஞ்சம் கொஞ்சமாதான் சாப்பிடணும். அப்பதான் உடம்புக்கு நல்லது" என்றாள்

"சரி நீயே சொல்லிட்ட இல்ல….. இனி எனக்கு எப்போ எப்போ தேன் சாப்பிட ஆசை வருதோ….. அப்போ அப்போ சாப்பிடுகிறேன் சரியா" என்று கிறக்கமாக சொல்ல,

"ம்ம் இது நல்ல பிள்ளைக்கு அழகு" என்றவள்.. சந்துருவின் குரல் மாற்றத்தில் அவனை நிமிர்ந்து பார்த்தவள்.. ஏதோ தோன்ற.. "ஆமா நேத்து எப்போ தேன் சாப்பிட்டீங்க" என்று புருவம் சுருக்கி கேட்க..

அவனோ "அதுவா நேத்து மொட்டை மாடியில் வச்சி நீதானே தந்த" என்றதும்..

"நானா….. நான் எப்போ தந்தேன்" என்று யோசித்தவளுக்கு அவன் எதை சொல்ல வருகிறான் என்று புரியவும்…… "ச்சி…. போங்க நீங்க ரொம்ப மோசம்" என்று அவனை தள்ளி விட்டு ஓட..

ஓடிய அவளை எட்டிபிடித்து பின்னல் இருந்து அணைத்துக்கொண்டவன், அவள் கழுத்து வளைவில் தன் நாடியை வைத்து “குட்டிமா, நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்....ஏன் தெரியுமா... அண்ணாகிட்ட எல்லாம் சொல்லிட்டேன்.....நம்ம விஷயத்தையும் சேர்த்து..... வீட்லயும் அத்தை மாமாவை பத்தி எல்லார்கிட்டயும் சொல்லியாச்சி.. அப்பா சித்தப்பா வந்ததும் அவங்ககிட்டையும் எடுத்து சொல்லி , அத்தையும் மாமாவையும் இங்க கூட்டிட்டு வரணும்” என்றவன்.....பவித்ரா.... அவளது தந்தை பேசியதை அண்ணனிடம் சொன்னதையும்... அண்ணன் தன்னிடம் சொன்னதையும் அவளிடம் சொன்னவன்.. “நாதன் அங்கிள் கொஞ்சம் ஒருமாதிரின்னு தெரியும் ஆனா இப்படி ஒரு குடும்பத்தையே கரம் வச்சு பிரிப்பார்ன்னு நினைக்கவே இல்ல” என்று வருத்தத்துடன் சொல்ல..

அவளுக்கும் அதை கேட்டு மிகவும் வருத்தமாக இருந்தது....ஏனென்றால் அவளின் ஆச்சியின் மூலம் உண்மை தெரிந்த பிறகு தன் தாயை கவனிக்க ஆரம்பித்தாள்.....ஒரு சில நேரங்களில் யாருக்கும் தெரியாமல் எதையோ நினைத்து கண் கலங்குவதும்.... கௌதமின் திருமணத்தின் போது ...ஐயர் தாய்மாமன் முறை செய்ய கூப்பிடும் போதும்....தன் குடும்பத்தின் நினைவில் தன் தாய் வாடுவதை கவனித்தவள் தானே.... அதனால்தான் தன் தாய்க்காகத் அவர்

சொந்தங்களை தேடி அவள் வந்ததே.....அவளும் இதை கேட்டு வருத்தம் இருந்தாலும்... சந்துரு வருத்தப்படுவதை விரும்பாதவள்..
அவன் புறம் அப்படியே திரும்பி.. அவன் உயரத்துக்கு எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட ,

அவனோ "ஏய் இது சீட்டிங்.... எனக்கு இங்க வேணும்" என்று தன் உதடை காண்பிக்க...

"ஆங் அதெல்லாம் முடியாது.. நான் போறேன் ப்ரி என்னை தேடுவா" என்றபடி நழுவ,

மோகனாவை விடாமல், மேலும் தன்னோடு இருக்கியவன், "நீ தரலன்னா என்ன நான் தந்துட்டு போறேன்" என்று சொல்லி அவளின் முகத்தை நோக்கி குனிய..

அவளோ "ஐயோ சந்துரு" என்று முகத்தை அங்கும் இங்கும் திருப்ப... அவளின் முகத்தை இறுக்கி பிடித்து அவளின் உதட்டின் அருகே கொண்டு செல்லும் போது....

"மோஹி" என்று ப்ரியா வெளியே கத்தும் சத்தம் கேட்க

“அய்யய்யோ” என்றபடி மோகனாவை தள்ளி விட்டவன்..

“ஹனி அவ வரதுக்குள்ள சீக்கிரம் இங்கயிருந்து போ..நீ இங்க இருக்கிறதை அவ பார்த்தான்னா.. என்ன கொன்னே போட்டுடுவா” என்று பதட்டமாக சொல்ல..

அவனை பார்த்து சிரித்தவள்.. “ஹா ஹா இதை.. நீங்க என்ன இந்த ரூமுக்குள்ள இழுக்கும் பொது யோச்சி இருக்கனும்” என்றவள் “நான் போக மாட்டேன்பா.. இங்கதான் இருப்பேன்” என்று சட்டமாக கட்டிலில் அமர்ந்தாள்..

மோகனா கட்டிலில் அமரவும்.. அவளை பார்த்தவன்..” தன்னவள் அவன் அறையில் அதுவும் அவனின் கட்டிலில் அமர்ந்திருக்கிறாள் என்பதில் அவனுக்கு ஏதேதோ எண்ணங்கள் தோன்ற….தன்னை மறந்து அவளிடம் நெருங்கினான்….

அவனது முகமாற்றத்தை கண்டு அவனின் மனநிலையை உணர்ந்தவள்….உடனே எழுந்து நாக்கை துரத்தி அவனுக்கு அழகு காட்டிவிட்டு…..பிரியா பார்க்கும் முன் வெளியே ஓடி சென்று விட்டாள்…

மோகனாவின் செய்கையில் மனம்விட்டு
சிரித்தவனின் நெஞ்சமெல்லாம் சந்தோஷத்தில்
திளைத்தது....
.....

அதிகாலை மணி நான்கு முப்பது.. விசாலாட்சி ஆச்சி
தூக்கம் வராமல் புரண்டு படுத்து கொண்டிருந்தார்....
என்னவென்று தெரியாமல் அவர் மனது
நிலையில்லாமல் தவித்துக் கொண்டிருந்தது....

அறையை விட்டு வெளியே வந்தவர் தாகம் எடுக்க..
மெதுவாக டைனிங் டேபிள் அருகில் வந்து ஜக்கில்
வைத்திருந்த தண்ணீரை கிளாசில் ஊற்றி குடித்தார்.....
தூக்கம் கலைந்து விட.. மெதுவாக வரவேற்பு
அறைக்கு வந்து சோபாவில் அமர்ந்து கண் மூடி
அமர்ந்தார்....பின் என்ன நினைத்தாரோ சோபாவில்
இருந்து எழுந்தவர் தன் அறைக்கு விரைந்து.. கணவர்
வெற்றிவேல் பூபதியின் படத்தின் முன் சென்றவர்,
அதை தொட்டுக் கொண்டே

“என்னங்க என்னன்னு தெரியலை மனசெல்லம்
அடிச்சிக்குது..... இது நல்லதுக்கா இல்ல
கெட்டதுக்கான்னு தெரியல.. எதுனாலும் நீங்க எனக்கு
துணையாக இருக்கனும்” என்றவர்..

“ பேத்தியை கண்ணுல காட்டிட்டீய, நம்ம பொண்ணை எப்போ பார்ப்பேன்னு இருக்குங்க.. சீக்கிரம் கூட்டிட்டு வாங்க.. இல்ல இல்ல நீங்க எங்க கூட்டிட்டு வந்திய. என் பேரன் தான் கூட்டிட்டு வந்தான்.. அவனே அவங்க அத்தையையும் கூட்டிட்டு வந்துருவான்.. நீங்க இப்படி சிரிச்சிட்டே இருங்க.. உங்களுக்கு என்ன” என்றவருக்கு இப்போதுதான் மனது லேசாக இருந்தது..

விசாலாட்சி ஆச்சி எப்போதும் இப்படித்தான் அவருக்கு மனதுக்கு சஞ்சலமாக இருந்தால் . உடனே தன் கணவரின் போட்டோ முன்பு நின்று அவரிடம் நேரில் பேசுவது போல் பேசிவிடுவார்… அந்த போட்டோவில் இருக்கும் கணவரின் சிரிப்பு அவருக்கு ஆறுதல் அளிப்பது போல் இருக்கும்…

சிறிதுநேரம் படத்தையே பார்த்திருந்தவரின் காதில் கதவு தட்டும் ஓசை கேட்க.. இந்த நேரத்தில் யார்?…. என்று யோசித்தப்படி மெல்ல நடந்து கதவின் அருகே சென்றவர்.. கதவில் கைவைத்து மெதுவாக திறந்தவர், அங்கு நிற்பவர்களை பார்த்து, அசையாமல் நின்று விட்டார்.. ஏன் என்றால் அங்கு நின்றது அவரது மகள் தேவி…

தேவியோ “அம்மா” என்று கண்ணீர் மல்க அழைக்க.... நின்ற இடத்திலேயே அப்படியே மயங்கி சரிந்தார் விசாலாட்சி ஆச்சி..

மயங்கிய தன் தாயை தர்மலிங்கம், ராஜலிங்கம் மற்றும் பார்வதி மூவரும் அம்மா என்று கத்தியபடி வேகமாக வந்து தாங்கி பிடித்தனர்..

மூவரும் கத்திய சத்தத்தில்.. எல்லோரும் விழித்துக்கொண்டு அவரவர் அறையில் இருந்து வெளியே வந்தனர்..

முதலில் வந்தது பிரியாவும் மோகனாவும் தான், மோகனாவோ இங்கு அதுவும் இந்த நேரத்தில் தனது தாய் தந்தையை பார்த்ததும் அதிர்ந்தவள் , அம்மா என்று அழைத்தபடி வேகமாக தாயின் அருகில் செல்ல

அதற்குள் விசாலாட்சி ஆச்சியை அவரின் அறைக்கு தூக்கி சென்று படுக்க வைத்தனர்...எல்லோரும் ஆச்சியை சுற்றி நிற்க....பிரபா தண்ணீர் எடுத்து வந்து ஆச்சியின் முகத்தில் தெளித்தார்...

மெதுவாக கண்விழித்த ஆச்சி.. தன் பார்வையை

சுழல விட….. அவரின் தேடலை புரிந்து கொண்ட அவரது மகள் தேவி என்ற பார்வதி தேவி.. தாயின் அருகில் சென்று அவரது கையை பற்றிக் கொண்டார்….

அந்த தாயோ தன் மகளை கண்டு கொண்ட சந்தோஷத்தில், கண்களில் நீர் வழிய மகளின் கன்னம், முகம், கை என்று தடவியவர்,

“வந்துட்டியா என் தங்கம் , நான் இந்த உலகத்தை விட்டு போறதுக்குள்ள வந்துட்டியா.. இப்பவாவது இந்த அம்மாவை பார்க்கணும்ன்னு வந்துட்டியா.. எங்க உன்னை பார்க்காம கண்ணை மூடிடுவேன்னோன்னு நினைச்சேன் தேவிமா” என்று மனவருத்தத்துடன் சொன்னவர்..

“இனி கவலை இல்லை என் பொண்ணை பார்த்த சந்தோஷத்தில் நிம்மதியா கண்ணை மூடுவேன்” என்று உணர்ச்சிபெருக்கில் தனது மகளை கட்டிக்கொண்டு அழ…

அங்கு சுற்றியிருந்தோர் அனைவரும் இந்த பாசத்தை கண்டு கண்ணில் நீர் வழிய நின்றிருந்தார்கள்….பிரியாவை தவிர….அழுது பழக்கமில்லாத அவளுக்கு இதை கண்டு எப்படி ரியாக்ட் செய்வது ன்று புரியவில்லை……

“ஆச்சி” என்று அதட்டிய சபரிஷ்.. அவர் அருகில் அமர.. சந்துரு மறுபக்கம் வந்து அமர்ந்தான்…

அப்பொழுது தான் தேவி கவனித்தார் சந்துருவை
“சந்துரு நீ எப்படி இங்க” என்று திகைப்புடன் வினவ,

“தேவி அவன் என் சின்ன பையன்” என்று
லட்சுமியிடமிருந்து பதில் வந்தது…..

தன் அண்ணணின் மனைவியை பார்த்த பார்வதி….”மைனி, எப்படி இருக்கீங்க” என்று கேட்டவர்… அப்பொழுதுதான் தன்னை சுற்றி கவனித்தார்….தன் குடும்பத்தின் மத்தியில் தன் மகளும் இருப்பதை..

குழப்பத்துடன் எல்லோரையும் பார்க்க.. அவர் பார்வையை புரிந்து கொண்ட சந்துரு.. அவர் அருகில் சென்று.. “அத்தை நான் எல்லாவற்றையும் விரிவா சொல்றேன்” என்றவன்

“நான் சந்துரு உங்க முதல் அண்ணனோட மூன்றாவது மகன்,பாட்டிக்காக உங்களை தேடித்தான் நான் மும்பை வந்தேன் சாய்பாபா கோவிலில் வச்சி மாமா, மோகனா இருவரையும் பார்த்தேன்” என்றவன் தன் பேச்சை நிறுத்தி ஈஸ்வரை பார்த்துக் கொண்டே ,

“மாமா மனசுல என்ன இருக்கு என்று தெரியாமல் , எப்படி உங்களை நெருங்குவது…. அதான் தள்ளி இருந்தேன்..அப்போதான் நான் சேர்ந்த காலேஜில் மோகனாவை பார்த்தேன் சரி மோகனாகிட்ட பேசலாம் என்றால் அவ என்னை திரும்பி பார்த்தா தானே” என்று மோகனாவை பார்க்க…

அவளோ “உன்னை என்ன பண்ணுறேன் பார்” என்பதுபோல் பார்த்துக்கொண்டிருந்தாள்

ரெண்டு வருஷம் அங்கே இருந்தும் உங்களை நெருங்க தைரியமில்ல, அப்போதான் இந்த காலேஜ் டூர் பத்தி ப்ரின்ஸி கேட்டதும் சந்தோசமா எல்லாம் நான் பார்த்துகிறேன்னு சொன்னேன்….. ஏன்னா மோகனாவை முதல்ல இங்க வரவச்சிட்டா….அவ மூலம் உங்களையும் இங்க கூட்டிட்டு வந்திடலாம் என்ற நம்பிக்கைதான்”…

“இங்க வந்தபிறகு எப்படி மோகனாவை இங்க நிறுத்தி வைக்கிறது என்று யோசிக்கும் போதுதான்.. பேபிக்கு வீசிங் பிராபளம் இருக்கிறதை சொல்லி பேபியை போகவிடாம பண்ணினா மோகனாவும் போகமாட்டான்னுதான் , பேபியோட ஆசையக்கூட என் சுயநலத்துக்காக தடுத்துட்டேன்” என்றவன் இப்பொழுது பிரியாவை பார்க்க.. அவளோ தனது நண்பனை பார்த்து சிரித்துக்கொண்டிருந்தாள்..

ஆமா தேவி நேத்துதான் எங்களுக்கு மோகனா யாருன்னு தெரிஞ்சிது.. ஆனா அத்தைக்கு முன்னாடியே தெரியும் போல" என்று லட்சுமி சொல்ல..

"அப்படியா அம்மா" என்று தன் தாயை பார்த்து பார்வதி கேட்க,
அன்று பிரியா தன்னிடம் சொன்னதை சொன்ன விசாலாட்சி ஆச்சி மோகனா அவளது ஆச்சிக்கு செய்து கொடுத்த வாக்கை பற்றி சொல்லவும்.....

அதுவரை எல்லோர் பேசுவதையும் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஈஷ்வர்....தன் தாயின் சொல்லுக்கு கட்டுபட்டு நடந்த மோகனாவை எண்ணி பெருமைபட்டவர்....அவளிடம்
" ஏன்டாம்மா அதான் தமிழ் நாட்டுக்கு வர அவ்ளோ ஆசை பட்டியா" என்று கேட்க அவள் ஆமாம் என்று தலையாட்ட..

அவளை பார்த்து சிரித்தவர் "உனக்கு இந்த விஷயம் எதுவும் தெரியாதுன்னுதான் உங்கிட்ட ஆர்கியு பண்ணாம நான் உடனே சம்மதிச்சேன்டா.." என்று சொல்லவும் அவர் தோளில் சாய்ந்தவள்

"ஆச்சி என்கிட்ட சொல்லும்போது.... உங்ககிட்ட

அவங்க சொன்னத சொல்லகூடாதுன்னு சொன்னாங்கப்பா.. அதுவும் இல்லாம ப்ரிதான் எனக்கு கண்டுபிடிச்சி சொன்னா.. என்று... மோகனா சொன்னதும்

தர்மலிங்கமோ மனதுக்குள் "அன்னைக்கு இந்த பிரியா பொண்ணு எதுக்கு திட்டுச்சின்னு இப்பதானே புரியுது..ஹப்பா..... நல்லவேலை திட்டினதோட நிப்பாட்டுச்சு..... இல்லன்னா தர்மா உன்னோட நிலைமை என்னவாகிருக்கும்" என்று புலம்பினார் அவர்

அதுக்கு அப்புறம்தான் சந்துருகிட்ட கேட்டேன்... அவங்களும் எல்லா உண்மையும் சொன்னாங்க.. மாமா வெளியூரில் இருந்து வந்ததும் , அவங்க கிட்ட பேசி உங்களை இங்க கூட்டுட்டு வரணும் என்று நினைச்சிருந்தோம்"... என்றவள்

"ஆமா நீங்க எப்படி இங்க" என்று தன் தந்தையை கேள்வியாக பார்க்க,

அப்பொழுதுதான் எல்லோரும் அதே கேள்வி மனதில் எழுந்தது.... பார்வதியும் ஈஸ்வரும் இங்கு எப்படி அதுவும் இந்த நேரத்தில்.. என்று

“ஆமா தேவிமா நீங்க எப்படி திடீரென்று வந்தீங்க” என்று ஆச்சி கேட்க..

“அண்ணனுங்க ரெண்டு பேரும் மும்பை வந்து, அவருகிட்ட மன்னிப்பு கேட்டாங்க அம்மா….. அவருக்கு மனசு தாங்கல… எவ்ளோ பெரிய ஆளுங்க, என்கிட்ட வந்து மன்னிப்பு கேட்கிறதா..
அதுவும் இல்லாம.. நீங்க அன்னைக்கு அப்படி நடந்துக்கலன்னா இன்னைக்கு நான் இந்த நிலைமைக்கு வந்துருக்கமுடியாது .. உங்க மேல வருத்தம் இருந்ததுதான் ஆனா அதுவும் இப்போ இல்லை..
மோகனா தமிழ் நாட்டுக்கு போகணும் என்றபோது கூட வேண்டாம் என்று சொன்னேன்….. ஏன்னா இப்படி ஒரு உறவு இருக்கிறது தெரிஞ்சி அதுவும் எந்த மாதிரி நிலையில் தன்னோட அப்பாவும் அம்மாவும் இந்த வீட்டை விட்டு வெளியேறி இருக்காங்கன்னு நினைச்சு உங்க மேல அவளுக்கு வெறுப்பு வந்துடகூடாதுன்னு நினைச்சுதான் மறுத்தேன்.. ஆனா அவ எல்லாம் தெரிஞ்சிதான் இங்க வந்துருக்கான்னு இப்போ தானே தெரியுது” என்று பார்வதி ஆரம்பித்து ஈஷ்வர் முடிக்க,
இப்பொழுது எல்லோரும் தர்மலிங்கத்தையும் ராஜ லிங்கத்தையும் பார்த்தனர்..

இவ்வளவு நாள் இல்லாமல் இப்போ திடீர்னு தங்கச்சி மேல பாசம் வந்து .. அவங்களை தேடி போய்

மன்னிப்பு கேட்டு கூட்டிட்டு வரணும் என்றால் சிந்திக்க வேண்டிய விஷயம் இல்லையா.. அதுவும் வீட்ல யாருகிட்டையும் சொல்லாம.. வெளியூருக்கு போறோம் அப்படின்னு.. சொல்லிட்டு வேற போயிருக்காங்க.. என்று கேள்வியாக இருவரையும் பார்க்க..

“அம்மா எங்களை நீங்க மொதல்ல மன்னிக்கணும்.. உங்களை ரொம்ப அழ வச்சிட்டோம்.. எங்களால பிரிஞ்ச குடும்பத்தை நாங்களே சேர்த்து வச்சிட்டோம்.... இதுவரைக்கும் எங்களால நீங்க கஷ்டபட்டதுக்கு எங்களை மன்னிச்சிருங்கம்மா” என்றதும் தாங்கவில்லை விசாலாட்சிக்கு....

“சரி விடுங்கடா.. இப்போதான் தேவிமாவை கூட்டிட்டு வந்துட்டீங்களே... இனி நமக்கு எல்லாம் நல்ல காலம் தான்.. இனி யாரும் அழக்கூடாது.. சந்தோசமா இருக்கனும்” என்றார்..

ஆனால் சபரிஷால் இதை சாதாரணமாக விட முடியவில்லை.. தந்தையிடம் இதை பற்றி கேட்க வேண்டும் என தீர்மானித்தான்..

“ஆமா என் பெரிய பேரனை ஏன்மா கூட்டிட்டு வரலை” என்று பார்வதியிடம் ஆச்சி கேட்க..

“இங்க வந்த சந்தோஷத்துல அவனை பத்தி சொல்ல மறந்துட்டேன்..

அவனுக்கு கல்யாணம் ஆயிடுச்சி.. என் மருமக பேர் ராதிகா.. அவ பேர்காலத்துக்காக அவங்க அம்மா வீட்டுக்கு போயிருந்தா.. அவளுக்கு நேத்து ராத்திரிதான் ஆண்குழந்தை பிறந்திருக்கு” என்றதும் தோழிகள் இருவரும் “ஹே…. வாவ்” என்று கத்தவும் , சபரிஷ் அவர்களை பார்த்து முறைக்கவும் அமைதியாகி விட்டனர்….

“அதுனாலதான் அவன் வரலமா.. நாங்க குழந்தையை பார்த்துட்டு நைட் பிளைட்க்கு இங்க கிளம்பிட்டோம்… இன்னும் ஒரு வாரத்துல உங்களை பார்க்க வந்துருவான்..
உங்க சின்ன பேரனுக்கு பரீட்சை….லீவு போட முடியாது.. அதான் அவனும் வரமுடியலை….”

“ரொம்ப சந்தோஷமா இருக்குமா” என்ற ஆச்சி.. ப்ரபாவை அருகில் அழைத்து.. “தேவிமா, இது உன் சின்ன அண்ணி.. இவ மேகா அவங்க பொண்ணு.. இது செல்வி உன் பெரியண்ணன் பொண்ணு” என்று எல்லோரையும் அறிமுக படுத்தியவர்..

“தர்மா நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்டா , இப்போ எனக்கு திருச்செந்தூர் முருகனுக்கு நன்றி சொல்லணும் போல இருக்கு…. நாம எல்லோரும் குடும்பத்தோட போய் முருகனை தரிசிக்கனும் என்று ஆசையாக இருக்கு” என்றதும்..

“கண்டிப்பா போகலாம்” என்று உடனே ஒத்துக் கொண்டனர் லிங்கம் சகோதரர்கள்…

“அதுக்கு அப்புறம் என் ராசுக்கு சீக்கிரம் பொண்ணு பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கனும்” என்று திடீரென்று சொல்ல..

அதை கேட்டு அதிர்ந்த பார்வதிதேவி “அம்மா என்ன சொல்றீங்க…. அதான் அத்தை மோகனாகிட்ட வாக்கு கேட்டாங்களாமே…. அவ இருக்கும் போது ஏன் சபரிஷ்க்கு வெளியே பொண்ணு பாக்கணும்” அத்தை எடுத்த முடிவு அதை மாற்ற கூடாது மோகனாவுக்கும் சபரிஷுக்கு தான் கல்யாணம் என்று பார்வதி உறுதியுடன் சொல்லவும்…

என்னாது என்று அதிர்ந்து நோக்கினாள் ப்ரியா…

*****

சுவாசம் தொடரும்...

சுவாசம் 20

ஆயிரம் பாதச்சுவடுகள்
இருந்தாலும்
என்னவனின
பாதசுவடுக்காக ஏங்குகிறது
என் பாத சுவடுகள்!!

இரவு வெளியே தோட்டத்தில் அனைவரும் கூடி இருந்தனர்...தேவியை சுற்றி அமர்ந்து பெண்களும், ஈஸ்வரை சுற்றி ஆண்களும் அமர்ந்து தொழில் மற்றும் மற்ற விஷயங்களை பேசிக்கொண்டிருந்தனர்...

மோகனாவும் பிரியாவும் கௌதமிடம், குழந்தை பற்றியும் ராதிகாவின் நலனை பற்றியும் மாறி மாறி பேசிக்கொண்டிருந்தனர்.. செல்வி சாயங்காலமே தன் புகுந்த வீட்டுக்கு சென்றிருந்தாள்.... மேகாவிற்கு நாளை கல்லூரி இருப்பதால் சீக்கிரமாக படுக்க போய்விட்டாள்..

தன் குடும்பம் மீண்டும் இணைந்த சந்தோஷத்தில், மனதில் எழுந்த நிம்மதியுடன் அவர்களை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த விசாலாட்சி ஆச்சியின் பக்கத்தில் வந்து அமர்ந்தார்கள் சபரிஷும் சந்துருவும்....

தன் ஆச்சியின் முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சியை கண்ட இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு புன்னகைத்துக் கொண்டனர்.....பின் சபரிஷ் அவரிடம் "ஆச்சி இப்போ உங்களுக்கு சந்தோஷமா" என்று கேட்க

இருவரின் கண்ணத்தையும் தடவியவர்.. "எனக்கு மனசெல்லாம் நிறைஞ்சு இருக்கு ராசு.. இனி எனக்கு என்ன ஆனாலும் கவலையில்ல.... நான் நிம்மதியா கண்ணை மூடுவேன்" என்றவரை.. ஆச்சி என்று அதட்டினான் சபரிஷ்.

"இதென்ன பேச்சு...எப்ப பார்த்தாலும் இதையே சொல்றீங்க காலையிலும் அப்படித்தான் சொன்னீங்க..

இனி அந்த மாதிரி பேச கூடாது… சொல்லிட்டேன்” என்று சொல்லவும்..

நான் உங்ககிட்ட முதல்ல மன்னிப்பு கேட்கணும் ஆச்சி” என்றான் சந்துரு…

“எதுக்கு பேராண்டி”

“அத்தை குடும்பத்தை கண்டுபிடிச்சதை நான் உங்கிட்ட முன்னாடியே சொல்லாம மறைச்சிட்டேன்.. என்ன மன்னிச்சிடு பியூட்டி” என்று சந்துரு சொல்ல..

அவனை கண்டு குறும்புடன் சிரித்த ஆச்சி.. “பின்ன அப்படி ஒரு தேவதையை பார்த்தா.. மயங்கி அவ பின்னாடி சுத்தாம, இந்த கிழவி நியாபகமா வரும்” என்று மோகனாவை சுட்டிக் காட்டி சொன்னவர்.. “சரி சரி இனி அந்த பேச்செல்லாம் வேண்டாம்.. இப்போதான் எல்லோரும் ஒன்னு சேர்ந்தாச்சே… ராசு நாளைக்கு திருச்செந்தூர் போகணும் என்று சொன்னேனே, எல்லா ஏற்பாடும் பண்ணிட்டியா” என்று ஆச்சி கேட்க..

“அதெல்லாம் எப்போவே பண்ணிட்டேன்.. பூஜைக்கும் சேர்த்துதான் ஏற்பாடு பண்ணியிருக்கேன்.. அதுனால காலையிலே எல்லோரும் நேரத்துக்கு கிளம்பினாதான் சரியா இருக்கும்” என்றதும்..

அதை கேட்ட ஆச்சியோ…. அனைவரையும் பார்த்து “பேசினது போதும் எல்லோரும் தூங்க போங்க.. காலையில் வெள்ளனமே கிளம்பனும்” என்றதும் எல்லோரும் அவரின் பேச்சுக்கு அடிபணிந்து வீட்டினுள் சென்றனர்…

ஆனால் ப்ரியா மட்டும் மோகனாவிடம், “நீ போ நான் கொஞ்சநேரம் கழிச்சி வரேன்” என்றதும்….

முதலில் அவளை புரியாத பார்வை பார்த்த மோகனா, பின் அவள் மனநிலையை உணர்ந்து, “சரி பிரி சீக்கிரமா வா…ரொம்ப நேரம் பனியில இருக்காதே…. சரியா” என்றதும்….

சரி என்று தலையாட்டிய ப்ரியா, அப்படியே நடக்க தொடங்கினாள்…..அவள் மனமோ அலைப்புறதலுடன்….காலையில் நடந்த சம்பவத்தை அசை போட்டது…..

பார்வதி சபரிஷ்க்கு மோகனாவை பேசி முடிக்கலாம் என்றவுடன், அதை கேட்டு அதிர்ந்த மூவரையும் பார்த்த பாட்டி ஒரு முடிவுடன்
“தேவிமா உன் பொண்ணை பெரியவனுக்குதான் கட்டி கொடுப்பியா…..ஏன் சின்னவனுக்கு கொடுக்கமாட்டியா” என்றவர் , சந்துரு மோகனா இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புவதை சொன்னதும்……பார்வதி அப்படியா என்பது போல் மோகனாவை பார்க்க, அவளோ அமைதியாக தன் தாயை பார்த்துக் கொண்டிருந்தாள்…

அவள் மௌனத்திலேயே அவளின் மனதை உணர்ந்த பார்வதி தன் தாயிடம் , “அம்மா என் பொண்ணு இந்த வீட்டுக்கு மருமகளா வந்தா போதும், அது யாரா இருந்தா என்ன” என்றதும் தான் மூவருக்கும் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது….

இதையெல்லாம் நினைத்து பார்த்தவள்……”நாளைக்கு கோவில்ல வச்சி எப்படியும் என் மனதில் உள்ளதை சபரிஷ்கிட்ட சொல்லிடனும்….. எல்லோரும் என் ரிஷிக்கு கல்யாணம் பண்ணுறதுலேயே குறியா இருக்காங்க… அன்னைக்கு என்னன்னா.. பவின்னு ஒரு பொண்ணு வந்தா…. சரி அதை சபரிஷே சமாளிச்சிட்டாங்கன்னு நிம்மதியா இருந்தா…..இது அந்த கடவுளுக்கே பொறுக்களையே….. பார்வதி

ஆன்ட்டி ஒன்னும் தெரியாம.....மோகனா இருக்கும் போது சபரிஷ்க்கு எதுக்கு வெளியே பொண்ணு பார்க்கணும்ன்னு ஒரு குண்டை தூக்கி போடுறாங்க... நல்ல வேலை ஆச்சிக்கு சந்துரு மோகனா விஷயம் தெரிஞ்சதால காலைல அதையும் சமாளிச்சாச்சு....

இதுக்கும் மேல என்னால பொறுமையா இருக்க முடியாது..... யாரு எந்த நேரத்துல எனக்கு போட்டியா வந்துடுவாங்கன்னு பயந்து பயந்து இருக்கிறத விட.....என்னவானாலும் சரி என்னோட காதலை அவர்கிட்ட சொல்லிடனும்" என்று தீர்மானம் எடுத்தவுடன்தான் அவளுக்கு மனது லேசாக இருந்தது.....அதே துள்ளளுடன் அவனின் நினைவுகளோடு உறங்க சென்றாள் பிரியா.....

இவள் மனதை அவனிடம் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்தாளே தவிர, அவன் மனதில் அவளை பற்றிய என்ன உணர்வு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள தவறியது...அவளின் குற்றமா...இல்லை விதியின் விளையாட்டா?.....அவன் மனது அறியும்போது அவளின் நிலை?????

.....

மறுநாள் காலையில் அந்த அரண்மனை பரபரப்பாக

காணப்பட்டது…

“பிரபா எல்லாம் எடுத்து வச்சிட்டியா, அப்புறம் அங்கப்போய் அது இல்ல இது இல்லன்னு சொல்லக்கூடாது, எல்லாம் சரியா இருக்கான்னு இன்னொரு வாட்டி செக் பண்ணிடு” என்று லட்சுமி பரபரப்பாக சொல்ல,
“அக்கா எல்லாம் எடுத்து வச்சிட்டேன் ஒன்னும் மறக்கலை…இப்ப நீங்க ஒரு இடத்துல உட்காருங்க….எதுக்கு இவ்வளவு பரபரப்பா இருக்கீங்க…..” என்று பிரபா சொல்ல..

“அதெல்லாம் ஒன்னும் இல்ல பிரபா…..எல்லாம் நல்லபடியா நடக்கனும் என்றுதான்…..சரி சரி எல்லோரும் கிளம்பியாச்சா பாரு” என்றதும்

“சரிக்கா” என்று சொன்னவர்…. பிரியாவும் மோகனாவும் தங்கியிருக்கும் அறையை நோக்கி செல்லவும், தோழிகள் இருவரும் தயாராகி வெளியே வரவும் சரியாக இருந்தது…

ஒரே கலரில் அனார்கலி நெட் சுடிதார் அணிந்து தேவதை போல் வந்தவர்களை பார்த்து புன்னகைத்த

ப்ரபா, “ரொம்ப அழகா இருக்கீங்கம்மா…. என் கண்ணே பட்டுடும் போல இருக்கு…என்று கூறிக் கொண்டே திருஷ்டி கழித்தவர்…. ஆனா “கோவிலுக்கு போறோமே சேலை காட்டியிருக்கலாம் இல்ல” என்று சொல்ல..

“ஹா ஹா அது மட்டும் வேணாம் ஆன்ட்டி, என்னை இந்த உலகத்தையே சுற்றி வர சொல்லுங்க , நான் சந்தோஷமா செய்வேன், ஆனா இத மட்டும் செய்ய சொல்லாதீங்க” என்று ப்ரியா சொல்லவும்….அதையே மோகனாவும் ஆமோதித்தாள்….

மடிப்படியில் யாரோ இறங்கி வரும் அரவம் கேட்க…. சட்டென்று பிரியா திரும்பி பார்க்க.. அங்கே சபரிஷ் வேட்டி சட்டையில் அவனின் கம்பீரம் குறையாமல் மிடுக்காக வந்துகொண்டிருந்தான்..

அவனின் கம்பீரத்தை மனதுக்குள் ரசித்தவள்..
“இவ்ளோ அழகா இருந்து என்னை கொல்றடா” என்று செல்லம் கொஞ்சியவள், சந்துருவை தேட..

“அம்மா எல்லோரும் கிளம்பியாச்சா” என்று கேட்டுக்கொண்டே வந்த சந்துருவின் பார்வை மோகனாவை மொய்க்க… சந்துருவின் பார்வையை உணர்ந்து , முகம் சிவக்க நின்றவளை பார்த்த ப்ரியா..

“மோஹி , ரூஜ் தடவாமலே இவ்ளோ சிவப்பாயிடுச்சு உன் முகம்…. ம்ம்ம்ம் நடத்து நடத்து என்று கேலி செய்ய..

“ச்சு போடி” என்று அழகாக வெட்கபட்டுக்கொண்டே ப்ரியாவை அழைத்து கொண்டு வெளியே வர அங்கே இரண்டு கார்கள் நின்றிருந்தது…. ஒன்று பெரியது.. இன்னொன்று ஜாகுவார் சபரிஷின் வண்டி…எதில் ஏறுவது என்று குழப்பமாக இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள,

இருவரின் குழப்பத்தை போக்கவே பெரிய காரில் அனைத்து பெரியவர்களும் ஏறிக் கொள்ள,
“என்ன பேபி வண்டில ஏறாம பார்த்துட்டு நிக்கிறீங்க.. ம்ம் ஏறுங்க என்று பின் பக்க கதவை திறக்க மோகனா முதலில் அமர்ந்தும்.. பிரியாவும் அவள் பக்கத்தில் அமர.. சந்துரு முன் இருக்கையில் சென்று அமர்ந்தான்..
ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்த சபரிஷ்….திருச்செந்தூரை நோக்கி தன் காரை கிளப்பினான்..

பிரியா வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டே

வந்தாலும் சபரிஷை ரிவ்யூ கண்ணாடி வழியாக சைட் அடிக்க தவறவில்லை.....இந்த ஜோடி இப்படி இருக்க,

சந்துருவும் மோகனாவும் ஒருவரை ஒருவர் பாராமல் பார்த்துக் கொண்டு அவர்களுடைய லூக்கிங் ஆப் கோபியாவை தொடர்ந்துக் கொண்டிருந்தனர்.....

சபரிஷோ "என்னாச்சி இந்த ப்ரியாக்கு அமைதியா வரா...ஒருவேளை திருந்திட்டாளோ" என்று அவளை பற்றி நினைக்கும் வேளையில்....நீ எப்படி என்னை அமைதி என்று சொல்லலாம் என்பது போல் உடனே பேச ஆரம்பித்தாள்

"டேய் பக்கி இது என்னடா காரு.. டப்பா காரு ஒரு பாட்டு இல்ல.. ஒன்னும் இல்ல.. எல்லோருமே இப்படி அமைதியா வந்தா செம போரா இருக்குதுல்ல" என்று ப்ரியா சொல்லவும்

தன் காரை டப்பா கார் என்று அவள் சொல்லவும்....

"அதானே பார்த்தேன்...இவளாவது அமைதியா இருக்கிறதாவது...." என்று நினைத்தவன்..

“எனக்கு பாட்டு கேட்கறதுக்கு நேரம் இல்லை என்று சொல்லு சந்துரு” என்று தன் காரை குறை சொன்ன கடுப்பில் சந்துருவிடம் கூறுவதை போல் அவளிடம் கூற

“ஏன் இதை அய்யா என்கிட்ட நேரா சொல்லமாட்டராமா” என்று மனதுக்குள் கோபம் கொண்டாள் ப்ரியா..

“உன் பிரெண்டுக்கு பாட்டு கேட்கறது தான் பிடிக்கும்ன்னா….ஒன்னு பண்ணலாம்.. சந்துரு”

“என்னன்னு கேளு சந்துரு” என்று அவளும் சந்துருவை நடுவில் வைத்து பேச..

தங்களின் லூக்கிங்ஆப் கோபியாவில் இருந்து வெளியே வந்த இருவரும் இவர்களை கவனிக்க ஆரம்பித்தார்கள்..

“உன் பிரெண்ட்டை கொஞ்சம் பாட சொல்லு , நம்மளுக்கு நல்லா நேரம் போகும்” என்று உதட்டில் பூத்த சிறு புன்னகையை அவளிடம் காட்டாது

சொல்ல..

அவன் தன்னை கிண்டல் செய்கிறான் என்றதும்..
ரிவ்யூ கண்ணாடியில் அவனை பார்த்து வெவ்வே
என்று அழகு காட்ட.....சந்துரு என்ன நடக்கிறது என்று
புரியாமல் முழிக்க, இப்பொழுது மோகனா இவர்கள்
இருவரையும் சுவாரசியமாக பார்க்க ஆரம்பித்தாள்....

பிரியாவின் செய்கையில் வாய்விட்டு சிரித்தவன்
வேறு ஏதும் பேசாமல்..காரை வேகம் எடுக்க.. பத்து
நிமிடத்தில் கோவிலை அடைந்து பார்கிங்கில் காரை
நிறுத்தியவன்.... இறங்க.. மற்ற மூவரும் அவனை பின்
தொடர்ந்து இறங்கினர்...

பெரியவர்கள் இருந்த காரும் அதற்க்குள் வந்து சேர
அனைவரும் கோவிலை நோக்கி சென்றனர்..
முழுமுதற் கடவுளான பிள்ளையாருக்கு விடலை
தேங்காய் உடைத்து அவரை
வணங்கிவிட்டு...ஆனைமுகத்தின் தம்பியான
முருகனை தரிசிக்க சென்றனர்.

இருபுறமும் கடைகளை வேடிக்கை
பார்த்துக்கொண்டே வந்த ப்ரியா, தூரத்தில் தெரிந்த
கடல்அன்னையை கண்டதும் குஷியாகி “வாவ்”
என்றபடி வேகமாக மோகனாவின் கையை பிடித்துக்
கொண்டு ஓட..

“ஹே மெதுவா போ பிரியா சரிவா இருக்குல்ல
உருண்டுட போற” என்று சபரிஷ் இயல்பாக
கூறிவிட்டு நடக்க

சட்டென்று நின்று விட்டாள் ப்ரியா

“என்னாச்சு பிரி….வா போகலாம்” என்று மோகனா
அழைக்க,

“நீ முன்னாடி போ மோஹி…. எனக்கு கால் வலிக்குது….
நான் மெதுவா நடந்து வர்றேன்”.. என்றவள்
அதற்கேற்றார் போல் மெதுவாக நடக்க ஆரம்பிக்க…

மோகனாவும் சரி என்று சொல்லிவிட்டு முன் செல்ல..
பிரியா சபரிஷுடன் இணைந்து நடந்தாள்
அவளுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது….

தன்னவனுடன் இணைந்து காலம் முழுவதும் நடை
போட வேண்டும் என்ற கனவுகளுடன் அவன்
தன்னுடன் வருகிறானா என்று கவனிக்காமல் அவள்
நடக்க,

இதை அறியாத சபரிஷோ அவள் வருகிறாளா இல்லையா என்று கவனிக்காமல முன்னே சென்றுவிட்டான்....

கடலில் கால் நனைத்து விட்டு திரும்பிய அனைவரும் பிரியாவை காணாமல் பதட்டத்துடன் தேட.....பார்வதி மோகனாவிடம் " அவ உன் கூடதானே வந்தா" என்றவர் சுற்றும் முற்றும் பார்க்க,

சபரிஷும் பதட்டமாக வேகமாக திரும்பி அவளை தேட.....சற்று தூரத்தில் தனியாக நின்று கொண்டிருந்தவளை கண்டு கொண்டவன், அவளை பார்த்து கையசைத்து வா என்பது போல் அழைக்க

"இல்ல நான் வரமாட்டேன்" என்று இடம் வலமாக தலையாட்ட..
அவள் அருகில் சென்றவன்.. "ஏன் மகாராணி வர மாட்டீங்களோ.. நான் வேணும்னா தூக்கிட்டு போகவா" என்று நக்கலாக கேட்க..

அவளோ சிறிதும் யோசிக்காமல்.. "மொதல்ல அதை

செய்யுங்க....இங்க பாருங்க தரை எவ்ளோ சூடா இருக்கு.. நான் இதுல கால் வச்சேன் அவ்ளோதான்.. நான் மாட்டேன்பா" என்றவள் கையை அவன் புறமாக நீட்டி....தூக்குங்க என்பது போல் ஜாடை செய்ய

அவளை முறைத்தவன்.. "இங்க இருக்கிறவங்க எல்லாம் மனுஷங்கதானே.. அவங்க நடக்கல.... வா" என்றுவிட்டு முன்னே நடக்க..

"நோ... முடியாது.. நஹி ஆவுங்கி" என்று ஆங்கிலம் கலந்த தமிழ் ஹிந்தியில் சொல்ல..

அவன் அவளை அமைதியாக ஒரு பார்வை பார்த்தான்.

"சரி சரி முறைக்காதீங்க.. வர்றேன்" என்றவள் அவனை முந்திக் கொண்டு ஒரே ஓட்டமாக கடற்கரைக்கு வந்தாள்..

"என்ன பேபி.. என்னாச்சி.. கால் சுட்டுடுச்சா.. வா தண்ணில கொஞ்ச நேரம் வந்து நில்லு" என்று சந்துரு அழைக்க.. ம்ம் என்றவள் கடல் நீரில் சிறிது நேரம் நின்றாள்....பின் போகலாம்.. என்றதும்.....

அனைவரும் செந்தில் ஆண்டவரை தரிசிக்க சென்றனர்..

கடற்கரையில் கால் நனைத்து விட்டு கோவில் உள்ளே வந்தவர்களை பார்த்த சில அர்ச்சகர்கள்.. “வாங்கோ வாங்கோ.. பூஜைக்கு நாழி ஆயிடுத்து.. சீக்கிரம் உள்ளே போகலாம்” என்று சபரிஷை பார்த்து சொல்லிவிட்டு உள்ளே செல்ல..

அனைவரும் முருகனை தரிசிக்க சென்றனர்.. மோகனாவும் சந்துருவும் ஜோடியாக நின்று முருகனை வணங்க.... அதை பார்த்த ப்ரியா, தானும் சபரிஷுடன் சேர்ந்து வணங்க ஆசைபட்டாள்.. ஆனால் அந்த ஆசை எல்லாம் அவளுக்கு மட்டும் இருந்ததே தவிர அவனுக்கு இருந்த மாதிரியே தெரியவில்லை..

மனதுக்குள் சிணுங்கிய பிரியா.. கண்களை மூடி முருக பெருமானிடம் .. “முருகா, சொல்லிவை என் ரிஷிகிட்ட.... நான் என் லவ்வை சொல்லும் போது அவர் ஓகே சொல்லணும், இல்ல அவ்ளோதான் சொல்லிட்டேன்” என்று கடவுளையே மிரட்டியவள் நிமிர்ந்து முருகனை பார்க்க ..

கருணையே வடிவான முருகனை காண காண தன் கண்ணை வேறு பக்கம் திருப்ப முடியவில்லை அவளால்.....சன்னிதானத்தை விட்டு நகர மனம் விரும்பாமல் நின்றவளின், தோளில் யாரோ தட்ட..... தன் தவம் கலைந்ததில் கழுத்தை மட்டும் திருப்பி பார்க்க அங்கே நின்றிருந்ததோ சபரிஷ்..

“என்ன எங்க திருச்செந்தூர் முருகனை பார்த்துட்டு வர மனசில்லையா... இவரு சக்தி வாய்ந்த கடவுள்... உனக்கு என்ன வேணுமோ அவர்கிட்ட கேளு... கண்டிப்பா கிடைக்கும்” என்று கர்பகிரகத்துள் இருக்கும் முருகனை காட்டி சபரிஷ் சொல்லவும்.

அவனை பார்த்துக்கொண்டே அவள் மனதுக்குள்.. ‘ நான் கேட்டேன் ரிஷி ஆனால் அதற்கு பதில் உங்ககிட்டதான் இருக்குன்னு சொன்னார்’ என்று தான் நினைத்ததை அவனிடம் கூறாமல் அமைதியாக,

“வாங்க வெளியே போகலாம்” என்று கோவிலை விட்டு வெளியே வந்தவள் ..அவனிடம் திரும்பி பதட்டத்துடன்... அவனை பார்த்து புன்னகைத்தவாறே.. “உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்” என்றாள்....

அவள் அப்படி சொன்னதும், “என்ன பேசணும்” என்று

அவளை கூர்ந்து பார்த்தவன், அவளது கண்ணில் தெரிந்த ஏதோ ஒரு உணர்வில் தாக்கபட்டவன்…இந்த பார்வையே இதற்கு முன்பு எங்கோ பார்த்த ஞாபகம் இருக்க ..எப்பொழுது என்று யோசிக்க ஆரம்பித்தான்…..

அன்று வீட்டில் தான் ஒரு வினாடி அவளை கட்டி அணைத்து விடுவித்ததும் அவள் கண்ணில் தோன்றிய அதே உணர்வுதான் இது என்பதை சரியாக கணித்தவன்..இது நல்லதிற்கில்லை என்று தோன்ற…. “என்ன பேசனும்…எதுவா இருந்தாலும் வீட்டில் போய் பேசலாம்…இப்ப வா” என்று சொல்லிவிட்டு முன்னே வேகமாக நடந்துவிட்டான்..

தான் பேச வந்ததை காது கொடுத்து கேட்காமல் சென்றவனை பார்த்தவள் திரும்பி கோவிலை பார்த்து “முருகா நீ டூ பேட் வெவ்வே” என்று அந்த செந்தில்ஆண்டவனுக்கே அழகு காட்டி விட்டு…. தன் காலை தரையில் உதைத்து ஹும், என்று சிணுங்கிய வாறே, அவனை பின் தொடர்ந்தாள்..

அனைவரும் அங்குள்ள மணி அய்யர் உணவகத்தில் உணவருந்திவிட்டு, வனதிருப்பதி கோவிலுக்கு வந்தனர்.. அங்கு பெருமாளை வணங்கியவர்கள்.

அடுத்து சென்றது, உவரி சுயம்புலிங்க சுவாமியை தரிசிக்க..

சுவாமியை வணங்கி விட்டு எல்லோரும் ஓர் இடத்தில அமர..

ப்ரியாவோ அங்கிருந்த கடல்அன்னையை வெறித்து பார்த்துக் கொண்டிருந்தாள்...

அவள் பக்கத்தில் சென்ற மோகனா "என்ன ப்ரி , இங்க வந்து தனியா நின்னுட்ட, வா எங்களோட வந்து உட்கரு" என்று சொல்ல..

தன் மனதை அவளிடம் வெளிகாட்டாமல், "சும்மா தான் நிக்கிறேன் மோஹி.....சரி நீ என்ன சந்துருவை தனியா விட்டுட்டு வந்துட்டே.. ஆமா உன்ன எப்படி அவன் விட்டான்.. ஏண்டி தெரியாமதான் கேட்குறேன்.. என்னையெல்லாம் உன் கண்ணுக்கு தெரியுதா.. இன்றைக்கு நீங்க ரெண்டு பேரும் என்னை மறந்துட்டீங்க".. என்று முகத்தை திருப்பிக் கொள்ள

அவளின் கேள்வியில் குற்றவுணர்ச்சி மேலோங்க, அதுவும் இல்லாமல் அவள் முகமும் குரலும் ஏதோ சரியில்லாதது போல் தோன்ற, பிரியாவிடம் நெருங்கி,

அவளை அணைத்துக் கொண்டு…” சாரிடி பிரி….இனிமேல் இப்படி பண்ண மாட்டேன்….ஆனா நீ இதுக்கெல்லாம் பீல் பண்ற ஆளு கிடையாதே….இது தான் காரணமா இல்ல வேற ஏதும் இருக்கா.. என்கிட்ட ஏதாவது மறைக்கிறியா பிரி” என்று மோகனா கேட்க

அவள் தன்னை கண்டுகொண்டாள் என்பதை உணர்ந்து…உடனே வேகமாக தனது முகபாவனைவை மாற்றிக் கொண்டு….”ஹா ஹா ரொம்ப யோசிக்கதே…..நான் உன்கிட்ட சும்மா விளையாடினேன்.. வேற ஒன்னும் இல்ல…..சரி வா போகலாம்” என்று மோகனாவின் கைபிடித்து நடக்க தூரத்தில் போனில் யாருடனோ பேசிக்கொண்டிருந்த சபரிஷ் தென்பட்டான்..

அவனையே பார்த்தவாறு நடந்த ப்ரியாவின் மனதில் குழப்பம் ஏற்பட்டது…அவள் இன்று இங்கு வந்ததிலிருந்து அவனிடம் தனியாக பேச நினைக்கும் போதெல்லாம், அதை தட்டிகழிப்பது போல் இருந்தது அவனது செய்கை…. ஏன்னென்று தெரியாமல்தான் கடற்கரையை பார்த்து யோசித்துக் கொண்டிருந்தாள்….

அப்பொழுது ஆச்சி , அடுத்து ஆறுமுகமங்களம் கோவிலுக்கு போகணும்… சீக்கிரம் கிளம்புங்க என்று

சொல்லவும் கடுப்பான ப்ரியா....சந்துருவை அழைத்தாள்..

“என்ன பேபி” என்றவனிடம்,

“வீட்டுக்கு போகணும்” என்று மட்டும் சொல்ல..

“இன்னும் ஒரு கோவில்தான் பேபி. அப்புறம் வீட்டுக்குத்தான் போவோம் சரியா” என்றதும்..

அழுவது போல் முகத்தை வைத்துக்கொண்டு “டேய் இது நியாயமாடா... இது அடுக்குமா.. எங்கேயாவது இது நடக்குமா.. சுத்தி பார்க்கக கூட்டிட்டு போறேன்னு சொல்லி , வயசான காலத்துல நான் சுத்தவேண்டிய கோவிலை எல்லாம் இப்போ சுத்த வக்கிறியேடா” என்க

“நாளைலயிருந்து கண்டிப்பா வெளியே எங்கேயாவது போகலாம் ஓகேவா” என்று சந்துரு சொல்ல..

“உன்னை நம்பலாமா” என்று சந்தானம் பாணியில் ப்ரியா கேட்க..

அவனும் அவளுக்கு போட்டியாக..
“நாங்க செய்றதைத்தான் சொல்லுவோம்,
சொல்லுறதைத்தான் செய்வோம்” என்று வீர வசனம் பேச..

“ஐயோ சகிக்கல… இந்த டயலாக் கேக்குறதுக்கு பதில் நான் கோவிலுக்கே வரேன்” என்று பிரியா அவனை வார

“அப்படி வா வழிக்கு” என்று கூறி சந்துரு சிரிக்க….பிரியாவும் இணைந்து சிரித்தாள்

இவர்களின் சிரிப்பை தூரத்தில் இருந்து பார்த்து கொண்டிருந்தான் சபரிஷின் மனம் காரணம் இல்லாமல் புகைந்து கொண்டிருந்தது….

தன் மனம் என்ன நினைக்கிறது என்று அவனுக்கே புரியவில்லை…. புரியும் போது???…..

அதன் பின் போக வேண்டிய கோவில் எல்லாம் போய்விட்டு வீடு வந்து சேர்ந்தனர் அனைவரும்…

அடுத்த நாள் காலையில் சந்துரு சொன்னபடியே வெளியே அழைத்து சென்றான் சபரிஷ் அவர்களுடன் இணையாமல் வேலை இருக்கிறது என்று சொல்லி கழண்டு கொண்டான்.....அவனது தவிர்ப்பை உணர்ந்த பிரியாவோ சரியான சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தாள்.....

இப்படியாக ஒரு வாரம் கழிய, இதற்கிடையே ஒருநாள் நாதன் வந்தார் தன் குடும்பத்தோடு..

அப்பொழுதுதான் மதிய உனவை முடித்து அனைவரும் ஹாலில் அமர்ந்திருந்தனர்..உள்ளே வரலாமா என்று கேட்டு அனுமதிக்காக காத்திருந்த நாதனை எதிர் பாராத சபரிஷ் குடும்பத்தினர்.. இப்போ எதுக்கு இவர் வந்திருக்கார்.. அதுவும் தேவிமா இங்கு இருக்கும் சமயத்தில் என்று ஆளாளுக்கு யோசிக்க..

“வா நாதா” என்று தர்மலிங்கம் மட்டும் அழைக்க

உள்ளே வந்த நாதன் யாரும் எதிர் பார்க்காத அந்த செயலை செய்தார்.. தடால் என்று தர்மாவின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தார்.

இதை எதிர்பார்க்காத அந்த குடும்பம் மொத்தமும்

அதிர்ந்து.. மற்றும் ஆச்சர்யமாகவும்..
யோசனையுடனும் பார்க்க..

“என்ன நாதா இது எழுந்திரு” என்று அவரை
தூக்கினார் தர்மலிங்கம்

எழுந்த நாதன் “இல்ல தர்மா.. என்னை
மன்னிச்சிட்டேன்னு சொல்லு.. உனக்கு நான் பெரிய
துரோகம் பண்ணிட்டேன்”
என்று சொல்லவும்..

“அதெல்லாம் நடந்து முடிஞ்ச கதை அதை பத்தி பேச
வேண்டாம்” என்று தர்ம லிங்கம் பேச்சை மாற்ற..

“இல்ல தர்மா நான் உன்கிட்ட ஒரு உண்மையை
சொல்லணும்” என்றவர் ,அன்று தான் செய்த ஈன
செயல்களை, சொல்லி “என்னை மன்னிச்சிட்டேன்னு
சொல்லு தர்மா” என்று மீண்டும் சொல்ல..

அவரோ “எனக்கு தெரியும் நாதா.. அன்றைக்கு நானும்
ராஜாவும் உன் பின்னாடியேதான் சமாதான படுத்த
வந்தோம்....அப்ப நீ பேசியதை கேட்டது மட்டும்
அல்லாமல்...அன்னைக்கே தேவியை கண்டுபிடிச்சி

கூட்டிட்டு வந்துவிட்டதாகவும் கூறினார்

தனக்கு விஷயம் ஏற்கனவே தெரிந்துவிட்ட
காரணத்தால் அதிர்ச்சி அடையாமல், தவறு
தன்மேலும் உள்ள காரணத்தால், நாதனை மட்டுமே
குற்றவாளியாக்க விரும்பாமல், “உன் மேல கோபம்
இல்ல நாதா.. நீ எந்த காரணத்துக்காக என்கிட்ட
பழகுனேன்னு எனக்கு தெரியாது .....ஆனா நான்
உன்கிட்ட உண்மையான நட்புடன்தான்
பழகுனேன்.....நான் வச்ச நம்பிக்கைக்கு துரோகம்
பண்ணுனியே என்ற வருத்தம்தான் எனக்கு இப்ப
இருக்கு” என்று சொல்லவும்

அவரின் பேச்சில் கூனிகுருகியவர், ”உன் பெயர்
மட்டும் தர்மா இல்லை நீ அந்த தர்மத்தையே
மிஞ்சிட்டே” என்றவர், அணைத்துக்கொள்ள.....
எல்லோரும் அவர்களையே பார்த்திருந்தனர்.....
தர்மலிங்கத்திடம் இருந்து விலகியவர்...
விசாலாட்சியை நோக்கி சென்றார்..

“என்னை மன்னிச்சிருங்கம்மா”.. என்று சொல்லவும்..

விசாலாட்சியோ..... “நீ பண்ண காரியத்துக்கு உன்

முகத்தை பார்க்க கூட எனக்கு பிடிக்கல.....ஆனா என்ன பண்றது..... நீ உன் தப்பை உணர்ந்து உண்மையா மன்னிப்பு கேட்டா.....அதை மன்னிக்கிற விட மறக்கறது தான் மனுஷ குணம்..... இனி அதப்பத்தி நாம பேச வேண்டாம்"..... என்றவர்..

"ஏன்டா நாதா இவ்ளோ நாள் இல்லாம இப்போ எப்படி திருந்தின....இதை நம்புற மாதிரி இல்லையே" என்று ஆச்சி சந்தேகத்துடன் கேட்க..அவரோ தன் மனைவி மாலினியை பார்க்க...அவரும் தன் கணவரை அமைதியாக பார்த்தார்.....

அன்று மாலினி தன்னிடம் வந்து "பார்வதியை கல்யாணம் பண்ணிக்க நினைச்சீங்களா" என்று கேட்கவும்... அப்போதிருந்த கோபத்தில்.. எதையும் யோசிக்காமல்.. ஆமாம் என்று விட.. அதன் பிறகு அமைதியான மாலினிதான் அதன் பிறகு அவரிடம் ஒரு வார்த்தை பேசவில்லை..

கோபத்தில் இருந்த நாதனுக்கு முதல் இரண்டு நாள் எதுவும் வித்தியாசமாக தெரியவில்லை..... பவித்ராதான் அவருக்கு, காலையில் காபி கொடுப்பதில் இருந்து, இரவு அவருக்கு மாத்திரை கொடுப்பது வரை எல்லாம் பார்த்து பார்த்து செய்ய தன் கோபத்தில் இருந்து வெளிவந்தவர்....

.அப்பொழுதுதான் கவனித்தார்....தன் மனைவி தன்னிடம் பேசி, ஏன் தன் முன்னே வந்து இரண்டு நாள் ஆகிறது என்பதை, முதலில் அலட்சியமாக இருந்தவர், இந்த நிலையே தொடரவும் அவரின் மேல் கோபம் கொண்டு பவித்ராவிடம் விசாரிக்க.. அவளோ எதுவும் பேசாமல் மவுனமாக நின்றிருந்தாள்

“பவி” என்று அதட்டவும், அன்னை எப்போது இருந்து இப்படி இருக்கிறார் என்று கூறி அன்று நடந்ததை தந்தைக்கு நியாபகபடுத்தியவள்,

“அப்பா நீங்க இந்தமாதிரியெல்லாம் நடந்துருப்பீங்க என்று நாங்க எதிர்பார்க்கவே இல்ல.... உங்களுக்கு பணம்தான் குறிக்கோள்னா அதை உழைச்சு சம்பாதிக்கனும்.....அதை விட்டுட்டு ஏன் இப்படி ஒரு குடும்பத்தோட சாபத்தை சம்பாதிச்சிருக்கீங்க.. உங்களுக்கு ஒன்னு தெரியுமா.... அம்மாவுக்கும் பணம் முக்கியம்தான் , ஆனா அதை விட நீங்க அவங்களுக்கு முக்கியம். ஒரு பொண்ணு எதவேணும் என்றாலும் பொருத்துக்குவா.. ஆனா தன் கணவன் மனசுல வேற ஒருத்தியை வச்சிக்கிட்டு.. தன்னிடம் வாழ்ந்துருக்கார் என்பதை மட்டும் ஏற்றுகொள்ளவே மாட்டா..
அன்னைக்கு அம்மா கேட்டதுக்கு நீங்க சொன்னீங்க

பாருங்க ஒரு பதில், அது அம்மாவோட மனசை எவ்வளவு காயப்படுத்திருச்சின்னு உங்களுக்கு தெரியுமா….. அன்னையிலிருந்து அவங்க என்கிட்டயும் பேசல…. சாப்பிட சொன்னாகூட சாப்பிட மாட்டேன்கிறாங்க, வற்புறுத்திதான் கொடுக்க வேண்டியதா இருக்கு" என்று சொன்னவள், நாதன் சாப்பிட்ட தட்டை எடுத்துக் கொண்டு கிட்சனுக்கு செல்ல,

பவித்ரா பேசியதெல்லாவற்றையும் அமைதியாக கேட்டவர்…அவள் சென்றதும்…..நிமிடம் தாமதிக்காமல் , மாலினியை தேடி அவர் இருந்த அறை கதவை திறந்து உள்ளே செல்ல, மாலினியோ அவர் வரவை உணர்ந்தும் திரும்பி பார்க்காமல் கட்டிலில் படுத்திருந்தார்,,

"இப்போ என்ன நடந்ததுன்னு இப்படி இருக்கே" என்று நாதன் சத்தம் போட, அப்பொழுதும் அவரை திரும்பி பார்க்காமல் பிடிவாதத்துடன் படுத்திருந்த மாலினியை கண்டு கோபம் கொண்ட நாதன் சத்தமாக ,

"இங்க பார் மாலு, எனக்கு பணம் முக்கியம்தான், நல்லா கேட்டுக்கோ, எனக்கு பணம் மட்டும்தான் முக்கியம், அந்த பார்வதியை நான் இரண்டு தடவவையோ இல்ல மூனு தடவையோதான்

பார்த்துருக்கேன்.. எனக்கு அவ மேல எந்த ஈர்ப்பும் வந்தது இல்ல. அவளை கட்டிக்கிட்டா அந்த வீட்டுக்கு சொந்தகாரனா ஆகலாம்ன்னு நினைச்சேனே தவிர, அவ அழகுல மயங்கி அவளை கல்யாணம் பண்ணனும்ன்னு நினைக்கல… ஆனா நான் நினைச்சது நடக்கல….பிறகு உன்னை கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.. அப்பவும் சரி இப்பவும் சரி, உனக்கு நான் உண்மையாதான் இருக்கேன், இதுக்கும் மேல என்னால விளக்கம் சொல்ல முடியாது , வா வந்து சாப்பிடு" என்று நாதன் சொல்ல..

தன் கணவன் மனதில் தான் மட்டுமே இருக்கிறோம் என்று நினைத்து மகிழ்ந்தவர், அதை அவரிடம் வெளிகாட்டாது…. "அப்போ வாங்க அவங்க வீட்டுக்கு போய் மன்னிப்பு கேட்டு, உங்களால பிரிஞ்ச அவங்க குடும்பத்தை நாமளே சேர்த்து வைப்போம்" என்று சொல்ல

"என்ன உளரிட்டு இருக்க" என்று பல்லை கடித்துக் கொண்டு கேட்க…

"நான் ஒன்னும் உளரல.. எனக்கும் பணத்தின் மேல ஆசை இருந்துதான் , நான் இல்லன்னு சொல்ல மாட்டேன், அது நம்ம பொண்ணு பெரிய இடத்துல ராணி மாதிரி வாழப்போறான்னு நினைச்சுதான் நீங்க

சொன்னதுக்கு எல்லாம் தலையாட்டினேன், பவித்ராவையும் பாடா படுத்தினேன், ஆனா ஒரு குடும்பத்தை சீரழிச்சி, அவங்க வயித்தெரிச்சலை கொட்டிக்கனும்ன்னு நான் நினைச்சது இல்லை, நான் முடிவு பண்ணிட்டேன், ஒன்னு எல்லா உண்மையையும் சொல்லி அவங்க கிட்ட மன்னிப்பு கேக்கணும், இல்ல, நானும் என் பொண்ணும் இந்த வீட்டை விட்டு வெளியேறனும், என்ன பண்ணனும் என்று நீங்களே முடிவு பண்ணுங்க" என்று உறுதியுடன் சொல்லிவிட்டு மாலினி அந்த அறையை விட்டு வெளியேற,

அப்படியே கட்டிலில் தொப்பென்று அமர்ந்தார் நாதன்....என்னதான் மனைவி தன்னை போல் என்றாலும், அவளுடைய பிடிவாத குணம் அறிந்தவராயிற்றே....இல்லையென்றால்... இவ்வளவு வருடம் நாதனை சமாளிக்க முடியுமா...இவ்வளவு நாள் பணம் பணம் என்று அதன் பின்னே ஓடியது யாருக்காக, தன் மனைவி மற்றும் மகளுக்காகதானே..... அவர்களே அவரை விட்டு பிரியும் போது.....அந்த பணத்தை வைத்து அவரால் என்ன செய்ய முடியும்...
அவர்கள் இல்லாமல் அவரால் வாழ முடியுமா என்பதும் சந்தேகமே..... அதுவும் இல்லாமல் தான் செய்த தவறு தன் மனைவி சுட்டி காட்டியதும் தன் முன் பூதாகரமாக தெரிய...பின் ஒரு முடிவுக்கு

வந்தவராக வெளியே வந்து மாலினியையம் பவித்ராவையும் அழைத்துக்கொண்டு சபரிஷ் வீட்டுக்கு வந்துவிட்டார்....

அதுவரை அமைதியாக நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சபரிஷ் முதன் முறையாக வாய் திறந்தான்..

“யாரு என்ன சொன்னாலும் சரி... இல்ல நீங்க இங்க இருக்கிறவங்க எல்லார் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டாலும்.. சரி.... இவங்க வேணும்னா உங்களை நம்பலாம்.. ஆனா நான் நம்ப மாட்டேன்” என்றான் தன் கணீர் குரலில்..

அவன் நின்ற தோரணையிலும், அவனின் கணீர் குரலில் மயங்கியும், இந்த களபர நிலையிலும் தன்னவனை ரசிக்க ஆரம்பித்துவிட்டாள் பிரியா....(அடங்கவே மாட்டியா பிரியா நீ)

தன்னை சபரிஷ் நம்ப வில்லை என்றதும்... அவன் அருகில் சென்றவர்.. “சொல்லுங்க தம்பி நான் என்ன செஞ்சா நீங்க என்னை நம்புவீங்க” என்று குரல் கமர கேட்டார்..

இதற்கு ப்ரியாவோ.. “பார்றா, நேத்து வரைக்கும் இந்த மங்கூஸ் மண்டையன் மாப்பிள்ளை மாபிள்ளை ன்னு சொன்னார்.. இப்போ தம்பியாம் மில்ல தம்பி” என்று மனதுக்குள் கவுன்டர் கொடுக்க….

“நான் என்ன சொன்னாலும் செய்விங்களா” என்றான் அவரை கூர்ந்து பார்த்துக் கொண்டே…

“நீங்க என்னை நம்புறதுக்காக… நீங்க என்ன சொன்னாலும் செய்வேன் தம்பி சொல்லுங்க… என்ன செய்யணும் நான்” என்றவரின் குரலில் உறுதி தெரியவே,

உடனே சபரிஷ் தன் கையில் உள்ள அலைபேசியில் யாருக்கோ அழைக்க.. அடுத்த பத்தாவது நிமிடம் ராஜேஷ் அங்கு வந்தான்..

எல்லோரும் சபரிஷ் என்ன பேச போகிறான் என்று ஆவலாக அவனையே பார்க்க…. …

“பவித்ராக்கு நான் பார்த்திருக்கிற மாப்பிள்ளை என்றவன் ராஜேஷை கை காட்டி. இவர்தான்” என்று நிறுத்த.. அங்கே சிறிய சலசலப்பு ஏற்பட்டது…..

“ராஜேஷை பற்றி உங்களுக்கே நல்லா தெரியும்.. நல்ல உழைப்பாளி.. அவன்தான் எனக்கு வலது கைமாதிரி” என்றவன் முடிவு உங்க கையில் என்பது போல் அவரை பார்த்துவிட்டு அமைதியாக சோபாவில் அமர்ந்தான்…

இப்பொழுது எல்லோரும் நாதனை பார்க்க.. அவரோ தன் மனைவியை பார்த்தார்..

மாலினி ம் என்று கண் அசைக்க ..

திரும்பிய நாதன் மீண்டும்.. சபரிஷை பார்த்து “எப்போ கல்யாணத்தை வச்சிக்கலாம்ன்னு சொல்லுங்க தம்பி” என்றார் உடனடியாக….

அவரை கூர்ந்து பார்தவன்… “பேச்சு மாற மாட்டீங்களே” என்று சொல்ல..

“இல்ல தம்பி நான் மனசார சம்மதிக்கிறேன்.. ஏன்னா…என்றவர் சிறிது இடைவெளிவிட்டு “என் பொண்ணு ராஜேஷை விரும்புறான்னு எனக்கு தெரியும்” என்று சொல்லவும்…

“அப்பா.. உங்…உங்களுக்கு எப்படி தெரியும்” என்று பவித்ரா அதிர்ந்து போய் கேட்டாள்…

அதற்கு பதில் மாலியிடமிருந்து வந்தது….”ஆமா அவ ராஜேஷை விரும்புறது செல்வி கல்யாணத்து அன்னைக்கு தான் தெரிஞ்சிது.. பவிதான் அந்த பையனையே பார்த்துகிட்டு இருந்தா.. ஆனா அவர் அவளை திரும்பி பார்க்கவே இல்லை… இதை அன்னைக்கே நான் பவித்ரா அப்பாகிட்ட சொல்லிட்டேன்” என்று நாதனை பார்த்தவர்…

“அதுக்கு அப்புறம் பவித்ரா அமைதியா இருக்கவும்.. அப்படி ஒன்னும் அவ மனசுல இல்லைன்னு நினைச்சேன்.. ஆனா இப்போ நீங்க சொல்லும்போது தான் அவ எங்ககிட்டயே நடிச்சிருக்கான்னு எங்களுக்கு புரியுது..

நீங்க நல்ல நாள் பாருங்க.. அப்போ என் பொண்ணோட காதல் தப்பா தெரிஞ்சிது.. ஆனா இப்போ அப்படி இல்லை.. என் பொண்ணு சந்தோசம் தான் இப்போ எங்களுக்கு முக்கியம்” என்று முடித்துவிட….

“சரி” என்று சொன்னவன்
“எனக்கு பொய் சொன்னா பிடிக்காது.. இப்போ சரின்னு சொல்லிட்டு.. பின்னாடி ஏதாவது தில்லு முள்ளு பண்ணினீங்கன்னு தெரிஞ்சிது” என்று விரலை நீட்டி எச்சரித்தவன்.. ராஜேஷை பார்த்து “நீங்க என்ன சொல்றீங்க” என்று கேட்க...

அவனோ.. “சார் நான் கொஞ்சம் பேசலாமா”

“சொல்லுங்க ராஜேஷ்”

“எனக்கு பவித்ராதான் சார் முக்கியம் அவளை நான் யாருக்காகவும் விட்டு குடுக்கமாட்டேன்.. நான் வசதி இல்லாதவன் என்ற ஒரே காரணத்துக்காகதான் அவளை விட்டு விலகி இருந்தேன்..... பவி இல்லைன்னா எனக்கு வாழ்க்கையே கிடையாதுன்னு இப்ப புரிஞ்சிகிட்டேன்.....அதுனால நான் கல்யாணத்துக்கு சம்மதிக்கிறேன் .. ஆனா ஒரு நிபந்தனை.. சீர்வரிசை என்கிற பேரில்.. அவ வீட்ல இருந்து எதுவும் வரக்கூடாது... அவளை இப்போ அவ வீட்ல இருக்கிறதை விட நூறு மடங்கு சந்தோசமா வசிக்க என்னால் முடியும்”என்று ரோஷத்துடன் சொல்லவும்..

சபரிசோ.. “இல்ல ராஜேஷ்... அவர் வீட்ல இருந்து எந்த

சீர்வரிசையும் வராது… ஆனா இந்த வீட்ல இருந்து கண்டிப்பா வரும்.. அதை நீங்க மறுக்க கூடாது, நான் ஏன் இந்த கல்யாணத்துக்கு மெனகிடுறேன்னு நீங்க நினைக்கலாம்… எனக்கு செல்வி, மேகா எப்படியோ அப்படிதான் பவித்ராவும்" என்று சொன்னவன்..
நாதனை ஒரு பார்வை பார்த்துவிட்டு கிளம்பி விட்டான்..

ப்ரியாவோ மனதுக்குள்.. "ஆமா அடுத்தவங்க லவ்வெல்லாம் புரிஞ்சிப்பான்… அதிலெல்லாம் ஷார்ப் தான்..ஆனா என் மனசு மட்டும் புரியாது." எப்போடா என் மனசை புரிஞ்சிக்க போற என்று நினைத்தவள்..
"என்ன ஆனாலும் சரி….நாளைக்கு எப்படியும் நான் உன்கிட்ட என் காதலை சொல்லியே தீருவேன்" என்று தீர்மானம் எடுத்தாள் மனதுக்குள்..

அவளுடைய எண்ணம் நிறைவேருமா???……

சுவாசம் தொடரும்….

சுவாசம் 21

"உன்னிடம் மட்டுமே

“பேசிக்கொண்டிருக்கிறேன்
“என்னவனே!
“உதடுகளால் அல்ல
“உள்ளத்தால்!!

சபரிஷ், அடுத்த முகூர்தத்தில் கல்யாணம் என்றதும் பரபரப்புத் தொற்றிக் கொண்டது அனைவரிடமும்.....

ராஜேஷ் தன் தந்தையிடம் இன்னும் தன் காதல் விஷயத்தைச் சொல்லவில்லை என்றதும், நாதன்..

“வாங்க மாப்பிள்ளை.. இப்போதே போய் எல்லாத்தையும் சொல்லி கையோட அவரோட சம்மதத்தையும் வாங்கிடலாம்” என்றதும்..

நாதன் குடும்பமும், ராஜேஷும் கிளம்ப...

ப்ரியா பவித்ராவிடம் சென்று, “வாழ்த்துக்கள் பவித்ரா” என்று புன்னகையுடன் சொல்ல

தன்னைப் பார்க்கும் போதெல்லாம் முறைத்துக் கொண்டு இருக்கும் பிரியா...இன்று புன்னகையுடன் வாழ்த்து சொல்லவும்,

“என்ன ப்ரியா அதிசயமா இருக்கு நீங்க என்னைப் பார்க்கும் போதெல்லாம் என்னை வில்லி ரேஞ்சில்

முறைச்சிகிட்டே இருப்பீங்க....இப்போ உங்க பார்வையே மாறியிருக்கே....என்ன விஷயம்" என்று அவளைக் குறுகுறுவென்று பார்த்துக் கொண்டே கேட்க,

பிரியாவின் மனசாட்சியோ "போச்சு போச்சு இப்படியேவா வெளிபடையா முறைச்சு உன்னைக் காட்டிகொடுப்ப....இப்ப இவ கேள்வி கேட்குறா பார்...இப்ப என்ன செய்வ...இப்ப என்ன செய்வ" என்று குத்தாட்டம் போட,

ஹி...ஹி....இவ கேள்வி கேட்டா நாங்க பயந்துடுவோமா.....இக்கட சூடு என்றபடி பவியிடம் "நான் பாசமா பார்த்தது மொறைச்ச மாதிரி இருந்ததா உங்களுக்கு" என்று பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல,

"ஓ உங்க மும்பைல முறைக்கறதுக்குப் பேரு பாசமா பார்க்கறதா சொல்வீங்களா.....ம்ம் சரி இருக்கட்டும் இருக்கட்டும்" அவளின் சமாளிப்பை நினைத்துச் சிரித்துக் கொண்டே சொல்ல...மூவரும் சிரித்து விட்டனர்...

அப்பொழுது பவித்ரா மொபைல் அடிக்க அதில் தெரிந்த பிம்பத்தைக் கண்ட பிரியா,
"ஐ யாரது இந்தக் குட்டி பொண்ணு, ரொம்ப அழகா இருக்கா...உங்க ரிலேட்டிவா" என்று கேட்க,

“இது அவங்க தங்கை ஹரிணி, நம்ம மேகா கூடத்தான் படிக்கிறா…. இப்போ அவங்க வீட்டுக்குதானே போறோம்… நீங்களும் வாங்களேன் நேரிலேயே காட்டுறேன்” என்று பவித்ரா இருவரையும் அழைக்க,

“இப்போவா வர முடியாதே” என்று ப்ரியா சொல்லவும், மோகனாவும் “ஆமா பவி இப்போ எங்களால வரமுடியாது.. எல்லாம் திங்க்ஸும் எடுத்து வைக்கனும்.. இன்றைக்குச் சாயங்காலம்… டூர் போனவங்க எல்லோரும் திரும்பி வந்துடுவாங்க… அப்போ நாங்க இங்க இருக்கனும்… இல்லன்னா… சார் திட்டுவார் அதுவும் இல்லாம ப்ரின்ஸிகிட்ட போட்டு குடுத்துருவார், அதனால வரமுடியாது…..இன்னொரு நாள் கண்டிப்பா பார்க்கலாம்” என்று சொல்ல,

ஓ..அப்படியா சரி…. என்றவள் “நீங்க ரெண்டு பேரும் கல்யாணத்துக்குக் கண்டிப்பா வரணும் சொல்லிட்டேன்” என்று அவர்களுக்கு அழைப்பு விடுத்தவள், மற்ற அனைவரிடமும் சொல்லிக்கொண்டு மனமெல்லாம் சந்தோஷத்துடன் தன் தாய் தந்தையுடன் சென்றாள்…..

……

அந்திமாலை பொழுதில், ஒரே சத்தமும் கூச்சலுமாக வந்து நின்றது பேருந்து…. ஆம் டூர் போனவர்கள்

எல்லோரும் திரும்பி வந்துவிட்டார்கள்..
வந்தவர்களில் சிலர் இவர்கள் இருவரிடமும் நலம் விசாரிக்க.. இவர்களும் அவர்களிடம் விசாரிக்க இப்படியே அனறையபொழுது கழிந்தது..... மானவர்கள் வந்துவிட்டாலும், பிரியாவும் மோகனாவும் அவர்களுடன் தங்கவில்லை.....

சந்துரு அங்கிருந்த ஆசிரியர்களிடம் என்ன சொன்னானோ.....அவர்களும் மறுக்காது ஒத்துக் கொள்ள, அதைப் பார்த்த இரு கண்கள் வஞ்சகத்துடன் சரியான சமயத்திற்காகக் காத்திருந்தது.....

தங்கள் வகுப்புத் தோழிகளிடம் சிலமணி நேரம் இருந்துவிட்டு, எங்கு எங்குச் சென்றார்கள் என்ற விவரமெல்லாம் பேசிவிட்டு வந்த இருவரும் தோட்டத்தில் வந்து அமர்ந்தனர்..... அப்பொழுது பிரியா திடீரென்று

“மோஹி நாம இன்னும் இரண்டு நாள்ல கிளம்பனுமா” என்று கேட்க...

அவளைப் பார்த்த மோகனா “ நீ எந்த உலகத்துல இருக்கே.... நாம இங்க வந்து பதினேழு நாள் ஆச்சி....திரும்ப மும்பை போக வேண்டாமா”

“ஓ அவ்ளோ நாள் ஆயிடுச்சா…ம்ச்சு” என்று சுரத்தே இல்லாமல் சொன்னவள் “ஆமா நீ எங்க கூட வர போறியா…. இல்ல இங்க இருக்கப் போறியா” என்று கேட்க…

“ஆச்சி இன்னும் கொஞ்ச நாள் இருந்துட்டுப் போகச் சொல்றாங்க…… அப்பா அம்மாவால் மறுக்க முடியல…..ஆனாலும் அண்ணும் எவ்வளவுதான் சமாளிப்பான்…. இப்ப குழந்தை பிறந்ததுல, அங்கேயும் இங்கேயும் அல்லாடிட்டு இருக்காங்க… சோ அப்பா மட்டும் இப்ப மும்பை போறதா பிளான்….அவர் போய் அண்ணாவையும் ரவியையும் இங்க அனுப்பி, ஒரு ரெண்டு நாள் இருந்துட்டு அண்ணா கூடவே நாங்களும் கிளம்பிடுவோம்” என்று நீளமாகப் பேசி முடித்தவள் அப்பாழுதுதான் கவனித்தாள்….பிரியாவின் முகத்தை

“என்னாச்சு ப்ரி ஏன் ஒரு மாதிரி இருக்கே.. எதுனாலும் என்கிட்ட சொல்லுடி.. நீ இப்படி இருக்குறது நல்லாவே இல்லை.. எங்க ப்ரி இருக்கிற இடம் எப்போவும் கலகலன்னு இருக்கும்” என்றதும்..

“அடி போடி.. நானே எப்படி என் லவ்வ சொல்றதுன்னு யோசிச்சிட்டு இருக்கேன்… ஆளு சிக்க மாட்டேங்குறார்…கண்ணாமூச்சிஆட்டம் ஆடிட்டு இருக்கார்” என்றதும்

“என்னது யோசிச்சிட்டு இருக்கியா.. அப்போ இன்னும் உன் லவ்வ அத்தான்கிட்ட சொல்லலையா.. நீ கோவில்ல வச்சி சொல்லிருப்பேன்னுல்ல நினைச்சேன்”

“என்னடி நக்கலா உன்கூடத்தானே ஒரு வாரமா நான் சுத்திட்டு இருக்கேன்.... ஆமா அது யாருடி அத்தான் பொத்தான்னு புது என்ட்ரி....எதுவா இருந்தாலும் முன்னாடியே சொல்லிடுங்க....புதுசு புதுசா குண்ட தூக்கி போடாதீங்க...என்னோட ஹார்ட் தங்காதுமா” என்றதும்

தன் தலையில் அடித்துக் கொண்ட மோகனா..
“சபரிஷை தான் அத்தான்னு சொல்றேன்.. மாமா பையன்ல சோ அப்படித்தான் கூப்பிடனுமாம்.. அம்மா சொன்னாங்க”

“ஓஓஓ அப்போ உன் ஆளையும் அப்படித்தான் கூப்பிடுவியஆஆஆஆ” என ப்ரியா இழுக்க..

“அதையேன் கேட்குறே அப்படிக் கூப்பிடுன்னு ஒரே தொல்லை.. நானும் போனா போகுதுன்னு கூப்பிட்டேன்..சரி அதை விடு.. நீ எப்போ உன் லவ்வை சொல்ல போற” என்று கேட்ட மோகனாவாது ஒரு

வார்த்தை கேட்டிருக்கலாம் ப்ரியாவிடம் “அவர் உன்னை விரும்புகிறாரா” என்று.. அப்படி அவள் கேட்டு இருந்தால் ப்ரியாவை சபரிஷிடம் காதல் சொல்ல போவதை தடுத்திருக்கலாம்..

“நாளைக்கு.. நான் எப்படியும் சொல்லிடுவேன் மோஹி...வீட்லதானே நான் பேச வந்தா தட்டி கழிக்கிறார் நாளைக்கு எதிர்பாராத இடத்தில் திடீர்ன்னு அவர் முன்னாடி நின்னு ஷாக் கொடுக்கப் போறேன்” என்று சிரிப்புடன் கூறிக்கொண்டிருக்கும் போது...

“உனக்கெல்லாம் லவ் ஒரு கேடா” என்று ஹிந்தியில் ஒரு குரல் பின்னாடி இருந்து ஒலித்தது...

சட்டென்று எழுந்து திரும்பிய இருவரும் அங்கு நின்றவனைப் பார்த்ததும் மோகனாவோ முகம் சுழிக்க.. ப்ரியாவின் கைகளோ நடுங்க ஆரம்பித்தது...

அவளின் கை நடுங்குவதைப் பார்த்த மோகனா.. நடுங்கும் ப்ரியாவின் கையை இறுக பற்றிகொண்டு சுற்றும் முற்றும் பார்க்க ஒரு சிலர் மட்டுமே இருந்தனர்.. மோகனா மனதுக்குள்
“கடவுளே இப்பன்னு பார்த்து சந்துரு எங்க போனாங்க....சீக்கிரம் இங்க வரவைங்களேன்” என்று வேண்டிக் கொண்டு தனது பதட்டத்தை

வெளிகாட்டாமல் தைரியத்தை வரவைத்துக் கொண்டு

“ஏய் உனக்கு இங்க என்ன வேலை உன் வேலை என்னாவோ அத பார்த்துட்டுபோ” என்று மோகனா கோபத்துடன் சொல்ல..

அவனோ “என் வேலையைத் தான் பார்க்க வந்துருக்கேன்.. என்னை எல்லோர் முன்னாடியும் அவமான படுத்திட்டு , நீங்க மட்டும் சந்தோஷமா இருக்கீங்களா.. விடமாட்டேன், எத்தனை நாளைக்குச் சந்துரு இவளை என்கிட்ட இருந்து பாதுகாப்பான்னு நானும் பார்க்கிறேன்” என்று ப்ரியாவை பார்த்து பல்லை கடித்தவன்…

“இந்த டூர்ல என்கிட்ட தனியா மாட்டுவானு நினைச்சேன் .. ஆனா அவனால மறுபடியும் தப்பிச்சிட்டா இப்போவும் ஒன்னும் கெட்டுப்போகல… இன்னும் ரெண்டு நாள் இருக்கு. அதுக்குள்ள உங்களைக் கதற வைக்கல என் பேரு சைலேஷ் இல்ல” என்று சவால் விட்டவனின் முகம் விகாரமாக மாறியது….

“ஏய் இந்தச் சவால் விடுற வேலையெல்லாம் என்கிட்ட வேணாம்.. என்ன சந்துரு இப்போ இங்க

இல்லன்னதும் வாய் நீளுதா.. மும்பையாவது நாங்க பொழைக்க வந்த ஊரு.. ஆனா இது எங்க இடம்" என்று கர்வமாகச் சொன்ன மோகனா.. "ஒரு வார்த்தை உன்னைப் பத்தி சொன்னேன்னு வை உன்ன உன் அப்பா அம்மாக்கு பிள்ளையே இல்லாம ஆக்கிடுவாங்க" என்றவள் மேலே ஏதோ சொல்ல போக

அவளைத் தடுத்த பிரியா.. தன்னவனும், சந்துருவும் இருக்கும் போது எனக்கு என்ன பயம் என்று மனதுக்குள் நினைத்தவள், சிறிது தைரியத்தை வரவழைத்துகொண்டு, பற்றியிருந்த மோகனாவின் கையை விலக்கி நிமிர்ந்து நின்று.. அவனை நேருக்கு நேராகப் பார்த்து…

"என்ன சொன்ன எங்களைக் கதற வைக்கப் போறியா…ஏய் உன்னால் முடிஞ்சதை பார்த்துக்கோ…என்கிட்ட வாங்குனது பத்தலையா உனக்கு…. நீ எங்களை என்ன செஞ்சாலும் .. சேதாரம் உனக்குத்தான்" என்றதும்..

ப்ரியாவின் இந்தத் தைரியத்தை அவன் விரும்பவில்லை என்பது அவன் முகத்திலே தெரிந்தது… "சவால்" என்று சொல்லிவிட்டு வேகமாகச் சென்று விட்டான்..

மோகனாவோ “என்னாச்சுடி திடீர்னு ஓடிட்டான்” என்று கேட்கும் போதே

“ஹாய் பேபிஸ் இங்க என்ன பண்றீங்க.. வாங்க சாப்பிடலாம்” என்று இவர்களை அழைத்துச் செல்ல சந்துரு வந்தான்.

“ஓ சந்துருவை பார்த்துதான் இப்படி ஓடுறானா.. ஹா… ஹா… இவனுக்கு எல்லாம் சவால் ஒரு கேடு” என்று சொன்னவள் ப்ரியாவிடம்.. “ப்ரி உன்னைக் கராத்தே கத்துக்கச் சொன்னது எதுக்கு , அன்னைக்குத் தோப்புல வச்சி ஒருத்தனை ஒரே அடி அடிச்சியே அப்போ இருந்த தைரியம் எல்லாம் இவனைப் பார்த்தா மட்டும் எங்கடி ஓடி போகுது” என்று மோகனா சலித்துக்கொள்ள…

“ என்னமோ தெரியலைடி சந்துரு என் பக்கத்துல இருக்கும்போது இருக்கிற தைரியம் அவன் இல்லாம இருக்கும் போது ஓடிடுது” என்று கூறவும்

“என்ன குசு குசுன்னு உங்களுக்குள்ளே பேசிகிட்டே இருக்கீங்க… என்னனு என்கிட்டையும் சொல்றது” என்க

“ அது வந்து…..என்று சைலேஷை பற்றிச் சொல்ல போன மோகனாவை கையமர்த்தித் தடுத்த பிரியா,

“அது ஒன்னும் இல்ல பக்கி….ஊருக்கு போறதை பத்தி பேசிகிட்டு இருந்தோம்….சரி வா எனக்கு ரொம்பப் பசிக்குது சாப்பிட போகலாம்”என்று சைலேஷ் விஷயத்தைச் சொல்லாமல் கையோடு அவனையும் அழைத்துக் கொண்டு செல்ல….

இங்கு நடந்தவை அனைத்தையும் இரு கண்கள் யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தது.

……

“புத்தம் புதுக் காலை…
பொன் நிற வேலை…
என் வாழ்விலெ ..
தினம் தோறும் தோன்றும்…
சுக ராகம் கேட்கும்.
ஒர் ஊமை நாடகம்”

என்ற பாடலை பாடிக் கொண்டே டிரெஸிங் டேபிளின் முன்பு நின்று சேலை கட்டிக் கொண்டிருந்தாள் பிரியா…. தங்களது அறைக்குள் நுழைந்த மோகனா…..பிரியாவின் அழகில் தன்னை மறந்து கண் இமைக்காமல் பார்க்க….

கண்ணாடியின் வழியே அவளின் இமைக்காத பார்வையைக் கண்ட பிரியா.... “என்னடி என்னை அப்படிப் பார்க்குற....நீ சைட் அடிக்க வேண்டிய ஆள் நான் இல்லடி” என்றவள் சேலையை முந்தானையைச் சரிசெய்து கொண்டு அவளைத் திரும்பி பார்த்து கண்ணடிக்க...

அப்பொழுது தான் கவனித்தாள் அந்தப் புடவையை, “ஹே இது அன்னைக்கு... அத்தான் கிட்ட கடையில வச்சி வம்பு பண்ணும்போது.. இந்தாங்க மேடம் நீங்க கேட்ட பட்டுன்னு உன் கைல வச்சிட்டுக் கோபமா போனங்களே.. அந்தப் புடவைதானே”

மோகனாவின் மூக்கை பிடித்து ஆட்டிய ப்ரியா.. “அதே தான்.. நேத்து நைட் சாப்பிட்டதும்.. நீ உன் பேவரேட் இடமான மொட்டை மாடிக்கு போய்ட்ட..... சரி நாளைக்கு என் ஆள பார்க்க போகும் போது என்ன டிரஸ் போடலாம்ன்னு ரொம்ப நேரம் யோசிச்சி பார்த்தேன் .. அப்போ எனக்குக் கிளிக் ஆனதுதான் இந்தச் சேலை....அவர் கையால கொடுத்த சேலையைக் கட்டிகிட்டு என் மனசுல உள்ளதை சொல்லாம்ன்னுதான் இதைக் கட்டிகிட்டேன்” என்று ப்ரியா அசடு வழிய..

“சரி சரி வழிஞ்சது போதும்.....பார்க்க சகிக்கல” என்றதும்..

மோகனாவின் தோளில் அடித்தவள்.. திரும்பி நின்று கண்ணாடியை பார்த்து....கண்ணுக்கு மையிட்டு, காதில் ஜிமிக்கி போட்டு, சிறிது ஒப்பனை செய்து கொள்ள, அந்தச் சிறு ஒப்பனையிலே தேவதையாக ஜொலித்தாள் பிரியா..

“சரி மோஹி நான் கிளம்புறேன்.... எப்போ என்ன நடக்கும்ன்னே தெரியலைடி.. எப்போ பாரு யாராவது என் ரிஷியை என்கிட்ட இருந்து பிரிக்கறதுலேயே குறியா இருக்காங்க.. இன்னைக்கு என் மனசில உள்ளதெல்லாம் சொல்லிட்டு வந்து நல்லா ஒரு குத்தாட்டம் போடனும்.. ஏன்னா நான் அவ்ளோ சந்தோசமா இருக்கேன்” என்றவளிடம்

“அதெல்லாம் சரி.. இப்போ அத்தான் எங்க இருப்பாங்க ன்னு உனக்குத் தெரியுமா” என்று மோகனா கேட்க..

“ம்ம்ம் அதெல்லாம் விசாரிச்சிட்டேன்.. இப்போ சுகர் பேக்டரியிலதான் இருப்பாங்களாம்.. வேலு அண்ணா கிட்ட கேட்டப்போ அவங்க சொன்னாங்க.. சரிடி ஓகே பை.. நான் சீக்கிரம் வந்துறேன்..நான் எங்கேன்னு சந்துரு கேட்டா ஏதாவது சொல்லி சமாளிடா செல்லம்....நான் வந்ததுக்கப்புறம் அவனுக்குச் சர்ப்ரைஸ் கொடுக்கலாம் ஓகே வா” என்றவள் கதவை நோக்கி சென்றாள்..

சட்டென்று நின்று திரும்பி.. வேகமாக வந்து மோகனாவை கட்டிக்கொண்டு.. “எனக்குப் பயமா இருக்கு மோஹி… ஏன்னு தெரியலை நெஞ்செல்லாம் படப்படன்னு அடிக்குதுடி….” என்று சொல்ல..

தன்னிடம் இருந்து ப்ரியாவை விலக்கிய மோகனா, அவளை ஒரு நிலைக்குக் கொண்டு வரும் பொருட்டு.. “சரி விடு உனக்குக் கொடுத்து வச்சது அவ்வளவுதான்.. இந்த ரியா இல்லனா என்ன இன்னொரு தியா அத்தானுக்கு வராமையா போவா” என்றதும் தான் தாமதம்..

“அடியேய் எனக்கு வில்லி வெளிய இருந்து வர வேண்டாம்.. நீயே போதும்” என்று மோகனாவை அடிக்க ஏதாவது கிடைக்குமா என்று தேட..

ப்ரியாவின் கையைப் பிடித்து .. “பின்ன என்னடி….. அத்தான் கிட்ட போய்…..ஹலோ பாஸ் நான் உங்களைக் காதலிக்கிறேன் நீங்க என்ன பதில் சொல்றீங்கன்னு தைரியமா கேக்குறதை விட்டுட்டு.. நெஞ்செல்லாம் படப் படன்னு அடிக்குதாம்.. போடி அங்கிட்டு” என்று மோகனா சொல்லவும்..

“சரி சரி கோபபடாதே…. போறேன் போயி தைரியமா லவ் சொல்லிட்டு கையோடு என் ரிஷியையும் கூட்டிட்டு ஜோடியா திரும்ப வரேன்” என்றவள்..

மோகனாவின் கன்னத்தில் முத்தமிட்டு அறையை விட்டு வெளியே வந்து யாரும் பார்க்கும் முன் வீட்டை விட்டும் வெளியே வந்தாள்..

வேலு சொன்ன மாதிரி.....பக்கத்தில் உள்ள பஸ் ஸ்டேன்டுக்கு சென்று பஸ்ஸில் ஏறி ஜன்னலோர இருக்கை காலியாக இருக்க அங்கு அமர்ந்து சிலுசிலுவென்று வீசிய காற்றைச் சுவாசித்துக் கொண்டும் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டும் வந்தாலும் அவள் மனமோ சபரிஷிடம் எப்படிப் பேசுவது, என்ன பேசுவது என்று ஒத்திகை பார்த்துக் கொண்டே இருந்தாள்
அவள் இறங்க வேண்டிய இடமும் வரவும் பிரியா இறங்க விதியும் அவள் பின்னாடியே வந்து இறங்கியது...

இறங்கியவள்.. வேலு சொன்ன அடையாளத்தின் படி சிறிது தூரம் நடந்து , ஒரு வளைவில் திரும்ப அங்கு.. “எஸ். எம் சர்க்கரை ஆலை” என்று பெரிய போர்ட் வைக்கப் பட்டு அம்புக்குறி இடப்பட்டிருக்க..அந்த திசையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் பிரியா....

ஊருக்கு வெளியே சற்று தள்ளி இருந்தது அந்த ஆலை.....ஆனால் அவளின் மனம் சபரிஷை பற்றியே நினைத்து கொண்டிருந்ததால் அவளுக்கு இந்தத் தூரம் ஒருபொருட்டாகவே தெரியவில்லை..

தன்னவனிடம் தன் காதலை சொல்ல போகிறோம் என்ற சந்தோஷம் மட்டுமே அவள் மனதில் இருந்தது..

எஸ். எம் சர்க்கரை ஆலை நெருங்கியவள், அதன் உள்ளே செல்லும் வழியைத் தேட.. அப்பொழுது..

“யாரும்மா நீ உனக்கு என்ன வேணும்.. யாரை பார்க்கணும்.. இங்கெல்லாம் வரக்கூடாது.. கிளம்பு கிளம்பு” என்று காவலாளி சொல்ல.

இதே மற்ற நேரமாக இருந்திருந்தால் பிரியா காவலாளியை ஒரு வழி பண்ணியிருப்பாள்.. ஆனால் இப்பொழுதோ அமைதியாக நின்றாள்.. சபரிஷை பார்க்க போகும் ஆவலில்..

“இந்தா பொண்ணு நான் கேட்டுகிட்டு இருக்கேன்.. நீ பேசாம நின்னா என்ன அர்த்தம்.. ம்ம் கிளம்பு..” என்று சொல்ல..

அப்பொழுது.. “ராமையா யாருக்கிட்ட பேசிட்டு இருக்க” என்றது ஒரு முரட்டு குரல்..

ப்ரியா யார் என்று திரும்பி பார்க்க..... மீசைக்குள் தன் முகத்தை ஒளித்து வைத்திருந்த அந்த ட்ரைவர் நின்றிருந்தான்....அவனைப் பார்த்ததும் அவளுக்கு அவளது சபதம் நியாபகம் வந்தது..

“நான் இந்த ஊரை விட்டு போறதுக்குள்ள உன் மீசையை எடுக்க வைக்கல.. நான் பிரியா இல்லை” என்று அப்பொழுது நினைத்ததை.. இப்பொழுது நினைத்து பார்த்தவளுக்குச் சிரிப்புதான் வந்தது..

பிரியாவின் அருகே வந்தவன்.... “இங்க என்னம்மா பண்றீய.. யாரை பார்க்கணும்” என்று கேட்க. ..

காவலாளியோ “சித்தா உனக்கு இந்தப் பொண்ணு யாருன்னு தெரியுமா” என்று கேட்டான்.

“தெரியும் ராமையா.. நம்ம அய்யா வீட்டுக்கு வந்துருக்க விருந்தாளி” என்றதும், காவலாளி..

“அம்மா என்னை மன்னிச்சிருங்க.. நீங்க யாரை பார்க்கணும்.. ஐயா இப்போதான் வந்தாவ” என்றதும்..

ப்ரியாவின் முகம் மகிழ்ச்சியைக் காட்ட..

“ஓ அய்யாவை தான் பார்க்க வந்தியலா.. சரி உள்ள போங்க.. கொஞ்சதூரம் இந்தப் பக்கம் நடந்தீயன்னா

பேக்டரி வரும்… அங்க போய்க் கேட்டியன்னா அய்யா இருக்கிற இடத்தைக் காமிப்பாங்க… எனக்கு அய்யா ஒரு முக்கியமான வேலை கொடுத்துருக்காங்க….. இல்லன்னா நானே உங்களை அய்யாகிட்ட கூட்டிட்டு போயிருவேன்” என்று சித்தன் சொல்ல..

“இல்ல தேங்க்ஸ் நானே பார்த்துகிறேன்” என்றவள்.. உள்ளே சென்றாள்..

போகும் வழியில் இரு புறமும் மரங்கள் நிறைத்து இருக்க.. ஒரு சிலர் ஓரிடத்தில் கரும்புகளைக் கட்டு கட்டாக அடுக்கி வைத்து கொண்டிருந்தனர்.. மற்றவர்கள் ஒரு பக்கம் சர்க்கரை மூட்டைகளை லாரியில் அடுக்கி கொண்டிருந்தனர்..

பேக்ட்டரி பக்கத்தில் வரவும் மெசின்களின் சத்தம் கேட்க…அங்கு சென்று வேலை செய்த ஒரு தொழிலாளியிடம் சபரிஷை பற்றி விசாரிக்க,

அவன் அந்தப் பக்கம் என்று கை காட்ட.. அங்கே ஒரு கேபின் கண்ணாடி வழியாகச் சபரிஷ் உள்ளே அமர்ந்திருப்பது நன்றாகத் தெரிந்தது…..

அவனிடம் நன்றி கூறியவள் சபரிஷின் கேபின் அருகே வந்து. தன் நெஞ்சில் கைவைத்து, சிறிது

நேரம் நின்றவள் பின் ஆழ மூச்செடுத்து .. ஒரு முடிவுடன் கதவை தட்ட..

அவனோ நிமிர்ந்து பாராமல்.. ம்ம் என்று மட்டும் சொல்ல..

“பெரிய இவன்.. உள்ள வான்னு சொன்னா வாயில் இருந்து முத்து உதிர்ந்திடுமோ” என்று அவனுக்கு மனதில் கவுண்டர் கொடுத்துவிட்டே உள்ளே சென்றாள்...

கதவை தட்டிட்டு உள்ள வந்து பேசாம என்ன பண்றாங்க என்ற எரிச்சலுடன் நிமிர்ந்து பார்க்க.. அங்கே அழகே உருவாக, அதுவும் முதன் முதலில் சேலையில் அவளைப் பார்த்ததும் தன்னை மறந்து அவளைப் பார்த்துக் கொண்டே நின்றான் சபரிஷ்....எல்லாம் ஒரு நொடிதான் பின் சட்டென்று தன்னை மீட்டவன்..

“இங்க என்ன பண்ற.. யாருகூட வந்தே.. எதுக்கு வந்தே..” என்று கேள்வி கணைகளைத் தொடுக்க..

இடுப்பில் கைவைத்து அவனை முறைத்த பிரியா.. “ஹலோ பாஸ் என்ன பாஸ் நீங்க... ஒருத்தி இவ்ளோ காலையில பச்சதண்ணி கூடக் குடிக்காம.. இங்க வந்துருக்காளே.. வாம்மா.. உட்காரு.. என்ன சாப்பிடுற..

காபி ஆர் கூல்ட்ரிங்ஸ்..... இப்படிக் கேக்கணும்... அத விட்டுட்டு.. ஏன் வந்த எதுக்கு வந்தேன்னு கேட்டுகிட்டு....
உங்களுக்கு விருந்தோம்பலே தெரியலை பாஸ்" என்றவள் அவன் எதிரே இருக்கையில் அமர...

"வளவளன்னு பேசாம வந்த விஷயத்தை மட்டும் சொல்லு" என்று தன் குரலில் அழுத்தத்தைக் கொண்டு வந்து சபரிஷ் சொல்ல. அவனின் குரலில் மாற்றத்தை உணராமல்,

சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு.. "அது வந்து நான் .. நான் உங்ககிட்ட ஒன்னு சொல்ல வந்துருக்கேன்.. அது என்னன்னா.. அது வந்து.." என்று இழுத்து... அவனுடைய பொறுமையைச் சோதித்துக் கொண்டிருந்தாள் ப்ரியா...

அவளின் அலங்காரமும், அவளின் இந்தப் பேச்சும் அவனுக்கு ....அவள்என்ன சொல்ல வருகிறாள் என்பது புரிவது போல் இருக்க,.....தன் பொறுமை காற்றில் பறந்து.. தன் கையருகே இருந்த கவரை எடுத்து.. அவள் முன் வீசினான்..

திடீரென்று தன் முன் எதுவோ வந்து விழவும்.. பயந்தவள்.. அது ஒரு கனமான கவர் என்றதும்... என்ன இது என்று அவனைப் பார்த்துப் பிரியா கேட்க..

அவனோ பதில் சொல்லாமல் அவளின் முகத்தையே பார்த்தவன் “பிரிச்சி பார்” என்பது போல் கண்ணசைக்க..

அவளோ ‘நான் என் லவ்வை சொல்றதுக்கு முன்னாடி.. நீங்க என்கிட்ட லவ் லட்டர் குடுத்து உங்க காதலை சொல்லபோறீங்களா’ என்று மனதில் நினைத்தவள் சந்தோஷமாக அதைப் பிரித்தாள்.

“ப்ரி வேணாம் ப்ரி அதைப் பிரிக்காதே” என்று மனதின் கூக்குரலை அலட்சியம் செய்து அதைப் பிரிக்க, உள்ளே சில போட்டோக்கள் தலைகீழாக இருந்தது.....மனம் ஏனோ திடீரென்று படபடவென்று அடித்துக் கொண்டது

உள்ளே இருந்ததைக் கண்டு நெற்றியை சுருக்கியவள்.. “போட்டோஸ் மாதிரி இருக்கு யாருடையது” என்று திருப்பிப் பார்க்க.... அந்தப் புகைப்படங்களைப் பார்த்து தீ சுட்டாற்போலப் பலமாக அதிர்ந்தாள் ப்ரியா..

அவளின் இதயமோ வேகமாகத் துடித்தது...

****

..... முதல் பாகம் முடிவடைந்தது.....

உன் சுவாசத்தில் நான் பாகம் 2

சுவாசம் 22

“கத்தியின்றி ரத்தம் வருகிறது
“உன் வார்த்தை எனும் போர்வாளால்!
“ஒருவரை கொள்ள ஆயுதம்
“தேவை இல்லை!!!
“ஒரு சொல்லே போதும் என்று
“புரியவைத்தாய் என்னவனே!!!

மும்பையில் இருந்து பதினெட்டு மணிநேர விமானப் பயணத்தில் சிக்காக்கோ வந்து இறங்கி…தன் இமிக்கிரேஷன் செக்கப் எல்லாம் முடித்துத் தன் ட்ராலியை தள்ளிக் கொண்டு வெளியே வந்த பிரியா… அந்த மிகப் பெரிய பிரம்மாண்ட விமான நிலையத்தில் யாரையோ தேடி தன் கண்களைச் சுழல விட,

தன்னுடைய பெயர் எழுதிய பலகையைக் கையில் தாங்கிக் கொண்டு நின்ற பெண்னை, கண்டவள்…..அவளிடம் சென்று “நான் ப்ரியங்கா” என்று அறிமுகபடுத்திக் கொண்டாள்…

“ஹாய் ப்ரியங்கா……ஐ அம் தீபா கணேஷ்..வெல்கம் ட்டு யூ.எஸ், சிக்காகோ சிட்டி” என்று அந்த ஊர் பாணியில்

ப்ரியாவை லேசாகக் கட்டி அணைத்து விட,

தீபாவின் பின்னால் இருந்து இன்னொரு குரல்….”ஹாய் பேபி…” என்று அழைத்துக்கொண்டே முன்னால் வந்து ப்ரியாவை அணைக்க முற்பட…..

“ஏய்” என்றபடி பிரியா பின்னால் நகர்ந்தாள், அதற்குள்

அவனின் சட்டையைப் பிடித்து இழுத்த தீபா….
ப்ரியாவை பார்த்து ஹி ஹி..என்ற அசட்டுச் சிரிப்பை உதிர்த்துவிட்டு..

“டேய் அடங்குடா.. உன்கிட்ட என்ன சொல்லி கூட்டிட்டு வந்தேன்.. உன் வாலை கொஞ்சம் அடக்கி வைன்னு சொன்னேன்தானே” என்று பல்லை கடித்துச் சொன்னவள்.. “டேய் தம்பி அக்கா மானத்தை வாங்கிடாதடா” என்று கெஞ்சி விட்டு.. “அந்தப் பொண்ணு ரொம்ப அமைதியாம்டா அப்பா சொன்னாங்க” என்றவள்.. ப்ரியாவிடம்…

“தப்பா நினைக்காத ப்ரி இது என் தம்பி எழில், கொஞ்சம் வாலு கொஞ்சம் சேட்டை பண்ணுவான் அவ்ளோதான்.. சரி வா போகலாம்” என்று அவளுடைய ட்ராலியை தள்ளிக்கொண்டு நகர

தன் அக்காவை முறைத்தவன் . “பிச்சூ என்னைக் குரங்குன்னு சொல்லாமல் சொல்லி காட்டுறியா.. போ நான் இப்போவே பிளைட் ஏறி இந்தியா போறேன்”

என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டான் அந்த இளைஞன்.

ஏனோ ப்ரியாவிற்கு அவனைப் பார்த்ததும் சந்துருவின் நியாபகம் வர...கூடவே பழைய சம்பவங்களும் நியாபகம் வருவது போல் இருக்க..... உடனே தன்னைக் கட்டு படுத்திக்கொண்டவள்..

ஒரு நிமிஷம் என்று அவர்களை அழைத்தவள் " டோன்ட் கால் மீ பேபி & ப்ரி ஆல்சோ..... ஜஸ்ட் பிரியங்கா இஸ் இனஃப்" என்று சொல்லிவிட்டு அவர்களுக்கு முன்னாள் நடக்க..

அக்கா தம்பி இருவரும் ஒருவரை ஒருவர் புரியாமல் பார்த்துவிட்டு, பின் தன் தோளை குலுக்கி கொண்டு அவள் பின்னே சென்றனர்..

மீண்டும் நான்கு மணிநேர பயணத்திற்குப் பிறகு அவர்கள் வந்த கார் இண்டியாநா பொலிஸ் என்ற இடத்தில் உள்ள , ஒரு அப்பார்ட்மெண்டின் உள்ளே சென்று நிற்க, காரில் இருந்து இறங்கிய பிரியாவிடம்.....

"பிரியங்கா இதுதான் எங்க பேலஸ் சன்லேக் அப்பார்ட்மெண்ட்" என்று சொன்னவள், வா உள்ளே போகலாம், என்று அழைதாள்

"இதுதான் நான் தங்க போற இடமா" என்று வாய்

திறந்தாள் ப்ரியா..

உடனே “ஹே பிச்சூ இந்தப் பொண்ணு ஊமை இல்ல” என்று எழில் கத்த,

“அடேய்” என்று அவன் அக்கா முறைக்க,

“பின்ன என்ன பிச்சூ ..நானும் இவங்க வந்ததுல இருந்து பார்த்துகிட்டுதான் இருக்கேன்…. ரொம்ப அமைதியா இருந்தாங்களா அதான் ஒருவேளை ஊமையோன்னு நினைச்சேன்” என்று எழில் சொல்லவும்..

“டேய் வானரம், ஊமையா இருந்தா எப்படிடா ஏற்போட்ல பேசுச்சு அந்தப் பொண்ணு” என்று அவன் காதை கடிக்க,

“அட ஆமால்ல….” என்றபடி அவன் அசடு வழிய

இவர்களின் சம்பாஷணையைக் கண்டும் காணாமல் பார்த்தவளின் நினைவில், “ப்ரி கொஞ்சம் அமைதியா இருக்கியா” என்று மோகனா சொல்வதும்

“மோஹி, ஹா ஹா நான் அமைதியா இருந்தா இந்த உலகம் அழிஞ்சிடாது” என்று தானும் இதே போல்தானே பேசி மோகனாவிடம் விளையாட்டுதனமாக இருப்போம்…… ஆனால் அந்த விளையாட்டு தனத்தால் தான் இழந்ததை

எண்ணி…..அவள் முகம் கசங்கியது….

ப்ரியாவின் முகத்தைப் பார்த்த தீபா, ‘ஏண்டா’ என்பதுபோல் தம்பியை பார்த்து முறைத்துவிட்டு,

“நீ வா ப்ரியங்கா…. நீ பக்கத்து அப்பார்ட்மெண்ட்ல மேல உள்ள ரூம்ல தான் தங்க போற சரியா, இப்போ ஏதாவது சாப்பிட்டு இங்க தூங்கு ஜெட்லாக் இருக்கும் இல்ல…. அப்புறம் பிரெஷ் ஆயிட்டுக் கொஞ்சம் வெளியே போய் வீட்டுக்கு தேவையானது எல்லாம் பர்சேஸ் பண்ணிட்டு வரலாம்”.. என்று ப்ரியாவை அழைத்துக்கொண்டு வீட்டின் வாசலில் வந்து நின்று மணியை அழுத்தவும்

டப் என்ற சத்தத்துடன் பலூன் வெடிக்க ப்ரியாவின் மேல் ரோஜா பூ கொட்டியதோ?

ஹா ஹா அதுதான் இல்லை ஒரு பக்கெட் பனி கொட்டியது அவளின் மேல்..

இதை எதிர்பார்க்காத பிரியா அப்படியே இரு கையையும் தன் தலையில் வைத்துக் கொண்டு நின்றுவிட்டாள்.

அதிர்ந்த தீபா.. இது யாரு வேலை என்று தன் தம்பியை பார்க்க..

அவன் அந்த இடத்தில் இருந்தால் அல்லவா.. தன் அக்கா காலிங் பெல் அடிக்க அதில் கை வைக்கப்

போதும், போதே ஆள் எஸ் ஆகிவிட்டான்..

அதைக் கண்டு பல்லை கடித்த தீபா.. “ஸாரி ப்ரியங்கா” என்று சொல்ல

“பரவா இல்லை” என்று ப்ரியா சொல்ல.....வீட்டின் உள்ளே சென்றார்கள்..

“நிக்கி.... பாலா.... இங்க வாங்க , புதுசா வந்துருக்கிற ஆன்ட்டியை வெல்கம் பண்ணுங்க” என்று தன் குழந்தைகளை அழைக்கவும்,

அழகான இரு குழந்தைகள், அமைதியாக வரவும், தீபாவிற்கோ திக் என்றது “ஆஹா என்னது ரெண்டும் அமைதியா வருதுங்க, இதுல ஏதோ உள்குத்து இருக்கே...என்னவா இருக்கும் ஹ்ம்ம்” என்று யோசித்தவள், குழந்தைகளின் பின்னாடி பார்க்க அங்கே எழில் நின்றுகொண்டிருந்தான்...

அவனைப் பார்த்து தீபா “இதெல்லாம் உன் வேலையாடா” என்று முறைக்க,

“பிச்சூ வெளியே நடந்ததுக்கு நான் பொறுப்பு இல்லை... நான் ரோஸ் தான் பலூன் புல்லா நிரப்பிக் கட்டிட்டு, நம்ம பெரிய வானரத்துக்கிட்ட “டேய் வர்ற ஆன்ட்டியை நாம அழகா வெல்கம் பண்ணனும்ன்னு சொல்லி கொடுத்துட்டு வந்தேன்..... ஆனா, உன் சின்ன வானரம்தான் இந்த ஐடியா கொடுத்துருக்கு, இதுக்கும்

எனக்கும் சம்பந்தம் இல்ல சொல்லிட்டேன்”

“அப்படியா டா”.. என்று தன் பெரிய மகனிடம் தீபா கேட்க,

“எஸ் மாம்” என்று சொன்னவனைக் காதை பிடித்துத் திருக போன தீபாவை தடுத்த ப்ரியா,

குழந்தைகளிடம் மண்டியிட்டு..
“உங்க வரவேற்பு எனக்கு ரொம்பப் பிடிச்சு இருந்தது…. தேங்க்ஸ்” என்று சிறு புன்னகையுடன் ப்ரியா சொல்ல,

“ஸாரி ஆன்ட்டி” என்று இருவரும் ப்ரியாவின் கன்னத்தில் முத்தம் வைத்தனர்.

“உங்க பேர் என்னன்னு சொல்லுங்க குட்டீஸ்” என்று ப்ரியா கேட்கவும்.

“மை நேம் இஸ் பாலா பிரத்யும்” என்று சின்னவனும்,

“ஹாய் ஆன்ட்டி மை நேம் இஸ் ரிஷப் நிகேதன்” என்னை என் மாம் மட்டும் நிக்கின்னு சொல்லுவாங்க, பட் எனக்கு ரிஷின்னு கூப்பிட்டாதான் பிடிக்கும், சோ நீங்களாவது என்னை அப்படிக் கூப்பிடுங்க” என்று சொல்லவும்.

“ரிஷி” என்று உச்சரித்தவள், அந்தப் பெயரின் தாக்கத்தில்….அப்படியே அதே இடத்தில் மயங்கி

சரிந்தாள்…

பிரியா கண்விழித்த பொழுது…..ஒரு அறையின் கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தவள்….தனக்கு என்னானது என்று யோசிக்க…. சற்றுமுன் நடந்த நிகழ்வுகள் அனைத்தும் நினைவுக்கு வந்தது….. கடைசியில் ரிஷி என்று கூறிக் கொண்டு மயங்கி விழுந்ததை நினைத்தவள்……

ஆறு மாதமாகியும் அந்தப் பெயரின் தாக்கம் எவ்வளவு முயன்றும் தன்னை விட்டு நீங்காமல் இருப்பதைக் கண்டு மனம் கலங்கி கண்கள் கலங்கி நின்றாள்…

தன்னையும், தன்னைச் சுற்றியுள்ளவர்களையும் என்றும் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும்… அழுவது மனதின் கோழைத்தனம் என்று நினைப்பவள்….. தன்னவன் ஏற்படுத்திய காயம் தாங்க முடியாமல், கண்களில் கண்ணீர் வழிய

“ஏன் ரிஷி அப்படிச் சொன்னிங்க ….ஒரு வார்த்தை என்ன நடந்ததுன்னு என்கிட்ட கேட்டு இருக்கலாமே…. யாரோ என்னவோ சொன்னா உடனே நம்பிடுவீங்களா.. அந்த அளவுக்குத்தான் நான் உங்க மனசுல பதிஞ்சிருக்கேனா….. ஆனா நீங்கதான் என் உயிர் ரிஷி…..மனசு ரொம்ப வலிக்குது ரிஷி” என்று

வாய்விட்டு கூறியவள்.

அவன் சொன்ன வார்த்தையின் கணம் தாங்க முடியாமல் கதறி அழுதாள்.... எவ்வளவு முயன்றும் கட்டுபடுத்த முடியாமல், சுனாமியாய் தன்னைப் புரட்டி போட்ட அந்த நாளை எண்ணி தன் மனம் போவதை தடுக்க முடியாமல், அந்த அறைக்குள் மூச்சு முட்டுவது போல் இருக்க, கட்டிலில் இருந்து எழுந்து, அங்கிருந்த ஜன்னலோரம் சென்று நின்று தூரத்தில் தெரிந்த இருளை வெறிக்க ஆரம்பித்தாள்.....

கண்கள்தான் இருளை வெறித்ததே தவிற அவள் மனமோ ஆறு மாதத்திற்க்கு முன், ஆழி பேரலையாய் தாக்கிய அந்த நாளை நோக்கி சென்றது.....

தான் எவ்வளவு ஆசையாகத் தன் காதலை சொல்ல சென்றோம் என்பதை நினைத்தவளுக்கு இப்பொழுதும் மனம் வலித்தது...

*****

தன் கையில் உள்ள புகைபடத்தைத் திருப்பிப் பார்த்தவள்.... தீச்சுட்டார் போல் அந்தப் போட்டோக்களை டேபிளில் போட்டுவிட்டு எழுந்து நின்றாள்.. அந்த ஏ.சி அறையிலும் வேர்த்து விறுவிறுத்துப் போய்....அந்த போட்டோக்களையே பார்த்திருந்தாள் பிரியா..

அவளுக்கு அந்தத் தினம் கண்முன் படமாக விரிய.. அவளால் நிற்கக்கூட முடியவில்லை.. எங்கே விழுந்துவிடுவோமோ என்று நினைத்தவள்.. பிடிமானதுக்காக. டேபிளை இறுக பற்றிக்கொண்டாள்.. நெஞ்சில் ஒருவித வலி எழ இடது கையால் தன் நெஞ்சை சிறிது நீவி வீட்டவள்.. டேபிளில் இருந்த கிளாஸை எடுத்து அதில் இருந்த தண்ணீரை குடித்தாள்....

தன்னைச் சிறிது கட்டுப்படுத்திக் கொண்டவள் நிமிர்ந்து சபரிஷை பார்த்து நடுங்கும் குரலில் “இது இந்தப் போட்டோ உங்ககிட்ட எப்படி வந்தது” என்று கேட்டாள்.. கூடவே சைலேஷின் நியாபகம்... அவன் விட்ட சவாலும், பின்னிரவில் அவன் தீடீரென்று தன்னிடம் வந்து மன்னிப்பு கேட்டதன் காரணம் புரியாமல் தவித்தவள்....இது அனைத்தும் அவன் சூழ்ச்சி என்று புரிந்ததும் உள்ளுக்குள் இறுகிப்போனாள் முதல் முறையாக..

அவள் மனமோ நேற்று இரவு சைலேஷ் தன்னிடம் வந்து மன்னிப்பு கேட்டதை நினைத்து பார்த்தது....

நேற்று இரவு மோகனா மொட்டை மாடிக்குச் சென்றதும் வெளியே வந்த பிரியா. அங்குச் சில மாணவர்கள் மட்டும் இருப்பதைப் பார்த்துவிட்டு வேலுவை தேட....அங்கு தோட்டத்தில் வேலு தென்பட்டான்.. அவனிடம் சென்று சாதாரணமாகப்

பேசுவது போல் பேசி.. சில விபரங்களைச் சேகரித்தாள்..
அப்பொழுது அங்கு வந்த சைலேஷ் ப்ரியாவிடம், அழுவதுபோல் முகத்தை வைத்துக்கொண்டு, “என்னை மன்னிச்சிடு ப்ரியா…இனிமே உன் பக்கமே வர மாட்டேன்” என்று அவளிடம் மன்னிப்பு கேட்க,

இந்தத் திருப்பத்தை எதிர் பாரத ப்ரியா “என்னாச்சு இவனுக்குக் கொஞ்ச நேரம் முன்னாடி கூட அப்படிச் சவால் விட்டான்…இப்ப இந்தப் பம்மு பம்முறான்….என்னவா இருக்கும்” என்று சிந்தித்தவள் அவனிடம் எதுவும் கூறாது வீட்டினுள் சென்று விட்டாள்..
சைலேஷ் விஷம சிரிப்புடன் சென்றது பாவம் அவளுக்குத் தெரியாமலே போய்விட்டது….

நிமிர்ந்து ரிஷியை பார்த்து “இப்போ இந்தப் போட்டோஸை வைச்சி நீங்க என்ன சொல்ல வரிங்கன்னு நான் தெரிஞ்சிக்கலாமா” என்று அவன் கண்ணைப் பார்த்து நேருக்கு நேர் கேட்டாள் ப்ரியா…..

சபரிஷும் அவள் வந்ததிலிருந்து அவள் முகபாவணைகளைத்தான் கவனித்துக் கொண்டிருந்தான்……
தன்னைக் காண வந்துவிட்டு பேச தயங்குவதும், பின் தான் அவள் முன் தூக்கி எறிந்த புகைப்படங்களைக் கண்டு அதிர்ந்ததும், பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு நேருக்கு நேர் கேள்வி கேட்டதையும்

கண்டவனுக்குக் கோபம் வந்தது.

‘எவ்வளவு தைரியமிருந்தா செய்யறதை எல்லாம் செஞ்சிட்டு இப்படித் தைரியமா என் முன்னாடியே நின்னு கேள்வி கேட்பா’ என்ற கோபத்துடன் வார்த்தைகளைச் சிதற விட்டான்…..

“உன்னோட காதல் விளையாட்டில் நான் எத்தனையாவது ஆளு” என்று கொஞ்சமும் யோசியாது ,அந்த வார்த்தையின் வீரியம் அறியாது வார்த்தைகளை விட்டான்…

அதைக் கேட்டுத் துடித்துப் போனாள் பிரியா, இருந்து தான் கேட்ட வார்த்தையின் அர்த்தம் சரிதானா என்று எண்ணி அவனிடமே “என்ன சொன்னீங்க ….எனக்கு புரியல”

பாவம் அவன் இருந்த மனநிலையில் கொஞ்சமும் யோசியாது பேசிய வார்த்தைகளால் பிற்காலத்தில்.. மிகவும் சிரமபட வேண்டியதாக இருக்கும் என்று தெரியாததாலும், ஒரு நேர்மையான பெண்ணால் மட்டுமே கண்ணைப் பார்த்து பேச முடியும் என்பதைக் காலம் கடந்து உணர போவதாலும்……. தன் கோபம் என்னும் ஆயுதம் தாக்க அவள் மனதை குத்திக் கிழித்தான்….

“இதுல புரியாததுக்கு என்ன இருக்கு, நீ என்னைப் பார்க்க எதுக்கு வந்துருக்கேன்னு எனக்குத் தெரியும்….

இந்த மாதிரி நீ யாருகிட்ட எல்லாம் சொல்லியிருக்கேன்னு கேட்குறேன்.....அதாவது உன் காதல் நாடகத்துல நான் உனக்கு எத்தனையாவது ஆள் என்று கேட்டேன்" என்றவன்...." உன் வயசு என்ன என் வயசு என்ன.... நான் பணக்காரன்னதும் என் வயசு கூட உன் கண்ணனுக்குத் தெரியலையா, என்னைப் பார்த்து என்மேல் லவ் வந்துடுச்சா....உன்னை படிச்சிட்டுஇருக்கிற சின்னப் பெண் என்று நினைத்தேன் ஆனா.. நீ" என்று நக்கலாக ஒரு பார்வை பார்க்க....
அவன் பார்வையில் துடிதுடித்துப் போய்விட்டாள்....

அவள் அவனுக்காக மனதில் கட்டி வைத்திருந்த காதல் சாம்ராஜ்யத்தில் கீறல் விழுந்தது, இருந்தும் தன் மனதை திடபடுத்திக் கொண்டு, "இன்னுமே நீங்க என்ன சொல்ல வரீங்கன்னு எனக்குப் புரியலை அப்படி என்ன உங்களுக்கு வயசு அகிடிச்சி" என்று கேட்டாள் ப்ரியா..

இவ்வளவு சொல்லியும் அவள் புரியாமல் இருப்பது போல் நடிக்கிறாள் என்று எண்ணி , கோபம் தலைக்கேற "முதல்ல இந்தப் போட்டோவில் உன்கூட இருக்கிறானே அந்தச் சைலேஷ்... அவன்கூடக் காதல்ங்கிற பேருல அவன்கூட ஊர் சுத்தி தராளமா பழகிட்டு...."தராளம்" என்பதில் அழுத்தம் கொடுத்து சொன்னவன்..... இங்க என்னைப் பார்த்ததும் அவனை விட நான் பெஸ்ட்ன்னு நினைச்சு அவனைக் கழட்டி

விட்டுட்டே..... அப்படித்தானே....." எப்போ பாரு பசங்க கூடவே பேச வேண்டியது ச்ச...

"ஸ்டாப்பிட் மிஸ்டர் ரிஷி" என்று தன் பலம் மொதத்தையும் சேர்த்து தன் வலகையால் டேபிளில் அடித்தாள் ப்ரியா, ஒரு பெண் எதை வேண்டுமானாலும் தங்கிக்கொள்வாள் ஆனால், தன் கேரக்ட்டரை தப்பா பேசினால் ஒரு நாளும் பொறுத்துக்கொள்ள மாட்டாள்..

அவனை நேருக்கு நேர் பார்த்து தனது சுட்டுவிரலை நீட்டி "அடுத்த வார்த்தை உங்க வாயில் இருந்து வந்ததுச்சி" என்று எச்சரிக்கை விடுத்தாள் அவள்.. அவள் ஓங்கி அடித்ததில் கையில் அவள் அணிந்திருந்த கண்ணாடி வளையல்கள்.. உடைந்து ப்ரியாவின் கையில் கீறி ரத்தம் சொட்டியது..

தன் கண்ணை இறுக மூடி, தன் கோபத்தைக் கட்டுப்படுத்தியவள்,
"எனக்கும் அந்தச் சைலேஷ் சொன்ன விஷயத்துக்கும் கொஞ்சம் கூடச் சம்பந்தம் இல்லை ஆனா இப்போ அதை உங்க கிட்ட நிரூபிக்க வேண்டிய அவசியமும் இனி எனக்கு இல்ல" என்று ப்ரியா மன வலியுடன் சொல்ல...

"உன்னால எப்படி நிருபிக்க முடியும்...கண்முன்னே ஆதாரம் இருக்கும் போது உன்னால எப்படிப் பொய்

சொல்ல முடியும்” என்று
அவன் அந்தப் போட்டோக்களைக் கண்களால் காட்டி கேட்டான்.

நடுங்கும் இடது கையால் அந்தப் புகைப்படங்களை எடுத்தவள், “இப்போ என்ன நான் இந்தப் போட்டோஸ்க்கு விளக்கம் சொல்லனுமா” என்று தலையை மேலும் கீழும் ஆட்டி கேட்டவள் , கண்ணில் கோபத்தைத் தேக்கி
“இதுக்கு நான் உங்களுக்கு விளக்கம் சொல்லி , என்னை நான் உங்க கிட்ட நிருபிக்கனும்ன்னு அவசியம் இல்லை ரிஷி” என்றவள். அந்தப் போட்டோக்களை அந்த அரையெங்கும் விசிறி அடித்தாள் பிரியா.

அப்பொழுதாவது அவன் சும்மா இருந்திருக்கலாம் .. மறுபடியும் மறுபடியும் வார்த்தையை விட்டான்
“உண்மையைச் சொன்ன கசக்குதோ” என்றான்.

அவனைக் கை நீட்டி “போதும் ரிஷி” என்று தடுத்தவள்.. அவனைப் பார்த்துக் கொண்டே,
“உங்களைப் பத்தி சரியா புரிஞ்சிக்காமல் இங்க வந்தது என்னோட தப்பு” என்றவள்...

“நான் எதைச் சொல்ல இங்க வந்துருக்கேன்னு நீங்க நினைச்சீங்களோ, அது உண்மைதான், ஆனால் அதை இனி என் வாயால் ஒருநாளும் நீங்க கேக்கப்

போவதில்லை... யாரோ எவனோ சொல்லி தீர விசாரிக்காமல் உடனே என் கேரக்டரை சந்தேகபட்ட நீ..” என்று சற்று இடைவெளி விட்டவள் .. “எனக்கு வேண்டாம்” என்றவளுக்கு ஓவென்று கத்தி அழவேண்டும் போல் இருந்தது.

ஏன்னென்றால் அவனுக்காக அவள் மனதில் கட்டிவைத்த காதல் சாம்ராஜ்யம் சுக்கு நூறாக உடைந்து தரைமட்டம் ஆனது.....ஆனால் தன்னை இந்த அளவுக்கு மட்டமாக நினைத்த இவனின் முன் அழக்கூடாது என்று வைராக்கியமாக நினைத்தவள்.. “குட் பை ஃபார்எவர் மிஸ்டர் சபரிஷ்” என்று தலை நிமிர்ந்து கூறியவள் ஒரு புயலை போல் வெளியேறினாள்

*****
சுவாசம் தொடரும்.

சுவாசம் 23

“உன் கோபத்தை ரசித்தேன்”
உன் புன்னகையை ரசித்தேன்
“உன் விளையாட்டுதனத்தை ரசித்தேன்!!! “ஆனால் உன்

விலகலை மட்டும்
“ஏனோ ரசிக்கமுடியவில்லை தோழியே!!!

அவனை திரும்பியும் பாராமல் புயலை போல் வெளியேறிய ப்ரியா விறுவிறுவென்று நடந்து மெயின் கேட்டில் வந்து நின்றாள்…

அவள் மனமோ கொதித்துக் கொண்டு இருந்தது……”என்ன வார்த்தை சொல்லி விட்டான், பணத்தை பார்த்து இவனை காதல் செய்ய வந்தேனாமா….யாருக்கு வேணும் இவனுடைய பணம்……என் அப்பா எனக்கு சேர்த்த வைத்த பணத்தில் கால் பங்கு தேறுமா இவனுடையது….. என் கேரக்டரையே சந்தேகபட்டுட்டானே” என்று அவள் உள்ளம் குமறியது….

அவளுக்கு கண்ணெல்லாம் இருட்டிகொண்டு மயக்கம் வருவது போல் இருக்க.. “ச்ச இல்ல எனக்கு ஒன்னும் இல்ல.. நான் நல்லா இருக்கேன்” என்றுமனதில் உறுவேற்றியவள் எந்த திசையில் நடந்து போகிறோம் என்று தெரியாமல் மனம் போன போக்கில் செல்ல தொடங்கினாள்…

அவள் கண்முன்னே அந்த கருப்பு தினம் கண்முன் மீண்டும் படமாக விரிய.. அன்று நடந்தவை சுற்றி சுழன்று அடித்தது அவளை…..அதை தாங்கமுடியாமல்

இன்னும் வேகமாக நடந்தாள்..

அதன் பின் இந்த பதினேழு நாள் நடந்தவைகள் அனைத்தும் நினைக்க நினைக்க அதில் எல்லா இடத்திலும் சபரிஷே நிறைந்திருந்தான்.. இப்பொழுது அவளுக்கு நன்றாக புரிந்தது. தான் எந்த அளவுக்கு அவனை காதலிக்கிறோம் என்று.. ஆனால் அவனுக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கவில்லை என்பதை காலதாமதமாக புரிந்துக் கொண்டாள்....

சற்று முன் அவன் அவளிடம் , "நான் உனக்கு எத்தனையாவது" என்று அவன் கேட்ட கேள்வி மீண்டும் மீண்டும் அவள் காதில் ஒலிக்க.. இரு கைகளால் தன் காதை பொத்திக்கொண்டாள்...

எல்லா நிகழ்வுகளும் அவளை சுற்றி சுற்றி அடிக்க.. தாங்க முடியாமல் "அம்மா" என்று கத்தியபடி....சுற்றுப்புறம் மறந்து ஆற்றுவார் தேற்றுவார் இன்றி நடுரோட்டில் அமர்ந்து கதறினாள்,

அழவே பிடிக்காத ப்ரியா , யாரு அழுதாலும் அதை தாங்காமல் அவர்களை உடனே சிரிக்க வைக்கும் ப்ரியா, எதற்குமே கலங்காத ப்ரியா.. தன்னை சுற்றி இருக்கும் எல்லோரையும் தன் குறும்புத்தனத்தால் சந்தோஷமாக வைத்திருக்கும் ப்ரியா இன்று யாருமற்ற அனாதையாக நடுரோட்டில் கதறினாள். தன் காதல் கானல் நீராய் போனதற்காக ...

அவள் அழுவது அந்த வருண பகவானுக்கே பொருக்கவில்லையோ..... ஆதரவற்ற நிலையில் அழும் அவளை கண் கொண்டு காணமுடியமல்.. தன் கோபத்தை இடி, மின்னலாக மாற்றி மழையாக பொழிய செய்து அவளின் கண்ணீரை துடைக்க முயன்றன.....

*****

பிரியாவை எதிர்பார்த்து வாசலிலேயே நின்று கொண்டிருந்தாள் மோகனா...

மழை வரும் போல இருக்கவே... "என்னாச்சு ஏன் இவ்வளவு லேட்டுன்னு தெரியலையே....வானம் வேற இருட்டிட்டு இருக்கு....மழையில நனைஞ்சா அவ உடம்புக்கு ஒத்துக்காதே" என்று கையை பிசைந்து கொண்டு நின்றவளை பார்த்த சந்துரு.. அவள் அருகில் வந்து..

"என்ன குட்டிமா.. இங்க ஏன் நிக்கிற.. உள்ள வா.. பாரு மழை வர்ற மாதிரி இருக்கு" என்றான்..

ஆனால் அவள் அவனை கவனிக்காமல்.. வெளியே பெரிய கேட்டையே பார்த்துக் கொண்டிருக்க....

“நான் என்ன சொல்லிட்டு இருக்கேன்.. நீ என் பேச்சை கவனிக்காம வெளிய வேடிக்கை பார்த்துட்டு இருக்கே” என்றவன் அப்பொழுதுதான் கவனித்தான் பிரியா அங்கில்லை என்று..

“ஆமா இந்த வாலு எங்க போனா.. உன்ன விட்டு அப்படி இப்படி நகர மாட்டாளே.. எங்க காணோம்” என்று அவளிடம் கேட்டான் சந்துரு.

சந்துரு ப்ரியாவை பற்றி கேட்டதும்.. அவனை பார்த்தவள்.. மீண்டும் வெளியே பார்க்க.. பயங்கர காற்றுடன் மழை கொட்டியது…

“ஐயோ மழை வேற வருதே.. இந்த லூசு வேற போற அவசரத்தில போனை கூட எடுத்துட்டு போகலை.. இப்போ இவங்க வேற கேக்குறாங்களே.. இப்போ நான் என்ன சொல்லி சமாளிக்க” என்று முழித்துக் கொண்டிருக்க….

அவளின் முகத்தை பார்த்தவன் ஏதோ சரி இல்லை என்று தோன்றவும்
“மோகனா பேபி எங்க” என்று குரலில் அழுத்தம் கொடுத்து கேட்டான்… ஏனென்றால் மோகனா இல்லாமல் பிரியா எங்கும் தனியாக போக மாட்டாள்…

இல்லையென்றால் ப்ரியாவிற்கு துணையாக நான் போகவேண்டும்.. இப்பொழுது மோகனாவும், நானும் இங்கிருக்க பிரியா எங்கே..???

‘போச்சு போச்சு இனி என்கிட்டே இருந்து பதில் வராம விட மாட்டாங்க’ என்று நினைத்தபடி மீண்டும் அமைதியுடன் அவனை பார்க்க

அவள் கையை பிடித்து உலுக்கி.. “கேக்குறேன்ல சொல்லு, பேபி எங்க.. இன்னும் எழுந்துரிக்கலையா.... ரூம்ல இருக்காளா” என்று அவளின் அறைபக்கம் செல்ல திரும்பினான்.

அவனை தடுத்த மோகனா.. “அவ ரூம்ல இல்ல” என்றாள் தயங்கி கொண்டே

“ரூம்ல இல்லன்னா.. மேகா கிட்ட பேசிட்டு இருக்காளா” என்று கேட்க

“இல்லை” என்று இடம் வலமாக தலையாட்ட..

அதை பார்த்த சந்துருவுக்கு பொறுமை பறந்தது.. “இப்போ நீ சொல்ல போறியா இல்லையா”

“அவ அவ பெரியத்தானை பார்க்க சுகர் பேக்டரிக்கு போயிருக்கா” என்று உண்மையை சொல்லிவிட்டாள்

மோகனா..

“என்ன அண்ணனை பார்க்க போயிருக்காளா.. எதுக்கு.. யாருகூட போனா.. எப்போ போனா.. ஒழுங்கா சொல்லி தொலையேன்” என்றான் சிறு எரிச்சலுடன்…

இப்போது மோகனாவுக்கு கோபம் வந்துவிட்டது.. முகத்தை திருப்பியவள்.. “அவ உங்க அண்ணனை விரும்பறா.. அதை அவங்ககிட்ட சொல்ல போயிருக்கா” என்று பட்டென்று மோகனா சொல்லிவிட்டதும்

“என்னது பேபி லவ் பண்றாளா.. அதுவும் என் அண்ணனையா” என்று சந்துரு ஆச்சர்யமாக கேட்க..

“ஆமா இன்னும் ரெண்டு நாள்ல கிளம்பனும் இல்ல…. சோ இன்றைக்கு எப்படியும் அவளோட காதலை சொல்லிட்டு கையோட அவங்களையும் கூட்டிட்டு வரேன்னு சொல்லிட்டு போனா, ஆனா இன்னும் அவளை காணோம்.. மழை வேற வேகமா பெய்யுது.. போனும் கொண்டு போகலை.. அதான் அவ வராளான்னு வாசலையே பார்த்துட்டு நிக்கிறேன்.. நீங்க என்னடான்னா என்னை திட்டுறீங்க.. போங்க என்கூட பேசாதிங்க” என்று முறுக்கி கொள்ள,

“ஹே குட்டிமா நீ சொல்றது உண்மையா.. பேபி அண்ணாவை காதலிக்கிறாளா.. அவளை நான் குழந்தைன்னுல நினைச்சேன்.. அப்போ அவ எனக்கு மைனி யா.. அஸ்கு புஸ்கு நான் அப்படியெல்லாம் கூப்பிட மாட்டேன்.. எனக்கு என் பேபி எப்போவும் பேபி தான்” என்றவன் திடீரென்று..

“ஆமா இவ அண்ணனை விரும்புறா ஓகே.. அண்ணாவும் இவளை விரும்புறாரா” என்று சரியாண பாய்ன்ட்டை பிடித்தான் ,

“ஆமா சந்துரு இதை நாங்க யோசிக்கவே இல்ல…இப்ப என்ன பண்றது….அவளை வேற காணோம்” என்று பதட்டமாக சொல்ல

“ஒன்னும் பிரச்சணை இல்ல.. பேபி இந்த வீட்டுக்கு மருமகளா வந்தா மொதல்ல சந்தோஷபடுறது நான்தான்.. அதே மாதிரி.. சப்போஸ் அண்ணாக்கு இதுல விருப்பம் இல்லையென்றால்.. பேபி கிட்ட எடுத்து சொல்லி புரியவெச்சு கூட்டிட்டு வருவாங்க.. சரியா” என்றவனுக்கு தெரியவில்லை தான் தன் அண்ணின் மேல் வைத்த நம்பிக்கை பொய்த்து போகும் என்று…

“இன்னும் கொஞ்சநேரம் பார்க்கலாம்.. ஏன்னா மழை பெய்யுதுல்ல.. சோ வெயிட் பண்ணி வருவாங்களா

இருக்கும்”

“சரி” என்று மோகனா சொன்னாலும்.. மனம் தவிப்பாகவே இருக்க.. மீண்டும் வெளியே பார்த்தாள்…

மோகனாவின் தவிப்பை பார்த்தவன்.. “இரு அண்ணாக்கு போன் பண்றேன்.. எங்க இருக்காங்க…. கிளம்பிட்டாங்களா இல்லையான்னு நீ டென்ஷன் ஆகாதே” என்றவன் தன் அண்ணன் மொபைல்க்கு முயற்சி செய்ய.. அது அடித்து கொண்டே இருந்ததே தவிர அந்த பக்கம் எடுக்க படவில்லை.. மீண்டும் ஒரு முறை முயற்சித்தவன்… மறுபடியும் அதே போல் ஆக.. லேண்ட்லைன் போன்க்கு முயற்சித்தான் அதுவும் அவ்வாறே யாரும் எடுக்க வில்லை என்றதும்…..

“போன் எடுக்கல….சரி நான் ஒரு எட்டு போய் பார்த்துட்டு வந்துடுறேன்.. நீ உள்ளே போ” என்றதும்.. மோகனா..

“நானும் வரேன்.. எனக்கு ப்ரியை உடனே பார்க்கணும்.. அவ வெட்க படுற அந்த கண் கொள்ளா காட்சியை என் மொபைல்ல போட்டோ எடுக்கனும்.. ப்ளீஸ் என்னையும் கூட்டிட்டு போங்க” என்று கெஞ்ச.. அவளை பார்த்து சிரித்தவன்…

“நீ சும்மா கேட்டாலே போதும் அதை செய்வேன்.. இப்போ நீ இப்படி கெஞ்சினா வரவேண்டாம் என்றா சொல்லுவேன்.. சரி வா போகலாம்” என்றவன்.. தன் இனோவாவை கிளப்ப. மோகனா முன்னால் ஏறி அமர.. சுகர் பேக்டரியை நோக்கி காரை செலுத்தினான் சந்துரு……

……..

தன் முதலாளி சொன்ன வேலையை முடித்த சித்தன்.. தனது இரு சக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தான்…

ரோட்டில் ஒரு இடத்தில் யாரோ அமர்ந்து இருப்பது போல் தெரிய.. வேகமாக சென்று வண்டியை நிறுத்தி.. அது யார் என்று பார்க்க.. அது ப்ரியா என்றதும்.. அதுவும் கதறி அழுது கொண்டிருப்பதை பார்த்து பதறியவன்…

“ அம்மா நீங்க எங்கே இங்க அதுவும் இப்படி மழையில நடுரோட்டில் உக்காந்து இருக்கீங்க.. எதுக்குமா அழறீங்க”.. என்று கேட்க.. அவள் அவன் வந்ததையும் பேசுவதையும் உணராமல் அழுது கொண்டிருக்க,

அவள் நிலையை கண்ட சித்தன்....உடனே தன் முதலாளிக்கு தெரியபடுத்த வேண்டும் என்று எண்ணி தன் மொபலை எடுக்க.....

“ச்ச இப்போ பார்த்து மொபைல் மழையில் நனைஞ்சி போச்சி.. எதுக்கு இப்படி அழறாங்கன்னே தெரியலையே” என யோசித்தவன் அவளை அங்கிருந்து எழுப்பும் முயற்ச்சியில் ஈடுபட்டான்.....அது பலிக்காமல் போகவே
“சரி நம்ம பேக்டரி பக்கத்துலதானே இருக்கு.. அய்யாகிட்ட நேரிலே விஷயத்தை சொல்லி அவரை இங்கு கூட்டிட்டு வருவோம்” என்று நினைத்தவன் தனது வண்டியில் கிளம்பினான்...

.....

இருபது நிமிட பயணத்தில் .. சந்துருவின் கார் சுகர் பேக்டரிக்குள் நுழைந்தது..

வண்டியை அதற்குறிய இடத்தில் நிறுத்தியவன்.. “நீ இங்கேயே இரு நான் போய் பார்த்துட்டு வரேன்”.. என்றவன் இறங்கி உள்ளே சென்று தன் அண்ணனின் கேபினை தட்டி திறந்து, சந்தோஷமாக உள்ளே செல்ல.....அங்கே தன் அண்ணனை தவிர வேறு

யாரும் இல்லாததால் சுற்றி முற்றி பார்த்தவன்..
“அண்ணா” என்று அழைத்தான்..

சபரிஷோ பிரியா கோபமாக பேசி சென்றதையே
நினைத்துக் கொண்டிருந்தான்... அதுவும் அவள்
கடைசியாக சொன்ன “என்னை சந்தேகபட்ட நீ
எனக்கு வேண்டாம்” என்ற வார்த்தை மட்டும் அவன்
காதில் மீண்டும் மீண்டும் ஒலித்து கொண்டிருந்தது..

தன் அண்ணனின் நிலையை கண்ட சந்துரு “அண்ணா
பேபி எங்க” என்று கொஞ்சம் சத்தமாக கேட்க...
ப்ரியாவின் நினைவுகளில் இருந்து களைந்தவன்
தம்பியை பார்த்தான், ஆனால் ஆனால் கேட்ட
கேள்விக்கு பதில் இல்லை அவனிடத்தில்..

“அண்ணாக்கு என்னாச்சு.. பேபி இங்க இல்லைன்னா...
அப்போ எங்க போனா” என்று யோசித்தவன்
கண்ணில் அரையெங்கும் சிதறி கிடந்த
புகைப்படங்களை கண்டவன்.. பலமாக அதிர்ந்தான்..

உடனே ஒரு படம் விடாமல் வேகமாக
அதையெல்லாம் எடுத்தவன்.. தன் அண்ணனிடம்..
அந்த படங்களை காட்டி.. “அண்ணா இது எப்படி இங்க
வந்தது.. யாரு வந்தா .. அந்த சைலேஷ் நாய்
வந்தானா”.. என்று அடக்கப்பட்ட ஆத்திரத்தில்

கேட்டான்.. அதற்கும் சபரிஷ் அமைதியாக இருக்கவே.... தன் அண்ணனின் அமைதி எதற்கு என்று விளங்க வில்லை சந்துருக்கு..

இருந்தாலும் இந்த படங்களை வைத்து.. ஏதோ நடந்திருக்கிறது என்று புரிவது போல் இருக்க.. பதறியவன்.. தன் உயிரை கையில் பிடித்து கொண்டு "அண்ணா இந்த போட்டோஸ் பேபி பார்த்தாளா" என்று கேட்டான்..

இதற்கு மட்டும் சபரிஷ் 'ஆம்' என்று சபரிஷ் தலையாட்டியவுடன்,

"ஷிட்" என்று காற்றில் தன் கையை குத்தியவன்... தன் அண்ணணின் அமைதி அவன் மனதுக்கு ஏதோ தவறாக தோன்ற...."இந்த போட்டோவை காட்டி பேபிகிட்ட நீங்க ஏதாவது கேட்டீங்களா" என்றான்

சபரிஷ் இதற்கும் அமைதியாக இருந்தான்..

ஆனால் இப்பொழுது அண்ணனின் அமைதி சந்துருக்கு புரியவும், அண்ணா, என்றழைத்தவன்... "தப்பு பண்ணிட்டீங்கண்ணா".. என்று சொன்னவன்.. அடுத்த வினாடி அந்த அறையை விட்டு வெளியேறினான்.. தன் உயிர் தோழியை தேடி...

வேகமாக வெளியே வந்த சந்துரு.. அங்கு வேலையாட்கள் அருந்துவதற்காக விறகு அடுப்பில் காபி தயாரித்து கொண்டிருந்ததை கண்டவன்....அந்த இடத்திற்க்கு சென்று தன் கையில் உள்ள போட்டோக்களை அந்த அடுப்பில் வீசினான்.. அது எரிந்து சாம்பலாகும் வரை நின்றவன்.. வேகமாக வந்து வண்டியை கிளப்பினான்.

சந்துரு மட்டும் தனியா வருவதை பார்த்த மோகனா.. அவன் எதுவும் சொல்லாமல் காரை கிளப்பவும்....குழப்பத்துடன் "பிரியா எங்க உள்ள இல்லையா" என்று கேட்க..

அவனோ அவளுக்கு பதில் அளிக்காமல் கேட் அருகில் சென்று "ராமையா காலையில் இங்க ஒரு பொண்ணு வந்துச்சே ... எந்த பக்கம் போனாங்கன்னு தெரியுமா" என கேட்டான்.

"ஆமா சின்னையா, ஒரு பொண்ணு வந்துச்சு.... அப்புறம் கொஞ்ச நேரத்துல.. இந்த பக்கமா வெளியே போச்சு".. என்றதும் வண்டியை. ராமையா சொன்ன திசையில் செலுத்தினான்...

"என்னாச்சு சந்துரு... ப்ரியா எங்க.. இப்போ நாம எங்க

போறோம்..யாரை பத்தி இப்போ வாட்ச்மேன் கிட்ட கேட்டீங்க" என்று மோகனா அடுக்கடுக்காக கேள்வி கேட்க..

சந்துரு மோகனாவிற்கு பதிலளிக்காமல் முகம் இறுக... சாலையின் இருபுறமும். பார்த்துக்கொண்டே வண்டியை செலுத்த.. அவளுக்கோ பயம் பிடித்துக்கொண்டது.

ஒரு வளைவின் திருப்பத்தில் சித்தன் எதிரே வர.. காற்றும் மழையுமாக இருப்பதால் அவன் சந்துருவின் காரை சரியாக கவனிக்காமல் சென்று விட்டான்..

சிறிது தூரம் சென்றதும் ரோட்டில் யாரோ அமர்ந்திருப்பது தெரிய... அந்த உருவத்தின் அருகில் வண்டி செல்லும் முன் மோகனா கத்தினாள் "ப்ரியா" என்று..

சட்டென்று வண்டியை நிறுத்தியவன்... "பேபியா எங்க" என்று கேட்கும் முன் மோகனா வண்டியில் இருந்து இறங்கி ப்ரியாவை நோக்கி ஓடினாள்...

சந்துருவும் இறங்கி ஓட.. அங்கே அவர்கள் கண்ட

காட்சியில்.. அவர்கள் இதயம் ஒரு நொடி நின்று வேகமாக துடித்தது…

தன் கையால் முகத்தை மூடி கதறி கொண்டிருந்த ப்ரியாவை பார்த்த சந்துரு “பேபி” என்று கத்தியபடி ப்ரியாவின் அருகில் போக

சந்துருவின் குரல் கேட்டதும், தன் உணர்வுக்கு வந்த பிரியா கண்ணீருடன் நிமிர்ந்து பார்க்க, அவன் பதறி போய் அவள் அருகில் வரவும் இரண்டடி பின்னல் நகர்ந்தவள்….. மோகனாவை கண்டதும், தாயை கண்ட கன்று போல்

“மோஹி” என்று கதறிக் கொண்டே அவளை தாவி அணைத்து இறுக கட்டிக்கொண்டாள்.. மோகனா மட்டுமே தன்னோட பற்றுகோல் என்பது போல் இருந்தது ப்ரியாவின் செய்கை…

பிரியா அப்படி நடந்து கொண்டதும் உள்ளுக்குள் நொறுங்கி போனான்.. சந்துரு…. இருந்தும் “பேபி” என்று மீண்டு அழைத்துக் கொண்டே அவளிடம் செல்ல

அவனை தவிர்த்துவிட்டு, “மோஹி.. மோஹி எனக்கு எங்க அப்பாவை பார்க்கணும்.... உடனே இங்கிருந்து என்னை கூட்டிட்டு போ” என்று அழ ஆரம்பிக்க

அவளின் நிலையை கண்டவள் ஏதோ நடந்திருக்கிறது என்று புரிய “சரி போகலாம்....முதல்ல இப்போ வீட்டுக்கு போகலாம் வா.... அங்க போய் எதுனாலும் பேசிக்கலாம்.... மழை வேகமா பெய்யுது.. உனக்கு உடம்புக்கு ஒத்துக்காது வா போகலாம்” என்று அவளை எழ வைக்கும் முயச்சியில் ஈடுபட

அவளை இன்னும் இறுக்கி கட்டிக் கொண்ட ப்ரியா “இல்ல இல்ல நான் அங்க வரலை.. என்னை எங்க அப்பா கிட்ட கூட்டிட்டு போ மோஹி” என்றவள் “நான் தோத்துட்டேன் மோஹி தோத்துட்டேன்” என்று கதற... மோகனாவுக்கும் கண்களில் கண்ணீர் சுரந்தது....

“என்ன நடந்தது பேபி.. அண்ணா ஏதும் சொன்னங்களா” .. என்று கேட்ட சந்துருவின் கண்ணிலும் கண்ணீர்..

ஆனால் அவன் கேட்கும் எந்த கேள்விக்கும் பதிலளிக்காமல், மோகனாவிடமே பதில் அளித்துக் கொண்டிருந்தாள் “மோஹி நான் தப்பானவளா மோஹி..
நான் எந்த தப்பும் பண்ணலையே..... அப்போ ஏன்

என்னை பார்த்து அப்படி கேட்டாங்க மோஹி…அந்த கேள்வியிலேயே நான் பாதி செத்துட்டேன் மோஹி.. என்னால முடியல மோஹி.. எனக்கு நெஞ்சிலே என்னமோ பண்ணுது மோஹி.. எனக்கு ஒருதடவை எங்க அப்பாவை பார்க்கனும் மோஹி….. என்னை இங்கிருந்து கூட்டிட்டு போ மோஹி.. இன்னும் இங்க இருந்தா என் மீதி உயிரும் போயிரும்…. எனக்கு மூச்சு முட்டுது மோஹி” என்று தன் போக்கில் பேசிக்கொண்டே போனவள். தீடீரென்று மூச்சு திணறி மயங்கி விழுந்தாள்.

அதுவரை அவள் பேசுவதை எல்லாம் கண்ணீருடன் கேட்டு கொண்டிருந்த மோகனா…..தன் தோளில் துவண்ட ப்ரியாவை கண்டு “பிரியா” என்று கத்த..

அவள் பேச பேச திக்பிரம்மை பிடித்தாற்போல் நின்றிருந்த சந்துரு என்ற சிலைக்கு மோகனா.. பிரியா என்று கத்தவும் உயிர் வந்தது..

ப்ரியா மயங்கி விட்டாள் என்றதும் அவளை கையில் ஏந்தியவன்.. காருக்கு அருகில் செல்ல.. மோகனா வேகமாக முன்னே சென்று.. காரின் பின் பக்க கதவை திறக்க……அவளை உள்ளே கிடத்தியவன்.. மோகனா ப்ரியாவின் அருகில் அமர்ந்ததும்.. கதவை சாத்திவிட்டு.. ஓட்டுநர் இருகையில் அமர்ந்து காரை

புயலை விட வேகமாக செலுத்தினான்..

.....

பிரியாவின் நிலை இப்படி இருக்க, அங்கு சபரிஷின் நிலையோ வேறு மாதிரி இருந்தது.....
சபரிஷ் அவளைத்தான் நினைத்துக் கொண்டிருந்தான், பிரியாவின் தைரியமான பேச்சும், அவளின் பொய் இல்லா கண்களுமே அவனுக்கு பறைசாற்றின பிரியா தப்பானவளாக இருக்க முடியாது என்று.. "ச்சே நான் எப்படி எவனோ ஒருத்தன் வந்து ஏதோ சொன்னதும் உடனே நம்பினேன்.. அவள் கண்களில் தன் மேல் காதல் இருந்தாலும்.... ஒருநாளும் அவள் செய்கையில் காட்டியது இல்லையே" என்று நினைத்தவன் இவ்வளவு நாள் நடந்ததை நினைவு கூர்ந்தான்..

முதன் முதலில் பிரியா டைகர் தன்மேல் பாய வந்ததும் பயத்தில் கண்களை சுருக்கி நின்ற விதத்தில் மயங்கி நின்றதும்.... அன்று இரவு தோட்டத்தில் கூட அவள் அமைதியை சகிக்காமல் அருகில் போய் பேசியதும்.. தோப்பில் கூட அவள் கத்தி முனையில் நின்ற போது கூட அவளை ரியா என்று அழைத்ததும் இல்லாமல் அன்று வீட்டில் கூட அவளை கட்டி அணைத்ததும் நினைவில் வர.. இதில் ஒரு இடத்தில் கூட அவளாக அவனை நெருங்க வில்லை என்று நினைத்ததும் "தப்பையெல்லாம் நான்

செய்து விட்டு . அவளை என்ன வார்த்தை கேட்டுவிட்டேன்.. ச்ச பிஸ்னெஸ் புத்தி என்பது சரியாகதான் இருக்கு..... அப்படியே அவள் வந்து காதலை சொன்னால்தான் என்ன தனக்கு பிடிக்கவில்லை என்றால் பொறுமையாக அவளிடம் விளக்கியிருக்கலாமே" அப்பொழுதும் தன்னை பற்றி மட்டுமே யோசித்தானே தவிர.....அவள் மனநிலையை கணிக்க தவறிவிட்டான்
ஒரு பெண் எதை வேண்டும் என்றாலும் தாங்கிக் கொள்வாள்... ஆனால் தன்னை தப்பானவள் என்று சொன்னால் அதுவும் தன் மனதுக்கு பிடித்தவனே சொன்னால் ????

"சரி வீட்டுக்குத்தான் போயிருப்பா.. அங்க போய் ஸாரி கேட்டுடலாம்"... என்று நினைத்தவன் சித்தனை அழைக்க நினைத்து போன் போட.....அது உயிர் இல்லை என்று சொன்னது.....

ச்சே....எனறவனின் நினைவில் பிரியா வருவதற்கு சற்று முன் அந்த சைலேஷ் வந்து சொன்ன விஷயம் நினைவுக்கு வந்தது...

சித்தன் வந்து "உங்களை பார்க்க ஒரு பையன் வந்துருக்கான் அய்யா.. நம்ம சின்னையா கூடதான் படிக்கிறானாம்" என்றதும் வரச்சொல் என்றான்

சபரிஷ்

“ம்ம் எதுக்கு வந்துருக்கே” என்று மட்டும் கேட்டான்

சபரிஷின் முன் ஒரு கவரை வைத்தவன்.. “இதுல நான் காதலிச்ச பொண்ணு போட்டோ இருக்கு.. நாங்க ரெண்டு பெரும் உயிருக்கு உயிரா காதலிச்சோம்.. ஒன்னாதான் இங்க வந்தோம் .. வந்ததுக்கு அப்புறம் என்னன்னு தெரியலை.. கொடைக்கானல்க்கு வரலைன்னு சொல்லிட்டு அவ பிரெண்ஸோட இங்க இருந்துட்டா.... நேத்து தான் நாங்க திரும்பி வந்தோம்.. இப்போ என்கிட்ட பேசவே மாட்டேன்கிறா.. ஏன் என்று நான் கேட்டதுக்கு.. அவ வேற யாரையோ காதலிக்கிறாளாம்.. ப்ளீஸ் சார் எனக்கு அவ வேணும் அவ இல்லனா நான் செத்துடுவேன்” என்று முகத்தை மூடி அழ..

ஏனோ சபரிஷுக்கு அவன் சரியில்லை என்றே தோன்றியது... “சரி அதை ஏன் என்கிட்ட வந்து சொல்ற” என்று கேட்க..

“அவ விரும்புறதே உங்களைத்தான்” என்றான் சோகமாக

அதை கேட்டு முகம் சுளித்த சபரிஷ் “என்ன உளர்ற”

என்றான்

“நான் உளறல சார் அந்த பொண்ணு வேற யாரும் இல்லை சந்துரு கூட சுத்திட்டு இருக்கிற பிரியாதான் அந்த பொண்ணு” என்றதும்..

ப்ரியாவின் பெயரை சொன்னதும் வந்தவன் மேல் அளவுக்கதிகமான கோபம் வர .. “இடத்தை காலி பண்ணு இல்ல உன்னை காலி பண்ணிருவேன் ம்ம்ம் கிளம்பு” என்று அவனை பார்த்து கர்ஜித்தான் சபரிஷ்

அவனை பார்த்து பயந்த சைலேஷ், பின் தான் நினைத்ததை சாதிக்காமல் போக கூடாது என்ற நினைப்புடன், சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு “நான் சொல்றதை நம்பலைன்னா உங்க முன்னாடி இருக்கிற கவரை பிரிச்சி பாருங்க” என்றான்..

பல்லை கடித்த சபரிஷ்.... அப்படி என்னதான் இருக்கு என்று பார்க்க.. அதில் சைலேஷின் தோளில் பிரியா கண்மூடி சாய்ந்த மாதிரி புகைப்படங்கள் இருக்க” அதை கண்டு அவனின் ரத்த அழுத்தம் எகிறியது

அதைக் கண்டு நிம்மதி அடைந்த சைலேஷ் “இதுக்கு அப்புறமும் அவ லவ் சொல்லும் போது நீங்க

ஏத்துகிட்டா உங்க இஷ்டம்" என்று சொல்லிவிட்டு வெளியேறி விட்டான் சந்தோஷமாக..

அவன் சென்றதும் கண்மூடி சைலேஷ் சொல்லிச்சென்ற விஷயம் மற்றும் அந்த படங்களை பற்றி நினைத்துக் கொண்டிருந்தான்.....அவன் சொல்லி சென்ற விஷயம் கூட முக்கியமாக படவில்லை அவனுக்கு.....புகைபடத்தில் சைலேஷ் தோளில் பிரியா இருந்ததை நினைத்து கோபம் கொண்டிருக்கும் போதுதான் பிரியா உள்ளே வந்தாள்.....

அவளை அங்கு எதிர்பார்க்காததால் முதலில் அவள் அழகில் மயங்கியவன்....பின் சைலேஷ் சொன்ன விஷயங்கள் நியாபகம் வர.. அவன் சொன்ன மாதிரியே பிரியா ஏதோ சொல்ல தயங்கவும்.....போட்டோவை தூக்கி போட்டு, தன்னுள் அடக்கி வைத்த கோபத்தை வார்த்தைகளால் கொட்டிவிட்டான்..

ஒரு நிமிடம் தனக்கு பிரியா யார் என்பதையும், அவள் யாரிடம் பேசினாலும் பழகினாலும் தனக்கு ஏன் கோபம் வருகிறது என்பதையும் சிறிது சிந்தித்திருந்தால் அவனின் மனதை உணர்ந்திருப்பானோ என்னவோ???

.....

சித்தன் ஃபாக்ட்ரியின் கேட் அருகே வரவும், காவலாளி சித்தனை பார்த்து வேகமாக வெளியே வந்து “சித்தா உன் பொஞ்சாதி போன் பண்ணினா, உன் பய்யன் மழைல விளையாடிட்டு இருந்தானம், வழுக்கி விழுந்துட்டானாம், கல்லு தலைல குத்திருச்சாம் பெரியாஸ்பதிரிக்கு கூட்டிட்டு போயிருக்கங்கலாம், உனக்கு போன் பண்ணிருக்கா நீ எடுக்கல, அதான் எனக்கு போன் பண்ணி நீ வந்தா சொல்ல சொன்னா” என்றதும்

பதறிய சித்தன் ப்ரியா அழுது கொண்டிருந்த விஷியத்தை சொல்ல மறந்து தன் மகனை காண சென்றான்.. மூன்று மணி நேரம் கழித்து சித்தன் திரும்ப்பி வந்து ப்ரியா அழும் விஷயத்தை சொல்லும் போது காலம் கடந்திருந்தது…

பேக்ட்ரிக்கு ஓடி வந்தான் சித்தன்,
சபரிஷின் அறைக்குள் நுழைத்து “அய்யா அங்க அந்த பொண்ணு” .. என்று சொல்லி நிறுத்தவும்

தன் நினைவுகளிலேயே சுழன்றவன், சித்தன் வந்து இப்படி சொல்லவும், மனம் பதற “எந்த பொண்ணு யாருக்கு…என்னாச்சு சித்தா.” என்று கேட்டான்.

‘ஒருவேளை ப்ரியாவிற்கு ஏதாவது.. ச்சே அப்படியெல்லாம் ஒன்னும் இருக்காது.... வீட்டுக்குதான் போயிருப்பா” என்று தன்னைத் தானே சமாளித்துக் கொண்டவனின் மூலையில் மின்னல் வெட்டியது.. சந்துரு வந்து பிரியா எங்கே. என்று கேட்டது நினைவுக்கு வர.....இருக்கையில் இருந்து எழுந்தவன்.. சித்தனின் அருகே சென்று..

“என்ன சித்தா எந்த பொண்ணு என்னாச்சு” என்று மீண்டும் கேட்டான் பதட்டமாக

காலையில் உங்களை பார்க்க வந்தாங்களே ஒரு பொண்ணு அது அங்க நடுரோட்ல உக்காந்து அழுத்துகிட்டு இருந்தாங்க அய்யா, உங்ககிட்ட சொல்லத்தான் ஓடி வந்தேன் ஆனா, என் பயன் கிழ விழுந்து அடிப்பட்டுச்சின்னு ராமையாக்கு அவ போன் பண்ணிருக்கா, ராமையா சொன்னதும் நான் அங்க போய்ட்டேன், இப்போதான் நியாபகம் வந்தது என்னை மன்னிச்சிருங்க அய்யா..” என்றதும்

“என்ன” என்று அதிர்ந்தவன்.... “பிரியா எங்கே இருக்கா” என்று கேட்டுவிட்டு.....அடுத்த நிமிடம் புயலாக வெளியேறி தன் கரை கிளப்பியவன்.. சித்தன் சொன்ன இடத்திற்கு செல்ல அங்கு யாரும் இல்லை.. பின்னாடியே வந்த சித்தனிடம் ,

“சித்தா இங்கதானே சொன்னே ஆனா யாருமே இல்லையே” என்று நெஞ்சம் கலங்க கேட்டான்..

“இங்கதான் ஐயோ அழுத்துட்டு இருந்தாங்க” என்றவன் “அய்யா இங்க பாருங்க” என்று அங்கு உடைந்த கண்ணாடி வளையல்களை காண்பித்தான்….

அதை கண்டவன் உடனே காருக்குள் வந்து சந்துருவிற்கு போன் அடித்தான்.. ஒருவேளை அவன் பார்த்து அவளை கூட்டி சென்றிருந்தால் என்ற எண்ணத்தில்..

ஆனால் சந்துருவின் போன் எடுக்க படவில்லை என்றதும் , அடுத்ததாக தன் வீட்டுக்கு அடித்தான்……ஆனால் அங்கு சொன்ன செய்தியை கேட்டு மனம் துடிக்க எதுவும் செய்ய தோன்றாமல் சிலை போல் நின்றிருந்தான்….அந்த கம்பீரமான ஆண்மகன்….

……

சுவாசம் தொடரும்…

சுவாசம் 24

இதயத்தின் மகிழ்ச்சியை
உணரவைத்தவனே!
இதயத்தின் வலியையும்
உணரவைக்கின்றவனே!
அதற்கு மருந்தும்
உன்னிடம் தான் உள்ளது என்பதை
உணர்வாயோ!!!...

ஒருமணி நேரத்தில் பயணிக்க வேண்டிய தூரத்தை
அரைமணி நேரத்தில் கடந்து.. திருநெல்வேலியில்
உள்ள பெரிய மருத்துவமனையின் வாசலில்
நிறுத்திவிட்டு.. இறங்கி.. பின் கதவை திறந்து..
ப்ரியாவை மீண்டும் கையில் ஏந்தி
மருத்துவமனையின் உள்ளே ஓடினான் சந்துரு...
மோகனாவும் அழுதுக் கொண்டே அவனுடைய
வேகத்துக்கு ஈடு கொடுத்து அவனின் பின்னால் ஓட..

இவர்களை பார்த்த ஒரு மருத்துவர்.. "என்னாச்சு
இவங்களுக்கு". என்று கேட்க

"டாக்டர் திடீர்ன்னு மயக்கம் போட்டு விழுந்துட்டா..

என்னன்னு கொஞ்சம் பாருங்க" என்று கண்ணில் நீருடன் சந்துரு கெஞ்ச..

அவனை பார்த்த டாக்டர்.. "நீங்க சபரிஷ் சாரோட தம்பித்தானே" என்று கேட்க

"ஆமா டாக்டர்".. என்றதும்

"நர்ஸ்" என்று அழைக்க.. ஒரு நர்ஸ் வேகமாக வந்து "எஸ் டாக்டர்" என்றதும்.. "ஐ..சி. யு ரெடி பண்ணுங்க.. இந்த பொண்ணுக்கு டிரஸ் சேஞ் பண்ணி ஜென்ரல் பார்மாலிட்டி ஆரம்பிங்க" என்றதும் மடமடவென்று வேலை நடக்க.. பிரியா ஐ.சி. யு வில் அனுமதிக்க பட்டாள்...

ப்ரியாவை மருத்துவமனையில் அனுமதித்து அரை மணிநேரம் ஆகியிருந்தது... மருத்துவரின் பதிலுக்காக வெளியே இருவரும் தவிப்புடன் காத்திருந்தனர்....

அவர்களை மேலும் அரைமணிநேரம் தவிக்கவிட்டு வெளியே வந்த மருத்துவரிடம்,

"டாக்டர் பிரியா எப்படி இருக்கா.....அவ கண்ணு முழிச்சிட்டாளா.... நாங்க அவளை பார்க்கலாமா" என்று மோகனா கேட்க...

சந்துருவோ அவரிடம் எதுவும் கேட்காமல்.. 'கடவுளே அவளுக்கு வேறு எதுவும் ஆகக்கூடாது.... வெறும் மயக்கம் என்று மட்டும் சொல்லவேண்டும்' என்று கடவுளை வேண்ட...

ஆனால் கடவுள் சந்துருவின் வேண்டுதலுக்கு செவிசாய்க்க மறுத்து விட்டார்.... "மிஸ்டர் சந்துரு. .. ரொம்ப கிரிட்டிக்கல்தான் .. இப்போதைக்கு ஒன்னும் சொல்லமுடியாது, ரெண்டு மணி நேரத்துல கண் முழிச்சா ஒரு பிராபளமும் இல்ல..... ஆனா"... என்று இழுக்க...

" என்ன டாக்டர் செல்லறீங்க ,கிரிட்டிக்கல்அது இதுன்னு..... வீசிங் வந்து மூச்சுத்திணறி மயக்கம் ஆயிட்டா- அதுக்கு போய் நீங்க ரொம்ப பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க.... ரெண்டு மணி நேரம் வேற கெடு கொடுக்குறீங்க".. என்று கத்திய மோகனா, சந்துருவிடம் திரும்பி..
"சந்துரு வேற ஹாஸ்பிட்டல் போகலாம்.. இவங்க என்னென்னமோ சொல்றாங்க" என்றதும்..

"என்ன வீசிங்கா... யாருக்கு அந்த பெண்ணுக்கா.. அதெல்லாம் ஒன்னும் இல்லை.. அவங்களுக்கு ஏதோ ஒரு பலமான அதிர்ச்சி தாக்கியிருக்கு.... அவங்க ஹார்ட் ரொம்ப வீக்கா இருக்கு, அதான்

மயங்கிட்டாங்க," என்றவர், "

"எனக்கு அவங்களோட புல் ரிப்போர்ட் வேணும் ,அதாவது அவங்க இதுக்கு முன்னாடி பண்ணின ட்ரீட்மெண்ட்டோட ரிப்போர்ட்ஸ் அதுக்கு அப்புறம் தான் எதுவும் சொல்ல முடியும்..." என்று அலுங்காமல் குலுங்காமல் ஒரு பெரிய பாராங்கல்லை தூக்கி போட்டார் மோகனாவின் மேல்

பிறகு சந்துருவிடம் திரும்பி "உடனே அவங்க பேரன்ட்ஸை இங்க வர சொல்லுங்க.. அவங்க ரிப்போர்ட் கண்டிப்பா வேணும்... அதுக்கு அப்புறம் தான் அடுத்தகட்ட ட்ரீட்மென்ட் ஆரம்பிக்க முடியும்" என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்...

மருத்துவர் சொன்னதை கேட்ட சந்துரு தன் மொபைல் எடுத்து ப்ரியாவின் தந்தைக்கு அழைத்து , பிரியாவை மருத்துவமணையில் அனுமதித்த விபரம் மட்டும் சொல்லி "சீக்கிரம் வாங்க அங்கிள்...எனக்கு பயமா இருக்கு" என்று கதழுதழுப்பான குரலில் சொல்ல ,

அதை கேட்ட பிரியாவின் தந்தைக்கு உயிரே நின்றது போல் ஆனது....பின் தான் செல்ல வேண்டிய அவசரத்தை உணர்ந்தவர் "அடுத்த பிளைட் பிடிச்சி உடனே வருவதாக சொல்ல" சரி அங்கிள் என்று

சொல்லிவிட்டு மொபைலை அனைத்தவன் திரும்பி மோகனாவை பார்க்க…

அவளோ தனது இரு கையையும்.. தன் நெஞ்சில் வைத்து அதிர்ச்சியில் நின்றிருக்க….அவளிடம் நெருங்கி “மோகனா” என்று சந்துரு அவளை உலுக்க.. கண்ணீர் நிறைந்த விழிகளுடன் சந்துருவின் சட்டையை பிடித்து,

“ப்ரியாக்கு என்னாச்சு சந்துரு ? டாக்டர் என்ன சொல்லிட்டு போறாங்க , அவ இதய நோயாளியா… சின்ன வயசுல இருந்து அவ கூடவே நான் இருக்கேன்.. எனக்கு இந்த விஷயம் தெரியல” என்று அவனை உலுக்கியவள்

பின் “அதெல்லாம் இருக்காது, டாக்டர் பொய் சொல்றார்.. நாம ப்ரியை வேற ஹாஸ்பிடல் கூட்டிட்டு போகலாம்… ப்ளீஸ் சந்துரு அவளுக்கு ஒன்னும் இல்லதானே….அவ நல்லா ஆயிடுவாதானே…..ஏன் அவளுக்கு இப்படியெல்லாம் நடக்குது” என்று அவன் மார்பில் சாய்ந்து கதறி அழ…

அவளை சமாதானபடுத்த முடியாமல் நின்றான் அவன்…. ஏன் என்றால்… அவனாலும் அந்த விஷயத்தை தாங்கி கொள்ள முடியவில்லை.. பிரியா சொன்ன வார்த்தை அந்த ஒரு வார்த்தை அப்படியே

அவன் காதில் ஒலித்துக் கொண்டு இருந்தது……" நான் எந்த தப்பும் பண்ணலையே, அப்போ ஏன் என்னை பார்த்து அப்படி கேட்டாங்க" என்ற வார்த்தையிலேயே நிலைத்தது……

இரண்டு மணி நேரம் கடந்தது.. ஆனால் ஒரு முன்னேற்றம் இல்லை.. திடீரென்று நர்ஸ் வெளியே வந்து "டாக்டர் உங்களை கூப்பிடுறாங்க" என்றதும்.. இருவரும் ப்ரியாவை அனுமதிதிருந்த வார்டுக்குள் செல்ல..

அங்கே வாடிய மலராக படுத்திருந்த ப்ரியாவை பார்த்ததும்.. மோகனா மீண்டும் அழுகை பொங்க.

"குட்டிமா பேபிக்கு ஒன்னும் இல்லைடா, பாரு தூங்குறா அவ்ளோதான்" என்று அவளுக்கு சொல்வது போல் தன்னைத் தானே சமன்படுத்திக் கொண்டு "சொல்லுங்க டாக்டர்" என்றதும்..

"அவங்க பேரன்ட்ஸ் வந்துட்டாங்களா" என்று கேட்க

"இன்னும் ஒரு மணி நேரத்துல வந்துடுவாங்க" என்று சொன்னதும்

"அவங்களுக்கு இன்னும் கான்ஷியஸ்

வரலை....பேஷண்ட்டும் மனசளவுல ஒத்துழைக்க மாட்டேங்கிறாங்க.... இன்னும் ஒரு மணி நேரம் பார்க்கலாம்" என்றதும் ப்ரியாவை திரும்பி பார்த்துக்கொண்டே வெளியே வந்தனர் இருவரும்....

அந்த ஒருமணி நேரம் கடக்கவும் ப்ரியா கண் விழித்தாள் , நர்ஸ் வந்து ப்ரியா கண் விழித்ததை சொல்ல, இருவரும் அவளை காண உள்ளே சென்றார்கள்,..

அங்கே மருத்துவ உபகரணங்கள் பொறுத்த பட்டு படுத்திருந்தாள். இவர்கள் வரவை உணர்ந்த ப்ரியா, கண் திரவாமல் அங்கேயே நிற்கும் படி மெதுவாக வலக்கையை உயர்த்தினாள்..

பிரியா அவ்வாறு செய்யவும் .. அப்படியே நின்றார்கள்..

ப்ரியா பேசினாள், "சந்துரு என்னால் தாங்க முடியலை டா, அவங்க சொன்னதை நினைக்க நினைக்க மனசு ரொம்ப வலிக்கிதுடா, என்னை மன்னிச்சிறு சந்துரு, எங்க அப்பா அம்மாக்காக நான் இருகக்கனும்னு நினைக்கிறேன் டா, இனி நான் உங்களை பார்ப்பேனா எனக்கு தெரியலை. ஏன்னா உன்ன பார்த்தா உன் அண்ணா நியாபகம் வரும் அதான் டா அப்படி சொன்னேன். ஆனா உன்னோட பேபி உன்னோட பேபி

மட்டும் தான் , மோஹி, அழாதே, சந்துருவை நல்லா பார்த்துக்கோ.. அவன் என்னை பேபி பேபி சொல்லுவான், ஆனா அவன்தான் உண்மையிலே பேபி.. என்னை நினைச்சி அழுவான்.. நீ தான் அவனை சமாதான படுத்தனும்" என்றவள்.. "எனக்கு தூக்கம் வருது நான் தூங்குறேன்" என்றவள் வேறுஏதும் பேசாமல் அமைதியகி விட..

இவ்வளவு நேரம் ப்ரியா பேசியதை கேட்டவர்களுக்கு புரிந்தது , அவள் மனது எவ்வளவு காயப்பட்டிருக்கு என்று , ப்ரியா அவர்களை விட்டு தூரமாக சென்று விட்டாள் என்றும் புரிந்தது.. சிறிது நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தவர்கள்.. மனதில் பாரத்தோடு வெளியே வரவும்..

ப்ரியாவின் தந்தை வரவும் சரியாக இருக்க.. அவரை பார்த்தவன்.. "என்னை மன்னிச்சிருங்க அங்கிள்.. நான் ப்ரியாவை பாத்துக்கறேன்னு சொன்னேன்.. ஆனா" என்று கலங்கிய கண்களுடன் சொல்ல..

அவன் தோளை தட்டி கொடுத்தவர், மருத்துவரை காண சென்றார்..

அடுத்த அரை மணி நேரத்தில் தனி விமானம் மூலம் பிரியாவை அவள் தந்தை கார்த்திகேயன் மும்பைக்கு அழைத்து சென்று விட்டார்...

****

மும்பை மாநகரம்,
ப்ரியா மும்பை வந்து ஒரு மாதம் ஆகி விட்டது..
யாரிடமும் பேசுவதில்லை அவள், இவ்வளவு ஏன் தன்
தாய் தந்தையிடமும்கூட அளவோடுத்தான்
பேசுகிறாள்..

அவளுக்கு பிடிக்காத ஓட்ஸ் கஞ்சி வைத்து
கொடுத்தாலாவது தன்னிடம் குறையாவது
சொல்லுவாள் என்று அவள் அன்னை நினைக்க

அவளோ மறு பேச்சில்லாமல் சாப்பிட்டு எழுந்து
சென்று விடுவாள்....வீட்டை விட்டு வெளியே செல்ல
மறுத்து
தன் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தாள்....

இதையெல்லாம் கண்ட அவள் தாய் காயத்ரி தன்
கணவனிடம், "என்னங்க இது, எப்படியாவது அவளை
பேச வைக்க நானும் இந்த ஒரு மாசமா
போராடுறேன்.... ஆனா அவ" என்றவர் அவளின்
நிலையை கண்டு அழ ஆரம்பித்துவிட்டார்....

நன்றாக துள்ளி திரிந்த தன் பெண் இந்த ஒரு மாத
காலமாக திடீரென்று அமைதி கொள்ளவும், என்ன

காரணம் என்று தெரியாமல் தவித்தவர், அவளிடம் பலமுறை கேட்டும் பார்த்துவிட்டார்… ஆனால் அதற்கு அவளின் பதில் வெறும் மௌனம் மட்டுமே…

“திடீர்ன்னு டூர் முடியறதுக்கு முன்னாடியே கூட்டிட்டு வந்திங்க, என்னன்னு கேட்டதுக்கும் சரியான பதில் இல்ல….. இவ என்னடான்னா வந்ததுல இருந்து எதையோ இழந்தா மாதிரி இருக்கா….சரி அவ பிரெண்ட்னான மோகனா, சந்துருகிட்டயாவது பேசுவான்னு பார்த்தா….அவங்க வந்தா கூட அவங்கள பார்க்காம, ஒதுக்குறா… அவ அமைதியா அடக்க ஒடக்கமா இருக்கனும்ன்னு நினைச்சேன்தான் ஆனா, இப்போ இவளோட அமைதி எனக்கு பயமா இருக்குங்க, நான் கேட்டா சொல்ல மாட்டா, நீங்க கேட்டு பாருங்க..” என்று மனகலக்கத்துடன் சொன்னவர்..

அங்க ட்டூர் போன இடத்துல என் பொண்ணு மனசு கஷ்டப்படுற மாதிரி ஏதோ நடந்துருக்குங்க.. இல்லனா.. ப்ரியா இப்படி இருக்க மாட்டா.. என்று கூறி மீண்டும் அழ..

காயத்ரி சொல்வதையெல்லாம் பொறுமையாக கேட்டவர்….பின் பெருமூச்சை வெளியிட்டவாரே , தன் மனைவியிடம் “நீ மனச போட்டு குழப்பிக்காதே காயு..

நான் அவகிட்ட பேசிப் பார்க்கிறேன்" என்றதும்,

"சரிங்க நீங்க பேசுங்க நான் கோவிலுக்கு போய், அவபேர்ல அர்ச்சனை பண்ணிட்டு வரேன்" என்றவர் கிளம்பிவிட..

ப்ரியாவை பார்க்க அவள் அறைக்குள் சென்ற கார்த்திகேயன்.. "கண்ணம்மா.." என்று அழைக்க..

ஏற்கனவே வெளியே தாய் பேசியதை கேட்டு அழுது கொண்டிருந்தவள்.. தந்தை பாசத்துடன் அழைக்கவும்.. தலையணையை இறுக பற்றிக் கொண்டு அவரை பார்க்காமல் அழ,

அதைக் கண்டுபதறியவர் "கண்ணம்மா என்னடா, ஏன்டா அழற" என்று ப்ரியாவின் அருகில் அமர்ந்து அவளின் தலையை வருட,

தலையணையை தூக்கி எறிந்தவள்....தந்தையின் மடியில் முகம் புதைத்து "அப்பா" என்றுகூறி அழுதாள்....

அவளை சிறிதுநேரம் அழ விட்டவர்.....அவள் முதுகை தடவியவாறு .. "சொல்லு கண்ணம்மா, அப்பாகிட்ட

சொல்லு, அங்க என்ன நடந்தது, யாருடா உன் மனம் நோகும்படி நடந்தாங்க.... சொல்லுடா".. என்றவருக்கு அந்த சைலேஷின் மேல் கொலை வெறியே வந்தது...

ஏனென்றால், சந்துரு அவரிடம் , "அங்கிள் பிரியா அந்த போட்டோ பார்த்து தான் அதிர்ச்சி ஆயிட்டா" என்று மட்டும் சொல்லியிருந்தான்,,...

இந்த ஒரு மாதமாக சைலேஷை அவரது ஆட்களை விட்டு தேடி விட்டார் கார்த்திகேயன், ஆனால் அவனை எங்கும் காண வில்லை, 'உன் மகன் எங்கே' என்று அந்த எம்.எல்.ஏ விடம் மிரட்டியும் பார்த்து விட்டார்.. ஆனால் அவரோ

"அவன் உங்க கைக்கு கிடைச்சான்னா, நீங்க என்ன வேணும்னாலும் பண்ணுங்க தறுதலை அன்னைக்கு நீங்க போட்ட போடுல திருந்திருப்பான்னு நினைச்சேன் சாப்", என்று அந்த எம்.எல்.ஏ. சொல்லவும்

"இப்படி நீ சொன்னா நான் விட்டுடுவேனா, அவன் விளையாட நினைச்சது என் பொண்ணு உயிரோட, அன்னைக்கு நீ கெஞ்சினதுனால விட்டுட்டேன் இனி" என்றவர்,
"உன் பையனுக்கு திவசம் பண்றதுக்கு ரெடியா இரு"

என்று சொல்லிவிட்டு வந்து விட்டார் …

கண்ணீருடன் நிமிர்ந்து அமர்ந்தவள்…கேவிக் கொண்டே
“அப்பா அங்க என்னை என்னை அவங்க” , என்றவள் ஒன்று விடாமல் சொல்லிவிட்டாள்.. தந்தையிடம் எதையும் மறைக்க விரும்ப வில்லை அவள்…

அவள் சொல்ல சொல்ல அமைதியாக கேட்டவருக்கு கட்டுக்கடங்காத கோபம் வந்தது சபரிஷின் மேல்.. ஆனாலும் பொறுத்துக்கொண்டார்.. ஏன்னென்றால் அவள் ‘அவன் என்னை சந்தேகப்பட்டுவிட்டான்’ என்று சொல்லும் போது அவள் குரலில் கோபம் இருந்தாலும் , அவள் கண்ணில் காதல் இருந்ததை அவள் உணர்ந்தாலோ இல்லையோ அவளது தந்தை அதை கண்டு கொண்டார்…..

பின் “சொல்லு கண்ணம்மா….. என்ன பண்ணலாம் அந்த சபரிஷை.. நீ என்ன சொல்றியோ அதை நான் செய்கிறேன்.. என் பொண்ண அழவச்சவனை நான் சும்மா விடுவேனா” என்றவர்,
“அவனை தூக்கிடவா” என்று சொல்லிவிட்டு அவளை ஆழம் பார்த்தார் ,

அதை கேட்டு “அப்பா” என்று அதிர்ந்து, பின் அவரிடம்

“இல்லப்பா வேண்டாம்….நான் அவர் மேல வச்ச காதல் நிஜம்…அதே சமயம் என்னை சந்தேகபட்டவரு எனக்கு வேண்டாம்பா….என்னை வேற எங்கேயாவது அனுப்பிடுங்கபா, எனக்கு இங்க இருக்கிறது மூச்சு முட்டுற மாதிரி இருக்குபா….என்னை புரிஞ்சிக்கங்கபா” என்று தன் தந்தையிடம் கெஞ்ச

அதை கேட்டு அவரின் மனம் வலித்தது.. தன்னையும் அவள் அன்னையையும், தன் ஒரே உயிர் தோழியான மோகனா மற்றும் முக்கியமாக சந்துருவை விட்டு அவளால் இருக்க முடியாது என்பதும் அவருக்கு தெரியும்….. இருந்தும் தன் பெண் இப்படி சொல்கிறாள் என்றால் அவள் மனது எவ்வளவு காயமடைந்து இருக்கும்என்பதை அவரால் புரிந்துக் கொள்ள முடிந்தது….

சபரிஷ் மேல் அவருக்கு கோபம் இருந்தாலும்.. தன் மகள் அவனை வெறுக்கவில்லை என்பது மட்டும் அவருக்கு தெளிவாக புரிய, தன் மகள் கேட்டு எதையும் இல்லை என்று சொல்லாதவர் , அவளின் இந்த கோரிக்கையை மறுக்க முடியவில்லை அவரால்…ஆனால் தன் மனைவி இதை எப்படி தாங்கிக் கொள்வாள், அவளை எப்படி சமாளிப்பது என்று யோசிக்க தொடங்கினார்…..பின் ஒரு முடிவெடுத்தவராக,

“சரிடா கண்ணம்மா வெளியேன்னா எங்க போகணுன்னு சொல்ற.. ஊட்டி கொடைக்கானல், மாதிரி ஊருக்கு போய் உன் படிப்பை கன்டீனியூ பண்றியா…இல்ல நீயே எந்த இடம்ன்னு சொல்லு நான் அனுப்பி வைக்கிறேன்..” என்க

“இல்லப்பா எனக்கு இங்க எங்கேயும் வேண்டாம்… வேற நாட்டுக்கு போறேன்” என்றவள்.. மனதுக்குள் “இங்க அவனோட மூச்சுகாற்று என்னை துரத்துப்பா” என்றாள்

“வேற நாட்டுக்கா” என்று யோசித்தவர், தற்பொழுது தன் மகளின், மனது மற்றும் உடல்நிலை முக்கியம் என்று நினைத்து….. அவளிடம்

“சரிமா நான் ஏற்பாடு பண்றேன்….இடம் மாறுனாதான் உன் மனசுக்கு அமைதி கிடைக்கும்ன்னா கண்டிப்பா அப்பா அனுப்பி வைக்கிறேன்…..ஆனால் இனி இப்படி அழக்கூடாது” என்றவரின் கண்களிலும் கண்ணீர்……..இருக்காதா பின்னே தன் மகளை இளவரசியை போல், அழுகை என்றால் என்ன என்று தெரியாமல் வளர்த்தவராயிற்றே…..
ஆனால் இந்த ஒரு மாத காலமாக தன் செல்ல மகள் அதைத்தானே செய்து கொண்டிருக்கிறாள்

ஆறுமாதம் கழித்து பிரியா யு எஸ் போகும் நாளும் வந்தது, தன் படிப்பிற்க்காக அவள் தேர்ந்தெடுத்த இடம் அமெரிக்கா.....

இதை சொன்னதும், காயத்ரி தான் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிவிட்டார்.... தவமாய் தவமிருந்து பெற்ற ஒரே மகள் எங்கேயோ தூர தேசம் போகிறாள் என்றவுடன் அவரால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.....ஆனால் கார்த்திகேயன் அவரிடம் என்ன சொன்னாரோ.....மனதில் அவளை நினைத்து அழுதாலும், தன் மகளின் நிலை மாற உடனே ஒத்துக் கொண்டார்...

கார்த்திகேயனின் நண்பர் கணபதியின் மகள் அமெரிக்காவில் தன் கணவன் மற்றும் இரு குழந்தைகளுடன் வசிக்கிறாள் , அவள் மூலமாக பிரியா தங்குவதற்க்கு வீடும், படிப்பை கன்டீனியூ செய்ய அங்குள்ள பெரிய யூனிவர்சிட்டியில் இடம் கிடைக்க, தன் மகள் பாதுகாப்பாக இருப்பாள் என்ற நம்பிக்கையுடன் அங்கு அனுப்ப சம்மதித்தனர்.....

மூவரும் விமான நிலையத்தில் அமர்ந்திருந்தனர்.. ப்ரியா இருக்கையில் கண் மூடி அமர்ந்திருந்தாள்... அவளுக்கு சந்துருவையும் மோகனாவையும் பார்க்க வேண்டும் போல் இருந்தது, அவர்களும் எவ்வளவோ பேச முயற்சித்தனர்....ஆனால் தன் மனதை

கல்லாக்கிக் கொண்டு பேசாமல் இருந்துவிட்டாள்…

அவள் கிளம்ப வேண்டிய விமான அறிவிப்பு வந்ததும், தன் பெற்றோர்களை பார்த்தவள், தன் தாய் கண்கலங்குவதை பார்த்து அவரை கட்டியணைத்து “ஸாரிமா” என்றவள், தன் தந்தையிடமும் “ஸாரிப்பா” என்று சொல்லிவிட்டு, நில்லாமல் தன் உடமைகளை எடுத்துக்கொண்டு சென்றாள்.

சென்றுகொண்டிருந்தவளுக்கு, தீடீரென்று ஏதோ உள்ளுணர்வு தோன்ற நின்று சுற்றி முற்றி பார்த்தாள்.. அவள் கண்கள் எதையோ தேடி அலைந்தது, ஆனால் அதுதான் அவளுக்கு இனி கிடைக்காதே என்று மனம் எடுத்துரைக்க, அமைதியாகி சென்றுவிட்டாள்..
தாய் நாட்டை விட்டு, தன் அன்பான தாய் தந்தையை விட்டு, அவள் நண்பனையும், தோழியையும் விட்டு, அவளின் சிரிப்பையும் , தன் உயிரான, காதலையும் தொலைத்து விட்டு அமெரிக்கா நோக்கி தன் பயணத்தை தொடர்ந்தாள் பிரியா.

இதையெல்லாம் நினைத்து கண்ணில் நீர் வழிய, தூரத்து தொடுவானை வெறித்துகொண்டிருந்தாள, ப்ரியா

அப்பொழுது, அறைக்கதவை திறந்துகொண்டு யாரோ வர,

பிரியா தன் கண்களை அவசரமாக
துடைத்துக்கொண்டு யார் என்று பார்க்க,

அங்கே எழில் கையில் ட்ரேயுடன்
வந்துகொண்டிருந்தான்..

“ஹாய் பூரி , நல்லா தூங்கி எழுந்தாச்சா” என்று
கேட்க

“மை நேம் பிரியங்கா” என்று அவளிடம் இருந்து வந்து
விழுந்தது வார்த்தைகள்..

அவனோ “ஹா ஹா வச்சிக்கோ.. நான் உன்கிட்ட
கேட்கவே இல்லையே” என்றவன் “ப்ரியங்கா,
எவ்வளவு பெரிய பேரு.... எனக்கு கூப்பிட வாய்
வலிக்கும் .. சோ அதை பூரின்னு
சுருக்கிட்டேன்....எப்படி நல்லா இருக்குல்ல” என்றதும்
அவள் அவனை முறைக்க..

அவள் முறைப்பதை பார்த்தவன்.....அசராமல், தான்
கொண்டு வந்த ட்ரேயை காட்டி இதுல சாப்பாடு
இருக்கு சாப்பிட்டு , இந்த டேப்லெட்
போட்டுக்கோ.....மறந்துடாதே” என்று சொல்ல..

“எதுக்கு டேப்லெட்.. எனக்கு ஒன்னும் இல்லை,
ஃபிளைட்ல வந்தது ஒத்துக்கல அதான்” என்றவளிடம்..

“மிஸ் பிரியங்கா நீங்க இங்க , படிக்க மட்டும் வரல,
ட்ரீட்மெண்ட்க்கும் வந்துருக்கீங்க அதை
மறந்துடாதீங்க… உங்க அப்பா எங்கள நம்பித்தான்
அனுப்பி வச்சார்..சோ உங்க ஹெல்த் மேல
எங்களுக்கும் அக்கறை இருக்கு” என்று
சொல்லிவிட்டு சென்று விட்டான்..

ஆமாம் ப்ரியா படிக்க மட்டும் இங்கு வரவில்லை..
அவளின் ட்ரீட்மென்ட்காகவும் தான் இங்கு
வந்திருக்கிறாள்..

பிரியாவை அவள் தந்தை தமிழ் நாட்டில் இருந்து
அழைத்து வந்ததும்.. மும்பையில் அவளுக்கு முதலில்
மருத்துவம் செய்த டாக்டரிடம் அவளை காண்பிக்க,
அந்த மருத்துவரோ..

‘ப்ரியாவிற்கு மன அழுத்தம் வரக்கூடாது’ என்று
கார்த்திகேயனை கடிந்து கொண்டார்…..

ப்ரியா கேட்டு கொண்டபடியே அவளின் நிம்மதிக்காக
இங்கு அனுப்பி வைத்தார்…அதே சமயம் அவளின்
மருத்துவ பரிசோதணை தொடரவும் ஏற்பாடு
செய்தார்……

பிரியா யு. எஸ் வந்தும் ஆறுமாதம் ஆகியிருந்தது… முதலில் இங்கு வந்த புதிதில். சீர்தோஷன நிலையில் தன்னை பொருத்தி கொள்ள ரொம்பவே சிரமப்பட்டவள், பிறகு தன்னைத் தானே தேற்றிக் கொண்டு சூழ்நிலைக்கு ஏற்றவாறு இருக்க கற்றுக் கொண்டாள்….

அவள் படிக்கும் காலேஜும் பக்கத்திலேயே இருக்க அதுவும் பிரச்சனை இல்லை , தினமும் தன் பெற்றவர்களிடமும் பேசி விடுவாள்.. தானே தனக்கு தெரிந்த அளவு சமைக்கவும் கற்றுக் கொண்டாள்..

பிரியா தங்கி இருக்கும் பக்கத்துக்கு அறைக்கு புதிதாக ஒரு பெண் வந்திருக்கிறாள், பெயர் விஷ்வாதிகா , இவளும் படிப்பை தொடரவே இந்தியாவில் இருந்து இங்கு வந்திருக்கிறாள், தன்னை போல் ஒரு பெண், தன் குடும்பத்தை விட்டு இங்கு தனியாக , வந்திருக்கிறாள் என்றதும், பிரியா விஷுவிடம் சிறிது ஒட்டிக்கொண்டாள்..

எழில் செய்யும் ஒவ்வொரு விஷயமும் அவளுக்கு சந்துருவை நியாபக படுத்த, உள்ளுக்குள் ரசித்தாலும் வெளியே இறுக்கமாகவே தன்னை காட்டிக்கொண்டாள்..

பகல் நேரத்தில் வேலை மற்றும் தன் படிப்பின் மூலம் தன் கவனத்தை திசைதிருப்புபவள், இரவு நேரங்களில் அவளின் ரிஷியின் நியாபகங்களும், அதை தொடர்ந்து அந்நாளும் ஞாபகம் வர....தலையணையே அவளின் கண்ணீரின் புகலிடமாக மாறிப் போய் தூக்கத்தை தொலைத்து தவிப்பாள்.....

தீபாவின் வற்புறுத்தலுக்காக ஞாயிற்றுக் கிழமை மட்டும் குழந்தைகளுடன் இருந்து அவர்களின் பேச்சை ரசித்து , அங்கேயே சாப்பிடுவாள்.. தீபாவின் கணவர் கணேஷ் மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவர்...அவரும் அவளை தன் தங்கையாக பாவித்தார்..... குழந்தைகளும் அவளுடன் நன்றாக ஒட்டிக்கொண்டனர்.... ஒருநாள் தீபாவின் குழந்தைகள் பிரியாவிடம்,

“நீங்க இப்படிதான் எப்போதுமே அமைதியா இருப்பீங்களா ஆன்ட்டி, ரொம்ப பேசவே மாட்டீங்களா ஆனா” என்று தன் அன்னையை சுட்டி காட்டி .

“இந்த பிச்சூ ரொம்ப பேசும் , பேசும் பேசும் பேசிக்கிட்டே இருக்கும்.. எங்க டாடிகூட சொல்லுவாங்க , கொஞ்ச நேரம் அமைதியா இருக்கியான்னு , அதுக்கு எங்க மாமா

சொல்லுவாங்க….”

“அத்தான் அவ தூங்கும்போது பேசாம தானே இருக்கா அத நினைச்சி சந்தோசபடுங்கன்னு சொல்லிட்டு எங்க பிச்சூ கிட்ட அடி வாங்குவாங்க” என்று சொல்லவும் பிரியா தன்னை மறந்து சிரித்தாள், அதை கனிவுடன் பார்த்தனர் மூவரும்…..அவர்கள் பார்ப்பதை உணர்ந்த அவள் சட்டென்று சிரிப்பை நிறுத்திக் கொண்டாள்…

இதை கண்ட எழில் , ஏன் தன்னை சுற்றி வட்டம் போட்டுக் கொண்டு அதிலேயே சுழல்கிறாள்…..இவளை எப்படி வழிக்கு கொண்டு வருவது என்று யோசிக்க ஆரம்பித்தான்……அதே சமயம் தன் கலகலப்பு பேச்சால் அவளையும் உள்ளே இழுக்க….பலன் என்னவோ பூஜ்ஜியம்தான்……..ஆனாலும் கஜனிமுகமது போல் தொடர்ந்து அவளிடம் சென்று பேசுவான்….

சில நேரம் எழிலை பார்க்க முடியாது, சந்துருவின் குணத்தில் எழிலை காண்பதால் அவனை ஒரு நாள் பார்க்காவிட்டாலும் அவள் அவனை தேடுவாள்…..ஆனால் வாய் திறந்து அவன் எங்கே என்று தீபாவிடம் கேட்க மாட்டாள்..

தீபாவும் சொன்னது இல்லை.. சில நேரம் ப்ரியாவிடமே புலம்புவாள்….

“சரியா சாப்பிட கூட மாட்டேன்கிறான்… என்ன பண்ண அவன் வேலை அப்படி” என்று மட்டும் சொல்லுவாள்.. ஆனா என்ன வேலை என்று அவளும் சொன்னதில்லை, பிரியாவும் கேட்டதில்லை…..

அதை அறியும் நாளும் ஒரு நாள் வந்தது…….அதன் பிறகு சகஜமாக இல்லாவிடினும், ஓரளவு பேச ஆரம்பித்தாள் அவனிடம்,

ஒரு மாலை பொழுதில் …
“ஹாய் பூரி” என்று வந்து நின்றான் எழில்..

“ம்ம்”என்று மட்டும் சொன்னாள்..

அவனுக்கு இது பழகிவிட்ட படியால்.. அதை கண்டு கொள்ளாமல்.. அவன் அவளிடம் “எங்கையாவது நாம வெளியே போகலாமா” என்று கேட்டதும் அவள் முறைக்க..

“அய்யோ உன்ன நான் என்கூட ஊர் சுத்த கூப்பிட்டேன்னு நினைச்சியா.. நீ அந்த மாதிரி எல்லாம் பேராசை படக்கூடாதுமா…” என்றவன்

தன் சட்டையின் காலரை பற்றிக்கொண்டு ..
“அய்யாவோட ரேஞ்சே வேற, எனக்கு இந்த மார்டன் மங்கை எல்லாம் வேண்டாம்……தழைய தழைய புடவை கட்டிகிட்டு, தலை நிறைய மல்லிப்பூ வச்சிகிட்டு… அப்படியே நடந்து வந்தா எப்படி இருக்கும் தெரியுமா” என்று தன் ஆசைகளை சொல்ல..

அந்நேரம் ப்ரியாவின் பழைய குரும்புத்தனம் வெளியே எட்டி பார்த்தது…. அவள் தன்னையும் அறியாமல், “இந்த குளிர்ல அப்படி நடந்து வந்தா ஐஸ்ஸா உறைஞ்சிடவா அந்த பொண்ணு…. ஹா ஹா…..அப்புறம் நீ கொலைகாரன் ஆவது கன்ஃபார்ம்” என்று சொல்லி சிரிக்க

அவளை முறைத்தவன் அவளை இன்னும் பேச்சில் இழுக்கும் பொருட்டு.. “உனக்கு பொறாமை, எங்க அப்படி ஒரு பொண்ணு எனக்கு கிடைச்சிடுவாளோ அப்படின்னு”

“நான் ஏன் பொறாமை படனும்”

“அதான் எனக்கும் புரியல”

“என்ன புரியல” என்று அவனை ஒரு மாதிரி பார்த்துக்

கொண்டு கேட்க,

‘டேய் எழில் பூரி சந்தரமுகியா மாறுறா பாரு…ரூட்ட மாத்து’ என்று மனதினில் நினைத்தவன், அவளிடம்

“நான் உன்னை வெளியே போகலாமான்னு கேட்டேன் அதுக்கு இன்னும் பதில் வரல” என்றதும்..

அவளுக்கும் ஏதோ மாற்றம் தேவைபட்டதால், “ஐந்து நிமிஷம் என்று சொல்லிவிட்டு வீட்டின் உள்ளே சென்றவள், குளிருக்கு ஏற்றார் போல் உடை அணிந்துக் கொண்டு வெளியே வந்து எழிலிடம் “ம்ம் சொல்லுங்க எங்க போகணும்” என்று கேட்க..

அது சர்ப்ரைஸ் , என்று சொல்லிவிட்டு தனது காரை வெளியே எடுத்தான் , ப்ரியா அமரவும் கார் புயலென கிளம்பியது.. இருபது நிமிட பயணத்திற்கு பிறகு கார் ஒரு அழகான பார்க்கில் நின்றது….

சுவாசம் தொடரும்…

சுவாசம் 25

“நான் மீண்டும் பிறந்தேன்
“என்னவள் தான்,
“எனக்கானவள் என்பதை
“உணர்ந்தபோது!!!

ஹாலந்த் பார்க்...
அந்த பார்க் ரொம்பவும் அழகாக இருந்தது..
குழந்தைகள் விளையாட சில பெரியவர்கள் கல் பெஞ்சில் அமர்ந்து அவர்களை கவனித்தவாறே பேசிக்கொண்டிருந்தனர்.. பார்க்கை ஒட்டி ஒரு லேக் இருந்தது..

பிரியா அந்த லேக்கை நோக்கி சென்றாள்.
பின்னாடியே வந்த எழில்.. “பிடிச்சிருக்கா பூரி” என்று கேட்க..

“ம்ம்” என்றாள்.

“ம்ம் ன்னா என்ன அர்த்தம், நல்லா இருக்கு நல்லா இல்ல பிடிச்சிருக்கு பிடிக்கலை , வாவ், இப்படி ஏதாவது சொல்லனும், அதை விட்டுட்டு.... எது

கேட்டாலும் ஒன்னு முறைக்க வேண்டியது, இல்ல ம்ம் ன்னு மட்டும் சொல்ல வேண்டியது, நீ இப்போதான் இப்படியா இல்ல எப்போதுமே இப்படியா" என்று சொல்ல..

அதற்கும் பதில் சொல்லாமல் அமைதியாக தூர தொலைவை வெறித்தாள் ப்ரியா,

அதை பார்த்த அவன், "டேய் எழில் இவளை பேச வைக்கனும்ன்னா நீ இரண்டு டம்ளர் பூஸ்ட் எக்ஃஸ்ட்ராவா குடிக்கனும் போல இருக்கேடா" என்று நினைத்தவன் பின் சீரியஸான குரலில்

"நீ ஏன் இப்படி இருக்க பூரி.. நானும் இந்த ஆறு மாசமா உன்னை மாத்த ட்ரை பண்ணிட்டேன்..... ஆனா நீ எங்கே பேசினாதானே.....நீ இருக்கிற இடமே ரொம்ப கலகலப்பா இருக்குமாம்... உங்கப்பா சொன்னாங்க....இடையில என்னதான் நடந்தது...என்ன ஆச்சி உனக்கு...

இந்த ஆறு மாசத்துல நீ ஒரு பத்து வார்த்தை சேர்த்து பேசியிருப்பியான்னு தெரியலை.. சொல்லு பூரி.. என்னை உன் நண்பனா நினைச்சா சொல்லு... இல்ல வேண்டாம்" என்று சொல்லிவிட்டு கொஞ்சம் தள்ளி போய் நின்று கொண்டான் அவன்...

லேக்கின் முன் நின்று தண்ணீரை வெறித்தவள், எழில் பேச பேச , தான் இப்படி மாறியதற்கான நிகழ்ச்சிகள் அவள் கண்முன் படமாய் விரிய, ஏனோ இதயம் வேகமாக துடிக்க, அதை தாங்க முடியாது திடீரென ஓட ஆரம்பித்தாள் ,

சிறுது நேரம் கழித்து திரும்பிய எழில், அங்கு ப்ரியா இல்லாததை கண்டு துணுக்குற்றவன் சுற்றி பார்க்க, பிரியா ஓடிக்கொண்டிருந்ததை கண்டவன், "ஹே பூரி நில்லு " என்று கத்திக்கொண்டே, அவள் பின்னால் ஓட,

ஓடிக்கொண்டிருந்தவளோ தீடீரென்று ஒரு திசையை நோக்கி ஆணியடித்தார் போல நின்று எதையோ வெறிக்க , அவள் அருகே சென்ற எழில்...

"பூரி என்னாச்சு உனக்கு சொல்ல இஷ்டம் இல்லன்னா சொல்ல வேணாம், அதுக்காக இப்படி ஓட்டபந்தயத்துல கலந்துக்க போற மாதிரியா ஓடி வருவே, பாரு இவ்ளோ தூரம் ஓடி வந்ததுல , நான் இளைச்சிட்டேன்" என்றவன்

"சரிமா தாயே இனி உங்கிட்ட எதுவும் கேட்கவும்

மாட்டேன், எங்கேயும் கூட்டிட்டு வரவும் மாட்டேன் போதுமா, இப்ப வா போகலாம்" என்றவன் அவளை பார்கக்

தான் இவ்வளவு பேசியும் ஒரு வார்த்தை அவள் பேசாது கண்டு "பூரி" என்று அவள் கையை பிடித்து எழில் உலுக்க,

அவளோ அசையாமல் எதையோ பார்த்த படி நிற்க்கவும்,

ப்ரியாவின் பார்வையை தொடர்ந்து அவனும் அங்கு நோக்க அங்கே...

"ஹேய் பஞ்சுமிட்டாய் , எனக்கு ரொம்ப பிடிக்கும்.. உனக்கு வேணுமா, என்கிட்ட சொன்னா, நான் வாங்கி தந்திருப்பேன் , அதுக்கா இப்படி ஓடி வந்தே சரியான விளையாட்டு பிள்ளை போ".. என்று கூறி எழில் சிரிக்க,

அவன் சொன்னதை கேட்ட ப்ரியாவிற்கு எழிலின் தலையில் ஓங்கி குட்டனும் போல் இருந்தது.. விட்டால் அவனின் கழுத்தை நெறித்திருப்பாள்... பல்லை கடித்துக் கொண்டு அவனிடம் "வா வீட்டுக்கு போகலாம்" என்று ப்ரியா திரும்ப..

அவள் தன் மேல் கொலை வெறியில் இருப்பதை உணராமல்
“ஹே பூரி இரு பஞ்சுமிட்டாய் வாங்கிட்டு வந்துடுறேன்” என்க

அவளது இதயமோ தாறு மாறாக துடித்தது..
“இல்ல வேண்டாம் வா போகலாம்” என்று அவள் அழுத்தி சொல்ல…

அவளின் நிலைமை புரியாமல் , “ இரு பூரி….சும்மா இருந்தவனை பச்சுமிட்டாய் காட்டி ஆசைகாமிச்சிட்ட……ஒண்ணே ஒன்னு வாங்கிட்டு வரேன் பூரி” என்று சொன்னவன் அதை வாங்க செல்ல..

அவளோ எழிலை கண்டு கொள்ளாமல், எதில் இருந்தோ தப்பிப்பது போல் வேகமாக திரும்பி நடந்தாள்…..ஒரு பத்து எட்டுதான் நடந்திருப்பாள், அப்பொழுது,

சொடக்கு போடும் சத்தமும் அதை தொடர்ந்து “ஹலோ மிஸ் ஒரு நிமிஷம்” என்ற ஒரு கம்பீர குரலும் கேட்க இவளின் நடை தயங்கி நின்றுது….

அதே குரல் , அவள் இனி கேட்கக்கூடாது என்று நினைத்த குரல், இனி மேல் கேட்கமுடியாது என்று ஏங்கிய குரல், அதன் தாக்கம் தாங்க முடியாமல் தன் காதுகளை இறுக பொத்திக்கொண்டவள் மீண்டும் நடக்க….

“ஹலோ மிஸ் , கூப்பிட்டா என்னன்னு கேட்ககூடாதுன்னு சொல்லி கொடுத்தாங்களா உங்க ஊருல” என்ற அவன். காய்ந்த சருகுகள் மிதி பட அவள் அருகில் வரும் சத்தம் கேட்டு அவள் இதயம் தாறுமாறாக துடித்தும் திரும்பாமல் அப்படியே சிலைப் போல் நின்றாள் ப்ரியா…

அவள் அருகில் வந்தவன் அவள் முன்னே வந்து நின்று நுனிநாக்கு ஆங்கிலத்தில் “மிஸ், நீங்க இந்த பார்க்குக்கு வந்ததுல இருந்து உங்களை பார்த்துகிட்டுதான் இருக்கேன், நீங்களும் இந்தியாவா” என்றவன் தன் வலிமையான கையை அவள் முன் நீட்டி ஹாய் என்றான்

அவன் தன்னிடம் வந்து ஹாய் என்று கை நீட்டவும்.. அவனை அவள் வேற்று கிரக வாசி போல் பார்த்தாள்…

அவனோ மிகவும் ஸ்டைலாக “க்ரே கலர் முழுக்கை டீ ஷர்ட்டுடன், கில்லர் ஜீன்ஸ் அனிந்து, ரீபொக்

வொயிட் ஷூ , கண்ணில் கூலிங் கிளாஸ், என்று டோட்டலாக இங்கு இருக்கும் கலாசாரத்திற்க்கு ஏற்றவாரு மாறி இருந்தான்....

“என்ன மிஸ் அப்படி பார்க்குறீங்க.... நான் என்ன அவ்ளோ அழகாகவா இருக்கேன்” என்று தன் இரு கையையும் பாதி தூக்கி தன்னை தானே ஒரு தடவை பார்த்துக்கொண்டவன்,
“ஏதோ சுமாரா இருக்கேன்ல” என்று ப்ரியாவிடம் கேட்க,

அவளோ அவனின் செயலில் பல்லை கடித்தபடி அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.....

“என்ன மிஸ் பேசவே மாட்டேங்கிறீங், இந்த நாட்டுல ஒரு தமிழ் பொண்ணை பார்த்த சந்தோசத்துல , உங்க கிட்ட பேச ஓடோடி வந்தேன் , ஆனா நீங்க ம்ப்ச்” என்று வருத்தம் போல் காட்டிக்கொண்டவன்..

“நீங்க ரொம்ப அமைதியோ மிஸ், ஆனா நான் நல்லா பேசுவேன், எனக்கு கலகலன்னு பேசுறவங்களை தான் ரொம்ப பிடிக்கும்... இப்படி உம்முன்னு இருக்கிறவங்களை எனக்கு அறவே பிடிக்காது”

என்றவன்
“பாருங்க பேசிட்டே இருந்ததுல உங்க பேர் கேட்க மறந்துட்டேன்” என்றவன்,

“மிஸ் உங்க பேர் என்னனு நான் தெரிஞ்சிக்கலாமா” என்று கேட்டான்.

“அவங்க பேர் தெரிஞ்சி நீங்க என்ன பண்ண போறீங்க மிஸ்டர்” என்று அங்கு வந்தான் எழில் பஞ்சி மிட்டாய் வாங்கிக்கொண்டு, ப்ரியா புதியவனை முறைப்பதை கண்டு அவளிடம் “பூரி யார் இவர், உனக்கு தெரிஞ்சவரா” என்று எழில் கேட்க,

அந்த அவனோ, “ஓ இவங்க பேரு பூரியா நைஸ் நேம்” என்றான் அடக்கபட்ட சிரிப்புடன்

“ஹலோ மிஸ்டர் அவங்க நேம் பூரி இல்ல நான் மட்டும்தான் அப்படி கூப்பிடுவேன்.. அவங்க நேம் ப்ரியங்கா” என்று எழில் சொல்ல..

இப்பொழுது எழிலை வெளிப்படையாகவே முறைத்தாள் ப்ரியா…

அவள் முறைப்பதை பார்த்த எழில் “என்னாச்சு இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இவ என்னை இப்படி

முறைக்கிறா” என யோசிக்க,

ஆனால் அவனோ, “ பிரியங்கா” நைஸ் நேம்…பட் ரொம்ப லென்த்தியா இருக்கே……நான் உங்களை ரியா ன்னு கூப்பிடலாமா” என்று அவளின் கண்ணை பார்த்து கேட்க

அதை கேட்டு உள்ளுக்குள் உடைந்தே விட்டாள் ப்ரியா.. கண்களும் லேசாக கலங்க, அதை பார்த்த எழில்

“ஹலோ மிஸ்டர் நீங்க யாருன்னு சொல்லவே இல்லையே” என்று மீண்டும் அந்த அவனிடம் கேட்க..

ப்ரியாவை பார்த்துக்கொண்டே, சொன்னான் அந்த அவன்,

“ஐ அம் சபரிஷ் ஃப்ரம் இந்தியா….. எனக்கு பிடிச்சவங்க ரிஷின்னு கூப்பிட்டா எனக்கு ரொம்ப பிடிக்கும்” என்று சொல்லிக்கொண்டே அவளை பார்த்து கண்ணடித்தான்……அவளின் நாயகன் ரிஷி என்ற சபரிஷ்…

சபரிஷ் தன்னை ரிஷி என்று அறிமுக

படுத்திக்கொள்ளவும்,

அவனை முறைத்துக் கொண்டே
“டேய் எலி வாடா போகலாம்” என்று பிரியா எழிலை அழைக்க,

எழிலோ ப்ரியாவை ஆச்சர்யமாகவும் அதே சமயம் அவளிடம் இதுவரை கண்டிராத தன் மீதான உரிமை பேச்சையும் கண்டவனின் மனதில், என்னடா இது….. இதுவரை சோலோவா நான் மட்டுமே பேசுவேன்….ஆனா இந்த பூரி அதுக்கு காது என்ற ஒன்று இல்லாத மாதிரியே பிகேவ் பண்ணும்….இப்ப என்னடான்னா இந்த போடு போடுது…… என்னாச்சு பூரிக்கு எதையோ பார்த்து பயந்திடுச்சா” என்று நினைத்தவன் திரும்பி எதிரில் இருந்தவனை மேலும் கீழும் பார்க்க, அவனோ சிரிப்பை கஷ்டபட்டு அடக்குவதை கண்டவன், அது எதனால் என்பது புரிய,

ப்ரியாவை முறைத்த எழில் “ பூரி நான் அவங்க கிட்ட எவ்வளவு அழகா உன்னை அறிமுகப்படுத்தினேன், ஆனா நீ அவங்க முன்னாடி எலின்னு கூப்பிட்டதும் இல்லாம, மரியாதை இல்லாம டா போட்டு என் மானத்தை வாங்கிட்டியேமா, வாங்கிட்டியே” என்று அந்த பஞ்சுமிட்டாயை அவள் முகத்துக்கு நேராக ஆட்டி ஆட்டி எழில் கேட்க

வந்ததிலிருந்து தன்னையே குறுகுறுவென்று
பார்த்துக்கொண்டிருந்தவனின் மேல் உள்ள
கோபத்தில், எழில் ஆட்டிக்கொண்டிருந்த
பஞ்சுமிட்டாயை பிடிங்கி கீழே போட்டவள்..

“ அப்படித்தான் சொல்வேன்டா டால்டா….நீ வர்றதா
இருந்தா வா.. இல்ல நான் நடந்தே போறேன்”
என்றவள் திரும்பி நடக்க..

எழிலோ “வட போச்சே” என்ற ரேஞ்சில் கீழே தன்னை
பார்த்து சிரித்த பஞ்சுமிட்டாயை பார்த்தான்.

சபரிஷோ.. எழிலிடம் “நான் வேணும்ன்னா உனக்கு
வேற பஞ்சிமிட்டாய் வாங்கி தரவா” என்று கேட்க..

“ஏன் பாஸ் ஏன் இந்த கொலைவெறி.. பூரி வேற
கோபமா போறாளே , போங்க பாஸ் நீங்க ரொம்ப
மோசம்” என்ற எழில் ப்ரியாவை நோக்கி ஓடினான்..

அவள் சென்ற திசையை பார்த்துக்கொண்டிருந்த
சபரிஷ்க்கு மனமெல்லாம் சந்தோசம்,

தன்னை பார்த்தால் கோப்படுவாள், திட்டுவாள் என்று
அவன் நினைக்க.. அவளோ ஒன்றும் சொல்லாதது

மட்டும் அல்லாமல் அவளது பழைய குறும்பு பேச்சு வெளிவந்ததில், அவன் எடுத்து வைத்திருக்கும் முதல் படிக்கு கிடைத்த வெற்றி என்றே நினைத்தான்.....

“உன்னை தேடி இந்த மாமன் வந்துட்டேன் செல்லம் , இனி உன்னை நான் விடவே மாட்டேன், வெய்ட் அன் சி பேபி” என்று சொல்லவும் தூரத்தில் காரை நோக்கி வேகமாக சென்று கொண்டிருந்த ப்ரியா திரும்பி பார்த்தாள்.

அவள் பார்ப்பதை பார்த்தவன், தனது வலக்கையின் ஆள்காட்டி விரலையும் , நடுவிரலையும் சேர்த்து தன் உதட்டில் வைத்து பறக்கும் முத்தத்தை அவளை நோக்கி வீசினான்....

அதை பார்த்த ப்ரியா “ கொழுப்பு கொழுப்பு” என்று வாய்க்குள் முனங்கிவிட்டு காரில் ஏறி அமர, எழில் காரை கிளப்பினான், எழில் பேசாமல் அமைதியாக வர, அவளுக்கு ஏனோ இந்த நேரத்தில் அவனின் அமைதி எரிச்சலை தர..

“டேய் எலி ஏன்டா அமைதியா வர” என்று அவள் எரிந்துவிழ...

இப்பொழுது ப்ரியாவை வேற்று கிரக வாசிப்போல் பார்த்த எழில் அவளை பார்த்து…

“நீயா பேசியது என் அன்பே ,
நீயா பேசியது” .. என்று எழில் பாடவும் ,

ப்ரியா முறைக்க கப்பென்று வாயை மூடிக்கொண்டவன்.. சிறிது நேரம் கழித்து..

“பூரி உனக்கு இப்படியெல்லாம் பேச தெரியுமா”.. என்று ஏதோ அதிசயத்தை கண்டவன் போல் கேட்டான்.

“கொஞ்சம் பேசாம வண்டியை ஒட்டுறியா….சும்மா வள வளன்னு பேசிகிட்டு” என்று சிறு எரிச்சலுடன் சொல்ல..

இதற்கும் அவளை ஒரு அதிசய பிறவியை பார்ப்பது போல் பார்த்து வைத்தான் எழில்…

“என்னடா இவ பேசாதைங்கிறா….ஏன் அமைதியா வரேன்னு கேட்குறா……இவ கேரக்டரையே புரிஞ்சிக்க முடியலையே ஆண்டவா” என்று தனக்கு தானே பேசியவன், அவளின் முகத்தை திரும்பி பார்க்க,

அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது.....

அவர்களுடைய கார் சன்லேக் அப்பார்ட்மெண்டில் நுழைந்து நின்றதுதான் தாமதம், அதில் இருந்து இறங்கியவள், காரின் கதவை அடித்து சாத்த,

“ஹே பூரி மெதுவா.... ஐய்யோ என் காரு போச்சு போச்சு” என்று சொல்லி விட்டு கீழே இறங்கி தன் காரை ஒரு முறை சுற்றி பார்த்தவன்.....எந்த சேதாரமும் இல்லை என்று தெரிந்தவுடன், “ஹப்பா இப்பவே கண்ணகட்டுதே” என்று வடிவேலு பாணியில் சொல்லிவிட்டு....தன் காரை திருப்பி அதே பார்க்கை நோக்கி செலுத்தினான் எழில்...

ப்ரியாவோ வேகமாக தான் தங்கி இருக்கும் அறைக்கு வந்து அங்கிருந்த கட்டிலில் தொப்பென்று அமர்ந்தாள்....அவள் மனமோ கொதித்துக் கொண்டிருந்தது.....

“இங்க ஏன் வந்தான் எதுக்கு வந்தான், நான் உயிரோட இருக்கேனா இல்ல செத்தேனான்னு பார்க்க வந்தானா, இல்ல மறுபடியும் என் மனசை குத்தி

கிழிக்க வந்தானா.....இன்னும் என்ன பாக்கி இருக்கு”

இப்படியெல்லாம் யோசித்தவள், ஒன்றை மறந்துவிட்டாள்
அவன் பெயரை கேட்டாலே மயங்கி விழும் அவள் தன் இயல்பான குணத்தை தொலைத்தவள், அவனை கண்டதும் ஏன் மயக்கம் வரவில்லை, தன் இயல்பும் திரும்பிவிட்டதை அவள் அறியவில்லை.... அவன் பக்கத்தில் இல்லாத போது அவனை எண்ணி ஏங்கும் அவளது மனது, அவனை கண்டதும் கோபம் கொள்வதேன்.....

அவளுக்கு அவன் மீதான காதல் இருந்தும், அவன் எப்படி தன்னை சந்தேகபடலாம் என்ற எண்ணமே..அவளை அவனிடத்திலிருந்து பிடிவாதமாக தள்ளி நிறுத்துகிறது என்பதை உணராமல் இருந்தாள்.....
ஆனால் இனி உணருவாள், அவளது ரிஷி உணர வைப்பான்,

எரிச்சலில் சபரிஷை திட்டிக் கொண்டே கட்டிலில் அமர்திருந்தவளின் தோளில் ஒரு கை பட

திரும்பாமல் அது விஷூ என்று யூகித்தவள், “சொல்லு

விஷூ" என்க

"பிரியா, என்னாச்சு ஏன் ஒரு மாதிரியா இருக்கே என்று விஷு கேட்டாள்.

"மப்ச் ஒன்னும் இல்ல ...கொஞ்சம் என்னை தனியா விடுறியா ப்ளீஸ்" என்று ப்ரியா சொல்ல..

விஷுவின் முகம் ஒரு மாதிரி ஆகிவிட்டது "ஸாரி ப்ரியா... எங்க அம்மா உங்கிட்ட பேசணும்ன்னு சொன்னாங்க... நான் முன்னாடியே ஒருதடவை தேடி வந்தேன் நீ இல்ல, இப்போ நீ வீட்டுக்குள்ள வர்றதை பார்த்தேன் அதான்" என்று விஷு இழுக்க..

அவள் அப்படி சொல்லவும் ப்ரியாவிற்கு என்னவோ போல் ஆகி விட்டது.. விஷுவின் புறம் திரும்பியவள் "ஸாரி விஷு.. பத்தும்மாகிட்ட நான் அப்புறம் பேசுறேனே ப்ளீஸ்" என்று சொல்ல,

அவளின் முகத்தை கலங்கி இருப்பதை கண்டவள்...."பரவாயில்ல... நான் அப்புறமா வரேன் , நீ ரெஸ்ட் எடு" என்று சொல்லி விட்டு அவள் சென்றுவிட

ப்ரியாவின் நினைவில் மீண்டும் அவளது ரிஷி வந்தான், அவளது தலையணை கண்ணீரால் நனைந்து..

.....

எழில் ஹாலந்து பார்க்கிற்கு வந்து சுற்றும் முற்றும் பார்த்தான்.

“நான் இங்க இருக்கேன்” என்று குரல் வந்த திசையை எழில் திரும்பி பார்க்க அங்கு கல்பெஞ்சில் கால்மேல் கால் போட்டு ஒரு ராஜாவின் தோரணையில் கம்பீரத்துடன், அமர்ந்திருந்தான் சபரிஷ்,

சபரிஷை கண்டதும் அவன் அருகில் சென்ற எழில்.. “ஹலோ பாஸ் நீங்க இங்க இருக்கீங்களா.. நான் கவனிக்கல” என்றபடி அவன் பக்கத்தில் அமரமல் நின்றான்.

“உட்காரு எழில்” என்று சபரிஷ் சொல்ல..

“இல்ல பாஸ் நான் நிக்கிறேன் உங்க ஊருல உங்க முன்னாடி நின்னு பேசவே பயப்படுவாங்களாம் அப்படியா பாஸ்” என்று கேட்டான் எழில்.

“ஏன் என்னை பார்த்தா முரடன் மாதிரியா இருக்கு” என்று கேட்க…

“ச்ச என்ன பாஸ் இப்படி சொல்லிட்டீங்க, செம பிகர் பாஸ் நீங்க” என்றவன் “அய்யோ ஸாரி பாஸ்” என்றான் உடனே அவசரமாக

அதை கேட்டு சபரிஷ் வாய் வீட்டு சிரித்தான்.. அந்த சிரிப்பிலும் அவனது கம்பீரம் தெரிவதை கண்ட எழில்

“என்ன வாய்ஸ் பாஸ் உங்க வாய்ஸ் அவ்ளோ கெத்தா இருக்கு” என்றவன் “சரி நீங்க சொல்லுங்க பாஸ்… எப்போ வந்தீங்க.. எனக்கு ஒரு தகவலும் வரல.. ஆனா திடீர்ன்னு போன் பண்ணி இந்த பார்க்குக்கு பூரியை கூட்டிட்டு வான்னு மட்டும் சொல்லிட்டீங்க, அவளை சம்மதிக்கிற வைக்கிறதுக்குள்ள நான் நிலவுக்கே போய்ட்டு வந்துருக்கலாம்” என்று எழில் சபரிஷிடம் சொல்ல…

“நான் தான் அவளுக்கு சர்ப்ரைஸா இருக்கட்டும் என்று சொல்லவேண்டாம்னு சொன்னேன் எழில். அதே மாதிரி” என்றவன் மனதில் தன்னவளை நினைத்து ‘இனியும் அவளை பிரிந்திருக்க முடியாது’ என்று நினைத்துதான் உடனே கிளம்பினேன் சொல்லி கொண்டான்

இங்கு வந்து அவளை பார்த்து , அவள் அழகில் அப்படியே நின்றதும் திடீரென்று அவள் முகம் கலங்கி ஓடவும், தானும் வேகமாக வர அவள் தன்னை பார்த்து அதிர்ந்து நின்றதும்.. தான் அவளிடம் யாரோ போல் போய் பேசியதும் அவள் இவனுக்கு என்னாச்சு என்பது போல புரியாமல் பார்த்ததும்.. பின் தன்னை கண்டுகொண்டு கோபமாக சென்றதும்..
இதேயெல்லாம் நினைத்தவன் இதழில் புன்னகை மலர்ந்தது

சபரிஷின் முகத்தில் சிரிப்பை பார்த்த எழில் “பாஸ் எதுக்கு சிரிச்சீங்கன்னு சொன்னா நானும் சிரிப்பேன்ல” என்று சொல்ல.

“சொல்றதை பற்றி பிரச்னை இல்லை ஆனா உன் பூரி உன்ன கொல்லாம விடணும், அதான் என் கவலை..”என்று சபரிஷ் சொல்லவும்.

“போங்க பாஸ் காமெடி பண்ணிக்கிட்டு.. என்னை ஏன் பாஸ் பூரி கொல்லனும்..”

“நான் சொல்லித்தான் நீ அவளை இங்க கூட்டிட்டு வந்தேனு மட்டும் அவளுக்கு தெரிஞ்சிது….உன் நிலைமை என்ன ஆகும்” என்று கேட்க

“என்னதுஊஊஊஊ…” என்று அதிர்ந்தவன், “ஏன் ஏன் பாஸ் இந்த கொலை வெறி உங்களுக்கு என்மேல”என்றவன்.

“பாஸ் பூரி இங்க வந்து இந்த ஆறு மாசத்துல நானே போய் அவகிட்ட பேசினா கூட ம்ம் ன்னு மட்டும் தான் பதில் வரும்” என்றவன்..
“இன்னைக்கி கூட அவளை கட்டாயபடுத்திதான் இங்க கூட்டிட்டு வந்தேன் அனா உங்களை பார்க்கத்தானு அவளுக்கு தெரிஞ்சிது நான் செத்தேன்.. இப்போ அவ கோபத்தை வேற நேர்ல பார்த்துட்டேன்…..” என்றவன்…

“ஆனா, இன்னைக்கு அவ உங்கள பார்த்ததும் வெளிபடுத்திய உணர்ச்சிகளை பார்க்கும் போது ….அவ அமைதியான பொண்ணு இல்லைனு புரிஞ்சிகிட்டேன், எவ்வளவு கோபம் வருது.. ஆனா அந்த கோபம் எல்லாம் உங்கமேல தான்னு நினைக்கிறன் பாஸ்” என்றவன், பின் சீரியஸாக,

“அவ இப்படி இருக்கிறதுக்கு நீங்கதான் காரணமா, அதான் அவ உங்கள பார்க்க பிடிக்காம இங்க யு. எஸ் வந்துருக்காளா” என்று சரியான பாய்ன்டை பிடித்தான் எழில்… இந்த ஆறு மாதத்தில் அவளின் குணத்தை நன்றாக புரிந்து வைத்திருந்தான் எழில்..

அதனால்தான் சில நேரம் அவனை அவள் உதாசீனபடுத்தினாலும்.. அவளை அவன் எப்பொழுதும் வம்பிழுத்துக்கொண்டே இருப்பான்.. அவள் மிகவும் கலகலப்பானவள் என்று தன் தந்தையின் மூலம் தெரிந்தும் வைத்திருந்தான்.. ஆனால் அவளின் இந்த அமைதி எதனால் என்பது மட்டும் தெரியாது , இப்பொழுது கூட தன் தந்தை அவனிடம் சபரிஷ் என்பவர் யூஸ் வருவதாகவும், அவருக்கு தேவையானதை எல்லாம் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் சபரிஷ் என்ன சொல்கிறாரோ அதை செய்ய வேண்டும் என்று சொல்லவும், ஏதோ கேட்க போனவன் சட்டென்று அமைதியாகி சரியென்று சொல்லி போனை வைத்து விட்டான்

காலையில் சபரிஷ் எழிலை போனில் அழைத்து, முதலில் தன்னை அறிமுகபடுத்திக் கொண்டு, பின் பிரியாவை இந்த பார்க்கிற்கு அவளிடம் தன்னை பற்றி சொல்லாமல் அழைத்து வரும்படி கூறவும்,

முதலில் புரியாமல் முழித்தவன்……இந்த பூரி ரிஷி என்ற பெயரை கேட்டாலே மயங்குவதற்க்கும் அந்த பெயருடைய இவனுக்கும் சம்மந்தம் இருக்குமோ…..என்ற எண்ணத்தில் அதை அறிந்து கொள்ளும் ஆவலில்…..அவன் சொல்வதற்கெல்லாம் சரியென்று சொல்லிவிட்டு, கஷ்டபட்டு போராடி அவளை இங்கு அழைத்து வந்துவிட்டான்…….

ஆனால் சபரிஷோ அவன் கேள்விக்கு பதிலளிக்காமல் “எல்லாம் ரெடியா எழில் என்று கேட்க,

“ரெடி பாஸ்” என்று மட்டும் சொன்னவன், சரி பாஸ் நான் கிளம்புறேன் நீங்க என்று கேட்டான்

“நான் இப்ப ஹோட்டலுக்கு போறேன் இன்னும் கொஞ்ச நேரத்தில் வருவேன்” என்று சொல்ல…..சரியென்று எழில் சென்று விட்டான்….

சிறிது நேரம் அப்படியே தன்னவளின் நினைவில் அமந்திருந்த சபரிஷ்…. மனதுக்குள் “வந்துட்டேன் சின்னு உன்னை பார்க்க வந்துட்டேன், இனி நீ இல்லாம இந்த ஊரை விட்டு நான் போக மாட்டேன்” என்று சொல்லிக்கொண்டவன்….அவளின் மீதான

காதலை உணர்ந்த தருணத்தை நினைவு கூர்ந்தான்....

.....

கொட்டும் மழையில் ப்ரியா அழுது கொண்டிருப்பதாக சித்தன் சொல்லவும் வேகமாக வந்தவன், அவள் அங்கு இல்லை என்றதும்..
சந்துருக்கு அழைத்த சபரிஷ்.. அவன் போன் எடுக்க வில்லை என்றதும் வீட்டு அலைபேசிக்கு அழைத்தான். அங்கு தன் அன்னை சொன்ன விஷயம் கேட்டு அதிர்ந்தவன்..”என்னமா சொல்றீங்க” என்று கேட்க..

“ஆமாப்பா.. திடீர்ன்னு வந்தான் . பிரியாவோட துணிமணி எல்லாம் எடுத்துட்டு போனான்.. ஏன்டான்னு கேட்டா .. அவளோட அப்பா வந்துருக்கங்க, அவளை கூட்டிட்டு போறதுக்கு அப்படின்னு சொல்லிட்டு போய்ட்டான்.. என்ன ஏதுன்னு எல்லாம் சொல்லலைப்பா” என்றதும்

“சரிமா” என்றவன்.. காரின் ஸ்டீரிங்கில் தலை கவிழ்ந்து படுத்தான்..

“இந்த போட்டோக்கு நான் விளக்கம் சொல்லனுமா.. இதுக்கு விளக்கம் சொல்லித்தான் என்னை

உங்ககிட்ட நிருப்பிக்கனும் என்ற அவசியம் இல்லை ரிஷி. எனக்கும் அந்த போட்டோல இருக்கிறவனுக்கும் எந்த சம்பந்தமும் இல்ல... என்னை சந்தேகபட்ட நீ எனக்கு வேணாம்"

ப்ரியா சொன்ன இந்த வார்த்தைகள் மட்டும் அவன் காதில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே இருந்தன

"ச்சே எப்படி கொஞ்சம் கூட யோசிக்காமல் , ஒரு பொண்ணை தப்பா பேசிட்டேன்- அவ அப்படியே காதல் சொல்ல வந்திருந்தாலும் , எந்த எண்ணமும் எனக்கு இல்லைன்னு எடுத்து சொல்லிருக்கலாம்....எனக்கு ஏன் அந்த நேரத்தில் அவ்ளோ கோபம் வந்தது" என்று சுய அலசலில் ஈடுபட்டவனின் மனது ஒரு வகையில் அமைதியானது...

அது என்னவென்றால்.. ப்ரியா பத்திரமாக இருக்கிறாள் என்பது தான்...

காரை கிளப்பிய சபரிஷ் தனது வீட்டை நோக்கி சென்றான், எப்படியும் சந்துரு திரும்பி வீட்டுக்குதான் வருவான் அப்போ அவளை பத்தி அவன்கிட்ட கேட்டுக்கலாம் என நினைத்தவன் கையில் கார் பறந்தது..

அவனது அரண்மனை வரவும் அந்த பெரிய கேட் திறக்க.. உள்ளே வந்தவன் காரை அதற்க்குறிய இடத்தில் நிறுத்திவிட்டு இறங்கி நடந்தவனின் மனதில் ப்ரியாவை பார்த்த முதல் நாள் நினைவுக்கு வந்தது ..

அன்று பிரியா கண்மூடி நின்ற தோற்றம் கண்முன் விரிந்தது… இப்பொழுது அந்த இடத்தை பார்த்தவனின் கண்ணில் பிரியா சிரித்தபடி நிற்க.. அவளை கண்டதும் மனதில் எழுந்த சந்தோஷத்துடன் அவள் திரும்ப தன் வீட்டுக்கு வந்துவிட்டாளா என்று நினைத்தவன் , வேக எட்டு வைத்து அவள் அருகே சென்று அவளை தொடவும், உடனே மறைந்து விட்டாள் அவள்

அவள் மறையவும் அவன் என்ன உணர்ந்தான்,.. எப்படி உணர்ந்தான் என்று அவனுக்கே புரியவில்லை, அதே நினைவுடன் மீண்டும் திரும்ப நடந்தவனின் கண்ணில் அங்கிருந்த கல் பெஞ்சில் ப்ரியா அமர்ந்திருப்பதை கண்டவன்

வேகமாக அங்கே செல்வதற்குள் அங்கிருந்தும்

மறைந்து விட்டாள்.. அவள் மறையவும், அவன் மனது தவிக்க ஆரம்பித்துவிட்டது..... அவளை எப்படியாவது பார்த்தே ஆகவேண்டும்..... அதுவும் இப்பொழுதே,

ஆனால் அவள் இங்கில்லை என்று அவன் புத்திக்கு உறைத்தாலும்.. மனமோ அவள் இங்குதான் இருக்கிறாள் என்று அடித்து சொல்ல.... அலைபுறுதலுடன் சுற்றும் முற்றும் தன் பார்வையை சுழல விட்டவனின் மனமோ,

“அடேய் மடையா அவள் வேறு எங்கும் இல்லை உன்னுள் உன் இதய சிம்மாசனத்தில் அமர்ந்து இருக்கிறாள்” என்பதை போட்டு உடைக்க,

அவன் அதிர்ச்சியுடனும், ஆச்சர்யத்துடனும், மனம் தெளிந்துவிட்ட சந்தோஷத்தில், தன் தவிப்பு எதனால் என்று புரிந்துவிட்ட மகிழ்ச்சியில் நிற்கமுடியாமல் அங்கிருந்த கல்மேடையில் அமர்ந்தான்.....தன் மனம் எப்பொழுதிலிருந்து அவள் பக்கம் சாய்ந்தது என்று தெரிந்து கொள்ள ஆசைபட்டான்

அவன் அவளை பார்த்த நிகழ்வுகளை ஒவ்வொன்றாக நினைத்து பார்த்தான்.. அவனுக்கு அது மிகவும்

பிடித்திருந்தது.. அதுவும்.. அன்று பிரியா கத்தி முனையில் நின்ற பொழுது அவன் இதயம் துடித்தது எதற்கு என்று நினைத்தவன் தான் ரியா என்று அழைத்ததும் நினைவுக்கு வர, அவனுக்கு சிரிப்பு வந்தது, அதன் பிறகு , அவளை அணைத்தது நினைவுக்கு வர, அப்பொழுது அவள் மேனியின் மெண்மையையும் வாசனையையும் இப்பொழுது உணர்ந்தான்.....அவளது காதலையும் உணர்ந்தான் , தானும் அவள் மேல் தன்னை அறியாமல் காதல் கொண்டுள்ளோம் என உணர்ந்தான்..

விழியிலே மலர்ந்து
உயிரிலே கலந்த காதலை.....
தான் உணராது, தன் கொடுமையான வார்த்தைகளால் கொன்னதை எண்ணி கலங்கினான்..... அவன்

உடனே அவளை காண வேண்டும்... அவளிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்... அவள் எங்கிருக்கிறாள் என்பதை சந்துரு வந்ததும் அவனிடம் அவளை பற்றி கேட்கவேண்டும் என்று நினைத்தவன் வீட்டுக்குள் செல்ல வீடு அமைதியாக இருந்தது.....ஏனோ அந்த அமைதி அவனுக்கு பிடிக்கவில்லை, நேரே டைனிங் டேபிலுக்கு வந்தவன் இருக்கையில் அமர,

அப்பொழுது அங்கே வந்த லட்சுமி.. “சபரிஷ் எப்போ

வந்தே.... இந்த நேரத்துல நீ ஜவுலிகடையிலதானே இருப்பே.... இரு வந்ததும் தான் வந்துட்டே சாப்பிட்டு கிளம்பு.. இந்த சந்துருக்கு என்னாச்சுன்னே தெரியல திடீர்னு வந்தான் பிரியா வோட அப்பா வந்துருக்கங்க அவளை கூட்டிட்டு போறதுக்குன்னு சொல்லிட்டு அவ துணி மணியெல்லாம் எடுத்துட்டு போய்ட்டான், கேட்டா வந்து சொல்றேன்னு போய்ட்டான்" என்று லட்சுமி புலம்பிக் கொண்டே சமையல் கட்டு பக்கம் திரும்பவும், , அவனிடம் ஒரு பரபரப்பு தொற்றிக் கொண்டது,

"அம்மா" என்று அழைத்தவன், அவன் அன்னை திரும்பி "என்னய்யா" என்று கேட்கவும்

தன் பதட்டத்தை மறைத்து , தாயிடம் "அம்மா சந்துரு வேற எதுவும் சொன்னானா.." என்று கேட்டான்.

மகனை அதிசயமாக பார்த்துக் கொண்டே, "இல்ல பா இப்போ எதுவும் கேக்காதீங்க , வேற யாருக்கும் தெரிய வேண்டாம்ன்னு சொல்லிட்டு போனான்.. ஆனா ஒன்னுய்யா, அந்த பிரியா பொண்ணு இருக்கிற இடம் எப்போவும் கலகலன்னு இருக்கும்....அவ இல்லாம வீடே வெறிச்சோடி போயிருக்கு....எப்படியும் இன்னும் ரெண்டு நாளைக்கு அப்புறம் கிளம்பனும் தான் ஆனா இப்போவே அவ போனது மனசுக்கு

நல்லாவே இல்ல பா" என்று சொல்லிவிட்டு செல்ல..

"எனக்கும் தான் மா" என்று மனதுக்குள்
சொன்னவனுக்கு இப்பொழுது நன்றாக புரிந்து, பிரியா
இந்த ஊரை விட்டு மட்டும் அல்ல,அவனது பேச்சால்
மனம் காயமடைந்து அவனையும் விட்டு
சென்றுவிட்டாள் என்பது புத்தியில் உறைக்க....
சட்டென்று எழுந்து தன் அறையை நோக்கி
சென்றவனின் மனது

இனி ப்ரியாவை எப்படி அணுகுவது அவளிடம் தான்
புத்தி கெட்டு பேசியதற்க்கு எப்படி மன்னிப்பு
கேட்பது....என்பதை பற்றி யோசிக்க ஆரம்பித்தான்.....
எப்பொழுதும் நிமிடத்தில் சட்டென்று
முடிவெடுப்பவன்.....தன் காதல் விஷயத்தில் அடுத்து
என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பி
நின்றான்.....

தன் அறைக்கு செல்ல போனவன் தன்னிச்சையாக
ப்ரியா தங்கி இருந்த அறையை பார்த்தான்... கால்
தானாக அந்த அறையை நோக்கி செல்ல...அந்த
அறையை திறந்தவன்.. உள்ளே சென்றான்..

அன்று அவள் கட்டிலில் அமைந்திருக்க அவள்

அருகில் சென்று தான் கட்டியனைத்தை நினைத்தவன்.. அவள் அமர்ந்திருந்த அதே இடத்தில் அமர்ந்து தன் கண்களை மூட்க் கொண்டு அவளின் நினைவுகளில் மூழ்கினான்..... எவ்வளவு நேரம் ஆனதோ.. யாரோ கதவை திறக்கும் அரவம் கேட்க சட்டென்று தன் கண்களை திறந்து பார்க்க.....அங்கே சந்துரு நின்றிருந்தான்...

தம்பியை பார்த்ததும் என்னவோ ப்ரியாவை பார்த்ததுபோல் அவ்வளவு சந்தோசம் சபரிஷ் முகத்தில்..

சபரிஷ் நினைத்தால் அவள் எங்கு இருக்கிறாளோ , அங்கு பறந்து சென்று பார்க்க கூடிய வல்லமை உள்ளவன் தான்.. ஆனால் காலையில் அவசரபட்ட மாதிரி இப்பொழுதும் அவசர பட விரும்பாமல், அவளை பற்றி முழுமையாக தெரிந்துகொண்டு.. அவளிடம் செல்ல வேண்டும் என நினைத்தான்.. சந்துருவிடம் நெருங்கி...

“ சந்துரு ரியா எங்க.. எப்படி இருக்கா, அவங்க அப்பா வந்து கூட்டிட்டு போய்ட்டாங்களா..” என சபரிஷ் தவிப்புடன் கேட்டான்

தன் அண்ணனின் தவிப்பை கவனிக்கமல்.. முகம்

இறுக அவன் வேறு ஒன்று கேட்டான்.. “அந்த போட்டோவை காட்டி என்ன கேட்டீங்க என் பேபிகிட்ட” என்றவன்

“அவ அவ மனசளவுல குழந்தைண்ணா….. அவ அழுது நான் இதுவரை பார்த்ததே இல்லைன்னா ஆனா இன்றைக்கு அதை பார்த்தேண்ணா…. அதுவும் உங்களால….. எப்போவும் என்னையும் மோகனாவையும் ஒன்னா பார்த்தா என்கிட்டதான் முதல்ல ஓடி வருவா.. ஆனா இன்னைக்கு என்னை பார்த்ததும் அவ கண்ணுலயும் நடத்தையிலும் தெரிஞ்ச விலகல்…அவ என்னை தொடாதேன்னு சொல்லாமல் சொல்லிட்டான்னா உங்களால அவ என்னை ஒதிக்கிட்டா , அந்த இடத்துலேயே நான் உயிரோட செத்துட்டேண்ணா.. செத்துட்டேன்” என்று தான் ஒரு ஆண் மகன் என்பதையும் மறந்து அழுதான். தன் உயிர்தோழியின் விலகலை தாங்க முடியாமல்

அவன் சொல்ல சொல்ல சபரிஷ் அப்படியே சிலை போல் நின்றான்..அவன் அவளிடத்தில் உபயோகித்த வார்த்தையின் வீரியத்தை கண்டு உள்ளுக்குள் துடித்துப் போனான்……தன் மேலேயே அவனுக்கு கோபம் வந்தது……

தன் கண்களை துடைத்த சந்துரு.. தன் அண்ணனிடம், “பேபி உங்களை லவ் பண்றான்னு மோகனா என்கிட்ட சொல்லும்போது நான் அவகிட்ட என்ன சொன்னேன்னு தெரியுமா…. அவ இந்த வீட்டுக்கு மருமகளா வந்தா சந்தோசப்படுற மொத ஆளு நான் தான்.. சப்போஸ் அண்ணாக்கு அவளை பிடிக்கலைன்னா அவளுக்கு எடுத்து சொல்லி புரியவச்சு கூட்டிட்டு வருவாங்கன்னு சொன்னேன்.. ஆனா நீங்க என் பேபிய அழவச்சிட்டிங்களே அண்ணா…..”

“எங்க அண்ணனுக்கு கோபம் வரும் ஆனா ஒரு சின்ன பொண்ணு மனசை கொல்ற அளவுக்கு கோபம் வரும்ன்னு தெரியாம போச்சே. இங்க வரத்துக்கு முன்னாடி அவ அப்பா என் கிட்ட அவளை பத்திரமா பார்த்துக்கோன்னு சொன்னாங்க. நான் அவர்கிட்ட சொன்னேன்…. என்னை நம்பி அனுப்பி வைங்க அங்கிள்ன்னு.. இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அவ அப்பா ஹாஸ்பிட்டல் வந்து அவளை கூட்டிட்டு போகும் போது என்ன எதுன்னு ஒரு வார்த்தை என்கிட்ட கேக்கலண்ணா….அதை நினைச்சு எனக்கு ஒரே குற்றவுணர்வா இருக்கு…..” என்க

சபரிஷோ “என்னது ஹாஸ்ப்பிட்டலா….ஏன் என்னாச்சு என் ரியாக்கு” என்று கேட்க நினைக்கும் போது சந்துரு..

“அந்த போட்டோவை பார்த்தா அவ நிலைமை என்ன ஆகும்ன்னு கண்ணால பார்த்தவன் நான்..
இன்னொருதடவை அந்த போட்டோவை பார்த்தா, அவ உயிருக்கே ஆப்பதுண்ணா, ஆனா நீங்க அதை அவகிட்ட காட்டி ஏதோ தப்பா கேட்டு இருக்கீங்க....
அவளை சாவோட விளிம்புக்கே கொண்டு போய் விட்டுட்டீங்களேண்ணா..... அது எப்போ எடுத்தது எந்த சூழ்நிலையில் எடுத்தது தெரியுமா” என்ற சந்துரு,

அந்த நிகழ்வை சொல்ல சொல்ல சபரிஷ் தன் கைமுஷ்டியை இறுக்கி தன் கோபத்தை அடக்க முடியாமல் தன் செல்லை எடுத்து, சித்தனை அழைத்து, அவனிடம், அந்த நாயை அரைமணி நேரத்திற்க்குள் தன் பண்ணையில் தன் முன் கொண்டு வந்து நிறுத்தும் படி ஆணையிட்டான்...
தன்னவளை வார்த்தையால் காயப்படுத்திய ,
தன்னையும் அறவே வெறுத்தான் சபரிஷ்...

சுவாசம் தொடரும்.
.....

செல்லம்ஸ், இனி அடுத்த அத்தியாயம், உங்களின் கமெண்ட்ஸ் எல்லாத்துக்கும் ரிப்ளை குடுத்துக்கு அப்புறம் தான் பேபிஸ்..

சீக்கிரமே ரிப்ளை குடுத்துட்டு அடுத்த எபியோடு வரேன் குட்டிஸ்...

சுவாசம் 26

கேட்காமல் கிடைத்த வரம்
நீ எனக்கு!
நான் மீண்டும் குழந்தையாய்
துயில்கொண்டேன்
என் அன்னையின் மடியில் அல்ல
என் நண்பனின் மடியில்!

“ஹே மோகினி ஒருநிமிசம் நில்லு , ஐயோ இந்த செருப்பு வேற” என்றவாறு தன் செருப்பின் பின் பெல்ட்டை மாட்டியபடி அங்கே நின்று விட்டாள் ப்ரியா..

ஆனால் மோகனாவோ....ஏதோ ஒரு நினைவில் பிரியா கத்துவதைகூட காதில் வாங்காமல் முன்னே செல்ல

அங்கே சில மாணவிகள் புடைசூழ தன் விலையுர்ந்த காரின் மேல் ஸ்டைலாக கால் மேல் கால் போட்டு அமர்ந்துருந்தான் சைலேஷ்..

அவ்வூரின் எம்.எல்.ஏ. மகன், தந்தை மஹாராஷ்டிரா, தாயோ தமிழ்நாடு, அவன் தந்தையின் பதவி காரணமாகவும், அவனிடத்தில் உள்ள பணத்தின் காரணமாகவும்... அவனிடம் நட்பு என்ற பெயரில் அவனிடம் பழகும் கும்பல்கள் ஏராளம்....பெண்களை ரேகிங் என்ற பெயரில் சீண்டுவதும், கிளாஸை அட்டன்ட் செய்யாமல் கட் அடிப்பது போன்ற நல்ல குணம் கொண்டவன்...
மொத்தத்தில் சொல்ல போனால் பெற்றோர்களால் தண்ணி தெளித்துவிட்ட தறுதலை.....

அந்த கும்பலை கடந்து மோகனா செல்ல.. அவளை கவனித்த சைலேஷ்.. "ஹே பியூட்டி கம் ஹியர்" என்று அழைத்தான்...

மோகனாவோ.. அவன் தன்னைத்தான் அழைக்கிறான் என்று தெரியாமல் முன்னே செல்ல..

அதை கண்டு கோபம் கொண்டவன், வேகமாக சென்று அவள் முன் தன் இடது கையை நீட்டி தடுத்தான்,

“என்னடி திமிரா நான் கூப்பிடுறேன் நீ திரும்பி பார்க்காம போற” என்று அவளிடம் எகிற

திடீரென்று சைலேஷ் தன் முன்னே வந்து கைநீட்டி தடுத்தது மட்டும் இல்லாமல், டி போட்டு வேறு சொல்ல மோகனாவிற்கு கோபம் வர.

“ஏய் இந்த டி போட்டு பேசற வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம் .. நீ கூப்பிட்டா நான் நிக்கனுமா.. அதுக்கெல்லாம் அதோ உன்கிட்ட ஈஷிட்டு நிக்கிறாங்களே… அவங்கதான் லாயக்கு.. போ போய் அவங்ககிட்ட உன் வித்தையை காட்டு” என்றவள் அப்பொழுது தான் கவனித்தாள் பிரியா அருகில் இல்லை என்பதை..
“எங்க போனா என்கூட வராம” என சுற்றி முற்றி பார்க்க….தன் காலனியை சரி செய்துக் கொண்டிருப்பதை கண்டவள் அவளை நோக்கி செல்ல நினைக்கும் போது…..

தன்னை அத்தனை பேர் முன்னிலையிலும் அவள் அவமதித்ததாக நினைத்துக் கொண்டு மோகனாவின் கையை பிடித்து அவளை தடுத்தவன்……

“உனக்கு அவ்ளோ திமிரா.. நான் யார் தெரியுமா.. என்னை பகைச்சிகிட்டா…. நீ இந்த காலேஜிலே

இருக்கமுடியாது" என்று சைலேஷ் திமிருடன் சொல்ல

நீ யாரா இருந்தா எனக்கென்ன டா" என்றவளின்
கையை பிடித்திருந்தான் சைலேஷ்...

டேய் " விடு டா என் கையை.." என்று அவனிடம்
இருந்து தன் கையை விடுவிக்க மோகனா போராட...

தன் வேலையை முடித்து கொண்டு நிமிர்ந்த பிரியா..
அங்கு மோகனாவின் கையை சைலேஷ்
பிடித்திருப்பதை பார்த்து வேகமாக அவளிடம் சென்று
"டேய் விடுடா அவ கைய" என்று கோபமாக சொல்ல

அவனோ பிரியாவை பார்த்து "விடலைன்னா என்னடி
பண்ணுவே" என்று நக்கலாக கேட்டான்..

"மரியாதையா அவ கையை விடு.. இல்ல என்ன
பண்ணுவேன்னு எனக்கே தெரியாது".. என்று
சொல்லவும்..

"ஓ இப்போதானே புரியுது....உன் கையை பிடிக்காம
அவ கையை பிடிச்சதுனால தானே உனக்கு இவ்ளோ

கோபம்" என்றவன் மோகனாவின் கையை விட்டுவிட்டு ப்ரியாவின் கையை பிடிக்க முயற்சிக்க அவளோ அவன் தன்னை நெருங்கி வரும் முன் பின்னால் நகர்ந்தவள் , குனிந்து தனது காலில் இருந்த செருப்பை எடுத்து அவன் கன்னத்தில் அறைந்துவிட்டாள்..

அனைவரும் அப்படியே ஸ்தம்பித்து நின்றனர்.. மோகனா கூட இதை எதிர் பார்க்கவில்லை…

அங்கே அவனை சுற்றி நின்ற அவனது தோழிகள் அவனை பார்த்து நமுட்டு சிரிப்பு சிரிக்க அவனுக்கு அது பெரும் கோபத்தை ப்ரியாவின் மேல் ஏற்படுத்தியது…

"ஏய் எவ்ளோ தைரியம் இருந்தா என்னையே செருப்பால அடிப்ப உன்னை என்ன செய்யுறேன் பார்" என்று அவளை அடிக்க கை ஓங்கவும்.. அங்கே ப்ரின்ஸி வரவும் சரியாக இருந்தது..

ஓங்கிய கையை கீழே இறங்கியவன்.. "எல்லோர் முன்னாடியும் என்னை செருப்பால அடிச்சி அவமானபடுத்திட்ட இல்ல.. உன்ன சும்மா விடமாட்டேன்டி…..உனக்கு நான் யாருன்னு காட்டுறேன்" என்று ப்ரியாவிடம் கர்ஜித்தவன்…. அங்கு

இருக்க பிடிக்காது தன் வண்டியை கிளப்பி சென்று விட்டான்..

ப்ரியாவின் அருகில் வந்த மோகனா, “ப்ரி அவன் பண்ணினது தப்புதான் அதுக்காக நீ இப்படி பண்ணிருக்க கூடாது.. எதுனாலும் ப்ரின்சி கிட்டதான் கம்ப்லைன்ட் பண்ணனும்….அதை விட்டுட்டு அவனை அடிச்சிட்டியே… இப்போ பாரு அவன் உன்னை சும்மா விடமாட்டேன்னு சொல்லிட்டு போறான்.. எனக்கு என்னமோ தப்பாபடுது ப்ரி” என்று சொல்ல..

“அடி போடி….இதுக்கெல்லாமா பிரிண்ஸிகிட்ட கம்ப்லைண்ட் பண்ணுவாங்க…… அங்க பாரு நான் அடிச்சதும் பயந்து எப்படி ஒடுறான்னு…. அதுவும் இல்லாம இவனால என்னை ஒன்னும் பண்ணமுடியாது……. நீ பயப்படாம வா, நாம கிளாஸ்க்கு போகலாம்”

“அடியே.. நீ அடிச்சதுனால அவன் ஓடல, பிரிண்ஸிய பார்த்துதான் ஒடுறான்”…. என்று மோகனா தன் தலையில் அடித்துக் கொள்ள

“க்கும் சரி சரி வா அப்படியே நாம நம்மை கெத்தை மெயின்டைன் பண்ணிட்டு போகலாம்” என்று மோகனாவை இழுத்துக் கொண்டு தன் வகுப்பிற்க்கு சென்றாள் பிரியா..

சைலேஷை இவர்கள் சாதாரணமாக நினைத்துவிட்டனர்.. அதுதான் தவறாகி விட்டது..

இந்த சம்பவம் நடந்து இரண்டு மாதம் கழித்த நிலையில் அவர்கள் கல்லூரியில் கல்ச்சுரல் ப்ரோக்ராம்.. ஒரு பெரிய அரங்கத்தில் நடை பெற இருந்தது.. அதில் மோகனா நடனத்தில் பங்கேற்க , ப்ரியாவோ அதை பார்க்க வி.ஐ.பி வரிசையில் அமர்ந்திருந்தாள்.. அப்பொழுது அங்கு அமர்ந்திருந்த அனைவருக்கும் குளிர்பானம் பரிமாறப்பட்டது..

ப்ரியாவோ “எனக்கு வேணாம்” என்று சொல்ல ,

“இல்ல மேடம், எல்லோருக்கும் குடுக்க சொன்னாங்க” என்று அந்த பையன் சொன்னதும்,

சரி என்று அவன் நீட்டிய குளிர்பானத்தை வாங்கி பருகினாள்..

சிறிது நேரத்தில் தலை சுற்றுவது போல் இருக்க.. கண்ணை தட்டி முழித்து எழுந்தவள்.... தண்ணீரை எடுத்து பருகினாள்..... அப்பொழுதும் அதே நிலை

தொடர.....என்னவென்று புரியாமல் அவள் மோகனாவை தேடி போக.. அப்பொழுது தான் நடனத்திற்காக மேடை ஏறியவளை பார்த்த பிரியா...

“சரி மோகனாவை தொந்தரவு பண்ண வேண்டாம் நாம வீட்டுக்கு கிளம்புவோம் என்று நினைத்து அருகில் இருந்த தன் வகுப்பு தோழியிடம் மோகனாவிடம் நான் வீட்டுக்கு போகிறேன் என்று சொல்லிவிடுமாரு சொன்னவள்..

வெளியே வந்து கார் நிற்கும் இடத்துக்கு வர வர.. அவளுக்கு இன்னும் கண் சொக்கியது... ஏதோ வானில் பறப்பது போல இருக்க..தட்டுதடுமாறி காரின் அருகில் வந்துவிட்டவள்

காரை சாவியின் உதவியால் திறக்க முயற்சிக்க அது முடியாமல் அது கீழே விழ.. அதை எடுக்க தடுமாறிக்கொண்டிருந்தாள்...

அப்பொழுது ஒரு குரல் “நான் ஹெல்ப் பண்ணட்டா” என்று கேட்க அவள் இருந்த நிலையில் அது யார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை..

அவள் அருகில் வந்தவன்.. அந்த சாவியை எடுத்து.. காரின் மறு பக்கமாக தூக்கி எறிந்தான்.. அதுவும்

அவளுக்கு தெரியவில்லை.. காரின் மேல் கவிழ்ந்து படுத்துவிட்டாள் பிரியா

அவளை நிமிர்த்தியவன்.. தன் நெஞ்சில் சாய்த்துகொண்டு.. யாரையோ அழைக்க அங்கு வந்த மற்றொருவன்.. அவர்களை சில பல கோணங்களில் புகைப்படம் எடுத்தான்,.

புகைப்படம் எடுத்துமுடித்ததும். .. அவளை பார்த்து கோபமாக முறைத்தவன் “என்னை அவமானபடுத்தின உன்னை நான் சும்மா விடுவேன்னு நினைச்சியா , இந்த போட்டோவ வச்சி உன்னை எப்படி என் வழிக்கு கொண்டு வரேன் பாருடி” என்று மயக்கத்தில் இருக்கும் அவளிடம் சொன்னவன், அவள் முடியை பிடித்து அவளை நேராக நிறுத்தி அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்து அவன் பழிவெறியை தீர்த்துக் கொண்டான்

அந்த நிலையிலும் “ஏய் யாருடா நீ எதுக்குடா என்னை அடிச்ச” என்றவாறு அவனிடமிருந்து விடுபட நினைக்க

“அன்னைக்கு நீ என்னை செருப்பால அடிச்சியே

அப்போ என்னை உனக்கு அடையாளம் தெரியலையா..என்று அவள் முடியை பற்றி தூக்கி நிறுத்தியவன் என்ன நினைத்தானோ.. அவளின் முகத்தின் அருகே தன் முகத்தை கொண்டு செல்ல,

அந்த நிலையிலும் அவன் என்ன செய்ய போகிறான் என்று அதை உணர்ந்தவள்..., “டேய் விடுடா என்னை” என்று ப்ரியா அவனை தடுக்க முயற்சிக்க .....அப்பொழுது யாரோ வரும் அரவம் கேட்கவும் அவளை அப்படியே போட்டு விட்டு ஓடி விட்டான் சைலேஷ்

மோகனாவின் நடனம் ஆரம்பித்ததும் அவளின் நடனத்தை, அவளின் நளினத்தை அப்படியே தன் மனப்பெட்டகத்தில் பூட்டி வைத்த சந்துரு அதே சந்தோசத்தோடு கிளம்பி , வாய்க்குள், ஒரு பாட்டை முனகிக்கொண்டே கீழே வந்து தனது இரு சக்கர வாகனத்தை நிறுத்திய இடத்திற்கு வர

ஒரு பெண்ணின் முனகல் சத்தம் கேட்டது அவனுக்கு ஏதோ சரி இல்லாது போல் தோன்ற, சுற்றி பார்த்தான், அங்கே ப்ரியாவின் ஸ்விப்ட் நிற்பதை பார்த்தவன், இன்னுமா கிளம்பாமல் இருக்கா என்று யோசித்தான்

ஏன் என்றால், பிரியா கிளம்பும் போது அவள் வகுப்பு தோழியிடம் அவள் கிளம்பும்விஷயத்தை சொல்லும் போது இவன் கேட்டு கேட்டான்.. இன்னும் விட்டுக்கு போகாம என்ன பண்றா என்று யோசித்தவாறு ப்ரியாவின் காரின் அருகே அவன் செல்லும் போது அவன் காலில் ஏதோ மிதி பட அதை கையில் எடுத்தவன்.....அது பிரியாவின் கார்சாவி போல இருக்க.....சாவியை இங்க போட்டுட்டு வேற எங்கயும் தேடுறாளா என்றவன் ப்ரியா என்று அழைக்க, சத்தம் இல்லாததால் மீண்டும் பிரியா என்று அழைத்துக் கொண்டே செல்ல....அவளின் கார் அருகே சிறு முனகல் சத்தம் கேட்க வேகமாக அங்கு விரைந்தான்

“அங்கே பிரியா அரை மயக்கத்தில் கீழே கிடக்க, பதறியபடி அவள் அருகில் போய் அவளை மடியில் ஏந்தி “பிரியா” என்று அவளின் கன்னத்தில் தட்டினான் சந்துரு..

அந்த மயக்கத்திலும் “டேய் என்னை தொடாதே.. என்னை அடிச்சேல்ல...இரு எங்க அப்பா கிட்ட சொல்லி உன்னை என்ன பண்றேன்னு பாரு என்று

அந்த மயக்கத்தில் குளறியபடி இருக்க,

சந்துருவுக்கோ ஏதோ சரியில்லை என்று தோன்ற....அவளை அலாக்காக அப்படியே தூக்கினான்

“ஏய் விடு , விடுன்னு சொல்றேன்ல” என்று திமிறியவளை கண்டுகொள்ளாது....அவளது காரின் பின் கதவை திறந்தவன் அவளை அப்படியே உள்ளே படுக்க வைத்து, காரின் கதவை சாத்திவிட்டு ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்தவன் காரை கிளப்பி பக்கத்தில் உள்ள ஒரு பிரபலமான மருத்துவமனையில் ப்ரியாவை சேர்த்து விட்டு அவள் கண் முழிப்பதற்காக காத்திருந்தான்..

ஒரு மணி நேரம் கழித்து, மெதுவாக கண் முழித்தவள், சோம்பல் முறித்தபடியே தன் எதிரில் நின்றவனை பார்க்க..... அங்கே அவளையே கோபமாக பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த சந்துருவை கண்டவள்

கோபமாக, “ஏய் நீ இங்க என்ன பண்றே, என் பெட்ரூம்ல உனக்கு என்ன வேலை அம்மா அம்மா” என்று கத்த..

தன் வாயில் விரல் வைத்து ஷ்ஷ்ஷ் என்றவன்..
எத்தனை நாளா உனக்கு இந்த பழக்கம்" என்று முகம் இறுக கேட்டான்..

என்ன பழக்கம் என்று அவனிடமே திருப்பி கேட்டவள் அப்பொழுது தான் கவனித்தாள். தான் இருப்பது மருத்துவமனை என்று..

ஒன்றும் புரியாமல் சந்துருவை பார்த்து "எனக்கு என்னாச்சு நான் ஏன் இங்கு வந்தேன், என்னை யாரு இங்கு கூட்டிட்டு வந்தா.. நீயா" என்று அடுக்கடுக்காக கேள்வி கேட்க

அதை கண்டுகொள்ளாதவன் "உனக்கு எத்தனை நாளா இந்த பழக்கம்ன்னு கேட்டேன்... உன்னை நான் நல்ல பொண்ணுன்னு நினைச்சேன் ஆனா நீ, ச்ச.. போதை தலைக்கு ஏறி உன் கார் பக்கத்துல கிழ விழுந்து கிடந்தே , நான் பார்க்கலைன்னா என்ன ஆகியிருக்கும்ன்னு நினைச்சி பார்த்தியா.. இந்த எழவ போடுறதுக்குதான் உன் பிரென்ட் மோகனா டான்ஸை பார்க்காமகூட வெளியே போனியா.. மோகனா கிட்ட சொல்லி உன் பிரெண்ட்ஷிப்பை மொதல்ல கட்

பண்ண சொல்லணும்” என்றதும் தான் தாமதம்..

அவன் பேச பேச விதிர்த்துப் போய் இருந்தவள் அவனிடம் “என்னை ஏன் திட்டுற என்னை யாருமே இப்படி திட்டினது இல்ல தெரியுமா… எனக்கு எங்க அப்பாவை பார்க்கணும்.. நான் ஒன்னும் பண்ணலை. அங்க கூல்ட்ரிங்ஸ் கொடுத்தாங்க….நான் அதை குடிச்சேன் …..அதுக்கு அப்புறம் எனக்கு தலை சுற்றி மயக்கம் வர்ற மாதிரி இருந்தது.. அதான் சரி வீட்டுகாவது போகலாம்ன்னு தான் வெளியே வந்தேன்.. அவ்ளோதான் எனக்கு தெரியும்.. இப்போ முழிச்சு பார்த்தா.. நான் இங்க இருக்கேன்.. எனக்கு என்னாச்சு.. நீ ஏன் என்னை திட்டுற” என்று குழந்தை போல் கேட்க..

அவள் கேட்ட அழகில் கவர பட்டவன்… அப்போ இவளுக்கு தெரியாம யாரோ , அதில் போதை மருந்தை கலந்திருந்திருக்கணும், யாரா இருக்கும்….ஆனா “ என நினைத்தவன்…பின் அவளிடம் சாந்தமாக..

“ஒன்னும் இல்ல பயப்படாதே” என்றவன் “சரி மயக்கம் வர்ற மாதிரி இருந்தா யார்கிட்டயாவது

சொல்லியிருக்கலாம் இல்ல.....எந்த தைரியத்துல காரை எடுக்க வந்த..... நான் பார்க்கும் போது உன் கார் பக்கத்துல மயங்கி கிடந்த... நான் பார்த்ததுனால சரியா போச்சு இல்லன்னா என்ன ஆகிருக்கும் உன் நிலமை" என்று சிறு கண்டிப்புடன் கேட்க

பிரியா தன் முகத்தை சுருக்கி கொண்டு உம்மென்று அமர்ந்திருந்தாள்..

அவள் அருகில் சென்றவன் "பேபி.. யாரு எது கொடுத்தாலும் வாங்கி குடிக்க கூடாது" என்று ஒரு சிறு குழந்தைக்கு சொல்வது போல் சொல்ல..

பளிச்சென்று அவனை பார்த்து சிரித்தவள்.. "சின்ன பிள்ளைகளுக்கு தான் சொல்லுவாங்க யாரும் சாக்லேட் குடுத்தா வாங்கி சாப்பிட கூடாதுன்னு.. நீ எனக்கு சொல்றே,அப்ப நான் என்ன குழந்தையா" என்று தன் கண்ணை உருட்டி கேட்க

ஆமாம் நீ குழந்தைதான் கல்லம் கபடமற்ற வளர்ந்த குழந்தை என்று நினைத்துக் கொண்டான்....

தீடீரென "அய்யோ மோகினி வீட்டுக்கு போய்ட்டாளான்னு தெரியலையே" என்றவள்

சந்துருவின் கையில் இருந்த போனை பிடிங்கி.
மோகனாவுக்கு அழைத்து தான்
கிளம்பிவிட்டதாகவும்.. புரோகிராம் முடித்ததும்
வீட்டுக்கு போயிட்டு எனக்கு போன் பண்ணு" எனவும்,
எதிர்முனையில் கேட்ட கேள்விக்கு மழுப்பலாக
பதிலளித்துவிட்டு....இது யார் நம்பர் என்று கேட்ட
மோகனாவிற்கு
இது என் பிரண்ட் நம்பர்" என்றுகூறி வைத்துவிட்டு
சந்துருவை பார்த்து கண்சிமிட்டினாள் பிரியா

அவள் தலையில் வலிக்காமல் கொட்டியவன்,
கிளம்பலாமா பேபி என்று கேட்க...

அவனை முறைத்தவள். "நான் ஒன்னும் பேபி இல்ல...
பெரிய பொண்ணு காலேஜ் படிக்கிறேன்..

"ஆமா ரொம்ப பெரிய பொண்ணு தான்" என்று
கிண்டல் அடித்தவன்.. வெளியே செல்ல..

"ஹே சந்துரு நில்லு, பில் கட்ட வேணாமா, நீ
பாட்டுக்கு போறே , மொபைல் குடு நான் என்
அப்பாகிட்ட பேசுறேன்" என்றதும்..

“வேண்டாம் பேபி.. நானே கட்டிட்டேன்..” என்க

“என்னது நீ கட்டுனியா, நீ எதுக்கு கட்டனும் ஒன்னும் தேவை இல்ல.. எங்க அப்பா கிட்ட சொல்லி உன் பணத்தை வாங்கி கொடுக்கிறேன்” என்றவனை கூர்மையுடன் பார்த்தவன்..

“என்னனு சொல்லுவே உங்க அப்பாகிட்ட… அப்பா அப்பா கூல்ட்ரிங் குடிச்சேன் அதுல எதோ கலந்துருந்தாங்க அப்புறம் நான் மயங்கி கிழ கிடந்தேன், இவன்தான் காப்பாத்தினான் , பணம் கட்டினான்னு விவரமா சொல்லி, அவங்களை கலவர படுத்த போறியா” என்று சந்துரு சொன்னதும்…

ஐயோ வேண்டாம் வேண்டாம்… அவங்ககிட்ட சொல்ல வேண்டாம் நான் தும்மினாலே துடிச்சு போயிடுவங்க….இதை சொன்னா பயந்துடுவாங்க…..இந்த காயு வேற பேசி பேசியே என்னை ஒரு வழி பண்ணிரும்….. ஆனா உனக்கு நான் எப்படி பணம் தர்றது”.. என்று யோசிக்க

அவள் தலையை பிடித்து ஆட்டியவன் , “உங்க வீட்ல பாக்கெட் மணி தருவாங்கள்ள, எப்படியும் சேர்த்து வச்சிருப்பேல்ல அதுல இருந்து தா”.. என்று விளையாட்டாக சொல்ல..

ஹி ஹி அந்த கெட்ட பழக்கம் எல்லாம் என்கிட்ட இல்ல சந்துரு..

ஓ அப்போ ஒன்னு பண்ணலாம் , என்னை உன் பிரெண்டுன்னு சொல்ற பணம் தரணும்ன்னு அடம்பிடிக்கிற..... சோ எனக்கு நீ பணம் தர வேண்டாம்....அதுக்கு பதில் பெரிய ஹொட்டேல்க்கு கூட்டிட்டு போ" என்று சொல்ல..

ஹே இது நல்ல ஐடியா, ஓகே டீல்.. எனறாள்

மறுநாள் சொன்ன மாதிரி.. பெரிய ஹோட்டலில் அமர்ந்திருந்தனர் இருவரும்.. மோகனா நேற்று நடனமாடியதால் களைப்பாக இருக்க காலேஜ் வரவில்லை என்று சொல்லிவிட இவர்கள் இருவர் மட்டும் அமர்ந்திருந்தனர்.. சந்துரு சிக்கனை ஒரு பிடி பிடித்துக்கொண்டும் ப்ரியா தலையில் கை வைத்துக்கொண்டும்.. அமர்ந்திருந்தாள்...

"டேய் பக்கி.. என்னடா இது கடையை காலி பண்ணிட்டுத்தான் எழுந்துருப்பியா... டேய் வந்து ரெண்டு மணி நேரம் ஆகுதுடா..இங்க இருக்கிற சிக்கனே முடிஞ்சிடும் போல... ஹும் ஹும் இதுக்கு மேல என்கிட்டே பணம் இல்லடா" என்று மனதுக்குள் புலம்ப..

அவளை ஓரக்கண்ணால் பார்த்தவன்.. இன்னும் அவளை சோதிக்க விரும்பாமல்.. “கிளம்பலாம் பேபி” என்றதும்

“இல்ல இன்னும் வேணும்னாலும் சாப்பிடு” என்று தன் கெத்தை விடாமல் அவள் சொல்ல..

ஹா ஹா அவளை பார்த்து சிரித்தவன்.. உன்கிட்ட பணம் இல்லன்னு எனக்கு தெரியும்.. சரி பாவம் பிள்ளை முழிக்குதே இதுக்கு மேல சோதிச்சா பிள்ளை அழுதுடும்ன்னு நினைச்சிதான் எழுந்தேன்” என்றதும் தான் தாமதம்.. அவனை அங்கேயே மொத்த துவங்கி விட்டாள்..

“பக்கி பக்கி , நல்லா சிக்கனை மொக்கிட்டு எனக்கு பாவமா பாக்குற… எனக்கு ஒரு பீஸ் தந்தியாடா எல்லாத்தையும் நீயே முழிங்கிட்ட” என்று மீண்டும் மொத்த..

அப்பொழுது தனது நண்பனுடன் உள்ளே நுழைந்த சைலேஷ் இந்த காட்சியை கண்டதும் , பல்லை கடித்துக் கொண்டே..

“நேத்து நீ தப்பிச்சிட்ட….நேரம் பார்த்து உனக்கு வலிக்க அடிக்குறேன்டி” என்றவன் தன் பக்கத்தில் இருந்தவனிடம்..
“டேய் எனக்கு அது சீக்கிரம் வேணும் அதுவும் இன்னைக்கே வேணும்” என்று சொல்ல..

“சரிடா மச்சான்…அதெல்லாம் இன்னைக்கே கிடைச்சிடும்டா” என்று ஒத்து ஊதினான் மற்றொருவன்…

இதை அறியாத பிரியாவோ…. ஹோட்டலில் இருந்து வெளியே வந்து சந்துருவை பார்த்து
“நீ சோ ஸ்வீட் டா எவ்வளவு அடிச்சாலும் தாங்குற… உன்ன எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு சோ நான் உன்னை முழு மனதோடு என் பிரெண்டா ஏத்துக்குறேன்” என்று குறும்புடன் சொல்ல..

அவனோ சரிங்க மேடம். என்றான் பவ்வியமாக

“சரி சந்துரு நான் கிளம்புறேன் நாளைக்கு காலேஜ்ல பார்க்கலாம்.. நான் மோஹிகிட்ட நீ எனக்கு பிரெண்ட் ஆனதை சொல்லணும் பை” என்று தன் காரை கிளப்பி செல்ல.. சந்துருவும் சிரித்துக் கொண்டே

தனது வாகனத்தை நோக்கி சென்றான்

மறுநாள் காலேஜ் வாசலில் நின்று கொண்டு உள்ளே வரமாட்டேன் என்று அடம்பிடித்தப்படி நின்று கொண்டிருந்தாள் பிரியா,

கடுப்பான மோகனா "ப்ரி யாருக்காக வெயிட் பண்ணுற அதையாவது சொல்லேன்"

"மொதல்ல வரட்டும் அதுக்கப்புறம் உனக்கு இன்ட்ரோ கொடுத்து யாருன்னு சொல்றேன்"

"அடியேய் ரெண்டும் ஒன்னுதாண்டி.."

"ச்சு கொஞ்சநேரம் சும்மா இரேன்டி தொண தொணன்னு பேசிகிட்டு" என்று எரிச்சலுடன் சொன்னவள், பின் பிரகாசமான முகத்துடன் "இதோ வந்துட்டான் அந்த பக்கி" என்று மோகனாவிடம் சொல்ல

யார் என்று மோகனா பார்க்க, அங்கு சந்துரு தான் வந்துகொண்டிருந்தான் இவர்களை நோக்கி.. ஆனால்

அவன் பார்வையோ மோகனாவையே நோக்கி இருக்க

வாய்க்குள் முனகிய மோகனா “ப்ரி வாடி கிளாஸ்க்கு போகலாம்” என்று மீண்டும் சொல்ல…

“நீ போ நான் அந்த பக்கிக்கூட வரேன்” என்றவள் , ஹாய் என்றபடி அவர்கள் அருகில் வந்த சந்துருவின் தோளில் கைபோட்டு மோகனாவிடம் “நேத்துல இருந்து இந்த பக்கி என்னோட பிரெண்ட் ஆகிட்டான்” என்று பெருமையுடன் சொல்ல

ப்ரியாவை முறைத்த மோகனா , “ப்ரி உனக்கு நான் மட்டும்தான் பிரெண்ட்” என்று பொறாமையுடன் சொன்னாள்… ஏனோ ப்ரியாவை வேறு யாருக்கும் விட்டு கொடுக்க மனம் இல்லை அவளுக்கு

ஆனால் ப்ரியாவோ “இனிமேல் இந்த பக்கியும் என்னோட பிரெண்ட்தான்” என்று ஆணித்தரமாக சொல்ல

“எப்படிடி திடீர்னு பிரெண்ட் ஆனாங்க” என்று மோகனா சந்துருவை முறைத்துக்கொண்டே கேட்க…

“அது வந்து முந்தாநாள் என்ன நடந்துதுன்னா” என்று ப்ரியா அன்றைய சம்பவத்தை சொல்ல வாய்திறக்கவும்..

இவ்வளவு நேரம் இவர்களின் பேச்சை ரசித்தவன் , “நான் சொல்றேன் அன்னைக்கு கார்கீயை இவ தொலைச்சிட்டா. நான்தான் கஷ்டபட்டு தேடி எடுத்து கொடுத்தேன்…அதிலிருந்து நாங்க பிரெண்ட்ஸ் ஆயிட்டோம்.. அப்படித்தானே பேபி…..”என்றவன் சொல்லாதே என்பது போல் ஜாடை காட்ட…

அதை புரிந்து கொண்டவள், “ஆமா மோகினி சந்துரு சொன்ன மாதிரி தான்..ஹி…ஹி…ஹி”என்று அசடு வழிய

“இதெல்லாம் ஒரு காரணமா நம்புறமாதிரியா இருக்கு…..அது என்ன பேபின்னு உன்னை சொல்றாங்க” என்று சந்துருவை பார்த்து மீண்டும் முறைக்க,

“அத விடு, எப்படியோ நாங்க பிரெண்ஸ்

ஆயிட்டோம்.... நான் பேசுறத பார்த்தா பேபி மாதிரி இருக்காம் கூப்பிட்டு போகட்டுமே காசா பணமா" என்றவள் சந்துருவிடம்

"ஈவினிங் ஷாப்பிங் மால் போறோம்...நீயும் வரியா" என கேட்க..
மோகனாவை பார்த்துக்கொண்டே வேகமாக தலையாட்டினான் அவன்..

"சரி அப்ப ஈவ்னிங் பார்க்கலாம் என்று அவனிடம் கூறிவிட்டு முன்னே செல்ல, மோகனாவும் சந்துருவை முறைத்துக் கொண்டே அவள் பின்னே சென்றாள்

மாலையும் வந்தது.. அந்த ஷாப்பிங் மாலில் மூவரும் சுற்றிக் கொண்டிருந்தார்கள்....

"சந்துரு பசிக்குது. ஏதாவது சாப்பிடுவோமா" என்று ப்ரியா கேட்க,

"சரியென்று கூறி மாலில் உள்ளே அமைந்திருந்த ஓரு ரெஸ்டாரண்டில் நுழைந்து, மூவரும் அமர்ந்தனர்....

“அச்சச்சோ ஹே மோஹி நான் என் மொபைல மறந்து கார்லே வச்சிட்டு வந்துட்டேன், இப்போதான் நியாபகம் வருது பாரு, இந்த காயு வேற எத்தனை தடவ போன் பண்ணிச்சோ, நான் போய் எடுத்துட்டு வரேன்” என்று எழுவும்

“நீ இங்கேயே இரு…கார் சாவி கொடு நான் போய் எடுத்துட்டு வரேன்” என்று சந்துரு சொல்லவும்,

“இல்ல நானே போய் எடுத்துட்டு வரேன் “ என்று கிளம்பிவிட்டாள் ப்ரியா,

மாலில் இருந்து வெளியே வந்தவள்.. கார் பார்க்கிங்கில் சென்று தன் காரில் இருந்த மொபைலை எடுத்துக் கொண்டு காரின் கதவை மூடவும்.. அவள் காலில் ஏதோ தட்டுப்பட்டது.. என்னது என்று கீழே பார்க்க, அங்க ஒரு பிரவுன் கலர் கவர் இருந்தது……

யாரோ மிஸ் பண்ணிட்டாங்க போலயே என்றபடி அதை எடுத்தவளின் கண்ணில் பிரியா என்ற பெயர் தெரிய “பிரியான்னு போட்டு இருக்கு ,ஒருவேளை எனக்கோ.. நம்ம கார் பக்கத்துலதானே இருந்தது

என்று சிறிது யோசித்தவள், பின் தன் தோளை குலுக்கிவிட்டு, என்னன்னு பார்த்தா தெரிய போகுதுஎன்று நினைத்து அதை பிரிக்க அதில் உள்ள புகைபடங்களை பார்த்து உயர்அழுத்த மின்சாரம் பாய்ந்தது போல் அதிர்ந்தாள்.. அதில் அவள் சைலேஷின் தோளில் சாய்ந்தும்.. அவன் கன்னத்தில் கன்னம் வைத்தும் இன்னும் வேறு மாதிரியான அருவருப்பான, கோணத்தில்.. புடைப்படங்கள் இருந்தன..

அதில் ஒரு கடிதமும் இருந்தது.. புகைப்படங்களை கீழே போட்டவள். நெஞ்சம் பட படக்க அந்த கடிதத்தை கை நடுங்க பிரித்தாள்....

அதில் “ஏய் என்னை எல்லார் முன்னாடியும் செருப்பால அடிச்சேல்ல..... பாரு நல்லா பாரு...இதை வச்சு உன் மானத்தை நான் வாங்குறேன்டி.... இதையெல்லாம் நெட்ல போட்டு உன்னை அசிங்கபடுத்தல நான் சைலேஷ் இல்லடி” என்று எழுதியிருக்க

கடிதத்தையும் கீழே போட்டவள், அன்று நடந்ததை யோசிக்க தொடங்கினாள்.

அன்று நடந்ததெல்லாம் நிழற்படம் போல் தெரிய பயத்தில் , சுவாசம் தடைபட, மூச்சுதிணரல் ஏற்பட்டு அப்படியே மயங்கி சரிந்தாள்,

சுவாசம் தொடரும்...

சுவாசம் 27

மொபைல் எடுக்கப் போனவளை இன்னும் காணோமே என்று யோசித்தவன் மோகனாவிடம் " நான் பார்த்துட்டு வரேன்னு" என்று சொல்லிட்டு, ப்ரியாவை தேடி செல்ல... அவள் காரின் அருகே மயங்கி கிடப்பதை பார்த்தவன்... பேபி என்று கன்னத்தைத் தட்டி எழுப்ப, அசைவில்லை அவளிடத்தில்,...

அவளை அப்படியே தூக்கி கார்க்குள் கிடத்திவிட்டு திரும்ப, அங்குக் கீழே கிடந் போட்டோக்களைக் கண்டவன் அதிர்ச்சியாகி...பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு ஒரு போட்டோ விடாமல் எடுத்துக் கொண்டு கையோடு அங்குக் கிடந்த அந்த லெட்டரையும் எடுத்துக் கொண்டு இருக்கும் போது ,

இருவரையும் காணாமல் அங்கு வந்த மோகனா..

காருக்குள் மயங்கி கிடந்த ப்ரியாவை பார்த்துவிட்டு "ப்ரி என்னடி ஆச்சு உனக்கு.... எழுந்திருடி ப்ரி.. எனக்குப் பயமாயிருக்கு" என்று அவளை உலுக்கியவள்... அப்பொழுதுதான் கவனித்தாள்...அவள் உடல் சில்லென்று இருப்பதைக் கண்டவள் உடனே நாடி பிடித்துப் பார்க்க... அதில் துடிப்புக் கம்மியாக இருக்கவும் சந்துரு என்று அவள் அலற

"மோகனா எதுக்குக் கத்துற.....இது வெறும் மயக்கம் தான்" என்று முந்தய நினைவில் சொல்ல...

"இல்ல இங்க பாருங்க அவ உடம்பு சில்லுன்னு இருக்கு பல்ஸ்கூடக் கம்மியா இருக்கு...." என்று சுட்டி காட்ட.....அதில் அவனும் பயம் கொள்ள உடனே வண்டியை மருத்துவமனைக்குச் செலுத்தினான் அவன்

அவளை மருத்துவமணையில் சேர்த்துவிட்டு, பிரியாவின் செல்லில் இருந்து அவளுடை தந்தைக்கு அழைத்து.....போட்டோ விஷயம் தவிர்த்து...அவள் மயக்கம் அடைந்ததைச் சொல்ல

அவரும் அடித்துபிடித்துக் கொண்டு உடனே வந்தார்..

வெளியே டாக்டரின் பதில்க்காக எல்லோரும்
காத்திருக்க..

டாக்டரும் வந்தார்.. அதிர்ச்சியான
செய்தியோடு..கார்த்திகேயனை தன் கேபினுக்கு வர
சொல்லிவிட்டு முன்னே செல்ல.....அவரை தொடர்ந்த
மோகனாவை நிறுத்திவிட்டு சந்துரு மட்டும்
கார்த்திகேயனை பின் தொடர.....கடவுளிடம்
வேண்டியபடி வெளியே அமர்ந்துவிட்டாள் மோகனா.....

“மிஸ்டர் கார்த்திகேயன்.... உங்க டாட்டர்” என்ற
மருத்துவர் சிறிது அமைதியாக இருந்துவிட்டு பிறகு..

எப்படிச் சொல்றதுன்னு தெரியலை....அவங்க
ரொம்பவே அதிர்ச்சி ஆகுர மாதிரி எதோ நடந்துருக்கு,
அதை அவங்க இதயத்தால் தாங்கிக்க முடியலை..
அதன் காரணமாக ஏற்பட்டதுதான்.. இந்த
மூச்சித்திணறல் மயக்கம் ....எல்லாம்

இப்போ என்னவென்றால் அவங்க அடைந்த இந்த
அதிர்ச்சியால் இதயம் ரொம்பப் பலவீனமாக இருக்கு,
அது அவங்களை இந்த நிலையில கொண்டு வந்து

நிறுத்திருக்கு…. இதற்கு முறையான ட்ரீட்மென்ட் எடுத்துகிட்டா கண்டிப்பா குணபடுத்திடலாம்…… இன்னும் இரண்டுமணிநேரத்துல அவங்க கண்ணு முழிச்சிடுவாங்க… ஒரு சில டெஸ்ட் எடுத்தவுடன் நீங்க அவங்கள வீட்டுக்கு கூட்டிட்டுப் போய்டலாம் ” என்று நம்பிக்கை அளிக்க…. அப்புறம் ஒரு விஷயம் , அவங்க கூட எப்போவும் யாராவது இருக்கிற மாதிரி பார்த்துக்கோங்க, அவங்களை எப்போவும் கலகலப்பா வச்சிக்கோங்க

தன் செல்ல மகளின் நிலையைக் கண்டு மனம் துடிக்க அமர்ந்திருந்தவரின் தோளை தொட்டு ஆறுதல் படுத்திய சந்துரு, அவரைக் கிளப்பி வெளியே அழைத்து வர,

வெளியே வந்தவர்களிடம் “அங்கிள் என்னாச்சு ப்ரியாவுக்கு எதுக்கு மயங்கி விழுந்தா” என்று பதட்டத்துடன் கேட்க…

“ஒன்னும் இல்லமா…. சாதாரண மயக்கம் தான்.. பயப்பட ஒன்னும் இல்ல” என்றதும்
.

“தேங் காட் இப்போதான் எனக்கு நிம்மதியா இருக்கு.. நான் போய் அவளைப் பார்க்குறேன்” என்று மோகனா

சென்றுவிட..

அவள் சென்றதை உறுதிபடுத்திக் கொண்டு…..”அங்கிள்” என்றவன் அன்று ஒரு நாள் பிரியா மயங்கி கிடந்ததும் மருத்துவமனையில் சேர்த்ததும்….அன்று அவள் குடித்த பானத்தில் போதை மருந்து கலந்திருப்பதைப் பற்றிச் சொன்னவன்…… அது அவளுக்கே தெரியாமல் நடந்தது என்றும், கூறியவன் பின் மெதுவாகத் தயங்கிக் கொண்டே அந்தப் புகைப்படத்தையும் கடிதத்தையும் அவரிடம் கொடுத்தவன்..

“அவனைச் சும்மா விடக் கூடாது அங்கிள்” என்று கோபத்துடன் சொல்ல..

அவன் சொல்ல சொல்ல….தன் மகளை இந்த நிலைக்குக் கொண்டு வந்தவனின் மேல் கொலைவெறியே ஏற்பட., என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தவர்…..” நான் அவனைப் பார்த்துக்குறேன்” என்று சொல்ல…சந்துருவால் சமாதானமாக முடியவில்லை .. சைலேஷ் தனியாக மாட்டும் சந்தர்பத்திற்காகக் காத்திருந்தான் அவன்

அந்த நாளும் வந்தது…

அதே ஷாப்பிங் மாலில் தன் நண்பர்களுடன் வந்திருந்த சைலேஷ், அவர்களை அனுப்பிவிட்டு.. தன் காரில் ஏற போக அடுத்த நிமிடம் வலியால் துடித்துக் கீழே விழுந்தான்.. யார் தன்னை அடித்தது என்று சைலேஷ் பார்க்க, அங்கு ருத்ரமூர்த்தியாக நின்றிருந்தான் சந்துரு கையில் உருட்டு கட்டையுடன்..

அன்னைக்கு நீதானே ப்ரியாவுக்குப் போதை மருந்து கலந்த கூல்ட்ரிங்ஸ் கொடுத்தே , அப்புறம் அவள என்னடா பண்ண பார்க்கிங் ஏரியாவுல… நான் மட்டும் வரலைன்னா….. அவளை என்ன கதிக்கு ஆளாக்கி இருப்ப….. நீ எல்லாம் மனுஷனாடா……உன்னை என்ன பண்றேன் பாரு" என்று சொன்னவன், சைலேஷை அடித்துத் துவைத்து எடுத்து விட்டான் . அவனை அடித்து முடித்தவன், உன் மொபைல் குடு என்று சொல்ல ,

அவன் இடி போன்ற அடியை தாங்க முடியாத சைலேஷ்…..உடனே தன் போனை எடுத்து நீட்டினான்

அவன் கையில் இருந்து பிடுங்கியவன் , அதைத் தன் பாக்கெட்டில் வைத்துவிட்டு , வேற யார்கிட்ட யாவது… இந்தப் போட்டோஸ் இருக்கா" என்று கேட்டு இன்னும் நாலு அடி அடிக்க,..

வலியால் துடித்த சைலேஷ், “இல்ல இல்ல, என் மொபைல்ல மட்டும்தான் எடுத்தேன், எல்லாம் இதுலதான் இருக்கு” என்று சொல்ல…

“இனிமேல் ப்ரியாகிட்ட வாலாட்டுனேன்னு தெரிஞ்சிது.., உன்ன உயிரோட பொதச்சிருவேன்” என்று கர்ஜித்தவன் அந்த உருட்டு கட்டையைச் சைலேஷ் மேலேயே வீசீவிட்டு , சென்று விட…

அதே நேரம் , சைலேஷை தேடி அலைந்த ப்ரியாவின் தந்தை நியமித்த ஆட்கள், சைலேஷ் இந்த ஷாப்பிங் மால் உள்ளே செல்வதைப் பார்த்தவர்கள்.. அவன் வெளியே வருவதற்காகக் காத்திருக்க, அவன் வெளியே வரவில்லை என்றதும்..அவனைத் தேடி உள்ளே சென்று அவனை அள்ளிக்கொண்டு போய்விட்டனர்…

இரண்டு நாள் கழித்து அந்த எம். எல்.ஏ க்கு தகவல் சென்றது ப்ரியாவின் தந்தையிடம் இருந்து..

உடனே அங்குச் சென்ற எம். எல்.ஏ.. தன் மகன் குத்துயிரும் குலையுறுமாக இருப்பதைப் பார்த்தவர்.. கார்த்திகேயனின் காலில் விழுந்து.. “சாப், அவன்

என்ன தப்புப் பண்ணிருந்தாலும் நான் கண்டிக்கிறேன்.. எனக்கு அவன் ஒரே வாரிசு.. அவன விட்டுடுங்க சாப்" என்று கெஞ்ச..

அதற்கு அவரோ….." இன்னொருதடவை என் பொண்ணு கிட்ட உன் பையன் வாலாட்டுனான்னு.. தெரிஞ்சிது" என்றவர்… "உன் பையன் உனக்கு உயிரோட கிடைக்க மாட்டான்" .

"இல்ல சாப் அப்படி எதும் நடக்காது நான் பார்த்துக்கறேன் சாப்"என்றவர் தன் மகனை உடனே அழைத்துச் சென்றுவிட்டார்…

மருத்துவ மனையில் பிரியா கட்டிலில் கண்மூடி படுத்திருக்க, அங்கு வந்த மோகனா…. ப்ரி குட்டி என்னடி இப்படிப் பயமுறுத்திட்ட" என்றபடியே வந்து அவளிடம் நலம் விசாரிக்க, சிறிது நேரம் கழித்துச் சந்துரு உள்ளே வந்தான்..

அதுவரை மோகனாவிடம் பேசிக்கொண்டிருந்த ப்ரியா, சந்துருவை கண்டதும் கலக்கம் கொண்டாள்..

அவளது கலக்கத்தைக் கண்ட சந்துரு.. மோகனாவிடம், "உனக்கு நாளைக்குப் பிராக்டிகல்

கிளாஸ் இருக்குல்ல நீ கிளம்பு" என்றான்..

தன்னைக் கிளம்பச் சொல்ல இவன் யார் என்று மனதுக்குள் நினைத்தவள், "எல்லாம் எனக்குத் தெரியும்.. ஆன்ட்டி வர்ற வரைக்கும் நான் இருக்கேன்" என்றாள்..

"ஏற்கனவே லேட் ஆயிடுச்சு நீ கிளம்பு நான் ப்ரியாவை பார்த்துக்கறேன்" என்று சந்துரு சொல்ல..

பிரியாவிற்கு அழுகை வரும் போல் இருந்தது... இந்த ஒரு சில நாளில் அவன் தன்னைப் பேபி என்று அழைப்பான்.....அவளும் அதை ஏற்றுக் கொள்ள இன்று திடீரென்று அவன் ப்ரியா என்று அழைத்ததைக் கண்டு ..அவன் தன்னை நம்பவில்லையோ என்றெண்ணி வருத்தமுற்றாள்....

அவனை முறைத்த மோகனா, ப்ரியாவிடம் "நான் கிளம்புறேன் பிரி, அப்புறமா வரேன்" என்றவள் சந்துருவை ஒரு வெட்டும் பார்வை பார்த்துவிட்டு மோகனா செல்ல..

ப்ரியாவின் அருகே வந்த சந்துரு அமைதியாக

அவளையே பார்த்துக்கொண்டு நின்றான்.....

அவனது அந்த அமைதியை தாங்க முடியாமல்.. அவனிடம், “சந்துரு சந்துரு, எனக்கும் அந்தப் போட்டோக்கும்”

“பேபி , நீ ஒன்னும் சொல்ல வேணாம், எனக்கு எல்லாம் தெரியும்...அந்த நாய்க்கு பயந்து நீ ஏன் நடுங்குற.....அவன் அப்படி என்ன பண்ணிடுவான்னு நானும் பார்க்குறேன்.... இப்ப நீ நிம்மதியா இரு.. இனி அந்த நாய் உன்கிட்ட வாலாட்ட மாட்டான்.. சரியா”

“ம்ம்.....ஆனா சந்துரு என்னை நம்புறதானே நீ”.. என்று மீண்டும் கேட்டாள், தவிப்புடன்..

அவளின் மனநிலையை மாற்றும் பொருட்டு.. தன் நாடியில் விரல் வைத்து யோசித்தவன், “ம்ம்ம் நம்புறேன் ஆனா , நீ என்னைக் கே.எப்.சி கூட்டிட்டு போகணும்.. பில் நீதான் கட்டணும் ,என்ன டீல் ஓகேவா” என்று சொல்ல..

“போடா” பக்கி என்று மெலிதாகச் சிரிக்க ,

அவளது தலையைப் பிடித்து ஆட்டியவன்.. “உன் நண்பன் நான் இருக்கேன் உனக்குப் பாதுகாப்பா சரியா , இப்போ கொஞ்சம் தூங்கு” என்று அவளைப் படுக்க வைத்தவன்.. அருகில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தான்..

தன் நண்பன் தனக்குத் துணையாக இருக்கிறான் என்ற நிம்மதில் துயில் கொண்டாள்..ப்ரியா

“அந்த நிகழ்ச்சிக்கு அப்புறம் பேபிய மாத்த ரொம்பவே கஷ்டப்பட்டோம்…. எதெற்கெடுத்தாலும் பயம்…. என்கிட்ட மோகனாகிட்ட மட்டும் தான் பேசுவா….. அவளை மாத்துறதுக்குத் தான் கராத்தே கிளாஸ்ல சேர்த்துவிட்டேன்… பேபியும் கொஞ்சம் மாறினா, தன்னை மாதிக்கிட்டா, ஆனாலும் நானும் மோகனாவும் அவ பக்கத்துல இருக்கனும்…”

“இன்றைக்குதான் அவ நாங்க இல்லாம ரொம்ப நாளைக்கு அப்புறம் தனியா உங்களைப் பார்க்க வந்துருக்கா.. ஆனா நீங்க அவளை என்ன சொல்லி காயபடுத்துனிங்கண்ணா…. நீங்க சொன்ன வார்த்தை என்னையும் அவகிட்ட இருந்து பிரிச்சி, அவள் உடல்நிலையும் மோசமாக்கிருச்சு….. சொல்லுங்க அவகிட்ட என்ன சொன்னிங்க” என்று சந்துரு மீண்டும் கேட்க..

இதுவரை சந்துரு சொன்னதைக்
கேட்டுக்கொண்டிருந்தவனுக்கு அந்தச் சைலேஷ் மேல்
கொலைவெறியே வந்தது…

ஆனால் தன்னிடம் கேள்வி கேட்ட சந்துருவிடம்…
ஒன்றும் விடாமல் கூறிவிட்டான்….. அவனுக்குப்
புரிந்தது….தன்னுடைய வார்த்தைகள் அவளை
எந்தளவுக்குப் பாதித்திருக்கும் என்று….

சபரிஷ் சொன்னதைக் கேட்டவன், தன் அண்ணணின்
செயலால் ப்ரியா எந்தளவுக்குத் துடித்திருப்பாள்
என்று புரிய அதுவும் தன்னை ஏன் ஒதிக்கினாள்
என்பதும் தெள்ளதெளிவாகப் புரிய….தன் தோழியை
நினைத்து மனம் வருந்தினான்….பின் சபரிஷிடம்,

“அண்ணா அவகிட்ட, பணத்துக்காக அவ உங்களை
விரும்புறான்னு சொன்னீங்களா…… அவ யாரு
தெரியுமா…அவளே ஒரு கோடீஸ்வரின்னா.. அவங்க
அப்பா மும்பையிலே பெரிய பிஸ்னெஸ் மேன்,

ஆனா அந்தப் பந்தா அவகிட்ட ஒருநாளும் நான்
பார்த்தது இல்லை.. கொஞ்சம் பணம் இருந்தாலே
அலப்பறை பண்ற உலகம்ண்ணா இது.. ஆனா அவ
அப்படிக் கிடையாதுண்ணா.. அவ ஒரு வளர்ந்த

குழந்தை.. மோஹிய கூடப் பார்க்காம இருந்திடுவாண்ணா..... ஆனா என்கிட்ட பழக ஆரம்பிச்ச கொஞ்சநாள்ல என்னைப் பார்க்காம அவளால் இருக்க முடியதுண்ணா.... ஆனா இப்போ என்னைப் பார்க்க முடியாதுன்னு சொல்லிட்டாண்ணா.. அவளுக்கு என்னைப் பார்த்தா உங்க நியாபகம் வருமாம்.. அதனால யாரையும் பார்க்க மாட்டாளாம்.. அவ எந்தளவுக்குக் குறும்பு செய்வாளோ அதே அளவுக்கு வைராக்கியம் உள்ள பொண்ணு அண்ணா அவ....

“ஆனா எனக்கு நம்பிக்கை இருக்கு....கண்டிப்பா ஒருநாள் என் பேபி என்கிட்டே வருவா என்னைப் பக்கின்னு கூப்பிடுவா.... அதுவரைக்கும் நான் உங்ககிட்ட பேச மாட்டேன்...” என்று கூறிவிட்டு சபரிஷை திரும்பியும் பாராமல் சென்றுவிட்டான் சந்துரு...

நினைவுகளில் இருந்து வெளி வந்த சபரிஷ், தன்னவளை பார்த்து விட்ட சந்தோஷத்தோடு அந்தப் பார்க்கை விட்டு கிளம்பினான்...

****

சன்லேக் அப்பார்ட்மெண்ட்...

“டேய் வேகமா ஓடாதே, நில்லு ஒரு வாய் சாப்பிடுமா அம்மா பாவம்ல” என்று தனது இளைய மகனுக்கு உணவு கொடுக்கப் போராடி கொண்டிருந்தாள் தீபா… அவனோ தன் தாயை இளைக்க வைக்கும் முயற்சியை, அதாங்க ஓட்ட பயிற்சியைச் செய்ய வைத்துக்கொண்டிருந்தான்…

ப்ரியா அவளது அப்பார்ட்மெண்ட் பால்கனியில் இருந்து இவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்….. பார்க்கில் அவனைப் பார்த்துவிட்டு வந்ததில் இருந்து அவன் நினைவிலேயே சுழன்றவள்,பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு, பின் ஒரு முடிவுடன், இனி எக்காரணம் கொண்டும் வெளியே செல்லகூடாது என்று நினைத்தவளின் மனதில் ஒரு விஷயம் உறுத்திக் கொண்டே இருந்துது…

“அமெரிக்காவுக்கு வந்து எப்படி என்னைக் கண்டுபிடிச்சான், இந்த எலிக்கு ஏதாவது விஷயம் தெரியுமோ , ஒருவேளை தெரிஞ்சுதான் இன்னைக்கு என்னை வற்புறுத்தி கூட்டிட்டு போனானா… வரட்டும் கேட்கலாம்” என்று நினைத்தவள், பால்கனியில் நின்று , கீழே மகன் தன் தாய்க்கு ஆட்டம் காட்டுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்தவளின் மனது லேசானது போல் இருந்தது....

இந்தக் குடும்பத்தில் ஒன்ற முதலில் சிறிது தயங்கினாலும்.. தீபாவின் அன்பில் கரைந்துதான் போனாள் ப்ரியா, அவளது கணவர் அதற்குமேல் தேவிமா என்றுதான் அழைப்பார், எழிலிடமும் அளவோடுத்தான் பேசுவாள்....ஆனால் அவன்தான் இவளிடம் வந்து வம்பிழுத்துக் கொண்டே இருப்பான்.... அவள் தன் நிலையிலேயே சுழல, அப்பொழுது

கேட் அருகே ஒரு நீளமான கார் வந்து நின்றது... தன் சிந்தனையிலிருந்து வெளிவந்த பிரியாவும், தன் மகனுக்கு உணவை போராடியபடி ஊட்டிய தீபாவும் யார் என்று பார்க்க,

அந்தக் காரில் இருந்து, இறங்கி
ரெமோண்ட் மாடல் போல், தன் பேண்ட் பாக்கெட்டில் தன் பெருவிரலை விட்டு, காலை லேசாக அகற்றி நின்றவனின் தோற்றத்தில் தன்னையும் அறியாமல் மனம் மயங்கி நின்றாள் ப்ரியா.
*****

சுவாசம் தொடரும்..

சுவாசம் 28

“நீ அக்னியின் வம்சமோ!!!
இல்லை,
“நான் மெழுகின் வம்சமோ!!!
“உன் ஒற்றை வார்த்தையால் நான் மரணித்தேன்!!!
“ஆனால் உன் புன்னகையால் மீண்டும் பிறந்தேன்!!!
“உன் தொடுகையால் உருகி நின்றேன

“வாவ் செம ஹேன்சம்மா இருக்கான்….என்ன உயரம்….
யாரா இருக்கும்… ஹே நம்ம அப்பாட்மெண்ட்குள்ள
தான் வரான்…” என்ற குதுகலமான குரலில் தன்
மயக்கத்தில் இருந்து வெளிவந்த பிரியா

காரில் இருந்து இறங்கி நின்றவனை ரசித்த
வீஷுவை கண்டு கடுப்புடன் “யாரை சொல்றே” என்று
கேட்க

“ யாரையா….அங்க கீழே பாரு இப்படி ஒரு
ஹேன்ட்சம்மா யாரையாவது இங்க பார்த்திருக்கியா….
ஆள பார்த்தா தமிழ் நாட்டுக்காரன் மாதிரி
தெரியுது….ப்ரி வரியா ஒரு ஹாய் சொல்லிட்டு
வரலாம்”.. என்று விஷு சொல்ல

“நான் வரலை” என்று பட்டென்ற பதில் ப்ரியாவிடம் இருந்து வந்தது.

“சரி நீ வர வேண்டாம் நான் போறேன்”.. என்றவள் ப்ரியாவின் பதிலை எதிர்பாராமல் கீழே ஓடினாள்…

ப்ரியாவோ மனதுக்குள்.. “ ஹய்யோ லூசு விஷு அவனைப் பற்றித் தெரியாம ஒடுறியே, போ போ நல்லா வாங்கிக் கட்டிட்டு வா” என்று தன் தலையில் அடித்துக் கொண்டு தன் அறைக்குள் சென்று கட்டிலில் அமர்ந்தவளுக்கு.. மீண்டும் அதே யோசனை..

“எதுக்கு இங்க வந்துருக்கான் அதுவும் தான் இருக்கிற இடத்துக்கே……சரி அவன் எதுக்கு வந்திருந்தாலும் எனக்கு என்ன, முடிஞ்ச வரைக்கும் அவனைப் பார்க்கக்கூடாது, அவனைப் பற்றி நினைக்கக் கூடாது என்று தீர்மானம் எடுத்தவள் , அப்பொழுது தான் யோசித்தாள் அவனது உடை மாற்றம் பற்றி..

அவனை வேட்டி சட்டையில் பார்த்த போதே தன் மனதை பறிகொடுத்திருந்தாலும், அவனிடம் ஏன்இந்த உடையிலேயே இருக்கீங்க…ஜீன்ஸ் பேன்ட் போட கூடாதா…” என்று முன்பு ஒரு நாள் கேட்டதற்க்கு

“ இது பாரம்பரிய உடை ….எனக்கு இப்படி உடுத்துவதுதான் பிடிக்கும்” என்று சொல்லிவிட்டு இப்பொழுது எதற்கு இந்த வேஷத்தில் வந்திருக்கிறான்…..என்ன நாடகம் இது என்று குழம்பி கொண்டிருக்க……

இவ்வளவு நாள் அமைதியாக இருந்த அவளது மனசாட்சி..”அவன் அப்படி இருந்தாலும் குத்தம்ங்கிற, இப்படி இருந்தாலும் குத்தம்ங்கிற…. அவனைப் பத்தி நினைக்கக் கூடாதுன்னு சொல்லிட்டு அவனைப் பத்தி மட்டும்தான் நினைச்சிட்டு இருக்கே” என்று நியாபக படுத்த, அதனை முறைத்தவள் ,

“உன்னை யாராவது கூப்பிட்டாங்களா….இவ்வளவு நாள் சும்மாதானே இருந்த இப்ப அவனைப் பார்த்ததும் நீயும் வெளியவந்துட்டியா” என்று மனசாட்சியிடம் சண்டையிட்டவள்…..தன் மொபைலை எடுத்து தன் தந்தைக்கு அழைத்தாள்..

சபரிஷ் இங்கு வந்ததைச் சொல்ல நினைத்தவள், பின் வேண்டாம் என்று முடிவு செய்து அவரிடம் மற்ற விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்ததும், தன்குழப்பத்தில் இருந்து வெளிவந்தவளின் மனது லேசானது ….. அப்பொழுது வெளியே சிரிப்புச் சத்தம் கேட்க.. என்னவென்று எட்டி பார்த்தவளின் கண்கள்

வெளியே தெறித்து விடும் போல் ஆனது அங்குக் கண்ட காட்சியில்..

அங்கு விஷுவும் சபரிஷும் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர்,

அதைப் பார்த்தவள் " ஓ அய்யாவுக்குச் சிரிக்கக் கூடத் தெரியுமா...என்ன பார்த்தா மட்டும் எப்போதும் முறைச்சிகிட்டே இருக்கவேண்டியது..." என்று வாய்க்குள் முனகியவள் ..

கீழே இறங்கி, அவர்களைக் கண்டுகொள்ளாமல் எழிலின் வீட்டை நோக்கி செல்லும் போது ...

அப்போது "ஹே ப்ரியா இங்க வா" என்று விஷு அழைக்க

விஷுவை முறைத்தவள் , அவன் நின்ற பக்கம் திரும்பாமல்.. தீபாவின் வீட்டுக்குள் செல்ல, அவள் முத்துகை துளைத்தது அவனது பார்வை..

வீட்டின் உள்ளே சென்றவள் , "அக்கா எழில் எங்கே" என்று கேட்டாள்

“தெரியலைடா ஆளே காணோம்.. என்னடா ஏதும் வேணுமா…..இல்ல சொல்லணுமா” என்று தீபா கேட்க

“அதெல்லாம் ஒன்னும் இல்லக்கா சும்மாதான்” என்றவள் “ஆமா பசங்க எங்க” என்று கேட்டாள்

“பின்னாடி விளையாடுறாங்க” என்றவள் ப்ரியாவிடம்

“ப்ரியங்கா , நீ வரும் போது ஒருத்தர் விஷூ கூடப் பேசிட்டு இருந்தார் பார்த்தியா அவர், சபரிஷ், நீ தங்கியிருக்கிற அப்பார்ட்மெண்ட் கீழே ஒரு ரூம் காலியா இருந்ததுல்ல, அதுல தான் தங்க போறாராம்” என்றதும்,

“ஓ அப்படியா” என்றவள் “அவர் யாருன்னு உங்களுக்கு முன்னாடியே தெரியுமா” என்று கேட்க…

“தெரியாதுடா ஜிஜு வந்ததும் தான் கேக்கணும்..” என்றாள் தீபா (ஹா ஹா எழில் இப்போதைக்குத் தப்பிசிட்டான் ப்ரியாவின் அடியில் இருந்து)

“சரிக்கா நான் ரூம்க்கு போறேன்” என்று சொல்லிவிட்டு, வெளியே வர அங்கு யாரும் இல்லை….. ‘எங்க போயிருப்பான், ஒருவேளை அவன்

வீட்டுக்குள்ள போய்ட்டானோ.... ஹும் அவன் எங்க போனா எனக்கு என்ன" என்று நினைத்தவள்.. அவன் மீண்டும் வருவதற்குள் தன் அப்பார்ட்மென்டை நோக்கி வேகமாக நடந்தாள்,

ப்ரியாவின் ரூம் மாடியில் என்பதால், கீழ் போசனின் பக்கவாட்டில் வெளியே இருந்து மாடிக்குச் செல்லும் அந்தப் படிக்கட்டு..

ஆதலால், அவள் வேகமாகச் செல்லவும்.. சபரிஷ் அவனது ரூமில் இருந்து வெளியே வரவும் சரியாக இருக்க, அவன் மீது மோதிவிட்டாள் பிரியா ,

மோதி கீழே விழப்போனவளை விழாமல் தாங்கி பிடித்த சபரிஷ்க்கு ஒரு பூ பந்தை தாங்கி பிடித்த உணர்வை ஏற்படுத்த....அவளை தன் பார்வையால் வருடி கொண்டிருந்தான்.....

நெற்றியை சுருக்கி, கண்கள் உள்ளே கருவிழிகள் நடனம் ஆட, உதடு துடிக்க ,கண் மூடி நின்ற தோற்றம் அவனை ஏதோ செய்ய அவளின் முகத்தில் முன்நெற்றி முடி காற்றில் அசைந்தாட, சபரிஷ் அப்படியே தன் உதட்டு குவித்து ஊதி விலக்க முயற்சித்தான்..

அவன் ஊதவும் அதில் சிலிர்த்தவளுக்கு , தன் உணர்வு வர, சட்டென்று கண் விழிந்தவள், தன் முகத்தின் வெகு அருகே அவனின் முகம் இருப்பதைக் கண்டு, 'ச்சை எப்ப பாரு இவன் மேலே வந்து மோதுறதே வேலையா போச்சு.....ஏற்கனவே என் மேல நல்ல அபிப்ராயம் இவனுக்கு...இப்ப என்ன சொல்ல போறானோ" என்ற கலக்கத்துடன்.....அவனிடமிருந்து விடுபட நினைக்க, அவனோ தன் பிடியை தளர்த்தாமல் மேலும் அழுத்தமாக அவள் இடையைப் பிடிக்க, அதை உணர்ந்து அவனை முறைத்தாள்....

அவனோ அவள் முறைப்பை கண்டுகொள்ளாது..... தன் காதலை எல்லாம் கண்களில் தேக்கி, அவள் கண்களை நேராகப் பார்த்து, "சின்னு ஸாரிடா" என்று மனமுவர்ந்து மன்னிப்பு கேட்டான்

அவன் மார்பில் தன் கைகளை வைத்து தன் பலம் கொண்ட மட்டும் அவனைத் தள்ளி நிறுத்தியவள் கோபத்துடன் "நீங்க எதுக்கு சார் மன்னிப்பு கேட்கனும், நான்தான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்கனும்., நான்தானே கவனிக்காம வந்து மோதினேன்" என்று அவள் சொல்லவும்

'ஆமா மோதிட்டு மோதிட்டு மன்னிப்புக் கேக்கவேண்டியது.. அதெப்படி டி அமெரிக்கா வந்தும்

கரெக்ட்டா இவன் மேலையே வந்து மோதுற' என்று மனசாட்சி கேட்க

அதனை முறைத்தவள், அவனிடம் திரும்பி "கொஞ்சம் நகருங்க சார்... ஏன் வழியை மறைச்சிகிட்டு நிக்கிறீங்க " என்று சொல்ல..

அவன் நகராமல்.. "சின்னு ஏன் இப்படியெல்லாம் பேசுற.....நான் எதுக்கு மன்னிப்பு கேட்டேன்னா..... அது நான் அன்னைக்கு" என்று அன்று தான் சொன்ன வார்த்தைகளைச் சொல்லமுடியாமல் திணறினான் சபரிஷ்

அவனை வெற்று பார்வை பார்த்தவள்....அவன் எதைக் குறிப்பிடுகிறான் என்று உணர்ந்து மனதில்எழுந்த வலியுடன், "நீங்க எதுக்கு சார் மன்னிப்பு கேட்கனும்... ஹம்" என்று விரக்தியாகச் சிரித்தவள்.. "நான் தான் தப்பு பண்ணினேன்.... உங்க மனசுல எனக்கான இடம் எதுன்னு தெரிஞ்சிக்காம வந்தது என் தப்புதான்..நீங்க என்ன ஏதுன்னு கேட்காம வார்த்தையால தண்டனை கொடுத்தீங்க..... உங்களைப் பொறுத்தவரை அது சரியாவே இருந்துட்டு போட்டும், நான் தப்பு செஞ்சவ, தப்பு செஞ்சவளாகவே, இருந்துட்டு போறேன்" என்று ப்ரியா சொல்லவும்...

"சின்னு" என்று அதட்டினான்.. சபரிஷ்...

அவன் அதட்டவும், “நீங்க தானே சார் அப்படிச் சொன்னீங்க” என்றவள், அன்று போல் இன்றும் அவன் கண்ணை நேருக்கு நேர் பார்த்து , “இதோ பாருங்க சார், நீங்க எதுக்கு இங்க வந்துருக்கீங்கன்னு எனக்குத் தெரியாது, அதைத் தெரிஞ்சிக்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை, ஆனா இன்னொரு தடவை மன்னிப்பு கேட்கிறேன்… அப்படி இப்படின்னு , என் பின்னாடி வந்தீங்க நான் பொல்லாதவளா ஆயிடுவேன்.. அதென்ன சார் சின்னு பண்ணுட்டு என் நேம் பிரியங்காதேவி சொல்லிட்டேன்” என்றவள் விறு விறுவென்று மாடியேறினாள்

அவள் செல்வதையே பார்த்திருந்தவன், தனக்குத் தானே…
“ சபரிஷ், ரொம்பக் கஷ்டம்டா… சும்மா இருத்தவளை இந்தியாவுல சொறிஞ்சி விட்டுட்டு இங்க இப்போ வந்து மன்னிப்பு கேட்டா , உடனே மாமான்னு உன் பின்னாடி வந்துருவாளா. இப்போ வரைக்கும் உன்னை அடிக்காம விட்டாளே அத நினைச்சி சந்தோஷப்பட்டுக்க” என்று தனக்குத் தானே பேசிக்கொண்டிருந்தவனிடம் வந்தான் எழில்

தூரத்தில் இருந்து இவர்களின் நடவெடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு தான் இருந்தான் எழில் இருவரும் மோதிக்கொண்டதும், பின் ப்ரியா கோபமாகச்

சென்றதையும் பார்த்து விட்டுச் சபரிஷ் அருகில் வந்தவன்

“என்ன பாஸ் அடி ரொம்பப் பலமோ” என்று எழில் உள்குத்தோடு கேட்க,

அவனோ பிரியாவின் நினைவில், “இல்லயே அவ விழறதுக்குள்ள நான்தான் வந்து பிடிச்சிட்டேனே” என்று அப்பாவியாகச் சொல்ல..

“இல்லையே நீங்க ரெண்டு பேரும் மோதுனதுல நிலநடுக்கமே வந்துருச்சாம், இப்பதான் நியூஸ்ல சொன்னாங்க” என்று கிண்டலுடன் சொல்லவும்,

அவன் கிண்டலை உணர்ந்த சபரிஷ் “டேய்” என்று எழிலை சபரிஷ் முறைக்க..

“பின்ன என்ன பாஸ், தேசிங்கு ராஜா மாதிரி வந்தோமா பொண்ணைத் தூக்கினோமா இல்லாம , உங்க ரேஞ்சுக்கு இப்படிக் கெஞ்சிட்டு இருக்கிறது பார்க்க சகிக்கல பாஸ்” என்றான்

எழிலை முறைத்தவன் “டேய் உனக்கு இப்படி ஒரு நிலைமை வந்தா அப்ப தெரியும்….” என்று சொல்ல

“அப்படி என்ன நிலைமை பாஸ்…. ஒரு வேளை பூரி இப்படி இருக்கிறதுக்கு நீங்கதான் காரணமா, சொல்லுங்க பாஸ்” என்று சிறு கோபமான குரலில் பார்க்கில் வைத்து கேட்ட கேள்வியை மீண்டும் கேட்டான் எழில்…

சபரிஷோ மனதுக்குள் “என் நேரம் இந்த நண்டு சின்டெல்லாம் என்னை மிரட்டுதுங்க, அங்க என்னடானா மோகனா, சந்துரு, இங்க இந்த எலி குஞ்சி, சபரிஷ் உன் நிலைமை இப்படியா மாறனும்..’ என்று நினைத்தவன், பரவாயில்லை எல்லாம் என் சின்னுக்காகதானே……அவ மட்டும் என்னை மன்னிச்சு ஏத்துக்கட்டும்.. அதுக்கு அப்புறம் உங்களை எல்லாம் என் சின்னுகிட்ட மாட்டி விடுறேன்…. அப்போ இருக்கு உங்களுக்குப் பூசை”.. என்று நினைத்தவன், பேச்சை மாற்றும் விதமாக,

“அதைவிடு எலி அது என் பிரச்சணை…. நீ யாரையாவது விரும்புறியா, அதாவது வெள்ளகாரியை” என்று சொல்லி முடிக்க வில்லை..

“போங்க பாஸ் ,என் நேம் எவ்ளோ அழகு.. அத இப்படி எலி எலின்னு ஜோடியா ரெண்டு பேரும் சேர்ந்து கொலை பண்றீங்களே” என்றவன், வேறு பக்கம் திரும்பி..

“பாஸ் எனக்குன்னு ஒரு ஆசை இருக்கு .. எனக்கு வர போற பொண்ணு, தழைய தழைய புடவை கட்டிகிட்டு.. தலை நிறையப் பூவச்சி.. கொலுசு சத்ததொட நடந்து வந்து, என்னைப் பார்த்து, வெக்கபட்டுத் தரையில் அவ காலால் கோலம் போடணும் பாஸ், நான் அவளை ரசிக்கணும் பாஸ், அத விட்டுட்டு வெள்ளகாரியம் வெள்ளகாரி” என்று தனது கனவு தேவதையைப் பற்றிச் சொல்லிக்கொண்டே திரும்ப அங்கு யாரும் இல்லை..

“பாஸ் பாஸ்” என்று சுற்றும் முற்றும் பார்த்து எழில் அவனைத் தேட, அவன் தான் இவன் கேள்விக்குப் பயந்து இவனை டைவர்ட் பண்ணிவிட்டு எப்போதோ வீட்டுக்குள் சென்றுவிட்டானே

“ ஹ்ம்ம் போய்ட்டாரா, அப்போ இவ்ளோ நேரம் யாருக்கிட்ட சொல்லிட்டு இருந்தேன் லூசு மாதிரி.. ஆனாலும் இந்தப் பாஸ்க்கு இவ்ளோ லொள்ளு இருக்கக் கூடாது”என்றவன்

“யார் அந்தத் தேவதை
யார் அந்தத் தேவதை”

என்று பாடிக்கொண்டு நடந்தான் தனது வீட்டை நோக்கி...

*****

சபரிஷ் இங்கு வந்து ஒரு வாரம் ஆன நிலையில், அவளிடம் பேச எவ்வளவோ முயற்ச்சி செய்து பார்த்துவிட்டான்.... ஆனால் அவள் இவன் கண்ணில் படாமல் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தாள்.....

இவர்களின் கண்ணாமூச்சி ஆட்டமும் ஒரு நாள் முடிவுக்கு வந்தது..

ஒருநாள் பிரியா தீபாவின் வீட்டிற்குச் சென்று, குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டு இருந்தாள்... அப்பொழுது தீபா..

“ஹே பிரியங்கா , நீ சுத்த போர் , எப்போ பாரு எதையாவது யோசிச்சிட்டே இருக்கிற, இந்த அப்பார்ட் மெண்ட்க்கு, பின்னாடி ஒரு லேக் இருக்கு, போய்ப் பாரேன் மனசுக்கு ரொம்ப ரிலாக்ஸ் ஆ இருக்கும்ன்னு நானும் எத்தனைநாள் சொல்றேன், நீ கேட்கவே மாட்டேன்கிற” என்று சலித்துக்கொள்ள,

ப்ரியாவுக்கு ஏனோ இன்று அதைப் பார்க்கணும் போல் இருக்க, குழந்தைகளிடம் “நீங்க விளையாடுங்க நான் அப்புறமா வரேன்” என்று சொல்லிவிட்டு.. லேக்

அருகில் வந்தவள் அதன் அழகில் மயங்கித்தான் போனாள்…

சுற்றி மரங்களும், நடுவில் நீருற்றும், அதில் குடும்பமாய் வாத்துக்களும், பார்க்கவே ரம்யமாக இருக்க அங்கே அமர்வதற்கு அமைக்கபட்டிருந்த கல் பெஞ்சில் அமர்ந்து அதை ரசிக்கலானாள்…

தண்ணீரில் வாத்துகள் விளையாடிக்கொண்டிருந்தன.. நடுவில் ஒரு குட்டி வாத்து செல்ல, முன்னும் பின்னும் இரண்டு பெரிய வாத்துகள் அந்தக் குட்டி வாத்துக்குப் பாதுகாப்பாய்ப் போனது அதைப் பார்த்ததும், ப்ரியாவிற்குத் தனது தாய் தந்தை நியாபகம் வர, அவர்களைக் காணவேண்டும் போல் இருந்தது..

“ச்சே இவன் மூச்சுக்காற்று கூட என்னைத் தீண்ட கூடாதுன்னுதானே என் அப்பா அம்மாவை விட்டு , மோஹி, சந்துருவை விட்டு வந்தேன், இம்சை இப்போ இங்க வந்து ஸாரி கேக்குறானாம் இவனோட ஸாரி யாருக்கு வேணும் , பேசுறதெல்லாம் பேசிட்டு ஸாரி கேட்டா சரியா போச்சா” என்று முனகியவள்,

‘சந்துரு எப்படியும் என்ன நடந்ததுன்னு

சொல்லிருப்பான், அதான் அய்யா உண்மை தெரிஞ்சி என்ன பார்க்க வந்துருக்கார்' என எரிச்சலுடன் நினைத்தவள்.. 'ஹே அவன் என்ன பார்க்க வந்தானோ.... இல்ல இங்க ஏதாவது பிஸ்னஸ் விஷயமா வந்தானோ யார் கண்டா....." என்று புலம்பியவளை பார்த்த அவள் மனசாட்சி..

"ஏன்டி பிஸ்னஸ் விஷயமா வந்தவன்தான்..உன் பின்னாடியே சுத்துறானா....எவ்வளவு அழகா ரொமான்டிக்கா உனக்குச் சின்னுன்னு பேர் வச்சுருக்கான்.....அவன் மனசுலயும் நீ இருக்கேன்னு நினைக்கிறேன்....இல்லன்னா நீ பார்த்த சபரிஷ் எப்படி இருப்பான்...யாருக்கும் அடங்காம அவன் வச்சதுதான் சட்டம்ன்னு சொல்லி கெத்தா இருக்கிறவன் உன்னைப் பார்க்க துடிக்கறான்னா யோசிக்க மாட்டியா" என்று சரியான நேரத்தில் அட்வைஸ் செய்ய,

'என் மனசை கொன்னுட்டு இன்னும் என்ன இருக்கு என்கிட்ட பேச.....இன்னொருதடவை என்கிட்ட வரட்டும் அவனுக்கு இருக்கு' என்று மனசாட்சியிடம் சண்டையிட்டவள்.....

"எவ்ளோ தைரியம் இருந்தா என் இடுப்பை பிடிப்பான், விழ போனா விழட்டும்ன்னு விட வேண்டியதுதானே, இல்ல கையைப் பிடிச்சி நிப்பாட்டிருக்கணும், அதை

விட்டுட்டு" மனதுக்குள் அவனுக்கு நன்றாக அர்ச்சனை செய்தாள், ஏன்னென்றால் அவன் பிடித்த இடம் இப்பொழுதும் குறுகுறுவென்று இருக்க அதை நினைத்து மனதுக்குள் வசைபாடினாள்....

'அய்யோ அவனை நினைக்ககூடாதுன்னு தானே இருந்தேன், இப்போ என்னன்னா அவனைப் பற்றி மட்டும் தான் நினைக்கிறேன்' எனப் புலம்பியவள், அன்று அவன் பேசிய பேச்சுக்களை மனதில் கொண்டு வந்து நிறுத்தி அவன் மேல் உள்ள கோபத்தைக் கூட்டும் முயற்சியில் ஈடுபட்டவளின் பக்கத்தில் நெருக்கமாக யாரோ அமர அது யார் என்று புரியவும், வேகமாக எழுந்தாள் ,

அவள் எழவும் அவள் கையைப் பிடித்துச் சபரிஷ் இழுக்க, வேகமாக எழுந்தவள் அவன் இழுத்ததில் கால் இடரி பிடிமானம் ஏதும் இல்லாமல் அவன் மேலேயே விழுந்தாள்....

அவள் தன் மேல் விழவும் , அவளின் இடுப்பை வளைத்து பிடித்தவன், அவள் திமிர திமிர அவள் இடுப்பில் மேலும் அழுத்தம் கொடுக்க

அவனை முறைத்தவள், அடக்கப்பட்ட கோபத்துடன் " என்ன விடுங்க" என்று பல்லை கடித்துக் கொண்டு கூறினாள்.

அவனோ “சின்னு நான் சொல்றதை ஒரு தடவை கேளுடா” என்க

“நான் விடுங்கன்னு சொன்னேன்” என்றவள் , அவன் கையை விளக்கும் முயர்ச்சியில் ஈடுபட

“நான் விட மாட்டேன் சின்னு, உன்னை ஒரு தடவை நழுவ விட்டுட்டு நான் பட்டபாடு எனக்குதான் தெரியும்…. நான் சொல்றதை காது கொடுத்து ஒரு தடவை கேளுடா ப்ளீஸ்டா” என்று கெஞ்சினான்,

அவனுக்குக் கெஞ்ச தெரியவில்லையா. இல்லை அவனுக்குத்தான் அந்தப் பழக்கம் இல்லையோ, ஆனால் அது அவனுக்குப் பொருந்ததாதது போல் இருக்க

அவளது பொறுமை பறந்தது… கோபத்தில் வார்த்தையைத் தவறவிட்டாள்…..

அவனைப் பார்த்து “உங்க அகராதியில நான்தான் தப்பானவளாச்சே…. எனக்குதான் பல பேரோட தொடர்பு இருக்கே……இப்போ நான் வேற யூ.ஏ.ஸ்ல

இருக்கேன்… இன்னும் பல பேரோட சுத்தியிருப்பேன்…..நீங்க எதுக்கு என்னை மாதிரி ஒருத்தி பின்னாடி சுத்துறீங்க…..ஓஓஓஓ…இப்ப புரியுது….எல்லாரோடையும் பழகுறவ…நாம கூப்பிட்டா கூட வந்து..” என்று சொல்லி முடிக்கவில்லை….தூர போய் விழுந்தாள் ப்ரியா ….. அவளது கன்னம் தீயாக எரிந்தது..

ஆம் சபரிஷ் அவளை அரைந்திருந்தான்…

கீழே விழுந்தவளை நெருங்கியவன், அவளது வலது கையைப் பிடித்துத் தூக்கி “இந்த மாதிரி லூசுத்தனமா இன்னொரு தடவை பேசின அரைஞ்சு பல்லு கில்லெல்லாம் கழட்டிடுவேன்… ஜாக்கிரதை” என்று அவளிடம் கர்ஜித்துவிட்டு…. அவளை அப்படியே கீழே தள்ளி விட்டுவிட்டு சென்று விட்டான்.

மீண்டும் கீழே விழுந்த பிரியா தன் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு “அரைஞ்சு பல்லுகில்லெல்லாம் கழட்டிடுவானாம்மா…. அப்போ இப்போ பண்ணினது என்னவாம்” என்று அவனைத் திட்டியபடி அப்படியே அமர்ந்திருந்தாள்…

சுவாசம் தொடரும்
*****

சுவாசம் 29

“என் உதடுகள் அந்த வார்த்தையை
உதிர்க்கும் போது வலிக்கவில்லை
பெண்ணே!
அதே வார்த்தையை உன் உதடுகள்
உதிர்க்கும் போது வலிக்கிறடி
கண்ணே!

பிரியா சொன்ன வார்த்தைகளைத் தாங்கிகொள்ள முடியவில்லை சபரிஷால் “என்ன பார்த்து என்ன வார்த்தை சொல்லிவிட்டாள்” என்று மனம் குமறியவனைப் பார்த்த அவனது மனமோ… “நீ பேசினது மட்டும் கம்மியோ” என்று இகழ்ச்சியாகச் சிரிக்க..

இப்பொழுது அவன் நன்றாக உணர்ந்தான் அன்று தான் பேசிய பேச்சுக்கள் அவளை எந்த அளவு புண்படுத்தியிருக்கும் என்று…ஆண்மகனான அவனே அவளின் வார்த்தைகளைத் தாங்க முடியாமல் கொதித்தவன்… மெண்மையான மனம் படைத்த அவளால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும் என்பதை இன்று நன்கு உணர்ந்து கொண்டான்……

“நீயெல்லாம் பிஸ்னெஸ் பண்ணத்தான் லாயக்கு, காதல் பண்ண இல்ல, இப்போ பாரு அவளை அறைஞ்சிட்டு வேற வந்துருக்க…. பாதிக்கபட்ட அவ கோபத்துல அப்படிதான் பேசுவா…..அவ அப்படிப் பேசலைன்னாதான் ஆச்சர்யம், இப்போ இதுக்கும் சேர்த்து முறுக்கிக்கப் போறா…. போடா சபரிஷ்” என்று தன்னைத் தானே திட்டியபிடி வந்து கொண்டிருந்தவனை.. பார்த்த எழில் “பாஸ்” என்று அழைக்க….

அவன் குரலில் நின்றவன் “என்ன” என்பது போல் பார்க்க,

“பாஸ் லேக் பார்த்துட்டு வரிங்களா” என்று கேட்டான்

சபரிஷோ கடுப்புடன்.. “ அதுல ஸ்விம் பண்ணிட்டு வரேன்” என்று சொல்லியபடி நகர..

“பாஸ்” என்று மீண்டும் அழைத்தான்

“என்ன” என்றான் கோபத்துடன் சபரிஷ்..

“ஹி ஹி ச்சில் பாஸ்.. லேக்ல ஸ்விம் பண்ணிட்டு வரேன்னு சொன்னீங்க ஆனா ஹாட்டா வரிங்களே”

பல்லை கடித்தவன்.. “டேய் எலி பேசாம போயிடு நானே கடுப்புல இருக்கேன் சொல்லிட்டேன்”

“என்ன பாஸ் நான் இப்போ என்ன கேட்டுட்டேன்னு இவ்ளோ ஹேப்பியா பதில் சொல்லறிங்க” என்று மேலும் கடுப்பேற்ற, சபரிஷ் இடுப்பில் கைவைத்து எழிலை முறைத்தான்

இரண்டு அடி பின்னால் தள்ளி நின்ற எழில்… “இல்ல பாஸ் , பிச்சூ சொன்னா , பூரி
லேக் பார்க்க போயிருக்கான்னு, இப்போ நீங்க வேற அங்க இருந்துதான் வரிங்களா” என்று இழுத்தவன்..
“பாஸ் எல்லாம் ஓகே வா, எப்போ கல்யாணம்” ..
என்று கண்ணடித்துக் கேட்க..

சபரிசோ.. “ம்ம்ம் அதுவா அது உன் பிரெண்ட் லேக் பக்கத்துல உக்காந்துட்டு யோசிச்சிட்டு இருக்கா, கல்யாண தேதி முடிவு பண்ணிட்டுதான் வருவாளாம் , அது வரைக்கும் வரவே மாட்டேன்னு அடம் பிடிச்சிட்டு இருக்கா…. அவகிட்டேயே போய்க் கேளு நல்ல பதிலா சொல்லுவா.. போ….”

“ஓகே பாஸ் நீங்க போங்க நான் அவகிட்டேயே கேட்டுகிறேன்” என்றவன் லேக்கை நோக்கி நடந்தான் பாட்டுப் பாடிக்கொண்டே..

பாடிக்கொண்டே வந்தவன், ப்ரியாவின் அருகில் வந்து... மீண்டும் பாட ஆரம்பித்தான்.

“கடலினக்கரே போனோறே
கானா பொன்னினு போனோறே.....
போய் வரும்போல் எந்து கொண்டு வரும்....
கை நிறையப் போய் வரும்போல் எந்து கொண்டு வரும்”
என்று அவளைச் சுற்றிக் கொண்டே பாட்டு பாட,

“எலி பாட்டை நிப்பாட்டு”.. என்றாள் பிரியா, கடும் கோபத்தில்

அவனோ அதைக் கவனியாமல்....மறுபடியும் ஆடிக் கொண்டே பாடினான்...

அவன் நிறுத்தாததைக் கண்ட அவள்....எழுந்து அவன் அருகில் வந்து அப்படியே அவனை அந்த ஐஸ் தண்ணீரில் தள்ளி விட்டு வீட்டை நோக்கி சென்றாள்....

தண்ணீரின் குளிர் தாங்காமல் , வேகமாக வெளியே வந்தவனை அவள் அக்கா பிச்சூ “எழில்” என்று அழைத்துக்கொண்டே வந்தவள், அவன் தொப்பலாக

நனைந்திருப்பதைக் கண்டு.. “டேய் என்னடா, இப்படி நனைஞ்சிருக்க.. மழை ஏதும் வந்ததா என்ன”, என்று அப்பாவியாகக் கேட்ட தன் அக்காவை பார்த்து

“பிச்சூ நீ இப்போதான் இப்படியா இல்ல எப்போவுமே இப்படித்தானா” என்று நடுங்கிக் கொண்டே கேட்டான்.

“ஏன்டா இப்படிக் கேக்குறே, போடா”

“ இல்ல,ஒருத்தர் என்னன்னா, வான்ட்டடா வந்து அடி வாங்க ஒருத்திக்கிட்ட அனுப்பிவைக்கிறார் , அவ என்னன்னா என்னைத் தண்ணீல தள்ளிவிட்டுட்டு போறா, நீ வந்து கேக்குறே மழை வந்ததா அப்படின்னு… இல்ல தெரியாமதான் கேக்குறேன் என்னைப் பார்த்தா எல்லோருக்கும் எப்படி இருக்கு” என்று… தன் அக்காவிடம் வசனம் பேச..

“டேய் சும்மா இருடா காமெடி பண்ணாம” என்று தீபா சொல்ல..

இப்படிச் சொன்ன அக்காவை எழில் முறைக்க…

அவளோ… “இல்ல டா நான் ப்ரியங்கா கிட்ட கேட்டேன் அவதான் சொன்னா எழில் ஸ்விம் பண்ண

போறேன்னு ஐஸ் தண்ணில குதிச்சிட்டான் அவனைப் போய் நல்லா திட்டுங்கன்னு சொன்னா" என்று சொல்ல

"அந்தப் பூரி அப்படியா சொன்னா, அவளை என்ன பண்றேன்னு பாரு"

"யாரு நீ... டேய் சிரிப்பு காட்டாம வந்து துணியை மாத்து... இல்ல உடம்புக்கு ஏதாவது வந்திட போகுது" என்றவள்

"எனக்குச் சமையல் வேளை நிறைய இருக்கு, நம்ம அப்பார்ட்மெண்ட்ல இருக்கிற எல்லோருக்கும் நம்ம வீட்ல தான் இன்றைக்கு டின்னர், உன் அத்தான் எல்லோரையும் இன்வைட் பண்ணிருக்காங்க .." என்று சொல்ல..

"ஓஓஓஓ அப்படியா" என்று நினைத்தவன் மனதில் ஒரு ஐடியா உதயம் ஆனது...

"சரி பிச்சூ இன்னைக்கும் நீயா சமைக்கப் போறே"

"ஆமாடா மெனு கூட ரெடி பண்ணிட்டேன்".. என்று தீபா சமைக்கும் ஆர்வதில் சொல்ல..

“போ பிச்சூ இன்னைக்காவது உன் சமையல்ல இருந்து தப்பிக்கலாம்ன்னு நினைச்சேன்” என்றதும்.. அவனது அக்கா ..

“போடா உனக்கு எப்போவுமே கிண்டல்தான்” என்றவள் போகிற போக்கில், அவனைத் தள்ளி விட்டு செல்ல..

தீபா எழிலை தள்ளியதில் மீண்டும் தண்ணீரில் விழுந்தான்.. “அட பக்கி பிச்சூ இதுக்குத்தான் என்னைத் தேடி வந்தியா” என்றவன் அவசர அவரசமாக எழுந்து நடுங்கிக் கொண்டே வீட்டை நோக்கி ஓடினான்…….

……

இரவு எல்லோரும் தோட்டத்தில் கூடி இருந்தனர்.. ப்ரியாவை தவிர..

அந்த இடமே ரம்யமாக இருந்தது.. கணேஷ் அவரது அலுவலகத்தில் இருந்து சிலரை அழைத்திருந்தார் டின்னர்க்கு….

தீபா தமிழ் நாட்டு சமையலை செய்து அசத்திருந்தாள்..

குழந்தைகள் ஓடி பிடித்து
விளையாடிக்கொண்டிருந்தனர்..

எழில் ஸ்பீக்கரில் மெல்லியதான ஒரு இசையை ஓட விட்டிருந்தான் அது அந்த இடத்துக்கு இன்னும் பொருந்தியது..

விஷு தீபாவிற்கு உதவி செய்து கொண்டிருந்தாள் ..

கணேஷ் மற்றவர்களிடமும் , சபரிஷிடமும் பேசிக்கொண்டிருந்தார்..

ஆனால் சபரிஷோ..அவரின் பேச்சை கவனிக்காமல் தன்னவளின் வருகைக்காகக் கண்கள் அலைபாயக் காத்திருந்தான்.....

மதியம் அவளை அறைந்து விட்டு வந்ததற்குப் பிறகு அவளைப் பார்க்கவில்லை அவன்..... சரி இரவு உணவின் போது பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்தான் ஆனால் எல்லோரும் இருக்க அவளை மட்டும் காணாமல் தவித்தான்....

அவனின் தவிப்பை உணர்ந்த எழில்.....ப்ரியாவை அழைக்கச் சென்றான்..

அவள் அரைக் கதவை எழில் தட்ட.....அந்த பக்கம் சத்தம் இல்லை..

மீண்டும் பலமாகத் தட்ட.. கதவு திறந்தது.
பிரியா தனது வலபக்கம் மட்டும் தெரியும் படி நின்றாள்..

“என்ன எழில்”

“கீழே வா எல்லோரும் வந்துட்டாங்க...நீ மட்டும்தான் இல்ல”

“இல்ல நான் வரல ரொம்பக் குளிருது எனக்கு”

“இன்றைக்கு அவ்வளவா குளிர் இல்ல பூரி.. அதான் டின்னர் வெளிய வச்சி அரேஞ் பண்ணிருக்கா பிச்சூ, சோ சாக்கு போக்கு சொல்லாம சீக்கிரம் நீ வா” என்று அழைத்தான்..

“வரலைன்னா விடேன் ச்ச” என்று பிரியா சிறு எரிச்சலிடன் சொல்ல..

அதைக் கேட்ட எழிலிலுக்கு ஒரு மாதிரி

ஆகிவிட்டது..

எப்போவும் ப்ரியா அளவோடு பேசினாலும்... இப்படி முகத்தில் அடித்தார் போல் ஒருநாளும் பேசியது இல்ல..

எழில் வேறு ஏதும் சொல்லாமல்.. “சரி” என்று மட்டும் சொல்லிவிட்டு.. திரும்ப.

இப்பொழுது ப்ரியாவிற்கு ஒரு மாதிரி ஆகி விட்டது.. “ச்ச யாருமேலயோ உள்ள கோபத்தை இவன் மேல காட்டிட்டேன்.. எழில் முகமே ஒரு மாதிரி அயிடுச்சு” என்று வருத்தப்பட்டவள், “எழில்” என்று அவனை அழைக்க,

அவன் திரும்பாமல் அப்படியே நின்றான்..ஆனாலும் அவன் முகத்தில் சிறுபுன்னகை ஒட்டிஇருந்தது....

அவன் திரும்பாமல் நிற்கவும்.....”எலி போதும் நடிச்சது... உனக்கு இது செட் ஆகலை.. நீ நீயா இரு.. போ நான் பத்து நிமிஷத்துல வரேன்” என்று ப்ரியா சொல்லவும்..

“நான் ஒன்னும் நடிக்கல... உண்மையிலே

கோபமாதான் இருக்கேன்”

“அப்படியா..சரி அப்போ நீ அப்படியே இரு நான் வரல” என்று கதவடைக்கப் போனவளை தடுத்தவன்,

“ஐயோ பூரி.. நான் கோபமா இல்லை தாயே .. மறுபடியும் மலைஏறிடாதே.... நான் போறேன் நீ சீக்கிரம் வா” என்று சொல்லி விட்டு எழில் செல்ல..

அவள் சொன்ன மாதிரி பத்து நிமிடத்தில் வந்தாள் பிரியா..
எப்பொழுதும் இந்த ஊர் குளிருக்கு தகுந்த மாதிரிதான் உடை அணிவாள்.

ஆனால் இன்று எழில் சொன்னமாதிரி அதிகக் குளிர் இல்லை ஆதலால், அவளுடைய விருப்ப உடையான, நீள பாவாடையும், அதே கலரில் நீள கைவைத்த சட்டையும் அதே துணியில் தைத்த ஸ்கார்ப்பும் அணிந்தவள் அவளின் நீண்ட கூந்தலை பின்னாமல், சென்ட்டர் கிளிப் போட்டு ஒரு பக்கமாகத் தன் இடது கன்னத்தை மறைக்கும்மாறு விட்டிருந்தாள்..

அவள் மாடியில் இருந்து வரும் போதே பார்த்து விட்டான் சபரிஷ்,

அவளைப் பார்த்ததும் அவனுக்கு அதே கோலத்தில் அவளை ஜவுளி கடையில் பார்த்த நியாபகம் வந்தது.. அன்று அவள் முகத்தில் சிரிப்பும், குறும்பும் சரிபாதியாக இருந்தது.... ஆனால் இன்றோ அந்த இரண்டுமே அவள் முகத்தில் இல்லை... இதற்க்கெல்லாம் காரணம் நான்தானே சின்னு..என்று அவன் மனம் இடித்துரைக்க.... உன் சிரிப்பை நானே திரும்பக் கொண்டு வருவேன் சின்னு" என்று சபதம் எடுத்தான் அவன்...

"ஹே பூரி.. சூப்பர் ரொம்ப அழகா இருக்கே.. இந்த அழகை எல்லாம் இத்தனை நாள் எங்க ஒளிச்சி வச்சிருந்தே" என்று சொல்லவும்..

"ஏன் சார் நாங்கல்லாம் உங்க கண்ணுக்கு அழகா தெரியலையா" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் விஷு..

விஷு அப்படிச் சொன்னதும், சுற்றும் முற்றும் பார்த்தவன் , "ஆமா இங்க பிரியாவும் என் பிச்சூவும் தான் அழகா இருக்காங்க, வேற யாரும் என் கண்ணுக்கு தெரியலையே" என்று சுற்றும் முற்றும் தேடுவது போல் நடிக்க,

"டேய் தடிமாடு உன்னை என்ன செய்யுறேன்னு பாரு"

என்று விஷு துரத்த எழில் ஓட அதைப் பார்த்த ப்ரியாவிற்குச் சந்துருவின் நியாபகம் வந்தது.. அவனும் அப்படிதானே, அவளிடம் ஏதாவது சொல்லி அடி வாங்குவான், ப்ரியா கண் கலங்க சபரிஷை பார்த்தாள்..

அவனும் அவள் வந்ததில் இருந்து அவள் முகத்தில் வந்த உணர்வுகளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்

விஷு மற்றும் எழிலின் விளையாட்டைப் பார்த்ததும் பிரியா கண் கலங்கியதும்... பிறகு இதற்கெல்லாம் காரணம் நீ என்பது போல் கண்ணால் தன்னைக் குற்றம் சாட்டியது போல் இருக்க

சபரிஷும் கலங்கிய மனதுடன் அவளையே பார்த்து இடம் வலமாகத் தலை அசைக்க..

அவள் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள்...அப்பொழுது எழில்...

“ஹலோ லேடீஸ் அன்ட் ஜென்டில் மென்..
இது ஒரு ஜஸ்ட் கெட் டு கேதர் பார்ட்டி மாதிரி.. இங்க இருக்கிற எல்லோருக்கும் அறிமுகம் தேவை

இல்லைன்னு நினைக்கிறேன்... ஏன்னா
எல்லோருக்கும் எல்லோரையும் தெரியும்..ஆனா
ஒருத்தரை மட்டும் நான் உங்களுக்கு
அறிமுகபடுத்துறேன்.. என்ற எழில் சபரிஷின்
பக்கமாக வந்து.

“ஹியர் இஸ் தி ஹீரோ சபரிஷ்.. மை பிரெண்ட் பிரம்
இந்தியா.. எப் பிக் பிஸ்னெஸ் மேன்.. ப்ளீஸ் கிவ்
ஹிம் எப் பிக் பாண்டல் ஆ஼ப் கிளாப்ஸ்”. என்று
எழில் எல்லோருக்கும் சபரிஷை அறிமுகப் படுத்தி
வைக்க எல்லோரும் அவனிடம் கைக்குலுக்கினர்...

ப்ரியாவோ எழிலை முறைத்துக்கொண்டிருந்தாள்..

அதைக் கவனித்த சபரிஷ் , எழிலிடம் “டேய் எலி,
அங்க பாரு உன் பாசமலர் பிரெண்ட் உன்னைப்
பாசமா பாக்குறா” என்று நமுட்டு சிரிப்புடன் சொல்ல

ப்ரியாவை பார்த்த எழில்.. “ஆஹா பாஸ் என்ன பாஸ்
இப்படி முறைக்கிறா” என்று மெல்லிய குரலில் கேட்க

“உனக்குச் செமத்தியா இருக்குடா எலி” என்க

“ஹா ஹா போங்க பாஸ் நான் தான் ஒண்ணுமே

பண்ணலையே அப்போ ஏன் பூரி என்னைச் செமத்தியா கவனிக்கணும்”

“நீ என்னை உன் பிரெண்ட்ன்னு சொன்னேன்ல்ல.... அதுக்குதான் இந்தப் பார்வை..ஹா ஹா” என்று சபரிஷ் வாய்விட்டு சிரிக்க..

“ஆஹா பாஸ் இதுதான் வாய் குடுத்து வாங்கிக் கட்டிக்கிறதா...இப்ப என்ன பண்றது பாஸ்” என்று அவனிடமே கேட்க

“சரி விடு நாளைக்கு ஏதாவது ஹாஸ்பிட்டல்ல மீட் பண்ணலாம் சரியா” என்று கிண்டலுடன் சொல்ல

சபரிஷை முறைத்தவன்.. “பாஸ் இன்றைக்கு இந்தப் பார்ட்டியை வச்சி உங்களுக்கு ஏதாவது ஒரு வகையில ஹெல் பண்ணலாம்ன்னு நினைச்சேன்.... இப்போ அதைக் கேன்சல் பண்றேன் என்றதும்

இப்பொழுது கத்துவது சபரிஷின் முறையானது.. “டேய் எலி என்ன ஹெல்ப்டா சொல்லுடா” என்று தன் கம்பீரத்தையும் மறந்து அவனிடம் கெஞ்சினான்

“பூரிகிட்ட இருந்து என்னைக் காப்பாத்துறேன்னு

சொல்லுங்க அப்போ தான் நான் சொல்லுவேன்.. “ என்று பேரம் பேசினான் எழில்.

“அவ உன்னை ஒன்னும் சொல்லமாட்டா நான் அதுக்குக் கியாரன்ட்டி.. டா”

“ம்ம்ம் ஓகே பாஸ்…வெய்ட் அன்டு வாச்” என்றவன்.. வீட்டுக்குள் சென்று இரு அழகான கண்ணாடி குடுவையுடன் வெளியே வந்தான்..அதில் சில பேப்பர்கள் சுருட்டி போட பட்டிருந்தது..

“ஹாய் பிரெண்ட்ஸ்.. லெட்ஸ் ப்ளே அ ஒன்டர்ஃபுல் கேம்” என்றவன் , இரு கண்ணாடி குடுவையைக் காட்டி..

ஒன்றில் இங்க இருக்கிற எல்லோர் பேரும் எழுதியிருக்கும்.. இன்னொன்றில் நீங்க என்ன பண்ணனும்ன்னு எழுந்திருக்கும் நீங்க அதைச் செய்யணும்..

அப்புறம் இன்னொரு விஷயம்.. அது என்னன்னா.. ஒவ்வொரு தடவையும் ரெண்டு நேம் எடுப்பேன் அது யாரா வேணா இருக்கலாம்.. அதுல இருக்கிறமாதிரி ரெண்டு பேரும் சேர்ந்து கண்டிப்பா பண்ணனும்..இது

ஜஸ்ட் பார் ஃபன்தான் ஓகே வா" என்றவன் முதலில் இரு சீட்டை எடுத்தான், அதில்..

"ஹே பிச்சூ உன் பேர்தான் முதல்ல வந்துருக்கு" என்று சொல்லவும் தீபா முன்னே வந்தாள்....., நல்ல வேலை பிச்சூ சமையல் செஞ்சி காட்டணும்ன்னு நான் எழுதி போடல என்று மனதில் நினைத்தவன்..

அடுத்துச் சீட்டை எடுத்தான், அதில் விஷ்ணுவின் பெயர் இருக்க.. அவளை அழைத்தான்.... விஷ்ணுவும் தீபாவின் அருகில் வந்து நின்றுக் கொண்டாள்.....

மற்றொரு குடுவையில் இருந்து ஒரு சிட்டை எடுக்க, அதில், ஒருவர் கவிதை சொல்ல வேண்டும், பின் அவர் பாட இன்னொருவர் நடனம் ஆடவேண்டும் என்று எழுதியிருந்தது.....

ஹே என்று எல்லோரும் கைதட்ட..

"தீபாக்கா நீங்கி தான் சூப்பரா பாடுவிங்களே, சோ நீங்களே கவிதையும் சொல்லணும் பாடவும் செய்யணும்.." என்று விஷ்ணு சொல்ல..

“சரி” என்ற தீபா முதலில் தன் கணவர் கனேஷை பார்த்துக் கொண்டே ஒரு கவிதை சொன்னாள்

“என்ன இருக்கிறது உன்
“ஓரவிழி பார்வையில்,?
“புவிஈர்ப்பு சக்தியா? இல்லை
“காந்த சக்தியா?
“என்னை வேரோடு
“உன்புறம் இழுக்கிறதே!!!

தீபா கவிதை சொல்லி முடித்ததும், கணேஷ் அவளைப் பாரத்துக் கண் சிமிட்ட.. ...அவள் அழகாக வெக்கப்பட்டவள்.....பாட தயாராகவும்,

விஷு தான் அணிந்திருந்த சுடியின் துப்பட்டாவை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு.. ஆட தயாரானாள்..

“பூவே செம்பூவே உன் வாசம் வரும்..
வாசல் என் வாசல் உன் பூங்காவனம்..
வாய் பேசிடும் புல்லாங்குல் ..
நீதான் ஒரு பூவின் மடல்.
பூவே செம்பூவே உன் வாசம் வரும்
பூவே செம்பூவேவேவேவேவே....

என்று முழுப் பாடலையும் பாடி முடிக்க.. அதற்கு விஷு பாடலுக்கு ஏற்றவாறு அழகாக நாட்டியம் ஆடினாள்..

பாடல் முடிந்தவுடன் எல்லோரும் கைதட்ட... இருவரும் நன்றி கூறி விடை பெறவும் அடுத்தச் சீட்டை எடுத்தான் எழில்..

“ஹே பூரி உன் நேம் வந்துருக்கு” எனவும் பிரியாவும் மகிழ்ச்சியுடன் முன்னே வந்தாள்..

யாரும் கவனிக்கும் முன் தான், ஏற்க்கனவே கையில் மறைத்து வைத்திருந்த சீட்டை , குடுவையில் இருந்து எடுப்பது போல்.. எடுத்தான் எழில்.. ஆனால் இதைக் கவனித்துவிட்டாள் அவன் அக்கா பிச்சூ “எதுக்கு இவன் இப்படிப் பண்றான்” என்று யோசித்தவாறு அவள் அங்கு நடப்பதை கவனிக்க ஆரம்பித்தாள்.....

“சபரிஷ்” என்று எழில் கத்தவும்.....பிரியாவிற்குத் திக்கென்று ஆனது.. என்னது இவன் பேரு வந்துருக்கு.....இப்ப என்ன பண்றது என்று கையைபிசைந்து கொண்டு நிற்க,

ஆனால் சபரிஷோ மிக மிகச் சந்தோசமாக வந்தான்..

இன்னொரு குடுவையிலும் எழில் அவ்வாறே
கோல்மால் செய்து ஒரு சீட்டை எடுக்க, அதில்
இருவரும் கைகோர்த்து மெலோடியன் இசைக்கு
நடனம் ஆட வேண்டும் என்று இருக்க,

“என்னது” என்று அதிர்ந்தாள் ப்ரியா..

ஆனால் சபரிசோ சந்தோஷத்தின் உச்சத்தில்
இருந்தான்.. இப்பொழுது எழில் சபரிஷிடம், ‘பாஸ்
எனக்கு உங்க சொத்து முழுவதும் வேண்டும்’
கேட்டால்கூட மறுபேச்சில்லாமல் எழுதி
கொடுத்துவிடும் மனநிலையில் இருந்தான் சபரிஷ்
அவ்வளவு சந்தோசம் அவன் முகத்தில்..

ப்ரியாவோ “இல்ல முடியாது நான் மாட்டேன்”.. என்று
தன் மறுப்பைத் தெரிவித்தாள்....

எழில்.. “ஹே பூரி இது ஜஸ்ட் ஒரு கேம்.. கோ அன்டு
ஃப்ளே..” என்று அவளை ஊக்குவிக்க,

“இல்ல எழில் என்னால் முடியாது” என்று கெஞ்ச..
அவள் கெஞ்சுவது எழிலுக்கு ஒருமாதிரி இருக்க..
அவன் சபரிஷை பார்த்தான்....

அவனோ எழிலை பார்த்து தன் கண் மூடி திறந்தவன், ப்ரியாவின் காதில் “சின்னு உனக்குப் பயம் எங்க மறுபடியும் இவனைக் காதலிக்க ஆரம்பிச்சிடுவோமோன்னு…அப்படி தானே” என்று சொல்லி அவளைச் சீண்ட..

அந்த வீர் மங்கைக்குக் கோபம் வந்து விட்டது, அவனை நேர் பார்வை பார்த்தவள் “அது இந்த ஜென்மத்துல நடக்காது மிஸ்டர் சபரிஷ்” என்று பிரியா சொல்ல..

“அப்போ வா என்னோட ஆடு”.. என்றவன் தன் வலகையை அவள்புறம் நீட்ட, சபரிஷின் வலிமையான கையைப் பார்த்தவள் தானாகத் தன் இட கையை அவன் உள்ளங்கையில் வைத்தாள்…

அவள் வைக்கவும் இறுக்கி பிடித்தவன் அவளைப் பார்த்து சிரிக்க,

அவன் தன் கையைப் பிடித்ததும் உடல் சிலிர்க…அண்ணாந்து அவனைப் பார்த்தவளின் கண்ணில் நீரைக் கண்டு

“ச்சு” என்று கண்களால் அதட்டியவன் , பிடித்த அவள்

கையை விடாமல், எல்லோருக்கும் நடுவில் அவளை அழைத்து வந்தான்…

அவளின் வலது கையை எடுத்து தன் இடது தோளில் வைத்து, தனது இடக்கையை அவளது இடுப்பில் வைத்தான்..

அவன் தொட்டதும் அவளுள் மின்சாரம் பாய மீண்டும் அவனைப் பார்த்தாள் ப்ரியா…

அவனும் அவளையேதான் பார்த்துக்கொண்டிருந்தான்.. கண்களில் காதலுடன்..

அவன் கண்ணில் எல்லையில்லா காதலை கண்டவள், அவனின் பால் மயங்கித்தான் போனாள்….. அவளையே விழுங்கி விடுவது போல் பார்த்த அவனின் பார்வை அவளுள் பல மாற்றங்களை விளைவித்தன..

அவள் தன்னை மறந்தாள்.. அவன் மேல் உள்ள கோபத்தை மறந்தாள், அவனுடன் மேலும் சில அடி நெருங்கி நின்றாள் தன்னையும் அறியாமல்.. .

.அப்பொழுது அவர்களுக்கே ஏற்றார் போல் பாடல் ஆரம்பமானது…

“நீ பார்த்த விழிகள் நீ பார்த்த நொடிகள்
கேட்டாலும் வருமா கேட்காத வரமா
இது போதுமா இல்லை அவசரமா
இன்னும் வேண்டுமா ,அதில் நிறைந்திடுமா
நாம் பார்த்ததால் நம் வசம் வருமா
உயிர் தாங்குமா என் விழிகளில் முதல் வலி
நிஜமடிப் பெண்ணே தொலைவினில் உன்னை
நிலவினில் கண்டேன் நடமாட
வலியடி பெண்ணே வரைமுறை இன்றி
வதைக்கிறாய் என்னை மெதுவாக
நீ பார்த்த விழிகள் நீ பார்த்த நொடிகள்
கேட்டாலும் வருமா கேட்காத வரமா”

ப்ரியாவின் இடுப்பில் கைவைத்திருந்த சபரிஷ்
மெதுவாக அழுத்தினான் அவளின் சிற்றிடையை..

“நிழல் தரும் இவள் பார்வை
வழி எங்கும் இனி தேவை
உயிரே உயிரே உயிர் நீ தான் என்றால்
உடனே வருவேன் உயிர் சாகும் முன்னால்
அனலின்றிக் குளிர் வீசும்

இது எந்தன் சிறை வாசம்
இதில் நீ மட்டும் வேண்டும் பெண்ணே

நிஜமடிப் பெண்ணே தொலைவினில் உன்னை
நிலவினில் கண்டேன் நடமாட
வலியடி பெண்ணே வரைமுறை இன்றி
வதைக்கிறாய் என்னை மெதுவாக”

சபரிஷ் சுற்றுபுரத்தை மறந்தான்.. அவளை மேலும்
நெருங்கினான்..மெதுவாக அவளையும் சேர்த்து
ஆடவைத்தான்.. ....

“நீ பார்த்த விழிகள் நீ பார்த்த நொடிகள்
கேட்டாலும் வருமா கேட்காத வரமா
இது போதுமா இல்லை அவசரமா
இன்னும் வேண்டுமா ,அதில் நிறைந்திடுமா
நாம் பார்த்ததால் நம் வசம் வருமா
உயிர் தாங்குமா என் விழிகளில் முதல் வலி”

பாட்டு முடியும் தருவாயில் பிரியா அவனது மார்பில்
சாய்ந்தாள்.. அவளை நிமிர்த்தியவன் அவளின் வலது

கன்னத்தை மறைந்திருந்த முடியை விலக்கினான்....அதில் அவனின் விரல் தடம் பதிந்திருக்க.. அவள் கன்னத்தை, தன் விரல் கொண்டு வருடினான்..

அவள் அவனைப் பார்த்து மெல்லியதாய் சிரிக்க..

அவள் சிரித்ததும், அவளை அவன் சந்தோஷமாக அணைத்துக்கொண்டான்

பாட்டு முடியவும் , எல்லோரும் பலமாகக் கைதட்டினர்.

அதில் தன் உணர்வுக்கு வந்த பிரியா, அப்பொழுதுதான் உணர்ந்தாள்... தான் சபரிஷின் அணைப்பில் இருக்கிறோம் என்று.. சட்டென்று அவனிடம் இருந்து விலகப் பார்க்க ..ஆனால் பாவம் விலகத்தான் முடியவில்லை.. அவளின் சிற்றிடைத்தான் அவனின் இரும்பு பிடியில் சிறை பட்டிருந்ததே..

எல்லோரும் கூடி இருக்கும் இந்த இடத்தில், அதுவும் தன்னைத் தவறாக நினைத்தவனிடத்தில் ஒன்றி இருப்பதைக் கண்டு.....இப்பொழுது என்ன சொல்லி காயப்படுத்துவானோ என்று நினைத்தவளுக்கு

அழுகை முட்டிக் கொண்டு வந்தது..

அவளையே பார்த்திருந்த சபரிஷ்....அவள் தன்னைத் தானே வருத்திக் கொள்வதைக் கண்டு, மனம் கலங்கியவன், அவளை இதற்கு மேல் சோதிக்காமல், அவளை விடுவித்து, அவள் கன்னத்தில் தட்டி "போ போய்த் தூங்கு எதுவா இருந்தாலும் நாளைக்குப் பேசலாம்" என்று சொன்னதுதான் தாமதம் யாரையும் திரும்பிக்கூடப் பார்க்காமல் ஓடி விட்டாள் தன் அறைக்கு.....

சுவாசம் தொடரும்...

சுவாசம் 30

உடலும் உயிரும்
வேறு வேறோ?
உடலை மட்டும்
விட்டு விட்டு
உயிரை மட்டும்
எடுத்துச்செல்கிறாயே நீ..

“டேய் எழில் என்னடா நடக்குது இங்க” என்று தன் தம்பியிடம் கத்திக்கொண்டிருந்தாள் அவனது அக்கா தீபா..

“என்ன பிச்சூ இது இந்தக் குளிர்ல மனுஷன் நம்மலாளையே நடக்க முடியலை.. இதுல அங்க என்ன நடக்குது இங்க என்ன நடக்குதுன்னு , கவலைபட்டுட்டு இருக்க....என்ன நடந்தா நமக்கென்ன பிச்சூ போ போய் இன்னைக்காவது வாய்க்கு ருசியா ஏதாவது சமையல் பண்ணு போ” என்று தன் அக்கா குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டே எழில் சொல்ல..

சோபாவில் கிடந்த குஷன் தலையணையை எடுத்து எழிலை அடிக்கத் துவங்கினாள் தீபா, மாமன் அடி வாங்குவதைப் பார்த்த குழந்தைகள் கைதட்டி ஆர்பரிக்க,

“அடேய் குட்டி வானரங்களா இங்க ஒருத்தன் பெரிய வானரத்துகிட்டே அடி வாங்குறது உங்களுக்குச் சந்தோசமா இருக்கா” என்று இப்பொழுது குழந்தைகளை எழில் துரத்த, அவர்கள் மாமன் கையில் சிக்காமல் தங்களது அறைக்குள் சென்று மறைந்தனர்..

“டேய் ரெண்டுபேரும் வெளியேதானே வரணும் அப்போ உங்களை என்ன பண்றேன் பாருங்க” என்று செல்லமாகக் குழந்தைகளை மிரட்டியவன், திரும்பி தன் அக்காவை பார்க்க……..அவளோ சோபாவில் அவனைப் பார்த்துக் கொண்டே அமைதியாக அமர்ந்திருந்தாள்

அவளின் பக்கத்தில் போய் அமர்ந்தவன் அவளின் கையைப் பிடித்து , “பிச்சூ என்னாச்சி” என்று கேட்க..

அவனை முறைத்தவள்.. “எழில், வயசு பொண்ண நம்மளை நம்பிதான் அனுப்பியிருக்காங்க, அவளைப் பத்திரமாய்ப் பார்த்துக்க வேண்டியது நம்ம பொறுப்புதானே..”

“ஆமா பிச்சூ கண்டிப்பா..”

“அப்போ நேத்து ஏன்டா நீ அப்படிப் பண்ணின”

“என்ன பண்ணினேன்னு சொல்லாம, சுத்தி வளைச்சு பேசிட்டு இருக்கே..போ பிச்சூ.. உன் தம்பி உன்ன மாதிரி தத்தின்னு உனக்குத் தான் தெரியுமே” என்றதும்.. அவன் தலையில் குட்டியவள்..

“டேய் விளையாடாம நான் கேக்குறதுக்குப் பதில் சொல்லு.....அந்த சபரிஷ் யாருடா”

“என் பிரெண்ட் பிச்சூ..”

“எனக்குத் தெரியாம உனக்கு எங்க இருந்து வந்தான் புதுப் பிரெண்ட்” என்றதும் அவன் திருதிருவென முழிக்க

“அதுவும் இல்லாம ..... நேத்துக் கேம் விளையாடும் போது சீட்டை மாத்தி, அவங்க ரெண்டு பேரும் வரமாதிரி பண்ற.. அவன் என்னன்னா இதுதான் சாக்குன்னு அவளைக் கட்டிபிடிச்சி ஆடுறான். எனக்கு இப்போ உண்மை தெரிஞ்சாகனும், இல்ல அவன் இந்த அப்பார்ட்மென்டை விட்டு போகணும் அவ்வளவு தான் சொல்லிட்டேன்”
என்று கோபத்துடன் சொல்லவும்..

“அய்யோ பிச்சூ எனக்கும் ஒன்னும் தெரியாது.ஒருநாள் அப்பா போன் பண்ணி சபரிஷ்ன்னு ஒருத்தர் வருவார்.....அவர் வீடு எடுத்து தங்க, மற்றும் எல்லா வசதிகளையும் நீதான் பாத்துக்கனும்ன்னு சொன்னார்..... சரி நம்ம

அப்பார்ட்மெண்ட்லயே வீடு இருக்கும் போது ஏன் வெளியே பார்க்கணும்தான் இங்க தங்க வச்சேன்….” என்றவன்.

“உனக்கு ஒன்னு நியாபகம் இருக்கா பூரி பிரியா இங்க வந்தப்ப ரிஷின்னு பேரை கேட்டு மயங்கி விழுந்தால்ல…..இதுவரைக்கும் நாம அவ கலகலன்னு பேசி பார்த்துருக்கோமா….ஏன் அவ கோபபட்டு கூடப் பார்க்கல…..ஆனா அன்னைக்குச் சபரிஷை பார்த்ததும்….என்ன மாதிரி கோபம் வந்தது தெரியுமா…..அப்பதான் எனக்கு ஏதோ பொறிதட்டுச்சு…..ஒருவேளை அந்தச் சபரிஷ் தான் ரிஷியோன்னு….அதுல இருந்து தான் நான் அவங்கள கவனிக்க ஆரம்பிச்சேன்…..”

“எனக்குத் தெரிஞ்சு அவங்க ரெண்டு பேரும் லவ் பண்ணியிருக்கனும்….ஏதோ மனஸ்தாபத்துல பிரிஞ்சிட்டாங்கன்னு நினைக்கிறேன்……அதுனாலதான் என்னாலான உதவி பண்ணுனேன்….அது தப்பா பிச்சூ, ஆனா பிச்சூ.. என்ன மாதிரி ஆளு தெரியுமா அவரு.. நான் மட்டும் பொண்ணா பொறந்திருந்தா” என்று எழில் கனவுலகத்துக்குச் செல்ல போக அவன் கையைக் கிள்ளிய அவன் அக்கா ..

“டேய் அதை நினைச்சுப் பார்த்தா சகிக்கலடா”

“போ பிச்சூ உனக்குப் பொறாமை..”

“டேய் ஏதாவது மண்டைல உனக்கு இருக்காடா , நீ பாக்குற வேலைக்கும் உனக்கும் சம்பந்தமே இல்லடா, கொஞ்சமாவது கெத்து காட்டுறியா, உனக்கு எப்படித்தான் அந்தப் படிப்புக்குச் சீட் குடுத்தாங்களோ. இதுல வேற நீ கோல்ட் மெடலிஸ்ட் வேற.. போடா” என்று சலித்துக் கொள்ள

“ஏன் பிச்சூ அந்த வேலை பார்த்தா எப்போவும் சீரியஸாதான் இருக்கணுமா, எனக்குன்னு ஆசைகள் இருக்கக்கூடாதா, நானும் மனுஷன் தானே பிச்சூ எனக்கும் கொஞ்சம் ரிலாக்ஸ் வேணாமா, ஆனா நான் என் வேலைன்னு வந்தா அதுக்குத் தகுந்த மாதிரி மாறிடுவேன்னு உனக்குத் தெரியாதா பிச்சூ”..என்று எழில் சிறிய குரலில் சொல்ல..

“என்னடா நீ நான் சும்மா விளையாட்டுக்கு சொன்னேன் என் தம்பி இப்படி இருக்கிறது தான் எனக்குப் பிடிச்சிருக்கு..”

“அக்காவை பார்த்து சிரித்தவன், சரி ரெண்டு பேரையும் சேர்த்து வைக்கிறதுக்கு ஏதாவது ஐடியா குடு பிச்சூ..”

“என்ன மாப்பிள்ளை உன் அக்காவை இப்போதான் தத்தின்னு சொன்ன அதுக்குள்ள அவகிட்டேயே ஐடியா கேக்குற”. என்று சொல்லிக்கொண்டே வந்தார் கணேஷ்

“என்ன கணேஷ் கிண்டலா” என்று தீபா தன் கணவனை முறைக்க..

அவரோ “ தீப்ஸ் இப்போ நான் என்ன சொல்லிட்டேன்னு காதல் லுக்கு விட்டுட்டு இருக்க…. உன் தம்பி ஏதோ ஐடியா கேட்டான்ல அத என்னன்னு கேளுடா” என்றவர் அவளின் காதில் கிசுகிசுப்பாக “நாம அப்புறம் லவ் பண்ணலாம் சரியா” என்று கண்ணடிக்கத் தீபாவின் முகம் சிவந்தது…

அவர்களைக் கண்டும் காணாமல் இருந்த எழில் க்கும் என்று தொண்டையைச் செருமி நான் இங்கதான் இருக்கேன் என்று சொல்ல..

அவரோ “டேய் நீ இன்னுமா இங்க இருக்க” என்பதுபோல் பார்க்க..

அவரை முறைத்தவன், “எனக்கு ஒரு ஐடியா சொல்லிட்டு …அதுக்கு அப்புறம் உங்க ரொமான்ஸை வச்சிக்கோங்க,”

“என்ன ஐடியா எதுக்குன்னு சொல்லு…”

சபரிஷ் என்று ஆரம்பித்தவன் அவனுக்குத் தெரிந்த அளவு சொல்லி முடிக்க

கணேஷ் சிறிது யோசனை செய்தவர்..
“மாப்பிள , எங்க ஆ஼பீஸ்ல ஒன் வீக் டூர் போறாங்க..”

மீண்டும் அவரை முறைத்தவன் “எதுக்குப் போன வருஷம் குழந்தைகளை என்ன பார்த்துக்கச் சொல்லிட்டு நீங்க மட்டும் ஜாலியா சுத்திட்டு வந்திங்களே , அது மாதிரி இப்போவும் போறீங்களா ம்ம்ம்ம்” என்று கேட்க..

“என்னை முழுசா சொல்ல விடு மாப்பிள….. ஆபிஸ் டூர்னு சொல்லி நாம எல்லோரும் போறோம் , இந்த வருஷம் தேவிமா இருக்கிறதால.. அவளை விட்டுட்டு நாம போக முடியாது…
அவகிட்ட கேட்குற மாதிரி கேட்கனும்.. பட் தேவிமா அவளே நான் வரலை சொல்லனும்….சோ அவளை விட்டுட்டு நாம மட்டும் போறோம்…. அதுவும்

நாளைக்கே, சோ நாளைக்கு .. உன் ஹீரோக்கு உடம்பு முடியாம இருக்கு.”

“அத்தான் அவர் எக்ஸசைஸ் எல்லாம் பண்ணி உடம்பை சும்மா கிண்ணுன்னு வச்சிருக்கார்....அவருக்குப் போய்” என்று இழுக்க

இப்பொழுது கணேஷ் அவனை முறைத்தார்.. “டேய் என்னை முழுசா சொல்லி முடிக்க விடுடா” என்றவர் “அப்படி நடிக்கச் சொல்லு.. அத விஷு மூலமா தேவிமாக்கு தெரிய வர்ற மாதிரி பாத்துக்க , அப்புறம் என்னாகும்” என்பது போல் தீபாவை குறும்புடன் பார்க்க

அவர் பார்வையின் பொருளை புரிந்து கொண்ட பிச்சூ... “என் கணேஷ்னா கணேஷ் தான்.. நல்ல ஐடியா நான் இப்போவே போய் ஸ்வீட் செஞ்சி எடுத்துட்டு வரேன்” என்று துள்ளி குதித்து அவள் செல்ல..

“அத்தான் சூப்பர் ஐடியா ஆனா, அத பிச்சூ இருக்கும் போதா சொல்லிவைப்பீங்க.. இப்போ பாருங்க ஸ்வீட் செய்யப் போறாளாம் , நான் எஸ் ஆகுறேன்பா” என்று எழில் தன் அக்கா பிச்சூவின் சமையலில் இருந்தது தப்பிக்க..

“டேய் மாப்பிளை , என்னை அம்போன்னு விட்டுட்டு போறியேடா, என்னைக் காப்பாத்துடா” என்று அவர் அலற

“ஹா ஹா நோ வே அத்தான் நீங்க உங்க மனைவி சமையல என்ஜாய் பண்ணுங்க” என்று சொல்லிவிட்டு சிட்டாகப் பறந்து விட்டான்..

“நான் வந்துட்டேன்.. இந்தாங்க ஸ்வீட், என்ற தீபா ஆமா இவன் எங்க போனான்” என்று தன் தம்பியை தேட..

“அவன் என்னை மாட்டி விட்டுட்டு தப்பிச்சிட்டான்….” என்று மெல்ல முணுமுணுக்க

அது அவள் காதில் விழ, “யாரை யாருக்கிட்ட மாட்டிவிட்டுட்டாங்க” என்று யோசித்த தீபா, அவர்கள் தன்னைத்தான் கிண்டல் செய்கிறார்கள் என்று புரிந்ததும், “ரெண்டு பேரும் என்னைக் கிண்டல் பண்றீங்கல்ல… போங்க நான் இனி சமைக்கவே மாட்டேன்” என்று முறுக்கிகொள்ள.

“தீப்ஸ் நிஜமாவாடா” என்று சந்தோஷமாகக் கேட்க..

“ஆமா இனி நான் இண்டியன் ஃபுட் சமைக்கப் போறதில்லை.. அதுக்குப் பதிலா ஆப்ரிக்கன் ஃபுட் சமைக்கப் போறேன்.... என் சமையலை கிண்டல் பண்ணினவங்களுக்கு இதுதான் தண்டனை..” என்று அசால்டாகசொல்ல

“தீப்ஸ் செல்லம் , நான் பாவம்டா இந்த ஒரு தடவை என்னை மன்னிச்சிடுடா”, என்று கெஞ்சியவர் இனி சுடுதண்ணி தந்தாகூட நான் அதைத் தேவாம்ருதம் மாதிரி எப்படிக் குடிக்கறேன்னு மட்டும் பாரு” என்று சொல்லி முடிக்கவில்லை , அவரைத் துரத்த ஆரம்பித்திருந்தாள் அவரின் செல்ல மனைவி.

.....

வெளியே வந்த எழில்.. எப்படி ப்ரியாவை வரவிடாம பண்ணலாம்.. என்று யோசித்தவாறே வர.. அங்கு விஷு போனில் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தவன் அவளை நோக்கி சென்றான்..

எழிலை பார்த்ததும் , “சரி கிருத்திக் நான் அப்புறமா பேசுறேன்” என்று சொல்லி போனை அணைத்துவிட்டு.....எழிலை பார்க்க.

அவனோ “ஹாய் விஷு டாலி.. எப்படி இருக்க” என்றான்

அவனை ஒரு மாதிரி பார்த்துக் கொண்டே.. “டேய் நல்லாதானே இருக்க…மர கழண்டுருச்சா” என்று கேட்க..

அவள் தலையில் வலிக்காமல் குட்டியவன்..”ஏன் டாலி அப்படிக் கேக்குறே”

“பின்ன என்னடா நேத்து தானே பார்ட்டியில் பார்த்தே அதுக்குள்ள என்னமோ வருஷகணக்குல பார்க்காத மாதிரி கேட்டியா…அதான்”

“ஹி ஹி அது ஒன்னும் இல்ல டாலி” என்று இழுக்க..

“டேய் முதல்ல இந்த டாலி சொல்றதை நிறுத்து..” என்று அவனை முறைத்தாள்

முகத்தைப் பாவமாக வைத்துக்கொண்டு “ ஏன் டாலி..அப்படி சொல்ற”

“நேத்து பார்ட்டில நான் டேன்ஸ் ஆடி

முடிக்கிறதுக்குள்ள என்ன கோல்மால்டா பண்ணிவச்ச கிருத்திக் கிட்ட” என்று முறைக்க..

“அதுவா டாலி நீ ஆட்டிட்டு இருந்தியா.. அப்போ உன் போன் அடிச்சிதா.. மை லவ் கிருத்திக்ன்னு வந்ததா….. நீ பிஸின்னு சொல்றதுக்கு எடுத்தேனா…. அதுக்குள்ள சார்க்கு ஏதோ அவசரம் போல.. உம்மா குடுக்க ஆரம்பிச்சிட்டார் .. அது நீ இல்லை .. நான் எழில்ன்னு புரிய வைக்கிறதுக்குள்ள நான் பட்ட பாடு இருக்கே” என்று எழில் ராகம் போட்டு சொல்லவும்

“போடா காலையிலே எனக்குப் போன் பண்ணி ஒரே திட்டு.. இப்போவும் கூட அந்தத் திட்டு கன்டீனியூ பண்றார்டா.. எல்லாம் உன்னாலதான்….நீ அவரைப் பற்றி என்ன நினைப்பியோன்னு பீல் பண்றார்..”

“ஹா ஹா இப்படிப் பீல் பண்றவர்.. சீக்கிரம் கல்யாணத்துக்கு ரெடி பண்ண சொல்லு அத விட்டுட்டு போன்ல லவ் பண்ணிக்கிட்டு இருக்கார்”

“உனக்கு வந்தா தெரியும்.. காதலோட மகிமை போடா”

“ஹா ஹா அய்யா ரேஞ்சே தனி டாலி.. என் கனவு

தேவதை இருக்காளே" என்று அவன் ஆரம்பிக்கவும்..

"எலி எனக்குக் கிளாஸ் இருக்குடா...நான் போறேன் பை"

"உங்களுக்கெல்லாம் பொறாமை என் தேவதைய பார்த்து," என்றவன் "நில்லு டாலி உன்கிட்ட கொஞ்சம் பேசனும்" என்றான்

தன் தலையில் அடித்தவள்.. "என்னன்னு சொல்லி தொலை" என்று அவள் சலித்துக் கொண்டாள்

" ரொம்பச் சலிச்சிக்கறியே...உன்கிட்ட சொல்லலாமா வேண்டாமா.....ஆனா வேற வழியில்ல...எனக்கு ஒரு உதவி வேணும்" என்றவன் என்ன உதவி என்பதையும் கூறினான்.

"ஹே வாவ்.. சூப்பர்.. நிஜமாவா டா.. சொல்லு நான் என்ன பண்ணனும்" ..என்று மகிழ்ச்சியுடன் கேட்கவும் ..... எழில் எல்லாம் சொன்னான்..

"ஹே இதுவும் சூப்பர்ஆனா நீ கவலையே பட வேண்டாம்..... இன்னும் ரெண்டு நாளில் அவளுக்கு எக்ஸாம் இருக்குன்னு நினைக்கிறேன்,
சோ கண்டிப்பா வர மாட்டா"

“உண்மையாவா டாலி..”

“எஸ் டா .. .. நீங்க கிளம்புங்க நான் அவங்களைப் பார்த்துக்கறேன்”.. என்று சந்தோஷமாகச் சொன்னாள் விஷு..

விஷுவிற்கு ப்ரியாவை ரொம்பப் பிடிக்கும் , ப்ரியாவின் அமைதி செயற்கையாய்த் தெரிந்தாலும் அதற்கான காரணத்தை இதுவரை தெரிந்து கொள்ள முடியவில்லை.....இப்பொழுது எழில் சொன்ன விஷயம் ஒரு பெண்ணாய் அவளுக்குச் சிறிது புரிந்தது.. அதனால் எழில் உதவி கேட்கவும் உடனே ஒத்துக் கொண்டாள் விஷு...

, தீபா, கணேஷ், அவர்களது குழந்தைகள் ஒருவார பிக்னிக்கு தயாராகினர்.....கிளம்பும் போது தீபா.. ப்ரியாவிடமும் விஷுவிடமும் ஆயிரம் முறையாவது கவனமாக இரு என்று சொல்லிக் கொண்டே இருக்க, ஆனால் ப்ரியாவின் கவனம் இவர்களிடம் இல்லாமல் அவளின் கண்கள் சபரிஷை தேடி அலைந்தது.....இதை எல்லோரும் கவனித்தனர்..

எழில் விஷுவிடம் கண் காட்ட.....நான் பார்த்துகிறேன் என்று கண்களால் செய்கை செய்தாள்..

அவர்கள் கிளம்பபவும்.. விஷு தனக்குத் தானே பேசுவதுபோல் பிரியாவை ஓரபார்வை பார்த்துக் கொண்டே பேசிக்கொண்டிருந்தாள்....

“ச்ச இப்போன்னு பார்த்து இவங்க எல்லாம் பிக்னிக் கிளம்பிட்டாங்க.. சரி நாம என்ன பண்ண முடியும்....அவர் தலையெழுத்து தனியா வந்து யாருமில்லாம கஷ்டபடனும்ன்னு இருக்கு” என்று சொல்ல

“என்ன விஷு.. யாருக்கு என்னாச்சி” என்று சற்றுப் பதட்டமாகக் கேட்க,

அப்படி வா வழிக்கு..என்று மனதுக்குள் சொன்னவள்.....” நான் கிழ இறங்கி வரும் போது சபரிஷ் சார் வீட்டுல இருந்து முனகல் சத்தம் கேட்டிச்சா....என்னவோ ஏதோன்னு நான் கதவை தட்டினேன்.. ரொம்ப நேரம் கழிச்சிதான் கதவை திறந்தார்..அவரை பார்த்தவுடனே நான் பயந்துட்டேன் .....அவரால நிற்க கூட முடியலை ப்ரியங்கா.. கண்ணெல்லாம் சிவந்து போய் ரொம்ப நடுங்கிட்டு இருந்தார் சுரம் போல.....எனக்கு என்ன பண்றதுன்னு தெரியல..... சரி நீங்க படுங்கன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.....அக்காகிட்ட சொல்லாம்ன்னு இங்க வந்தா அவங்க வெளியே போறாங்க.. அவங்க

இருந்தாளாவது கஞ்சி வச்சி கொடுக்கச் சொல்லலாம்.. பாவம் ப்ரி இந்த ஊருல வந்து அவர் கஷ்ட படனும்ன்னு இருக்கு… சரி ப்ரி நான் காலேஜ் கிளம்புறேன்..” என்று வெடியை கொளித்துவிட்டுட்டு விஷு கிளம்பிவிட..

பிரியாவும் காலையில் இருந்து கவனித்துக் கொண்டு தானே இருக்கிறாள்….தினமும் இந்தக் குளிரிலும் காலையில் எழுந்து ஓட்ட பயிற்சி செய்பவன், இன்று காணவில்லை என்றதும், தவித்தாள்….
இப்பொழுது அவனுக்கு உடம்புக்கு முடியவில்லை என்றதும்.. தன் கோபம் எல்லாவற்றையும் தற்காலிகமாக மறந்து.. தன் அன்னையைப் போனில் அழைத்துச் சில விபரங்களைக் கேட்டவள் அடுத்த அரை மணி நேரத்தில் கையில் சுடு கஞ்சியுடன் சபரிஷின் அரை வாசலில் வந்து நின்றாள்..

.....

இரவு முழுதும் தூங்காமல் நேற்றைய நினைவில் எழுந்திருக்க மனம் இல்லாமல் தன்னவளின் மெண்மையில் கண்ட சுகத்தில் திளைத்திருந்தான் சபரிஷ்..

“சின்னு என்னை மன்னிச்சிருடா, நான் ரொம்பப் பேசிட்டேன்…. என்னை மன்னிப்பியா” என்று தினமும்

கண்விழிக்கும் போது தன்னவளிடம் மனதால் மன்னிப்பு கேட்கும் சபரிஷ் இன்றும் கேட்டான்..

“ சின்னு..... உன் மனசில் நான் மட்டும் தான் இருக்கேன்னு நேத்தே எனக்குப் புரிஞ்சிருச்சு.....அதுபோல என் மனசுலயும் நீதான் இருக்கேன்னு நீ எப்போ உணர்வ சின்னு.. நேத்து நான் அப்படி நடந்துகிட்டதுக்குக் கோபப்பட்டு என்னைத் திட்டவாவது வருவியா சின்னு...” என்று படுத்திருந்த தலையணையைத் தனது மார்பின் குறுக்காகக் கொண்டு வந்தவன், அதனை அவனின் சின்னுவாக நினைத்துக் கொண்டு இறுக்கி கட்டிக்கொண்டான்..

தன் சின்னுவுடன் கனவுலகில் சஞ்சரித்தவனை வீட்டின் மணி அழைக்க எரிச்சலுற்றவன் , “ச்ச கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி விஷு வந்து கதவை தட்டினாள்.. மறுபடியும் அவளாகத்தான் இருக்கும்” என்று நினைத்தவன்..

“ஆனா ஒன்னு சின்னு நான் எப்போ எல்லாம் உன்னை நினைக்க ஆரம்பிக்கிறேனோ அப்ப யாரவது நந்தி மாதிரி வந்து நிப்பாங்க...” என்று சலித்துக்கொண்டவன்.. மீண்டும் “ஐ லவ் யு டி சின்னு” என்று தலையணைக்கு முத்தம் வைக்க , மீண்டும் அழைப்பு மணி விடாமல் அடிக்க, “ஷிட்” என்றபடி

தலையணையுடன் எழுந்து வந்து கதவை திறக்க,
அங்கே அவனின் எண்ணத்தின் நாயகியே நின்றாள்,
கையில் பாத்திரத்துடன்…

முதலில் திகைப்புடன் பார்த்தவன்….பின் கலவரத்துடன் பார்த்தான்.. … நேற்று பார்ட்டியில் நடந்தது கொண்டதுக்குக் கோபபட்டுத் தன்னைத் திட்ட வருவாள் என்று தெரியும்…. ஆனால் இவ்வளவு காலையில் திட்ட வருவாள் என்று அவன் நினைக்கவில்லை..இருந்தும் தன்னைச் சமாளித்துக் கொண்டு “சின்னு” என்று மெல்லிய குரலில் அழைக்க,

அவளோ அவனுக்கு உடம்புக்கு ரொம்ப முடியவில்லை என்று நினைத்துக் கொண்டாள்….ஏனென்றால் கண் எல்லாம் வீங்கி சிவந்து , நிற்க முடியாமல் தலையணையைப் பிடித்துகொண்டு நின்ற தோற்றம் அவளுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது,
தானும் இப்படித்தான் இங்கு வந்த புதிதில் குளிர்தாங்காமல் இரவு முழுவதும் தூங்கமுடியாமல்…அவதி பட்டது ஏனோ அந்த நிமிடம் மறந்து போனது……

‘இப்போ இவன் இங்க வரலைன்னு யாரு

அழுதாங்களாம்.. இப்போ யாரு கஷ்டபடுறது'

அவளின் அமைதியை கண்டு மறுபடியும் "சின்னு" என்று சபரிஷ் மீண்டும் அழைக்க. ..

"என்னைச் சின்னுன்னு கூப்பிட கூடாதுன்னு சொல்லிருக்கேன்" என்றவள் " நகருங்க நான் உள்ளே வரணும்" என்றாள்..

"நீ தான் எப்போவே என் உள்ளே வந்துட்டியே சின்னு" என்று கண்களில் குறும்புடன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்..

அவளால் அவன் பார்வையைத் தாங்க முடியவில்லை.... 'இவன் ஒருத்தன் எப்ப பார்த்தாலும் இப்படிப் பார்த்து வைப்பான்....அப்படியே கண்ணை நோண்டி கைல கொடுக்கணும்'....என்று நினைத்தவள் "இப்படி வழிய மறைச்சிட்டு நின்னா நான் எப்படி உள்ளே வர முடியும்".. என்று அவனை முறைக்க,

அவனோ அவள் முறைப்பை கண்டு கொள்ளாது அவளை அணு அணுவாக ரசிக்க ஆரம்பித்து விட்டான்.....அதே நேரம் நேற்றைய நினைவில் அவளைப் பார்த்துக்கொண்டே தலையணையை மேலும் இறுக்கி அணைக்க

இதற்கு மேல் அவனின் இந்தப் பார்வையையும் அவனின் செயலுக்கான காரணத்தையும் யூகித்தவளின் நினைவில் நேற்றைய அவனின் அணைப்பு நினைவுக்கு வர, , அவன் இப்போதைக்கு நகர மாட்டான் என்பது புரிந்து, அவனை இடித்துக்கொண்டே வீட்டின் உள்ளே சென்றாள், ப்ரியா..

ப்ரியாவின் இந்தச் செயலை எதிர் பாராதவன்…அவள் உடல் தன்னைத் தீண்டியதும் இனிமையாக அதிர்ந்தான்..

உள்ளே வந்தவள்…அவன் அறை இருந்த கோலத்தைக் கண்டு திகைத்தாள்.. ஏன் என்றால் சபரிஷின் அறை என்றும் சுத்தமாக இருக்க வேண்டும்..என்று நினைப்பவன் இப்பொழுது..அலங்கோலமாக இருப்பதைப் பார்த்து அவனை 'ஏன் இப்படி' என்று கண்களால் சுட்டி காட்டி கேட்க… அவனோ அதன் அழகில் மயங்கி அவனைப் பார்த்துக்கொண்டே கட்டிலில் தொப்பென்று விழுந்தான்….

அவன் அப்படி விழவும் தன்னையும் அறியாமல் "ரிஷி மெதுவா படுங்க" என்று அவன் பக்கத்தில் வந்து சொல்ல..

அவனோ "ஏன் எனக்கு என்னாச்சி" என்று புரியாமல்

கேட்டான்..

“உடம்பு சரியில்லாதப்ப இப்படியா வேகமா விழுவாங்க.. எழுந்திருங்க முதல்ல” என்று அவளாக அவனைத் தொட்டு தூக்கினாள்..

அவனுக்கு ஆனந்த அதிர்ச்சிமேல் அதிர்ச்சி.. காலையிலே பிரியா இங்கு வந்தது ஆனந்தம் என்றால், அவனை இடித்துக்கொண்டு வீட்டின் உள்ளே வந்தது, அவனை ரிஷி என்று அழைத்தது, இப்பொழுது தன்னவள், அவளாகத் தன்னைத் தொட்டது இப்படி இனிய அதிர்ச்சியால் அவள் சொல் கேட்டு எழுந்து நின்றான்…

அவனைக் கொஞ்சம் தள்ளி நிற்க சொன்னவள் முதலில் படுக்கையைச் சரி செய்தாள், பின்பு சபரிஷிடம் திரும்பி

“ நீங்க போய் ஃப்ரெஷ் ஆயிட்டு வாங்க” என்று சொல்ல சாவி கொடுத்த பொம்மைபோல் அவள் சொன்னதைச் செய்துவிட்டு வந்தான்,

அவனைப் பார்த்தவள் “ம்ம் இப்ப படுங்க” என்று சொல்ல,

“தூக்கி விட்டவளுக்குப் படுக்க வைக்கத் தெரியாதோ”

என்று வாய்க்குள் சபரிஷ் முனக,

அது சரியாக அவள் காதில் விழ, “என்னது” என்று அவனை முறைக்க..

“ஒன்னும் இல்லை” என்று வாய்க்குள் முணுமுணுத்தவன், “ரொம்ப முறைக்கறடி என்னை , இதுக்கெல்லாம் வட்டியும் முதலுமா வசூல் பண்ணுறேன் இருடி” என்று மனதுக்குள் நினைத்தவன் கட்டிலில் தலையணை சாய்வாக வைத்துக் கொண்டு அமர்ந்தான்..

“ம்ம்ம் அது” என்றவள்… தன் தாயிடம் கேட்டு தாயாரித்த கஞ்சியைக் கிட்சனுக்குள் சென்று ஒரு கிளாஸ் எடுத்து வந்து அதில் ஊற்றி குடுக்க,,

அவளையே பார்த்துக்கொண்டு இருத்தவன், அவள் கஞ்சியைக் கொடுக்கவும் அது என்ன என்று கூடப் பார்க்காமல் ஒரு வாய் குடிக்க, விளக்கெண்ணெய் குடித்தவன் போல் முகத்தை வைத்துக்கொண்டு “என்ன இது சின்னு” என்று பரிதாபமாகக் கேட்டான்…

“இப்போதான் விஷு சொன்னா, உங்களுக்குக் காச்சல்ன்னு… அதான் கஞ்சி எப்படி வைக்கிறதுன்னு

கேட்டு நானே செஞ்சி எடுத்துக்கிட்டு வந்தேன்....”
என்றதும்தான் தாமதம், ஒரே மூச்சில் குடித்தவன்
இன்னும் வேண்டும் என்று கேட்க,
அதில் மகிழ்ச்சியானவள்..” நல்லா இருக்கா, இதோ
தரேன்” என்று ஊற்றி குடுக்க அதையும் குடித்தான்...
சபரிஷ் நீ தேறிட்டடா.....

அவன் குடித்ததும் அவனிடம் ஒரு மாத்திரையைக்
கொடுத்து விழுங்க சொன்னவள்... “எழில்க்கு போன்
பண்ணி கேட்டேன்...அவன்தான் இந்த மாத்திரை பேரு
சொன்னான்.... இப்போதான் போய் வாங்கிட்டு
வந்தேன்....” என்று சொல்லிக்கொண்டே, அந்த ரூமை
சுத்தம் செய்தாள் ப்ரியா...

அவளின் செயலுக்குக் காரணம் இப்பொழுது நன்றாக
விளங்கியது சபரிஷ்க்கு.. ‘ஓ இது அந்த வாலுங்க
செஞ்ச வேலையா , இதுகூட நல்லாத்தான் இருக்கு’
என்று இரு கையையும் தலைக்குப் பின்னால் வைத்து
அவனது சின்னுவை விழி இமைக்காமல் ரசித்தான்,
அவனது இந்தப் பார்வை புரிந்தும் , புரியாதது போல்
வேலை செய்துகொண்டிருந்தாள் அவள்...

அப்பொழுது மோகனா சொன்னது ஞாபகம் வந்தது
சபரிஷ்க்கு.....”அத்தான் ப்ரி பாவம் , அவளுக்கு ஒரு
வேலை செய்யத் தெரியாது ஆனா இப்போ அங்க

அவளுக்குத் தேவையானதை அவதான் செய்யிறாளாம்.. அவங்க அம்மாகிட்ட கேட்டப்போ அவங்க சொன்னாங்க அத நினைச்சா கஷ்டமா இருக்கு.. அவ ஒரு இளவரசி மாதிரி தான் வளர்ந்தா அத்தான்...” என்று குறைபட

அப்பொழுது விசாலாட்சி ஆச்சி மோகனாவிடம் “அடியே ஒரு பொண்ணு இதெல்லாம் செய்யலைன்னாதான் தப்பு, பொண்ணா பொறந்த எல்லோருக்கும் இதெல்லாம் செய்யத் தெரிஞ்சிருக்கனும்.., ரொம்பச் செல்லம் குடுத்து வளர்த்துட்டா, போற இடத்துல மாமியார்கிட்ட இடிதான் வாங்கனும்”.. என்று சொல்ல,

“அத்தான் என் ப்ரியை பழைய ப்ரியாவா கூட்டிட்டு வரவேண்டியது உங்க பொறுப்பு” என்று. மோகனா சொன்னாள்..

ப்ரியா அந்த அறையை அழகாகச் சுத்தம் செய்து விட்டு வேறு ஏதும் வேணுமா என்று கேட்டுக்கொண்டே சபரிஷ் படுத்திருந்த கட்டிலின் அருகே வர...

அவள் காட்டிய நெருக்கத்தில், உரிமையில்.. அருகே

வந்தவளின் கையைப் பிடித்தவன்..”சின்னு இந்த வேலையெல்லாம் எப்படிக் கத்துகிட்ட”என்று கனிவாக அவளைப் பார்த்து கேட்டான்

ஒரு வினாடி தன் கையைப் பிடித்திருந்த சபரிஷின் கையைப் பார்த்தவள், அவனை நிமிர்ந்து பார்த்து……”இதுல கஞ்சி மீதி இருக்கு, மாத்திரையும் இருக்கு, ஒருமணி நேரம் கழிச்சு சாப்பிடுங்க….. நான் நைட் இட்லி செஞ்சி எடுத்துட்டு வரேன்” என்று அவன் கேள்விக்குப் பதில் அளிக்காமல் நாசுக்காக அவன் கையை விலக்கியவள் அவனைத் திரும்பியும் பாராமல், வேகமாகச் சென்று விட்டாள்…..

அவளின் இந்தச் செய்கையில், “நான் இப்போ என்ன தப்பா கேட்டுட்டேன்” என்று நினைத்தவன், “சின்னு நில்லு” என்று சபரிஷ் அழைக்க அழைக்க நில்லாமல் சென்று விட.. “ஹம் மகாராணி இவ்வளவுதூரம் இறங்கி வந்ததே பெருசு.. ம்ம் பார்ப்போம்” என்று நினைத்தவன்…..அவள் வருவதாகச் சொன்ன இரவு வேளைக்குக் காத்திருந்தான்……

ஆனால் அங்கோ தனது அறைக்கு வந்த ப்ரியாவோ ஒருமூச்சு அழுது தீர்த்துவிட்டாள்….

இரவும் வந்தது , பிரியாவும் வந்தாள் கையில்

டிபனோடு…. அவனைச் சாப்பிட வைத்தவள்,
மாத்திரையைக் குடுத்து படுக்க வைத்து விட்டு,
கையோடு பாத்திரங்களைக் கிச்சனில் வைத்து விட்டு
வந்தாள்

“சின்னு நீ சாப்பிட்டியா” என்று சபரிஷ் கேட்க

“ம்” என்று மட்டும் சொன்னாள்..

“என்னாச்சுடா ஏன் டல்லா இருக்க” என்று
கேட்க…….அவள் பதில் கூறாமல் அவனையே
பார்த்துக்கொண்டிருந்தாள் கலக்கத்துடன்…

அவளது கலக்கத்தைக் கண்டவன், எழுந்து அமர்ந்து
சொல்லு சின்னு என்று கனிவுடன் கேட்க,

ப்ரியாவோ அவனிடம் “நீங்க என்னைத் தப்பா
நினைக்கலதானே.. உங்களுக்குக் காச்சல்ன்னு விஷு
சொல்லவும் தான் உங்களைப் பார்க்க வந்தேன்,
மத்தபடி வேற எந்த எண்ணமும் இல்லை,
அன்னைக்குச் சுகர் பேக்ட்ரில வச்சி சொன்ன மாதிரி
இப்போவும் நீங்க என்னை நினைச்சிராதிங்க, அதான்
அப்புறம்” என்று பேசிக்கொண்டே போனவளை..
கைநீட்டி தடுத்தவன்….

“போதும் நீ கிளம்பு” என்றான் இறுகிய குரலில்

“இல்ல நான் என்ன சொல்ல வரேன்னா”

“ஏய் நீ ஒன்னும் சொல்ல வேணாம்டி” என்று கர்ஜித்தவன் எழுந்து நின்று தன் கையால் பின்னந்தலையைத் தடவியவன் தன் கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்றான்..

அவனது கோபத்தைக் கவனியாமல் “இல்ல அன்னைக்கு உங்கள வேண்டாம்ன்னு சொல்லிட்டு போனவ……இப்போ இப்படியெல்லாம் உங்களுக்குச் செய்யுறத பார்த்து மறுபடியும் உங்கள நான் விரும்புறதா நினைச்சுதானே…காலையில என் கையைப் பிடிச்சீங்க…….அதுவுமில்லாம…நேத்து வேற நான் அப்படி நடந்துகிட்டேன்……சத்தியமா சொல்றேன்…அது நான் அறிஞ்சு பண்ணல தெரியாமதான் பண்ணுனேன்…….அப்புறம் எனக்குச் சந்துரு எப்படியோ…அதே மாதிரிதான் எழிலும்….” என்று அவள் சொல்லிக் கொண்டே போக…..

அவள் பேச பேச கோபம் தாங்காமல் அவளை நெருங்கி, அவள் தலைமுடியை கொத்தாக இருக்கி

பிடித்தான்…..

“ஆ ஆ அம்மா, ஷ் ஆ ஆ ரிஷி விடுங்க வலிக்கிது.. ஆஆ” என்று தன் தலை முடியை இறுக பற்றி இருந்த சபரிஷின் கையை எடுக்க முயல.” ஆனால் . அவளால் அவன் கையை விளக்க முடியவில்லை..

“ஏண்டி ஒரு மனுஷன் ஒருதடவை தெரியாம தப்பு பண்ணிட்டா… அதுக்காக எல்லோரும் இப்படித்தான் ரவுண்டு கட்டி அடிப்பீங்களா நான் உன்னை எப்ப முதல் முதலா பார்த்தேனோ அன்னைக்கே மயங்கிட்டேன்டி அது உனக்குத் தெரியுமா” என்று கர்ஜித்தான்..

‘இது என்ன புதுக் கதை’ என்பது போல் ப்ரியா பார்க்க..

“ஆமாண்டி.. அன்னைக்கு டைகர் கிட்ட இருந்து உன்னைக் காப்பாத்துனேனே… அதுக்கு முன்னாடி, ஓட்ட பயிற்சியில் இருந்த நான் பாட்டுச் சத்தம் கேட்டுத்தான் அங்க வந்தேன், அங்க உன்னைப் பார்த்து அப்படியே நின்னுட்டேன்…. ஆனா அப்போ நான் உணரல… உன்ன தொலைச்சிட்டு வீட்டுக்கு போனப்ப அன்னைக்கு நீ நின்ன அதே இடத்துல நின்னுக்கிட்டு என்னைப் பார்த்து நீ சிரிச்ச பாரு அப்போ உணர்ந்தேன்டி…”

“ ஜவுலிகடையில் இருந்து நீ கிளம்புனத்துக்கு அப்புறம் அங்க இருக்க முடியாமதான் அப்பா கிட்ட வேளை விஷயமா பேசணும்ன்னு வந்தேன்… அப்போவும் எனக்குப் புரியலை டி.., நான் வந்தா நீ சந்துரு கிட்ட விளையாடிட்டு இருக்கே எனக்கு எப்படி இருக்கும்” .. என்றதும் பிரியா அவனை முறைக்க..

“அப்போ எனக்கு உங்க பிரெண்ஷிப் பத்தி தெரியாதுடி…அன்னைக்கு நைட் நீ தோட்டத்துல அமைதியா உக்காந்து இருந்தியே, உன் அமைதி ஏனோ எனக்குப் பிடிக்கல…அதனாலதான் நான் வந்து பேசினேன்….. நான் திட்டுனா திட்டினதுதான் , யாரையும் சமாதான படுத்த மாட்டேன் அது எனக்குத் தெரியவும் தெரியாது ஆனா உன்ன சமாதான படுத்த வந்தேன் அப்போவும் புரியலைடி..”

“அதுக்கு அப்புறம் தோப்புல வச்சி , உன் கழுத்துல கத்தியை பார்த்ததும்.. என் உயிரே நின்னுருச்சுடி…. அப்பவும் நீதான் என் உயிர்ன்னு புரிஞ்சிக்காம இருந்துருக்கேன்” என்று உருமியவன், அவளின் முகத்தைத் தன் முகத்தின் அருகே கொண்டு வந்து..

“டாக்டர் வந்து இன்னும் கொஞ்சம் அழுத்தி பட்டுருந்துன்னா ஆபத்துதான்னு சொன்னதும், என்னால என்னைக் கன்ட்ரோல் பண்ணிக்க

முடியாமதான் உன்ன அன்னைக்குக் கட்டிபிடிச்சேன்…எங்க என் உயிர் என்னை விட்டு போயிடுமோன்னு…. ஆனா அப்போவும், ச்ச” என்று தன் நெற்றியில் அடித்துக் கொண்டவன்….

“ நீ ஏதோ என்கிட்டே எதிர்பார்க்கிறேன்னு மட்டும் புரியும், ஆனா நீ சின்னப் பொண்ணு …..அதுவும் படிக்கிற பொண்ணு இது தப்புன்னு எனக்கு நானே போட்டுகிட்ட முகமூடின்னு உன்ன அன்னைக்கு நடுரோட்ல தொலைச்சிட்டு தேடுனேன் பாரு அப்போ உணர்ந்தேன்..”

“நான் உண்டு என் தொழில் உண்டுன்னு நிம்மதியா இருந்தேன்டி எங்க இருந்துடி வந்து தொலைச்ச, ஏன் என் மனசுல சிம்மாசனம் போட்டு உட்கார்ந்த” என்று அவளிடம் கத்தியவன்

“வந்தான் ஒருத்தன், நான் ஒருத்தியை விரும்புறேன் அவ எனக்கு வேணும்ன்னு.. யாருன்னு கேட்டா உன் பேயரை சொல்றான்” என்றவன்..

தன் இதயத்தைத் தொட்டு “இங்க இங்க எரிஞ்சிச்சுடி… அப்போவும் உன்ன விட்டுக்கொடுக்க மனம் இல்லாமதான் அவனை வெளியே போன்னு

சொன்னேன்.ஆனா போட்டோ காட்டுறான் போட்டோ..”

“அவன் வந்துட்டு போன பத்து நிமிஷத்துல நீயும் வந்தே, என் கையால் வாங்கின சேலையைக் கட்டிக்கிட்டு.. அசந்துட்டேன் டி... ஆனா வந்ததும் அவன் சொன்னமாதிரிதான் நீயும் நடந்துகிட்டியா.... எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியாமதான் கோபத்துல அந்தப் போட்டோவை தூக்கி உன் முன்னாடி போட்டேன்”

“நீ என்ன பண்ணிருக்கணும், அந்தப் போடவை காட்டி அந்த நாய் இங்க வந்துருந்தானான்னு ஒரு வார்த்தை நீ கேட்டு இருந்தேன்னா... உடனே அவனைப் பிடிச்சி தூக்கி போட்டு மிதிச்சிருப்பேன்.. ஆனா நீ அத என்கிட்டே காட்டி உங்களுக்கு விளக்கம் சொல்லனுமான்னு கேட்குற..”

“ஏய் எனக்குக் காதல்ன்னா என்னன்னு அப்ப தெரியாதுடி..... அப்படித் தெரிஞ்சிருந்தா..... அந்த நாய்ச் சொன்னது பொய்யின்னு அப்பவே எனக்குப் புரிஞ்சிருக்கும்..... என்னால ஒரு பையன் மனசு கஷ்ட படக்கூடாதுன்னு நினைச்சேன் சின்னு.. ஏன்னா அவன் அந்த மாதிரி அழுதான் சின்னு..” கோபத்தில் ஆரம்பித்துத் தன் மனதில் உள்ளதை எல்லாம் கொட்டியவன், கெஞ்சலில் முடிக்க

விலுக்கென்று நிமிர்ந்தவள்.. “அப்போ எனக்குன்னு மனசு இல்லையா, கேட்டீங்களே ஒரு வார்த்தை..” என்று அதை நினைத்தவள் தன் இரு காதுகளையும் இறுக்க மூடிக்கொண்டவள், “அது அது என்னமாதிரி சூழ்நிலையில் எடுத்ததுன்னு தெரியுமா” என்று முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

அவள் அழுததும்… அவளை இழுத்து அணைத்துக்கொண்டான்… அவள் திமிர திமிர…விடாமல் தன் அழுத்தத்தைக் கூட்டினான்….. இனி நான் உன்னை விட மாட்டேன் என்பது போல் இருந்தது அவனது செய்கை….

அவனின் அணைப்பில் இருந்து விடுபடப் போராடியவள் அது முடியவில்லை என்றதும் அவன் மார்பிலே சாய்ந்து அழதொடங்கினாள்.

“அந்தப் போட்டோஸ் பத்தி சந்துரு கிட்ட கேக்கணும்ன்னு நினைச்சிட்டு இருக்கும் போது தான் நீ வந்தே.. உன்ன பார்த்ததும் மனசுக்குள்ளே ஏதோ பண்ணிருச்சு, நீ என்னவள் என்பதை உணர்த்தி இருக்கும் போல….. அதான் அவன் வந்து சொன்னதும்….அந்த கோபம்எல்லாம் உன்மேல வந்துனுச்சு” என்றவன்

தன் மார்பில் இருந்து அவளின் முகத்தை நிமிர்த்தியவன், அவள் கண்ணீரை தன் விரல் கொண்டு துடைத்தவன் , அவளிடம்

“சின்னு நான் பேசின வார்த்தைகள் மன்னிக்கக் கூடியது இல்ல….. ஒரு விஷயத்துல முடிவு எடுக்கனும்ன்னா…ஒருநிமிஷத்துல எடுத்துடுவேன்….ஏன்னா அது சரியா இருக்கும் என்ற நம்பிக்கையில்தான்… ஆனா உன் விஷயத்தில் என் மனசுகிட்ட முதல்ல கேட்டுருக்கனும்….அதை செய்யாம விட்டதுதான் என்னோட தப்பு…..நீ எனக்கில்ல என்ற கோபத்தில் நான் சிதற விட்ட வார்த்தைகள் எந்த அளவுக்கு உன்னைப் பாதிச்சிருக்குன்னு கண்கூடா பார்க்குறேன……நீ ஒவ்வொரு தடவையும் என்னை மனசால ஏத்துகிட்டு நெருங்கி வரப்ப…..என் பேச்சோட தாக்கம் தாங்க முடியாம என்ன பார்த்து பயத்தோடவும் கலக்கத்தோடவும் நீ என்ன விட்டு விலகும் போது….என்னை நினைச்சு எனக்கே வெறுப்பா இருக்குடி….”

“அறியா பிள்ளை தெரியாம தப்பு செஞ்சிட்டான்னு நினைச்சு இந்த ஒரு தடவை என்னை மன்னிக்க மாட்டியா சின்னு…..” என்று கேட்டவன்.. அவள் கண்ணில் முதன் முறையாகத் தன் இதழை பதித்தான்..

சபரிஷ் முத்தமிட்டதும் கண் திறந்தவள்.....மெதுவாக அவனிடம் இருந்து விலக, அவனும் அவளை அதிகம் சோதிக்க விரும்பாமல் தன் அணைப்பில் இருந்து விடுவித்தான்..

“விரக்தியாகச் சிரித்தவள் நீங்க எதுக்கு மன்னிப்பு கேட்கனும், . உங்களைப் பற்றித் தெரிஞ்சிக்காம, உங்க மனசுல நான் இருக்கேனா இல்லையான்னு கூடப் புரிஞ்சிக்காம, நானா, ஒன்னு நினைச்சு, பேக்கு மாதிரி உங்க கையால முதன் முதலா வாங்கின சேலையைக் கட்டிக்கிட்டு.....ஆசை ஆசையா உங்ககிட்ட என் காதலை சொல்ல வந்தேன் பாருங்க, நீங்கதான் என்னை மன்னிக்கணும்....ஒரு தடவை சந்தேகம்ன்னு வந்துட்டா அது வாழ்நாள் முழுசும் நம்மள போட்டு வதைக்கும்....அதுவும் இல்லாம நீங்க பேசுன வார்த்தைகளை என்னால மறக்க முடியல.....அந்த நிலைமையில உங்களோட காதலை என்னால ஏத்துக்க முடியாது.....

என் அப்பா அம்மாவை, என்கிட்ட இருந்து பிரிச்ச காதல், என் நட்பை என்கிட்டே இருந்து பிரிச்ச காதல், இனி எனக்கு வேண்டவே வேண்டாம்.....நீங்க இங்க எதுக்கு வந்துருக்கீங்கன்னு எனக்குத் தெரியாது.. ஒருவேளை நீங்க என்கிட்டே காதல் சொல்லதான் வந்துருக்கீங்கன்னா” என்றவள் அவனைப் பார்த்து

கையெடுத்து கும்பிட்டு.. “ப்ளீஸ் அந்தக் காதல் என்கிட்ட இப்ப இல்ல”... என்று திட்டவட்டமாக மறுத்தாள் அவள்....

அவள் இப்படிச் சொல்லவும் “சின்னு” என்று அவள் அருகில் அவன் வர.

அவளோ “அங்கேயே நில்லுங்க.. எது என்றாலும் தள்ளி நின்னே பேசுங்க” என்றாள்.... அவனது அருகாமையில் அவள் இதயம் கரைவது அவளுக்குத் தானே தெரியும்..

இவ்வளவு சொல்லியும் தன்னைப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்கிறாளே என்று எண்ணி.....அவளை கடுப்புடன் பார்த்தவன்.... “சரி கிட்ட வரல” என்று பல்லை கடித்துச் சொன்னவன், “நான் கேட்குறதுக்கு மட்டும் பதில் சொல்லு ..... உன் மனசுல நான் இல்ல..” என்று கேட்டான்..

அவளோ தன் தலையை இடம் வலமாக ஆட்டி “இல்லை” என்று சொல்லவும்...

“அப்போ என் மேல் உனக்குக் காதல் இல்லை”

“இல்லை..”

“நீ என்னை மறந்துட்டே.. “

“ம்ம்” என்று தலையை மேலும் கீழும் ஆட்ட

“இது தான் உன் கடைசி முடிவா…”

“ஆமா.. “

“நான் என்னைப் பத்தி இவ்வளவு தூரம்
எடுத்து சொல்லியும் நீ என்னை மன்னிக்கல்ல”

அதற்குப் பிரியா அமைதியாக நின்றாள்.. கண்ணில்
கண்ணீர் வழிந்ததுகொண்டிருந்தது…

அதைப் பார்த்து அவன் மனம் வலித்தது.. எந்தக்
கவலையும் இல்லாமல், பட்டாம் பூச்சியாய்
திரிந்தவள். இப்படி ஆனதற்குத் தான்தானே காரணம்…
இனி எக்காரணம் கொண்டும் அவளை அழ விடக்
கூடாது என்று முடிவெடுத்தான்… அவளே தன்னைத்

தேடி வருவாள் என்று நினைத்து.....அவன் அந்த முடிவை எடுத்தான்... பாவம் அவனுக்குத் தெரிய வில்லை அது எவ்வளவுபெரிய விபரீதத்தில் கொண்டு விடப் போகிறது என்று..

“சரி” என்று தன் முழு உயரத்துக்கும் நிமிர்ந்து நின்றவன். அவளிடம்...
நான் எதுக்காகவும் யாருக்கும் விளக்கம் கொடுத்தது இல்ல, ஆனா நான் பண்ணனது தப்புன்னு புரிஞ்சது மட்டும் இல்லாம, உன் மேல் உள்ள காதலாலும் , நீ என் மேல் வச்சிருந்த காதலாலும்தான் நான் உன்ன தேடி வந்தேன்.. ஆனா அந்தக் காதல் உன்கிட்ட இப்ப இல்லைன்னு புரிஞ்சிருச்சி.. இனி நான் உனக்கு எந்த விதத்திலும் தொந்தரவா இருக்க மாட்டேன்..”

“உன் மனசுக்கு பிடிச்சவனா, உன்னைச் சந்தேகப் படாதவனா, நல்லவனா, உனக்குக் கிடைப்பான்” என்றவன் தன் பெட்டியை எடுத்து தனது துணிகளை அதில் அடக்கிக் கொண்டு அவளைத் திரும்பியும் பாராமல்...பார்க்க திராணியும் இல்லாமல் சென்று விட்டான்..

சபரிஷ் சென்ற திசையையே பார்த்து கொண்டிருந்தவளுக்கு , அவள் உயிரே அவளை விட்டு செல்வது போல் இருக்க.. அப்படியே அசையாமல் நின்றாள்.. அவள் இதயம் வேகமாகத் துடித்தது...

அவன் பேசிய பேச்சுக்கள் அவள் காதுக்குள்
ஒலித்தது..

“நான் உன்னை முதல் முதலா பார்த்த அன்னைக்கே
மயங்கிட்டேன்டி ..
தோப்புல வச்சி , உன் கழுத்துல கத்தியை பார்த்ததும்..
என் உயிரே நின்னுடுச்சிடி….
நீதான் என் உயிர்ன்னு புரிஞ்சிக்காம
இருந்துருக்கேன்டி டாக்டர் வந்து இன்னும் கொஞ்சம்
அழுத்தி பட்டுருந்துன்னா ஆபத்துதான்னு சொன்னதும்,
என்னால என்னைக் கண்ட்ரோல் பண்ணிக்க
முடியாமதான் உன்ன அன்னைக்கு
அணைத்தேன்…எங்க என் உயிர் என்னை விட்டு
போயிடுமோன்னு….”

அவன் அவன் காதலை உணர்ந்த தருணத்தைச்
சொன்னதை நினைத்து பார்த்தவளின் மனதில்
சந்தோஷம் அலைகடலெனப் பொங்கியது……..

மனதுக்குள் சந்தோச மழை பெய்ய “என் ரிஷி
என்னை விரும்புறாரா..” என்று நினைத்தவள், அவன்
கடைசியாகச் சொல்லி சென்ற வார்த்தைகளை
எண்ணி……தன் முட்டாள்தனத்தால் பிடிவாதத்தால்
தான் இழந்த சொர்க்கத்தை எண்ணி
தவித்தாள்……அவளுக்கு ஒரு வழியும்

புலபடவில்லை.....அவன் தன்னைவிட்டு ஓரேடியாகப் போய்விட்டதாக நினைத்து

தன் சக்தியெல்லாம் வடிந்து அவன் சென்ற திசையை நோக்கி...தன் வலக்கையை நீட்டி ...தன் அடிமனதின் ஆழத்திருந்து "ரிஷி" என்று கூறிக் கொண்டே மயங்கி விழுந்தாள் வேரற்ற மரமாய்.....

சுவாசம் தொடரும்...

சுவாசம் 31

"நான் மீண்டும் தாயின் கருவறையில்
"அமர்ந்தேன்!
"என்னவனின் தோள்சாய்ந்தபோது!!!...

"ஹலோ கிருத்திக்.., ம்ம் சொல்லுங்க" என்று தனக்கு நிச்சயம் ஆனவனிடம் மொபைலில்
பேசிக்கொண்டிருந்தாள் விஷு ...

"....."

"நல்ல குளிர்பா இங்க..."

“…. ..”

“ஹலோ கிருத்திக் ஒன்னும் கேட்கல, சிக்னல் இல்லைன்னு நினைக்கிறேன்….ஒருநிமிசம் இருக்க நான் பால்கனிக்கு வந்து பேசுறேன்” என்றவள் பால்கனியில் வந்து பேசிக்கொண்டிக்க , அப்பொழுது சபரிஷ் கையில் பெட்டியுடன் வேகமாகச் செல்வதைப் பார்த்தவள், யோசனையுடன், “நான் அப்புறம் பேசுறேன் கிருத்திக் பை” என்று சொல்லி போனை கட் செய்தாள்.

“என்னாச்சு.. இந்த நேரத்துல ஏன் வெளியே போறாங்க , அதுவும் கையில் பெட்டியுடன்” என்று யோசித்துகொண்டே பிரியா இருந்த அறையைப் பார்க்க,

அவள் அறை பூட்டியிருப்பதைக் கண்டவள், இவ எங்க போனா.. ஒரு வேலை நாம காலையில் சபரிஷ்க்கு காய்ச்சல்ன்னு ஒரு பிட்டு போட்டோமே அது வொர்க்கவுட் ஆயிடுச்சோ…..ம்ம்ம் ஏதோ நல்லது நடந்தா சரி” என்று நினைத்தவள்.. அப்பொழுதுதான் உணர்ந்தாள்… ஏதோ சரி இல்லை என்று

“ஒருவேளை சமாதானம் ஆகியிருந்தா ரெண்டு பேரும்தானே வெளிய போவாங்க…..ஆனா இவர் ஏன் கையில் பெட்டியோட வெளிய போறார்……நம்ம பிளான் ஊத்திக்கிச்சோ….. ரெண்டு பேருக்கும் சண்டை ஏதும்

வந்திருக்குமோ..... இப்போன்னு பாத்து இந்த எலிகுஞ்சி வேற இங்க இல்லை....இப்படி புலம்பிட்டு இருக்கிறதுக்குப் பதிலா கீழே போய் என்னன்னு பார்க்க வாச்சும் செய்யலாம்" என்று சபரிஷ் இருந்த அறையை நோக்கி சென்றவள்.... அங்குப் பிரியா கிடந்த காட்சியில்அதிர்ச்சியுற்றவள்.. பின் வேகமாக அவளிடம் சென்று

அவளின் தலையைத் தன் மடியில் போட்டுகொண்டு "பிரியா என்னாச்சு உனக்கு.....இங்க பாரு" என்று உலுக்க அசைவில்லை என்பதோடு அவளின் உடல் ஜில்லென்று இருக்கவும் பதறியவள்

"இப்போ நான் என்ன பண்ணுவேன்.. இந்த நேரம் பார்த்து யாருமே இல்லையே" என்று கலங்கியவள் தன் மடிமீது இருந்த ப்ரியாவை கீழே கிடத்திவிட்டு.....கிட்சனுக்குள் ஓடி சென்று தண்ணீர் எடுத்து வந்து ப்ரியாவின் முகத்தில் தெளித்தாள்.. அதற்கும் பலன் இல்லை என்றதும்..

தன் மொபைலை எடுத்து எழில்க்கு அழைக்க.. ரிங் போய்க்கொண்டே இருக்க மறுமுனையில் எடுக்கப் படவில்லை.... மீண்டும் மீண்டும் முயற்சிக்க, அங்க அரைத் தூக்கத்தில் இருந்த எழில்.. "யார் இந்த நேரத்தில்" என்று தன் மொபைல்லை பார்த்தவன்,

டாலி என்று வர, அதை ஆன் செய்து,

“டாலி என்னைப் பார்க்காம உனக்கு இருக்க முடியலையா, இல்ல கிருத்திக் கூடச் சண்டையா” என்று சிரிப்புடன் கேட்க.

இந்தப் பக்கமோ.. விஷு பேச்சு வராமல் தவிக்க,

“ டாலி என்னாச்சு போன் பண்ணிட்டு அமைதியா இருக்கே” என்றதும் எதிர்பக்கம் விசும்பல் சத்தம் கேட்கவும்

“டாலி என்னாச்சுன்னு சொல்லும்மா,” என்றான்…

“எழில்” என்று விஷு கத்தி அழ…

விஷுவின் அழுகையை எதிர்பார்க்காதவன், பதட்டத்துடன் எழுந்து..
“டாலி, ஏன் அழுவுற…யாருக்கு என்னாச்சு பூ பூரி எங்க”, என்று கேட்க…

“எழில்… எழில் இங்க பிரியா மூச்சு பேச்சில்லாம இருக்கா, எனக்கு ரொம்பப் பயமா இருக்கு….. நீ வா , சீக்கிரம் வா எழில்” என்று அழ..

“என்ன பூரி மூச்சுப் பேச்சில்லாமல் இருக்காளா”
என்று அதிர்ந்தவன்..
இந்த நேரத்தில் தானும் பதட்டபட்டால் சரி வராது
என்று நினைத்தவன்....

“விஷு அழாதே பூரிக்கு ஒன்னும் இல்ல சாதாரண
மயக்கமா இருக்கும்..... முகத்துல தண்ணி தெளி..”
என்று சொல்ல..

“எல்லாம் பண்ணிட்டேன் அவ எந்திரிக்கவே இல்லை..
நீ சீக்கிரம் வா எழில்” என்று மட்டுமே..
சொல்லிக்கொண்டிருந்தாள் விஷு..

“சரி சரி அழாதே டாலி நான் உடனே வரேன்....நான்
ஆம்புலன்ஸ்க்கு போன் பண்றேன்.....அது வந்ததும்
அதில் ப்ரியாவை ஏத்தி நீயும் கூட வா சரியா”

“நான் ஸ்ரைட்டா ஹாஸ்பிட்டலுக்கே வந்துடுறேன்”
என்று கட கடவெனத் திட்டமிட்டவன் பின் அழைப்பை
துண்டித்துவிட்டு.... மேற்கொண்டு சில போன் கால்ஸ்
செய்தவன், தன் அக்கா தீபாவை எழுப்பி

“ஒரு அர்ஜெண்ட் நான் கிளம்புறேன்.. நீங்க பத்திரம்”
என்று சொன்னவன் அங்கிருந்து கிளம்பிவிட்டான்.....

எழில் சொன்ன மாதிரி ஐந்தே நிமிடத்தில்
ஆம்புலன்ஸ் வர அதில் பிரியா ஏற்ற பட்டாள்..
விஷுவும் ப்ரியாவுடனே செல்ல, ஆம்புலன்ஸ்
புறப்பட்டது *நேசன் வெய்டு ஹாஸ்பிடல்..* நோக்கி...

அந்தப் பெரிய மருத்துவமணையில் பிரியா அவசர
சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டிருக்க.. வெளியே
விஷு அழுது கரைந்து கொண்டிருந்தாள்..

சிறிது நேரத்தில் பிரியா அனுமதிக்கப் பட்டிருந்த
அறையில் இருந்து ஒரு நர்ஸ் வெளியே வர

விஷு அவரிடம் பிரியா எப்படி இருக்கிறாள் என்று
கேட்டுக்கொண்டிருக்கும் போது அந்த நர்ஸ், " தி
டாக்டர் ஹேஸ் கம், அன் யூ ஆஸ்க் ஹிம்" என்று
சொல்லவும்,

திரும்பிய விஷு, அங்கு ஒரு மருத்துவக் குழுவே வர
நடுவில் அந்த நர்ஸ் சொன்ன மருத்துவர்
வர.....அவரிடம் வேகமாக விரைந்தாள் அவள்.....

விஷுவை பார்த்ததும் அவள் தோளில் தட்டி
கொடுத்தவர். ப்ரியாவை அனுமதித்திருந்த அவசர
சிகிச்சை அறைக்குள் சென்றார்..

ப்ரியாவை இந்த நிலைமையில் பார்க்க, அந்த மருத்துவருக்கு மனம் கனத்தது.. கண் மூடி தன்னை ஒரு நிலைக்குக் கொண்டு வந்தவர், சிகிச்சையை ஆரம்பித்தார்.. சில டெஸ்ட்கள் உடனே எடுக்கபட்டன, பல்ஸ் ரேட் ரொம்ப ஏற்றதாழ்வு நிலையில் இருக்க…….. மேலும் சிகிச்சையைத் தீவிர படுத்தி விட்டு , வெளியே செல்ல திரும்ப, ப்ரியாவிடம் இருந்து முனகல் சத்தம் கேட்டது….

மனதில் எழுந்த சந்தோஷத்துடன்.. அவள் என்ன சொல்கிறாள் என்று அருகே சென்று கேட்க, அவளோ “ரிஷி, ரிஷி, ரிஷி” என்று மட்டும் சொல்லிக்கொண்டிருந்தாள்..

ரிஷியா என்று வெளியே அவர் வாய்விட்டு சொல்லி பார்க்க.. அங்கு இருந்த நர்ஸ், “what happened doctor” என்று கேட்க,
அவளிடம் நத்திங் என்றவர் அந்த அறையை விட்டு வெளியேறி, அங்கு அமர்ந்திருந்த விஷுவிடம்,

“ஒன்னும் இல்ல ஷீ இஸ் நார்மல் யு டோன்ட் வொர்ரி , ஐ வில் பி பேக் இன் டென் மினிட்ஸ் ஓகே” என்றவர் தன் அறைக்கு விரைந்து.. யாருக்கோ அழைக்க, பத்தாவது தடவைதான் அங்குப் போன் எடுக்கப்பட்டது…… கோபத்தில் நேசன் மருத்துவமனைக்கு வருமாறு சொல்லிவிட்டு, பிரியா

இஸ் வெரி சீரியஸ்” என்று மொட்டையாகச் சொல்லி வேறு ஏதும் சொல்லாமல் அழைப்பை துண்டித்தார்..

டாக்டேர் அழைத்த நபர் சபரிஷ்..... புயல் போல் மருத்துவமனையின் உள்ளே நுழைந்தவன் ரிசப்ஷனில் பிரியா அனுமதிக்கபட்டு இருந்த வார்ட்டை கேட்டுக் கொண்டு, அங்கு விரைந்தான் தன் உயிரை காண..

வேகமாக வந்தவன் அங்கு விஷு அமர்ந்திருப்பதைப் பார்த்து அவளிடம் சென்று “ரியா எங்க” என்று கேட்க, அவளோ அழுதுகொண்டே கை காட்டினாள்...

அவசர சிகிச்சை அறைக்குள் நுழைய போனவனை, தடுத்த நர்ஸ்,
“sorry sir...no one can allowed inside without chief doctor permission “ என்று சொல்ல..

அவனோ அந்த நர்ஸிடம், “she is my life....i want to see her immediately “ என்று பொறுமையிழந்து கத்த...
அப்பொழுது.. “மிஸ்டர் சபரிஷ்” என்று குரல் வந்த திசையை நோக்கி சபரிஷ் திரும்ப..

அங்கே எழில் நின்றிருந்தான்... எழிலை பார்த்ததும், அவனிடம் விரைந்தவன், “எழில் ப்ரியாக்கு என்னாச்சு

, ஐ. சி. யு ல எதுக்கு அட்மிட் பண்ணிருக்காங்க” என்று பதட்டத்துடன் கேட்க..

தன்னுடன் வருமாறு கண்ணால் அழைத்துவிட்டு, தன் கேபின்க்குள் எழில் செல்ல..அவனைத் தொடர்ந்து உள்ளே சென்ற சபரிஷ் அங்கு இருந்த நேம் பிளேட்டில் “Dr. Ezhill ……cardiologist “ என்று இருக்க, ஆச்சர்யமாக அவனிடம்

“எழில் நீ டாக்டரா” என்று கேட்க,

“Yes i am a doctor Ezhil” என்று கையைக் குறுக்காகக் கட்டிக்கொண்டு நின்றான்….

அங்கே தன் உயிர் உள்ளே துடித்துக்கொண்டிருப்பதை நினைத்த சபரிஷ் , பொறுமை இழந்து “ரியாக்கு என்ன ஆச்சு எழில்..” என்று கேட்க

“அதை நீங்கதான் சொல்லனும் மிஸ்டர் சபரிஷ்.. அவ உங்க ரூம்லதான் மயங்கி விழுந்துருக்கா, அவ மனம் நோகும்படி ஏதோ நடந்துருக்கு…… உங்களுக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்…. எங்க அப்பா சொன்ன ஒரே காரணத்துக்காகத் தான் நீங்க அவளைச் சந்திக்க அனுமதிச்சேன் , அவ உங்ககிட்ட நடந்துக்கிற

முறையைப் பார்த்தா நீங்க ரெண்டு பேரும் லவ் பண்றா மாதிரி தெரிஞ்சிது.... அதனாலதான்.... நான் உங்களுக்கு ஹெல் பண்ணேன்.... உங்களுக்கு ஒன்னு தெரியுமா..

அவ இங்க வந்த புதுசுல ரிஷின்னு பேரை கேட்டதும் மயங்கி விழுந்துட்டா..... இப்போ கூட அந்தப் பேர் சொல்லிதான் மயக்கத்தில் புலம்புறா" என்றவன்

"மிஸ்டர் சபரிஷ், ஹார்ட்ல வேற ப்ராப்ளம் இருந்தா சர்ஜரியோ....இல்ல வேற ட்ரீட்மென்ட் கொடுத்து சரிபண்ணலாம்.....
ஆனா இவ ஹார்ட் ரொம்ப வீக்கா இருக்கு....இமோஷனலா ரொம்பப் பாதிக்கப் பட்டுருக்கா..... அவளைப் பூ மாதிரி பார்த்துகனும்... அவளுக்கு எதனால் இப்படி ஆச்சுன்னு தெரியலை ஆனா இது மூன்றாவது தடவை, ஏற்கனவே ரெண்டு தடவை இப்படி ஆகியிருக்குன்னு அவ ரிப்போர்ட் சொல்லுது இன்னொரு தடவை இப்படி ஆச்சின்னா " என்று சொல்லி முடிக்கவில்லை எழிலின் சட்டையைப் பிடித்த சபரிஷ்..

"அவளுக்கு ஒன்னும் ஆகாது ... ஆகவும் விடமாட்டேன்" என்று கர்ஜிக்க,

சபரிஷின் கோபம் புரிய வில்லை எழில்க்கு.. தன்

சட்டையில் இருந்து சபரிஷின் கையை விலக்கியவன்..... தன் இருக்கைக்குச் சென்று அமர்ந்து கொண்டான்....

“மிஸ்டர் சபரிஷ் ப்ரியாவோட அடையாளமே, அவளுடைய குரும்புத்தனம்தான்னு கேள்வி பட்டேன், அவ தன் அடையாளத்தைத் தொலைச்சிட்டுதான் இங்க வந்துருக்கான்னும் புரிஞ்சிகிட்டேன், அவளோட குறும்ப வெளியே கொண்டுவர நான் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்துட்டேன்..... ஆனா அவ தனக்குதானே போட்ட வட்டத்தை விட்டு வெளியே வரவே இல்லை..”

“ஆனா அதைத் தாண்டி வெளிய வந்தா அது எப்போ தெரியுமா, உங்களை இங்க பார்த்த அன்னைக்கு, அவளோட மறைந்த இயல்பை திரும்பவும் நான் பார்த்தேன்.. யாருகிட்டையும் தன் உணர்வுகளைக் காட்டாத பிரியா , உங்களைப் பார்த்து முதன் முறையாகக் காட்டினா..... சொல்லுங்க உங்களுக்கும் அவளுக்கும் என்ன பிரச்சினை.....ஒரு டாக்டரா எனக்கு எல்லாம் தெரிஞ்சாகனும்” என்று கண்டிப்புடன் எழில் சொல்ல...

தன்னவளின் உடல் நிலைமை சரியாக வேண்டும் என்பதற்காக எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல்

சொன்னான்.. பிரியா தன் ஊருக்கு வந்ததில் இருந்து.. அவன் அவளைச் சந்தேகப்பட்டது, அவளைத் தொலைத்த பின் தான் அவள் மீதான காதலை உணர்ந்தது.....பின்அவளை சமாதானபடுத்த இங்கு வந்தது.....கடைசியாக ப்ரியாவிடம் தன் மனதை திறந்தது, அவள் அதைப் புரிந்து கொள்ளாமல் பிடிவாதமாக மறுத்தது, அவளின் மனதை அவளே உணர வேண்டும் என்பதற்காகதான் அவளை விட்டு வெளியேறியது வரை சொல்லிவிட்டு,
“நான் என் சின்னுவ பார்க்கணும் எழில்” என்று யாரிடமும் கெஞ்சி பழக்கம் இல்லாத சபரிஷ் தன்னவளை பார்க்க எழிலிடம் கெஞ்சினான்..

சபரிஷ் சொன்னதைக் கேட்ட எழில் , என்ன சொல்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. இதில் யார் மேல் குற்றம்.. தான் காதலிக்கும் ஒருவன், அவன் தன்னை விரும்புகிறானா இல்லையா என்று தெரிந்து கொள்ளாமல் அவனிடம் காதல் சொல்ல சென்ற ப்ரியாவின் மேல் குற்றமா, இல்லை ஒரு பெரிய பிஸ்னெஸ் மேன் என்ன ஏது என்று விசாரிக்காமல் ஒரு பெண்ணின் மீது குற்றம் சுமத்திய சபரிஷின் மேல் குற்றமா..
ஆனால் இருவரிடமும் விளையாடிய அந்தக் காதல் இன்னமும் அவர்களிடம் தான் இருக்கு என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருப்பது யார் குற்றம்... என்று யோசித்தவன் சபரிஷிடம்..

“எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியல மிஸ்டர் சபரிஷ்…..ஆனா ஒன்னு மட்டும் நிச்சயமா தெரியுது… உங்க பெயரை கேட்டதும் மயங்கி விழுந்தவ உங்களை நேரில பார்த்ததும் மயங்கி விழல.. அவ உங்களை வெறுத்துட்டதா அவ நினைக்கிறா ஆனா அவ மனசு உங்களைதான் தேடுது, இந்த அமைதி அவளுக்கு அவளே போட்டுக்கிட்ட முகமுடி… உங்கமேல அவளுக்கு என்ன கோபம் இருந்தாலும் அவ உங்க சுவாசத்தை மட்டுமே சுவாசிக்க விரும்புறா”.. என்று எழில் சொல்லி முடிக்கவும், பிரியாவின் காதலை கண்டு…..அதை இழக்க நினைத்த தன் மடதனத்தை எண்ணி தன் சக்தியெல்லாம் வடிந்தவன் போல் இருக்கையில் தொப்பென்று அமர்ந்தான்…….

அப்பொழுது , ப்ரியாவை கவனித்துக் கொண்டிருந்த நர்ஸ் வந்து…

“Doctor that patient can’t able to breath…pls come fast” என்று சொல்ல இருவரும் பதறி அடித்துக் கொண்டு ஓடினர் ப்ரியாவை காண.

எழில் ஐ சி யு வின் உள்ளே செல்ல , சபரிஷை வெளியே நிறுத்தினாள் நர்ஸ்.. “please wait outside sir” என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்..

அவன் அங்கிருந்த சுவரில் அப்படியே கண்மூடி நின்று தன்னவளிடம் மனதார பேசிக்கொண்டிருந்தான்.....
“ஏண்டி ஏன் இப்படிப் பண்ற.....எதுக்கு இந்தப் பிடிவாதம்..... என்கிட்டே வந்துருடி.....உன்னை என் கண்ணுக்குள்ள வச்சு பார்த்துக்கறேன்.....என் உயிரே நீதான்னு எப்படிப் புரிஞ்சிக்கப் போற” என்று மனதுக்குள் புலம்பினாள்.....

அவன் நிலையைப் பார்த்துக்கொண்டிருந்த விஷ்ணு.. அவனின் அருகில் வந்து , “அண்ணா” என்று அழைக்க...கண்களில் நீருடன் அவளைப் பார்த்தான்.

அவனைப் பார்க்க பாவமாக இருந்தாலும்.....அவளோ அவனிடம் “பிரியா இப்படி இருக்குறதுக்கு நீங்க தான் காரணமா.. நீங்க ரொம்பத் திட்டுவீங்களா அவள.....ஆனா அவன்னா எனக்கும் எங்க அம்மாக்கும் ரொம்பப் பிடிக்கும் தெரியுமா.. டெய்லி எங்க அம்மா அவகிட்ட பேசுவாங்க , இப்போகூடப் போன் பண்ணுவாங்க அவகிட்ட பேசுறதுக்கு..... நான் என்ன பதில் சொல்லட்டும் அவங்ககிட்ட. .....பிரியாவ அந்த நிலையில பார்த்ததும் நான் ரொம்பப் பயந்துட்டேன் தெரியுமா” என்று அழுதவள்.”எங்க ப்ரியாவை இப்படிப் படுக்க வச்சிட்டீங்கல்ல, ஐ ஹேட் யு, ஐ ஹேட் யு, ஐ ஹேட் யு” என்று சொல்லி அழ..

அவளிடம் ஏதோ சொல்ல சபரிஷ் வாய் திறக்கவும்..

நர்ஸ் வந்து , “sir chief doctor calling u” என்று சொல்ல எல்லாவற்றையும் மறந்து உள்ளே சென்றான் தன் உயிரை கான…

அங்கே மருத்துவப் பகரணங்களோடு , கண் மூடி படுத்திருந்தாள் ப்ரியா..
வேகமாக அவள் அருகில் சென்றவன் ப்ரியாவின் கையைப் பிடித்துக் கண்ணீர் வடித்தான்…….அவளின் நிலையைக் கண்டு அவனின் இதயம் வலித்தது, அவனின் மனகண்முன் சிட்டுக்குருவியாய் வலம் வந்த பிரியா வந்தாள், அப்படி இருந்தவளை இந்த நிலையில் காண முடியாமல் கண்களை மூட.

பல்ஸ் செக் செய்து கொண்டிருந்த எழில், சபரிஷின் மனநிலையை உணர்ந்து அவனின் தோளை தொட..

தலையை மட்டும் திருப்பிப் பார்த்த சபரிஷ் “எழில் என் சின்னுக்கு ஒன்னும் ஆகாதுல்ல” என்று தன் துக்கத்தை அடக்கிக் கொண்டு கேட்க…

இல்லை என்று தலையாட்டியவன், அங்கே பார் என்று கண்ணால் அவளைக் காட்ட, அங்கு அப்பொழுதுதான்

கண் விழித்த ப்ரியா சபரிஷையே
பார்த்துக்கொண்டிருந்தாள்..

“சின்னு” என்று ப்ரியாவின் முகம் அருகே சென்றவன், அவளின் கன்னத்தை இரு கைகளால் தாங்கி “ஏன்டி இப்படி என்ன கொல்ற….என்ன பிடிவாதம்டி சின்னு உனக்கு….என்கிட்டே வந்துருடி.. “உன் சுவாசத்தில் நான்” இருக்கேன்னு ரொம்ப லேட்டா புரிஞ்சிகிட்டேன் சின்னு….. என்னை மன்னிச்சிடு…… இனி உன்னைவிட்டு எங்கேயும் போக மாட்டேன்….. நீ என்ன சொன்னாலும் கேட்பேன்” என்று தன் மனதினை உறைக்க….

ப்ரியாவோ மாட்டேன் என்பதுபோல் தலையாட்ட..

“என்னால் உன்னை விட்டு இருக்க முடியாதுடி…..புரிஞ்சுக்கோ” என்று கெஞ்சியவனை, தன் கண்ணில் நிரப்பியவள், “நான்….. நான் உங்ககிட்ட பேசணும்..” என்று பலவீனமான குரலில் சொல்ல

“பேசலாம் நிறையப் பேசலாம்…. பேசிக்கிட்டே இருக்கலாம்….ஆனா இங்க இல்ல…. வீட்டுக்கு போய்…. சரியா, இப்போ நீ என்னை மன்னிச்சிட்டேன்னு ஒரு வார்த்தை சொல்லு” என்றதும், அவனின் வார்த்தையில் அவளுக்கு லேசாகச் சிரிப்பு வர

“நான் மன்னிக்கவும் மாட்டேன் , உங்க கூட வீட்டுக்கு வரவும் மாட்டேன்” என்று அவள் கூறவும்..

பொய் கோபம் கொண்ட சபரிஷ், “இனி உன்கிட்ட கெஞ்சிட்டு இருக்க மாட்டேன், தூக்கிட்டுப் போய்க் கல்யாணம் பண்ணிக்குவேன்” என்று சொல்ல..

“ம்ம்ம் உங்களால் முடியாது”

“ஏன் முடியாது.. யாரு வந்து என்னைத் தடுக்குறா நானும் பார்க்கிறேன்” என்றதும் ப்ரியா எழிலை பார்க்க..

இவ்வளவு நேரம் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்த எழில்.. அவள் தன்னைப் பார்த்ததும்.. “அம்மா தாயே ,ஆள விடுமா.. இப்போதான் உன் ஆளு அடியில் இருந்து தப்பிச்சேன் அதுக்குல்ல மறுபடியும் என்னை மாட்டிவிடப் பார்க்குறியே” என்று பயத்துடன் ஜகா வாங்க…..

“எதுக்கு எழில் உங்களைப் பார்த்துப் பயப்படுறான்” என்று பிரியா பார்வையால் சபரிஷிடம் கேட்க…

கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி சபரிஷ் தன் சட்டையைப் பிடித்ததும்.. தான் பயந்து அவரிடம் இருந்து தப்பித்து இருக்கையில் போய் அமர்ந்ததை எழில் சொல்லவும், ப்ரியா சிரித்தாள்.....

அவளின் சிரிப்பை கண்ட எழில்.. "பூரி உனக்குச் சிரிக்கக் கூடத் தெரியுமா" என்று ஆச்சர்யமாகக் கேட்டவனைக் கண்டு அவள் முறைக்கவும்....

"ஆங்... இது என் பூரிக்கு அழகு அதை விட்டுட்டு இப்படிச் சிரிக்காதே நல்லா இல்லை" என்று கேலியாகச் சொன்னதும்,

பிரியா உதட்டை பிதுக்கி சபரிஷை பார்க்க..

உடனே சபரிஷ், "எலி நீ கிளம்பு.. இல்ல என்கிட்ட நல்லா உதை வாங்க போற" என்று கோபத்துடன் சொன்னதும்...

"ஆஹா பாஸ் இது எப்போ இருந்து.. மகாராணி கண்ணால் சொன்ன வேலையை..நீங்க கரெக்டா கடைபிடிக்கிறிங்க"

"டேய் கிளம்புடா" என்று பல்லை கடித்துக் கொண்டு

சொல்ல,

“ ஆங் இப்படி டீசன்டா சொன்னா கேட்க போறேன்.....ஓகே ஓகே மீ கோயிங்” என்றவன், அங்கு இவர்களையே பார்த்துக் கொண்டிருந்த நர்ஸை

“அம்மா நர்ஸம்மா கிளம்பும்மா, இல்ல , ஐ சி யு ல ஃப்ரி ஷோ பார்க்க வேண்டி இருக்கும்” என்று தமிழில் சொல்ல..

அந்த நர்ஸோ “வாட்” என்று கேட்க..

“வாத்தும், இல்ல கொக்கும் இல்ல” என்ற எழில்.. இவர்களைக் காட்டி வெளியே செல்லுமாறு சைகையில் சொல்ல,

அவளுக்குப் புரிந்ததற்கு அடையாளமாக, எழிலை பார்த்து ஒரு வெட்க சிரிப்பு சிரித்து விட்டு செல்ல,

“ஹய்யோ, இதுவேறையா , நோ நோ எனக்குன்னு என் தேவதை காத்திருப்பாள் , ஆனா எங்கன்னு தான் தெரியவில்லை” என்று தனக்குத் தானே புலம்பிக்கொண்டு வெளியே சென்றவன், திரும்பி, உள்ளே எட்டி பார்த்து.. “பாஸ் டூ நாட் டிஸ்ட்ரப்ன்னு போர்ட் மாட்டட்டுமா” என்று கண்ணடித்துக் கேட்க

எழில் மேல் தூக்கி எரிய ஏதாவது கிடைக்குமா
என்று சபரிஷ் தேட,

“ஓகே ஓகே நோ வைலன்ஸ் கூல் பாஸ்” என்றவன்

“பாஸ் பக்கத்து ஐ சி யுவில் ஒரு பெட் ரெடி பண்ண
சொல்லட்டுமா”

“எதுக்குடா” என்று சபரிஷ் புரியாமல் கேட்க,

“இல்ல உங்களுக்கு அடி பலமா
இருந்ததுன்னா…..அதான் கேட்டேன்” என்று ஓரடி
பின்னால் நகர்ந்து கொண்டே கேட்க

“இப்போ நீ கிளம்பல அத உனக்கு ரெடி
பண்ணவேண்டியிருக்கும்” என்று சபரிஷ் எழுந்து வர
,

“மீ எஸ்கேப்” என்று வெளியே வர, அங்கு இன்னமும்
அழுது கொண்டிருந்த விஷ்ணுவை பார்த்தவன்,

“டாலி உள்ள ஒருத்தி உயிருக்கு போராடிட்டு இருக்கா
நீ என்னடான்னா இங்க சிரிச்சிட்டு உக்காந்து

இருக்கே” என்று விஷுவை பார்த்து சொல்ல…

எழிலை முறைத்த விஷு “எழில் பிரியா எப்படி இருக்கா, கண் முழிச்சிட்டாளா, பேசுறாளா, நான் ரொம்பப் பயந்துட்டேன் எழில்.. அவளுக்கு ஒன்னும் இல்லதானே”, என்று அடுக்கடுக்காகக் கேள்வி கேட்க…..

அதைக் கண்டு முகம் கனிந்தவன்…தன் விளையாட்டுதனத்தைக் கைவிட்டு விட்டு அவளிடம் “நல்லா இருக்கா, இப்போ தான் பேசினா, வா நாம வீட்டுக்குப் போகலாம்.. நாளைக்கு நான் வரும் போது ப்ரியாவை பார்க்க உன்னை இங்க கூட்டிட்டு வரேன்..”

“என்னது வீட்டுக்கா, ப்ரியா இல்லாம நான் வர மாட்டேன், நீ போ” என்று ஐ சி யுவில் கண் பதிக்க,

“இன்னும் ரெண்டு, மூணு நாள் ஆகும் டாலி, அவ ரெக்கவர் ஆக, இன்னும் நிறைய டெஸ்ட் எல்லாம் எடுக்கனும்…. பயப்பட ஒன்னும் இல்ல விஷு….அவளை பார்த்துக்க அவ ஆளு இருக்காரு….சோ நாம போகலாம்” என்றதும்..

“ம்ம்ம் என்று தலையாட்டியவள் , தீடீர்றென்று

எழிலை முறைக்க,

“என்ன டாலி இப்படியெல்லாம் என்னை நீ பார்க்க கூடாது, உன் கிருத்திக் தான் இந்தப் பார்வைக்குச் சொந்தக்காரர்.. ஓகே” என்றதும் , அவள் அவன் உயரத்திற்கு எம்பி அவன் தலையில் குட்ட..

“அம்மா…. ஏய் பிசாசே என்னை எதுக்குக் குட்டின” என்று தன் தலையைத் தடவிக்கொண்டே கேட்க, அப்பொழுது இவர்களைக் கடந்து சென்ற இரு நர்ஸ்கள் எழிலை அதிசய பிறவி போல் பார்த்துவிட்டு செல்ல..

அதைப் பார்த்த விஷு “ஹே எலி, அந்த ரெண்டு நர்ஸ் ஏன்டா அப்படிப் பார்த்துட்டு போறாங்க” என்று தன் வாயில் விரல் வைத்தபடி கேட்க,

அவளை முறைத்தவன், “பின்ன என்ன , டாக்டர் எழில்ன்னா இந்த ஹாஸ்பிட்டலே கிடு கிடுங்கும், அப்படி இருக்கிற என்னை நீ கொட்டுனா, அவங்க அதிசயமாகத் தான் பார்ப்பாங்க”

அது என்னவோ உண்மைதான் எழில் எந்தளவுக்கு விளையாட்டுதனமாக இருப்பானோ, அதே அளவு தன்

கடமை என்று வந்துவிட்டால்..அதற்கேற்றவாரு தன்னை மாற்றிக் கொள்வான்..

“சரி இப்போ எதுக்கு என்னைக் கொட்டுனே டாலி.. “ என்று விடாமல் கேட்டான்

அவனை முறைத்தவள், “அந்த அண்ணாவாலதானே பிரியாக்கு இப்படி ஆச்சு…அவரையே அவளுக்குத் துணையா விட்டுட்டு வந்திருக்க….உனக்குக் கிறுக்குதான் பிடிச்சிருக்கு” என்று சொல்ல

“டாலி லவ்வர்ஸ் குள்ள இதெல்லாம் சகஜம்டா”

“அதுக்காக இப்படியா.. போடா நான் ரொம்பப் பயந்துட்டேன்” என்று பேசிக்கொண்டே இருவரும் கிளம்பினார்கள்.

இங்கே வார்டில் சபரிஷ் பிரியாவிடம் “சின்னு என்னை” என்று சொல்ல போனவனைத் தன் கை கொண்டு அவன் உதட்டை மூடி வேண்டாம் என்பதுபோல் தலையாட்ட ,

அவள் கையைப் பிடித்தவன் அதில் முத்தம் வைக்க……அவனின் இந்த முத்தத்தை எதிர்பார்க்காதவள்…உடனே முகம் சிவக்க…..அதை

புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.....பின்

“சின்னு நான் உன்கிட்ட ஒன்னு சொல்லட்டா” என்று ஆர்வத்துடன் கேட்க.....அவளோ நெற்றியை சுருக்கி , யோசனையாக அவனைப் பார்த்தாள்

சுருக்கிய அவள் நெற்றியை நீவி விட்டு, அதில் தன் இதழை பதித்தவன்.. அவள் கண்ணைப் பார்த்து, தன் கண்ணில் காதலை தேக்கி சொன்னான் “ரியா ஐ லவ் யு, நாம கல்யாணம் பண்ணிக்கலாமா, இனியும் உன்ன விட்டு என்னால் இருக்க முடியாது” என்றவன்

“நான் என் காதலை உன்கிட்ட சொல்லிட்டேன்...நீயும் அன்னைக்கு என்கிட்ட சொல்ல வந்தத இப்ப சொல்லு.....அதை உன் வாயால கேட்கனும்ன்னு ஆசையா இருக்கு” என்று எதிர்பார்ப்புடன் கேட்டான்

அந்நாள் நினைவில் ப்ரியாவின் உடல் ஒரு வினாடி இறுக, அதைப் பார்த்தவன், அவளைத் தன்னோடு இறுக்கி அணைத்துக்கொண்டான்.....அவளும் வாகாக அவன் அணைப்பில் அடங்கினாள்.... இதுதான் தன் இடம் என்பது போல் இருந்தது அவளின் செயல்....

“வேண்டாம் சின்னு ப்ளீஸ் அதை மறந்திடு”

“என்னால முடியலை ரிஷி.. நானும் மறக்கனும்தான் முயற்சி பண்றேன்....ஆனா முடியலையே” என்று விரக்தியாக ப்ரியா சொல்ல..

அதில் மேலும் அவளை இறுக்க அணைத்தவன்....”கண்டிப்பா உன்னால முடியும் நான் மறக்க வைப்பேன்.... என்னோட அன்பு உன் மீதான என் காதல் அதை மறக்க செய்யும்” என்று உறுதியுடன் கூறியவனைக் கண்டு அவள் அமைதியாக இருக்க.....

“நான் செஞ்ச தப்புக்குத் தண்டன கொடுத்தாதான் உன் மனசு அமைதியடையும்ன்னா.....அதை தாராளமா எனக்குக் கொடு....மனசார ஏத்துக்கறேன்.....ஆனா உன்னைப் பிரிஞ்சிஇருக்கிற தண்டனை மட்டும் வேண்டாம் எதுவாயிருந்தாலும், என்னைக் கல்யாணம் பண்ணிகிட்டு கூடவே இருந்து கொடு” என்க

“நிஜம்மா” என்று அவள் கேட்கவும் , அதற்கு உடனே பதில் வந்தது அவனின் சின்னுவிடம் இருந்து..

“நிஜம்மா டா.. நீ என்ன சொன்னாலும் கேட்குறேன்”..

“பேச்சு மாற மாட்டீங்களே….எனக்குப் பிராமிஸ் பண்ணுங்க” என்று தன் கையை நீட்டி கேக்க…

அவளைத் தன் அணைப்பில் இருந்து விலக்கியவன்.. அவள் தலையைப் பிடித்து ஆட்டி சொன்னான் “ப்ராமிஸ்” என்று..

அவனது கையை அப்படியே பிடித்து வைத்தவள்…. “என் தலையில் ப்ராமிஸ் பண்ணிருக்கிங்க பின்னாடி மாறக் கூடாது” என்று விஷமமாய்ச் சொல்ல…..

“நான் தான் சொன்னேனே.. உன்னைப் பிரிஞ்சி இருக்கிறத தவிர வேற நீ என்ன சொன்னாலும் கேட்பேன்” என்று அவன் அவள்மேல் வைத்த காதலை நிருபித்தான்…

ஆனால் விதியோ ஹய்யோ என்று தன் தலையில் கைவைத்து உட்கார்ந்து விட்டது.. இனி அந்தக் கடவுளே வந்தாலும் இவ கிட்ட இருந்து உன்னைக் காப்பாத்த முடியாதுடா சபரிஷ் என்றது..

மருத்துவமனையில்….அவனது சின்னுவை கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டான் சபரிஷ்…..வேளா வேலைக்கு மருந்துகளும் உணவையும் அவன் கையாலேயே ஊட்டி விட்டான்…நொடிநேரம் கூடப் பிரியாது அவள் அருகிலேயே இருந்தான்…….அதை

கண்டு ப்ரியாவே ஆச்சர்யபட்டு போனாள்.....எப்படி இருந்தவன் தனக்காக இப்படி மாறியதை கண்டு.....இவன் என்னவன் என்று அவளின் காதல் நெஞ்சம் கர்வம் கொண்டது....அதனால் அவளின் கோபம் கூடச் சிறிது சிறிதாக மறைந்தது.....

சுவாசம் தொடரும்...

சுவாசம் 32

எல்லா மருத்துவப் பரிசோதனையும் முடிந்து.. ஒரு மருத்துவர் என்ற முறையில் சில அறிவுரைகளை எழில் கூறிக்கொண்டிருந்தான்....

கடுப்பான ப்ரியா, "டேய் எலி நீ பெரிய டாக்டர்ன்னு நான் ஒத்துக்கறேன்.... அதுக்காக இப்படி ரம்பம் போட்டேன்னு வை.. அப்புறம் , உனக்கு நான் ட்ரீட்மெண்ட் பண்ற மாதிரி ஆகிடும் சொல்லிட்டேன்" என்று சொல்ல..

"பூரிஈஈஈஈஈஈஈஈ" என்று அவளை அதிசயமாகப்

பார்க்க..

“என்ன டா எலி குஞ்சி”

“நீ இப்படியெல்லாம் பேசுவியா” என்று ஆச்சர்யமாகக் கேட்க

“ஹா ஹா…ஏன்டா அடிக்கடி இந்தக் கேள்வியைக் கேட்குற…. நான் இன்னும் பேச ஆரம்பிக்கவே இல்லையேடா..” என்று எழிலிடம் சொன்னவள், “அப்படித்தானே ரிஷி” என்று தன்னவனிடம் கேட்க..

அவனோ ஒரு படி மேல் போய் “ச்சே ச்சே என் சின்னுக்குப் பேசவே தெரியாது எழில்” என்று குறும்புடன் கூற…

“பாஸ் , உங்களை நான் எப்படியெல்லாம் இமேஜின். பண்ணி வச்சிருக்கேன் நீங்க என்னன்னா இந்தப் பூரிக்கு இப்படி ஜால்ரா தட்டுறீங்க.. போங்க பாஸ்” என்று சலித்துக்கொள்ள..

“ஹா ஹா நீயும் லவ் பண்ணிப்பார் அப்போ புரியும் இதில் உள்ள சுகம்..” என்று எழிலிடம் சொன்னவன் ப்ரியாவை பார்த்துக் கண் சிமிட்ட. அவளோ அழகாக

வெட்கப்பட்டாள்…

“ஹும் பாஸ் என் தேவதை எங்க இருக்காளோ, எப்படி இருக்காளோ”.. என்று தன் கனவுலகத்துக்குச் செல்ல போனவன், “ஆஆஆஆஆஆஆ” என்று கத்தினான்… ப்ரியாதான் எழில் தலையில் குட்டி இருந்தாள்….

அவளை முறைத்தவன் “ஏன் பூரி என்னைக் குட்டினே..”

“என்னை வீட்டுக்கு அனுப்பிட்டு நீ கனவு காணு” என்று சொல்ல…

“உனக்குப் பொறாமை.. நீ வேனா பாரு என் தேவதை உன்னைவிட அழகா இருப்பா”

“ஹா ஹா இதே டைலாக்க எத்தனை வாட்டி சொல்வடா… அப்புறம் நான் அழகுன்னு என்னைக்குடா உன்கிட்ட சொன்னேன்…..ஹா ஹா” என்று சிரிக்க..

ப்ரியாவின் சிரிப்பை பார்த்த சபரிஷ்..தன்னவளை பழையபடி மீட்டுவிட்ட மகிழ்ச்சியில் மிகவும் சந்தோஷமாக உணர்ந்தான்..

எழிலுக்கும் சந்தோஷமாக இருந்தது.. பிரியா இங்கு வந்ததில் இருந்து எவ்வளவு முயன்றும். அவளின் சிரிப்பை வெளி கொண்டு வர முடியவில்லை அவனால்,... ஆனால் அது சபரிஷால் மட்டுமே சாத்தியமானது.....எழிலுக்கு இவர்களின் காதலை பார்க்க வியப்பாக இருந்தது.....அவனைப் பார்க்கவே கூடாது என்று நாடு கடந்து வந்தாலும் , அவன் தான் அவளின் சுவாசம் என்பதைச் சபரிஷ் இங்கு வந்த பிறகு , பிரியா உணர்ந்தாலோ இல்லையோ.. எழில் அதைக் கண்டு கொண்டான்....

சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்ட எழில்.. "பாஸ் ப்ளீஸ்.. இந்தப் பூரியை சிரிக்கமட்டும் சொல்லாதீங்க.. அப்புறம் எனக்கு மந்திரிக்க வேண்டியிருக்கும்" என்று சொல்ல..அதை கேட்டுச் சபரிஷ் விழுந்து விழுந்து சிரிக்க,

இருவரையும் முறைத்தவள்.. "இது ஹாஸ்பிட்டல் ஆச்சேன்னு பார்க்குறேன்.... ரெண்டு பேரும் வீட்டுக்கு தானே வருவீங்க...அப்போ இருக்கு" என்று சொன்னவள்..

"ஆமா எலி நீங்க பிக்னிக் தானே போனிங்க விஷு போன் பண்ணிதான் நீ வந்ததா சொன்னா, உடனே

எப்படி நீ வந்தே” என்று கேட்டாள்.

‘அய்யய்யோ இப்போ நான் எப்படிச் சமாளிக்க, முதலில் எல்லாம் இந்தப் பூரி கிட்ட பேசு பேசுன்னா பேசாது.. இப்போ இப்படி வளைச்சு வளைச்சுக் கேள்வி கேக்குறாளே’ என்று மனதுக்குள் நினைத்தவன்.....

‘நாங்க பிக்னிக் போகலை பக்கத்துக்கு ஊரில் ஹோட்டல்ல தான் தங்கியிருந்தோம்ன்னு சொன்னா , எதுக்குன்னு வேற கேட்டு வைப்பாளே.. எப்படிச் சமாளிக்க’ என்று யோசித்தவன்..

“அது வந்து, விஷு போன் பண்றதுக்கு முன்னாடி ஒரு அர்ஜெண்ட் கேஸ்ன்னு எனக்குப் போன் வந்தது.. நான் ஆன் தி வே ல தான் இருந்தேன்.. அதான் சீக்கிரம் வர முடிஞ்சிது.. பூரி..”

“ஓஓஓ சரி சரி..” என்றவள்.. “வீட்டுக்கு போலாமா.” . என்று சபரிஷிடம் கேட்க..

“சரிடா கிளம்பலாம்.. இரு நான் பில் கட்டிட்டு வரேன்” என்று சொல்லி எழ போக..

அவனைத் தடுத்த எழில் “பாஸ் கொஞ்சம் இருங்க பாஸ்.. நானே பில் கட்டிட்டேன்” என்றான்

“ஏன் எழில் உனக்குச் சிரமம்” என்று ப்ரியா சொல்ல..

“ஒரு பிரெண்ட்க்காக நான் கட்ட கூடாதா” என்றதும் அவளுக்குச் சந்துருவின் நினைவு வந்தது.....அவனும் இதே வார்த்தையைதானே அன்றும் சொன்னான்....என்பதை நினைவு கூர்ந்தவள்.. தயக்கத்துடன் சபரிஷை பார்க்க

அவனும் அவளைத்தானே பார்த்துக் கொண்டிருந்தான்.....அவள் மனதில் ஓடும் எண்ணத்தைச் சரியாகப் படித்தவன்.....அவளை திசை மாற்றும் பொருட்டு.. “வேணாம் எழில். இந்த விபரீத ஆசை” என்று உள்குத்துடன் சொல்ல..

“ஏன் பாஸ் பூரிக்கு ஒரு நண்பனா இருக்க எனக்குத் தகுதி இல்லையா” என்று வருத்தத்துடன் எழில் கேட்டான்.

“ரியாக்கு நண்பனா இருக்கனும்ன்னா, நல்லா சாப்பிட்டு தெம்பா இருக்கணும்....”என்று புதிராகக் கூறவும்.

“பாஸ் நீங்க சொல்றது புரியலை” என்க...

ப்ரியாவும் தனக்கும் புரியவில்லை என்பது போல் அவளும் சபரிஷை பார்க்க..

சபரிஷ் எழுந்து வாசல் அருகே போய் நின்று கொண்டவன்.. ப்ரியாவை காட்டி.. “இவளுக்குப் பிரெண்டா இருக்கணும்ன்னா, நீ நிறைய அடிகளைத் தாங்கவேணும்..என் தம்பி பாவம் இவகிட்ட நிறைய அடி வாங்குவான்.. அதான் அப்படிச் சொன்னேன்..அதுனால நீ சாப்பிட்டு நல்லா உடம்பை தேத்திக்கோ.”. என்று சொல்லி முடிக்கவில்லை..

“ரிஷிஈஈஈஈஈஈஈஈஈ” என்று புசுபுசுவென மூச்சு வாங்க எழுந்து நின்றவள்.. “இன்னைக்கு நீங்க காலி ரிஷி” என்றபடி சபரிஷை துரத்த..

“எழில் பார்த்துக்க… இதுதான் உன் அன்பு பாச மலர்” என்ற சபரிஷ் ஓட்டம் பிடிக்க..பிரியா அவனைத் துரத்தினாள்..

அவர்களை இப்படிப் பார்க்க எழிலுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது…அவனும் அதற்காகதானே பல தில்லுமுல்லுகளைச் செய்தான்……

பிரியா வீட்டுக்கு வந்து ஒரு வாரம் கடந்திருந்தது..

அவளைக் கண்ணுக்குள் வைத்து
பார்த்துக்கொண்டனர் , அவளது ரிஷியும், தீபாவும்..

“என்னை ஒரு நோயாளியாகப் பார்க்காதீங்க” என்று
பிரியா எவ்வளவோ எடுத்து சொல்லியும்
கேட்கவில்லை இருவரும்…

பிக்னிக் என்ற பெயரில் பக்கத்து ஊரில் இருந்து
வந்ததும் விஷு மூலமாக விஷயத்தைக் கேள்வி பட்ட
தீபா , ரிஷியிடம் பேசக்கூட இல்லை.. ஒரு சின்னப்
பெண்ணை இப்படியா படுத்துவான் என்று.. ப்ரியாதான்
தன் மேல்தான் தவறு….அப்பொழுது இருந்த சபரிஷின்
மனநிலையை எடுத்து சொல்லி புரிய வைத்தாள்……..
எவரிடத்திலும் அவனை விட்டு கொடுக்க அவள்
விரும்பவில்லை…..

……

அன்று மாலை, அப்பார்ட்மெண்ட்டில் உள்ள லேக்கில்,
கல் பெஞ்சில் அமர்ந்திருந்தனர் இருவரும்…குளிர்
அதிகமாக இருந்ததால், குளிருக்கு ஏற்றார் போன்று
உடை அணிந்திருந்தாள் , முகம் தவிற..

சபரிஷின் தோளில் சாய்ந்து கொண்டு
அமர்ந்திருந்தாள் பிரியா……அந்த லேக் பார்க்க பார்க்க

தெவிட்டவில்லை அவர்களுக்கு…..ஒரு வித மோன நிலையில் அமர்ந்திருந்தனர் இருவரும்……..சில நேரத்தில் காதலில் அமைதிகூடச் சுகமே…..வார்த்தைகள் அற்ற மௌனத்தில் திளைத்திருந்தனர் இருவரும்……

அப்பொழுது சபரிஷ் சின்னு என்று அழைக்க,….அவனை விட்டு விலகாது முகத்தை மட்டும் நிமிர்த்தி அவனை என்ன என்பது போல் பார்த்தாள் அவள்….

“இந்தக் குளிர்ல இப்படி ஏன் நடுங்கிட்டு இருக்க…..வா வீட்டுக்குள்ள போய்ப் பேசலாம்”

அதற்க்கும் அவள் அமைதியாக இருக்க……

“என்னம்மா, பதில் சொல்லாம அமைதியா இருந்தா என்ன அர்த்தம்…..உடம்புக்கு ஏதாவது வந்திட போகுது…..” என்று அக்கறையாகச் சொல்ல

அவன் அக்கறையில் மனம் நெகிழ்ந்தவள்….”உங்களுக்குக் குளிருதா, ரிஷி”

“இல்ல டா” என்க

“அப்போ இங்கேயே இருந்து பேசலாம்..இப்படி உங்க தோள்ல சாய்ஞ்சிகிட்டு இந்த ஏகாந்தமான சூழ்நிலைய அனுப்பவிக்கிறது எவ்வளவு நல்லா இருக்குத் தெரியுமா…பிளீஸ் ரிஷி…இன்னும் கொஞ்சம் நேரம்” என்று கெஞ்ச….

அவனுக்கும் குளிரெடுத்தாலும் தன்னவளின் ஆசைக்காகச் சம்மதித்தான்……

“ஆன்ட்டி , அங்கிள் , பிரபா ஆன்ட்டி , பாட்டி” எல்லோரும் எப்படி இருக்காங்க,

“ ரொம்பச் சீக்கிரம் கேட்டுட்ட சின்னு” என்று கிண்டலடித்தவன்….அவள் முறைப்பதை கண்டு……”உன்ன சீக்கிரம் பார்க்கணும்ன்னு ஆசையா இருக்காங்க டா..”

“மோஹி எங்க இருக்கா”

“மும்பைல தான் இருக்கா, காலேஜ் போகனும் இல்ல… அதுனால எல்லாரும் கிளம்பிட்டாங்க,.. அவ போகும் போது சும்மா போகல….. என்னை லெப்ட் அன் ரைட் வாங்கிட்டுத்தான் போனா” என்று பரிதாபமாகச் சொல்ல….அவனின் பாவனையில் அவளுக்குச் சிரிப்பு வர

அதைக் கண்டு அவளை முறைத்தவன் “நான் திட்டு வாங்கினது உனக்குச் சிரிப்பா இருக்கா” என்று போலியாகக் கோபம் கொள்ள

நான்னா அவளுக்கு ரொம்பப் பிடிக்கும் ரிஷி…சின்ன வயசுல இருந்து ஒன்னா இருக்கோம்…நான் என்ன குறும்பு செஞ்சாலும் அவதான் என்னைக் கண்டிப்பா….எனக்கு அவ இன்னொரு அம்மா மாதிரி….நான் எதையும் அவகிட்ட இருந்து மறைச்சதில்ல…..போட்டோஸ் பத்தி சந்துரு அவகிட்ட சொல்லகூடாதுன்னு சொல்லியும்….அவகிட்ட மறைச்சு பழக்கமில்லாததால்…ஒருநாள் நானே…அவகிட்ட எல்லா உண்மையும் சொல்லிட்டேன்…..என்னோட உடல்நிலையைத் தவிற…அது தெரிஞ்சா அவளால தாங்க முடியாது……அந்த சம்பவத்துக்கப்புறம் சந்துருவும் மோஹியும்தான் அவனை என்கிட்ட நெருங்கவிடாம பார்த்துகிட்டாங்க” என்று அவர்களின் தோழமையில் மனம் நெகிழ்ந்து சொல்ல…..

“ தெரியும் சின்னு அவ கோபப்டும் போது உன்மேல் எவ்வளவு பாசம் வச்சிருக்கான்னு புரிஞ்சிகிட்டேன் …” என்றான்…

அவனின் கையைப் பிடித்தவள்..பின் தயக்கமாக “சந்துரு” என்றாள்…

அதற்கு அவனிடம் மௌனமே பதிலாக வந்தது……

“என்னாச்சு ரிஷி ஏன் அமைதியா இருக்கீங்க”

“அவன் என்கிட்டே பேசி ஒரு வருஷம் ஆகுது சின்னு..” என்றான் மெல்லிய குரலில் வருத்தத்துடன்……

சட்டென்று நிமிர்ந்து பார்த்தவள்…..”ஏன் ரிஷி” என்க

“அவனோட பேபியை அழ வச்சிட்டேனாம்,
அவன்கிட்ட இருந்து பிரிச்சிட்டேனாம்” என்றவன்,
அன்று சந்துரு சொன்ன விஷயங்களும்,
விளக்கங்களையும் சொன்னவன்,
“என்னைக்கு என் பேபி, என்னைத் தேடி வராளோ
அன்னைக்குதான் உங்க கிட்ட பேசுவேன்
சொல்லிட்டான்..” என்று முடிக்க….

சந்துருவின் பாசத்தில் நெகிழ்ந்துவிட்டாள்
அவள்…ஏனென்றால் அவளுக்குத் தெரியும் தன்
அண்ணன் மேல் அதிகப் பாசம் வைத்திருப்பவன்
சந்துரு, அப்படிபட்டவன், தனக்காக ஒரு வருடமாகத்
தன் அண்ணனிடம் பேசவில்லை என்றதும்…அவனின்
நட்பில் ஆழத்தை உணர்ந்தவளின் கண்கள்
கலங்கியது…..

அவள் கண்கள் கலங்குவதைக் கண்ட சபரிஷ் “இனிமேல் அழக்கூடாதுன்னு சொன்னேனா இல்லையா சின்னு” என்றவன் அவள் கண்களைத் துடைத்துக் கொண்டே..... “ஆனாலும் எல்லோரும் என்னை ரவுண்டு கட்டி அடிக்கிறாங்க தெரியுமா...நீ வந்து என்னன்னு கேளு சின்னு” என்று குழந்தை போல் புகார் செய்ய.....அதைக் கண்டு அவள் கலகலவெனச் சிரித்தாள்.....

அவளின் சிரிப்பை ரசித்தவன், “அவங்களை எல்லாம் விடு , இந்த எழில், அன்னைக்குப் பார்க்குல வச்சி கேக்குறான், பாஸ் ப்ரியா இப்படி இருக்கிறதுக்கு நீங்கதான் காரணமான்னு....” என்று அன்று நடந்ததைச் சொல்ல....

“ம்ம்ம் அவனும் எனக்கு இன்னொரு சந்துருதான், என்னைச் சிரிக்க வைக்க எண்ணவெல்லாம் காமெடி பண்ணுவான் தெரியுமா ஆனா நான் தான் மனசுக்குள்ள சிரிச்சாலும் வெளிய அதைக் காட்டிக்க மாட்டேன்....” என்றவளுக்கு அப்பொழுதுதான் பொறித் தட்டியது.. அதை அப்படியே சபரிஷிடம் கேட்டாள்..

“ரிஷி எழிலை உங்களுக்கு முன்னாடியே தெரியுமா”

அவனும் தன்னை மறந்து, “ம்ம்” தெரியுமே.....என்று சொல்ல..

“எப்படி” என்று அவள் முகம் சுருக்கி யோசனையுடன் கேட்க...அதை கண்டு உஷாராண சபரிஷ்

“அன்னைக்கு உன்கிட்ட பேசிட்டு இருக்கும் போது வந்து பேசினான்ல அப்போதான்டா அறிமுகமானான் “ என்று சமாளிக்க....

“அப்போ எப்படி , ப்ரியா இப்படி இருக்கிறதுக்கு நீங்கதான் காரணமான்னு கேட்டான்..”மறுபடியும் கேள்வி கேட்க

“அது அது நீ ஹாஸ்பிட்டல இருக்கும் போது, பிரியா இப்படி ஆனத்துக்கு நீங்கதான் காரணமான்னு கேட்டான் டா” என்று சமாளித்தவன்.... ‘எலி இப்போதைக்கு நீ தப்பிச்சிட்டே டா.’ . என்று சபரிஷ் மனதுக்குள் நினைக்க..

“ஓஓஓ சரி..” என்றவள்.. “ஆமா நான் யு எஸ் ல இருக்கேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..’ என்று கேட்க..

மோகனாவிடம் விசாரித்ததில் நீ இங்கு இருப்பது தெரியவர.....தான் உடனே கிளம்பவும்..... மோகனா அதைத் தடுத்து நிறுத்தி அவள் கோபம் தீர்ந்தவுடன் போய்ச் சந்திக்குமாறு சொல்ல.....அதனால்தான் இந்த ஒரு வருட காத்திருப்பு "என்று பொறுமையாக விளக்கினான்..... (ஆனால் அந்த ஒரு வருட காலம் கெடு வைத்தது மோகனா அல்ல வேறு ஒரு நபர் என்று தெரியும் போது....பிரியாவின் ரியாக்ஷன் என்னவாக இருக்கும்.....)

சபரிஷ் தான் தன் காதலை உணர்ந்த தருணத்தை விவரிக்க விவரிக்க அதில் லயித்திருந்தவள்.. மோகனா ஏன் அப்படிச் சொன்னாள் என்று கேட்க..

"உனக்குக் கொஞ்சம் தனிமை வேணும்.. அவளது கோபம் குறையனும்.... இப்போ நீங்க உடனே போனீங்கன்னா உங்கமேல உள்ள கோபம் தான் அதிகமாகி.... காதல் பின்னுக்குத் தள்ள பட்டுரும் அத்தான் அப்படின்னா.. எனக்கும் அதுதான் சரின்னு பட்டுச்சி.. அதான் பல்லை கடிச்சிக்கிட்டு ஒருவருடம் பொறுத்து இருந்தேன் , ஒருவருடம் முடிஞ்ச அடுத்த நொடி நான் இங்க கிளம்பி வந்துட்டேன்"" என்று தன் நீண்ட நாள் காத்திருப்பைச் சொல்ல

"மோஹி சொன்னது சரிதான்.. அப்போ

வந்துருந்தீங்கன்னா, கண்டிப்பா உங்கள ஏத்துகிட்டு இருக்க மாட்டேன்".. என்று சொல்லவும்..

"சின்னு , அன்னைக்கு" என்று மறுபடியும் ஆரம்பிக்கப் போனவனை..

"வேண்டாம் ரிஷி அந்த நாளை நம்ம வாழ்க்கையில் இருந்து மறந்திடுவோம்....அதுக்கு நீங்க சொன்ன விளக்கங்களே போதும்" என்று அவன் சொல்ல வருவதைத் தடுக்க

"சரி சின்னு.. இனி அதைப் பற்றிப் பேச வேணாம், அது முடிந்து போன அத்தியாயங்கள்.. முடிந்ததாகவே இருக்கட்டும்" என்றவன்
மெதுவாக அவள் தோளை சுற்றி கைபோட்டு நெருங்கி அமர்ந்தான்.. அவள் மேல் இருந்து வந்த அவளது பிரத்தியேக வாசனை அவனுக்குக் கிறக்கமாக இருக்க.. "சின்னு ரொம்பக் குளிருதுல்ல... வீட்டுக்குள்ள போலாமா" என்று சபரிஷ் இழுக்க..

அவனின் குரலின் மாற்றத்தை உணர்ந்தவள்....."ம்ம்ம் போகலாம். நீங்க உங்க ரூம்க்கு நான் என் ரூம்க்கு"

"என்னது.....நீ என் கூடவே இரேன் சின்னு.. நாம

ஊருக்கு போற வரை ஒரே ரூம்ல தங்கலாம் ப்ளீஸ் டி" என்று கெஞ்ச..

"என்னது.. உங்க கூட உங்க ரூம்ல...அதுவும் இந்தியா போற வரைக்கும்...." என்று ஒவ்வொரு வார்த்தையும் நிறுத்தி நிதானமாகக் கேட்க....

"ம்ம்ம் ஆமா சின்னு ப்ளீஸ் டி.."என்று அடம்பிடித்தவனைக் கண்டு மனதுக்குள் சிரித்தவள்.....வெளியே அவனை முறைத்து பார்த்துக் கொண்டே..

"ம்ம் சரி வாங்க போலாம்.. ஆனா கொஞ்சநேரம் பேசிட்டு, நான் என் ரூம்க்கு போயிடுவேன்" என்று சொல்ல..

"என் மேல உனக்கு நம்பிக்கை இல்லை அப்படித்தானே சின்னு" என்று கோபம் கொள்ள

'அட போடா, எனக்குத்தான் என் மேல் நம்பிக்கை இல்லை நீ என் பக்கத்துல வந்தாலே நான் உருகிடுவேன்.. இதுல ஒரே அறையில தங்கியிருந்தா....சுத்தம் நீ வேற" என்று மனதுக்குள் நினைத்தவளை,

அவளது மனசாட்சி , “ப்ரி குட்டி இப்போதான் நீ கரெக்ட்டா சொல்லிருக்கே” என்று நற்சான்றிதழ் வழங்க.. அதில்அவள் முகம் செவ்வானமாய்ச் சிவந்தது…..

அவளது முகசிவப்பை ரசித்தவன்…. அவளை எழுப்பித் தனது பிடியை விடாமல் தனது அரை நோக்கி அழைத்துச் சென்றான்..

உள்ளே வந்ததும் பிரியா விலக.. அவன் அவளை விலக விட வில்லை…

சுவாசம் தொடரும்...

சுவாசம் 33

“ஒவ்வொரு நிமிடமும் அழகானது
“என்னவள் என் அருகில் இருப்பதால்!!!!
“தவம் செய்யும் முன்பே வரம் கிடைத்தது
“என்னவளின் ஒற்றைப் புன்னகையில்!!!

“ப்ரியாவை பார்த்த சபரிஷ்”அவளது முகசிவப்பை ரசித்து.. அவளைத் தனது அறை நோக்கி அழைத்துச் சென்றான்..

உள்ளே வந்ததும் ஹீட்டர் போட்டவன், குளிருக்கு இதமாக அணிந்திருந்த உடையைக் கழட்ட..

பிரியாவும் தான் அணிந்திருந்த,ஸ்வெட்டரை கழட்டி சோபாவில் போட்டவள் திரும்பி சபரிஷை பார்க்க..

அவனோ அவளை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருக்க,

“பேசலாம்ன்னு கூட்டிகிட்டு வந்துட்டு இப்படிப் பார்த்தா என்ன அர்த்தமாம்” என்றுமனதுக்குள் நினைத்தவள்,
அவன் பார்வையின் வேறுபாட்டில் முகம் சிவந்து நின்றாள்….

அவளின் முகச் சிவப்பை பார்த்து , அவள் அருகில் வந்து அவள் கையைச் சுண்டி இழுக்க, இதை எதிர் பாராதவள், அவன் நெஞ்சில் வந்து மோதி நின்றாள்..

“என்னது இது.. விடுங்க நான் என் ரூம்க்கு போறேன்..” என்று சின்னக் குரலில் அவன் முகம் பார்த்து சொல்ல

அவன் பதில் சொல்லாமல்….அவளை பார்த்துக் கொண்டே தன் அணைப்பை இறுக்கினான்……

அவன் பார்வையைச் சந்திக்க முடியாமல் பாவையவள் தலைகுனிந்து கொண்டே அவனிடமிருந்து திமிறியவாறு, “உங்க பார்வையே சரியில்ல இதுக்கு மேல நான்இங்கஇருந்தா சரிவராது……விடுங்க நான் போறேன்” என்று சொல்ல,

ஒரு விரலால் அவள் நாடியை பிடித்து அவளது முகத்தை நிமிர்த்தயவன், “ஐ லவ் யு சின்னு” என்று தன் உள்ளத்துக் காதலையெல்லாம் தன் குரலில் தேக்கி சொல்ல,

அவன் சொன்ன வார்த்தையை உள் வாங்கியவளின் மனதுஆகாயத்தில் பறந்தது……இந்த வார்த்தையைத் தன்னவனின் வாயால் கேட்க என்னவெல்லாம் கஷ்டப்பட்டு விட்டாள்….அதன் தாக்கம் தாங்கமுடியாமல் கண்களை மூடி நின்றாள்…..

அவளது முகத்தின் வெகு அருகே தன் முகத்தைக் கொண்டு சென்றவன், அவளது நெற்றியில் இதழ் பதிக்க.... அவளின் கை அவனின் சட்டையை இறுக்கி பிடித்தது....

நெற்றியில் இருந்து , அவளது கண்களில் பயணித்து அப்படியே கன்னத்திற்குத் தாவியவனின் உதடுகள்...அதன் மென்மையில் அப்படியே நின்றன..... பின் அவளின் தேனூறும் செவ்விதழ்களைப் பார்த்தவன், நிமிர்ந்து அவளின் மதிமுகத்தைப் பார்க்க, அவன் முத்தம் தந்த கிறக்கத்தால், கண்மூடி இதழ் துடிக்க நின்றிருந்த அவளின் தோற்றம் கண்டு சிரித்தவன் .....மறுவினாடி அவளின் இதழை தன் முரட்டு இதழால் சிறைசெய்தான்...

அவனின் இதழ்முத்தத்தில் ப்ரியாவின் உடல் நடுங்கஆரம்பிக்க, அவளை மேலும் தன்னோடு சேர்த்து இருக்கிக் கட்டிக்கொண்டான்..
அவளின் இதழ் சுவையில் திளைத்திருந்தவனுக்கு அவளை விட மனம் இல்லையோ, இல்லை பாவை அவளுக்குத்தான் விலக மனம் இல்லையோ..
அவனின் கை ப்ரியாவின் முதுகில் அத்துமீறி விளையாட ஆரம்பிக்க..

பெண்களுக்கே உரிய தற்காப்பு உணர்ச்சி அவளை

அவனிடமிருந்து விலகு என்று எச்சரிக்க, சட்டென்று அவனிடம் இருந்து விலகினாள்..

உணர்ச்சியின் பிடியில் இருந்தவன், அவள் சட்டென்று விலகவும், குழந்தையின் கையில் இருந்த மிட்டாயை , யாராவது பிடிங்கினால், அந்தக் குழந்தை எவ்வாறு நிற்க்குமோ… அதே நிலையில் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான் ….

அவனிடம் இருந்து விலகியவளுக்கு வெட்க வெட்கமாய் வர அவனின் முகத்தைக் காண முடியாமல் நாணம் வந்து தடுக்கத் தன் முகச் சிவப்பை அவனிடம் இருந்து மறைக்கும் பொருட்டு…திரும்பி நின்றுக் கொண்டாள்…..

மீண்டும் மெதுவாக அவளை நெருங்கியவன்.. பின்னோடு சேர்த்து அவளை அணைத்து அவளின் பின்னகழுத்தில் தன் இதழை அழுத்தமாகப் பதிக்க,…அவளிடமிருந்து ரிஷி என்ற முனகல் தவிற அவளால் வேறுஎதுவும் பேச முடியாமல் அவனின் மீசையின் குறுகுறுப்பில் தன்னை மறந்து நின்றாள்……

அவன் அவளின் கழுத்தில் இதழை பதித்தவாறே “சின்னு ஒரேஒரு தடவை மட்டும் ஐ லவ் யு சொல்லுடா” என்று கெஞ்ச…

அவளோ “ம்ஹூம் மாட்டேன்” என்றாள்..

“சின்னு அப்போ நீ என்னை மன்னிக்கவில்லை அப்படித்தானே”

“ம்ம் ஆமா நான் உங்களை மன்னிக்கல..”என்று வெளியே சொன்னவள், மனக்குள் நான் மன்னிக்காமல் தான் இப்போ நீ கட்டிக்கிட்டு நிக்கிரியோ என்று கவுண்டர் கொடுத்தாள்…

“நீ என்னை மன்னிக்கணும்ன்னா நான் என்ன பண்ணனும் சொல்லு சின்னு…நான் செய்றேன்” என்று சொல்ல..

“சொல்வேன் ஆனா அது உங்களால் முடியாது”.. என்றாள்..

“என்னால் முடியாதுன்னு எதுவும் இல்லை சின்னு , சொல்லு நான் என்ன பண்ணனும்” என்று மீண்டும் கேட்டவாறே தன் உதட்டால் அவள் கழுத்தில் கோலம் போட…….

தன் தண்டனையைச் சொல்ல வேகமாக அவனை நோக்கி அவள் திரும்ப, மீண்டும் இருவரது இதழ்களும் ஒன்றோடு ஒன்று எதிர்பாராமல்

முத்தமிட்டு கொண்டது……

“ஆங் என்னது இது” என்று அவனைப் பார்த்து முறைக்க..

“நான் ஒன்னும் பண்ணல சின்னு.. நீ இப்படித் திடீர்ன்னு திரும்புவேன்னு நான் நினைக்கலடா”. என்றவன் அவளின் இதழை குறுகுறுவென்று பார்க்க,

அவன் உயரத்துக்கு எம்பி.. அவனின் தலையில் குட்ட போனவள் பிறகு என்ன நினைத்தாளோ…..”நான் போறேன் போங்க.. நீங்க ரொம்பப் பேட் பாய்”.. என்று வாசலை நோக்கி நடக்க ,

அவளின் கையைப் பிடித்து நிறுத்தியவன்.. “சின்னு பேசிட்டு இருக்கலாம்ன்னு சொல்லிட்டு இப்போ பாதியிலே நீ கிளம்பினா எப்படி” என்று அப்பாவி போல் கேட்க,

“நீங்க பேசினா பரவாயில்லை.. ஆனா அத தவிர வேற எண்ணலாமோ பண்றீங்க” என்று சொல்லி முடிப்பதற்க்குள் நாணம் வந்து தடுத்து நிறுத்திவிட,

“நான் என்ன பண்ணுனேன்டி.. இன்னும் ஒண்ணுமே

பண்ணலையே" என்று குறும்பு குரலில் கேட்க..

தன் இடுப்பில் கைவைத்து அவனை முறைத்து பார்த்தவள்...."ஆமாமா உங்களுக்கு ஒன்னுமே தெரியாது... நீங்க எதுவுமே செய்யல அப்படித்தானே... ஊருக்கு போற வரைக்கும் என் கிட்ட வந்தீங்க" விரல் நீட்டி பத்திரம் காட்டியவளின் அருகில் சபரிஷ் வேகமாக வர..

நோ நோ நோ என்று சொல்லிக்கொண்டு வெளியே வேகமாக ஓடியவளை பார்த்துச் சபரிஷ்..

"ஹே ரியா பாத்து மெதுவா போ விழுந்திட போற" என்று சபரிஷ் சொல்லவும் சட்டென்று , அப்படியே நின்று விட்டாள் ப்ரியா...

அவள் அசையாமல் நிற்கவும் அவளது அருகில் வந்து அவளது தோளை தொட்டு "என்னச்சுடா ஏன்அப்படியே நின்னுட்ட" என்று அவளைத் தன் புறம் திருப்ப.....அவளின் கலங்கிய விழிகளைக் கண்டவன்,அவளை தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டு, அவளின் தலையை வருடியவாறே.... "எதுக்குடா இந்தக் கலக்கம்" என்று ஆறுதலாகக் கேட்க,

அவனது நெஞ்சில் வாகாய் சாய்ந்துகொண்டவள்..
“இல்ல அன்னைக்குத் திருச்செந்தூர் கோவில்ல....
நான் வேகமா ஓடும் போதும்.... இப்படித்தான் ரியா
நில்லு ஓடாதே விழுந்துருவேன்னு சொன்னிங்க
அதுக்கு அப்புறம் அதுக்கு அப்புறம் என்று அவளால்
சொல்லமுடியாமல் தவிக்க,

அவளின் தவிப்பையும், அவள் சொல்ல வருவது
புரியவும்...அவளை மேலும் தன்னோடு இறுக்கி
கொண்டவன், “சின்னு உனக்கு என் மேல முழுசா
நம்பிக்கை வரணும்ன்னா நான் என்ன செய்யணும் ,
சொல்லு செய்யிறேன்” என்றான் உறுதியுடன்..

அவனை நிமிர்ந்து பார்த்தவள்.. “நாம சீக்கிரம்
கல்யாணம் பண்ணிக்கலாமா ரிஷி..” என்று
எதிர்பார்ப்போடு கேட்க,

அவளின் தலையில் செல்லமாய் முட்டியவன், “நான்
எப்பவோ ரெடி சின்னு” என்று சொல்லிக்கொண்டே
அணைப்பை இருக்க..

அவன் சட்டையின் பொத்தானை திருகிக்
கொண்டே....”போங்க ரிஷி நீங்க ரொம்ப மோசம்..

விடுங்க நான் போறேன்.. என்று வாய் சொன்னாலும் செயல் வேறாக இருக்க, அதைக் கண்டு வாய்விட்டு சிரித்தவன்,

“என்னை நினைச்சா எனக்கே ஆச்சர்யமா இருக்கு சின்னு” என்று சொல்லவும்..

“எனக்கும் தான் ஆச்சர்யமா இருக்கு”

“உனக்கு என்ன ஆச்சர்யம் சொல்லேன்” என்று ஆர்வமா கேட்க

என்னை விடுங்க சொல்றேன் என்றாள் அவனின் சின்னு..

“முடியாது சின்னு, ஒரு தடவை உன்னைத் தெரிஞ்சே விட்டுட்டேன், இன்னொருதடவை , தெரியாமல் கூட விடமாட்டேன்” என்றவன் சீரியஸ் ஆக..

அதை மாற்றும் பொருட்டு “எனக்கு ஒரு டவுட்டு ரிஷி..”

“என்னடா”

அவனின் சட்டை பொத்தானை திருகியபடியே....."இல்ல, அப்போ நமக்கிடையே உங்களுக்குத் தெரிஞ்ச வயசு வித்தியாசம் இப்போ மட்டும் எப்படித் தெரியாம போச்சாம் ஹ்ம்ம்..அதுதான் எனக்கு இதுக்குப் பதில் வேணும்" என்றாள்

"ம்ம்ம் அதுவா.....எனக்கும் உனக்கும் உள்ள வயசு வித்தியாசம் அதிகம் , நீ வேற சின்னப் பொண்ணா இருக்கியா அதான் உன் கண்ணுல எனக்கான காதலை பார்த்து நீ என்கிட்டே பேச வரும் போதெல்லாம் விலகி விலகி போனேன்.. ஆனா நீ ராஜேஷ்க்கிட்டயும், சந்துருகிட்டயும் பேசும் போது எல்லாம் என்னன்னு தெரியாது எனக்குச் செமயா கோபம் வரும்" என்றதும் அவள் முறைக்க

"அம்மா தாயே மலையேறிடாதம்மா, சந்தேகத்தினால் வந்த கோபம் இல்லை பொறாமையால் வந்த கோபம் , உன்னை நான் அவாய்ட் பண்ணினாலும் ஏனோ நீ , எனக்கே எனக்கானவள்ன்னு என் மனசு அந்த நேரத்தில் அடிச்சிக்கும்.... அதை நான் சரியா புரிஞ்சிக்காம இருந்துருக்கேன்டா புரிஞ்சதுக்கு அப்பறம் இந்த வயசு வித்தியாசம் பெருசா தெரியிலடா... சரி என்னைப் பார்த்து உனக்கு ஆச்சரியம் சொன்னியே என்ன அது" என்று ஆர்வமாகக் கேட்டான் சபரிஷ்..

அவன் கேட்டதும் சற்று தள்ளி வாசலில் போய் நின்று கொண்டவள், அவனை மேலும் கீழும் பார்த்து ..
“இந்தக் காஸ்டியூம்ல நீங்க” என்று பாதியில் நிறுத்த,

“சொல்லு சின்னு இந்தக் காஸ்டியூம்ல , நான் எப்படி இருக்கேன்”

“இல்ல உங்களை எப்போவும் வேஷ்டி சட்டையில் பார்த்துவிட்டு இந்த டிரஸ்ல உங்களை அன்னைக்குப் பார்க்ல பார்த்ததும் , உங்க தோப்பில் வயல்ல அங்க அங்க மாட்டி வச்சிருந்தீங்களே சோலைகொல்ல பொம்மை அது மாதிரி இருந்தீங்களா… அதான் அப்படியே ஷாக் ஆகி நின்னுட்டேன் ரிஷி” என்றாள் தன் சிரிப்பை அடக்கிக் கொண்டு

ஏதோ தன்னைப் பாராட்டதான் போகிறாள் என்று அவன் நினைக்க, அவள் தன்னைச் சோலைகொல்ல பொம்மை என்றதும்..

“என்னது என்னைப் பார்த்தா உனக்குச் சோலைகொல்ல பொம்மை மாதிரி இருக்கா, உன்னை” என்று சபரிஷ் துரத்த..

“மீ எஸ்கேப்” என்று கலகலவென்று சிரித்தபடியே

பிரியா வெளியே ஓட,

இவர்களைக் கண்ட எழில், “என்னடா நடக்குது இங்க, இந்தப் பூரி பூரிக்கட்டைய வச்சி இந்தப் பாஸை துறத்துவான்னு நினைச்சா, இங்க உல்ட்டாவால்ல இருக்கு” என்று நினைத்தாலும் மனதுக்குள் சந்தோஷமாக உணர்ந்தான்..

அப்பொழுது தீபாவும், அவள் கணவர் கணேஷும், இவர்களின் சிரிப்புச் சத்தம் கேட்டு வெளியே வர, விஷ்வும் வெளியே எட்டி பார்த்தாள்..

ப்ரியா இங்கு வந்த இந்த ஆறு மாசத்தில்...அவள் சிரித்து ஏன் யாரிடமும் சரியாகப் பேசிக்கூடப் பார்த்ததில்லை..ஆனால் இப்பொழுது சபரிஷால் மட்டுமே அது சாத்தியம் ஆனது..

“ரிஷி வேண்டாம், நான் பொய் சொல்லல .. உண்மையா அப்படித்தான் இருந்தது” என்று சொல்லிக்கொண்டே ஓட..

“நான் இந்த டிரஸ் போட எவ்ளோ கஷ்டபட்டேன், உனக்காக இத மாட்டிட்டு வந்தா என்னைக் கிண்டலா பண்ற.. உனக்கு இருக்குடி இன்னைக்கு” என்று

சொல்லிக்கொண்டே, ப்ரியாவை துரத்த..

“டேய் எலி. என்னைக் காப்பாத்துடா ரிஷிகிட்ட இருந்து” என்று சொல்லிக்கொண்டே எழில் பின்னாடி அவள் ஒளிய

அவளை விட்டு நகர்ந்து நின்றவன்.. “அம்மா தாயே, உங்க சாப்பாட்டுக்கு நான் அப்பளம் ஆக விரும்பல.. ஏன் என்னைப் பாஸ் நொறுக்கறதுக்கா ஆள விடு தாயே” என்று சபரிஷின் உடற்கட்டினை பார்த்து ஜகா வாங்க….

“அப்போ போ உனக்கு உன் தேவதை கிடைக்கமாட்டா, அதுக்குப் பதிலா இந்த ஊரு வெள்ளைக்காரி தான் உனக்குக் கிடைப்பா” என்று சொன்னவள்.. சபரிஷிடம் இருந்து தப்பித்து.. தனது அப்பார்ட்மெண்ட்க்கு சென்று விட……சபரிஷ் மூச்சு வாங்க நின்று விட்டான்…

இருவரின் விளையாட்டைக் கவனித்த கணேஷ் அவன் அருகில் வந்து.. சபரிஷின் தோளில் தட்டி.. “எங்க யாரலையும் செய்ய முடியாததை, நீ செஞ்சுருக்கே.. இப்போதான் மனசுக்கு சந்தோசமா இருக்கு.. இந்தப் பொண்ணு எப்போவும் இப்படிச் சிரிச்சிகிட்டே, சந்தோசமா இருக்கனும்.. அது உன் பொறுப்புச் சபரிஷ்” என்றதும் அவரது மனைவி தீபா…

“இனிமேல் அவளை ஏதாவது சொன்னீங்கன்னு நான் கேள்வி பட்டேன், யோசிக்கவே மாட்டேன் ப்ரியாவ, இங்க கூட்டிட்டு வந்துருவேன்.. அவ எங்களுக்குக் குழந்தை மாதிரி..” என்றாள்…

எழில் மூலம், பிரியாவின் வாழ்க்கையில் நடந்ததை அறிந்தவள்….சபரிஷை நினைத்து தன் கோபத்தை அடக்க முடிய வில்லை அவளால்.. ஆனால், தன் தவறை உணர்ந்து ப்ரியாவை தேடி இங்கு வந்து, அவளைப் பழையபடி மாற்றியதால் சபரிஷ் மேல் உள்ள கோபம் சிறிது குறைந்தது..

அவளைப் பார்த்து சிரித்தவன்.. “ நீங்க கவலையே பட வேணாம்.. அவளை இனி நான் என் கண்ணுக்குள் வைச்சுப் பார்த்துப்பேன், ஏன்னா அவதான் என் உயிர்ன்னு புரிஞ்சிகிட்டேன்” என்று சிரிக்க…

“சரி பாஸ் அடுத்து என்ன பிளான்”.. என்றான் எழில்..

அவள் படிப்பு முடிஞ்சதும் என்ற சபரிஷ் தன் வல கையை மேலே தூக்கி பறப்பது போல் செய்தவன்.. இந்தியாக்கு என் சின்னுவோட போகப் போறேன் என்றான்

“சூப்பர் பாஸ், நீங்க இங்க எப்படி வந்தீங்க யாரு உங்களுக்கு ஹெல் பண்ணாங்கன்னு அவ கிட்ட சொல்லிட்டீங்களா என்று எழில் கேக்க..

“ஏன் டாக்டர் உங்களுக்கு இப்போவே அவகிட்ட அடி வாங்கனுமா” என்று விஷமமாகச் சபரிஷ் எழிலிடம் கேக்க..

“போங்க பாஸ் காமெடி பண்ணிக்கிட்டு எனக்குச் சிரிப்பே வரல.. என்னை ஏன் அவ அடிக்கணும்” என்று யோசிக்க அவன் மூலையில் மணி அடிக்க , “அய்யய்யோ.. இங்க உங்களுக்கு ஹெல் பண்ணது நான்ன்னு தெரிஞ்சா பூரி என்னை ஆலு பரோட்டா பண்ணிருவாளே” என்று தன் தலையில் கைவைக்க அதைப் பார்த்து, கணேஷ், மற்றும் சபரிஷ் சிரிக்க.. தீபாவோ..

“வாவ் தேங்க்ஸ்டா எலி.. இன்னைக்கு நைட் டின்னருக்கு என்ன பண்றதுன்னு ஒரே யோசனையா இருந்துது.. இப்போ கவலை விட்டுச்சு.. ஆலு பரோட்டா பண்ண போறேனே” என்று துள்ளி குதித்த படி தீபா வீட்டின் உள்ளே செல்ல..

இதைக் கேட்ட மூவரும் “என்னது.. இதுக்கு நாங்க பிரியா கையாலையே அடி வாங்கிக்குவோமே” என்று

கோரசாகச் சொல்ல

என்னது என்று தீபா இடுப்பில் கை வைத்து முறைக்க..

“ஒன்னும் இல்லடா தீப்ஸ்.. நீ போ உன் சமையல் சூப்பர்ன்னு சொல்லிட்டு இருந்தேன்” என்று கணேஷ் அசடு வழிய….

“ம்ம் அந்தப் பயம் இருக்கனும்… அப்போ உங்களுக்குப் பிடிச்ச தக்காளி பிரியாணியும் சேர்த்து செய்யிறேன்” என்றவள் சென்று விட..

கணேஷ் மீண்டும் ஒருதடவை சபரிஷிடம் ப்ரியா இனி உங்க பொறுப்பு என்று சொல்ல..

அவர் கையைப் பிடித்தவன்.. “கண்டிப்பா சார்.. ஒருதடவை கையில் வர இருந்த பொக்கிஷத்தை, நானே தட்டி விட்டுட்டேன்.. இனி அந்தக் காரியத்தை இந்த ஜென்மத்தில் மட்டும் அல்ல இன்னும் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் தவற விட மாட்டேன்” என்று சொல்ல..

பாஸ் என்று அதிர்ந்து கத்தினான் எழில்..

“என்னாச்சு மாப்பிள்ளை எதுக்குக் கத்தினே” என்று கணேஷ் கேட்க

எழிலோ சபரிஷிடம் ..”பாஸ் உங்களுக்கு ஏன் இந்த விபரீத ஆசை, அடுத்த ஜென்மத்திலும் உங்களுக்கு இந்தப் பூரி தான் வேணுமா” என்று சொல்ல..

சிரித்த சபரிஷ், “இரு என் சின்னு கிட்ட சொல்றேன்” என்று மிரட்ட

“நான் எஸ் கேப்”.. என்று ஓடியே விட்டான்..

நாட்கள் வேகமாக நகர்ந்து.. மாதங்கள் ஆக, அவர்கள் இந்தியா செல்லும் நாளும் வந்தது..

பிரியா படிப்பு முடிந்த மறுநாள் கிளம்புவதாக முடிவு செய்திருந்தான் சபரிஷ்..

சபரிஷ் , ப்ரியா மட்டும் அல்ல.. எழில் குடும்பமும் அவர்களுடன் இந்தியா கிளம்புவதாக முடிவானது.. அதற்குக் காரணமும் இருந்தது.. அது அவர்கள் சென்று இரங்கும் மறுநாள் சபரிஷ் பிரியா நிச்சயதார்த்தம், என்று முடிவு செய்திருந்தார்கள் இரு

குடும்பமும்.. ஆனால் இது ப்ரியாவிற்குத் தெரியாமல் பார்த்துக்கொண்டான் சபரிஷ்..... ஸ்வீட் சர்ப்ரைஸ் ஆக இருக்கட்டுமே என்று நினைத்தான்..

எல்லோரும் இந்தியா செல்ல தான் மட்டும் இங்குத் தனியாக இருப்பதா, தனக்கும் கல்லூரி விடுமுறை ஆதலால் விஷ்வும் இந்தியா கிளம்பிவிட்டாள் தாய் தந்தையைக் காண

பதினெட்டு மணிநேர விமானப் பயணம்...அமெரிக்காவில் இருந்து இந்தியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார்கள்.....

விமானத்தில் சபரிஷின் கையை விடாமல் இறுக்கி பிடித்திருந்தாள் ப்ரியா.....ஏனோ அவளுக்குப் படபடப்பாக இருந்தது.. தன் தாய் தந்தையைப் பார்க்க செல்கிறாள் என்பது அவளுக்குச் சந்தோஷம்தான் என்றாலும்.... சந்துரு , மோகனா வை பார்க்க மிகவும் ஆவலாக இருந்தாள்....

சந்துருவை விமான நிலையத்துக்கு வர சொல்லட்டுமா என்று சபரிஷ் கேட்டதுக்கு "இல்ல வேண்டாம் , நான்தானே அவர்களை விட்டு விலகி போனேன் , இப்போ நானேதான் போய் அவர்களைச் சந்திக்கனும்" என்றுவிட்டாள் ப்ரியா...

மோகனா எப்படி இருப்பா.. சந்துரு என்மேல் கோபப்படுவானோ என்று பலவாறாகச் சபரிஷின் தோளில் சாய்ந்து கொண்டு யோசித்துக் கொண்டிருந்தவள் எழிலை தேட.. அவனோ ஏர் ஹோஸ்டரிடம் கடலை போட்டுக்கொண்டிருந்தான்..

அதைப் பார்த்தவள்.....ஒரு நிமிஷம் ரிஷி என்றுவிட்டு. அங்கே சென்று "டேய் எலி இங்க என்னடா பண்ற".. என்று கேட்க..

அதுவரை தன்னைப் பற்றிச் சிறிது பெருமையாகச் சொல்லிகொண்டிருந்த எழில்...அவள் தன்னை எலி என்றதும் அந்த ஏர்ஹோஸ்டர் எழிலை மேலும் கீழும் பார்த்தாள்... ஏன் என்றால் அவள் தமிழ் ஏர் ஹோஸ்டர்..

ப்ரியாவை முறைத்தவன் .. "பூரி இங்க ன்ன பண்ற... போ உன் ஆளு தனியா இருக்கார் அவர் கூட நீ கடலை போடு" என்று தன் கடலை வறுக்கும் பணியைத் தொடர,

"அவர் என்ன சின்னப் பாப்பா வா.. கூடத் துணைக்குப் போய் இருக்கிறதுக்கு .. நீ இங்க என்ன பண்ணிட்டு

இருக்கே அதுக்குப் பதில் சொல்லு..”

அந்த ஏர் ஹோஸ்டரை பார்த்து ஹி ஹி என்று இளித்தவன்.. ப்ரியாவை இழுத்துக்கொண்டு வந்து சபரிஷின் அருகில் அவளது இருக்கையில் அமரவைத்தவன், அதற்கடுத்த இருக்கையில் தானும் அமர்ந்து … “பூரி நாம இறங்க ரொம்ப நேரம் ஆகும் சோ கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாம்ன்னு நினைசேன் உடனே வந்துட்டியே போ பூரி” என்று சிறு பையன் போல் சிணுங்க..

அவன் கையில் கிள்ளியவள்…..”உனக்கு பேசணும் அவ்வளவு தானே என்றவள்….ஒரு இரண்டு மணிநேரம் போதும் போதும் என்றளவுக்குப் பேசி தள்ளிவிட்டாள் .. தன்னவள் பேச்சை சிரிப்புடன் விரும்பி ரசித்தான் அவளின் ரிஷி…

எழிலோ “பூரி போதும் மீ பாவம் , என்னை விட்டுடு”என்று கெஞ்ச..

“போடா நீ என் பிரெண்ட் இல்ல.. இதுவே என் பக்கியா இருந்தா.. நான் எவ்வளவு நேரம் நான் பேசினாலும் கேட்டுகிட்டே இருப்பான்” என்று பெருமையாகச் சொன்னாள்…

“உண்மையிலே சொல்றேன் பூரி.. சந்துருவுக்குக் கோவில் தான் கட்டனும்.. ஹி இஸ் கிரேட்.. ஆனா எப்படிப் பூரி இவ்வளவு நாள் இப்படி அமைதியா இருந்த” என்று சந்தேகமாகக் கேட்க,

“ஹா ஹா நான் அமைதியா இருந்தேன்னு நீயா நினைச்சா நான் ஒன்னும் பண்ண முடியாது.. நீ பேசும் போதெல்லாம், மனசுக்குள்ளே கவுன்ட்டர் குடுத்துட்டு தான் இருப்பேன்”

.

“அடிப்பாவி அப்போ ஒவ்வொரு தடவையும் என்னை மனசுக்குள்ளே திட்டுனேன்னு சொல்லு” என்று எழில் சொல்லவும்..

அவன் தலையில் குட்டியவள்… யா..யா.. என்று சொன்னவள் சபரிஷின் தோளில் சாய்ந்துகொண்டாள்…

அதைப் பார்த்து எழில்க்கும் சபரிஷுக்கும் மனதுக்கு நிறைவாக இருந்தது..

இன்னும் சிறிது நேரத்தில் இந்த விமானம் திருவனந்தபுரத்தில் தரையிறங்க உள்ளது என்று

ஆங்கிலத்தில் அறிவிப்பு கொடுக்க,

அதைக் கேட்டதும்.. சபரிஷை முறைத்து , “என்ன இது நான் எங்க அப்பா அம்மாவை பார்க்கணும் அவங்களுக்கு உங்களை முதல்ல அறிமுகப் படுத்தனும்.. அப்புறம் எல்லோரும் சேர்ந்து இங்க வரனும்ன்னு நான் சொன்னேனா இல்லையா”..

இதைக் கேட்ட எழில்.. “ஏய் பூரி எந்த இடத்துக்குப் போறோம்ன்னு தெரியாமையா ஃபிளைட்டில் ஏறினே”.. என்று நீ என்ன லூசா என்பது போல் பார்க்க…

“இந்தியா போற சந்தோஷத்தில நான் கவனிக்கல எலி…எல்லாம் ரிஷிதான் பார்த்துகிட்டார்” என்று ப்ரியா சொல்ல…

அவனோ… ப்ரியாவை சமாதான படுத்தவும் .. விமானமும் தரையிரங்கவும் சரியாக இருந்தது….

செக்கிங் எல்லாம் முடிந்து எல்லோரும் வெளியே வரவும், அங்கு..

“மாப்பிள…சாதிச்சிபுட்டீங்க மாப்பிள ….வாழ்த்துக்கள்”

என்று கத்திக்கொண்டே தனது இரு கையையும் சபரிஷை நோக்கி விரித்தபடி வந்தார்... கார்த்திகேயன் ப்ரியாவின் தந்தை.....

“மாமாஆஆஆஆ” என்று அவனும் கத்திக்கொண்டே தனது கையை விரித்தபடி அவரை நோக்கி செல்ல,இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டனர்...

இதையெல்லாம் , கண்கள் விரிய பார்த்துக்கொண்டிருந்தாள். பிரியா..

“எப்படி இருக்கீங்க மாப்பிள,.. ரொம்ப இளச்சிட்டீங்களே , மாப்பிள” , என்று வார்த்தைக்கு வார்த்தை மாப்பிள போட..

“நான் நல்லா இருக்கேன் மாமா , நீங்கதான் இளச்சிட்டீங்க மாமா” என்று இவனும் மாமா போட..

ப்ரியாவோ என்னடா நடக்குது இங்க என்பது போல், விழிபிதுங்கி பார்த்துக்கொண்டிருந்தாள்...

சுவாசம் தொடரும்....

சுவாசம் 34

“அம்மாவும் அப்பாவும் இங்க எப்படி.. ரிஷியை அவங்களுக்கு எப்படித் தெரியும்.. அதுவும் இவ்ளோ நெருக்கமா, மாமா மாப்பிள” என்று யோசித்தவளின் நினைவில்..
“கண்ணம்மா நீ சொல்லு அவனைத் தூக்கிடலமா” என்று அன்று தன்னிடம் கேட்ட தந்தையா இது..என்று புரியாமல் நின்று கொண்டிருந்தாள்…..

ப்ரியாவின் தாயோ தீபாவின் குடும்பத்தைப் பார்த்து நலம் விசாரித்துக் கொண்டிருந்தார்..

கடுப்பான ப்ரியா.. தனது பக்கத்தில் நின்ற எழிலிடம் “டேய் எலி.. இங்க என்னடா நடக்குது” என்று கேட்க..

“எனக்கும் உன்ன மாதிரிதான் ஒன்னும் புரியலை பூரி” என்று வெளியே அவளிடம் சொன்னவன்..
மனதுக்குள்.. “அய்யோ இந்தப் பூரிகிட்ட அடிவாங்குற நாள் தூரத்தில் இல்லை போலவே என்னைத் தொரத்தி தொரத்தி அடிப்பாளே.. கடவுளே என்னை நீதான் பூரிகிட்ட இருந்து காப்பாத்தனும்” என்று ஒரு அவசர வேண்டுதல் வைத்தான் எழில்…

பொறுமை இழந்த ப்ரியா , “ஹலோ மிஸ்டர் கார்த்திக்” என்று கத்தி அழைத்துத் தானும் இங்குதான்இருக்கிறேன் என்று அவருக்கு உணர்த்தினாள்....

“ப்ரியா எத்தனை தடவை சொல்றது இப்படி அப்பாவை பேர் சொல்லி கூப்பிடக்கூடாதுன்னு” என்று எப்பொழுதும் போல் இப்பொழுதும்கண்டித்தார் காயத்ரி..

தன் அன்னையை முறைத்தவள் , “ ஓ...உங்களுக்குஇப்பதான் நான்இருக்கிறது கண்ணுக்கு தெரியுதா.....ஆமா இதுக்கு மட்டும் கரெக்ட்டா வந்திடுங்க.... இங்க ஒருத்தி கிட்ட தட்ட ஒரு வருஷம் கழித்து வராளே.. அவளைக் கொஞ்சுவோம்ன்னு இல்லாம... அங்க என்ன கொஞ்சல் வேண்டி இருக்கு” என்று தந்தையையும் , சபரிஷையும் பார்த்தவள்,

“ஆமா எப்போ இருந்து இந்த மாமா மாப்பிள உறவு”.. என்று சபரிஷையும் தந்தையும் முறைக்க,

கார்த்திகேயனோ தன் மகளைச் சமாதானபடுத்த எண்ணி, அவளை நெருங்க, அவரைத் தடுத்த சபரிஷ்.....”எல்லா விஷயத்தையும் வீட்ல போய்ப் பேசிக்கலாம் மாமா.....அவளுக்கு நான்உண்மையைச்

சொல்லி புரிய வைக்கிறேன்" என்றவன்.....அவளின் அருகில் வந்து...

"சின்னு....உனக்கு எல்லா விஷயத்தையும் விவரமா நாம காரில் போகும் போது சொல்றேன்"..... என்றவன் அனைவரையும்அழைத்துக் கொண்டு,
விமானநிலையத்தின் வெளியே காத்திருந்த தன் இரண்டு வண்டியில், முதல் காரில் தீபாவின் குடும்பம், பிரியாவின் தாய் தந்தையும் அனுப்பி விட,

எழிலும் பிரியாவின் கேள்விகளில் இருந்து தப்பிக்கவும், அவர்களுக்குத் தனிமை கொடுக்கவும் எண்ணி முதல் காரிலே சென்றுவிட....

தன் ஜாக்குவாரில் தானே ட்ரைவிங் செய்தபடி அவள் தந்தையைச் சந்தித்த தினத்தைப் பற்றிக் கூற ஆரம்பித்தான்....

"அன்றைக்குச் சந்துரு என்கிட்டே பேபி இங்க வராம நான் உங்ககிட்ட பேசமாட்டேன் என்று சொல்லி சென்றவுடன்..
உடனே அறையை விட்டு வெளியே வந்தவன் வேகமாகத் தனது ஜாக்குவரை கிளப்பி, பண்ணைக்கு வந்தான் , அங்குச் சைலேஷ் கண்ணில் கூலிங்கிளாசுடன் ஸ்டைலாக அமர்ந்திருப்பதைக்

கண்டவன்…

கோபம் தலைக்கேற.. வேகமாக அவன் அருகில் சென்று அவனை எட்டி உதைக்கச் சபரிஷின் உதையை எதிர்பார்க்காத சைலேஷ் அம்மா என்ற அலறலுடன் தூர போய் விழுந்தான்…

அங்கு நின்றிருந்த சித்தன் , சபரிஷிடம் “அய்யா இவனை என்ன பண்ணனும் சொல்லுங்க நான் பார்த்துகிறேன்” என்று சொன்னான்..
ஏனோ.. காலையில் இவன் வந்து போனதற்கும் , அதன் பின் பிரியா அழுததற்கும்….பின் இவனைத் தூக்க சொல்லியதில் இருந்து…. இவனுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கு அதான் அய்யா இவனைத் தூக்க சொல்லிருக்கங்க என்று நினைத்தவன்.. “சொல்லுங்க அய்யா இவனை நான் கவனிக்கிற விதத்துல கவனிக்கிறேன்” என்று சபரிஷின் உத்தரவுக்காகக் காத்திருந்தான் சித்தன்…

“இல்ல சித்தா இவனை நான்தான் கவனிக்கணும்” என்றவன் சைலேஷின் அருகே சென்று அவனது தலை முடியை பற்றித் தூக்கி.. அவனது வலது கையைப் பிடித்துத் திருகி.. இந்தக் கைதானே என் ரியாவை அடிச்சது”.. என்று மேலும் திருக

“ஆஆஆஆ ஆஆஆ ஆஆஆ சார் சார் சார் என்னை விட்டுருங்க இனி பிரியா இருக்கிற பக்கமே வரமாட்டேன்.. அவ என்னை எல்லோர் முன்னாடியும் என்னை அடிச்சதுக்குதான் அப்படிப் பண்ணுனேன்” என்றதும் தான் தாமதம்.. தன் பலம் மொத்தத்தையும் தன் கையில் கொண்டு வந்து ஓங்கி சைலேஷ் கன்னத்தில் அறைந்தான் சபரிஷ்..
அவனின்இடி போன்ற அறையில் சுருண்டு விழுந்தான் அவன்...

அவன் அருகில் சென்றவன்.. அவனது கழுத்தில் தனது காலை வைத்து அழுத்தி.. “ஒரு பொண்ணு கைய பிடிச்சி நீ இழுப்ப அதைப் பார்த்து உன்ன அடிக்காம, கொஞ்சவா செய்வாங்க, அதுவும் இல்லாம , அவளுக்குத் தெரியாம போதை மருந்து கலந்து கொடுத்து , போட்டோ எடுத்து அதை அவளுக்கு அனுப்பி, அவ உயிரோட விளையாடினது மட்டும் இல்லாம, அவ என்னை விரும்புறதை தெரிஞ்சிக்கிட்டு, என்கிட்டயே வந்து நடிச்சிருக்க.. உன்னை என்ன செஞ்சா தகும் டா” என்று மேலும் தன் காலை அழுத்த.. வலியால் துடித்தான் சைலேஷ்..

சபரிஷ் சித்தா என்று அழைத்துத் தனது வலது கையை நீட்ட.. அதில் பச்சை கரும்பு வைக்கப்பட்டது..

அந்தக் கரும்பு பிய்யப் பிய்ய , சைலேஷை அடித்து நொறுக்கி விட்டான்..

பியிந்த கரும்பை.. தூக்கி எரிந்தவன், “சித்தா இந்த நாய்.. இந்த ஊரைவிட்டு மட்டும் இல்ல, இந்தப் பண்ணையை விட்டுக்கூட வெளியே போகக் கூடாது.. இவனை என்ன செய்வியோ ஏது செய்வியோ எனக்குத் தெரியாது…….என் ரியா வந்து என்ன சொல்றாளோ அதன் பிறகுதான் இவனுக்கு விடுதலை” என்றவன்..
வெளியே சென்று தனது காரை கிளப்பிப் பாதித் தூரம் வந்தவன் காரை ஓரமாக நிறுத்தி பின்னால் சாய்ந்து கண் மூடினான்..

“சின்னு அவன் பண்ண தப்புக்கு நான் தண்டனை கொடுத்துட்டேன்….ஆனால் உன் மனசை வார்த்தைகளால் கொன்ன எனக்கு நீ தான தண்டனை தரணும் சின்னு.. உன்னைத் தேடி வரேன் சீக்கிரமே வரேன் சின்னு” என்றவன் காரை கிளப்பித் தன் அரண்மனையை நோக்கி சென்றான்…..

அரண்மனையின் உள்ளே வந்தவன் காரை நிறுத்தி.. வீட்டின் உள்ளே வர அங்கு விசாலாட்சி ஆச்சியும் , அன்னை மற்றும் அவன் சித்தி பிரபா இருப்பதைக் கண்டவன், அங்குச் சென்று பொதுவாக “நான் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசனும்…அதுக்கு முன்னாடி அத்தை மாமா எங்கம்மா,

சந்துரு மோகனா ??" என்று கேள்வியுடன் நிறுத்த

"என்ன விஷயம் ராசு....அவங்க ரெண்டு பேரும் மாமா ஊருக்கு போயிருக்காங்க பா.. வர கொஞ்சம் நேரம் ஆகும்.. சந்துரு அவன் ரூம்லதான் இருக்கான்..... ப்ரியாவை அவங்க அப்பா வந்து கூட்டிட்டு போனதுல மோகனாவும் அழுதிட்டே இருந்தா...என்ன கேட்டும் பதில் சொல்லவே இல்ல.....அவளும் இப்போதான் ரூம்க்கு போனாபா என்று சொன்னவர்.....என்ன விஷயம் பேசணும் ராசு சொல்லுப்பா" என்று கனிவுடன் கேட்க,

அன்னையின் கையைப் பிடித்தவன்
"எப்போ நீ கல்யாணம் பண்ணி எனக்கு ஒரு மருமகளைக் கூட்டிட்டு வரப்போறே என்று கேட்டுட்டே இருப்பிங்களே மா...
அதான் உங்களுக்கு ஒரு மருமகளைக் கூட்டுட்டு வரலாம்னு இருக்கேன்.. என்று மகன் சொல்லி முடிக்கவில்லை உடனே லட்சுமி..

"ராசு உண்மையா வா சொல்ற"என்று ஆசையாகக் கேட்க

ஆச்சியோ ஒரு படி மேலே போய்..."யாரு ராசு எனக்குப் பேத்தியா வர போறா.. சொல்லு ராசு" என்று

கேட்க, பிரபாவும் அதே கேள்வியைக் கண்ணில் தேக்கி கேட்க,

“ஆமாம்மா….எல்லாம் உங்களுக்குத் தெரிஞ்ச பொண்ணு தான் அதுவும் இல்லாம உங்களுக்குப் பிடிச்ச பொண்ணும்கூட” என்று புதிர் போட,

இன்னும் ஆர்வமாக “யாருன்னு சொல்லு சபரிஷ்” என்று பிரபா.. கேட்க…

“அது சஸ்பென்ஸ், இப்போ நான் வெளியூர் கிளம்புறேன்… சீக்கிரம் வந்து அது யார்ன்னு உங்களுக்குச் சொல்றேன்” என்றவன், தன் அறைக்கு விரைந்து முப்பது நிமிடத்தில் தயாராகிக் கீழே வந்தவன் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பிவிட்டான் மும்பைக்கு விமானத்தில்

மும்பை வந்து இறங்கிய சபரிஷ்…..ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கினான்.. மறுநாள் ப்ரியாவின் தந்தையைச் சந்திக்க அவரின் கார் ஷோரூம்க்குச் சென்றான்..

“பிரியங்கா மோட்டார்ஸ்” என்ற மிகப்பெரிய பிரம்மாண்ட கார் ஷோரூம்…..அவனை இனிதே வரவேற்றது..

அங்கு ரிசப்ஷனில் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டவன் , “மிஸ்டர் கார்த்திகேயன் அவரை நான் பார்க்கணும்” என்று சொல்ல..

அங்கு இருந்த ரிசப்ஷனிஸ்ட் அவனிடம்.. “டூ யு ஹேவ் அன் அப்பாய்ன்மெண்ட் சர்??” என்று கேட்க..

“நோ ஐ டோன்ட் ஹேவ் எனி அப்பாய்ண்ட்மெண்ட் மிஸ்”.. என்று சொல்ல..

“ஜஸ்ட் எச் செகண்ட் சார்” என்றவள்.. போனில் எம்.டிக்கு அழைத்து விவரம் தெரிவிக்க , அதற்குப் பதில் என்ன சொல்ல பட்டதோ..

சபரிஷிடம்.. ஒரு வழியைக் காட்டி..” யு கேன் கோ ரைட் சைடு சார்” என்று சொல்ல..

தேங்க்ஸ் என்று அவளிடம் சொல்லிவிட்டு , அவள் சொன்ன வழியில் செல்ல அங்கு ஒரு கதவில்..”கார்த்திகேயன் எம்.டி” என்ற எழுத்துப் பொரித்த பலகை மாட்டப்பட்டிருப்பதைக் கண்டவன் மெதுவாகக் கதவை தட்ட..

உள்ளே இருந்து கமின் என்ற குரல் கேட்க.....உள்ளே

சென்ற சபரிஷ் , அங்கு அமர்ந்திருந்தவரை பார்த்து.. “ஐ அம் சபரிஷ், ஃபிரம் தமிழ் நாடு.. சந்துருவோட அண்ணன்” என்று தன் கம்பீரக் குரலில் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டான்..

அந்தக் குரலில் இருந்த கம்பீரம் கார்த்திகேயனை ஈர்த்தது… அதுவும் இல்லாமல் , சந்துருவின் அண்ணன் என்றதும்,

“எஸ் பிளீஸ் பீ சீட்டெட்” என்று அவனை அமர சொன்னவர்.. “சொல்லுங்க என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்துருக்கீங்க”

“என் சின்னுவை என்கூடக் கூட்டிட்டு போக வந்துருக்கேன்” என்றான் தைரியமான குரலில்..

“சின்னுவா யாரது அப்படி யாரும் இங்கு வேலை செய்யலையே” என்று தாடையைத் தடவி யோசிக்க

“நான் சின்னுன்னு சொன்னது.. உங்க பொண்ணு ப்ரியங்கா தேவிய” என்றான் சற்றும் அலட்டிக் கொள்ளாமல்….

“வாட் , என்ன சொல்றீங்க மிஸ்டர் சபரிஷ் என்று

கோபத்துடன் கேட்டார்.

தன் மகளைக் குற்றுயிராக இங்க அழைத்து வந்து இரண்டு நாள் ஆகி விட்டது.....அவளின் இந்த நிலைமைக்குக் காரணமான, அந்தச் சைலேஷ் காணாமல் தனது ஆட்களை விட்டு தேடிக்கொண்டுதான் இருக்கார்....அவனைக்கண்டால் கொன்றுவிடும் ஆத்திரத்தில் இருந்தார் அவர்....

இந்நிலையில் தன்மகளைக் கூட்டி கொண்டு போக வந்திருப்பதாகச் சபரிஷ் சொன்னதும், முதலில் புரியாமல் விழித்தவர்...பின் கோபத்துடன் அவனிடம் விளக்கம் கேட்டார்.....

“ நீங்க என்ன சொல்ல வரீங்கன்னு எனக்குப் புரியலை மிஸ்டர் சபரிஷ்” என்று கேள்வியுடன் பார்க்க

“புரியும் படியாவே சொல்றேன்” என்றவன் ஒரு விஷயம் விடாமல் சொன்னான்..

அவன் சொல்ல சொல்ல கேட்டுக்கொண்டிருந்தவர் “ அப்ப என் பொண்ணோட இந்த நிலைமைக்கு நீங்களும் ஒரு காரணம் அப்படித்தானே” என்று

அடக்கப்பட்ட கோபத்துடன் கேட்டார்..

அவரின் கேள்வியில்....சபரிஷ் சிறிது நேரம் அமைதியாக இருந்தான்...

அவனின் அமைதியை கண்டவர், "நீங்க கிளம்பலாம்.... சந்துருவோட அண்ணன் என்பதால்தான் நான் இந்தளவுக்குப் பொறுமையா பேசிட்டு இருக்கேன்.. இல்ல என் பதிலே வேற மாதிரி இருக்கும்....என் பொண்ணைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்....அவ எங்க வீட்டு இளவரசி.... அவ குமரியா இருந்தாலும் குணத்தால குழந்தை குணம் கொண்டவ.... அவளைப் போய்ச் சந்தேகபட்டு என்ன வார்த்தை சொல்லியிருக்கீங்க..... எப்படி உங்களுக்கு அப்படிப் பேச மனசு வந்தது....உங்களுக்குப் பிடிக்கலைன்னா எடுத்து சொல்லி புரிய வச்சிருக்கனும்.... என் பொண்ணைச் சந்தேகப்பட உங்களுக்கு என்ன உரிமை இருக்கு.. பேசுறதெல்லாம் பேசிட்டு , இப்போ வந்து நான் காதலை உணர்ந்துட்டேன்.... என்னை மன்னிச்சிருங்கன்னு கேட்க என்கிட்ட வந்துருக்கீங்க அப்படித்தானே.. நான் உங்களை மன்னிக்கத் தயாரா இல்ல மிஸ்டர் சபரிஷ்.. நீங்க கிளம்பலாம்" என்பது போல் வாசலை கை காட்ட.. அவனோ.. அவரைத் தீர்க்கமாகப் பார்த்து..

"நான் எதுக்கு உங்க கிட்ட மன்னிப்பு கேட்கனும்"

என்றவன்
“என் சின்னு என்னை மன்னிச்சா போதும்....அவ என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக்கொள்வேன்” என்ற அவனது பதிலில் என் சின்னு என்னை மன்னிப்பாள் என்ற உறுதி இருந்தது... அதில் அவனது காதலும் தெரிந்தது..

அவனை முறைத்தவர் “ஒருவேளை அவள் உங்களை மன்னிக்க வில்லை என்றால்”

“என்னால் என் சின்னுவை மாற்ற முடியும்” என்றான் உறுதியுடன்...

“ஒருவேளை அவ மனசு மாறி உங்கள ஏத்துகிட்டாலும், அவ எங்க சம்மதம் இல்லாம உங்கள கல்யாணம் பண்ணிக்க மாட்டா.....ஒரு வேளை நாங்க உங்க கல்யாணத்துக்குச் சம்மதிக்கலன்னா நீங்க என்ன பண்ணுவீங்க மிஸ்டர் சபரிஷ்” என்று தன் மகளின் மேல்உள்ள நம்பிக்கையில் சற்று கர்வமாகவே வந்து விழுந்தன வார்த்தைகள் அவரிடமிருந்து.....

ஒரு நிமிடம் தாமதித்தவன், பின் ஒரு முடிவுடன்....” என் சின்னு எல்லாரையும் சந்தோஷமா வச்சிக்கனும்தான் ஆசைபடுவா....ஒருவேளை

அவளுக்கு உங்க சம்மதம் கிடைக்கலன்னா…உங்கள
மீறி அவ வர மாட்டா…..நானும் அதை விரும்ப
மாட்டேன்….அதை சமயம் என்ன தவிர உங்க
பொண்ணு யாரையும் கல்யாணம் பண்ணிக்கவும்
மாட்டா…..சோ உங்க பொண்ணு வாழ்க்கை உங்க
கையில்” என்று தெளிவாக அதே சமயம்
அழுத்தத்துடன் வந்தன வார்த்தைகள்
அவனிடமிருந்து….

அவனின் பதிலில் அசந்துதான் போனார்
கார்த்திகேயன்…..இதற்கு அவரால்என்ன பதில் சொல்ல
முடியும்….தான் அடித்த பந்தை தனக்கே திருப்பி
அடித்து விட்டானே…சாமர்த்தியசாலிதான்…..

தன்னைப் போலவே அவனும் இருப்பதை
நினைத்தவர் மனதில்…தன் மகளின் துயரம் கூடப்
பின்னுக்குத் தள்ளபட, மகளுக்கு இவனை விடச்
சரியான ஜோடி கிடையாது என்று நினைக்க
ஆரம்பித்துவிட்டார்……இருந்தாலும் அதைத்
தெளிவுபடுத்திக் கொள்ள…அவனிடம்

“ இங்க பாருங்க சபரிஷ் இப்போ ப்ரியா இந்த
நிலைமையில இருக்கிறதுக்கு நீங்க தான்
காரணம்ன்னு நினைச்சு அவ மேல உள்ள சிம்பதியில
கூட உங்களுக்கு அவ மேல காதல் வந்திருக்கலாம்

இல்லையா”

நிச்சயமாக இல்லை என்றவன் தான் எப்பொழுது எப்படித் தன் காதலை உணர்ந்தோம் என்பதையும் அவரிடத்தில் கூறி…”நான் என் சின்னுவ பார்க்கனும்….இனி எதுன்னாலும் அவகிட்ட நான் நேரடியா பேசிக்கறேன்” என்றான்..

அவனது பேச்சை கேட்டவருக்கு ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது.. “ நான் யாருக்கும் வளைந்து கொடுக்க மாட்டேன், அப்படி வளைந்தால் அது அவனின் சின்னுவிடம் மட்டுமே” என்பது போல் இருந்தது அவனின் பேச்சு

“அதற்கு நான் மறுத்தால்..”என்று அவனை ஆழம் பார்க்க

“என் சின்னுவின் அப்பா என்பதால் மட்டுமே உங்களுக்கு மரியாதை கொடுத்து உங்களைப் பார்க்க வந்தேன்.. இல்லன்னா…அவகிட்தான் இந்நேரம் நான் பேசிட்டு இருந்திருப்பேன்” என்றவனது தைரியம் பிடித்தது கார்த்திகேயனுக்கு

பின் ஒரு முடிவு எடுத்தவர், அவனைப்

பார்த்து……”இப்போ அவளைப் பார்க்க முடியாது.. அவ மனசு ரொம்பக் காயப் பட்டிருக்கு.. கொஞ்ச நாள் போகட்டும்.. அவ மனசு மாறக் கொஞ்சம் டைம் வேணும்… அதுக்கு அப்புறம் அவ மனசுல என்ன இருக்குன்னு கேட்போம்.. ஏன்னா இன்னொரு தடவை இப்படி நடந்தால் என் பொண்ணு எனக்கு இல்லாம போயிடுவா.. எனக்கு என் பொண்ணு வேணும்..” உறுதியாகச் சொன்னார் கார்த்திகேயன்..

ஒரு தந்தையாக அவரின் மனம் புரிந்தது சபரிஷ்க்கு.. பின் அவனும் ஒரு முடிவுடன் நிமிர்ந்து அமர்ந்தவன் அவரிடம், “சரி நான் கொஞ்சநாள் அவளைவிட்டு விலகி இருக்கேன்.. அது எவ்வளவு நாள்ன்னு நீங்களே சொல்லுங்க…..என் சின்னுவை காயப்படுத்தினத்துக்கு எனக்குத் தண்டனையா அதை ஏத்துக்கறேன்…..ஆனால் நீங்க சொன்ன கெடு முடிஞ்ச அடுத்த நாள்..அடுத்த நிமிஷம் நான் என் சின்னு முன்னாடி இருப்பேன்..அதை யாராலையும் தடுக்க முடியாது…என்னை கட்டுபடுத்தவும் முடியாது” என்று தீர்மானமாகச் சொல்ல

“ஒரு வருஷம் விலகி இருங்க, எதுக்கு இந்தக் காலகெடுன்னா…..என் பொண்ண பத்தி எனக்கு நல்லாவே தெரியும்….ரொம்பப் பிடிவாதம் அதிகம்……உடனே பேசுனா..இந்த ஜென்மத்துக்கும் உங்களதிரும்பி பார்க்க மாட்டா……கொஞ்சம் கால

அவகாசம் கொடுத்தா....அவளும் இந்தச் சம்பவதுல இருந்து வெளியே வந்து....தெளிவான மனநிலையில இருப்பா.... அதுக்கு அப்புறம் மற்ற விஷயம் பேசலாம்" என்றவர் மூளையில் தீடீரென்று மணியடிக்க

"மிஸ்டர் சபரிஷ் அந்தச் சைலேஷ் உங்க கஸ்டடியிலதான் இருக்கானா" என்று கேட்க.....

அவரைப் பார்த்து சிறு புன்னகையை உதிர்த்துவிட்டு, வேறு எதுவும் சொல்லாமல், அவரின் வார்த்தைக்குக் கட்டுபட்டு விலகி சென்று விட்டான்.....

விட்டில் அவன் தாய், சித்தி பிரபா மற்றும் விசாலாட்சி...அவர்கள் ஆர்மவாகக் கேட்டதற்க்கும்....ஒரு வருடம் காத்திருக்குமாறு சொல்ல.....
முதலில் அவன் பதிலில் ஏமாற்றம் அடைந்தாலும், தன் மகன் இந்த அளவுக்கு இறங்கி வந்ததே பெரிது...அதுவும் காதலில் விழுந்ததை நினைத்து ஆச்சர்யமாக இருக்க, தன் மகன் சொன்னதைச் செய்வான் என்ற நம்பிக்கையில்.... தன் மகனின் மனதில் இடம் பிடித்த அந்த முகமறியா மருமகளுக்காகக் காத்திருந்தார்.....

பிரியா சென்ற அடுத்த இரண்டாவது நாள் சந்துருவும் மும்பை சென்றுவிட...அண்ணணன் தம்பி இருவரின்

மனகசப்பும் வீட்டினர் அனைவருக்கும் தெரியாமல் போனது.....

ஒரு மாதம் கழித்து ப்ரியாவின் தந்தையிடம் இருந்து மொபைலில் அவனுக்கு அழைப்பு வர அதை எடுத்துப் பேசியவனிடம் “பிரியா வெளிநாட்டுக்கு போக விரும்புறா, இங்க இருந்தா உங்க நியாபகம் வருதாம்” என்று சொல்ல,

ஒரு வினாடி கண் மூடி திறந்தவன், “சரி அனுப்பி வைங்க” என்று சொல்லிவிட்டு வைத்து விட்டான்..

ஐந்து மாதம் கழித்து விமானநிலையத்தில் அமர்ந்திருந்த ப்ரியாவை தூரத்தில் ஒரு தூணின் மறைவில் இருந்து அவளின் மதி முகத்தைத் தனது மனதில் பதித்துக் கொண்டான் சபரிஷ்...

புறப்படுவதற்கான அறிவிப்பு வரவும் எழுந்த ப்ரியா அன்னையிடம் சொல்லிக்கொண்டு கிளம்பியவள் திடீரென்று நின்று சுற்றி முற்றி பார்க்க தன்னை மறைத்துக்கொண்டான்.. தன்னவள் தன் இருப்பை உணர்கிறாள் என்பதில் அவன் மனது மிகவும் சந்தோஷமாக இருந்தது.....

“இன்னும்ஆறு மாதம் தான் சின்னு…..உன்னை பார்க்க மாமன் பறந்து வருவேன் பாரு”.. என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்..

அதன் பிறகு ஆறுமாதம் கழித்து, திடீரென்று ஒரு நாள் தன்குடும்ப உறுப்பினர் அனைவரிடமும், தான் பிரியாவை காதலிப்பதாகச் சொல்ல, அதைக் கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர்…..லட்சுமி அம்மாள் சந்தோஷத்தின் உச்சிக்கே சென்றார்….ஏனென்றால் பிரியாவையும் மோகனாவையும் தன் மருமகளாக நினைத்து பார்த்தவரின் மனது ஆனந்தம் அடைந்தது…. ஆனால் அதில் ஒரு சிக்கல் என்று சொல்லி, தான் நடந்து கொண்ட முறையும் கூறியவன், தவறாமல்…. அவள்தான் தன் வாழ்க்கை துணை, அவள் மனது மாறும் வரை காத்திருப்பேன்…அதே சமயம் அவளில்லாமல் தான் திரும்ப வரமாட்டேன் என்று உறுதியாகக் கூறிவிட

குடும்ப உறுப்பினர் அனைவரும் அவர்கள் ஒன்று சேர இறைவனைப் பிராத்தித்தார்கள்……மேகாவும் தனக்குப் பிடித்தவர்களே தனக்கு அண்ணியாக வருவதை எண்ணி அவளும் அவர்கள் ஒன்று சேர…இறைவனிடம் வேண்டினாள்…..

இப்படியாக ஒரு குடும்பமே பிரியாவின்

மனமாற்றத்திற்காகக் காத்திருக்க, சபரிஷும், தன் கம்பெனி பொறுப்புகளை எல்லாம் ராஜேஷிடம், மற்றும் சில நம்பகமானவர்களிடம் பார்த்துக்கச் சொல்லி ஒப்படைத்துவிட்டு… மும்பை சென்று முதலில் தன் தம்பி சந்துருவை அவன் தங்கி இருக்கும் வீட்டில் சென்று சந்தித்தான்…….

காலையில் கல்லூரிக்கு அவசரமாகக் கிளம்பிக் கொண்டிருந்தவன்…. காலிங் பெல் சத்தம் கேட்டு கதவை திறக்க, தன்எதிரே தன் அண்ணனை கண்டவனின் மனதில் சந்தோஷம் எழுந்தாலும், அதைக் காட்டிக் கொள்ளாது, ஒன்றும் பேசாமல் , அவன் உள்ளே வர வழிவிட்டு நின்றான்……..

சபரிஷும் சந்துருவின்.. உற்சாக வரவேற்ப்பை எதிர்பார்க்காததால், அமைதியாக உள்ளே சென்றான்….கிட்சனுக்குள் சென்று தன் அண்ணனுக்குக் காப்பிக் கலந்து வந்து அவனிடம் கொடுக்க, மறுப்பேதும் கூறாமல் அதைக் குடித்தான்……

அதன்பின், இருவரும் என்ன பேசுவது என்று தெரியாமல், சில நிமிடங்கள் கழிய, அந்த மௌனத்தைச் சபரிஷே கலைத்தான்

“நான் நாளைக்கு யூஸ் போறேன்…நான் இழந்த என் உயிரை தேடி……நான் திரும்பி வர எவ்வளவு நாள்

ஆகும்ன்னு தெரியாது…அதுனால எல்லாக் கம்பெனி பொறுப்புகளையும் நம்பிக்கையான ஆளுங்ககிட்ட பிரிச்சி கொடுத்துட்டேன்…..உனக்கு இன்னும் படிப்பு முடியாததால….அப்பப்ப போய் மேற்பார்வை பார்த்துக்கோ” என்றவன் சந்துருவின் முகத்தைப் பார்க்க,

அவனும் தன் அண்ணனைதான் பார்த்துக் கொண்டிருந்தான்…. அவனிடமிருந்து பதில் வரும் என்று எதிர்பார்த்தவன், அவன் பேசாததால் பெருமூச்சை ஒன்றை வெளியிட்டு” சரி நான் கிளம்புறேன்” என்றவன் கதவின் அருகே சென்று, பின் திரும்பி சந்துருவை பார்த்து……” நான் மனசரிஞ்சி அந்த வார்த்தையை அவகிட்ட சொல்லலடா…..அவ எனக்கில்லன்ற கோபம் என் கண்ணை மட்டும் இல்லாம என் அறிவையும் சேர்த்து மறைச்சிருச்சு….அதனால நான் இழந்தது ஏராளம்……..

என் சின்னுவோட காதல்…என் தம்பியோட பாசம்…. அதைத் திரும்பக் கொண்டு வர வரைக்கும் நான் ஓய மாட்டேன்……

நான் திரும்பி வந்தா உன் பேபியோடதான் வருவேன்” என்றவன் நில்லாமல் சென்று விட்டான்…….

தன் அண்ணன் பேச பேச கண்கலங்கி நின்ற சந்துரு, அவன் சென்றதும்…. “ எனக்கு உங்கள பத்தி நல்லா

தெரியும் அண்ணா.....நீங்க பிஸினஸை பார்த்துக்கச் சொல்லியா இங்க வந்தீங்க.....என்னை பார்க்கதான் வந்தீங்கன்னு எனக்குத் தெரியும் அண்ணா.....அதே சமயம் என் பேபிக்கு உங்கள விட்டா நல்ல துணை கிடைக்காதுன்னா.....நீங்களும் அவ மேல எவ்வளவு காதல் வைச்சிருக்கீங்கன்னு....அன்னைக்கு அவளைக் காணாம கலங்கி நின்னீங்க பாருங்க அப்பவே எனக்குப் புரிஞ்சிடுச்சு அண்ணா.....அதை நீங்களும் புரிஞ்சிக்கனும்தான்.....நானும் விலகி வந்தேன்....என்னால உங்கள என்னைக்குமே வெறுக்க முடியாதுன்னா.....எல்லாவற்றிலும் வெற்றிக் கொடி நாட்டி ஜெயிக்கிற என் அண்ணன் அவர் வாழ்க்கை விஷயத்துல தோத்ததா இருக்கக் கூடாது....எனக்கு தெரியும் நீங்க என் பேபி மனச மாத்தி உங்க காதலை அவளுக்குப் புரிய வச்சு இங்க கூட்டிட்டு வருவீங்கன்னு.....அந்த நாளைத்தான் நானும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்" என்று மனதுக்குள் தன் அண்ணனிடம் பேசினான்....

சபரிஷ்அடுத்து சென்ற இடம்.....கார்த்திகேயனின் வீடு.....தான் கெடு வைத்த அடுத்த நாள் தன் எதிரே வந்து நின்றவனைக் கண்ட கார்த்திகேயன்...அவனின் காதலில் சற்று திகைத்துத்தான் போனார்.....அவனை வரவேற்று உள்ளே அமர வைத்தவர்...தன் மனைவி காயத்ரியை அழைத்து...சபரிஷை அறிமுகபடுத்தினார்.....

ஏற்கனவே தன் மகளின் இந்த நிலைக்கு இவன்தான் காரணம் என்று கணவன் மூலம் அறிந்தாலும், அவனின் காதலையும், மகளின் காதலையும் எடுத்துச் சொல்லி புரியவைத்ததால், மகளுக்காகச் சபரிஷை பாராமலே ஏற்றுக் கொண்டவர்.....இப்பொழுது அவனைக் கண்டதும், தன் மகள் சரியான துணையைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறாள்... என்று அவனின் தோற்றத்தையும் கம்பீரத்தையும் கண்டு ஆனந்தம் அடைந்து, அவரும் தன் சம்மதத்தைச் சொல்ல.....
இருவரின் அனுமதியுடன் யு எஸ் வந்து.... அவளின் மனவருத்தத்தைத் தன் காதலால் மாற்றி இதோ திரும்ப இந்தியாவிற்கே அழைத்தும் வந்து விட்டான்....

“அப்போ பிளான் பண்ணிதான் நீங்க யு எஸ் வந்திங்களா...இதுல எங்க அப்பாவும் கூட்டா.....எல்லாம் கூட்டுகளவானிங்க.....இந்த அழகுல....அவர் என்கிட்ட உங்கள தூக்கிடவான்னு என்கிட்ட கேட்டுஎன்ன ஆழம்பார்த்துருக்கார்....நானும் அதைப் புரிஞ்சிக்காம பேக்கு மாதிரி அவர்கிட்ட பேசியிருக்கேன்.....இருங்க அவருக்கு இருக்கு வீட்டுக்கு போய் அவரை என்ன பண்றேன்னு பாருங்க” என்று சொல்லவும், வீடு வரவும் சரியாக இருந்தது.....

காரில்இருந்து இறங்கி...அவளது அருகில் சென்றவன்..

“அது வந்து சின்னு” என்று ஏதோ சொல்ல வர….அவனைக் கைநீட்டி தடுத்தவள்…….

“ நீங்க ஒன்னும் சொல்ல வேண்டாம்.. எங்க அப்பாகிட்ட உங்களை எப்படி அறிமுகப் படுத்துறதுன்னு.. யோசிச்சிட்டே வந்தேன்.. பட் இப்போ எனக்குஎந்த கவலையும் இல்ல…. நான் ரொம்பச் சந்தோஷமா இருக்கேன்……என்றவள்.. அங்குத் தனக்கு முன்வந்து நின்றிருந்த தன் அன்னையைக் கண்டு ஓடிச்சென்று கட்டிக்கொண்டாள் அம்மா சாரிம்மா, ஏ என்று ப்ரியா சொல்ல…

தன் மகளின் முகத்தில் இருந்த பூரிப்பை கண்டவர், சந்தோஷத்தில் கண்கள் கலங்க

அதைப் பார்த்த ப்ரியா.. “ஏன் காயு இப்போ எதுக்குக் கண்கலங்குற , ஒரு வருஷம் ரெண்டு பேரும் தனியா டூயட் பாடிட்டு இருந்திங்க. இப்போ நான் வேற வந்துட்டேன் , சோ நீ அப்பாகூடத் தனியா டூயட் பாட முடியாது என்ற கவலையில கண்கலங்கிறியா” என்று சோகமான முகத்துடன் கேட்க..

“அடி கழுத.. என்ன பேச்சு பேசுர.. என்று ப்ரியாவை அடிக்கக் கை ஓங்க…அதை கண்டு பிரியா ஓட.. எல்லோருக்கும் சந்தோசம் ப்ரியாவை இப்படிக் காண….

சுவாசம் தொடரும்...

சுவாசம் 35

"உன் வரவை என் விழிகள் உணரும் முன்னே
"என் இதயம் உணர்ந்தடி பெண்ணே!
"உன் முன்னுரையை அறியும் முன்னே
"உன் முடிவுரையை அறிந்தேன் பெண்ணே!!
"என்னனவள் நீ தான் என்று!!!...

தன் அன்னையின் அடியில் இருந்து தப்பித்தவள், தன் தந்தையின்அருகே சென்று "கார்த்திக் என்னை உங்க மனைவிகிட்ட இருந்து காப்பாத்துங்க " என்றபடி அவர் முன் சென்று நின்று கொள்ள,

தன் மகளின் பழைய கலகலப்பு திரும்பிவிட்டதைக் கண்டு மகிழ்ந்தவர், அவளைத் தன் தோளோடு சேர்த்து அணைத்து," கண்ணம்மா இப்ப உனக்குச் சந்தோஷமா...இந்த அப்பா மேல கோபம் இல்லையே" என்று கேட்டவரின் கண்களும் கலங்கி இருந்தது.....

அதைக் கண்டவள்...”அப்பா நான் ரொம்ப ரொம்பச் சந்தோஷமா இருக்கேன்...ஐ லவ் யூ கார்த்திக்” என்றதும்.....சபரிஷ் அவளை முறைக்க,

அதைக் கண்ட கார்த்திகேயன்....” கண்ணம்மா மாப்பிள்ளை என்னைக் கண்ணாலேயே பொசுக்கிடுவார் போல இருக்கு....அங்க பார்” என்று சொல்ல,

அவளும் அவனைத் திரும்பி பார்க்க, அவன் முகத்தில் ஏக்கத்தைக் கண்டதும், என்னவென்று சட்டென்று விளங்க , அவனைப் பார்த்து கண்ணடித்தாள்.....

அதைக் கண்டு முகம் மலர்ந்தவன், “அடிப்பாவி...எல்லாரும் இருக்கும் போது கண்ணடிக்கிறாளே...இருடி தனியா மாட்டுவே இல்ல அப்ப கவனிச்சிக்கிறேன் உன்னை” என்று அவனும் கண்களால் பேச

அவனின் மனதை சரியாகக் கணித்தவள் ...அவனைப் பார்த்து அழகு காட்டிவிட்டு, தன் தந்தையிடமிருந்து விலகி,...” ஆமா உங்ககிட்ட ஒன்னு கேட்கனும் என்று நினைச்சிருந்தேன்.....நீங்க எப்போதிலிருந்து நடிகர் கார்த்திக்கா மாறுனீங்க.....என்ன நடிப்புடா சாமி....என்கிட்டேயே அவரைத் தூக்கிடவான்னு

கேட்டு என்னை ஆழம் பார்த்து இருக்கீங்க.....கூட்டு களவானிங்க..ஒருவேளை அன்னைக்கு நான் சரின்னு சொல்லியிருந்தா என்ன பண்ணியிருப்பீங்க மிஸ்டர் கார்த்திக்" என்று முறைப்புடன் கேட்க,

" ஹா...ஹா என்று வாய்விட்டு சிரித்தவர்...என்ன பண்ணியிருப்பேன், என்று தன் தாடையைத் தடவியவாறு யோசித்து.....அவரை தூக்கிட்டு வந்து என் பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வச்சிருப்பேன்.....கொஞ்ச நாள் பழகின அவருக்கே உன்னைப் பத்தி தெரியும் போது, நீ என் செல்ல பொண்ணுடா உன் மனசுல என்ன இருக்கும்ன்னு எனக்குத் தெரியாது" என்று பெருமையாகவும் கர்வத்துடனும் வந்தன அவரது வார்த்தைகள்.....

அதைக் கேட்டு கண்கலங்க தன் தந்தையை அணைத்துக் கொண்டாள் பிரியா.....

இந்தப் பாசபிணைப்பை கண்ட எழில், அவள் உடல்நிலையில் அக்கறை கொண்டவனாய்... அந்தச் சூழ்நிலையை மாற்றும் பொருட்டு

"ஏய் செமயா இருக்கு இந்த ஊரு.... எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.. பூரி நீ லக்கி".....என்று திசை திருப்ப, அப்பொழுதுதான் அவளும் கவனித்தாள்....

அரண்மனையைச் சுற்றி மாவிலை தோரணங்களும், ஆங்காங்கே பந்தல்களும் அலங்கார விளக்குகளும், வீட்டை சுற்றி பரபரப்பாக வேலை செய்து கொண்டுஇருக்கும் வேலைகாரர்களும் கண்ணில்பட, சூழ்நிலை வித்தியாசமாக அவளுக்குத் தோன்ற சபரிஷிடம், " என்ன விஷேசம் ரிஷி...எல்லாரும் பரபரப்பாக இருக்காங்க...இந்த டெக்கரேஷன் எல்லாம் எதுக்கு" என்று வியப்புடன் கேட்கவும்,

அவளிடம் சென்றவன்...."வெளியவே எல்லாம் பேசனுமா...வீட்டுக்குள்ள வா..உனக்கு ஒரு பெரிய சர்ப்ரைஸ் இருக்கு" என்று அழைத்துச் செல்லவும்.....அவளது நினைவு அந்நாளுக்குச் சென்றது..

"இல்ல மோஹி, நான் அந்த வீட்டுக்கு திரும்ப வரமாட்டேன்" என்று மோகனாவை கட்டிக்கொண்டு கதறியது நினைவு வர.. சபரிஷை கலக்கமாகப் பார்த்தாள்..

அவனோ அவளின் மனதை படித்தவன் போல் "சின்னு உன் மனசை கஷ்டபடுத்தி வெளிய அனுப்பி வச்சேன்.... இப்போ உன்னைக் கவுரவபடுத்தி இங்க மறுபடியும் அழைச்சிட்டு வரணும்ன்னு நினைச்சுதான்

இந்த ஏற்பாடு பண்ணுனேன் என்றதும்

“என்ன ஏற்பாடு” என்று ப்ரியா புரியாமல் கேட்க..

அவனோ “வா வந்து நீயே தெரிஞ்சிக்க” என்று அவள் கை பிடித்து அழைத்துச் சென்று வீட்டின் வாசற்படி அருகே செல்ல....அங்கே

சபரிஷின் மொத்த குடும்பமும் இவர்களை வரவேற்க ஆவலாக நின்றிற்க அவர்களைக் கண்டவளின் மனது சந்தோஷம் கொண்டாலும், தன் தோழனையும் தோழியையும் தேடி அவளின் கண்கள் அலைபாய்ந்தது.....
அவளின் தேடலை புரிந்து கொண்டு அவளின் கண்களுக்கு விருந்தளித்தான் சந்துரு...

பிரபா வந்து ஆரத்தி சுற்றி ப்ரியாவிடம் நலம் விசாரிக்க....அவருக்குத் தேவையான பதில் கூறினாலும், அவளின் கண்கள் சந்துருவை நோக்கி இருந்தது..

அதைக் கண்ட சபரிஷ்.. சந்துருவிடம் அழைத்துச் சென்று.....”உன் பேபியை நான் கூட்டிட்டு வந்துட்டேன்.. இனிமேலாவது என்கிட்ட பேசுவியா

சந்துரு" என்று கேட்க தன் அண்ணனை கண்டு மகிழ்ச்சியுடன் தனது இரு கைகளையும் விரிக்க..

அவன் தன்னை நோக்கித்தான் கை விரிக்கிறான் என்று நினைத்த பிரியா சந்துருவின் முன் செல்ல.....அவனோ அவளை விடுத்து தன் அண்ணனை கட்டிக்கொண்டான்..

இதை எதிர்பாராத ப்ரியா பே என்று முழிக்க....எழில் வாய் பொத்தி சிரிப்பதை கண்டு அவனை முறைத்தவள்..

"டேய் பக்கி , பக்கி எருமை எருமை" என்று சந்துருவை அடிக்கத் துவங்கி விட்டாள் ப்ரியா..

ப்ரியா அடிக்கவும்.. அண்ணனிடம் இருந்து விலகியவன்.. "பேபி அடிக்காதே வலிக்கிது".. என்று சொன்னாலும்.. அவள் அடிப்பதை அவன் தடுக்க வில்லை...

ஒரு கட்டத்தில் அவனை அடிப்பதை நிறுத்தியவள்....அவனின் தோள் சாய்ந்து,

“டேய் பக்கி எப்படிடா இருக்க..என் தொந்தரவு இல்லாம ஹேப்பியா இருந்துருப்பேல்ல... என்னை ஒரு தடவையாவது நினைச்சியா சந்துரு” என்று அவனைப் பற்றித் தெரிந்தும் இந்தக் கேள்விகளைக் கேட்டவள், அவனிடமிருந்து பதில் வராததால்....”என்னடா நான் பாட்டுக்கு பேசிட்டு இருக்கேன் நீ பதிலே சொல்ல மாட்டேன்கிற”.. என்று அவனை நிமிர்ந்து பார்க்க அவன் கண்களோ கலங்கி இருந்தது..

அதைக் கண்டு அவள் கண்களும் கலங்க...உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டவள்....”சந்துரு அதான் நான் வந்துட்டேனே... இனி உங்களையெல்லாம் விட்டு எங்கேயும் போக மாட்டேன்..... இந்த மோஹி எங்க ஆளையே காணோம்.... இன்னும் மும்பையில் இருந்து வரலையா.. உன்னை அழ விடாம பார்த்துக்கச் சொன்னா. அவ மும்பையில் போய் உட்கார்ந்துட்டாளா” என்று அவள் பாட்டுக்கு பேச, அதற்கும் அவனிடமிருந்து மௌனமே பதிலாக வர,

“இப்போ நீ என்கிட்ட பேச போறியா.... இல்ல மறுபடியும் அடி வாங்க போறியா” என்று சற்று கோபத்துடன் கேட்க,

“இனி என்னை விட்டு போக மாட்டேல்ல பேபி”

என்றவனின் குரலில் வருத்தம் இழைந்தோட,

அவளும் அதே குரலில், “சத்தியமா நான் போமாட்டேன் டா.. அன்னைக்கு நான்தான் லூசு மாதிரி ஏதேதோ சொன்னேன்.. நீயாவது எனக்கு எடுத்து சொல்லி புரிய வச்சிருக்கலாம் இல்ல....நீ சொல்லியிருந்தாலும் அந்தச் சமயத்தில் நான் கேட்டுந்திருப்பேனா என்பதும் சந்தேகம்தான்.....அந்த நாளை நாம சுத்தமா மறந்திடலாம் சந்துரு” என்று உருக்கமாகச் சொன்னவள்...பின் அவனின் பேபியாக மாறி,

“நீ கேட்குறதை பார்த்தா....ஏன்டா இவ திரும்பி வந்தா என்ற மாதிரி இருக்கு, இவ்ளோ நாள் என் அடியில இருந்து தப்பிச்சிட்ட... இனி நல்லா உனக்கு மொத்து இருக்கு என்கிட்டே “என்றதும் சிரித்தவன்..

“இனி என்ன நீ அடிச்சா கேள்வி கேட்க ஆள் இருக்கு .. சோ நீ என்னை அடிக்க முடியாதே..” என்று அவளை வம்பிழுக்க,

அவனை முறைத்தவள்.. “யாருடா அது , என்னைப் பார்த்துக் கேள்வி கேட்குறது.... உன் அண்ணனா” என்று சபரிஷை பார்த்து முறைக்க..

அதுவரை இவர்களின் பாசபிணைப்பை கண்டு ரசித்தவனின் மனதிலோ சிறிதளவு கூடப் பொறாமை உணர்ச்சி இல்லை...மாறாக அவர்களின் நட்பில் தானும் பங்குபெற மாட்டோமா என்று ஏக்கத்துடனும், அவன் சின்னுவின் மனதில் இடம்பிடித்த கர்வத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் இவ்வாறு கேட்கவும், "அய்யோ சின்னு அது நான் இல்ல" என்று அலறினான்.....பின்னே மறுபடியும் முதலில் இருந்தா என்றது அவனின் மனது....

"அப்போ யாருடா அது... நம்மளை பிரிக்கப் பாக்குறது..... இப்போ சொல்ல போறியா இல்லையா.." என்று குரல் உயர்த்திக் கேட்க,

எல்லோரும் இவர்களைய பார்த்துக்கொண்டிருந்தனர்..

சந்துருவோ வேறு பக்கம் கண் காட்ட.. அந்தத் திசையைப் பார்த்தவள் அங்கு மோகனா நிற்பதை கண்டு, மகிழ்ச்சியுடன்

"ஹே மோஹினி நீ இங்கதான் இருக்கியா நீ மும்பைல இருப்பேன்னு நினைச்சேன்டி" என்றபடி வேகமாக மோகனாவை நோக்கி ஓடி அவளைக் கட்டிக்கொள்ளப் போக

அவளைத் தடுத்த மோகனா.. ஒரு நிமிடம் அவள் முகத்தைப் பார்த்தவள் மறு நிமிடம் ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தாள்....

அவள் அறையவும் அதைக் கண்ட அனைவரும் பதற, இருந்தாலும் அவர்களின் நட்பில் தலையிடுவது நல்லதல்ல என்று நினைத்தபடி ஒதுங்கி நிற்க, தனது கன்னத்தைப் பிடித்தபடி அதிர்ச்சியுடன் “மோஹி” என்றாள் மெல்லிய குரலில்....

பிரியாவை அறைந்துவிட்டு, தன் முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள் மோகனா...

அவள் அழவும், அவளின் மனநிலையை ஊகித்தவள், அவளது முகத்தில் இருந்து கையை எடுத்துவிட்டு “இப்ப என் மேல உள்ள கோபம் போயிடுச்சா” என்று சிறு சிரிப்புடன் கேட்க

“ப்ரி” என்றபடி அவளை அணைத்துக்கொண்டவள்... “ப்ரி ஏண்டி என்னை விட்டு விலகி போன.... நான்

என்னடி பண்ணுனேன்.....இவங்க என் சொந்தம்ன்னு தெரியறதுக்கு முன்னாடியே நீ எனக்கு ப்ரெண்டுடி.... அத்தான் மேல கோபம்ன்னா...அதை ஏண்டி என் மேல காட்டுன...எத்தனை தடவ பேச முயற்சி பண்ணுனேன்...ஒரு தடவையாவது பேசுனியா என்கிட்ட... அப்போ நான் யாருடி உனக்கு" என்று அவளைக் கட்டிக்கொண்டு அழ..

அவள் கேட்க்கும் கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் அவளின் கண்களும் கலங்க, தான் அழுதால் அவள் தாங்க மாட்டாள் என்று எண்ணி, அவளின் முதுகை தடவி கொடுத்தவள்.... அவளின் பேச்சை திசை திருப்பும் பொருட்டு... அவளை விட்டு விலகி நின்று மோகனாவை மேலும் கீழும் பார்த்து..

"உன்னைப் பார்த்தா என்னைப் பிரிஞ்ச வருத்தத்துல இருந்த மாதிரி தெரியலையே.. நல்லா புஷ்டியான ஆகாரம் எல்லாம் சாப்பிட்ட மாதிரி தான் தெரியுது" என்று மோகனாவிடம் சொன்னவள், சந்துருவை பார்த்துக் கண் அடிக்க,

அவளின் பேச்சிலும் செயலிலும் முகம் சிவந்தவள், "அடியே, இன்னும் உன் வாய் அடங்கலையா" என்று பிரியாவை துரத்த..

“ரிஷி என்னைக் காப்பாத்துங்க” என்றபடி அவனின் பின்னால் போய் நின்று கொண்டாள்.....இதை பார்த்த அனைவரும் மனதில் எழுந்த நிம்மதியுடன் சிரிக்க

“சரி சரி எல்லாரும் எவ்வளவு நேரம்தான் நிப்பீங்க...தலைக்கு மேல வேலை கிடக்கு... ஆளுக்கொரு வேலையைச் செஞ்சாதான் வெள்ளனே எல்லாம் நல்லபடியா முடியும்” என்று ஆச்சி சொல்லிவிட்டு செல்ல

இளவட்டங்களைத் தவிர எல்லோரும் வீட்டுக்குள் செல்ல..

சபரிஷ் ப்ரியாவிடம் தனக்கு ஒரு முக்கியமான வேலை இருப்பதாகவும் சீக்கிரம் வந்துவிடுகிறேன் என்றும் கூறிவிட்டு அவளது கன்னத்தைத் தட்டிவிட்டு , தனது காரை கிளப்பிச் சென்றது தனது பால் பண்ணக்குச் சென்றான்...

சந்துருவை நெருங்கிய ப்ரியா.. அவனிடம் “அன்னைக்கு நான் உன்னை வேணும்ன்னு ஒதுக்கவில்லை டா...என்ன மன்னிச்சிடு சந்துரு” என்று கண் கலங்க..

அவளது தலையை ஆதூரமாகத் தடவியவன்..
“என்னால் புரிஞ்சிக்க முடிஞ்சிது பேபி” என்றவன் “நீ என் தோழியா இங்க இருக்க” என்று தன் இதயத்தைத் தொட்டு காட்டியவன்,
“அப்புறம் எப்படி என்னைவிட்டு போவ” என்றதும் அவன் தோளில் சாய்ந்தவள்..

“அடியே மோஹி இங்க பாரு உன் ஆளை… அவன் இதயத்தில நீ இல்லையாம் நான்தான் இருக்கேனாம். இதெல்லாம் நீ கேட்க மாட்டியா” என்று மோகனாவிடம் சந்துருவை மாட்டி விட

அவர்களைக் கண்டு சிரித்தவள், “அதான் எனக்கு எப்போவே தெரிஞ்ச விஷயமாச்சே” என்று சொல்ல..

இவர்கள் மூவரின் நட்ப்பை பார்த்து வியந்த எழில்.....”பூரிஈஈஈஈஈஈஈ” என்று அழைத்துத் தன் இருப்பைத் தெரிவிக்க,

எழில் அழைக்கவும் தான் அவன் நினைவு வந்தவளாக.. அவனைப் பார்த்து “ஹே எழில் அங்க என்ன பண்ற இங்க வா” என்று அழைக்க...

எழிலோ குழந்தை போல் உதடு பிதுக்கி , அழுது விடுபவன் போல் நிற்க, அதைக் கண்டவள் "என்ன எலி இஞ்சி தின்ன குரங்கு மாதிரி நிக்கிற" என்று கேட்க..

"ஆங்....உனக்கு ரொம்பதான் லொள்ளு.. அவங்க ரெண்டு பேரும் தான் உனக்குப் பிரெண்ட்ஸ்ன்னா , அப்போ நான்" என்று கேட்க

எழிலின் அருகே சென்றவள்.. "எனக்கு நீ வேற சந்துரு வேற இல்லடா, ரெண்டுபேரும் ஒன்னுதான்.....சந்துரு என் மேல ரொம்பக் கேர் எடுத்துப்பான் , நீயும் அப்படித்தானே எழில்.. உன்கிட்ட நான் சந்துருவை பார்த்தேன் எழில்" என்றவள்..

"சந்துரு இவன் எழில் , அமெரிக்காவில் பெரிய டாக்டர், இதயச் சிகிச்சை நிபுனர்.. ஆனால்" என்று நிறுத்த,

என்ன ஆனால் பேபி???

எழிலும் ஏதோ நம்மைப் பற்றிப் பாராட்டி சொல்ல போகிறாள் என்று நினைத்து சொல்லு சொல்லு என்ன ஆனால் என்று ஆர்வமாய்க் கேட்க

சிறிது தள்ளிப்போய் நின்றவள்.. “ஆனால் என்னைப் பொறுத்த வரைக்கும் இவன் ஒரு டம்மி பீஸ்” என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் ஓடி விட்டாள் ப்ரியா..

“என்னது டம்மி பீஸா.. பூரீஈஈஈஈஈஈஈ” என்று கத்த..

மோகனாவோ “தப்பா எடுத்துக்காதீங்க எழில்.. அவ எப்போவுமே இப்படித்தான்” என்று சொல்ல..

“ஏங்க பொய் சொல்றீங்க. இந்தப் பூரி இதுக்கும் மேல பேசும் " என்று சொல்ல..

“என்னை மாதிரி உங்களுக்கும் சேதாரம் அதிகமோ” என்று சந்துரு கேட்க...

“வொய் பிலெட் சேம் பிலெட்” என்று இருவரும் கை குலுக்கிக் கொண்டனர்...

“ஆனா ஒன்னுங்க. இந்தப் போடு போடுற பூரி , எப்படித்தான் இவ்ளோ அமைதியா இருந்தாளோ.. ஆனா இப்படி அவளைப் பார்க்க ரொம்பச் சந்தோஷமா இருக்கு சந்துரு” என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே

“மோஹி, சந்துரு எல்லாரும் உள்ள வாங்க” என்று ப்ரியா உள்ளேயிருந்து இவர்களைக் கூப்பிட..

“இதோ வரோம் பேபி” என்றவன்.. வாங்க எழில்.. உள்ளே போகலாம் என்று அழைக்க..

“நீங்க போங்க சந்துரு.. இந்தப் பிளேஸ் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.. நான் கொஞ்சநேரம் கழிச்சி வரேன்” என்று எழில் சொல்லவும்....சரி என்றுவிட்டு மோகனாவும், சந்துருவும் வீட்டுக்குள் செல்ல,

எழிலோ அங்குள்ள இயற்கை காட்சிகளைக் கண்டு உள்ளுக்குள் பதிய வைத்து
ரசித்துக்கொண்டிருந்தான்..

அப்பொழுது.. அரண்மனை பெரிய கேட் வழியாக உள்ளே நுழைந்த சில தாவணி போட்ட இளம் குமரிகள் சிரித்துப் பேசிய படி.. மெதுவாக நடந்து வந்து கொண்டிருக்க....

அந்தச் சமயத்தில் சுகந்தமான காற்று அவனின்

மேணியைத் தழுவ .. அவன் மனதோ திரும்பி பார்
உன் கனவுதேவதை வருகிறாள் என்று சொல்ல..

மெதுவாகத் திரும்பவும்.. நான்கு பாட்டிமார்கள்,
அந்தத் தாவணி பெண்களை முந்திக்கொண்டு
வேகமாக முன்னே வரவும் எழில் திரும்பி
அவர்களைப் பார்க்கவும் சரியாக இருந்தது..

அவர்களைக் கண்டு ஜெர்க் ஆனவன் தன்
இதயத்தைத் தொட்டு, "என்னாச்சு உனக்கு.. நல்லா
தானே இருக்க... பின்ன ஏன் என்னை இப்படிப்
பயமுறுத்துற...இவங்க என் கனவு தேவதையா....
என்று திகிலுடன் தன்னைக் கடந்து சென்ற
பாட்டிமார்களைப் பார்க்க....

அவர்களைத் தொடர்ந்து அந்தத் தாவணி பெண்களும்
இவனைக் கடந்து செல்ல.. அதில் ஒரு ஜோடி கண்கள்
மட்டும் இவனை அனு அனுவாக ரசித்ததை எழில்
கவனிக்க வில்லை...அவனோ தன் மனசாட்சியிடம்
"இல்லையே நீ பொய் சொல்லமாட்டியே....பின்னே ஏன்
இப்படி...யார் என்னோட தேவதை" என்று
குழப்பத்துடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்
வேளையில்,

அரண்மனையின் உள்ளே இருந்து ப்ரியாவின் குரல்

சத்தமாக ஓங்கி ஒலிக்க.. தனது கனவு தேவதையை மறந்து வேகமாக உள்ளே ஓடினான்..

சுவாசம் தொடரும்...

சுவாசம் 36...

“நான் ஒத்துக் கொள்ள மாட்டேன் இந்தக் கல்யாணத்தை” என்று ப்ரியா அடம்பிடிக்க.....அவளை சுற்றி அனைவரும் பதட்டத்துடன் நின்றுக் கொண்டிருந்தனர்..

ப்ரியாவின் அருகே சென்றவன்.. “என்னாச்சு பூரி. எதுக்குக் கத்தின, உடம்புக்கு ஏதும் பண்ணுதா” என்று அக்கறையாகக் கேட்க..

“டேய் பக்கி இந்த எலியை பிடிச்சி எலிகூடுக்குள்ள அடச்சி வைடா.. நேரம் காலம் இல்லாம காமெடி பண்ணுவான்”என்று ப்ரியா சந்துருவிடம் சொல்ல

அவளது தாய் காயத்ரி அவளை அதட்ட,

“நீங்க சும்மா இருங்க ஆன்ட்டி , அவ என்னை எப்படி வேணும்னாலும் பேசட்டும்.. அது அவ இஷ்டம்” என்று பெருந்தன்மையா எழில் சொல்ல..

“அப்படிச் சொல்லுடா என் எலிகுஞ்சி”.. என்று ப்ரியா சொல்ல..

அவனோ மனதுக்குள்.. “அய்யோ நீங்க வேற ஆன்ட்டி.. இப்படிச் சொல்லி அவளை ஆஃ பண்ணலைன்னா இந்தப் பூரி இன்னும் என் மானத்தை வாங்குவா” என்று மனதுக்குள் சொன்னவன் வெளியே “என்னாச்சு சந்துரு.. எதுக்குப் பூரி கத்துனா” என்று கேட்டான்

“பேபி, இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டாளாம்.. அதான் எல்லாரும் ஏன்னு கேள்வி கேட்குறாங்க, நான் இப்பதான் அண்ணாக்கு போன் பண்ணேன்.... வந்துட்டே இருக்காங்க” என்று சொல்லவும் சபரிஷ் உள்ளே வரவும் சரியாக இருக்க..

“ எதுக்குச் சந்துரு உடனே வர சொல்லி எனக்குப் போன் பண்ண” சுற்றி உள்ளவர்களின் முகத்தில் உள்ள பதட்டத்தைக் கண்டு, “ஏன் எல்லாரும் ஒரு

மாதிரியா இருக்கீங்க....என்னன்னு யாராச்சும் சொல்லுங்க”

“நான் சொல்றேன் மாப்பிள்ளை” என்ற காயத்ரி… “இவ இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டாளாம்.. நாளைக்குக் கல்யாணத்தை வச்சிக்கிட்டு இப்போ இப்படிச் சொன்னா என்ன அர்த்தம்ன்னுதான் கொஞ்சம் சத்தம் போட்டோம்” என்று சொல்ல..

உடனே பிரியாவின் முகத்தைப் பார்க்க, அவள் முகத்தில் இருந்து எதுவும் கண்டுபிடிக்க முடியாமல் குழம்பியவன், செய்வதறியாது நின்றான்.....

லட்சுமிமட்டும் தன் மகனுக்குக் கண் ஜாடை காட்டி தனியாகக் கூட்டிட்டுப் போய்க் கேட்கும் படி சொல்ல..

அதனை உடனே செயல்படுத்த எண்ணி....அவளின் கையைப் பிடித்து வேகமாக மாடியேறி , தனது அறைக்குள் சென்று கதவடைத்துக் கொண்டான் சபரிஷ்…

“சரி சரி என் பேரன் வந்துட்டான் அவன் எல்லாத்தையும் பார்த்துப்பான், நீங்க போய் மற்ற வேலைகளைக் கவனிங்க....

சந்துரு வந்திருக்கிறவியலுக்கு , வேண்டிய வசதியை கவனி" என்று சொல்லவும், எல்லோரும் அவரவர் வேலையைக் கவனிக்கச் செல்ல...

அதைப் பார்த்த எழில்.. "ஹும் பாஸ்க்கு எங்கயோ மச்சம் இருக்கு.. நாளைக்குதான் கல்யாணம் ஆனா இப்போவே ரூமுக்குள்ள கூட்டிட்டுப் போய்க் கதவடைக்கிறார்" என்று பெருமூச்சு விட,

க்ளுக் என்று குயிலின் சிரிப்புச் சத்தம் போல் ஒரு பெண்ணின் சிரிப்பு அவன் காதில் ஒலிக்க, அவனது மனம் உடனே சுற்றி பார் என்று சொல்ல..அவனும் அதைச் செயல்படுத்த

அந்தக் குரலுக்குச் சொந்தகாரி தன் பாட்டியின் பின்னால் சட்டென்று ஒளிய, சுற்றி பார்த்தவனின் கண்ணில், அந்தப் பாட்டி விழ, அந்தப் பாட்டியும் சரியாக இவனைப் பார்த்து சிரித்தார்...

விளக்கெண்ணெயை குடித்தவன் போல் முகத்தை வைத்துக்கொண்டு திரும்பி வெளியே ஓடியே விட்டான்.. எழில்..

ஆனாலும் அந்தப் பெண்ணின் சிரிப்புச் சத்தம்

அவனைத் துரத்தியது..

வெளியே வந்த எழில்க்கு ஒன்றும் புரிய வில்லை.. யாரோ ஒரு பொண்ணுதானே சிரிச்சது.... அது யாரா இருக்கும்.. என்று யோசித்த வாறே கொஞ்ச தூரம் நடந்தான்....
அந்த வீட்டின் பின் பக்கம் வழியாகச் சென்றவனின் காதில் அதே சிரிப்புச் சத்தம் கேட்க....அந்த திசையை நோக்கி வேக வேகமாகச் சென்றான்....

அந்தக் குரலுக்குச் சொந்தகாரி இன்னொரு பெண்ணிடம் ஏதோ சொல்லி சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள்....அவனுக்கு அவளின் முதுகுபுறமே தெரிய,அவளின் பேச்சை கவனிக்க ஆரம்பித்த எழிலோ அப்படியே அசையாமல் நின்றான் அந்தக் குயிலின் குரலில் மயங்கி...

“ஹா..ஹா...என்று சிரித்து முடித்தவள்....அய்யோ அம்மா என்னால முடியலடி.... அவங்க அதான் புதுசா வந்துருக்காங்கல்ல , us ல இருந்து அண்ணிக்கூட , அவங்க பெரிய டாக்டராம்.. ஆனா அண்ணி அவங்களை எலி எலின்னு சொல்லி கூப்பிடுறாங்க ஹா ஹா” என்று மறுபடியும் சிரிக்க

தன்னைப் பற்றித் தான் பேசுகிறாள் என்று காதை கூர்மையாக்கி கேட்க ஆரம்பித்தவன்....அவள் தன்னை

எலி என்றதும்...

பூரிஈஈஈஈ என்று பல்லை கடித்தவன்...இன்னும் என்ன பேசுகிறார்கள் என்று அவர்களின் பேச்சில் கவனமானான்....

“மேகா அப்படி யாரையும் கிண்டல் பண்ண கூடாதுடி” என்று இன்னொரு பெண் சொல்ல..

“ஓஓஓ இந்தக் குரலுக்குச் சொந்தகாரி பெயர் மேகாவா..... நோ நோ எனக்கு அவ குயில் தான்” என்று தன்னை அறியாமல் சொல்ல..தன் மனம் செல்லும் பாதையைக் கண்டு அதிர்த்தான்
“எனக்கு அவ குயிலா அப்போ என் கனவு தேவதை இவதானா”
ஹோஹோ சத்தமாகக் கத்த வேண்டும் போல் இருந்தது அவனுக்கு..

மீண்டும் அங்கே அவர்களின் பேச்சை கேட்க ஆரம்பித்தான்

“போடி நான் ஒன்னும் கிண்டல் பண்ணல” என்றவள்
“அவரு பெரிய டாக்டராம் அமெரிக்கால.. அது அவங்க அக்கா அத்தான்னாம்.... அந்தக் குட்டி பசங்க அவங்க

அக்கா பசங்களாம்”
என்று சொல்லிக்கொண்டே போக..

“ஏண்டி இப்போ வரைக்கும் நீ என் கூடத்தானே
இருக்கே உனக்கு எப்படி இந்த விஷயம் எல்லாம்
தெரிஞ்சிது” என்று அந்த இன்னொரு பெண் கேட்க..

“நாம விட்டுக்குள் வரும் போது நான் அவங்களைப்
பார்த்தேன்.... நம்ம ஊருக்கு சம்பந்தமே இல்லாம
கோட்டு சூட்டு போட்டுட்டு யாரோ குடுகுடுப்பை
காரன் மாதிரின்னு நினைச்சிகிட்டே வந்தேனா..

“என்னது குடுகுடுப்பை காரனா, நானா” என்று தன்
கோட்டை ஒருமுறை பார்த்த எழில்..
“அடியே குயிலு.. என்னைப் பார்த்தா உனக்குக்
குடுகுடுப்பை காரன் மாதிரியா இருக்கு உன்ன...

“உள்ள வந்தா பிரியா அண்ணி... எனக்கு அவங்களைப்
பார்த்து எவ்ளோ சந்தோசம் தெரியுமா....அவங்க
வர்றதுக்குள்ள கோவில்ல இருந்து வந்திடனும்ன்னு
நினைச்சேன்.....ஆனா லேட் ஆகிடுச்சு...
அப்போ நாம கொண்டுவந்த அர்ச்சனை தட்டை பூஜை
ரூமில் வைக்கப் போனியா அந்தக் கேப்ல
அவங்களைப் பற்றி அண்ணி சொல்லிட்டு

இருந்தாங்க”

“அப்படியா சரி அதுக்கு எதுக்குடி நீயும் அவங்கள எலின்னு சொல்ற”

“ஹா ஹா அதுவா என்று மீண்டும் மேகா சிரிக்க..

“சிரிக்காம சொல்லேன்டி” கடுப்புடன் கேட்க

“அதான்டி அவங்களைப் பார்த்தா எலி மாதிரியா இருக்கு… அண்ணி அப்படிச் சொல்லவும் எனக்குச் சிரிப்பு தாங்கல அதுவும் இல்லாம அண்ணி சந்துரு அண்ணாகிட்ட எலி கூண்டுல பிடிச்சி போட சொல்றாங்க” என்று சொல்லி சத்தமாகச் சிரிக்க..
…மற்றொரு பெண்ணோ அமைதியாக நின்றாள்..

“ஏண்டி நான் சொல்றது உனக்குச் சிரிப்பு வரலையா”

“எது நீ இப்போ சொன்னது காமெடியா.. ஹி ஹி சிரிச்சிட்டேன் போதுமா” என்று அந்தப் பெண் மேஹாவை நக்கல் செய்ய…

“போடி செங்கமலம் வெவ்வ்வே” என்று அழகு காட்ட

மேகா , செங்கமலம் என்றதும் அந்தப் பெண்ணுக்குக் கோபம் வர.. “அடியேய் என்னை அப்படிக் கூப்பிடாதேன்னு சொல்லிருக்கேன்ல , ஹரிணி சொல்லு” என்று பொய் கோபத்துடன் முறைக்க..

“செங்கமலம் , செங்கமலம் , செங்கமலம் , அப்படித்தான் கூப்பிடுவேன்.... போடி” என்று சொல்லிவிட்டு மேகா ஓட

அந்தப் பெண் துரத்த.. மேகா வீட்டுக்குள் ஓடி விட்டாள்.

இவ்வளவு நேரம், அவர்கள் பேசியதை கேட்ட எழிலின் இதயம்.. அந்தக் குரலுக்குச் சொந்த காரியின் முகத்தைப் பார்க்க துடித்தது...

.....

தன் அறைக்கு ப்ரியாவை அழைத்து வந்த சபரிஷ்.. அவனது கட்டிலில் அமர வைத்து “நம்ம கல்யாணம் முடிஞ்சதுக்கு அப்புறம்தான் நீ இந்த ரூம்க்கு வருவேன்னு நினைச்சேன் சின்னு, பட் என்னோட லக் இன்னைக்கே வந்துட்டே.. எப்படி இருக்கு நம்ம அந்தப்புரம்.. உனக்குப் பிடிச்சிருக்கா” என்று கண்

சிமிட்டி கேட்க..

அவன் அறையைச் சுற்றி பார்த்தவள், “ம்ம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு ரிஷி... சிம்பிளா நீட்டா அழகா இருக்கு” என்று அவள் இழுக்கவும்

அவளைப் பார்த்து சிரித்தவன் “இனி இது நம்ம ரூம்... உனக்குப் பிடிச்ச மாதிரி மாத்தி அமைச்சிக்கலாம் சரியா..

ம்ம்ம் சரி என்று வேகமாக ப்ரியா தலையாட்ட..

“சரி இப்போ சொல்லு உனக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கலையா சின்னு..... நான்தான் சொன்னேனே நீ என்னைப் பிரிஞ்சி இருக்கிறதை தவிர வேற என்ன தண்டனை கொடுத்தாலும் ஏத்துக்கறேன்னு.... நீதானே சின்னு சொன்ன நம்ம சீக்கரமா கல்யாணம் பண்ணிக்கலாமான்னு.....உனக்கு ஒரு சுவீட் சர்ப்ரைஸா இருக்கட்டும்தான்...நிச்சய நாளை கல்யாண நாளா மாத்திட்டேன்..... உனக்குப் பிடிக்கலைன்னா வேணாம் சின்னு.. உனக்கு எப்போ விருப்பமோ அப்போ கல்யாணம் பண்ணிக்கலாம், நான் எல்லாவற்றையும் நிறுத்தி” என்று அவன் என்ன சொல்ல வந்தானோ..

அவனின் உதட்டின் மேல் தன் விரல்களை வைத்து
“எனக்கு இந்தக் கல்யாணம் இப்போ உடனே
நடக்குறதுல ரொம்பச் சந்தோசம் ரிஷி.. இனி
உங்களை விட்டு பிரிஞ்சி என்னால இருக்க
முடியாது..... நீங்க என்னை விரும்பாத போதே நான்
உங்களை உயிராய் நேசிச்சேன்.. இப்போ நீங்க என்
உயிரில கலந்துட்டீங்க... நான் எப்படிக் கல்யாணம்
வேணாம்ன்னு சொல்லுவேன்.....ஆனா” என்றவள்
தலை குனிந்தாள்..

தனது விரலால் அவள் நாடியை நிமிர்த்தியவன்..
“அப்புறம் ஏன்டா அப்படிச் சொன்ன”

“அது வந்து அது வந்து.. நாம எல்லோரும்
திருச்செந்தூர் கோவிலுக்குப் போனோமே.... அப்போ
அந்த முருககடவுள் கிட்ட நம்மளை சேர்த்து வைக்கச்
சொல்லி வேண்டிக்கிட்டேன் , அதான் நம்ம
கல்யாணம் அந்தக் கடவுள் முன்னாடி நடக்கனும்ன்னு
ஆசைபடுறேன் ரிஷி....என் ஆசையை
நிறைவேத்துவீங்களா..... அதுவும் இல்லாம எனக்கும்
மோகனாவுக்கும் ஒரே நாள்ல கல்யாணம்
நடக்கணும் ரொம்ப ஆசைபட்டேன் ரிஷி” என்றதும்
உடனே அவளை இறுக்கமாக
அணைத்துக்கொண்டான்..

“சின்னு சின்னு , கொஞ்ச நேரத்துல என்னைக்

கதிகலங்க வச்சிடியே.. இத சொல்ல உனக்கு ஏன் இவ்ளோ தயக்கம் என்கிட்ட... எனக்கு இந்தச் சின்னு வேண்டாம்.. படபடப் பட்டாசா பேசுற சின்னு தான் வேணும்" என்று அவளைக் கட்டிக்கொண்டே சொல்ல..

"வேண்டாம் ரிஷி நான் பேச ஆரம்பிச்சா நீங்க தாங்க மாட்டிங்க " என்று குறும்புடன் சொல்ல...

"அதெல்லாம் தாங்குவேன்...அதே சமயம் உன்ன எப்படி ஆஃ பண்றதும் எனக்குத் தெரியும் சின்னு" என்று விஷமமாய்க் கூறியவன் அவளை மேலும் இறுக்கி அவளின் கழுத்து வளைவில் முகம் பதிக்க..

அதில் அவள் மனது படபடவென்று அடித்துக் கொண்டது.....பின் மெதுவாக "ரிஷி கீழே எல்லோரும் இருக்காங்க" என்று மெல்லிய குரலில் கூற

இருக்கட்டும் என்றவன் அவள் கழுத்தில் இதழ் பதித்தான்...

அவன் இதழ் பதிக்கவும், பெரும் அவஸ்த்தைக்கு ஆளான பிரியா,

"ரூமுக்குள்ள வந்து இவ்ளோ நேரம் ஆச்சே....

வெளியே இருக்கிறவங்க என்ன நினைப்பாங்கன்னு கொஞ்சமாவது நினைப்பு இருக்கா.. இந்த எழிலும் சந்துருவும் என்னை ஓட்டியே தள்ளிருவானுங்களே...என்று நினைத்தவள் அவன் பிடியில் இருந்து விடுபட நினைக்க, ஹும் விடுவேனா என்பது போல் இறுக்கமாக அணைத்திருந்தான் அவளின் ரிஷி.

கழுத்தில் முத்தம் பதித்தவன் அடுத்து அவன் வேறு இடத்துக்குச் செல்வதற்குள்....."ஹலோ மிஸ்டர் ரிஷி" என்று அவனை அழைக்க..

"எஸ் சொல்லுங்க மிஸ்ஸஸ் ரிஷி" என்றவன் அவளின் கழுத்தில் கிச்சுகிச்சு மூட்ட.....அந்த வார்த்தையே கேட்கவே இனித்தது அவளுக்கு..

"ஹா ஹா என்ன பண்ணிட்டு இருக்கீங்க"என்று சிரித்தாள்..

"ட்ரயல் பார்த்துட்டு இருக்கேன் சின்னு"

"எதுக்கு ட்ரையல் மிஸ்டர் ரிஷி" என்று புரிந்தும் புரியாதது போல் கேட்க

“நாளை இரவு நான் ரூமுக்குள்ள வந்ததும் முழிச்சிட்டு நீ நிக்கக் கூடாதுள்ள.. அதுக்குதான் ட்ரையல் பார்த்துட்டு இருக்கேன் மிஸ்ஸஸ் ரிஷி” என்று தாபத்துடன் சொல்ல

அவன் அப்படிச் சொல்லவும்...கள்ள சிரிப்புடன் “நான் இன்னும் உங்களுக்கு என்ன பனிஷ்மென்ட்னு சொல்லவே இல்லை.. அதைச் சொல்லி ஒர்க்அவுட் ஆனாதான் மத்தது எல்லாம” என்றதும் உடனே அவளிடம் இருந்து விலகியவன்..

“என்ன சின்னு இப்படி ஒரு குண்டை தூக்கி போடுறே” என்று அதிர்ச்சியில் முழித்தான்..

“ஆமா டீல் இஸ் எ டீல்.. ப்ரோமிஸ் பண்ணியிருக்கீங்க மறந்துட்டீங்களா” என்று அவனை முறைக்க..

அவளைத் தன் தோளில் சாய்த்தவன்.. “சொல்லு எனக்கு என்ன பனிஷ்மென்ட் வச்சிருக்கீங்க மிஸ்ஸஸ் ரிஷி”

“ஹி..... ஹி....”என்று அசடு வழிந்தவள், “நான் சொல்லுவேன் ஆனா நீங்க அதைக் கேட்டுச் சிரிக்கக்

கூடாது... பட் நான் சொல்றதை நீங்க கண்டிப்பா செய்யனும் சரியா" என்று கட்டளையிட

"என்ன பனிஷ்மென்ட்ன்னு முதல்ல அத சொல்லு சின்னு.. நான் செய்ய ரெடி" என்றதும்.....அவன் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொன்னவள், தாலி கட்டிய அடுத்த நிமிடத்தில் இருந்து இந்தப் பனிஷ்மெண்ட் ஆரம்பம் ஓகே வா" என்று அவள் சொல்லிமுடிக்கவும்..

" ஹா..ஹா... என்று சிரித்தவன்....."என்ன சின்னு... இதைச் செய்ய நான் புண்ணியம் பண்ணிருக்கணும் டா" என்று காதலுடன் சொல்ல

"என் தலையில் கைவைத்துப் பிராமிஸ் பண்ணியிருக்கீங்க..நல்லா நியாபகம் வச்சிக்கோங்க... இதுல இருந்து தவறினா....விளைவுகளுக்கு நான் பொறுப்பில்லை" என்றதும்

"ஒரு நாளும் தவறாது.. என் காதல் பொய் இல்லை டா, அதை நிரூபிக்க என்னால் முடியும் சோ இந்தப் பனிஷ்மென்ட்க்கு நான் ரெடி" என்று காதலுடன் சொன்னதும்

விதி வந்து குத்தாட்டம் போட்டது.. அடேய் மடையா இந்தப் பனிஷ்மென்ட் ஒருநாள் தவறும்.. அப்போ என்ன பண்ணுவாடா உன் சின்னு.. ஹி ஹி..” என்று சிரித்தது

“சரி வாங்க கீழே போகலாம்”

“இன்னும் கொஞ்சநேரம் இருப்போமே சின்னு”, என்றவன் மீண்டும் அவளை அணைக்க ..

“ என்ன ரிஷி இது , நீங்க ஒரு வேலையிருக்குன்னு போனீங்க இப்போ என்னால் திரும்பி வந்துட்டிங்க.. போங்க அதைச் செய்யுங்க முதல்ல “ என்றதும்

“அதைச் சித்தன் பார்த்துக்குவான்” என்று சொல்ல..

“சித்தனா.. அது அந்த டிரைவர் தானே”

“ம்ம் ஆமா டா அவன் தான் அன்னைக்கு நீ அழுத்துட்டு இருக்கிறதை பார்த்துட்டு வந்து என்கிட்ட சொன்னான்” என்றவன் தன் விரலால் அவளின் முகத்தில் கோடுழுக்க.

அவனது கையைத் தட்டிவிட்டவள்.. “நான் என்ன பேசிட்டு இருக்கேன் நீங்க என்ன பண்றிங்க”

“நீ தானே பேசிட்டு இருக்கே நான் சும்மாதானே இருக்கேன் சின்னு” என்று மீண்டும் அவள் முகத்தின் அருகே தன் கையைக் கொண்டு செல்ல...ப்ரியா தன் இடுப்பில் கைவைத்து அவனை முறைக்க...

“ம்ம்ம் போ சின்னு ரொம்பத்தான் என்னை முறைக்கிற” என்று ரிஷி முகத்தைத் திருப்ப..

அதைப் பார்த்தது அவளுக்குச் சிரிப்பு வந்தது... “பெரிய பிஸ்னெஸ் மேன், இவனைப் பார்த்தால் ஊரே நடுங்குமாம், ஆனா இவன் என்கிட்ட பண்ற அலும்பு இருக்கே” என்று அவன் கன்னத்தைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பியவள்.. ”என் பட்டு குட்டிக்கு என்ன கோபம்” என்று அவனைக் கொஞ்ச

“ என்னது பட்டு குட்டியா... நானா”

அவன் தலையில் குட்டு வைத்தவள் “இங்க நாம ரெண்டு பேரும் தானே இருக்கோம்....ஏன் உங்களுக்குப் பிடிக்கலையா ரிஷி” என்க

“ரொம்பப் பிடிச்சிருக்கு சின்னு என்றவன்… என்னை நினைச்சா எனக்கே ஆச்சர்யமா இருக்கு நான் எப்படி இப்படி மாறினேன்னு.. நான் படிக்கும் காலத்தில யாருகிட்டையும் அவ்வளவா ஒட்ட மாட்டேன்.. எப்பவும் முறைச்சிகிட்டே இருக்கிறதனால எனக்குப் பிரெண்ட்ஸ்ன்னு யாரும் கிடையாது… பொண்ணுங்க என் கிட்ட வரவே பயப்படுவாங்க….இரண்டாவது வருஷம் புதுசா ஒரு பையன் வந்தான் , ஏனோ எனக்கு அவன் கலகலப்பு ரொம்பப் பிடிச்சது…. அவன்கிட்ட மட்டும் பேசுவேன், அவன் ரொம்ப ஜாலி டைப், அதுக்கு அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா மாறி எல்லார்கிட்டையும் பேச ஆரம்பிச்சேன்.. பிறகு படிப்பு முடிஞ்சிது பிஸ்னஸ் ஆரம்பிச்சேன், அதுல ஜெயிக்கனும் ன்னா கொஞ்சம் கடுமையா இருக்கனும்னு நினைச்சு மறுபடியும் என்னை நானே மாத்திகிட்டேன்…..ஆனா உன்கிட்ட மட்டும் எப்படி இந்தளவுக்கு மாறினேன்னு தெரியல சின்னு” என்றவன் அவளை நெருங்க..

சட்டென்று அவனிடம் இருந்து விலகி எழுந்தவள்.. “நான் கீழே போறேன், சீக்கிரம் வாங்க, கல்யாண வேலை தலைக்கு மேல கிடக்கு, அதைப் பார்க்கிறத விட்டுட்டு இங்க என்ன கொஞ்சல் வேண்டி கிடக்கு… ம்ம்” என்று அவனைப் பார்த்துக் கண்ணை உருட்ட..

“அடிங்க உன்னை என்ன செய்யுறேன் பார்” என்று

அவளைப் பிடிக்கச் செல்ல..

அவுச் என்று கத்தியபடி கதவை திறந்து வெளியே ஓடிவிட்டாள் ப்ரியா..

ஹா ஹா...சரியான வாலு என்று சத்தமாகச் சிரித்துக்கொண்டே அப்படியே கட்டிலில் விழுந்தான் , தன்னவள் தன்னிடம் வந்துவிட்டாள் என்று அவ்வளவு சந்தோஷம் கொண்டது அவனது மனது..

ப்ரியாவிடம் இதோ வந்துறேன் என்றவன் , பால்பண்ணைக்குத் தான் வந்தான்.. அங்குச் சைலேஷ், மாடை குளிப்பாட்டுவதைப் பார்த்தவன் சித்தனிடம்...

சித்தா , இந்த நாயை விட்டுரு, என்று சொன்னவன்

சைலேஸை பார்த்து , இன்னொரு தடவை இந்தமாதிரி எதாவது கேள்வி பட்டேன் , என்று விரல் நீட்டி.. சைலஷை எச்சரித்தவன்,

சந்துருவின் போன் வரவும் உடனே கிளம்பிவிட்டான்...

ப்ரியாக்குச் சைலேஷ் என்ன ஆனான் என்று தெரிய வேண்டாம் என்று நினைத்தான்..

வெளியே வந்த ப்ரியாவோ... “மற்ற யாரையும் காணாது, அங்கே வேலைக்காரர்கள் மும்மரமாக வேளை வாங்கிக் கொண்டிருந்த விசாலாட்சி ஆச்சியைக் கண்டவள்....அவரை நோக்கி செல்ல

அவளின் முகமலர்ச்சியைக் கண்டவர் “அம்மாடி வாம்மா உனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் தானே” என்று அவள் கன்னத்தைத் தடவியவாறு கேட்க..

ப்ரியாவோ, குறும்புடன்.. “என்ன கிழவி ரொம்ப வருத்தத்துல கேட்குற மாதிரி இருக்கு, ம்ம் என்ன நான் வேண்டாம்ன்னு சொன்னா...உன் ராசுவுக்கு வேற பொண்ணு பர்க்கலாம்ன்னு ஐடியாவில இருக்கியா”.. என்று ஆச்சியிடம் வம்பிழுக்க

ஆச்சியோ.. “இந்தப் பேச்சை கேட்கத்தானே ஒரு

வருஷமா காத்திருந்தோம்” என்று அந்த மூதாட்டி சொல்ல..

“அம்மாடி ப்ரியா... உன்னோட இந்தத் துரு துரு பேச்ச , சிரிப்பை நாங்க ரொம்ப மிஸ் பண்ணுணோம்டா” என்று அங்கு வந்த ப்ரபாவும் சொல்ல....லட்சுமியும் அதையே ஆமோதித்தார்....

“இப்போதான் இந்த வீடே நிறைஞ்சிருக்கு” என்று தர்மலிங்கம் மனமார சொல்ல..

பிரியா தன் தலையைச் சரித்து “அப்படியா அங்கிள்” என்று சிரிப்புடன் கேட்க..

அவளின் அருகே வந்தவர் , அவளின் காதை வலிக்காதவாறு பிடித்து.. “இந்த ஊரே என்னைப் பார்த்தா பேச பயப்படுவங்க ஆனா இந்தக் குட்டி பொண்ணு.. இங்க வந்த மறு நாளே என்னை லெப்ட் அன் ரைட் வாங்கிட்டாளே” என்று சொல்லவும்..

“ஆஆ அங்கிள் வலிக்கிது” என்று பொய்யாகக் கத்தியவள் , அங்கு நின்ற எழிலை பார்த்து.. “டேய் எலி என்னைக் காப்பாத்துடா” என்று அவனைத் துணைக்கு அழைக்க

“அம்மா தாயே என்னை விட்ரு , நான் வரல இந்த விளையாட்டுக்கு....என்றவன் மனதில்.....”இந்த பூரிக்கு என்னை மாட்டிவிடுறதே வேலையா போச்சு.... என்னதான் சாப்பிடுவாங்களோ...ஒவ்வொருத்தரும் சும்மா கிண்ணுன்னு இருக்காங்க.....இவங்க ஒரு அடி அடிச்சா ஒரு மாசத்துக்கு எழுந்துரிக்க முடியாது போலவே” என்றபடி ஜகா வாங்க....

“ ஆமா நான்தான் உன் காதை பிடிக்கவே இல்லையே , அப்புறம் உனக்கு எப்படி வலிக்கும் ம்ம்” என்று பொய்யாக மிரட்ட

அவளும் பயந்தவள் போல் நடித்து....”இருங்க இருங்க என் ரிஷி வரட்டும்...அவர்கிட்ட சொல்றேன்” என்று கண்ணைக் கசக்க....

அவளின் குழந்தைத்தனத்தைக் கண்டு எல்லோரும் ரசித்தனர்..

அப்பொழுது அங்கு வந்த காயத்ரியும், அந்தக் காட்சியைக் கண்டு தன் மகள் வாழ்வு நன்றாக இருக்கும்.....இவர்கள் நன்றாகப் பார்த்துக் கொள்வார்கள் என்ற நிம்மதியுடன் தன் பெண்ணின் கல்யாண வேலைகளைக் கவனிக்கச் சென்றார்.....

திடீரென்று பிரியா, “ டேய் எலி எனக்கு ஒரு டவுட்” என்றதும்
உடனே எழில்.. “என்ன பூரி என்கிட்டே சொல்லு நான் கிளியர் பண்றேன்” என்றான்.. அவளது டவுட்டில் அலற போறது தான் தான் என்று அறியாமல்..

“அது என்னன்னா.. ரிஷி யு எஸ் வரத்துக்குக் காரணம் எங்க அப்பா.. அதுக்கு அப்புறம் , அங்க அவங்களுக்கு ஹெல் பண்ணுனது யாரு, நம்ம அப்பார்ட்மெண்ட்ல தங்க வச்சது யாரு” என்று கேட்டாளே ஒரு கேள்வி..

“ஆஆஆஆ பூரி இந்த மாதிரி எல்லாம் எதுக்கு உனக்கு டவுட்டு வருது.. உன் ரிஷி வந்து உன்னைக் கூட்டிட்டு வந்தாச்சு நாளைக்கு உங்களுக்குக் கல்யாணம், , இப்போ நீ அதை நினைச்சுக் கனவுதான் காணனும் அத விட்டுட்டு.. டவுட்டு எல்லாம் கேட்க கூடாது அது தப்புஊஊஊஊஊஊ” என்று சொல்ல அப்பொழுது எழிலின் மொபைல் அடிக்க.. அதைப் பார்த்தவன் தந்தை என்று வர அதை அவன் ஆன் செய்யப் போக, அது தவறுதலாக ஸ்பீக்கர் மோட்க்கு சென்றது...

அந்தப் பக்கம் அவன் தந்தையோ.. “என்னடா எழில் எல்லோரும் இந்தியா வந்தாச்சா.. நாங்க காலையில் வந்துருவோம்...இப்பதான் பிச்சூகிட்டையும் மாப்பிளை

கிட்டையும் பேசினேன்.....அப்புறம்

கார்த்திகேயன் போன் பண்ணுனாருடா" என்றதும் எழில் அந்தப் போனை ஆப் செய்யப் போகச் சட்டென்று அவன் கையில் இருந்து போனை ப்ரியா பிடிங்கி விட்டாள்..

"நீ யு எஸ் ல நல்லா கவனிச்சிகிட்டியாம் அவர் மாப்பிளையை... அவர் தங்குறதுக்கு நம்ம விட்டு பக்கத்துலேயே பார்த்துக் கொடுத்தியாம்.. உன்னைப் பத்தி பெருமையா சொன்னாருடா" என்றவர் "என்னடா நான் பாட்டுக்கு பேசிட்டு இருக்கேன், நீ அமைதியா இருக்கே" என்று கேட்க ..

"ம்ம் அதான் நீங்களே எல்லாம் பேசிட்டீங்களே, அப்புறம் நான் என்னத்த பேச" என்றவன் போனை கட் செய்துவிட்டு, மனதில் "போச்சு போச்சு இப்போ இந்தப் பூரி வேற என்ன செய்யப் போறாளோ.. பாஸ் எங்க இருக்கீங்க...என்ன காப்பாத்துங்க" என்றபடி அவளைப் பார்க்க

ப்ரியா அவனை முறைத்துக்கொண்டிருப்பதைக் கண்டவன்
"பூரி நோ வய்லன்ஸ் , இதுக்கு நான் முழுப் பொறுப்பு இல்ல, எல்லாம், பாஸ்ஸூம் உங்க அப்பா, ரெண்டு

பேரும் தான் காரணம்..நான் சின்னதா ஒரு ரோல் பண்ணுனேன் அவ்வளவுதான் சொல்லிட்டேன்”... என்று படப் படவென்று சொன்னான்....பூரி நான் உன் பிரெண்ட்தானே.. என்னை மன்னிச்சு விட்டுடேன்” என்று பாவமாகச் சொல்ல

“ஹி ஹி கிட்ட வா எழில்” என்று ப்ரியா அழைக்க..

ப்ரியாவின் அருகில் செல்ல போனவனை.....இவ்வளவு நேரம் தன் அறையில் வாசலில் இருந்து பார்த்துக்கொண்திருந்த சந்துரு கீழே இறங்கி வந்து.. வெளியே ஒடிடு என்பது போல் எழிலுக்குச் சைகை காட்ட..

சந்துருவை பார்த்த எழில் “நான் வர மாட்டேன் பூரி .. நீ அடிப்ப” என்று பின்னாடி நகர

“நீ வரலைன்னாலும் அடிப்பேன்” என்று எழிலை துரத்த..

அங்கு மீண்டும் கலகலப்புச் சிரிப்புச் சத்தம் கேட்டு, தன் அறையை விட்டு வெளியே வந்த சபரிஷ்..

“என்னாச்சு சின்னு.. எதுக்கு எழிலை துரத்துற”

சபரிஷின் குரல் கேட்டு திரும்பியவள்.. “ம்ம் வாங்க சார் வாங்க... முதல்ல உங்களுக்கு ரெண்டு போடுறேன்” என்று சொல்ல..

“ஐய்யோ நான் என்னடா பண்ணுனேன் சின்னு”

“எப்படி எப்படி..” என்றபடி எழிலை காட்டி.. “இவரை உங்களுக்குத் தெரியாதாம்.. இவருக்கும் உங்களைத் தெரியாதாம்.. ஆனா நடிக்க மட்டும் நல்லா தெரியுமாம்..ஆனா எனக்குத்தான் எதுவும் தெரியாம இருந்துருக்கேன்” என்றவள் சந்துருவிடம் திரும்பி “நீயும் இதுல கூட்டா டா” என்று சந்துருவை முறைக்க..

இல்ல பேபி.. எனக்கு ஒன்னும் தெரியாது.. நான் அப்பாவி பேபி” என்று பாவமாகச் சொல்லவும்..

ப்ரியாவோ.. “யாரு நீ அப்பாவியா.. எதுக்குடா நீ ரிஷிகூடப் பேசாம இருந்தே.. உங்க எல்லோரையும் நம்பித்தானே ரிஷியை விட்டுட்டு போனேன்.. நீங்க, எல்லோரும் ரிஷியை அந்த விரட்டு விரட்டிருக்கீங்க எங்க அப்பாவையும் சேர்த்துதான் சொல்றேன்” என்று

தன் தந்தையையும் முறைக்க..

“கண்ணம்மா.. நான் மாப்பிள்ளைய ஒண்ணுமே சொல்லல டா”

“எல்லாம் எனக்குத் தெரியும்.....இப்போ சொல்றேன் கேட்டுக்கோங்க, என் ரிஷியை யாரும் ஏதும் சொல்ல கூடாது சொல்லிட்டேன்” என்று எழிலை பார்த்து கண்ணடிக்க..

அவனோ சபரிஷின் அருகில் சென்று அவனது காதில்..
“பாஸ் நாங்க யாரும் ஏதும் சொல்ல கூடாதாம் உங்கள..
ஆனா இந்தப் பூரி மட்டும் உங்களைச் செமத்தியா கவனிக்குமாம்... பார்த்து கவனமா இருங்க சொல்லிட்டேன்” எனவும்

“நீ வேற ஏன்டா...அவளுக்கு நீயே சொல்லி கொடுத்திடுவ ” என்றவன்
“சின்னு விடுடா இப்போ தான் நீ வந்துட்டல்ல... இனி யாரும் என்கிட்ட நெருங்க முடியாது” என்று சொல்ல..

“ஐய்யய்ய...என்ன பாஸ் நீங்க ...எப்படி இருந்த நீங்க இப்படி ஆயிட்டீங்களே....சிங்கத்தைச்

சாய்ச்சிப்புட்டாளே பாஸ்...சாய்ச்சிப்புட்டாளே" என்றதும் எல்லோரும் சிரித்து விட்டனர்..

தானும் உடன் சேர்ந்து சிரித்த சபரிஷ் , "சும்மா இருடா" என்று அவனை அடக்கிவிட்டு, பிறகு பொதுவாக அனைவரிடமும் "உங்க எல்லோர்கிட்டையும் நான் முக்கியமான விஷயம் சொல்லனும்...நாளைக்கு இந்தக் கல்யாணம் கண்டிப்பா நடக்கும் , ஆனா இந்த அரண்மனையில இல்ல, திருச்செந்தூர் முருகன் கோவிலில் வச்சு.... அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம்" என்றவன் தன் சின்னுவை ஒரு பார்வை பார்த்துவிட்டு, மற்ற எல்லோரையும் ஒரு முறை பார்த்தவன்..

" நாளைக்கு ஒரு கல்யாணம் இல்ல... ரெண்டு கல்யாணம் நடக்கப் போகுது" என்றதும்

"என்ன ராசு சொல்ற" என்று ஆச்சி கேட்கவும்..

"ஆமா ஆச்சி எனக்கும் பிரியாவுக்கும்.. அப்புறம் சந்துரு மோகனாக்கும் ஒரே நேரத்தில் திருமணம்" என்று சொல்லவும்...அண்ணா என்று சந்துருவும், அத்தான் என்று மோகனாவும் ஒரு சேர அழைக்க..

“ஆமா சந்துரு இது உன் பேபியோட ஆசை.. அவளுக்கும் மோகனாக்கும்.. ஒரே நாள்ல கல்யாணம் நடக்கனும்மாம்” என்று பிரியாவை பார்த்துக் கொண்டே சொல்ல..

அவளின் அருகில் வந்த சந்துரு “பேபி என்ன இது , இப்போ உன் கல்யாணம்தான் முக்கியம், நான் இப்போதான் படிப்பு முடிச்சிருக்கேன்… அண்ணா மாதிரி நானும் வாழ்க்கையில சாதிக்க வேணாமா, ஒரு மூணு வருஷம் போகட்டும்டா” என்று சொல்ல..

பிரியா வாய் பொத்தி சிரிக்க ஆரம்பித்து விட்டாள்..

“நான் என்ன சொல்றேன்...நீ எதுக்குப் பேபி சிரிக்கிற” என்று கேட்க..

அவளோ வேறு திசையை நோக்கி கண்காட்ட.. சந்துருவும் அத்திசையில் பார்க்க.. அங்கே மோகனா அவனை முறைத்துக்கொண்டிருந்தாள்..

சந்துருவின் காதருகில் சென்று, “உனக்கு இருக்குடி பூஜை.. ஒழுங்கா கல்யாணத்துக்கு ஒத்துக்கோ இல்ல நீ காலி.. அங்க பாரு மோஹி மோகினியா மாறிட்டு இருக்கா” என்றவள்,

“பாரு அவளுக்கு இஷ்டம்தான் இப்ப இந்தக் கல்யாணம் நடக்குறதுல.. என்னோட ஆசையும் அதுதான்டா, , ப்ளீஸ் சந்துரு.. எங்க கல்யாணம் முடிஞ்சா மோஹி எப்படியும் மும்பைக்குப் போயாகனும் , என்னால் இனியும் அவளை விட்டு இருக்க முடியாதுடா... சாதிக்கணும்ன்னு நினைச்சா எப்போ வேணும்னாலும் சாதிக்கலாம், நீ கல்யாணம் பண்ணிட்டு நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து சாதிங்க” என்று ப்ரியா சொல்ல..

திரும்பி மோகனாவை பார்த்த சந்துரு.. அவள் கண்ணில் ஏக்கத்தைக் கண்டவன்....பின் என்ன நினைத்தானோ.. அவளைப் பார்த்து கண்ணடிக்க..

மோகனாவோ “அச்சோ என்ன இது” என்று சுற்றி முற்றி பார்த்தவள் தலையைக் குனிந்து கொள்ள..

அவளின் செயலில் சிரித்தவன்.. “சரி பேபி, நான் இதுக்குச் சம்மதிக்கிறேன்” என்றான்..

“ இப்போதான்டா நீ என் பிரெண்ட்”.. என்றவள்.. சபரிஷை பார்த்து தனது கட்டைவிரலை தூக்கி

காண்பிக்க..

தன் தந்தையையும், சிறிய தந்தையையும் பார்த்தவன் "அப்பா, எல்லோருக்கும் பத்திரிக்கை கொடுத்தாச்சு, சோ அதை ஒன்னும் பண்ண முடியாது அது அப்படியே இருக்கட்டும்.. நீங்க ஐயர்கிட்ட கேட்டு, அவர் குரிச்சு தந்த முகூர்த்ததுக்கு முன்னாடி நல்லநேரம் இருக்கான்னு பார்க்க சொல்லுங்க, அந்த நேரத்தில் கல்யாணத்தை வச்சிக்கலாம்... அப்புறம் மாலையில் ரிசப்ஷன் வச்சிக்கலாம்....இந்த தகவல எல்லாருக்கும் போன் மூலமா தெரியபடுத்தலாம்.... ஒன்னும் பிரச்னை இல்ல" என்று சொல்ல..

"சரிப்பா நான் ஐயர்கிட்ட பேசிட்டு சொல்றேன்" என்று ராஜலிங்கம் தன் அண்ணனை அழைத்துக் கொண்டு சொல்ல...

தன் தாயை அழைத்தவன்..."அம்மா இன்னொரு கல்யான புடவை, வேஷ்டி சட்டை வேணும்....நம்மகடையில இருந்து நான் ராஜேஷ்கிட்ட கொடுத்து அனுப்பறேன் பார்த்துச் செலக்ட் பண்ணுங்க" என்று தாயிடமும் சில பொறுப்புகளை ஒப்படைத்தவன்.....பின்

“ அத்தை மாமா, கௌதம்கிட்ட சொல்லணும், அவங்க எப்போ வர்றாங்க” என்று கேட்க

“ரவிக்கு நேத்துதான் பரீட்சை முடிஞ்சிதுபா, தன் மனைவி குழந்தையையும் கூட்டிகிட்டு இன்னைக்குக் காலைல ஃப்ளைட்டுக்கு வரதா கௌதம் சொன்னான்பா... அநேகமா இப்போ வந்துருவாங்க ராசு” என்று லட்சுமி சொல்ல..

ராசு என்று சபரிஷின் அருகில் வந்த ஆச்சி “சந்துருக்கும் மோகனாவுக்கும் ஏற்கனவே முடிச்சு போட்டதுதானே , உன் அத்தை இத கேட்டா சந்தோசம்தான் படுவா” என்றதும்..

அவரைத் தோளோடு அணைத்தவன்.....”ஆச்சி இப்போ உங்களுக்குச் சந்தோசம் தானே” என்றதும்

“மனசெல்லாம் நிரஞ்சி இருக்கு ராசு” என்றதும்....”சரி ஆச்சி நீங்க கொஞ்சம் ஓய்வு எடுங்க...எனக்கு வேலை இருக்கு” என்று சொல்ல.....மற்றவர்களும் அவரவர் வேலையைப் பார்க்க சென்றனர்...

மோகனா சந்துரு திருமணம் முடிவானதும்,
மகிழ்ச்சியில் திளைத்த பிரியா, அவர்கள்
இருவரையும் கிண்டல் செய்து கொண்டிருக்க,
பதிலுக்கு மோகனாவும் அவளைக் கிண்டல் செய்து
அவர்களின் நட்புலகத்துக்குச் செல்ல..

தனியாக நின்றிருந்த சபரிஷின் அருகே வந்த எழில்..
“ஆனாலும் உங்களுக்கு இவ்வளவு குசும்பு ஆகக்
கூடாது பாஸ்”

தோழியின் கிண்டலில் முகம் சிவக்க நின்றிருந்த
பிரியாவை ரசித்துப் பார்த்து கொண்டிருந்தவன்,
எழிலின் கேள்வியில் கலைந்து “ஏன்டா எழில் நான்
என்ன பண்ணுனேன்” என்று புரியாமல் கேட்க....

“இல்ல, நிச்சயதார்த்தம்னு சொல்லி கூட்டிட்டு
வந்துட்டு.. இப்போ கல்யாணம்ன்னு சொல்றீங்க
பாஸ்.. நீங்க ஃபாஸ்ட்ன்னு தெரியும் ஆனா சூப்பர்
ஃபாஸ்ட்ன்னு இப்போ தான் தெரியுது” என்றதும்

“ஹா ஹா ஹா” என்று சரித்தவன்...அவனின் தோளில்
தட்டி.. “போடா சும்மா சும்மா காமெடி பண்ணிக்கிட்டு”
என்று சொல்லிவிட்டு செல்ல..

“என்னது காமெடி பண்றேனா...என்னை பார்த்தா ஜோக்கர் மாதிரியா தெரியுது” என்று தன்னைத் தானே பார்த்துக் கொள்ள, அந்த நேரத்தில்...க்ளுக் என்ற அந்தப் பெண்ணின் சிரிப்புச் சத்தம் கேட்டு எழில் சுற்றி பார்க்க.. அங்கு வேலை செய்பவர்களைத் தவிர யாரும் இல்லை..

தன் பின்னந்தலையில் தானே தட்டியவன், “டேய் எழில் உனக்கு எப்போவும் உன் குயிலின் நினைப்புதானா, உன் பிரெண்டுக்குக் கல்யாணம், இப்போதைக்கு அதைக் கவனி, உன் குயில் எங்கேயும் போயிட மாட்டா....அவளை அப்புறம் பாத்துக்கலாம்” என்று நினைத்தவன் ப்ரியாவை தேடி சென்றான்..

மறுநாள் காலை அழகாக விடிந்தது.. கல்யாண வீடு களைகட்டியது..

சுவாசம் தொடரும்....

சுவாசம் 37

"எண்ணிய தவம்
"ஈடேறியது!

"என்னவனின் கைசேர்ந்து
"என்னவனின் என்னவள் ஆனேன்!!!...

கல்யாண வீடு.. பரபரப்பாகக் காணப்பட்டது..

“அந்தத் தோரணத்தைக் கொஞ்சம் தூக்கி கட்டுங்கபா, என்ன வேலை பாக்கறீங்க.. ம்ம் சீக்கிரம் வேலையை முடிங்க” என்று தோட்டக்காரன் வேலு வெளியே வேலை செய்பவர்களிடம் சரியாகச் செய்யுமாறு சொல்லிக் கொண்டிருக்க..

“அடேய் வேலு, இங்க வா” என்று வேலுவை அழைத்த ஆச்சி,

“எல்லோருக்கும் புதுத் துணி கொடுத்தாச்சி இல்ல, யாருக்கும் எந்தக் குறையும் இருக்கக் கூடாத” என்றவர்,

“ம்ம் சும்மா மச மசன்னு நிக்காம வேலைய பாரு, சீக்கிரம் கிளம்பனும், ஆமா இந்தச் சித்தன எங்க காணோம்..

“ஆச்சி அஞ்சு பஸ் வந்துருக்கு , அது போதுமா இல்ல இன்னும் தேவைபடுமான்னு பார்க்க போயிருக்கான்” எனவும்...அவர்களைப் பார்த்துக் கொண்டே வந்த லட்சுமி அம்மாள்

“அத்தை இங்கன என்ன பண்றீங்க, வாங்க வந்து உக்காருங்க, அதெல்லாம் அவங்க பார்த்துப்பாங்க” என்று அவரைச் சோபாவில் அமர வைக்க..

“அக்கா, தாலி, மெட்டி எல்லாம் எடுத்து வச்சிட்டேன், பூச்சரம் நேத்தே வந்திடுச்சி, ஆனா மாலைதான் இன்னும் வரல..... காலையில் கொண்டு வந்து தரேன்னு சொன்னாங்க, என்று பிரபா சொல்ல.

“என்ன பிரபா, இன்னும் கொஞ்ச நேரத்தில் நாம கிளம்பனும், நீ மொதல்ல அவங்களுக்குப் போன் போட்டுச் சீக்கிரம் கொண்டு வர சொல்லு” என்க

“சரி கா, இதோ பண்றேன்” என்று பிரபா நகர்ந்து விட,

“அத்தை இருங்க நான் போய் உங்களுக்குக் காபி கொண்டு வரேன்” என்ற லட்சுமி கிட்சனுக்குள் செல்ல

போக, அங்கே வள்ளி கையில் காபி கொண்டு வருவதைப் பார்த்து...

“நீயே கொண்டு வந்துட்டியா....சரி சரி ஆச்சிக்கு கொடுத்துட்டு... மத்தவங்களுக்கும் கொடு... அப்புறம் நீயும் சீக்கிரம் போய்க் கிளம்பு” எனவும்.....சரிமா என்று சந்தோஷமாக எல்லோருக்கும் காபி கொடுக்கச் சென்றாள் வள்ளி..

“ரோ ரோரோ ரோரோ , இல்லடா இல்லடா..என் யஸ்வின் செல்லம் எதுக்கு அழறான்..... அழக்கூடாது கண்ணா” என்று அழும் தன் ஒரு வயது மகன் யஸ்வினை சமாதானம் செய்து கொண்டிருந்தாள் ராதிகா..அப்பொழுது குழந்தையின் அழுகுரல் கேட்டு அங்குச் சென்றார் லட்சுமி.....

“என்ன ராதி, குழந்தை ஏன் அழறான்” என்று குழந்தையை வாங்கியவர்.. “என்னடா யஸ்வின் செல்லம், புது வீடுன்னு அழறியா.....அழக்கூடாது....என் ராஜா இல்ல” என்று குழந்தையைத் தட்டி சமாதானபடுத்திக் கொண்டே... ராதிகாவிடம், கௌதம் எங்க என்று கேட்க..

“அவங்களும் எழில் அண்ணாவும் மாப்பிள்ளைங்க , ரூம்ல இருக்காங்க பெரியம்மா”

“அப்படியா சரி... பாரு குழந்தை தூங்கிட்டான் அப்படியே தொட்டிலில் போடு தூங்கட்டும்... நாம கிளம்பும் போது எழுப்பிக்கலாம் சரியா” என்றவர் திரும்ப..

அங்குப் பவித்ரா ஐந்து மாத வயிற்றுடன் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தாள்..... பவித்ராவையும் ஹரிணியும் நேற்று சாயங்காலமே கூட்டிட்டு வந்துவிடு என்று லட்சுமி கேட்டு கொண்டதால் , ராஜேஷும் மறுப்பேதும் கூறாமல் இருவரையும் விட்டுவிட்டு நாளை காலை சீக்கிரம் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றான்...

அவள் வருவதைப் பார்த்து “பவி ரெடி ஆயிட்டியாடா...ராஜேஷ், அப்பா அம்மா எல்லாம் எப்ப வருவாங்கடா” என்று கேட்க

“நான் ரெடி ஆன்ட்டி அவர்தான் இன்னும் வரல.... போன் பண்ணி கேட்கனும்... அம்மாவும் அப்பாவும் கோவிலுக்கே வந்துறதா சொன்னாங்க ஆன்ட்டி”

என்று சொல்ல..

“சரிடா ராஜேஷை சீக்கிரம் வரசொல்லு… நேரம் ஆகிடுச்சு…. சரிமா, நான் மத்தவங்க ரெடி ஆயிட்டாங்களான்னு பார்த்துட்டு வரேன் “என்று நகர

அப்பொழுது மைனி என்று அழைத்துக்கொண்டே வந்தார் பார்வதி,

“என்ன பார்வதி நீ இன்னும் கிளம்பலையா, அண்ணாவும் ரவியும் கிளம்பியாச்சா”

“எல்லோரும் கிளம்பியாச்சு மைனி.. பொண்ணுங்க ரெடியான்னு பார்க்கணும் வாங்க” என்று இருவரும் மணப்பெண்களைக் காண சென்றனர்..

மோகனாவும் பிரியாவும் இந்த அரண்மனைக்கு வந்த புதிதில் தங்கியிருந்த அதே அறையில் தான் இருந்தனர்….கதவை தட்டிவிட்டு இருவரும் உள்ளே செல்ல.. அங்கே சிரிப்புச் சத்தம் அரையெங்கும் ஒலித்தது..

ஹரிணி, மேகா, செல்வி , ஆகியோர் சுற்றி நிற்க,

மணப்பெண்கள் கண்ணாடியின் முன்
அலங்காரத்துடன் அமர்ந்திருந்தனர்..

ப்ரியாவும், மோகனாவும் அவர்களின் நிறத்திற்கு
ஏற்றார் போல், தங்க ஜரிகை இழைந்தோட
அரக்குகலர் பட்டுடுத்தி ,வைர நகைகள் பூட்டி
மிதமான அலங்காரத்துடன், தேவதையாக
ஜொலித்தனர்.....

இருவரின் அருகில் சென்று , தன் கையால்
இருவருக்கும் திருஷ்டி கழித்தவர், “என் கண்ணே
பட்டுடும் போல் இருக்குமா ரொம்ப அழகா இருக்கீங்க
தங்கங்களா” என்று சொல்லிக்கொண்டிருக்கும்
பொது,

அங்கே வந்த காயத்ரி, தன் மகளின் அழகை கண்டு
பூரித்தவர் லட்சுமியிடம்..“அண்ணி, அண்ணா
கூப்பிடுறாங்க” என்று சொல்ல.. இதோ வரேன் மைனி
என்றவர், தீபாவிடம் நான் சொல்லும்போது ரெண்டு
பேரையும் கூட்டிட்டு வாம்மா” என்றவர் மற்ற
இருவரையும் அழைத்துக் கொண்டு வெளியே
சென்றார்....

அப்பொழுது வாசலில் முன்று கார்கள் வந்து நிற்க, ஒன்றிலிருந்து விஷ்ணுவும் அவளது தாய் பத்மா மற்றும் அவளது வருங்காலக் கணவர் கிருத்திக்கும் இறங்க, மற்ற இரு காரில் இருந்து லட்சுமியின் பிறந்த வீட்டிலிருந்து சொந்தங்கள் வந்திறங்கினர்....இந்த திடீர் கோவில் திருமணத்தால் நேற்றிலிருந்து சொந்த பந்தங்கள் எல்லாம் வந்தவன்னம் இருக்க, அவர்கள் அனைவருக்கும் அவுட் அவுஸில் தங்க வைக்க ஏற்பாடு செய்யபட்டது.....

உள்ளே வந்த விஷ்ணு, லட்சுமியின் பாதம் பணிந்து "ஹாய் ஆன்ட்டி, நான் விஷ்வாதிகா, பிரியா கூட us ல அவ ரூம்மேட் இருந்தேன்....இவங்க எங்க அம்மா பத்மா, இவர் என் வருங்காலக் கணவர் கிருத்திக் என்று அறிமுகபடுத்த

"அப்படியாம்மா ரொம்பச் சந்தோஷம், வாங்கம்மா, வாப்பா என்று மூவரையும் வரவேற்றவர், "அதோ அந்த ரூம்லதான் பிரியா இருக்கா போய்ப் பாரும்மா" என்று அனுப்பி வைத்துவிட்டு தன் பிறந்த வீட்டினரை வரவேற்க செல்ல.. காயத்ரியும், பார்வதியும் வேறு வேலை பார்க்க சென்றுவிட்டனர்...

பிரியாவின் அறைக்குச் சென்று அவளைச் சந்திக்க... ப்ரியா அவர்களைப் பார்த்து “ஹே விஷு, வா வா எப்போ வந்தே, நீ மட்டுமா வந்த, பத்துமா எங்க என்று கேட்டுக்கொண்டிருக்கும் போதே , டாலு என்றபடி வந்தார் விஷுவின் தாய் பத்மா...

“ஹே பத்துமா , வாங்க வாங்க, எப்படி இருக்கீங்க, இதான் நீங்க வர்ற நேரமா... உங்க பொண்ணு கல்யாணத்துக்கு” என்று பொய்யாய் கோபம் கொள்ள

“நேத்தே வரனும்ன்னு நினைச்சோம் , முடியலை டாலு, நீ எப்படி இருக்க” என்று நலம் விசாரிக்க..

“நான் நல்லா இருக்கேன் பத்துமா என்றவள்.. பத்துமா இவதான் மோகனா, நான் போன்ல அடிக்கடி சொல்லுவேன்ல, இவங்க மூணு பேரும் என் நாத்தனார் ,மேகா, செல்வி, ஹரிணி.... இவங்க தீபாக்கா, usல நாங்க எல்லோரும் ஒரே அப்பார்ட்மெண்ட்ல தான் தங்கி இருந்தோம் , விஷு சொல்லியிருப்பாளே” என்க

“ம்ம்ம் சொன்னா சொன்னா, வந்ததுல இருந்து உங்க புராணம்தான்” என்று சொன்ன கிருத்திக்கை பார்த்து யார் என்று கேட்க போனவள் , “ஓஓஓ நீங்கதான் கிருத்திக்கா வாழ்த்துக்கள்” என்று எல்லோரும் பேசிக்கொண்டிருக்க..

மேகா மட்டும் மெதுவாக நழுவி வெளியே வந்தாள், ஹாலில் நிறையப் பேர் அமர்ந்திருப்பதைப் பார்த்தவளின் கண்கள் யாரையோ தேடின..

“எங்க போயிருப்பாங்க என்று யோசித்தப்படி திரும்ப, மேலே பால்கனியில் நின்று போனில் பேசிக்கொண்டிருந்தவனைப் பார்த்த மேகா, மெதுவாக மாடி ஏறினாள்.. கல்யாண வீடு என்பதால் யாரும் கவனிக்கவில்லை அவளை..

மேலே வந்தவள், சிறிது தயங்கி பின் மெதுவாக, அவன் அருகே சென்று நின்றாள்.. அவனோ வெளியே பார்த்தபடி போனில் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருக்க, அப்பொழுது அவனது காதில் வளையல் குலுங்கும் சத்தம் கேட்டு மெதுவாகத் திரும்பினான்.

அங்கே ஒரு அழகான இளம் பெண் நின்றிருப்பதைக் கண்டான்.....பேபிபிங் கலரில் டிசைனர் ஸாரி உடுத்தி, தலைநிறைய மல்லிகை பூவை சூடி, தன் கால் பெருவிரலால் தரையில் கோலம் போட்டபடி நின்றிருந்த கோலம் கண்டு புரியாது விழித்தவன்.....அவளருகே சென்று...

“ஹலோ மிஸ் தரை நல்லாதானே இருக்கு, அதை ஏன் உங்கள் விரலால் நோண்டி குழி போடுறீங்க” .. என்று கேட்க

சட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்த மேகா சரியான டியூப் லைட் என்று திட்ட.வாய் திறப்பதற்குள், யாரோ வரும் அரவம் கேட்க.. அவனை முறைத்துவிட்டு... தன் அண்ணன்கள் இருக்கும் அறைக்குள் செல்ல..

“இப்போ நான் என்ன சொல்லிட்டேன்னு என்னை முறைச்சிட்டு போகுது இந்தக் குள்ளவாத்து” என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டிருக்க..

இவர்களின் நாடகத்தைப் பார்த்துக் கொண்டே வந்த விஷூ.. “ என்ன டாக்டரே அந்தப் பொண்ணு இப்படி

மொறைச்சிட்டு போகுது உன்னை...என்ன விஷயம்” என்று குறும்புடன் கேட்க...

“ஹே டாலி நீ எப்போ வந்தே, வீட்ல எல்லோரும் வந்துருக்காங்களா, உன் அவரும் வந்துருக்காரா, என்று கேட்க”

“எல்லோரும் வந்துருக்கோம்.. அத விடு, சரியான டியூப்லைட் டா எலி நீ....ஒரு பொண்ணு வந்து உன் முன்னாடி வெட்கப்பட்டு வந்து நிக்கிறா, நீ என்னடான்னா, தரையை ஏன் நோன்டுறீங்கன்னு கேட்குற.... நீ எல்லாம் எப்படிடா டாக்டருக்கு படிச்ச” என்று நக்கலுடன் கேட்க

“இதெல்லாமா டாக்டர் படிப்புல சொல்லி தருவாங்க” என்று ஆச்சர்யபடுவது போல் நடித்தவன்....விஷ்வின் தோளில் கை போட்டு, “டாலி அந்தப் பொண்ணு எதுக்கு வந்திருக்குன்னு எனக்குத் தெரியும்.... பார்த்தா ரொம்பச் சின்னப் பொண்ணு மாதிரி தெரியுது டாலி இதெல்லாம் இந்த வயசுல வர்ற ஈர்ப்பு அதை நாம என்கரேஜ் பண்ண கூடாத.....அதுவும் இல்லாம என் குயிலுதான் எனக்கு வேணும், அவளுக்கு முன்னாடி யாரு வந்தாலும் நோ என்ட்ரிதான்”

“யாருடா உன் குயிலு, ஹேய் உன் தேவதையா

கண்டுபிடிச்சிட்டியா" என்று குதுகலத்துடன் கேட்க....

"எங்க அவ குரல் மட்டும்தான் கேட்டுருக்கேன்...அவ இங்கேதான் எங்கேயோ இருக்கா.....கண்டிப்பா அவளைக் கண்டுபிடிச்சி என் லவ்வ சொல்லிடுவேன்" என்று உறுதியுடன் சொல்ல

சபரிஷின் அறைக்குள் சென்றவள் எதற்கோ மீண்டும் வெளியே வந்த மேகா எழில் பேசியது அனைத்தும் கேட்டுவிட்டு.....அவன் மனதில் வேறு பெண் இருப்பதாக எண்ணிக் கொண்டு மனதுக்குள் தவித்தாள்.....அந்த முகம் தெரியாத குயிலின் மேல் கோபம் கோபமாக வந்தது...(ஹி ஹி அடியே லூசு அது நீதான்..)

அப்பொழுது மேகா என்று அழைத்துக்கொண்டே வந்த ஹரிணி....அவள் ஏதோ யோசித்தவாறு நிற்பதை கண்டவள்.....அவளை தொட்டு உலுக்கி,

" ஏய் மேகா நீ என்னடி பேய் அறைஞ்ச மாதிரி நிக்கிற.....வா அண்ணாக்களைக் கீழே கூட்டிட்டு வர சொன்னாங்க, நாமதான் கை பிடிச்சி கூட்டிட்டுப் போகனுமாம் வா" என்று சொல்ல.....மேகாவும்

தற்போதைக்கு இந்த விஷயத்தை ஒத்திவைத்துவிட்டு சபரிஷின் அறைக்குச் செல்ல,

மாப்பிள்ளை கோலத்தில் நின்ற தன் அண்ணன்களின் அருகே சென்றவர்கள்... சந்துருவின் கையை மேகாவும், சபரிஷின் கையை ஹரிணியும் பிடிக்க,

அவர்கள் இருவரையும் பார்த்த கௌதம், "இந்த அத்தான் கை சும்மாதானே இருக்கு இதை யாரு பிடிக்கிறது" என்று கிண்டலாகக் கேட்கவும்..

"என்னங்க இங்க கொஞ்சம் வாங்க, நான் சொல்றேன் உங்க கையை யாரு பிடிக்கறதுன்னு" என்று ராதிகா சொல்லிக்கொண்டே வர..

"அய்யோ நான் தொலைஞ்சேன்".. என்றவன், "ஹி ஹி அது ஒன்னும் இல்ல ராதிகுட்டி சும்மா விளையாட்டுக்கு சொன்னேன்" என்று அசடு வழிய

"நம்ம பஞ்சாயத்த அப்புறம் வச்சிக்கலாம்... எல்லோரும் கீழே ரெடியா இருக்காங்க, பொண்ணுங்க ரெண்டு பேரும் கிளம்புனத்துக்கு அப்புறம் தான் மாப்பிள்ளைங்க கிளம்பனுமாம்,

அதான் சொல்ல வந்தேன் ஒரு பத்து நிமிஷத்துல நீங்க இவங்கள கூட்டிட்டு கீழே வாங்க" என்று சொன்னவள், கௌதமை பார்த்துக் கண் சிமிட்டிவிட்டு சென்று விட்டாள்..

"ஸ்ப்பா மாப்பிள கண்ணடிச்சிட்டாடா, என் மேல கோபம் இல்ல, இல்லன்னா இன்னைக்கி நான் காலி"

"என்ன மச்சான் இப்படிப் பயப்படுறீங்க.".

"ஹா ஹா ஹா நாளைக்கு நீங்களும் எப்படி இருக்கப் போறீங்கன்னு பார்க்கதானே போறேன் " என்று கௌதம் சொல்லவும், எல்லோரும் சிரித்து விட்டனர்..

கல்யாணத்திற்கு வந்திருந்த சொந்தங்கள் எல்லோரும், தயாராக இருந்த பஸ்ஸில் கிளம்பிவிட....மணபெண்கள் மற்றும் பெண்கள் ஒரு காரிலும், மணமகன்கள் மறறும் மற்ற ஆண்கள் ஒரு காரிலும்...பெரியவர்கள் அனைவரும் ஒரு காரிலும் ..திருச்செந்தூர் கோவிலை நோக்கி புறப்பட்டனர்..

கோவில் வாசலில் வந்து இறங்கியவர்கள், அவரவர் ஜோடிகளுடன் இணைந்து பிள்ளையாரை

வணங்கிவிட்டு தம்பி முருகனை காண சென்றனர்..

சந்துரு மோகனாவின் கையை இறுக்கப் பிடித்துக்கொள்ள, அவளோ அவனை நிமிர்ந்து பார்க்காமல் வெட்கம் வந்து தடுக்க, மேலும் தலையைக் குனிந்து கொண்டாள்.....அவனும் இங்கு வந்ததில் இருந்து அவளின் முகத்தைக் காண ஆவல் கொண்டான்...ஆனால் அதற்குதான் வழியில்லாமல் அவள் தலைகுனிந்திருப்பதைக் கண்டு, அவள் காதருகில் "குட்டிமா ஒரு தடவை என்னை நிமிர்ந்து பாரேன்" என்று கிசுகிசுப்பாகச் சொல்ல

"ம்ம்ம் முடியாது இது கோவில்" என்று உள்ளே போன குரலில் சொல்ல

"நான் என்னைப் பார்க்கதானே சொன்னேன் குட்டிமா...வேறு எதுவும் கேட்களையே" என்று விஷமமாகச் சொல்ல...

அவன் கூறியதன் பொருள் உணர்ந்து மோகனா நின்று அவனை முறைக்க..

ஹி ஹி என்று அசடு வழிந்த சந்துரு, மோகனாவின் கையைப் பிடித்து முன்னே சென்றான்..

அங்கு ப்ரியாவோ சபரிஷை கண்டுகொள்ளவே இல்ல.. அவள் மனதில் இப்பொழுது நிறைந்திருப்பது எல்லாம் முருகனை காண வேண்டும் என்பது மட்டுமே....அதை உணர்ந்து அவனும் அமைதியாகவே வந்தான்..

மணமக்கள் நால்வரும் முருகனை கண்குளிர கண்டனர்....அப்பொழுது கடவுளின் பாதத்தில் வைத்திருந்த மாங்கல்யத்தை எடுத்து வந்து ஐயர் கொடுக்க.....

ஒரே நேரத்தில் தன் இணைகளில் கழுத்தில் மங்களநாணை பூட்டி....பெரியவர்களின் அட்சதை ஆசிர்வாதத்துடன், தன்னில் பாதியாக ஏற்றுக் கொண்டனர் சபரிஷும், சந்துருவும்.....

சந்துருவும் மோகனாவும் பிரகாரத்தைச் சுற்ற செல்ல.. ப்ரியா மட்டும் கடவுளிடம் மானசீகமாகப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்ட சபரிஷ்....அவளின் தோளை

தொட... தவத்தில் இருந்து வெளிவந்தவளின் கண்கள் லேசாகச் சிவந்திருக்க...அவளின் மனநிலையை ஊகித்தவன்...

அவள் கண்களைத் துடைத்துவிட்டு, "இனி எதுக்காகவும் நீ கண்கலங்க கூடாது சின்னு" என்றவன் அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டு கோவிலை வலம் வர சென்றான்....

எல்லோரும் கோவில் கருவறையின் உள்ளே செல்ல முடியாது என்பதால் முக்கியமானவர்கள் மட்டும் உள்ளே செல்ல

எழில் அவர்கள் வரும் வரை கடற்கரையைச் சுற்றி பார்க்கலாம் என்று அங்க சென்றான்...அவன் மனமோ தன் தேவதையைக் காண முடியாத வருத்தத்தில் இருந்தது....அப்பொழுது அவனின் குயிலின் குரல் கேட்க சட்டென்று திரும்பினான்,

.

அங்கே காலையில் கண்ட பெண்னும் இன்னொரு பெண்ணும் தன் அக்கா குழந்தைகளுடன் ஓடி பிடித்து விளையாடிகொண்டிருந்தனர்.. அப்பொழுது "ஹே குட்டி பசங்களா என்னைப் பிடிங்க பாப்போம்" என்று

சொல்ல..

அவளின் குரலை கேட்டு அசையாது நின்றவன்....இது என் தேவதையோட குரல் ஆச்சே.... அப்போ இந்தப் பெண் தான் என் மேகாவா" என்று நினைத்தவன் அவளின் சிறுபிள்ளை விளையாட்டை ரசிக்க ஆரம்பித்து விட்டான்..

குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தவள் .....அங்கே எதற்கோ அடுக்கபட்டிருந்த செங்கல் மீது வேகமாக வந்து இடித்துக்கொள்ள.....அம்மா அன்று வலிதாங்காமல் கத்த...

நம்ம ஹீரோ எழிலும் கத்தினான்... என்னவோ அவனுக்கே அடிபட்ட மாதிரி.. ஐயோ என்று..

ஹரிணி மேகாவை நெருங்குவதற்குள், அவளை நெருங்கிய எழில்,
"ஹே குயிலு மெதுவா வரக்கூடாதா, இப்படிதான் கண்ணுமுன்னு தெரியாம ஓடி வரனுமா, இப்போ பாரு கால்ல அடி பட்டுருச்சி... எங்க காலை காட்டு நான் பார்க்கிறேன்" என்று அவளின் கால் அருகே தன் கையைக் கொண்டு போக.....அவளோ அவன் தொடுவதற்குள் சட்டென்று காலை இழுத்துக்கொண்ண்டாள்.

அப்பொழுது தான் அவளுக்கு உறைத்தது அவன் தன்னைக் குயில் என்று அழைத்தது“அப்போ, நான் தான் அவங்க மனசுல இருக்கிற குயிலா” என்று எண்ணி மகிழ்ந்த நேரம், அங்கு ஓடிவந்த ஹரிணி,

“மேகா என்னாச்சு கல்லுல இடிச்சிகிட்டியா , பார்த்து ஓட கூடாது” என்று சொன்னவள் மேகாவின் காலை பார்க்க.. “ஐயோ பெருவிரல்ல இரத்தம் வருதுடி , வா காருக்கு போகலாம்...அங்க எப்படியும் ஃபஸ்ட் எய்டு பாக்ஸ் இருக்கும்” என்று சொல்ல..

இரண்டு எட்டு எடுத்து வைத்தவள் “ஷ் வலிக்குதுடி” என்றபடி அருகில் இருந்த கல் பெஞ்சில் அமர்ந்து விட்டாள்..

“சரி நீ இரு நான் போய் மருந்து எடுத்துட்டு வரேன்” என்று ஹரிணி சென்றுவிட..

இவ்வளவு நேரம் அவளையே பார்த்துக்கொண்டிருந்த எழில் , அவளிடம் “நான் ஒரு டாக்டர் ,காலக் காட்டு நான் பார்க்கிறேன்” என்றான் ஒருமையில் அழைத்து,

அவளோ நிமிர்ந்து பார்த்தால்தானே, குனிந்தவாறே

மாட்டேன் என்பது போல் இடம் வலமாகத் தலை ஆட்ட..

“இப்போ காட்ட போறியா இல்லையா” என்று சிறு கோபத்துடன் எழில் கேட்க..

அவன் அதட்டவும் , நிமிர்ந்து பார்த்தவள் சுற்றும் முற்றும் பார்த்து மீண்டும் அவனைப் பார்க்க, அந்த மீன் விழியில் விரும்பி விழுந்தான்...

‘அடேய் மக்கு பிளாஸ்திரி நீ டாக்டர்ன்னு எனக்குத் தெரியும் இங்க இருக்கிறவங்களுக்குத் தெரியுமா’ என்று மனதுக்குள் கவுன்டர் கொடுத்தவள் , மீண்டும் குனிந்து கொள்ள..

இவ இப்போதைக்கு அடிபட்ட விரலை கான்பிக்க மாட்டா.. என்று நினைத்தவன்.. அவள் அருகில் சென்று அவள் காலை எடுத்து மண்டியிட்டிருந்த தனது கால்மேல் வைத்தான்..

அவனின் செயலில் மேகாவின் உடல் நடுக்கத்தைக் காட்ட கண்களை இறுக்க மூடிக்கொண்டாள் , அவளும் சிறு பெண் தானே, இப்போதுதான் காலேஜில் அடியெடுத்து வைத்திருக்கிறாள் ...

அண்ணிய ஆணின் தொடுகை அவளுள் சிறு நடுத்தை ஏற்படுத்தியது...

எழிலோ தன்னுடைய பிறவி பயனை அடந்துவிட்டதாக அவ்வளவு சந்தோஷப்பட்டான்.. தன் கனவு தேவதை இவள் தான், தான் தேடிய துணை இவள்தான் என்று

“பெண்ணே
என் விரல்கள் கோலமிட
வேண்டுமெனில் !!!
அது உன் பாதமாக
இருக்க வேண்டுமடி!!!

என்று மனதில் நினைத்துக் கொண்டு அவளை நிமிர்ந்து பார்க்க, அவள் கண்களை மூடியிருந்த தோற்றம் அவனைக் கவர அவளைக் காதலுடன் குயிலு என்ற அழைக்க (ஆக மொத்தம் நீ அடிபட்டதைப் பார்க்கல)

அவனின் அழைப்பில் கண் திறந்து பார்த்தவள் அவன் கண்களில் தெரிந்த ஏதோ ஒன்றில் நேருக்கு நேர் பார்க்க முடியாமல் தவித்தவளுக்கு முத்து முத்தாய் வியர்த்து விட....அது இன்னும் அவளுக்கு அழகு

சேர்த்தது.. அவளை அனு அணுவாய் ரசித்தான்....

அதற்குள் ஹரிணி வர....தன் கனவில் இருந்து மீண்டவன்.. அந்தப் பஸ்ட் எயிட் பாக்ஸை வாங்கி அவளின் விரலுக்கு மருந்திட்டுக் கட்டினான்.. மருந்திட்டு கட்டி முடிக்கவும் மேகா தன் காலை உடனே இழுத்துக் கொண்டாள்..

“தேங்க்ஸ் சார்” என்று ஹரிணி சொல்ல..அவனோ அவளை முறைத்தான். “என் தேவதைக்கு நான் சேவகம் செஞ்சேன், இது என் பாக்கியம் கூட , இதுக்கு இது எதுக்குத் தேங்க்ஸ் சொல்லுது” என்று மனதில் கோபம் கொண்டான்..

ஹரிணியோ மேகாவின் காதில் “ஏண்டி ஒரு தேங்க்ஸ் சொன்னது அவ்ளோ பெரிய குத்தமா , இந்த எலி இந்த முறை முறைக்குது” என்று சொல்ல.. இப்பொழுது மேகா அவளை முறைத்தாள்

“அடியே எலி கிளின்னு சொன்னே உன்னை என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது” என்று முறைத்துக்கொண்டு அவள் காதருகில் சொல்ல..

இருவரையும் பார்த்த ஹரிணி.. “ஆஹா கதை அப்படிப் போகுதா... இது எப்போ இருந்து... இந்த டாக்டர் வந்து ரெண்டு நாள் கூட ஆகலை... அதுக்குல்ல இதுங்களுக்கு லவ்வு” என்று நினைத்துக் கொண்டு..அவர்களைப் பார்த்து

“நான் தீபா அக்கா பசங்களைக் கூட்டிட்டு அங்க போறேன் நீ சீக்கிரமா வா” என்றவள் இருவரையும் முடிந்த மட்டும் முறைத்து விட்டு , எழிலை கொஞ்சம் அதிகமாகவே முறைக்க.

அவனோ.... “கிளம்பு கிளம்பு காத்து வரட்டும் .... நான் என் குயில் கூடக் கொஞ்சம் பேசணும்” என்பது போல் பார்க்க

“வெவ்வேவே ப்பே” என்று சொல்லிவிட்டு ஓடி விட்டாள் ஹரிணி..

“ஹா ஹா வாலு வாலு” என்று சிரித்தவன், தன் தேவதையைப் பார்க்க, அங்கு அவள் இல்லை..
“அதுக்குள்ள எங்க போனா.. எங்க போயிட போறா... இரு இரு நீ தனியா மாட்டுவ இல்ல அப்போ இருக்கு....என்னை எலின்னா சொல்றே, அதுவும்

இல்லாம குடுகுடுப்பைகாரன் மாதிரியா இருக்கேன், இருடி" என்றவன்

"ஆனாலும் என் தேவதை அநியாயத்துக்கு இவ்ளோ அழகா இருக்காளே..... குயிலு யாரெல்லாம் என்னைக் கிண்டல் பண்ணாங்களா உன்ன அவங்க முன்னாடி நிறுத்தி , பாருங்கடா என் கனவு தேவதையைன்னு காட்டணும் போல இருக்கு குயிலு" என்று ஏக்கம் கொண்டான் எழில்.

சுவாசம் தொடரும்...

சுவாசம்38

அரண்மனை மீண்டும் பரபரப்பாகக் காண பட்டது, மணமக்கள் வந்தாச்சு என்று ஒருவர் குரல் கொடுக்க.. ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்துவர பட்டனர்.....பூஜை அறையில் மணமகள்கள் இருவரும் விளக்கேற்ற....தம்பதியர்களுக்குப் பாலும் பழமும் கொடுக்கப்பட்டது..

சந்துரு கையில் ஒரு டம்ளர் பால் கொடுக்கப் பட அதில் பாதி அருந்தி விட்டு மீதியை மோகனாவிடம்

கொடுக்க அவள் வெட்கபட்டுக் கொண்டே மீதியை குடித்தாள்.

அதே போல் சபரிஷிடமும் ஒரு டம்ளர் பால் கொடுக்கப் பட, அவன் பாதி அருந்திவிட்டு ப்ரியாவிடம் கொடுக்க, அவளோ அவனைப் பார்த்து புன்னகைக்க....அவளின் புன்னகையின் அர்த்தம் புரிந்துகொண்டவன்.. அவளுக்கு அவனே ஊட்டினான்.. யாருக்கும் அது வித்தியாசமாய்த் தெரிய வில்லை…

மாலை நடைபெற இருக்கும் ரிசப்ஷன்க்காக.....மணமக்களும்., பெரியவர்களும் சிறிது ஓய்வு எடுத்தனர்..பின் மாலை ஆறு மணி மேல் அனைவரும் ரெடியாகி அரண்மனையின் தோட்டத்தில் அலங்கரிக்கப் பட்டிருந்த மேடையில் தம்பதியர் நால்வரும் நின்று கொண்டு வந்தவர்களின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டிருந்தனர்.....

சபரிஷ் மற்றும் சந்துரு கோட் சூட் உடையிலும், பிரியா மற்றும் மோகனா, டிசைனர் ஸாரியிலும் அந்த மேடையில் வண்ணமயமாக அழகுற ஜொலித்துக் கொண்டிருக்க...அவர்களைக் கண்டு சபரிஷும் சந்துருவும் தங்கள் இணைகளின் அழகை திருட்டுதனமாகச் சைட் அடித்துக் கொண்டிருந்தனர்...

இசை கச்சேரி ஒருபுறம் செவிக்கு
விருந்தளிக்க....ஒவ்வொருத்தராக வந்து மணமக்களை
வாழ்த்தி செல்ல....குழந்தைகள் ஓடி ஆடி விளையாட,
பெரியவர்கள் அமர்ந்து பேசிக்கொண்டும்
வந்தவர்களை வரவேற்றுகொண்டும் இருந்தனர்..

அப்பொழுது

“எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று”

என்ற சபரிஷின் காண குரலில் சட்டென்று பிரியா
திரும்பிப்பார்தாள்

“ஏதோ
அது ஏதோ
அது ஏதோ உன்னிடம் இருக்குறது!!!
அதை அறியாமல் விட மாட்டேன்
அதுவரை உன்னைத் தொட மாட்டேன்
எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று!!!
ஏதோ
அது ஏதோ
அது ஏதோ உன்னிடம் இருக்கிறது!!!

என்று அவளைப் பார்த்துக் கொண்டே கண்களில் காதலுடன் அவன் பாட.....அதை கண்டு அவனின் குரலில் மனம் மயங்கி அதே காதல் பார்வையை அவனை நோக்கி வீசியபடி மெய்மறந்து நின்றாள் பிரியா.....

.....

மாலை மயங்கி இரவும் கவிழ மணமக்கள் எதிர்பார்த்த இரவும் வந்தது.....

சபரிஷ் தன் ரியாவை எதிர்பார்த்து அறையில் காத்திருக்க, அவளா சந்துருவிடம் இந்த ஒரு வருட கதையை இப்பொழுதே பேசி முடிக்கும் முடிவில் அவனின் அறையில் பேசிக்கொண்டிருக்க, அவனோ அவள் பேச்சில் கலந்து கொண்டாலும் ....தன்னவளுடன் இனிமையாகக் கழிக்கப் போகும் தருணத்திற்காக எதிர்பார்த்துக் காத்திருந்தான்.....

அவனின் அவஸ்த்தையைக் கண்ட பிரியாவின் இதழில் ரகசிய சிரிப்பு வந்து ஒட்டிக் கொண்டது.....

மோகனாவிற்கு அலங்காரம் முடித்த தீபா, பிரியாவை தேடி வெளியே வர..... அங்குச் சோபாவில் அமர்ந்து மொபைலை நோண்டிக்கொண்டிருந்த எழிலை

கண்டதும் அவனிடம் “எழில் ப்ரியாவை பார்த்தியா” என்று கேட்க

தன் சட்டை பாக்கெட்டை பார்த்தவன், “இங்க இல்லையே பிச்சூ நான் பார்க்கவில்லை” என்று சொல்ல..

“டேய் ஒழுங்கா சொல்ல போறியா இல்லையா” என்று பல்லை கடித்துக் கொண்டு கேட்க

ஹி ஹி இப்படி மரியாதையா கேட்டா சொல்ல போறேன்..... அவ சந்துரு கூடப் பேசிட்டு இருக்கா” என்க

அப்பொழுது அவர்கள் பேசி கொண்டதை கேட்ட லட்சுமியும் காயத்ரியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள.....காயத்ரி தன் தலையில் அடித்துக் கொண்டு...

“என்னது சந்துருகூடப் பேசிட்டு இருக்காளா....இவளை... இருங்க அண்ணி நான்

போய்க் கூட்டிட்டு வரேன்" என்று அவளை அழைக்கச் செல்ல.. அங்குப் பிரியா பேசுவதை ஆர்வமாகக் கேட்டுக்கொண்டிருந்த சந்துருவை பார்த்த காயத்ரிக்கு.. "ஐயோ அவதான் லூசு மாதிரி நேரம் காலம் தெரியாம.. பேசிட்டு இருக்கான்னா.. இந்தச் சந்துரு வேற தலையை ஆட்டி ஆட்டி கதை கேட்டுட்டு இருக்கான்.....இதுங்க அலும்பு தாங்கமுடியலையே" என்று நினைத்துக் கொண்டவர்...

"ப்ரியா இங்க என்ன பண்ற வா" என்று காயத்ரி அழைக்க..

" ம்ச் இருங்கம்மா நான் பேசிட்டு இருக்கேன்"

"அடியேய் இப்போ நீ வரல" என்று பல்லை கடிக்க

தன் அன்னையை முறைத்தவள்.....சந்துருவிடம், "சரிடா, நான் கிளம்புறேன் நாளைக்கு மிச்ச கதையைச் சொல்றேன்"

"சரி பேபி, நாளைக்குக் கண்டிப்பா சொல்லணும்" என்று அவனும் ஜால்ரா போட...

“ நாளைக்குதானே....நீ முழுசா திரும்பி வந்தா நான் சொல்றேன்” என்று விஷமமாகச் சிரித்துக் கொண்டே செல்ல.....

“என்ன இது பேபி சிரிப்பே சரியில்லையே.....ஏதோ வில்லங்கம் பண்ணியிருக்கா...என்னவா இருக்கும்” என்று குழம்பினான் அவன்.....

அதைக் கண்ட காயத்ரி “ஹய்யோ.. இவ திருந்தினாலும் இவளை திருந்த இவன் விடமாட்டான் போல” என்று நினைத்தவர் . ப்ரியாவை அழைத்துச் சென்று அலங்காரம் முடித்து, சபரிஷின் அறைக்குள் அனுப்பிய பிறகே... அக்கடாவென்று வந்து அமர்ந்தார்..

சந்துருவின் அறையில், அவன் குழம்பியபடி அமர்ந்திருக்க....கதவு திறந்து கொண்டு, மனதில் எழுந்த படபடப்புடன் மெதுவாக நடந்து வந்தாள் மோகனா...

அவளைக் கண்டவன் மனதில் குழம்பம் நீங்கி ரசனை வந்து குடிக் கொள்ளத் தன்னவளை அனு அனுவாக

ரசித்தான்....பின் அவள் கை பிடித்துப் பக்கத்தில் அமரவைத்தவன் அவளை நெருங்கி அமர்ந்து, அவளைத் தோளோடு அணைத்து அவள் சூடி இருந்த மல்லிகைபூவை வாசம் பிடிக்க அப்பொழுது.. திடீரென்று...

“பொத்தி வச்ச மல்லிகை மொட்டு
பூத்திடுச்சு வெட்கத்த விட்டு
பேசி பேசி ராசியானதே.....
மாமன் பேரை சொல்லி சொல்லி ஆளானதே
ரொம்ப நாளானதே”
என்று திடீரென்று ப்ரியாவின் குரல் கேட்க....

மோகனாவின் அருகில் இருந்தவன்..அவளை அப்படியே கட்டிலில் தள்ளி விட்டு எழுந்து நின்று சுற்றும் முற்றும் தேட..மோகனாவோ தலையில் கை வைத்து அமர்ந்து விட்டாள்..

பிரியாவின் குரல் எங்கிருந்து வருகிறது என்று தேடியவன்....அது தன் மொபைலில் இருந்து வருவதைக் கண்டு.....இந்த நேரத்தில் தன் மொபைலை ஆஃப் செய்யாமல் இருந்த தன் மடதனத்தை எண்ணி தலையில் அடித்துக் கொண்டான்.....

ஓஓஓ இதுக்குதான் அந்த விஷம சிரிப்பா....அய்யோ பாவம் எங்க அண்ணன் எப்படிதான் சமாளிக்கப் போறாரோ" என்று எண்ணியவன், பிரியாவின் செயலில் கோபம் வருவதற்குப் பதிலாகப் புன்னகையே வர....இதழோரம் பூத்த புன்னகையுடன் மோகனாவை நோக்க.....அவள் முறைப்பதை கண்டு.....

"ஆஹா...பேபி வச்சிட்டியே ஆப்பு...இதுக்குதான் நாளை என்னை முழுசா பார்க்க முடியாதுன்னு சொன்னியா" என்றவன் ஹி...ஹி....என்று அசடு வழிந்து கொண்டே மோகனாவை " குட்டிமா" என்று பாவமாக அழைக்க.....

அவனின் பாவனையில் மோகனாவுக்குச் சிரிப்பு வந்துவிட.....அதையே சம்மதமாக எடுத்துக் கொண்டு மனதில்எழுந்த சந்தோஷத்துடன் தன்னவளை இறுக்கமாகக் கட்டிக் கொண்டான்.....

சபரிஷின் அறை.....

நாணமும் காதலும் எதிர்பார்ப்பும் போட்டி போட

அமைதியாக வெட்கபட்டு தலைகுனிந்து அன்னம் போல் மெதுவாக நடந்து உள்ளே வந்தவளை,

கண்ணிமைக்காமல்.. கைகளை மார்புக்கு குறுக்காகக் கட்டிக்கொண்டு அவளின் முகபாவனைகளை ரசித்துக் கொண்டிருந்தான்

அவனின் பார்வையில் படப்படப்பு அதிகமாக அங்கேயே நின்றாள்.... நேற்று இந்த அறைக்குள் வந்தாள்தான், ஆனால் இன்று ஏனோ அவளுக்கு மனது குறுகுறுக்கக் கையில் உள்ள பால் சோம்பை இறுக்கப் பற்றிக் கொண்டாள்..

அவளின் நிலையைக் கண்டு மனதுக்குள் சிரித்தவன் அவளை நெருங்கி..அவளின் கையில் உள்ள பால்செம்பை வாங்கிப் பக்கத்தில் இருந்த மேஜை மேல் வைத்தவன் , அவளைத் தோளோடு அணைத்து "சின்னு எதுக்குப் பயம், உனக்குப் பிடிக்காதது எதுவும் நடக்காது" என்று அவளை அழைத்துச் சென்று கட்டிலில் அமர வைத்தவன், தானும் அவளை நெருங்கியே அமர்ந்தான்...

அப்பொழுது எழில் சொன்னது நியாபகம் வந்தது..

“பாஸ் கவலை படாதீங்க, பூரி நார்மல்லாதான் இருக்கா.... நான் அவளைத் தரவா செக் பண்ணிட்டேன்.. நீங்க அவளுக்குப் பக்கபலமா இருந்தா அவ நூறு வயசு வரைக்கும் சந்தோசமா இருப்பா, போங்க பாஸ்..... சீக்கிரமா எனக்கு ஒரு மருமகனை ரெடி பண்ணுங்க” என்று அவள் உடல் நிலையைக் குறித்துக் கூறியது நினைவு வர தைரியமாகவே அவளை நெருங்கினான்.....

“சின்னு...என்னாச்சுடா ஏன் பேசாம இருக்க” என்றபடி அவள் தோளில் கை வைக்க..

“ஒன்னும் இல்ல என்பது போல் தலையாட்டியவள் சட்டென்று எழுந்து ஜன்னல் அருகே போய் நின்று கொள்ள.....

அவள் அருகே சென்று பின்னோடு கட்டிக்கொண்டு, அவள் கழுத்தில் தன் இதழை பதித்து.....”சின்னு நான் ரொம்பச் சந்தோஷமா இருக்கேன்டா...நீ எப்படிப் பீல் பண்ற” என்று அவளிடம் கேட்டான்,

“நான் ரொம்ப ரொம்பச் சந்தோஷமா இருக்கேன் ரிஷி” என்று திரும்பியவள், அவன் கன்னத்தைக் கையில்

தாங்கி “எனக்குக் கிடைக்குமா கிடைக்காதான்னு, பயந்து பயந்து, காத்திருந்து கிடைச்ச வரம் நீங்க... என் மனசுல நீங்க வந்த நாளில் இருந்து ஏதாவது ஒரு தடங்கல், பவிக்கும் உங்களுக்கும் கல்யாணம் சொல்லி....அதை நீங்க தீர்த்து வச்சு, அதுக்கு அப்புறம்....ஆன்ட்டி வந்து உங்களுக்கும் மோஹக்கும் கல்யாணம்ன்னு இடிய இறக்கினாங்க, அதைப் பாட்டி சமாளிச்சிட்டாங்க....அப்புறம் அப்புறம் அன்னைக்கு” என்று சொல்ல வந்தவளை பேசவிடாமல் தன் இதழ் கொண்டு அவள் இதழை பூட்டினான்…

அவனின் முத்தத்தில் அப்படியே கண்மூடி சொக்கி நின்றாள்..

நீண்ட முத்தத்திற்குப் பிறகு மூச்சு காற்றுக்கு இடைவெளி விட அவளிடம் இருந்து விலகியவன், அவளின் இடுப்பில் கைகொடுத்து ஒரு பூபந்தை தூக்குவது போல் தூக்கி கட்டிலில் கிடத்தி.... அவள் முகத்தைப் பார்க்க, அவன் கண்ணில் தாபத்தை, கண்டவள், அவன் நெஞ்சிலே தன் முகத்தை மறைத்துக்கொண்டாள்..

“சின்னு என்று தாபத்துடன் அழைத்தவன்....”உனக்குச் சம்மதம் தானே” என்று கேட்க..

அவளோ குரும்புடன்.. “ரிஷி எனக்குத் தூக்கம் தூக்கமா வருது, நேத்தும் அந்தச் சடங்கு இந்தச் சடங்குன்னு தூங்கவே விடல, ப்ளீஸ் ரிஷி நான் தூங்கட்டா” என்று பாவமாகக் கேட்பது போல் கேட்க

அவள் இப்படிச் சொல்லவும், அவனின் ஆசைக்குக் கடிவாளம்இட்டவன்....அவள் மனதுக்கு முக்கியதுவம் கொடுத்து....” சரி சின்னு நீ தூங்கு” என்றான் தன் மனதை மறைத்துக் கொண்டு

“சரி ரிஷி நான் தூங்குறேன்.” என்றவள் மேலும் அவனை நெருங்கி அவன் நெஞ்சில் முகம் புதைத்துக் கொண்டு கண் மூடினாள்..

“சுத்தம்.. டேய் சபரிஷ் என்னடா உனக்கு வந்த சோதனை” என்று நினைத்தவன் அவளின் மதிமுகத்தை ரசிக்க ஆரம்பித்தான்..

சிறிது நேரம் கழித்து, ரிஷி ஆஆஆஆ என்று அலற

அவன் கத்தவும் “என்னாச்சு ரிஷி பூச்சி ஏதும் கடிச்சிடுச்சா” என்று அப்பாவி போல் கேட்க

தன் நெஞ்சை தடவிக்கொண்டே “சின்னு ஏண்டி கடிச்சு வச்ச”

“ம்ம்ம் லவ் பண்ணுவாராம்...என்னை தேடி us வருவாராம்... எனக்கே தெரியாம கல்யாண ஏற்பாடெல்லாம் பண்ணுவாராம்..... ஆனா முதல்ராத்திரி அன்னைக்கு, புதுப் பொண்டாட்டிக்குத் தூக்கம் வருது சொன்னஉடனே, மங்குனி மாதிரி, சரி தூங்குன்னு சொல்லுவாராம்..... சரியான மங்குனி மாமா நீ.... அதான் கடிச்சி வச்சேன்” என்றவள்

திரும்பி படுத்து வாய்க்குள் முனகினாள்..
“லூசு லூசு சரியான மரமண்டை, வா மாமு வந்து என்னை எடுத்துக்கோன்னா சொல்ல முடியும், பெர்மிஷன் கேட்குறாராம் பெர்மிஷன், அப்போ காலம் புல்லா கன்னி பையனாவே இரு மாமு நீ, என்று திட்டிக்கொண்டிருந்தவள்..

“ஆஆஆ மாமு ஐயோ நான் சும்மா விளையாட்டுக்கு சொன்னேன். ஹா ஹா கூசுது மாமு.....ஹா ஹா ஹா” சிரித்தாள் ப்ரியா...

“ஏண்டி புள்ள தூக்கம் வருதுன்னு சொல்றாளே சரின்னு நம்ம ஆசையை வெளி காட்டிக்காம தூங்குன்னு சொன்னா , நான் மங்குனியாம், மரமண்டையாம்.. உன்ன என்ன பண்றேன் பாருடி” என்று மேலும் முன்னேற

“ஹா ஹா மாமு மாமுன்னு சொல்றது காதுல விழல, மரமண்டைன்னு சொன்னது மட்டும் காதுல விழுந்துச்சோ” என்று அவனை நக்கல் பண்ண

அவள் கழுத்து வளைவில் இருந்து முகம் எடுக்காமல், “இனி அப்படியே கூப்பிடு சின்னு...செம கிக்கா இருக்கு... எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு” என்றவன், அதன் பிறகு அவளைப் பேச விடவில்லை தூங்கவும் விட வில்லை...

அங்கே அழகானதொரு தாம்பத்தியம் அரங்கேற அடுத்த அத்தியாயத்திற்கான, பிள்ளையார் சுழி போட பட்டது…

அதிகாலை வேலை, கண் விழித்த ப்ரியா….தன்னருகில் குழந்தை போல் உறங்கும் தன் கணவனைக் கண்டு…..நேற்று நடந்தது நினைவு வர, முகம் தன்னால் சிவந்தது… சரியான முரடு மாமு நீ.. என்று மனதுக்குள் சொல்வதாக நினைத்து வெளியே சொல்லிவிட்டாள்..

“ஸாரி சின்னு.. இப்போ வேணா பதமா ஆரம்பிக்கிறேன்” என்று சொல்லி கண்ணடிக்கவும்

“என்னது மறுபடியும் முதல்ல இருந்தா, நான் போறேன்பா” என்றபடி நகர…அவளால் முடியவில்லை…. அவன் விட்டால்தானே, அவனுக்கு வேண்டியது எடுத்து அவளுக்கு வேண்டியதை கொடுத்துவிட்டே அவளை விடுவித்தான்….

குளித்து முடித்துத் தயாராகி அறையை விட்டு வெளியே வந்தவளை, மோகனா எதிர்கொண்டாள்.

“ஹே மோஹி எழுந்துட்டியா.. எப்படிப் போச்சு உன் முதல் ராத்திரி ஹ்ம்ம்” என்று ரகசியமாகக் கேட்க..

“செய்யுறதை எல்லாம் செஞ்சிட்டுக் கேள்வியா கேட்குற.. உன்னை” என்று ப்ரியாவை துரத்த ஹா ஹா ,ஹா என்று சிரித்துக்கோண்டே அந்த அரண்மனை எங்கும் ஓடிய ப்ரியா… அப்படியே தோட்டத்திற்கு வர, அவளைத் துரத்திய மோகனாவை , சந்துரு அழைக்க மோகனா அவனைக் கவனிக்கச் சென்றாள்..

தோட்டத்திற்கு வந்த ப்ரியா, அதன் அழகில் அன்றுபோல் இன்றும் மெய்மறந்து நின்றவளுக்கு, பாடவேண்டும் போல் இருக்க…

ப்ரியா பாட வாய் திறக்கவும் , அன்று போல் டைகர் இவளை குறு குறுவென்று பார்ப்பதை கவனிதவள், ஆகா இது அதுல்ல.. என்று யோசுத்துக்கொண்டிருக்கும் பொது ..

டைகர் ஓட்டம் எடுத்தது..

டைகர் ஓடவும், என்னடா இது, இப்படி ஓடுது..
அன்னைக்கி பாய வந்தது, என்று யோசித்துக்கொண்டு இருக்கும் போது,

பின்னாடி சபரிஷின் சிரிப்புச் சத்தம் கேட்டது...

திரும்பி அவனை முறைத்தவள், என்ன சிரிப்பு ம்ம்ம்..

இல்ல சின்னு எங்க நீ அன்னைக்கி மாதிரி பாட்டு பாடிருவியோன்னு பயந்து ஓடிட்டு பாரேன்..

என்னது என்று இப்பொழுது சபரிஷை துரத்தினாள் ப்ரியா...

அன்று மதியமே தீபாவின் குடும்பம் மும்பை கிளம்ப.....பிரியாவிற்குதான் மனமில்லை அவர்களை அனுப்ப.....ஒரு வருடமாய்க் கூட இருந்தாலும்..
உயிராய் பழகிவிட்டாள் அல்லவா...

“உன்னைப் பார்க்க சீக்கிரமே வரேன் பூரி”.. என்று எழில் சொன்னாலும் அவன் கண்களோ அந்த வார்த்தையை மேகாவை நோக்கி இருந்தது.....

“எலி அங்க என்ன பார்வை, ஹ்ம்ம்”

“ஹி ஹி ஒன்னும் இல்ல பூரி போய்ட்டு வரேன்னு சொன்னேன்” என்று அசடு வழிய

“அவ்வளவு தானே வேற ஒன்னும் இல்லையே” என்று சந்தேகமாக ப்ரியா கேட்க..

“சின்னு ரொம்பத்தான் மிரட்டுற இந்த வீட்டு மாப்பிள்ளையை” என்றபடி அவளருகில் வந்தான் சபரிஷ்...

நேற்று ரிசப்ஷன் முடிந்தவுடன் , மேகா எதற்காகவோ, வீட்டின் பின் பக்கம் செல்ல... அதைப் பார்த்த எழிலும்

அவள் பின்னே சென்று குயிலு என்று அழைக்க.....அவன் குரல் கேட்கவும் அப்படியே நின்றாள் மேகா

அவள் முன்னே வந்தவன் மீண்டும் குயிலு என்று அழைக்க.....அவளோ “சொல்லுங்க டாக்டர் ஏதும் வேணுமா” என்று கேட்க

“நீ தான் வேணும்” என்று பட்டென்று சொல்லிவிட

“என்ன டாக்டர் சொல்றீங்க புரியலையே”

“உண்மையிலே புரியலையா” என்று அவளின் கண்ணோடு கண் நோக்கி கேட்க

அதைத் தயங்காமல் எதிர் கொண்டவள் “மப்ச்” என்று தோளை குலுக்கினாள்.....

ஒரு நிமிடம் அவளைக் கூர்ந்து பார்த்தவன்....பின் ஒரு முடிவுடன் “எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு..

உனக்கும் என்னைப் பிடிச்சிருக்குன்னு தெரியும்”
என்று சொல்லி முடிப்பதற்க்குள்

“இருங்க இருங்க” என்றவள் திரும்பி நின்று கொண்டு,
தன் சிரிப்பை அடக்கி.. “எனக்கும் உங்களைப்
பிடிச்சிருந்தது டாக்டர்.. ஆனா நீங்க விஷு அக்கா
கிட்ட சொன்ன விளக்கத்தைக் கேட்டதும் என் மனசு
தெளிஞ்சிடுச்சு... நான் சின்னப் பொண்ணுதானே... இது
ஜஸ்ட் ஈர்ப்புதான்னு நல்லா புரிஞ்சிகிட்டேன்....
அதனால நீங்க உங்களுக்கு ஏற்றார் போல், ஒரு
டாக்டர் பொண்ணா பார்த்து காதலிச்சுக் கல்யானம்
பண்ணிக்கோங்க” என்றது தான் தாமதம்.. அவளின்
கையைப் பிடித்துத் தன் புறம் திருப்பியவன்..

“என்னடி சொன்னே , வேற யாரையாவது கல்யாணம்
பண்ணிக்கணுமா, இதோ பார் நான் உன் குரல் மட்டும்
கேட்டே உன்னை விரும்ப ஆரம்பிச்சிட்டேன்..... என்
மனசுல அந்தக் குரல் மட்டும் தான் என் காதலுக்கு
ஆதாரம்.. அப்போன்னு பார்த்து நீ வந்து தரையை
நோண்டி தண்ணி வர வச்சின்னா நான் என்ன
பண்றது.... உன் அழகு என்னைக் கவர்ந்தது
என்னவோ உண்மைதான் ஆனா, எப்போ அந்தக்
குரலுக்குச் சொந்தகாரி நீன்னு தெரிஞ்சதா, அப்பவே
விழுந்துட்டேன்டி” .. என்று சொல்ல..

அவனின் கோபத்தைக் கண்ட அவள் அவனைப் பார்த்து நடுங்கினாள்…

அவளது நடுக்கத்தைப் பார்த்தவன், “எதுக்கு நடுங்குறா, என்னைப் பார்த்தா டெர்ராவா இருக்கு” என்று நினைத்தவன் அப்பொழுது தான் கவனித்தான், அவள் கை பிடித்து இழுத்து தன் மேல் ஒட்டியும் உரசியும் நிறுத்தியிருக்கிறோம்....என்பதை அவளின் நெருக்கத்தில் மனம் மயங்கியவன் “குயிலு என்னை உனக்குப் பிடிச்சிருக்கா” என்று காதலாக எழில் கேட்க

“பயத்துடன் ம்ம் என்று தன் தலையை மேலும் கீழும் ஆட்டி, பின் இடதும் வலமுமாக ஆட்ட.....

அவளின் பயத்தைப் போக்குவதற்காக அவளை அப்படியே அணைத்துக்கொண்டவன்....தன் உள்ளத்துக் காதலையெல்லாம் குரலில் தேக்கி “ஐ லவ் யு டி குயிலு” என்றான் காதலாக...பின் “இப்போ நீயும் சொல்லு” என்றபடி அவளின் முகத்தைப் பார்க்க

“அதை நான் சொல்றேன்” என்றது ஒரு குரல் அது வேறும் யாருமில்லை நம் சபரிஷ்தான்

பாஸ் என்று அதிர்ந்தவன்.. பின் தைரியமாக மேகாவின் கையைப் பிடித்துக்கொண்டு.. “பாஸ் நான் என் கனவு தேவதையைப் பார்த்துட்டேன்.....இவதான் என் தேவதை , எனக்கு அவளைக் கொடுத்திடுங்க பாஸ்” என்றான் தைரியமுடன்

சபரிஷ் ஏதோ சொல்ல வாய் திறக்கவும்.. “ரிஷி எங்க இருக்கீங்க” என்று அவனைத் தேடிக்கொண்டு வந்தாள் பிரியா

அவள் வருவதைக் கவனித்தவன்.. “எழில்.. இதெல்லாம், நல்லா இல்ல சொல்லிட்டேன்.... மேகா சின்னப் பொண்ணு, நீ அவ கையை விடு” என்று அதிகாரமாகச் சொல்ல..

“பாஸ்”

“நான் சொன்னா சொன்னதுதான்”

“என்னது நீங்க சொன்னா சொன்னது தான் ரிஷி” என்றவள்..... மேகாவின் கையைப் பிடித்தபடி எழில் நிற்பதை பார்த்து அவளுக்கு ஏதோ புரிய....எழிலிடம் நெருங்கியவள்

“டேய் எலி....உன் தேவதை எங்க மேகா குட்டியா, ரெண்டு பேருக்கும் ஜோடி பொருத்தம் சூப்பர் டா” என்று சொல்ல.

அண்ணி என்று அழைத்த மேகா.. தன் அண்ணனை காட்ட..

“என்ன ரிஷி.. உங்களுக்கு எழிலை பிடிக்கலையா...அவன் ரொம்ப நல்ல பையன்... பெரிய டாக்டர் வேற, மேகாவை நல்லா பார்த்துப்பான் ரிஷி.. கோபபடாதிங்க... ஓகே சொல்லுங்க ரிஷி” என்று எழிலின் சார்பாகப் பேச

“ஹா ஹா ஹா சிரிக்க ஆரம்பித்து விட்டான் ரிஷி”

“எதுக்குச் சிரிக்கிறிங்க ரிஷி”

“இல்ல சும்மா ஒரு மிரட்டு மிரட்டி பார்த்தேன் ஆனா மாப்பிள்ளை மிரளவே இல்ல, தைரியமாதான் பொண்ணு கேட்குறாரு.... எனக்கும் ரொம்பச் சந்தோஷம் எழில்.. என் தங்கைக்கு உன்னைவிட வேற நல்ல மாப்பிள்ளை கிடைக்க மாட்டான்...அப்படியிருக்க உன்னை எப்படி வேண்டாம் என்று சொல்லுவேன்” என்றதும் ப்ரியா அவனை முறைக்க

“என்ன சின்னு..இப்ப நான் என்ன தப்பா சொல்லிட்டேன்னு என்னை முறைக்கிற”

“ஆமா ஊரில் உள்ள எல்லார் காதலும் கண்ணுக்கு தெரியும்” என்று ப்ரியா நொடித்துக்கொள்ள..

“அது வந்து சின்னு” என்று சமாதான படுத்த அவள் அருகில் செல்ல.

இவர்களைப் பார்த்த எழில் “நாம போயிடலாம் குயிலு.... இல்லன்னா இங்க பிரீ ஷோ பார்க்க வேண்டியிருக்கும்” என்று அந்தச் சாக்கில் மோகவை கூட்டி சென்று விட்டான்..

நேற்று நடந்ததை நினைத்து பார்த்தவன்.....”அவ கிடக்குறா நீங்க போய்ட்டு சீக்கிரமே வாங்க மாப்பிள்ளை” என்று சபரிஷ் சொல்ல..

“ பாஸ் நீங்க எழில்ன்னே சொல்லுங்க , எனக்கு அதுதான் பிடிச்சிருக்கு”.. என்றவன்.. ப்ரியாவின் தலையை ஆதூரமாகத் தடவி “எப்போதும் சந்தோஷமாய் இருக்கணும் பூரி” என்றவனுக்குக் கண் கலங்கியது.....

அடுத்த இரண்டு நாளில் சபரிஷ் குடும்பமும் மும்பை நோக்கி கிளம்பியது, அங்கும் கார்த்திகேயன் மற்றும் ஈஸ்வரும் சேர்ந்து மும்பையில் பெரிய அளவில் ரிசப்ஷன் ஏற்பாடு செய்திருந்தனர்..

பிறகு அங்கு ஒருவாரம் தன் பெற்றவர்களுடன்

பொழுதை கழித்த இரண்டு ஜோடிகளும்...அவரவர் இணைகளின் ஆசைபடி தேன் நிலவுக்குச் சென்றனர்.. சந்துருவின் மூலமாகப் பிரியாவின் ஆசையை அறிந்தவன் அவளைச் சிம்லாவுக்குத் தேனிலவு அழைத்துச் சென்றான்.. சந்துரு மோகனா ஜோடி.. ஸ்விஸுக்குத் தேன்நிலவு சென்றனர்.....

இப்படியே இரண்டு ஜோடிகளும் காதல் வானில் சிறகடித்துப் பறக்க....நாட்கள் மெல்ல நகர்ந்தது..... இரண்டு மாதங்கள் கழித்து ஒரு நாள்

“மாமு நானும் வரேன்.. என்னையும் கூட்டிட்டு போங்க”

“இல்ல சின்னு நீ வந்தாலும் உன் கூட என்னால் டைம் ஸ்பெண்ட் பண்ண முடியாது டா.. ப்ளீஸ் புரிஞ்சிக்கோ” என்றவன் அவள் கன்னத்தைத் தட்டி விட்டு, நெற்றியில் இதழ் பதித்து விட்டு கிளம்பி விட்டான்.. திருச்சிக்கு ஒரு வேலை விஷயமாக...

இரவு தன் காரில் கிளம்பியவன் அதிகாலை திருச்சி

போய்ச் சேர்ந்தான்.. அங்குப் பெரிய ஹோட்டலில் அறை எடுத்து தங்கியவன்... வேலையில் தன்னை மூழ்கடித்துக்கொண்டான்..

அப்பொழுது காலை வேளையில் போன் செய்த பிரியா " சாப்பிட்டீங்களா மாமு" என்க

"ம்ம் சாப்பிட்டேன் சின்னு.. நான் அப்புறம் பேசுறேன்" என்று வைத்து விட்டான்..

மீண்டும் மதியம் போன் செய்தாள்.. "மாமு சாப்பிட்டீங்களா" என்று..

அவளின் வார்த்தைகள் சற்று தயங்கி வந்தது.....

"சாப்பிட்டேன் சின்னு, ஒரு மீட்டிங்ல இருக்கேன்.. அப்புறம் பேசுறேன்" என்று சொன்னவன் அவள் பதிலை எதிர் பார்க்காமல் வைத்து விட்டான்..

இரவு பதினோரு மணி, எல்லா வேலையையும்

முடித்துவிட்டு ஹோட்டலுக்கு வந்து அலுப்பு மிகுதியால் படுத்துவிட்டான்…

அப்பொழுது போன் அடிக்க யார் என்று பார்த்தவன்..
“சின்னு, ரொம்ப டயர்டா இருக்குடா நான் தூங்குறேன் காலையில் பேசுறேன்டா பிளீஸ்” என்று சொல்ல..

“சரி மாமு தூங்குங்க, காலையில் எழுந்ததும் பேசுங்க” என்றவள் வைத்து விட்டாள்..

இரவு ஒரு மணி, சபரிஷின் போன் அடிக்க வேலைவிஷயமாகத்தான் இருக்கும் என்று நினைத்தவன் அதை எடுக்காமல் தன் தூக்கத்தைத் தொடர்ந்தான்

மீண்டும் அடிக்க....தூக்கம் கெட்ட எரிச்சலுடன் யார் என்று பார்த்தவன் அதில் சந்துரு என்று வர ஆன் செய்தவன் மறுமுனையில் அவன் சொன்ன விஷயத்தைக் கேட்டு சின்னு என்று அதிர்ந்து கத்தினான்.. அப்பொழுதுதான் நினைவு வந்தவனாக ஷிட் என்று தன் தலையில் அடித்துக் கொண்டே

திருச்சியில் இருந்து தன் காரை கற்றைவிட வேகமாகச் செலுத்தினான் சபரிஷ்...

சுவாசம் தொடரும்...

சுவாசம் 39

இங்கு ப்ரியாவோ மயக்கத்தில் இருந்து மெதுவாகக் கண் விழித்தாள்....தன் எதிரே எல்லோரும் நிற்பதை பார்த்தவள், எழுந்து அமர்ந்து, "என்னாச்சு யாரும் தூங்களையா" என்று கேட்க..

அவளது அருகில் வந்த சந்துரு "பேபி, நீ காலையில் இருந்து எதுவும் சாப்பிடலைன்னு அம்மா சொன்னாங்க, அதான் மயங்கிட்ட, ஏன் பேபி சாப்பிடல"

"என்னது மயங்கிட்டேனா" என்று புரியாமல் விழித்தாள்...

“ஆமா... நீ மாடிபடி ஏறும் போது விழுந்துட்டே, அதான் டாக்டருக்கு போன் பண்ணுனோம்... இப்போதான் வந்து பார்த்துட்டுப் போனார்” என்று மோகனா சொல்ல..அவளோ சந்துருவிடம்.. “நான் மயங்கி விழுந்ததை ரிஷிக் கிட்ட சொல்லலையே” என்று பதட்டமாகக் கேட்க....

“இல்ல பேபி, இப்போதான் போன் பண்ணுனேன் , வந்துட்டே இருக்காங்க, நீ இந்தப் பாலை குடி” என்று பிரபா கொண்டுவந்த கிளாஸை வாங்கி ப்ரியாவிடம் நீட்ட..

அதைத் தடுத்து விட்டு “ஏன் சந்துரு ரிஷிக்கு போன் பண்ண, அவங்களே ரொம்ப டயர்டா இருக்குன்னு சொல்லிட்டு தூங்குறேன்னு சொன்னாங்க, போச்சு போச்சு...என்னமோ ஏதோன்னு பயந்து இப்போ வேகமா வண்டி ஓட்டிட்டு வர போறாங்க....எனக்கு பயமா இருக்கு, என் போன் எங்க” என்று சுற்றும் முற்றும் தேட,

“அது நீ மயங்கி விழும்போது அதுவும் கைதவறி கீழே விழுந்து உடைஞ்சிருச்சி “என்று மோகனா சொல்ல..

“சந்துரு உன் போன் கொடு”
என்றவள்...அவனிடமிருந்து வாங்கிச் சபரிஷ்க்கு போன் செய்ய அங்கு அவளது ரிஷி எடுத்தால் அல்லவா, அவன் தான் கண்மண் தெரியாமல் வண்டி ஓட்டிக் கொண்டு வருகிறானே.....

ப்ரியா மீண்டும் மீண்டும் முயற்சிக்க.....அவளது பதட்டத்தைப் பார்த்த சந்துரு மற்றவர்களிடம் , நானும் மோகனாவும் இங்க இருக்கோம்...அவளை பாத்துக்கறோம்... நீங்க போய்ப் படுங்க” என்று சொல்ல.. மற்றவர்களும் அவனின் பேச்சை கேட்டு சென்று விட்டனர்..

“பேபி, அண்ணா மெதுவாதான் வருவாங்க, நீ பதட்டபடாதே, உனக்கு உடம்புக்கு ஒத்துக்காதுடா” என்று கனிவாகச் சொல்ல

“இல்லடா எனக்குத் தெரியும் அவங்களைப் பற்றி.. அதான் எனக்குப் பயமா இருக்கு.....என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே...அரண்மனை வாசலில்

சபரிஷ் வேகமாக வந்து ஹாரன் அடித்துக்கொண்டே இருக்க.. காவலாளியும் உடனே திறக்க.. உள்ளே வந்து நிறுத்தியவன் அவசரமாக வீட்டுக்குள் ஓடினான்..

இங்குப் பிரியாவும், “சந்துரு அவங்க வந்துட்டாங்க” என்றபடி கட்டிலில் இருந்து இறங்கி வேகமாக வெளியே ஓடினாள்..

“பேபி அண்ணா இன்னும் வந்துருக்க மாட்டாங்க.... திருச்சியில இருந்து இங்க வர பத்து மணிநேரம் ஆகும்.... நான் போன் பண்ணி ஆறு மணிநேரம் தன் ஆகுது” என்று சந்துரு சொன்னதைக் காதில் வாங்காமல், சென்று விட....

சந்துருவும் , மோகனாவும் வெளியே வந்து பார்க்க அங்கு அவர்கள் கண்ட கட்சியில் விழிவிரித்து ஒருவரை ஒருவர் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டனர்.....

சபரிஷோ ப்ரியாவை இறுக்கி அணைத்து.....”சின்னு

சாரிடா” என்று சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தான்..

“எனக்கு ஒன்னும் இல்ல மாமு லேசா மயங்கிட்டேன் அதுக்குள்ள அந்தப் பக்கி உங்களுக்குப் போன் பண்ணிட்டான்.. அதுக்குன்னு இப்படியா, வேகமா வண்டிய ஓட்டிட்டு வருவீங்க” என்று அவனைச் செல்லமாகக் கடிய

அவளைத் தன்னிடம் இருந்து விலக்கியவன் “சாப்பிட்டியா சின்னு” என்று கேட்டான்..

அப்பொழுது தான் கவனித்தாள் அவனின் தோற்றத்தை...தலை களைந்து, உடைகள் நலுங்கி, கண்கள் சிவந்து, அவன் அவனாகவே இல்ல..

“இப்போதான் நீங்க வந்துட்டீங்களே மாமு இதோ இப்போ சாப்பிடுறேன்.. என்றவள், வாங்க பிரெஷ் ஆகிட்டுக் கொஞ்சம் தூங்குங்க” என்று சொல்ல..

“இல்ல இல்ல நீ வா முதல்ல சாப்பிடலாம்” என்று அவளைக் கையோடு அழைத்துச் சென்று டைனிங் டேபிளில் அமர வைத்தவன், உணவு எடுக்கக் கிட்சனுள் செல்ல போக,

“அய்யா நானே கொண்டு வந்துட்டேன்” என்று வள்ளி டேபிளில் உணவை வைத்து விட்டு சென்று விட.. அதை எடுத்து ப்ரியாவிற்கு ஊட்ட போனவனின் கையைப் பிடித்தவள்..

“ரிஷி வாக்குத் தவறிட்டீங்களே மாமு என் பனிஷ்மெண்ட்டை மறந்துட்டீங்களே ”என்று குறும்புடன் சொல்ல...

அதைக் கேட்டு அவன் கண்கலங்க “இனி நீ இல்லாமல் எங்கும் போக மாட்டேன் சின்னு” என்று அவளை அணைத்துக் கொள்ள

“என்ன மாமு இது சின்னபுள்ளையாட்டம்...நான் சும்மா விளையாட்டுக்கு சொன்னேன்....நிஜமா இன்னைக்கு என்னன்னே தெரியல எனக்குச் சாப்பிட பிடிக்கல” என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே.....

ராசு என்று வந்தார் லட்சுமி.. “காலையில் இருந்து,

இந்தப் பொண்ணு பச்ச தண்ணி கூடக் குடிக்கலையய்யா.. என்னன்னு நீயே கேளுய்யா”

அன்னை சொல்லவும் ப்ரியாவை பார்த்தவன், “ம்ம்ம் தெரியும்மா, நான் அவளுக்கு ஊட்டிவிடனும், அப்போதான் அவ சாப்பிடுவா, இல்லன்னா நீங்க சொன்ன மாதிரி பச்சை தண்ணி கூடக் குடிக்க மாட்டா.. இது அவ சொல்லி, நானா விரும்பி ஏற்றுகொண்ட பனிஷ்மெண்ட்மா.. நான்தான் அதை மறந்துட்டு வெளியூருக்குப் போய்ட்டேன்..... என் மேல்தான் தப்பு” என்று சொன்னவன், ப்ரியாவுக்கு ஒரு வாய் உணவை ஊட்ட,

அதை வாங்கியவளுக்குக் குமட்டி கொண்டு வந்தது.. எழுந்து ஓடி வாஸ்பேசினில் வாமிட் செய்ய அவள் பின்னாடியே சென்றவன் “சின்னு என்னாச்சிடா உடம்புக்கு ஏதும் பண்ணுதா” என்று பதட்டமாகச் சபரிஷ் கேட்டுக்கொண்டிருக்க..

இவ்வளவு நேரம் இவர்களைப் பார்த்துக்கொண்டு இருந்த சந்துரு, சூழ்நிலையை மாற்றும் பொருட்டு.. “அண்ணா, இது வரைக்கும் ஓகே பட் இனி நீங்க அவளுக்கு ஊட்ட கூடாது” என்று சீரியஸாகச் சொல்ல

“ஏன் ஏன் அவங்க எனக்கு ஊட்டகூடாது” என்று பிரியா சண்டைக்குப் போக

“ஹா ஹா ஹா பேபி, உனக்கு உன் வீட்டுகாரர் ஊட்டி விடணும், சரி அப்போ உன் குழந்தைக்கு யார் ஊட்டி விடுவா”

“ என் குழந்தைக்கு நான் ஊட்டி விடுவேன்...அதுக்கும் இதுக்கும் என்னடா சம்மந்தம்.... ஆமா அது இருக்கட்டும் என்னடா திடீர்னு குழந்தையைப் பற்றிப் பேசுற.....” என்று கேட்டவள் “ஹே மோஹி.. சொல்லவே இல்ல பார்த்தியா.. வாழ்த்துக்கள்டி” என்று அவளை வாழ்த்த

தன் தலையில் அடித்துக் கொண்ட மோகனா “அடியே, நீ தான் அம்மா ஆகப் போறே, நான் சித்தி ஆகப் போறேன்.. நீ மயங்கியதும் டாக்டர் வந்து உன்னைச் செக் பண்ணி பார்த்து சொல்லிட்டுப் போனார்...ரொம்பச் சந்தோஷமா இருக்கு பிரி” என்று அவளை அனைத்துக் கொள்ள.....சபரிஷும் பிரியாவும் சந்தோஷத்தின் உச்சிக்கே சென்றனர்

“ஆமா ராசு இந்த வீட்டோட முதல் வாரிசு, எங்க

எல்லோருக்கும் ரொம்பச் சந்தோசம்பா.. சரி சரி பேசினது போதும் போய்ப் படுங்க" என்றதும்

சந்துரு தன் அண்ணனை அணைத்துக் கொண்டு வாழ்த்துக்கள் கூறியவன்....மோகனாவை கையோடு கூட்டிக் கொண்டு செல்ல.....

சபரிஷ் அவளிடம்" வா சின்னு ரூம்முக்குப் போகலாம்" என்று சொல்ல ,

அவளோ "மாமு நீங்க என்னைத் தூக்கிட்டு போகணும், தவறின பனிஷ்மெண்ட்க்கு இதுதான் தண்டனை.. ம்ம்ம் தூக்குங்க" என்று கை நீட்ட..

சந்தோஷமாகத் தன்னவளை கையில் ஏந்தியவன் தன் அறைக்குள் வந்து அவளைக் கட்டிலில் கிடத்திவிட்டு, அவளின் மணிவயிற்றில் முத்தமிட்டு..."ரொம்ப ரொம்பச் சந்தோஷமா இருக்கேன் சின்னு...தேங்க்ஸ்டி" என்றபடி காதலுடன் அவளின் நெற்றியில் இதழ் பதித்தவன்.....

"சின்னு நீ மயங்கி விழுந்துட்டேன்னு சந்துரு சொன்னதும் எனக்கு ரொம்பப் பயமா போச்சு...ஒரு நொடி என் உயிர் என்கிட்ட இல்ல...சின்னு நான்

ஒன்னு சொல்லுவேன் ..நீ கேப்பியா" என்று
எதிர்பார்ப்புடன் கேட்க

தயங்காமல் அவன் கை மீது கை வைத்தவள் "என்ன
மாமு சொல்லுங்க நான் செய்யுறேன்"

"சின்னு எனக்கு நேரம் காலம் தெரியாம வேலை
வரும்...என்னால முடிஞ்ச அளவுக்கு உன் கூட டைம்
ஸ்பென்ட் பண்ண ட்ரை பண்றேன்...ஆனா நான் இங்க
இல்லாத நேரத்தில்...நீ கரெக்ட் டைம்ல
சாப்பிடனும்...இப்ப நம்ம குழந்தையைச் சுமந்துகிட்டு
இருக்க...பிளீஸ் சின்னு" என்று அவளிடம் கெஞ்ச.....

தன் மேல் அக்கறை கொண்டு தன்
உடல்நலத்திற்காகத் தன்னிடமே கெஞ்சும்
கணவனைக் கண்டு மனம் இளகியவள்.....தன்
கைகளால் அவனைச் சிறை செய்து....அவனை
இன்னும் தன் முகத்தின் அருகே இழுத்து அவனின்
கண்ணோடு கண் நோக்கி.....தன் மனதில் உள்ள
காதல் அனைத்தையும் ஒன்று சேர்த்து..."ஐ லவ் யு
மாமு...நீங்க சொன்னா நான் மறுக்காம கேட்பேன்..."
என்றவள் அவன் கன்னத்தில் இதழ் பதிக்க.....

இத்தனை நாட்களாக அவளின் இந்த
வார்த்தைக்காகத் தவமாய்த் தவமிருந்து

காத்திருந்தவனின் காதில் தேனாய் இனித்தது.....மனதில் எழுந்த சந்தோஷத்துடன் அவளை இறுக்கி அணைத்தவன்.....” ஐ லவ் யூ டூ சின்னு” என்று காதலுடன் தாபமும் போட்டி போட.....அவளின் இதழை சிறை செய்தான்...அவளின் அன்பு கணவன் சபரிஷ்...

****

ஐந்து வருடசங்களுக்குப் பிறகு.....

“மாமு ஒருவேலை ஒழுங்கா செய்யத் தெரியாதா, பார்க்கதான் பெரிய பிஸ்னெஸ்மேன், ஆனா ஒன்னும் தெரியலை.. அவங்க தான் குழந்தைங்க நீங்களும் அவங்க கூடச் சேர்ந்து , என்ன பண்ணி வச்சிருக்கீங்க” என்று ரிஷியை திட்டிகொண்டிருந்தாள் அவனின் சின்னு..

அது வேற ஒன்னும் இல்லைங்க, குழந்தைகளுக்குப் புதுத் துணி போட்டு விடுங்க இதோ வந்துறேன் என்று சொல்லிட்டுக் கொஞ்சம் வெளியே போனாள் ப்ரியா, திரும்பி வந்து பார்த்தால் அந்த அறையே தலைகீழாக மாறி இருந்தது,

“பேபி எதுக்கு நீ டாடியை திட்டுற” என்று தந்தைக்குச் சப்போர்ட்டாக வந்தாள் அவர்களின் சீமந்த புத்திரி தனுஸ்ரீ

“பாருங்க ரிஷி இவளை... அம்மா சொல்லுன்னா சொல்லவே மாட்டேன்கிறா, இவ கூப்பிடுற பார்த்து எல்லா வாண்டும் என்னை அப்படியே கூப்பிடுது... எல்லாம் அந்தப் பக்கி பண்ற வேலை” என்று பல்லை கடிக்க

“பேபி சித்துவை பக்கி சொன்னே , நான் உன்னை அச்சி (அடிச்சிருவேன்)” இப்பொழுது அவர்களது சீமந்திர புத்திரன் ராகுல் அவளிடம் சண்டைக்கு வந்தான்,

“டேய் அவன் எனக்குப் பக்கி தாண்டா அப்படித்தான் சொல்லுவேன் , எங்க அடிடா பார்க்கலாம்” என்று பிரியாவும் குழந்தையாய் மாறி சண்டைக்குப் போக.

இவர்களின் சண்டையைப் பார்த்த சபரிஷ் சந்துருவை போனில் அழைத்தான்..

சந்துரு இந்த ஐந்து வருடத்தில் தன் அண்ணனின் உதவியோடு , தன் உழைப்பில் தனக்கென்று ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கி இருந்தான்....

உடனே வந்தவன் அறை இருந்த கோலத்தைப் பார்த்தவன்.....நிலைமையை யூகித்து.....

குழந்தைகளைத் தூக்கி கொண்டு வெளியே வந்தவன் “அண்ணா நீங்களும் வந்துருங்க” என்று சொல்ல..

“டேய் ஒடிடு இல்ல” என்று ப்ரியா பல்லை கடிக்க

“ஐயோ நாங்க அப்போதே கிளம்பிட்டோம்” என்று பயந்து கொண்டே எஸ் ஆக

சந்துரு குழந்தைகளைத் தூக்கி சென்றதும்..
ப்ரியாவின் அருகில் வந்தவன் “சின்னு” என்று இழைந்தான்

அவனை முறைத்தவள், “போங்க போய்ச் சீக்கிரம் ரெடி ஆகுங்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கோவிலுக்குக் கிளம்பியாச்சாம்” என்றவள் கட்டிலை ஒழுங்கு படுத்த ,

அவனோ “போ சின்னு இப்பயெல்லாம் நீ என்னைச் சரியா கவனிக்கிறதே இல்ல” என்று சபரிஷ் குறை சொல்ல..

இடுப்பில் கைவைத்து அவனை முறைத்தவள், “இப்படிச் சொல்லி சொல்லியே” என்று அதற்கு மேல்

வார்த்தை வரவில்லை, முகம் சிவக்க
நின்றிருந்தவளின் அருகே சென்று சின்னு என்றபடி
அவளின் இடையைப் பிடிக்க....

அவன் கையைத் தட்டி விட்டவள்
“தொட்டீங்க அவ்வளவுதான் சொல்லிட்டேன்”
என்றவள்....அவன் முகம் வாடுவதைக் கண்டு
“கோவிலுக்குப் போகனும் மாமு.....சீக்கிரம் ரெடி
ஆகுங்க” என்று கெஞ்சலில் முடிக்க

“போடி ரொம்பதான் பிகு பண்ற... இன்னைக்கு நைட்
இருக்குடி உனக்குக் கச்சேரி” என்று அவன் அவளை
முறைக்க.....

எதிர்பாராத சமயத்தில் அவன் கன்னத்தில் இதழ்
பதித்து விட்டு...அவனுக்கு அழகு காட்டியவள்
....கதவின் அருகே சென்று...”ஐ அம் வெய்ட்டிங் மாமு”
என்று கண்ணடித்துவிட்டு ஒரே ஓட்டமாக ஓடி
விட்டாள்.....

அவளின் எதிர்பாராத முத்தத்தில் திகைத்தவன்.....தன்
கன்னத்தைத் தடவிக் கொண்டே...அவளின்
வார்த்தையின் பொருள் உணர்ந்து இதழில் பூத்த
புன்னகையுடன்....”சரியான வாலு” என்று அவனின்

சின்னுவை செல்லமாக வைதபடி தயாராகச் சென்றான்

கீழே சென்று வேலைகளை முடித்து விட்டு வந்த பிரியாவின் கண்ணில்...சபரிஷின் மடியில் சமர்த்தாக அமர்ந்திருந்த தங்களது நான்கு வயது மகள் தனுஸ்ரீயும்.. மூன்று வயது மகன் ராகுலையும் கண்டு பொறாமையாக இருந்தது.....சரியாண அப்பா பிள்ளைகள்....என்று மனதில் வைதபடி..... சந்துருவை பார்க்க....

அவனது இரட்டை குழந்தைகளான மூன்று வயது வெண்பா , வேந்தன் இருவரையும் சமாளிக்க முடியாமல் திணருவதைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது....

செல்வியும் அவளது குழந்தைகள் மிருத்திகா மற்றும் கிஷோர்ருடன் அமர்ந்திருக்க.....இந்த காட்சியைப் பார்க்க பார்க்க தெவிட்டவில்லை ப்ரியாவிற்கு.....

வீட்டின் பெரியவர்கள் ஆளாளுக்குப் பரபரப்பாகத் தயாராகிக் கொண்டிருக்க.....விசாலாட்சி ஆச்சி....தன் குடும்பத்தின் கொள்ளு வாரிசுகளையும் ....அவர்கள்

செய்யும் சேட்டைகளையும் கண்கொட்டாமல்
பார்த்துக் கொண்டிருந்தவரின் மனது
நிறைந்திருந்தது...

மேகாவின் அறைக்குள் சென்ற பிரியா.. அங்கே
மோகனா மேகாவை அலங்கரித்துக்கொண்டிருந்தாள்..

ஆம் இன்று மேகா எழில் திருமணம்.... அதற்குதான்
எல்லோரும் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.....

மேகாவின் படிப்பு முடியும் வரை போனில் அவளுடன்
காதல் புரிந்தவன்.....அவள் கடைசிப் பரிட்சை எழுதிய
அடுத்த நாள் பறந்து வந்துவிட்டான் தன்
தேவதையைக் காண.....திருச்செந்தூர் கோவிலில்
வைத்துதான் தனக்கும் திருமணம் என்று
எல்லோரிடமும் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டான் ,
ஏனென்றால் அங்குதான் தன் தேவதையை
அடையாளம் கண்டு கொண்டானாம்.....

பவியும் ராஜேசும் அவர்களது குழந்தைகளான

விக்ரம், சர்வேஷ் உடனும்

விஷுவும் கிருத்திக்கும் அவர்களது குழந்தை நித்திக்கோடும்..எழிலின் திருமண வைபோகத்துக்குக் கலந்து கொள்ள வந்திருந்தார்கள்.....

எல்லோரும் ஒரே குடும்பமாகப் பஸ்ஸில் ஏற...அனைவரும் சுமர்ந்து கொண்டு பஸ் திருச்செந்தூர் நோக்கி சென்றது....

அங்கு எல்லாம் ஏற்பாடும் தயாராக இருக்க.....எழில் பட்டு வேஷ்டி சட்டையில் மாப்பிள்ளை தோரணத்துடன் தன்னவளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்...அப்பொழுது

மேகா காரில் இருந்து இறங்கி அவனைப் பார்க்க... அவள் பார்க்கவும் எழில் கண்ணடிக்க வெட்கத்தில் தலை குனிந்துகொண்டாள் மேகா...
எழிலின் செயலில் அனைவரும் அவனைக் கிண்டலடிக்க....அதையெல்லாம் கண்டு கொள்ளாது...தன்னவளை சைட் அடிக்கும் பணியைத் தொடர்ந்தான் அவன்.....பின்

பெரியவர்கள் அனைவரின் ஆசிர்வாதத்தாலும்
முருகனின்அருளாலும்....தன் தேவதையின் கழுத்தில்
மூன்று முச்சிட்டுத் தன்னில் பாதியாக ஏற்றுக்
கொண்டான் எழில்

பின் அனைவரையும் ஒன்று கூட்டி புகைபடம்
எடுக்க...அந்த அழகான பெரிய குடும்பத்தைத் தன்
சிறிய கேமிரா... அழகாக உள்ளிழுத்துக் கொண்டது.....

கோவில் மண்டபத்தில், குழந்தைகளோடு
குழந்தையாக விளையாடிக்கொண்டிருந்த
ஹரிணியை இரண்டு கண்கள் ரசனையுடன் பார்த்துக்
கொண்டிருப்பதை அவள் அறியவில்லை....

அப்பொழுது அவளை “ஹலோ மிஸ்” என்று
சோடக்குப் போட்டு அழைத்தது ஒரு குரல்....

தன்னை யார் இப்படி அழைப்பது என்று திரும்பிய

ஹரிணி, அங்கு வாட்ட சாட்டமாக நின்றவனைப் பார்த்து... “யார் இவரு.. நான் முன்ன பின்ன பார்த்தது இல்லையே, என்னை எதுக்குக் கூப்பிடுறாங்க” என்று நெற்றி சுருக்கி யோசிக்க...

அவள் யோசிப்பதை கண்டவன், மனதுக்குள் சிரித்து , அவளிடம் “ஹலோ மிஸ் ஹரிணி” என்றவன் .. “ஹாய் ஐ அம் டாக்டர் ஸ்ரீ ராம், ஃப்ரம் அமெரிக்கா , எழிலோட பிரெண்ட்” என்று தன்னை அறிமுகப் படுத்திக்கொள்ள..

இவர்களைப் பார்த்த பிரியா, தன் பக்கத்தில் நின்ற சபரிஷை அழைத்து இந்தக் காட்சியைக் காண்பித்து, “மாமு மறுபடியும் முதல்ல இருந்தா” என்று கூறி சிரிக்க...

அவனின் நினைவில் பிரியா முதன்முதலில் தன்னைச் சொடக்கு போட்டு அழைத்தது நினைவு வர...அந்த நாள் நினைவில் வாய்விட்டுச் சிரித்தான் சபரிஷ்.....

என் தேடலின்

வரமாய்க் கிடைத்தவனே!!!
கடவுளிடம் மீண்டும் ஒரு வரம் கேட்பேன்!!!
என் ஒவ்வொரு பிறப்பின் போதும்
நீயே என் துணையாக வர வேண்டுமென்று!!!
ஏனென்றால்
உன் சுவாசத்தில் நான் வாழ்கிறேன்!!!

சுபம்
இது முடிவல்ல ஆரம்பம்.....